# மகளிர் இதழ்கள்

பதிப்பாசிரியர்

இ. சுந்தரமூர்த்தி

மா.ரா. அரசு

International Institute of Tamil Studies

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

# மகளிர் இதழ்கள்

பதிப்பாசிரியர்

இ. சுந்தரமூர்த்தி

மா. ரா. அரசு

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

International Institute of Tamil Studies

Chennai - 600 113

# BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title | : | **Magalir Idhalgal** |
| Editors | : | **E. Sundaramoorthy**<br>**M.R. Arasu** |
| Publisher | : | **International Institute of Tamil Studies**, C.I.T. Campus,<br>Taramani, Chennai - 600 113.<br>Ph. 22542992 |
| Publication No | : | 459 |
| Language | : | Tamil |
| Date of Publication | : | 2003 |
| Edition | : | First |
| Paper Used | : | 18.6 kg TNPL Maplitho |
| Size of the book | : | 1/8 Demy |
| Printing types | : | 10 points |
| No.of Pages | : | 304 |
| Price | : | Rs. 70/-<br>(Rupees Seventy Only) |
| No.of Copies | : | 1200 |
| Subject | : | Studies on Tamil Journalism |
| Wrapper Design | : | V. Karunanithy |
| Printed by | : | ***The PARKAR***<br>293, Ahamed Complex, 2nd Floor,<br>Royapettah High Road,<br>Chennai - 600 014. |

**முனைவர் சா. கிருட்டினமூர்த்தி**
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை - 600 113.

## அணிந்துரை

அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பு எதற்கு என்று கேட்ட காலம் மாறி, இன்று பெண்கள் அனைத்துத் துறைகளிலும் ஆதிக்கம் செலுத்தும் முற்போக்குநிலை ஏற்பட்டுள்ளது.

அடிமையாய் இருப்பதிலும் கொடுமையானது பெண்ணடிமை ஆகும். மதவழிப்பட்ட நம் சமுதாயம், பெண்களை அடிமை களாக்கிக் கொடுமைப்படுத்தி வந்துள்ளமையை வரலாறு பதிவு செய்துள்ளது.

இச் சமுதாயம் பெண்களை ஒடுக்கப்பட்டோரிலும் ஒடுக்கப் பட்டோராக வைத்து அவர்கள் படிக்கத் தடை விதித்தது. அறியாத இளம் பருவத்தில் - அவர்களேயறியாமல் திருமணம் செய்து வைக்கப்பட்டனர். பெரும் எண்ணிக்கை யிலான பெண்கள் விதவைகளாயினர். விதவைகள் மறுமணம் செய்துகொள்ள அனுமதி மறுக்கப்பட்டது.

"பெண்.........
படுக்கையறைக்கும்
சமையலறைக்கும்
ரன்கள் எடுத்தே
ரணமாகிப் போனவள்"

இது, இருபதாம் நூற்றாண்டில் பெண்களின் நிலை குறித்த ஒரு கவிதைப் படம்.... இருபதாம் நூற்றாண்டில்

பெண்களின் நிலை இப்படி என்றால் ஐம்பது ஆண்டு களுக்கு முன்னர்ப் பெண்களின் நிலை எப்படி இருந்திருக்கும் என்று எண்ணிப் பார்க்கவே அச்சமாக இருக்கிறது.

ஒடுக்கப்பட்டோராக, அடிமைகளாகச் சிந்தனைத் திறனின்றிச் செயலற்று நின்ற பெண்களின் விடியலுக்குப் பல்வேறு பெரியவர்கள் பாடுபட்டனர். பெண்ணடிமை விலங்கொடிக்கும் பணியில் இதழ்கள் பெரும் பங்காற்றி யுள்ளன. அந்த வகையில், பெண்களுக்கென்று, பெண் களால் நடத்தப்பட்ட பல்வேறு மகளிர் இதழ்கள் பெண் விடுதலைக்கும், பெண்ணின முன்னேற்றத்திற்கும் பெரும் பங்களிப்புச் செய்துள்ளன. அத்தகைய மகளிர் இதழ்கள் குறித்த செய்திகளின் தொகுப்பாக இந்நூல் அமைகிறது.

இந்நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும், ஊக்கமும் தந்து வருகின்ற நிறுவனத் தலைவர் **மாண்புமிகு கல்வி யமைச்சர் திருமிகு எஸ். செம்மலை** அவர்களுக்கும், தமிழ் வளர்ச்சி பண்பாடு மற்றும் அறநிலையத்துறைச் **செயலாளர் திருமிகு பு.ஏ. இராமையா, இ.ஆ.ப.,** அவர்களுக்கும், **கூடுதல் செயலாளர் திருமிகு தா. சந்திரசேகரன் இ.ஆ.ப.,** அவர்களுக்கும் என் நன்றி யறிதலைப் புலப்படுத்திக் கொள்கிறேன்.

இந்நூலினை அழகுற அச்சிட்டுத்தந்த 'தி பார்க்கர்' அச்சகத்தார்க்கும் நன்றி.

சென்னை
22. 06. 2003

**இயக்குநர்**

**ச. சு. இராமர் இளங்கோ**
மேனாள் இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை.

# வாழ்த்துரை

சமுதாய மறுமலர்ச்சிக் கூறுகளுள் இன்று பெண்ணியச் சிந்தனைகளால் விளைந்த பயன் பெரிதாகும். காலந் தோறும் பெண்ணியச் சிந்தனைகள் எவ்வாறு வளர்ந்து விரிவாக்கம் பெற்றன என்று அவ்வக்காலத்தில் தோன்றிய இதழ்கள் தெரிவிக்கின்றன. பொதுமை நிலையில் தோன்றிய இதழ்கள் பின்னர் மகளிருக்கெனவே தோற்றம் கொண்டமை குறிப்பிடத்தக்க வளர்ச்சியாகும். அங்ஙனம் தோன்றிய மகளிர் இதழ்களையும் அவ்விதழ்கள் காட்டுகின்ற பல்வேறு பெண்ணுரிமைக் கருத்துக்களையும் தொகுத்துப் பார்ப்பதற்கு மகளிர் இதழ்கள் பற்றிய கருத்தரங்கம் துணைநிற்கும் என்பதில் ஐயமில்லை.

இதழியல் வரிசைக் கருத்தரங்குகளுள் இக்கருத்தரங்கம் ஒன்பதாவதாகும். இக்கருத்தரங்கக் கட்டுரைகள் அனைத்தும் தொகுக்கப்படுவது - உரியவாறு பதிப்பிக்கப் பெறுவது பலருக்கும் பயனுடையதாக அமையும். இதழியல் துறையில் ஆர்வம் கொண்ட பலரும் இக் கட்டுரைகளை வழங்கியுள்ளார்கள். அரிதில் கிடைக்கவியலாத இவ்விதழ்களைத் தேடி அரிய செய்திகளைத் தொகுத்துப் பலரும் எளிதில் அவற்றை உணர்ந்து கொள்ளும் வண்ணம் கட்டுரையாக வடித்துத் தந்த கட்டுரையாளர்களுக்கு எங்கள் நன்றி.

இதழியல் கருத்தரங்குகள் தொடர்ந்து நிகழவும் கட்டுரை யாளர்களையும் அறிஞர்களையும் தெரிவு செய்து கருத் தரங்கில் பங்குபெறவும் உறுதுணை புரியும் பேராசிரியர்கள் முனைவர் பொற்கோ, முனைவர் இரா. இளவரசு, முனைவர் இ. சுந்தரமூர்த்தி, திரு. மா.ரா. அரசு ஆகியோருக்கு நன்றி தெரிவிப்பதில் மகிழ்கின்றோம்.

இக்கட்டுரைகளைத் தொகுத்துப் பதிப்பித்து வெளியிட் டுதவும் பேராசிரியர்கள் முனைவர் இ. சுந்தரமூர்த்தி, திரு. மா.ரா. அரசு ஆகியோர்க்கும் எங்கள் நன்றி.

***ச.சு. இராமர் இளங்கோ***

## பதிப்புரை

மகளிர் இதழ்கள் மகளிரிடையே தன்னம்பிக்கையையும், உள்ள உறுதியையும் ஊட்டிச் சமூக விழிப்புணர்வை ஏற்படுத்தின. மகளிருக்கு ஏற்படும் சிக்கல்களைச் சுட்டி அவற்றிற்கான தீர்வுகளையும் அவை வெளிப்படுத்தின. மகளிர் இதழ்கள் மகளிர்தம் கல்வியின் தேவையைச் சுட்டிக்காட்டிக் கல்வி ஒன்றுதான் அவர்களுடைய தன்னம்பிக்கையை வலுப்படுத்தும் என்று வற்புறுத்தின. ஒரு நூற்றாண்டுக்கு முன்பே இத்தகைய போக்கும் நோக்கும் மகளிர் இதழ்கள் வாயிலாகப் புலப்படுகின்றன.

### சுகுணபோதினி

1883ஆம் ஆண்டில் வெளிவந்த சுகுணபோதினி இதழ் பெண்களின் பயன்பாட்டிற்கென்றே வெளிவந்த இதழாகும். தங்களின் அறிவாற்றலையும், திறமையையும் பெண்கள் உணர்ந்து கொள்ள வேண்டும் என்பதே இவ்விதழின் நோக்கமாக விளங்கியதை நன்கு உணர்ந்து கொள்ள முடிகின்றது. 'பெண் கல்வி', 'பெண் புத்தி', 'நன்மனையாள்', 'விவாகமான பெண்களின் கடமைகள்', 'அழகே பெரும்பாலும் அரிவையரை அல்லற்படுத்தும்', 'ஸ்தீரிகளுடைய அந்தஸ்தும் அதிகாரமும்', 'இந்து தாய்கள்', 'இந்து விதவைகளை நடத்தும் முறை', 'மனைவிமார்கள்', 'அடிக்கடி தாய்வீடு போவதால் வரும் கேடுகள்' போல்வன இவ் விதழ்களில் வந்த கட்டுரைகளுள் சிலவாகும். இவை அக்காலத்திய மகளிர்தம் சிந்தனைகளை வெளிப்படுத்துவனவாய் அமைந்துள்ளன.

பெண் குழந்தைகளுக்குச் செய்கின்ற நகை-நட்டு, கல்யாணச் செலவு, சீர் வரிசைகள் - வரதட்சிணை இவற்றைக் குறைத்து, கிடைத்தற்கரிய செல்வமாகிய கல்வியைக் கற்பிக்க வேண்டும் என்பது தான் ஆசிரியரின் பேரவா என்பது இவ்விதழில் வெளியான கட்டுரைகள் மூலம் தெளிவாகின்றது. 'குழந்தை மணம்' கண்டிப்பாகத் தடுக்கப்பட வேண்டியதொரு கொடிய செயல் என்பதை ஓர் உரையாடல் மூலம்

அற்புதமாக விவரித்துள்ளார். சுகுணபோதினி மகளிர்க்கென வாய்த்த ஒரு முற்போக்கு இதழாக அக்காலத்திலேயே விளங்கியது எனலாம்.

### ஸ்திரீதர்மம்

1917ஆம் ஆண்டில் தொடங்கப் பெற்ற 'ஸ்திரீதர்மம்' என்னும் இதழ் மாதர் இந்தியச் சங்கத்தின் (Women's Indian Associations) பிரச்சார இதழாக வெளிவந்தது. டாக்டர் அன்னிபெசன்ட் இச்சங்கத்தின் தலைவராக விளங்கினார். அரசியல், சமயம், கல்வித்துறை ஆகிய வற்றில் ஈடுபாடு கொண்ட இச்சங்கத்தின் சின்னம் 'ஓர் இலட்சியப் பெண்'. கோணல், குறுகல், பயம், ஒளிவுமறைவு, அடிமைத்தனம், அழுக்கு ஆகிய இவை ஒரு சிறிதும் கூடாத நிலையில் அறிவு, அமைப்பு, அழகு, சேவை, செல்வம் உள்ளுணர்வு, ஒற்றுமை ஆகிய வற்றை ஒரு சேரக் கொண்டு விளங்கும் இலட்சியப் பெண்ணாக உருவகிக்கப்பட்டிருப்பதை இச்சின்னம் வெளிப்படுத்துகின்றது. இவையே 'ஸ்திரீதர்மம்' இதழின் நோக்கங்களுமாகும். திருமதி எம்.இ. கஸின்ஸ், டாக்டர் முத்துலட்சுமிரெட்டி, திருமதி தாதாபாய் ஆகியோர் இவ்விதழின் ஆசிரியர்களாக விளங்கினர். 'ஸ்திரீதர்மம்' என்று இன்னொரு இதழும் வெளிவந்ததாகத் தெரிகின்றது.

அலிகார் முசுலீம் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக விளங்கிய முதல் பெண்மணியாக அமைந்த போபால் பீகம் அவர் களைப் பாராட்டி எழுதிய அரிய குறிப்பொன்றினை இவ்விதழில் காணலாம். அதேபோல் 'மதராஸ் முனிசிபல் கார்ப்பரேஷன்' அங்கத் தினராக விளங்கிய ஹரினென் ஆஞ்ஜெலோ என்பாரைப் பற்றிய குறிப்பும் உண்டு. 'மதராஸின் முதல் ஸ்திரீ வக்கீல் மிஸ் ஆனந்தாபாய்' என்ற விவரமும் உண்டு. பெண்களுக்குப் பதினாறு வயதிற்குள் திருமணம் நடக்கக்கூடாது என்ற கோரிக்கையை வலியுறுத்திப் போராடிச் சட்டமியற்றி வைத்த ஹரிவிலாஸ் சாரதா, டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி ஆகியோரைப் பாராட்டி மகிழ்ந்தது ஸ்திரீதர்மம். இச்சட்டத்திற்கு எதிராக 'மத அகம்பாவமும் கர்வமும் வைதீக மமதையும் கொண் டிருந்த வைதீகர்களின் கடல்போன்ற பெருங்கூச்சலை' முறியடித்த வெற்றிப் பெருமிதத்தையும் இவ்விதழ் பதிவு செய்துள்ளது.

### ஜகன் மோகினி

நாவல் ராணி, கதாமோகினி, ஏக அரசி என்றெல்லாம் போற்றப் பெற்ற வைத்தமாநிதி முடும்பை கோதை நாயகி (வைமுகோ) அவர்

களரல் தொடங்கப்பட்ட இதழ் ஜகன்மோகினியாகும். 1923 முதல் மாதாந்திர நாவல் சஞ்சிகையாக விளங்கிய ஜகன்மோகினியில் ஏராள மான நாவல்கள் வெளிவந்தன. பல்வேறு எதிர்ப்புகளுக்கு இடையேயும் வை.மு.கோ ஜகன்மோகினியை வளர்த்தார். தானே முயன்று கல்வி கற்றுத் தமிழ் இலக்கியங்களையும் பயின்றார். 600 பக்கங்கள் கொண்ட வைதேகி நாவலை இதழிலும் வெளியிட்டுப் பின்னர் நூலாகவும் வெளிவரச் செய்தார். ஜகன்மோகினி அக்காலத்துப் பெண்களைப் பெருமைப்படுத்தும் இதழாக வெளிவந்தது என்பர்.

ஒரு பெண், பத்திரிகை ஆசிரியராகப் பொறுப்பேற்று நடத்து வதைக் கண்டு அந்நாளில் பலரும் எதிர்ப்புகளைத் தெரிவித்தனர். முற்போக்கு எண்ணமும் எழுத்துத்தாகமும் கொண்ட அவருக்கு அவர் தம் கணவரும் குடும்பத்தினரும் பெரும் துணையாய் நின்று ஊக்கம் தந்தனர். வை.மு.கோதை நாயகி அம்மாள் படைத்த 115 நவீனங் களுள் 90க்கும் மேற்பட்டவை ஜகன்மோகினியில் தொடராக வெளி வந்தவையாகும். ஜகன்மோகினி இதழ் 'வனிதா மண்டலம்' என்ற ஒரு பகுதியை மகளிருக்காக ஒதுக்கி 'நம் சகோதரிகளுக்கு மட்டும்' என்ற தலைப்பில் பல்வேறு கட்டுரைகளை எழுதி வெளியிட்டது. 'மகளிர் சங்கம் அவசியமா', 'பெண்களுக்குச் சொத்துரிமை அவசியம் தானா', 'ஸ்திரீதனம்', 'ஸ்திரீகளும் சொத்துரிமையும்', 'விவாக சீர்திருத் தங்கள்' என்னும் அரிய தலைப்புகளில் அக்காலத்துப் புகழ்பூத்துப் பொலிந்த பெண் எழுத்தாளர்களைக் கொண்டு எழுதுவித்து அரிய தொண்டாற்றியது. குகப்பிரியை, குமுதினி, ரங்கநாயகி, வசுமதி இராமசாமி, சூடாமணி, கமலா சடகோபன் போன்றோர் ஜகன்மோகினி மூலம் எழுதிப் புகழ் பெற்றனர். அண்ணல் காந்தியடிகள் மீது பற்றுக் கொண்டவர் வை.மு.கோ. காந்தியச் சிந்தனைகளையும், தீண்டாமை ஒழிப்பு, மதுஒழிப்பு, கதரின் பெருமை ஆகியன குறித்து விரிவாகத் தம் இதழில் எழுதியுள்ளார். ஜகன்மோகினி அக்காலத்தில் பெண் களின் முன்னேற்றத்திற்குப் பாடுபட்ட இதழ்களுள் முதன்மையான தாக விளங்குகின்றது.

### சிந்தாமணி

தேசியத் தொண்டினைத் தம் நோக்கமாகக் கொண்டு திகழ்ந்த வி. பாலம்மாள் தமிழக மாதரின் முன்னேற்றத்தைக் குறிக்கோளாக்கிச் சிந்தாமணி இதழை வெளியிட்டார். சிந்தாமணி பெயருக்கேற்பக்

குடும்ப வாழ்க்கையில் ஈடுபட்டோருக்குப் பல நல்விஷயங்களை எடுத்துரைக்கின்றது என்று அக்காலத்தில் இவ்விதழைப் பாராட்டிப் போற்றினர்.

பெண்கல்வி, ஓட்டுரிமை, அரசியலில் பங்கேற்பு பெண்கள் சுகா தாரம், கற்பு, சனாதனச் சிந்தனைகள் என்று பல்வேறு பொருள்களில் பெண்களுக்கு விழிப்புணர்வைச் சிந்தாமணி இதழ் ஊட்டியது. 1924ஆம் ஆண்டில் தொடங்கப் பெற்ற இவ்விதழ் 'உயர்வால் பெண்கள் மாத இதழ்' என்று அட்டையில் குறிப்பிட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது. 'சிந்தாமணியில்' பெண்கல்வி, மாணவர் முன்னேற்றம் தொழிலாளர் நிலைமை, நீதிமொழிகள், சுகாதாரம், நவீனக் கதைகள், புராண ஆராய்ச்சி முதலிய பல விஷயங்களும் வெளிவருமாகையால் தமிழ் நாட்டிலுள்ள சகோதர சகோதரிகள் அனைவரும் என் முயற்சியை ஆதரித்து என்னைக் கௌரவிக்க வேண்டுமாய்க் கேட்டுக் கொள் கின்றேன் என்று ஆசிரியர் வேண்டுகோள் விடுத்துள்ளமை நினைவு கூரத்தக்கது. சிந்தாமணி இதழ்களில் பெண்களுக்குக் கல்விதேவை, கட்டாயக்கல்வி தேவை என்பதை வலியுறுத்திப் பல கட்டுரைகள் வெளிவந்துள்ளன.

அக்காலத்துப் பெண்கள் எழுத்துரிமை, ஓட்டுரிமை, சொத்துரிமை பெறாது இரண்டாந்தரக் குடிமக்களாக வாழ்ந்து வரும் நிலையைச் சுட்டிக்காட்டி இவற்றிற்குத் தீர்வு காணவேண்டும் என்பதை வலி யுறுத்தும் கட்டுரை 'பெண்களும் ஓட்டுரிமையும்' என்னும் கட்டுரை யாகும். இவைபோன்ற பல கட்டுரைகள் பெண்களுக்குச் சுதந்திர உணர்வை வலியுறுத்தும் போக்கில் அமைந்துள்ளன. சிந்தாமணி இதழ் பெண்களின் சிறப்பை உணர்த்திப் பல்வேறு உரிமைகளுக்காக விழிப்புணர்வைத் தோற்றுவித்தது.

### மாதர் மறுமணம்

தொடக்ககாலத்தில் பெண்கள் அனுபவித்த கொடுமைகளுள் ஒன்று கைம்பெண் நிலை. 'பால்யவிவாகம்' என்ற பெயரில் திருமணத்தைச் செய்வித்து மொட்டிலேயே கருகிய இளஞ்சிறுமி களைச் சமுதாயத்தில் பேணிக்காக்க வேண்டிய சூழலைச் சான்றோர்கள் எண்ணி ஓர் இயக்கத்தையே தோற்றுவித்தனர். இளம்வயதிலேயே திருமணம் செய்யும் முறையைத் தடைசெய்யும், சாரதா சட்டம் தோன்

றியும் கூட அந்த அவலநிலைநீடித்தது. இத்தகைய விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்தத் தோன்றிய இதழ்தான் மாதர் மறுமணம் என்னும் இதழ். 1936ஆம் ஆண்டில் தோன்றிய இவ்விதழ் 'விதவை களின் கண்ணீர் துடைக்கப்பட வேண்டும்' என்னும் நோக்கத்தைக் கொண்டிருந்தது. காரைக்குடியிலிருந்து வெளியான இவ்விதழ் சொ. முருகப்பா அவர்களின் துணைவியான மு. மரகதவல்லி அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்தது. சமூக சீர்திருத்த ஊழியரான காரைக்குடி சொ. முருகப்பா அவர்கள் மாதர் மறுமண சங்கத்தின் செயலாளராகவும் விளங்கினார். இவர்தம் அரிய சேவையைப் பெரிதும் பாராட்டிப் போற்றிய டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி, 'தென்னிந்தியாவில் தமிழ் நாட்டில் ஸ்ரீமான் முருகப்பனைப் போல் புருஷர்கள் ஸ்திரீகளுடைய குறைகளை நிவர்த்தி செய்ய முன் வந்திருப்பது நாம் எல்லோரும் மெச்சத் தகுந்தது' எனப் புகழ்ந்துரைத்துள்ளார்.

> பாடுங் குயில்போன்ற பாவைதனை ஆலையிலே
> ஆடுங் கரும்பெனவே ஆக்கிவிட்டார் – நாடி
> விலக்க வழியறியார் மேதினியோர் கொண்ட
> கலக்கமுற்ற பொய்வழக்கால் காண்

என்று வருந்துவார் சொ. முருகப்பா.

இவ்விதழில் விதவைகளுக்கு விமோசனம் உண்டா? என்னும் தலைப்பில் அமைந்த கட்டுரை (எழுதியவர் செ. கு. இராமசாமிப் பிள்ளை) 'கிருகலக்ஷிமி' என்னும் இதழிலிருந்து எடுத்து வெளியிடப் பட்டது. 'இந்தியப் பெண் திலகங்களாகிய நம் சகோதரிகளுக்குக் கொடுக்க வேண்டிய முக்கியமான சுதந்திரங்களுள் தலைசிறந்தது 'விதவா விவாகம்' என்னும் கருத்தமைந்த இக்கட்டுரை பெரிதும் குறிப்பிடத்தகுந்தது. மறுமணம் இந்துமதக் கொள்கைகளுக்கு எதிரானது அன்று என்று பல்வேறு ஸ்மிருதிகளிலிருந்தும் இதிகாசங் களிலிருந்தும் சான்று காட்டி எழுதுவதும் எண்ணத்தக்கது. 'மாதர் மறுமணம்' குறித்து இவ்விதழில் வெளியான ஏராளமான பாடல்களும் சமூக விழிப்புணர்வையும் பெண்களுக்கான மறுமலர்ச்சியையும் ஊட்டின.

> மொட்டையிட்டுப் பாழ்படுத்தும் காலமும் போச்சே
> பலர் முன்னிலையில் நிற்கவொண்ணா காலமும் போச்சே
> பட்டினி கிடந்துருகும் காலமும் போச்சே – பெரும்
> பாதகம் செறிந்த கட்டுப்பாடுகள் போச்சே

என்னும் பாடலில் காணும் 'ஆனந்த சுதந்திரம்' பெரிதும் எண்ணத்தக்கது. 'விதவை மணமே விடுதலை அளிக்கும்' என்று அச்சிடப்பட்ட அழகான மஞ்சள் வர்ணப் பென்சில் தயாரிக்கப்பட்டு விற்பனை செய்த குறிப்பையும் இவ்விதழில் காண முடிகின்றது. மாதர்மறுமணத்திற்கு மடாதிபதிகள் ஆதரவு தந்த செய்தியும் பதிவு செய்யப்பட்டுள்ளது. காரைக்குடி மாதர் மறுமண சகாய சங்கத்தின் நான்காவது ஆண்டு விழாவில் வைக்கப் பெற்றிருந்த அட்டைகளில் அச்சிடப்பெற்ற வாசகங்கள் அக்கால எழுச்சியைக் காட்டும். 'கலியாணத்தை விரும்பும் விதவை கன்னிப் பெண்ணாவாள்' 'இவ்வளவு விதவைகளை வைத்திருப்பது வெடிச் சுரங்கத்தின் மேல் இருப்பதை ஒக்கும்' என்னும் வாசகங்கள் எண்ணத் தக்கன. 'மாதர் மறுமணம்' இதழ் பெண்களின் பல்வேறு விடுதலை உணர்ச்சியை வேண்டிய இதழாகப் பொலிவு பெற்று விளங்கியது.

### மங்கை

1945ஆம் ஆண்டில் தொடங்கப்பெற்ற மங்கை இதழின் ஆசிரியர் 'குகப்ரியை' ஆவார். சக்தி நிறுவனர் வை. கோவிந்தன் அவர்கள் நடத்திய இதழ். 'மங்கையில் குடும்பப் பாதுகாப்பு', 'வீட்டு வேலை', 'குழந்தை வளர்ப்பு', 'குழந்தை மனோதத்துவம்', 'உடலோம்புதல்', 'சமையல்', 'தையல்', 'கட்டுரை', 'கதை', 'கவிதை', 'பெரியார் வரலாறு', 'சயன்ஸ்' இன்னும் பல விஷயங்களும் அடங்கியிருக்கும் என்று மங்கை இதழில் காணப்படும் பதிப்புரை இதழின் நோக்கத்தைப் புலப்படுத்தும். வாழ்க்கையில் வெற்றிபெற்ற புகழ்பூத்த பெண்களின் வரலாற்றுக் கட்டுரைகள் இவ்விதழின் தனித்த பங்களிப்பு எனலாம். அன்னை கஸ்தூரிபாய் தொடங்கி ஆர்.எஸ். இலட்சுமி அம்மாள் ஈறாகப் பல கட்டுரைகள் மகளிர்தம் மாண்பைப் புலப்படுத்துவன. கவியரசி சரோஜினி நாயுடு தன் கவித்திறத்தாலும் நாவன்மையாலும் நாட்டுப் பற்றினாலும் தேசத்திற்காற்றிய அரும்பணியை விவரிக் கின்றது மற்றொரு கட்டுரை. 'இந்தியாவிலிருந்து பல பிரபலங்கள் அமெரிக்காவிற்கு வந்திருக்கின்றார்கள். ஆனால் இந்தியாவின் பிரச்சினைகளை அமெரிக்கர்கள் சரியாகப் புரிந்துகொள்ளும்படி செய்யக்கூடிய தகுதி வாய்ந்தவர் ஸ்ரீமதி விஜயலட்சுமி ஒருவர்தான்' என்று அமெரிக்கராலேயே பாராட்டப் பெற்றவர் விஜயலட்சுமி பண்டிட். இவருடைய வாழ்க்கை வரலாற்றுக் கட்டுரைகள் மங்கை இதழில் இடம்பெற்றுள்ளது.

வ.வே. சுப்பிரமணிய ஐயர் அவர்கள் 'நம் பெண்கள்' என்னும் கட்டுரையில், 'பூர்வகாலத்தில் நம்நாட்டில் பெண்களின் நிலை மேம் பட்டிருந்தது. பெண்கள் கல்வி கற்றிருந்தார்கள்; சபையில் பண்டிதர் களுடன் தர்க்கம் செய்துள்ளனர். அக்காலத்தில் சுயம்வரமும் காந்தர்வ விவாகமும் நடைபெற்றுள்ளன. ஆனால் இன்றோ பெண்களின் நிலை அவ்வளவு திருப்திகாரமாக இல்லை' என்று குறிப்பிட்டுள்ளார்.

பெண்கள் சமூக வாழ்வில் பங்குகொள்ள வேண்டும் என்னும் கருத்தை இதுபோன்ற கட்டுரைகள் வலியுறுத்துவதை உணரமுடி கின்றது. மகளிர் தம்மைச் சுற்றி நடக்கும் நிகழ்வுகளில், சமுதாயப் போக்குகளில், நாட்டு நடப்புகளில் நாட்டம் உள்ளவர்களாக இருந்து அவர்கள் தங்கள் அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டியதின் அவசியத்தை வற்புறுத்தும் விதத்தில் மங்கை இதழில் பல கட்டுரைகள் வெளிவந்துள்ளமை பெரிதும் குறிப்பிடத்தக்கதாகும்.

சிறுவயதில் பெண்களுக்கு நடைபெறும் திருமணத்தால் ஏற்படும் துன்பநிலையை மங்கை இதழ் கட்டுரைகள் மூலமும் சிறுகதைகள் மூலமும் எடுத்துரைத்து அறிய தொண்டாற்றியுள்ளது. இவ்வகைத் திருமணங்கள் இக்காலத்தில் முற்றிலும் நின்றுபோன மைக்குக் காரணம் மங்கை போன்ற மகளிர் இதழ்களின் வலுவான பிரச்சாரத்தால்தான் என்று துணிந்து கூறலாம்.

மங்கை இதழ்களால் அக்காலகட்டத்தில் சமூகத்தில் பெண்களின் நிலை எப்படி இருந்தது, பெண்கல்வி எந்த அளவில் ஊக்குவிக்கப் பட்டது. பால்ய விவாகத்தின் கொடியநிலை என்ன? வரதட்சிணைக் கொடுமை, ஆணாதிக்கம் மிகவும் மேலோங்கியிருந்த காலகட்டத்தில் பெண் எந்தெந்த விதங்களிலெல்லாம் துன்புற்றாள் என்பன போன்ற பல்வேறு செய்திகளையும் தெளிவாக உணர்ந்து கொள்ள முடிகிறது.

இக்கொடுமைகளைக் களைய முன்வந்த சமுதாய விழிப்புணர் வாளரையும் இவ்விதழ்கள் பதிவு செய்துள்ளமை பெரிதும் பாராட்டத்

தக்கது. இவ்விதழை நடத்திய சக்திகோவிந்தன் அவர்கள் என்றும் நினைவுகூர்ந்து பாராட்டப்பெற வேண்டியவராவார்.

**மங்கையர் மலர்**

மங்கையர் மலர் இதழ் அண்மையில் தோன்றியதாகும். 1994 ஆம் ஆண்டில் தொடங்கிய இவ்விதழ் பெண்களின் முன்னேற்றத்திற்கான பல்வேறு செய்திகளையும் உள்ளடக்கித் திங்கள் இதழாக வெளிவருகின்றது. மகளிருக்குத் தன்னம்பிக்கை ஊட்டும் வகையில் அரிய கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. சமுதாயத்தில் பெண்கள் முன்னேறுவதற்கரிய கருத்துகளையும் தந்து வாழ்வில் அவ்வாறு முன்னேறியவர்களின் பட்டறிவையும் பகிர்ந்து கொள்ளுமாறு அவர்தம் அரிய பேட்டிகள் இவ்விதழில் தொடர்ந்து வெளிவருகின்றன.

மங்கையர் மலரில் சமூகநலம், பொருளாதாரம், சமயம், மருத்துவம், கலை, விளையாட்டு, சமையல், மகளிர் வாழ்வியல், மகளிர் சிறப்பு, மாதர் தம் அடிப்படைப் பிரச்சினைகள், மகளிர்க்கான பொழுதுபோக்கு, மகளிர்க்கான ஆலோசனை, அழகுக்குறிப்பு, புடவை, நகை, இசை, நாடகம், நாட்டியம், கைத்தொழில் போன்ற பல்வேறு பொருள்களின் அடிப்படையில் மகளிருக்குப் பயன்படும் வண்ணம் பல கட்டுரைகள் வெளிவந்து கொண்டுள்ளன.

மகளிருக்குப் பயன்படும் வண்ணம் பல அரிய மருத்துவக் குறிப்புகளும் இவ்விதழில் இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது. மகளிரை வெளியுலகிற்கு அறிமுகப்படுத்தல், பொதுப் பணியில் ஈடுபட வைக்கத் துணைநிற்றல், மகளிர் பலரைப் படைப்பாளராக்கி ஊக்கம் தருதல், பல்வேறு படைப்பாக்கங்களில் மகளிரைப் பங்கு கொள்ளச்செய்தல், பிரச்சினைகளை எதிர்த்து ஆக்கபூர்வமாகச் செயல்படுதல் போன்ற பணிகளில் மங்கையர் மலர் ஈடுபட்டு அரிய சாதனைகளைப் புரிந்து வருகின்றது. மகளிர் அனைத்துத் துறைகளிலும் விழிப்புணர்ச்சி பெறுவதற்கு மங்கையர் மலர் கூடுதலாகப் பணியாற்றும் என நம்பலாம்.

**சுமங்கலி**

சுமங்கலி இதழ் 1984ஆம் ஆண்டில் தொடங்கப் பெற்றது. பராசக்தி சுமங்கலி இதழின் ஆசிரியர். பெண்களின் முன்னேற்றத்தை

நோக்கமாகக் கொண்டு வெளியாகும் இதழ் சுமங்கலி, வாழ்க்கையின் சிக்கல்களை உணர்ந்து அவற்றைத் தீர்த்துக்கொள்ளும் வழிமுறை களை மகளிர்க்கு உணர்த்தவேண்டும் என்னும் அடிப்படையைக் குறிக் கோளாகக் கொண்டது. சொல்லால் மட்டுமன்றிச் செயலாலும் பெண் களின் முன்னேற்றத்திற்குப் பாடுபடவேண்டும் என விழைந்தது.

இலவசச் சட்ட அறிவுரை, மருத்துவ அறிவுரை போன்ற பகுதி கள் மகளிர்க்குப் பெரிதும் பயன்படுவனவாகும். சுமங்கலியில் வெளி யாகும் கட்டுரைகள் அனைத்தும் பெண்களுக்காகவும் அவர்களின் நிறைகுறைகளைக் கூறும் போக்கிலும் வெளியிடப்பெற்றுள்ளன. பல்வேறு துறைகளில் புகழ்பெற்று விளங்கும் மகளிரைப் பேட்டி கண்டு அவர்களைப் பற்றி வெளியிடப்பெற்ற சிறப்புக்கட்டுரைகள் படிப்போருக்கு ஊக்கம் தரும். மகளிர் இவ்வகைக் கட்டுரைகளால் தன்னம்பிக்கை பெறுவர்.

சுமங்கலியில் வெளியான கட்டுரைகள் அனைத்தும் பெண்களை முதன்மைப்படுத்தி ஒரு முழுமையான வாழ்க்கை வாழ்வதற்குரிய வாய்ப்புகளை உருவாக்கியுள்ளன என்று கூறலாம். இலவசச் சட்ட அறிவுரைப்பகுதி மகளிருக்குரிய பல்வேறு சிக்கல்களைத் தீர்ப்ப தற்குப் பெரும் உதவி புரிந்துள்ளது. மணமுறிவு பற்றிய சிக்கல் களுக்கும் பல்வேறு தீர்வுகளைச் சுமங்கலி இதழ் தந்துள்ளது. இவ்விதழ் தொடர்ந்து வெளிவந்திருந்தால் மகளிர்க்குப் பெரிதும் பயன்பட்டிருக்கக்கூடும்.

### ராஜம்

1986ஆம் ஆண்டில் திருமதி சந்திரா ராஜசேகர் அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்தது. 'பெண் குலத்திற்குப் பெருமை சேர்த்திடும் இதழ்' 'Women's Monthly' என்று தமிழ் மற்றும் ஆங்கில வாசகங்களுடன் பெண்ணை இதழின் சின்னமாக ('ர' என்ற எழுத்திற்குள் பெண் உருவத்தின் முகம் மட்டும்) வைத்து வெளியிட்டது. இவ்விதழில் வெளிவந்த சிறுகதை, நெடுங்கதைகள் பெண்ணை மையாக வைத்தும் அவர்தம் வாழ்வுச் சிக்கல்களை மையமாகக் கொண்டும் வெளிவந்தன.

பெண்களின் கலையார்வம், அறிவுத்திறன், சாதிக்கும் எண்ணம், ஆண்களைவிடப் பெண்கள் மேலான வலிமை பெற்றவர்கள் என்பன

வற்றைச் சுட்டிக்காட்டி மகளிர்க்குத் தன்னம்பிக்கையை ஊட்டியது 'ராஜம்' இதழ். மனமுதிர்ச்சி பெறாத பெண்களாலேயே இன்று நம் மண்ணில் முதியோர் இல்லங்கள் தோன்றுகின்றன என்பதைச் சிறுகதைப் பாத்திரப்படைப்பின் வாயிலாக வாழ்வின் இறுதி நிலையிலுள்ள பெண்களின் நிலையையும் காட்டித் தீர்வுகளையும் வழங்குகின்றது. தத்தெடுத்துக்கொள்ளும் உரிமை, மணமுறிவுக்குப்பின் மணம் என்ற முறைகள் ஆண்களுக்கே என்ற தனியுரிமையை உடைத்து இரு பாலாருக்கும் பொதுவென்று பறைசாற்றுகின்ற சாதனைகளை வெளி யிடும் இதழ் 'ராஜம்' என்பர். ஆண், பெண் சமம் என்ற கருத்தாக்கத்தை உருவாக்கும் முயற்சிகளை ராஜம் இதழ் வெளிப்படுத்தியுள்ளது. அட்டைப்படம் முதல் அனைத்து நிலையிலும் பெண்ணினத்தின் மேன் மையை வெளிக்கொணரும் இதழாக ராஜம் இதழ் விளங்குகின்றது.

## பெண்மணி

பெண்மணி இதழ் 1996ஆம் ஆண்டு முதல் வெளிவரத் தொடங் கியது. பெண்ணியத் திங்களிதழாக வெளிவரும் இவ்விதழின் நோக்கம்; 'இன்று பெண்கள் பாதி கிணறு தாண்டிய நிலையில்... சுயம் என்ற நம்பிக்கைச் சூழலில் துணிவுடன் உலா வருகிறார்கள்... ஆயினும் தாண்டியது பாதிதான்... இன்னமும் முழுமையான சுதந்திரத்தை அடையவில்லை என்ற எச்சரிக்கையை உள் வைத்து, பாரதி கனாக் கண்ட யுகம் படைக்கத் தோள் கொடுப்போம்... துவண்டு விடாமல் துணிந்து நிற்போம்... எதன் மீதும் துவேஷம் கொள்ளாமல் சுதந்திரத் தின் எல்லையைத் தொடுவோம்' என்பதுதான். இந்நோக்கத்திற் கேற்ப மகளிரைச் சமுதாய விழிப்பு மிக்கவர்களாக உருவாக்க இவ்விதழ் பல்வேறு நிலைகளில் பாடுபட்டு வருகின்றது.

'ஆங்கிலப் பெண்ணிதழ்களைப் படித்துப் பெறுகின்ற அனைத்துக் கருத்துக்களையும் 'பெண்மணி' இதழ் மூலம் தர விழைகிறோம்' என்று 'பெண்மணி', இதழின் நோக்கமாகக் கூறுவதும் இங்குக் கருதத்தக்கது. 'பெண்மணிகளின் ஒவ்வொரு தேவையையும் உணர்ந்து, அவற்றைச் செயல்படுத்தவே நாங்கள் விரும்புகிறோம். தொடர்ந்து பெண்மணி மாத இதழ் படித்து வந்தாலே, பயனுள்ள பல தகவல் களைத் தெரிந்து கொண்டவர்களாக, வாழ்க்கையில் துணிவும் உற்சாக மும் பெற்றவர்களாக நீங்கள் மாறிவிடமுடியும் என்ற நம்பிக்கை

யோடு நல்லெண்ணத்தோடு இதழின் பகுதிகளை அமைத்து வருகிறோம்' என்று பெண்மணி இதழாசிரியர் தம்முடைய நோக்கத்தையும் தெளிவுபடுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவ்விதழ்களின் தலையங்கங்கள் பெரும்பாலும் பெண்களின் சிந்தனையைத் தூண்டுவனவாக எழுச்சியூட்டுவனவாக அமைந்துள்ளன. பெண் முன்னேற்றத்திற்கும், தற்சிந்தனையுடன் கூடிச் சுதந்திரமாகச் செயல்படுவதற்கும் அடிப்படையான கல்வி, தொழில் ஆகியவற்றின் இன்றியமையாமையை வலியுறுத்தி அவற்றிற்கான சூழல்கள், வசதிகள் பற்றிய செய்திகளும் இவ்விதழ்களில் சுட்டிக்காட்டப் பெற்றுள்ளன. பெண்களை மையமிட்ட நிகழ்ச்சிகள், செய்திகள், சிக்கல்கள் முதலானவை பற்றிய கலந்துரையாடல்களும் இதழ்களில் பதிவு செய்யப்பட்டுள்ளமை பாராட்டத்தக்கது. எல்லா வகையிலும் பெண்கள் சிறப்புறுவதற்கான அனைத்துச் செய்திகளையும் தாங்கிவரும் இதழாகப் 'பெண்மணி' இதழ் விளங்குகின்றது.

முடிவுரை

இதழியல் வரலாற்றில் மகளிர் இதழ்கள் ஆக்கபூர்வமான பங்களிப்பைச் செய்துள்ளன. ஒரு நூற்றாண்டிற்கும் மேலாக அவ்வக் காலங்களில் பெண்களின் முன்னேற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் பாடுபட்ட பல்வேறு இதழ்களின் தொண்டால் மகளிர் பெரும் மாற்றம் பெற்று விளங்குகின்றனர். இன்றைய கல்வி மேம்பாடு, சமநிலையுணர்வு, சமூக விழிப்புணர்வு, உரிமைகள் முதலானவற்றைப் பெறுவதற்குக் காலந்தோறும் மகளிர் இதழ்கள் தொண்டாற்றி வருகின்றன. இவற்றையெல்லாம் முறையாகப் பதிவு செய்வது மிகமிக இன்றியமையாதது.

# பொருளடக்கம்

1. சுகுணபோதினி
மா.ரா. சிவஅரசி 17

2. ஸ்திரீதர்மம்
பி. எழிலரசி 43

3. ஜகன்மோகினி
முனைவர் இரா. பிரேமா 61

4. சிந்தாமணி
அரங்க. மல்லிகா 103

5. மாதர் மறுமணம்
அ. திரிபுரசுந்தரி 125

6. மங்கை
முனைவர் வ. உமா 163

7. மங்கையர் மலர்
முனைவர் தி. மகாலட்சுமி 205

8. சுமங்கலி
ஜே. ஆர். இலட்சுமி 225

9. ராஜம்
இரா. கஸ்தூரி 253

10. பெண்மணி
முனைவர் ச. சிவகாமி 283

# சுகுணபோதினி

## மா.ரா. சிவஅரசி

இதழ்கள் மக்கள் வாழ்வுடன் மிக நெருங்கிய தொடர்புடையன; வாழ்வுக்கு வளம் சேர்ப்பன. சமுதாயத்தைத் தெற்றென விளங்க வைக்கும் காலக்கண்ணாடிகள். அந்தந்தக் காலகட்டத்தின் சமுதாய அமைப்பு, சிக்கல்கள், வாழ்வியல் முறைகள் போன்றவை இதழ்களின் வழியே படம்பிடித்துக் காட்டப்பட்டுள்ளன.

### மகளிர் இதழ்கள்

சென்ற நூற்றாண்டிலேயே மகளிர் முன்னேற்றம் பற்றிச் சிந்திக்கத் தொடங்கிவிட்டமையால் மகளிர் இதழ்கள் பலவாகத் தோன்றின.

இந்த இதழ்கள் பெண்களின் தேவைகள், அவர்தம் பிரச்சினைகள், துன்பங்கள், அவர்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகள் முதலியவற்றை விளக்கி, அவற்றிலிருந்து விடுபடும் வழிமுறைகளையும் தீர்வுகளையும் சொல்கின்றன. சமுதாய, கலாச்சார, பொருளாதார நிலைகளில் அடக்கி வைக்கப்பட்டிருந்த மகளிரின் முன்னேற்றம் குறித்துப் பேசுகின்றன. இந்த இதழ்கள், போதிய கல்வி அறிவு இல்லாமல் வாழ்க்கை முழுவதும் போராடியே கழித்திடும் பெண் களிடையே விழிப்புணர்ச்சியையும் சிந்தனைத் தெளிவையும் ஏற்படுத்தவல்லன.

### இதழின் வரலாறு

சுகுணபோதினி மாதம் இருமுறையாக 1883 முதல் வெளிவந்த மகளிர் இதழ். ஐந்து ஆண்டுகள் தொடர்ந்து வெளிவந்த இந்த இதழ்

ஆதரிப்பார் இன்மையால் இடையில் இரண்டொரு ஆண்டுகள் தடைப்பட்டு மீண்டும் வெளிவந்ததெனத் தெரிகிறது.

## இதழின் அமைப்பு

முதல் பக்கத்தில் இதழின் சின்னம் பொறிக்கப்பட்டுள்ளது. நடுவில் ஆங்கில அரசின் குறிப்பு உள்ளது. இரண்டு பக்கமும் மேற் பகுதியில் சிங்கங்கள்; அதன் கீழ்ப்பகுதியில் மாதம் இரண்டு முறை பிரசுரம் செய்யப்படும் என்று குறிக்கப்பெற்றுள்ளது.

சிங்கம் போன்று செம்மாந்த நோக்கோடு சிறந்த கருத்துகளை - குறைநிறைகளை வெளியிடுவதனால்தானோ என்னவோ சிங்க உருவங்கள் அழகாகப் பொறிக்கப்பட்டுள்ளன.

ஒவ்வோர் இதழும் 16 பக்கங்களைக் கொண்டதாக அமைந் துள்ளது. பொருளடக்கம் என்று தனியே இல்லை. அட்டைப்பகுதியில் அது இடம் பெற்றிருக்கலாம். கட்டுரையாளர்க்குக் கிடைத்த இதழ் கள் ஓராண்டுக்குரியன. அதிலும் 10 மாதங்களுக்குரிய இதழ்களே முழுமையாகக் கிடைத்துள்ளன. அனைத்தும் ஒரே தொகுப்பாக இணைக்கப் பெற்றுள்ளன. ஓர் இதழுக்கேனும் அட்டை காணப்பட வில்லை. இதழுக்குரிய பக்க எண்கள் தொடர் எண்களாகவே தரப் பட்டுள்ளன.

கட்டுரையாளருக்குக் கிடைத்த முதல் இதழ் 1888 மார்ச்சு மாதத்திற்குரியது. முதல் 6 இதழ்கள் - மூன்று மாதங்களுக்குரியன - தனித்தனி இதழ்களாக வெளியிடப்பட்டுள்ளன. பிறவற்றுள் சில ஒரு மாதத்திற்குரிய இரு இதழ்களும் சேர்த்து ஒரே இதழாக வெளியிடப் பட்டுள்ளன. கடைசியாக உள்ளவை, இரண்டு மாதங்களுக்குரிய 4 இதழ்களாக அமைந்துள்ளன (7 & 8; 9 & 10; 11 & 12. 17 - 20; 21 - 24). இது ஆறாம் புத்தகம் என்று குறிக்கப்பட்டுள்ளது.

சுகுணபோதினி இதழில் விளம்பரங்களைக் காணமுடியவில்லை. பெரும்பாலான படைப்புகளில் ஆசிரியர் பெயர் குறிக்கப்படவில்லை. பத்திகள் பிரிக்கப்படாமல் பெரியபெரிய பத்திகளாகவே அமைந் துள்ளன.

சுதேசமித்திரன், ஸ்ரீலோகரஞ்சனி, தேசோபகாரி, ஜனவிநோதினி போன்ற பிற இதழ்களில் வெளிவந்த சில முக்கியப் பகுதிகள்,

கட்டுரைகள், கருத்துகள் அப்படியே எடுத்தாளப்பட்டுள்ளன. சான்றுகள் இக்கட்டுரையில் இடம்பெற்றுள்ளன.

சுகுணபோதினி - தனி இதழின் விலையை அறிய முடியவில்லை. வருடச் சந்தா மூன்றரை ரூபாயாக இருந்தது. பின்னர் தபால் செலவு உட்பட மூன்று ரூபாயாக மாற்றப்பட்டது.

## இதழின் நோக்கம்

பெண்கள் பயன்பாட்டிற்கென்றே தோன்றிய சுகுணபோதினி அவர்களுக்கே உரிய பல செய்திகளைப் பற்றி எழுதியது:

> எங்கும் அபிவிருத்தியாய் வருகின்றதனால் இது நன்றாய் நிலைப்படும் என்பது நிச்சயமேயாதலால் இனி சிறிதும் அதைரியப்படாமல் இது விஷயமாக நம்மால் இயன்றமட்டும் ஒழுங்காய் நடத்த நிச்சயித்துள்ளோம்.
>
> பெண்களுக்கேற்ற பத்திரிகை ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என்று நாம் பேரவாக் கொண்டிருந்தமையால் திரவிய நஷ்டம் பற்றிக் கவலைப்படவில்லை. பெண்களுக்கு நன்றாய் உபயோகப்படும்படி அவர்களுக்கு எவை முக்கியமோ அவற்றைப் பற்றியே அதிகமாக எழுதப்படும். இதில் பெரும்பாலும் எம்மதத்தவர்களுக்கும் சம்மதமானவை மட்டுமே எழுதப்படும். பெண்களின் நன்மையை நாடும் விஷயங்களை எழுதி அனுப்புங்கள்.
>
> பெண்கள் நமது நாட்டில் தலையெடுக்க வேண்டுமென்று விரும்புகிறவர்கள் இதைப் பரவச் செய்யலாம்.

என்பன பார்வைக்குக் கிடைத்துள்ள சுகுணபோதினியின் முதல் பக்கத்து முக்கியக் குறிப்புகளாகும். சுகுணபோதினியின் தோற்றத்துக்குரிய காரணங்களும் உயரிய நோக்கங்களும் இதன்வழித் தெளிவாகத் தெரிகின்றன.

தங்களின் அறிவாற்றலையும் திறமைகளையும் உரிமைகளையும் உணரமுடியாத மகளிர்க்கு, அவற்றை உணர்த்துவதுதான் இதழின் தலையாய பணியாகக் கருதப்பட்டது.

பெண்கல்வி, குழந்தைகள் கல்வி, மதவேறுபாடின்மை, குடும்ப நலம், உடல் நலம், எவ்விதக் கைம்மாறும் கருதாது அனைத்து உயிர்களிடத்திலும் அன்பு காட்டும் மனித நேயம், சமுதாய உணர்வு

என்பன சுகுணபோதினியில் பரவலாகச் சொல்லப்பட்டுள்ளன. காலத்துக்கேற்ற செறிவான கருத்துகள் மக்கள் மனத்தில் ஆழமாக விதைக்கப்பட்டுள்ளன.

இந்த இதழில் நாற்பதுக்கும் மேற்பட்ட கட்டுரைகள், பன்னிரண்டுக்கும் மேற்பட்ட கதைகள், சிறுகுறிப்புகள், பலசரக்கு சமாச்சாரம், விநோத விருத்தாந்தங்கள், வர்த்தமானம் முதலியன இடம் பெற்றுள்ளன. ஒரே ஒரு கவிதையும் இதில் காணப்படுகின்றது.

## கட்டுரைகள்

இந்த இதழில் வெளிவந்த கட்டுரைகளில் மிகுதியானவை மகளிர் பற்றியவையே ஆகும். பெண்கல்வி, பெண்புத்தி, பால்ய விவாகம், நல்ல மனைவி, விதவைகளின் துன்ப நிலை, பெண்களின் கடமைகள் என்று பெண்களின் பல்வேறு நிலைகளில் கடமைகளும் தேவைகளும் மிகச் சிறப்பாகக் குறிக்கப்பட்டுள்ளன.

'பெண்கல்வி', 'பெண்புத்தி', 'நன்மனையாள்', 'விவாகமான பெண்களின் கடமைகள்', 'அழகே பெரும்பாலும் அரிவையரை அல்லற்படுத்தும்', 'ஸ்திரீகளுடைய அந்தஸ்தும் அதிகாரமும்', 'இந்து தாய்கள்', 'இந்து விதவைகளை நடத்தும் முறை', 'மனைவிமார்கள் அடிக்கடி தாய்வீடு போவதால் வரும் கேடுகள்' என்பன மகளிர்க்கான கட்டுரைகளில் சில. இந்தக் கட்டுரைகள் மகளிர்க்குத் தன்னம்பிக்கை ஊட்டி, ஆக்கமும் ஊக்கமும் அளித்து விழிப்புணர்ச்சியையும் உறுதியையும் வளர்த்திடும் எழுத்தோவியங்களாகத் திகழ்கின்றன.

நாட்டுக்கேற்ற நல்ல குடிமக்களாக - நாளைய தலைவர்களாகத் திகழவேண்டிய இளைஞர்களுக்கென்று, 'நல்ல ஆலோசனைகள்', 'மெய்ம்மாட்சி', 'யாரை விவாகம் செய்யக்கூடும்?' முதலான கட்டுரைகளும் சுகுணபோதினியில் இடம் பெற்றுள்ளன.

இதனுள், குழந்தைகள் நலம் பற்றிய கட்டுரைகளும் உடல் நலம் பேணும் கட்டுரைகளும் உள்ளன. அறிவுரைகளும் அறவுரைகளும் நிரம்பிய பழமொழிகள் தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

மக்கள் மனநலம் பேணுதற்குரிய 'சன்மார்க்கபோதினி' என்ற தலைப்பில் சில கட்டுரைகளும், இரசிய தேசத்துச் சக்கரவர்த்தினி

யாகிய காதரையினுடைய சரித்திரம், விக்டோரியா மகாராணியாரின் சரித்திரம், டப்ரன் பெருமாட்டியின் வாழ்க்கைக் குறிப்புகள் முதலிய கட்டுரைகளும் சுகுணபோதினியை அணிசெய்கின்றன.

இவை தவிர மரம் வளர்த்தல், மிருகங்களின் அறிவு, மக்கா, சீனா, பர்மா போன்ற நகரங்கள், அந்நகர மக்கள் வாழ்க்கை, நம்பிக்கை, பழக்க வழக்கங்கள் போன்றவை பற்றிய செய்திகளும் இதனுள் இடம் பெற்றுள்ளன. இனி, செறிந்த கருத்தமைந்த சில கட்டுரைகளின் சாரத்தைக் காணலாம்.

## மகளிர்க்கான கட்டுரைகள்

இப்பகுதியில் முதல் கட்டுரையாக இங்கு அமைவது, 'புருஷர்கள் செய்ய வேண்டிய கடமை' எனும் கட்டுரை. இக்கட்டுரையின் ஆரம்பமே நல்ல கருத்துகளை மனத்தில் பதியவைப்பதாக உள்ளது.

> மனமொத்த தோழரோடு குலாவுவதும் கல்விக்கழகம் முதலிய இடங்களில் வார்த்தை சொல்வதும் ஆடல்பாடல்களைக் கேட்பதும் விளையாடுவதும் பிரியமாயிருக்கும். என்றாலும் அருமை மக்களோடும் மனைவியோடும் கபடமற்றுக் கொஞ்சிக் குலாவுவதற்கு நிகராகாது.

என்ற கருத்து வலியுறுத்தப்படுகின்றது.

உறவுமுறைகள் ஒன்றோடொன்று பின்னிப்பிணைந்து, சுற்றம் போற்றி வாழ்வது நம் தேசத்துக்குரிய சிறப்பு அம்சமாகும். கணவனும் மனைவியும் ஊசியும் சரடும் போல் ஒருவழிப்பட்டு வாழவேண்டும். கணவன் மனைவியரிடையே நம்பிக்கையும் ஒற்றுமையும், ஒருவரையொருவர் புரிந்துகொண்டு வாழும் இயல்பும் மிக இன்றியமையாதனவாகும். தாம்பத்ய உறவு இணையற்றது என்பதை இருவருமே உணர வேண்டும் என்பன போன்ற நல்ல கருத்துகள் இக் கட்டுரையில் விளக்கப்பட்டுள்ளன.

இவையேயன்றி இன்னும் சில கருத்துகளும் இக்கட்டுரையில் இடம் பெற்றுள்ளன.

மனைவியைக் கற்றவளாக்க வேண்டியது கணவனின் கடமை.

பிராணனுக்குப் பிராணனாயிருக்கின்ற மனைவியின் நல்வார்த்தையைக் கேளாமல் தன் போக்கின்படிபோய்க் குடும்பத்தைப் பாழ்படுத்தல் ஆகாது. மனைவியின் சொல் கேட்டிடல் வேண்டும் என்கிறார் ஆசிரியர்.

> கல்வி கற்றால் அயலாருக்குக் கடிதம் எழுதி வியபசாரம் செய்வாள் பெண் என்று வீணே மனோராஜ்யம் செய்வது உண்டு
>
> ஆணுக்கு அறிவைத் தரும் கல்வி, பெண்ணுக்கு மட்டும் அதற்கு விரோதமாகும் என வல்லடி வழக்காடலாமா?
>
> அமுதம் உண்டவன் சாகான்; அமுதம் உண்டவள் சாவாள் என்பது போலத்தான் இது அறிவிழந்து தர்க்கிப்பதாகும்

என்னும் ஆசிரியர் (அ.வெ.) தர்க்கித்துத் தடைசெய்யக்கூடாது பெண் கல்வியை என்று தன் கருத்தையும் வெளிப்படுத்துகின்றார்.

இளமைத் திருமணம் நடந்து பல்லாற்றானும் துன்பம் மிகுந்த வாழ்வையே சந்தித்துக்கொண்டிருந்த பெண்களின் துயர்மிக்க வாழ்வு கண்டு மனம் வெதும்பி எழுதப்பட்டது 'பெண்கல்வி' என்ற கட்டுரை.

> இளமைத் திருமணத்தாலும் குடும்பப் பிரச்சினைகளாலும் தொல்லைகளாலும் 20 - 25 வயதிலேயே நம் பெண்கள் கிழவிகளாகிவிடுகின்றனர். இது தொடர்ந்தால் நம்மவர் எலிக்குஞ்சுகள் போலாகிவிடுவர். நம்மவர்க்குப் புத்தி வரவில்லையே! இதை யாரோடு சொல்லியழுகிறது.

என்று விரக்தியோடு வினவுகிறார் ஆசிரியர்.

> ஐந்து வயது வெள்ளைக்காரப்பிள்ளைக்குத் தெரிந்த மரியாதை நம் தேசத்து இருபது வயது புருஷர்களில் அனேகம் பேருக்குத் தெரியாது.
>
> 'பாச்சி', 'சோச்சி' என்று அரைகுறையாகப் பேசியும் மாமன் மைத்துனர் வந்தால் கெட்ட பேச்சுகளைப் பேசிப் பரிகாசம் செய்யும்படி சொல்லியும் பாலியத்தில் இரண்டொரு பிள்ளைகளுக்குத் தாயாக்கி, கல்வி அறிவே இல்லாமல் செய்துவிடுகின்றனர் பெண்களை. அதனால் அப்பெண்கள் சம்சாரக் காட்டில் திக்குத் தெரியாது அலைந்து திரிந்து அவதிப்படுகின்றனர்.

இத்தகைய துன்பச் சூழலை நாமே நம் பெண்களுக்கு உண்டாக்கலாமா என்று உருக்கமாகக் கேட்கின்றார் ஆசிரியர்.

அறியாமையால் பெண்கள் குழந்தைகளுக்கு அதிகத் தின்பண்டமும் உணவும் கொடுத்து வயிற்றைக் கெடுத்தல், மிகுந்த அன்பு காட்டி மகனைத் தீயவழியில் செலுத்துதல், மூன்று வேளை மருந்தை ஒரே வேளையில் தந்தால் சீக்கிரம் உடம்பு குணமாகும் என்று நினைத்து குழந்தைகளை எமனுக்கு இரையாக்குவது போன்றவை இங்கு நடந்து கொண்டிருக்கின்றன. இந்த நிலை மாறிட,

> ஓ, நண்பர்களே! இனியாவது மனமிரங்கி, பெண்களுக்குப் பால்ய விவாகம் செய்யாமல் கல்வி கற்பிக்க மாட்டீர்களா?

என்று மனம் நொந்து பேசுகின்றார் ஆசிரியர்.

இந்தக் கட்டுரையின் ஒரு பகுதி விதவை மறுமணம் பற்றியது. 1881இல் கணக்கெடுத்ததன்படி இப்பாரத நாட்டில், இரண்டு கோடியே ஒன்பது இலட்சத்து முப்பதாயிரத்து அறுநூற்று இருபத்தாறு விதவைகள் இருந்ததாகச் சொல்லப்படுகின்றது. இவர்கள் அனைவரும் 9 வயது முதல் 19 வயதுக்கு உட்பட்ட அனுதாபத்துக்குரிய சிறுமிகள் ஆவர்.

மனைவியை இழந்த ஆண்மகன் மறுமணம் செய்து கொள்கிறான். ஆனால், சிறுமியர் மறுமணம் பற்றி யாரும் பேசுவதே கிடையாது.

பெண் குழந்தைகளுக்குச் செய்கின்ற நகை நட்டு - கல்யாணச் செலவு - சீர் வரிசைகள் - வரதட்சணை இவற்றைக் குறைத்து, கிடைத்தற்கரிய செல்வமாகிய கல்வியைக் கற்பிக்கவேண்டும் என்பதுதான் ஆசிரியரின் பேரவா.

> சுமார் 4 வருடங்களுக்கு முன்பு பெண்கல்வியும் இந்தியாவில் ஜனித்து செழித்திடுமோ என்று கனவுபோல் நினைத்திருந்தோம். இப்போது வெகுவாய் ஒவ்வொரு கிராமத்திலும் 'பெண்கல்வி' எனும் பெண் ஜனித்து வளர்ந்துகொண்டு வருகிறாள். இந்தக் கல்வி விஷயத்தில் தூஷிப்பவர்கள் பெரும்பாலும் பிராமணர்களே. இப்பேர்க்கொத்த துர்அபிப்பிராயத்தைச் சொல்லி இந்தியாவில் பெண்களைப் பேதையாக்கி விடலாமா?'

என்று வருந்துகிறார் ஆசிரியர்.

பல்வேறு நிலைகளிலும் பெண்கள் வளர்ந்து சிறக்கவேண்டும் என்ற நல்லெண்ணத்தால் அவர்களின் வளர்ச்சிக்கும் வாழ்வுக்கும்

உரிய கருத்துகள் ஆங்காங்கு பல்துறை சார்ந்த நிலையில் பரிண மிப்பதை இச்சுகுணபோதினி இதழில் பரக்கக் காணமுடிகின்றது. அந்த வகையில் அமைந்ததுதான் 'கூடலூரில் பெண்கல்வி அபி விர்த்தி' என்னும் கட்டுரை.

கூடலூர் கவர்ன்மெண்டு பாலிகா பாடசாலையில் நடைபெற்ற ஆண்டுவிழாவில் பிராண்டர் துரைசானி பின்வருமாறு குறிப்பிட்டார்:

'பெண்கள் ஐந்தாம் வகுப்புவரை படிக்கின்றனர். இச்சொற்பப் படிப்பும் சிறிது காலத்தில் மறக்கப்பட்டு விடுகின்றது'.

'வாவிடத்தில் (புகுந்தவீட்டில்) பெண்கள் கற்ற கல்வியை மறந்துவிடும் மௌட்டிய நிலையிலிருந்து மீட்கப்பட வேண்டும். படிப்பைப் பள்ளிக்கூடத்தோடு பறக்கவிட்ட பெண்கள் வீட்டில் நல்ல புத்தகங்களை வாசித்துப் பழகவேண்டும். விடாப் பிடியாக வாசிக்க வேண்டும்; அறிவை விருத்தி செய்துகொள்ள வேண்டும். 5, 6 பெண்கள் சேர்ந்து வம்பு பேசாமல், படித்துத் தங்கள் அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

சுகுணபோதினியில் பெண்ணின் பெருமை, அவளின் இல்லறக் கடமை, அவள் பெறத்தக்க உரிமை முதலியன பரவலாகச் சொல்லப் பட்டுள்ளன.

'உதயதாரகை' பத்திரிகை ஆசிரியர் திரு. சதாசிவப் பிள்ளை 'இல்லற நொண்டி' எனும் நூலெழுதியுள்ளார். இனிக்கும் இல்லறம் அமைந்திடுதற்கான வழிமுறைகள் அந்நூலில் சொல்லப்பட்டிருப் பதால், அக்கருத்து நம்மவர்க்கு மிகவும் பயன்படும் என்று கருதிய சுகுணபோதினி இதழாசிரியர்,

> அப்புத்தகத்தைப் படியாதவர்க்கு அதில் நற்குணப் பெண்டிரைப் பற்றிச் சொல்லியிருக்கும் பக்கத்தை அடியில் பிரசுரம் செய் கிறோம்

என்றெழுதி வெளியிட்டுள்ளார்.

நல்ல கருத்துகள் எங்கிருந்தாலும் அவற்றைப் போற்றி ஏற்கும் ஆசிரியரின் நல்ல உள்ளம் பாராட்டுதற்குரியது.

'நல்ல மனையாள்' என்ற கட்டுரையில் நல்ல மனைவியினும் மேலான துணையில்லை; தீய மனைவியினும் கொடிய துன்பம் இல்லை என்ற கருத்து சொல்லப்பட்டுள்ளது.

வாழ்வுற்ற காலத்தும் தாழ்வுற்ற காலத்தும் தளராத திண்ணறிவு பெண்ணுக்குத் தேவை. மனைவியின் பிறந்தவீடு எவ்வளவு செல்வம் படைத்ததாக இருந்தாலும் கணவன் மனம் அறிந்து அவனைப் புரிந்து கொண்டு செயலாற்ற வேண்டும். 'மனை'விட்டு அகலாது குடும்பம் போற்றிட வேண்டும் என்பன போன்ற கருத்துகள் சங்க இலக்கியக் கருத்துகளை நினைவுபடுத்துகின்றன.

ஆதரவற்ற சிறு பெண்களையும் விதவைகளையும் ஆதரிக்கும் 'சகிசாமிதி' எனும் சங்கம் ஒன்று கல்கத்தாவில் உள்ளது. இச்சங்கத்தார் இப்பெண்களுக்குக் கல்வி போதித்து ஆசிரியப் பயிற்சியும் தருகின்றனர். சுதேச மகளிரே இதனை நடத்துகின்றனர்.

இச்சங்கத்துக்கு உதவிட, கல்கத்தா பெதூன் பாலிகா பாடசாலையில் வினோதப்பொருள் விற்கும் கடை ஒன்று வைத்தார்கள். இக்கடையிலிருந்து விற்பனை செய்தவர்கள் அனைவரும் இந்து குல மாதர்களே. ஆண்கள் எவரும் இதற்கு அனுமதிக்கப்படவில்லை.

பெண், கல்விக்கும் உரிமைக்கும் போராடிய சென்ற நூற்றாண்டிலேயே விற்பனையாளராகக் கடையில் பெண்கள் அமர்ந்திருந்தமை வியப்பிற்குரியது அன்றோ?

நம் நாட்டுப் பெண்கள் கல்வி அறிவின்றி அறியாமையில் மூழ்கி இருப்பதால் அவர்தம் கணவர்கள் ஒரு கால் ஒடிந்த நொண்டிகளாகவே வாழ்கின்றனர் என்று வருந்துகிறார் ஆசிரியர்.

இந்துக்களிடம் உள்ள மதாபிமானம், தருமம், உற்றாரிடத்துக் கொண்ட பேரன்பு, சுற்றம்புரக்கும்பான்மை போன்ற நல்ல குணங்களைக் கண்டு அந்நிய நாட்டார் அதிசயிப்பதாகச் சொல்லப்படுகின்றது இக்கட்டுரையில்.

குழந்தைகளை இளமை முதலே சத்திய நெறியில் நிறுத்தி, நாட்டுப்பற்றும் தன்னலம் மறந்து பிறர்க்கென வாழும் பெருமனப் போக்கும் கொண்டவர்களாக வளர்க்க வேண்டியவள் தாய்தான்.

அந்தத் தாய்க்குக் கல்வி அறிவு வேண்டாமா? உலக அனுபவமும் அவளுக்குத் தேவையல்லவா?

பூர்வகாலத்தில் ஸ்திரீகள் உன்னதப் பதவியிலிருந்தார்கள் என்று மனுஸ்மிருதி குறிப்பிடுகின்றது. ஆதிகாலத்தில் பெண்கள் தாங்கள் விரும்பினால்தான் திருமணம் செய்தனர். இல்லையென்றால் திருமணமே தேவையில்லை என்று தனியே இருக்கும் சுதந்திரம் பெற்றிருந்தனர் என்று 'ஸ்திரீகளுடைய அந்தஸ்தும் அதிகாரமும்' எனும் கட்டுரையில் சொல்லப்பட்டுள்ளது.

மகாராணி அகல்யாபாய் ஹோல்கார் என்பவர் அரசு புரிந்த போது காட்சிக்கு எளியராய் இருந்து ஒவ்வொருவரையும் நேரில் விசாரித்துத் தீர்வு கண்டதாகத் தெரிகிறது.

> உலகத்தில் எப்போதும் பரவியிருக்கும்படி மிகவும் மேன்மையாய் ஸ்திரீகள் செய்து முடிக்க வேண்டிய கடமைகளை முடித்திருக்கிறபடியால், அவர்களை அடிமைகள் என்று நாம் சொல்லத் துணிவோமானால், அந்த அடிமைத்தனம் இக்காலத்திய சுயேச்சையைப் பார்க்கிலும் ஆயிரம் மடங்கு மேன்மையையுடையது என்று சொல்லலாம்

என்கிறார் ஆசிரியர்.

இந்தியாவில் பாண்டவர் காலத்திற்குப் பிற்பாடுதான் தங்கள் உரிமையைப் பெண்கள் இழந்துவிட்டனர் என்பது ஆசிரியர் கருத்து.

'நமது ஸ்திரீகள்' என்ற கட்டுரை, கணவன் - மனைவி உறவின் சிறப்பு, பெண்ணுக்கு உரிய உரிமைகள் பற்றிப் பேசுகின்றது.

ஆண்மக்களுக்கு அறிவைத்தரும் கல்வி, பெண்மக்களுக்கு வேறாக முடியுமோ என்ற கேள்வியோடு, இரக்கமும் அன்பும் நிறைந்த பெண்கள் நன்மை தீமை உணர்ந்து வாழ்வில் வளம் பெற உதவுவது கல்விதான் என்பதையும் புரியவைக்கின்றது இக்கட்டுரை. இப்பகுதி சுதேசமித்திரனிலிருந்து அப்படியே எடுத்தாளப்பட்டுள்ளது.

பெண்கல்வி, உரிமை, கடமை என்றெல்லாம் பேசிவந்த சுகுணபோதினி, இந்து விதவைகளைப் பற்றியும் பேசுகின்றது. 'இந்து வித்வைகளை நடத்தும் முறை' என்ற கட்டுரையில் விதவைகளின் துன்பத்தையும் அவர்களுக்குச் சமூகத்தில் இழைக்கப்பட்ட கொடுமை

களையும் மிக நன்றாகப் படம்பிடித்துக் காட்டியுள்ளார், இக் கட்டுரை ஆசிரியர்:

> ஒரு பெண் விதவையானால் அவளிடம் இரக்கம் காட்ட வேண்டும். அதிலும் சிறுபெண்களாக இருக்கும்பக்ஷத்தில் நிஷ்டூரமாக நடந்துகொள்ளக் கூடாது. அது தர்மம் அன்று. அவளுடைய பேரிழப்பையும் வருத்தத்தையும் புரிந்துகொண்டு அன்புடன் நடந்து ஆதரவாக இருக்கவேண்டும். வெடிக்குரல், பழிப்புக் குறி, கடிந்தபார்வை கூடாது. மரியாதையுடன் நடந்துகொள்ள வேண்டும். அவளின் பணத்தில் ஒரு காசாவது எடுக்கக்கூடாது.
>
> சாக்கடை, மாட்டுக்கொட்டில், ஸ்நானஅறை, மலபாதை ஸ்தலம் முதலிய இடங்களையே அவள் குடியிருக்கும் பகுதியாக்கி விடக்கூடாது. நோயுற்றபோது நன்கு பராமரித்து, அதிக வேலை தராமல் கவனித்துக் கொள்ள வேண்டும். சரியான வகையில் மனிதத்தன்மையோடு ஒரு கைம்பெண் நடத்தப்படுவாளேயா னால், அவளால் அந்தக் குடும்பத்துக்கு எவ்வளவோ நன்மைகள் ஏற்படும்.

கைம்பெண்கள் எந்த அளவுக்குக் கொடுமைப்படுத்தப்பட்டார் கள் என்பதைத்தான் இக்கட்டுரை நிதர்சனமாக உணர்த்துகின்றது.

'குழந்தை மணம்' கண்டிப்பாகத் தடுக்கப்பட வேண்டியதொரு கொடிய செயல் என்பதை விளக்குகிறது இந்த இதழில் அமைந்த கருத்துச் செறிவுடைய ஓர் உரையாடல்.

திருமணம் குறித்து இம்மியளவும் கற்பனையோ கனவுகளோ இடம்பெற இயலாத பிஞ்சுவயதில் - மூன்றுவயதில் ஒரு குழந்தை பேசுவதாக அமைக்கப்பட்ட உரையாடலின் திறம் வியந்து போற்று தற்குரியது. அறியாப்பருவத்தில் அளப்பரும் சுமையை அள்ளி வைத்த அன்றையச் சமுதாயத்தில் 'சிசுவிவாகம்' என்னும் விஷவித்து வேரூன்றித் தழைத்திருந்ததைத்தான் இந்த உரையாடல் நமக்கு உணர்த்துகின்றது.

ஒரு கிராமத்தில் 3 வயது குழந்தைக்குத் திருமணம் நிச்சயிக் கப்பட்டது. பந்தல், பூ, சந்தனம் முதலியன வாங்கப்பட்டன. இதை யெல்லாம் பார்த்த குழந்தை தாயிடம் சில கேள்விகள் கேட்கின்றது.

இந்த நிகழ்ச்சி சென்னையிலுள்ள ஒரு பாலிகா பாடசாலையில் நடைபெற்ற ஒரு விழாவில், குழந்தையும் தாயும் உரையாடுவது போல ஆசிரியரால் அமைக்கப்பட்டுள்ளது. இதோ அந்த உரையாடல்:

வீடு நிறைய சுற்றத்தினர் குழுமியிருக்கின்றனர். கோலாகல மாக - ஒரே ஆரவாரமாக இருக்கிறது வீடு.

குழந்தை கேட்கிறது:

'என்ன கோலாகலம் வீட்டில்? ஒரே ஆரவாரமாக உள்ளதே!'

'கலியாணம்' பெரியவள் கூறுகிறாள்

'கலியாணம்னா என்ன?'

'தாலி கட்டுவது'

'தாலியா? அப்படின்னா என்ன?'

பெரியவள் தன் தாலியைக் காட்டி, 'இதைக் கட்டிக் கொள்ளுதல்' என்கிறாள்.

'நீ உன் தாலியை எடுத்து என் கழுத்தில் கட்டிவிடலாமே'

'கூடாது. புருஷன்தான் கட்ட வேண்டும்'

'அப்படியென்றால் என் தந்தையோ, சகோதரரோ, பரிசாரகரோ கட்டலாமே'

'இவர்களெல்லாம் கட்ட முடியாது. வேறு ஒருவன்தான் கட்டுவான்'

'எந்தப் பயல் வந்து எனக்குத் தாலி கட்டுவான்?'

'வையாதே அவனை. அவனிடம் நீ அன்பாக இருக்க வேண்டும். எத்தனை ஸ்திரீகள் புருஷரோடு உடன்கட்டை ஏறுகிறார்கள் தெரியுமா?'

'உடன்கட்டை என்றால் என்ன?'

'புருஷன் இறந்தபிறகு மனைவியும் அவனை வைத்து எரிக்கும் கட்டையில் ஏறி வெந்து இறந்துபோவாள்.'

'என்னாலாகாது. நான் முன்னே இறந்துபோகும் பக்ஷத்தில் அவனும் என்னோடு உடன்கட்டை ஏறுவானா?'

'இப்போது அந்தப் பழக்கமெல்லாம் இல்லை. நீ வாயை மூடிக் கொண்டிருக்க மாட்டாயா?'

பெரிய பெண் (தாய்) கடிந்து கொள்கிறாள்.

> 'மாட்டேன். நான் சும்மா இருக்கமாட்டேன். என் புருஷன் என்னோடு உடன்கட்டை ஏற சம்மதித்தால்தான், அவனைத் தாலி கட்ட விடுவேன். இல்லாவிட்டால் தாலிகட்டச் சம்மதிக்க மாட்டேன். கட்டினாலும் அதை அறுத்துத் தூர எறிந்து விடுவேன்'

குழந்தை, தாலி கட்டிக் கொள்வதற்கு பிடிவாதமாய் மறுத்து விடுகிறது.

குழந்தைக்குக் கலியாணம் செய்து கொடுக்கிற காலம் அது வன்று என்றும், பன்னிரண்டு வயதுக்குப் பின்னரே திருமணம் செய்து தர வேண்டும் என்றும் பெற்றோர் உணர்ந்து கலியாண ஏற்பாடுகளை உடனே நிறுத்திவிட்டனர் என்கிறது இக்கட்டுரை.

உலகத்தைப் புரிந்துகொள்ள முடியாத இளம் பருவத்தில் சுமக்க இயலாத சுமையை அள்ளி வைத்த குழந்தை மணத்தின் கொடுமையை அற்புதமான முறையில் அபரிமிதமான கற்பனை நயத்தோடு உரையாடலின்வழி குழந்தையே பேசுவதுபோல் அமைத்துள்ள பாங்கு பாராட்டுதற்குரியது.

'இந்துத் தாய்கள்' எனும் கட்டுரையில் அன்னையரின் கடமைகள் அழகாகச் சொல்லப்பட்டுள்ளன.

> நம் தேசத்தார் அநேகரிடத்தில் தைரியமின்மையும் வினயமின் மையும் ஸ்திரீ ஜனங்களுடைய அறியாமையால் விளைந்திருக் கின்றன

என்று வருந்தும் ஆசிரியர் பெண்களின் அறியாமையால் பல தீமைகள் விளைந்திட வாய்ப்புண்டு என்பதையும் விளக்குகின்றார்.

> தான் செய்த குற்றத்தை நியாயப்படுத்தித் தாய் பேசுவதைக் கேட்டே வளரும் குழந்தை, பின்னர் தானே கெட்டவழியில் செல்ல - கெட்ட செயல்களைச் செய்யத் தொடங்கிவிடுகிறது. பொய் சரளமாக வருகிறது. குழந்தை, தவறுணர்ந்து குற்றத்தை ஒத்துக் கொண்டாலும் தண்டிக்க நினைக்கும் தாய்மாரும் உண்டு. எனவே, தண்டனையிலிருந்து தப்பிக்க நினைக்கும் குழந்தை பொய் சொல்லவும் குற்றத்தை மறைக்கவும் ஆரம்பிக்கின்றது.

அறியாமை தீமைக்கு வித்து. எனவே, பெண்களுக்குக் கல்வி மிக இன்றியமையாதது என்பது தெளிவாகிறதன்றோ?

பெண்களுக்கென்றே தோற்றுவிக்கப்பட்ட சுகுணபோதினியில் அதன் தலையாய நோக்கமான பெண் கல்வியின் சிறப்பும், அக்கல்வி இன்மையால் ஏற்படும் தீமைகளும் இதழ்கள்தோறும் பரவலாக இடம் பெற்றுள்ளமையை அறிய முடிகிறது.

'மனைவிமார்கள் அடிக்கடி தாய் வீடு போவதால் வரும் கேடு கள்' எனும் தலைப்பில் அமைந்த கட்டுரை, அவ்வப்போது ஏதோ ஒரு காரணம் காட்டித் தாய்வீடு செல்லும் பெண்களுக்குக் கூறும் அருமையான அறிவுரைகளைக் கொண்டது.

நடைமுறை உண்மைகளைக் கூறி அவற்றின் விளைவுகளை யும் அவற்றால் ஏற்படும் துன்பங்களையும் விளக்கி, அவற்றுக்கான தீர்வுகளையும் இக்கட்டுரை சொல்லுகின்றது.

ஆசிரியர் தி.செ.மு. கூறுகின்ற அறிவுரை:

> ஓ என் அருமையான சகோதரிகளே! ஏதோ என் புல்லறிவுக்கு எட்டியதைச் சொல்கிறேன்; மலையில் விளைந்தாலும் உரலில் தானே வந்து மசிய வேண்டும்? உங்களுடைய தாயார் வீட்டினர் எவ்வளவுதான் செல்வந்தராயிருப்பினும் உங்களுக்குத் தாய்வீடு சதமா?

'மனைவியர்க்குத் தன் வீடே சொர்க்கம்' என்பதனைத் தெளிவு படுத்திய இக்கட்டுரையை அடுத்து, 'மூவகை மனைவியர்' என்ற தலைப்பில் மூன்று விதமான மனைவியரைப் பற்றிக் குறிப்பிடப் பட்டுள்ளது.

தந்தையை இழந்த நிலையில், தம் குடும்பச் சொத்துகளைப் பிரித்துக்கொள்ளும் வகையறியாத சகோதரர் இருவர், தொலைதூரம் சென்று மூன்று சகோதரர்களிடம் அறிவுரை கேட்ட நிகழ்ச்சியின் வாயிலாக மூவகைப்பட்ட மனைவியர் பற்றிக் குறிக்கப்பட்டுள்ளது.

மூன்று சகோதரர்களில் மூத்தவன் இளமையாகவும், இளைய வன் சிறிது நரை திரையுடையவனாகவும், கடைசி சகோதரன் இளமை மிகக் குறைந்து மூப்புடையவனாகவும் இருந்ததைக் கண்ட சகோ தரர்கள், மூத்தவனிடம் அதற்கான காரணத்தைக் கேட்கின்றனர். அதற்கு அவன் சொன்னதாவது:

என் மனைவி பகுத்தறிவுடையவள். என் மன உணர்வுகளைப் புரிந்து கொண்டு, என்னை எதிர்பாராமல் அவளே அனைத்தும் செய் வாள். என் இளமைக்கு அதுவே காரணம்.

என் தம்பி மனைவி பசு போன்றவள். எதைச் சொல்கிறோமோ அதை மட்டுமே செய்வாள். இல்லையேல் பராக்குப்பார்த்தபடி பேசாது உட்கார்ந்திருப்பாள்.

என் இரண்டாவது தம்பியின் மனைவி நாய் போன்றவள். கையில் காசு, உடுத்தி மகிழ உயர்ந்த ஆடைகள் எல்லாம் தருகிறான். என்றா லும், அவனை வாய்க்கு வந்தபடியெல்லாம் வைவதும் எரிந்து விழுவதுமாகவே இருக்கிறாள். அவனிடத்து நிந்தை கூறுவதே அவளுக்கு ஓயாத மணியமாக (வேலை) இருக்கிறது. அதனால் தான் எங்கள் மூவரில் இளையவனாக இருப்பினும் நரைத்து முதியவன் போல் இருக்கிறான் என்று கூறுவதன் மூலம் நல்ல மனைவியின் சிறப்பையும் பெருமையையும் அவளால் கிட்டும் இன்பங்களையும் நன்மைகளையும் நயம்பட எடுத்தோதுகின்றார் ஆசிரியர்.

அறியாமை இருளில் மூழ்கிக்கிடந்த மகளிர்க்குக் கல்வியூட்டி அறிவொளி கொளுத்தி வீட்டில் - நாட்டில் தலைநிமிர்ந்து வாழச் செய்ய வேண்டும் என்ற உயரிய குறிக்கோளோடு மகளிர் நலம் காக்கத் தோன்றிய இதழான சுகுணபோதினியில் மகளிர்க்கான கல்வி, குழந்தைமண எதிர்ப்பு, குழந்தைக் கல்வி, பெண்ணின் கடமைகள், மனைவியின் நிலை என்பனவெல்லாம் ஏறத்தாழ இருபது கட்டுரை களில் சொல்லப்பட்டுள்ளன.

பெண்ணின் நலம் பாராட்டி, பெருமை போற்றி, அவனியில் அவளின் புகழ் பரப்பிட, அரும்பி மலர்ந்து நின்றுள்ள இந்த இதழில், அடுத்து நாம் காண்பது உடல் நலம் - குடும்ப நலம் பற்றிய கட்டுரை களாகும்.

'நீடிய ஆயுள் பெறுவதெங்ஙனம்?', 'நோயுண்டோ என்று அறி தல்', 'மூளையினாலாகத்தக்க வேலை' என்பன அவற்றுள் சில.

மூளையினாலாகத்தக்க வேலையும் அதை நடத்தும் விதமும் சொல்லப்பட்டுள்ளன. மனித உறுப்புகளில் மிக இன்றியமையாத உறுப்பான மூளைக்கு, உணவுக்குப் பிறகு ஒரு மணிநேரம் அதிக

வேலை தரக்கூடாது. காலம் தப்பி உணவு உண்பதும் அதிகமாக உண்பதும் மனச் சலனங்களுக்கும் சஞ்சலங்களுக்கும் அதிக இடம் கொடுப்பதும் மூளை கெட்டு அகால மரணம் ஏற்பட வழி வகுக்கும் என்பது விளக்கப்படுகின்றது. இப்பகுதியிலுள்ள செய்தியை அனை வரும் அறிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகவே 'ஜனவிநோதினி' எனும் இதழிலிருந்து இப்பகுதி எடுத்தாளப்பட்டுள்ளது.

சுகுணபோதினி என்ற இந்த இதழுக்கு உரியன மட்டுமின்றி, மக்களுக்குப் பயன்படும் பல்வேறு செய்திகளையும் சிறந்த கட்டுரை களையும் பிற இதழ்களிலிருந்து அப்படியே எடுத்துத்தருவதும் இந்த இதழின் சிறப்புக்கு மெருகூட்டுகிறதெனலாம்.

'நோயுண்டோ இல்லையோ என்று காணல்' என்றொரு கட்டுரை உளது. இது குழந்தை மரணம்பற்றிப் பேசுகிறது. சிறு குழந்தை களாக இருக்கும்போதுதான் மரணம் அதிகமாக நிகழ்கின்றது. எனவே, சிறுகுழந்தைகளுக்கு நோய் ஏற்படாவண்ணம் பார்த்துக் கொள்ள வேண்டும் என்ற கருத்தினை வலியுறுத்துகின்றது இப்பகுதி.

இந்த இதழில், உடல் நலம் பற்றிய சில நல்ல கருத்துகள் ஆசாரக் கோவையிலிருந்தும் இடம் பெற்றுள்ளன.

புகையிலை

புகையிலையின் கெடுதிகள் அனைவரும் அறிந்தவைதான். என்றாலும், அவற்றைப் பலவகையிலும் பயன்படுத்துவோரின் எண் ணிக்கை அதிகரித்துக்கொண்டே போகிறது. அதனால் இதைப் பயன்படுத்துவோர்க்குச் சில அறிவுரைகள் சொல்லப்பட்டுள்ளன:

> 'பெற்றோர், வியாபாரிகள், சமுசாரிகள் முதலான சிநேகிதர்களே! பட்சத்தோடும் பக்தியோடும் ஆய்ந்து பார்த்துப் புகையிலைப் பழக்கம் எந்த ரூபமாயேனும் உங்களையும் உங்கள் பிள்ளைகுட்டி களையும் ஆளும்படி இடம் கொடாதிருங்கள். கையிலே ஏறின பாம்பை உடனே உதறிவிடாமல் தாமதம் பண்ணுவோமா? கைப்பொருளையும் செலவழித்து, கர்மத்தைச் சம்பாதிக்க வேண்டியதென்ன?'

என்று நெஞ்சம் நெக்குருக மக்களிடம் வேண்டிக் கொள்கிறார் இக் கட்டுரை ஆசிரியர். சமுதாய நலனில் அக்கறையும் மனிதநேயமும்

கொண்ட ஆசிரியரின் பெருமனப்போக்கு இதன்வழி வெளிப்படு கின்றதன்றோ?

ஒவ்வொரு நாளும் மனிதனால் செய்யப்படும் தேவையற்ற - தீமை பயக்கும் செலவுகளைத் தவிர்த்து, அவற்றுக்கான பொருளைச் சேமித்து, பொது நலனுக்காகப் பயன்படுத்த வேண்டும் என்ற ஒரு நல்ல எண்ணத்தை - கருத்தை ஆசிரியர் மக்கள் மனத்தில் பதிய வைத்துவிடுகின்றார்.

பெண்மை போற்றிய சுகுணபோதினி உடல் நலனுக்கான கருத்து களைத் தந்ததோடல்லாது மக்கள் மனநலனுக்கான அறிவுரைகளை யும் வழங்கியுள்ளது. அவை இளைஞர்க்குப் பெருமளவுக்குப் பயன் தரவல்லன.

## இளைஞர்க்கான கட்டுரைகள்

'நல்ல ஆலோசனை' என்ற சிறுகட்டுரை நாட்டின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் முதுகெலும்புகளான இளைஞர்கள் பற்றிய அக்கறையை அவர்தம் நலனில்கொண்ட ஆர்வத்தை வெளிப்படுத்துகின்றது.

இளைஞர் நலன் கருதி சுகுணபோதினியில் இடம் பெற்ற கட்டுரைகளுள் குறிப்பிடத்தக்கது இக்கட்டுரை.

'சகலதேச வாலிபரும் மரியாதை, ஒழுக்கம், வீரபராக்கிரமம் முதலியவற்றோடு இருக்க, நமது தேசத்து வாலிபர்கள் மட்டும் அந்தச் சுகுணங்கள் இல்லாதிருப்பது விசனமான விஷயம். பெற்றோர் வளர்ப்பு முறையே இதற்குக் காரணம்' என்கிறார் ஆசிரியர்.

'புத்திசாலிப் பெற்றோர், பிள்ளைகளைப் பால தண்டனையிலும் நல்ல சுகுணத்திலும் தெளிந்த யோக்கியத்திலும் வளர்த்து அந்தந்தச் சமயங்களில் அந்தந்த விதமாக நடத்தி அவர்களின் சரீரங்களை மாத்திரமல்ல, ஆத்துமாக்களையும் கெடுதிக்குள்ளாக்காமல் அவர் களுக்கு நன்மை செய்கிறவர்களாயிருக்கிறார்கள். இதை மற்றவர் களும் பின்தொடர வேண்டும்' என்று பெற்றோரின் கடமையினை மிக அழகாக விளக்கிவிடுகின்றார் ஆசிரியர்.

இளமை என்பது கண்ணாடிப் பாத்திரம் போன்று கவனமாகப் போற்றிப் பாதுகாக்க வேண்டிய காலம். இளமையில் பேசும் - படிக்கும் -

பார்க்கும் எந்தக் கருத்தும் பசுமரத்தாணி போல மனத்தில் பதியக் கூடியது. எனவேதான், 'இளமையில் கல்' என்றனர் ஆன்றோர். அந்த இளம் பிஞ்சுப் பருவத்தில் குழந்தைகள் நல்லமுறையில் வளர்க்கப் பட்டால் வாழ்நாள் முழுவதும் அவர்கள் மகிழ்ந்திருப்பர்; பிறரால் போற்றப்படுவர்; மற்றவர்களுக்கு வழிகாட்டிகளாகவும் அமைவர். எனவே, பெற்றோர் தங்கள் குழந்தைகளை மிகவும் பொறுப்புடன், சாம - தான - பேத - தண்டங்களைப் பயன்படுத்தி வளர்க்க வேண்டும்.

பெற்றோர் கடமையும் பிள்ளைகள் நிலையும் பற்றிய நிதரிசன மான உண்மைகள் இங்கு உணர்த்தப்பட்டுள்ளன.

திருமணம் செய்துகொள்ள விரும்பும் ஆண்கள், தங்களுக்கு ஏற்ற பெண்களைத் தேர்ந்தெடுப்பது எங்ஙனம் என்பதைப் பின்வரும் பகுதி குறிப்பிடுகின்றது:

ஒரே பெண்; செல்வம், சீர், வசதிகள் எல்லாம் உண்டு. ஆனால் கல்வி இல்லை; சமைக்கத் தெரியாது. இவளைத் திருமணம் செய்து கொள்வதைவிட, வசதி குறைந்த 5 பெண்கள் இருக்கும் இடத்தில் திருமணம் செய்து கொள்ளலாம் என்பது ஆசிரியர் கருத்து. யாரை விவாகம் செய்யக்கூடும் என்ற தலைப்பில் அமைந்த இச்சிறு பகுதி, கல்வி அறிவற்ற பெண் எத்தனை அழகும் பணமும் கொண்டிருந்தாலும் களர் நிலம்தான் என்ற பாரதிதாசனின் கருத்தினை நினைவுபடுத்து கின்றது.

### பொதுக் கட்டுரைகள்

மகளிர்க்கு, குடும்ப நலனுக்கு, உடல் நலனுக்கு, இளைஞர்க்கு என்பன தவிர, பொதுவான சில கருத்துகளைத் தன்னகத்தே கொண்ட சிறிய - பெரிய கட்டுரைகளும் சுகுணபோதினியில் இடம் பெற்றுள் ளன. அவை, மக்கள் நலனுக்கு ஏற்றம்தரும் வளமிக்க வாழ்வியல் கருத்துகளாகும்.

### இரசவாதம்

'இரசவாதம்' எனும் தலைப்பில், 'உள்ளதையுங்கெடுத்தாள் கொள்ளிக்கண்ணி' என்பது போல் இனிவரும் பயனை நம்பி, தற் போதுள்ளதையும் இழந்துவிடுகின்றனர் சிலர். பேராசையால் விளை வதே இரசவாதம் என்று குறிப்பிடுகின்றார் ஆசிரியர்.

இரசவாதக்காரர்களை நம்பி ஏமாந்து பின் மனமொடிந்து உயிர் துறப்பவர் பலர். எந்த யுகத்திலுமே இரசவாதத்தால் பொருள் சம்பாதிக்க இயலாது. எனவே, பொழுதை வீணாக்காமல் இயன்ற தொழில் செய்து வருந்திப் பொருளீட்டுவதே சிறப்பு. அத்தகையோரே வாழ்வில் மகிழ்ச் சியுற முடியும் என்பதே இப்பகுதி நமக்குக் கற்றுத் தரும் பாடம்.

'சில கிரகங்களைப் பற்றிய விசித்திரங்கள்' என்ற கட்டுரையில் செவ்வாய், புதன் போன்ற கோள்கள் விளக்கப்பட்டுள்ளன.

> இக்கிரகங்களின் இயக்கம் பற்றியும் அவற்றின் இலட்சணங் கள் குறித்தும் பூர்வ காலத்திலேயே - எவ்வித உபகரணங்களும் இல்லாதபோதே, யூகித்தறிந்து கிரகண காலங்கள் முதலிய வற்றையும் சரியாகக் கணித்துவைத்தது வியப்பிற்குரியது. பாஸ்கராச்சாரியார் எனும் வான சாஸ்திரி இந்த சாஸ்திரத்தில் தேர்ச்சி பெற்றவராகச் சொல்லப்பட்டுள்ளார்.
>
> இந்தக் கிரகங்களுக்கும் நமக்கும் பெருத்த சம்பந்தங்கள் உண்டென்பது இந்துக்களின் சித்தாந்தம்.
>
> பௌர்ணமி தினத்தில் கடலில் அலைமோதி உயர்ந்து எழுகின்ற அதிசயத்தையும், அமாவாசைக் காலங்களில் பூமியிலுள்ள சில கற்களில் கரும்புள்ளிகள் தோன்றுவது முதலிய விசித்திரத்தை யும், அமாவாசை - கிருத்திகை தினங்களில் பிணியாளருடைய வியாதி அதிகமாவதையும் அவர்களில் பலர் பெரும்பாலும் மரிப்பதையும் யோசித்துப் பார்க்கையில், நெடுந்தூரத்திலுள்ள இக்கிரகங்களுக்கும் நமக்கும் ஏதோ தொடர்பு இருப்பதாக மாத்திரம் தெரியவருகின்றது.

இதுபோன்ற அறிவியல் தொடர்புடைய சில கட்டுரைகளும் சுகுணபோதினியில் இடம் பெற்றுள்ளன. புகழ்மிகுந்த கலிலியோ போன்ற விஞ்ஞானிகளைப் பற்றிய குறிப்புகளையும் செய்திகளையும் கூட இந்த இதழில் காணமுடிகின்றது.

**கதைகள்**

சுகுணபோதினியில் கருத்தமைந்த கதைகள் பல இடம் பெற் றுள்ளன. பெரும்பாலான கதைகள் நமக்குத் தெரிந்தவை.

'சதுர்ப்பாடுடைய பெண்டாட்டி', 'ஒரு விதஸ்வதேசாபிமானம்', 'அடைக்கலம் புகுந்த புறா', 'நன்றியறிதலுள்ள நாய்', 'ஜெர்மன் தேசத்துச்

சக்கரவர்த்தியும் ஆடுமேய்க்கும் சிறுவனும்', 'என் மகன் தன் நன்மையை உணரவில்லை', 'பழைய குருடி கதவைத் திறடி', 'செல்வத்தினும் அறிவே மிக்கது', 'பூனை - எலி', 'காகமும் கள்ளிக் காகமும்', 'நுழை நரியும் அண்டங் காகமும்', 'கிழச் சிங்கம்' என்பன அவற்றுள் சில. இவற்றுள் ஒன்றிரண்டு கதைகளை மட்டும் பார்க்கலாம்:

'ஜெர்மன் தேசத்துச் சக்கரவர்த்தியும் ஆடுமேய்க்கும் சிறுவனும்' எனும் கதை, தன்னை வாழவைக்கும் எஜமானனுக்கு - தன்னை நம்பிப் பொருள்களை ஒப்படைத்துள்ள தலைவனுக்கு - எந்த விதத்திலும் துரோகம் செய்யவேகூடாது என்று எண்ணி வாழும் இடைச் சிறுவனைப் பற்றிய கதை.

தன் 12 வயது மகனுடைய தவறான போக்கு, அவன் வாழ்க்கையைத் தடம்புரண்டுவிடச் செய்துவிடக்கூடாது என்று துடித்து நிற்கும் தந்தை அவனுக்காகப் பள்ளி ஆசிரியரிடம் கெஞ்சி மன்றாடி மன்னிப்புக் கேட்கின்றார். தான் செய்த தவறுகளுக்காக ஒரு தவறும் செய்யாத தன் தந்தை ஆசிரியரிடம் மன்றாடுவதைக் கண்ட மகன், கண்ணீர் விட்டுக் கதறி, தவறு உணர்ந்து, மனம் திருந்தி மன்னிப்புக் கேட்கிறான் ஆசிரியரிடமும் தந்தையிடமும். இதுதான் 'தன் மகன் தன் நன்மையை உணரவில்லை'யே என்று ஏங்கும் தந்தையின் மனஉணர்வையும் மனம் திருந்திய மகனின் உணர்வையும் உள்ளடக்கிய கதை.

'சேராத இடந்தன்னில் சேர வேண்டாம்' என்பதை இளம் உள்ளங்கள் என்றும் மறந்துவிடக்கூடாது. தங்களின் தவறான நடத்தையால் தங்களுக்கு மட்டுமல்லாமல் தங்களின் அன்பான பெற்றோர்க்கும் குடும்பத்தினர்க்கும்கூட எவ்வளவு அவமானமும் துன்பமும் இடையூறுகளும் ஏற்படுகின்றன என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும் இளைஞர்கள்.

வாழ்க்கை வரலாற்றுக் கட்டுரைகள் சிலவும் சுகுணபோதினியில் இடம்பெற்றுள்ளன. 'ருஷ்ய தேசத்துச் சக்கரவர்த்தினி காதரைன் சரித்திரம்', 'விக்டோரியா சக்கரவர்த்தினியார் சரிதை', 'டப் பிரின் பெருமாட்டி' முதலியன குறிப்பிடத்தக்கன.

### சன்மார்க்க போதினி

மனிதன், இறையுணர்வுடன் தன் நிலை தாழாது நல்வாழ்வு காணும் வழிமுறைகளைச் சொல்லும் பகுதி இது.

இரண்டு இதழ்களில் ஐந்து கட்டுரைகளில் சமய உணர்வும் இறை உணர்வும் குறிக்கப்பட்டுள்ளன.

கடவுள் வாழ்த்து, வழிபாடு, மாதா பிதா வழிபாடு, கல்வி, கேள்வி, பெரியாரைத் துணைக்கோடல் என்ற ஐந்து கட்டுரைகளுள், கடவுள்வாழ்த்துப் பகுதியில் அருளுருவான இறைவனின் அளப்பரும் அருட்செயல்களைச் சொல்லி, அவனருள் பெற்று வாழ்வதே சிறப் பென்பதை விளக்குகின்றது.

> அந்தந்த மதஸ்தனும் தன்தன் மத சித்தாந்தப்படி ஞான பூரண ராகிய கடவுளை வழிபட்டு வருகையில், மற்றொரு மதஸ்தன் வேறொரு மாதிரியாக அத்தனிமுதலை வழிபட்டு வருவதைத் தூஷித்தல் ஒருவனுக்கு எவ்விதத்திலும் மானுஷீ கமன்று.

மதங்களிடையே - மதவழிபாட்டிடையே மாறுபாடு காணக் கூடாது என்பதை வலியுறுத்தும் கருத்து இது.

'மாதா பிதா வழிபாடு' என்ற தலைப்பில் 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்ற அவ்வையாரின் அருங்கருத்து போற்றப் பட்டுள்ளது. ஒப்புமையற்ற அன்னையின் அன்பு குறித்த பட்டினத்தடி கள் பாடலும் வள்ளுவர் குறளும் சான்று காட்டப்பட்டுள்ளன.

தங்களிடத்தில் பேரன்பு காட்டி வளர்த்திடும் பெற்றோர் மனம் புண்படாதவாறும், நன்றி மறவாதும் பிள்ளைகள் வாழவேண்டும் என் பதும் சுட்டப்பட்டுள்ளது.

> 'நமக்கு மிக்க கல்வி அபிவிர்த்தி, விவேக விளக்கம் இருக்கிற தால் அவர்களுடைய நியாயங்கள் நமக்குத் தீமை விளைக்குமா னால், அவர்களுக்குச் சித்த சமாதானத்துடன் உண்மையை விளக்கி அவர்களுடைய அங்கீகாரத்தைப் பெற்று, நாம் ஒரு காரியத்தில் பிரவர்த்திக்க வேண்டியது. இந்த மரியாதையைக் காட்டிலும் வேறு கைம்மாறு நாம் அவர்களுக்குச் செயற்பாலது யாது?'

என்கிறார் ஆசிரியர். வயதான காலத்தில் தங்களை மதித்துப் போற்றி அரவணைக்கும் உயர் பண்பைத்தான் பிள்ளைகளிடமிருந்து பெற்

றோர் பெரிதும் எதிர்பார்க்கின்றனர் என்ற பேருண்மை இங்கு உணர்த்தப் பெற்றுள்ளது. இன்றைய இளைய நெஞ்சங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டியதொரு இன்றியமையாத கருத்து இது.

நிலையற்ற இவ்வுலகில், நிலைத்த புகழொடு வாழ்ந்து மகிழ வேண்டுமானால் சமயச் சான்றோர், வாழ்வியல்உணர்ந்த பெரியோர் துணை நமக்கு நிச்சயம் வேண்டும் என்பதனைச் சான்றுகளோடு விளக்கியுள்ளது, 'பெரியாரைத் துணைகோடல்' எனும் கட்டுரை.

மனிதனை மனிதனாக வாழச் செய்யும் கல்வியின் பெருமையைப் புறநானூறு, குறள், நாலடியார் போன்ற பல்வேறு இலக்கியச் சான்று களுடன் ஔவையார் பாடலையும் எடுத்துக்காட்டி நல்ல முறையில் விளக்கியுள்ளது 'கல்வி' எனும் கட்டுரை. இதில், தலை - இடை - கடை மாணாக்கர் பற்றிய நன்னூலார் கருத்தும் இடம் பெற்றுள்ளது.

'கற்றலின் கேட்டல் நன்று' என்பது 'கேள்வி' எனும் கட்டுரையின் மூலம் சிறப்பாக விளக்கப்பட்டுள்ளது.

'உலகத்தில் எவ்வாறு ஒழுகினால் ஒருவன் அதிக சவுக்கிய வானாயிருக்கலாம்?' என்ற வினாவிற்குரிய விடையே இக்கட்டுரையின் சாரம். உலகியல் அறிந்து விருப்பு வெறுப்பில்லாமல், அழுக்காறு - அவா - வெகுளி - இன்னாச் சொல் மறந்து, இறையுணர்வுடன் பிறர்க்கென வாழும் பேருள்ளம் கொண்டவனே இவ்வுலகத்தில் மிகவும் சௌக்கியமாக வாழ்பவன் என்பதே இக்கட்டுரை உணர்த்தும் உண்மையாகும்.

வாழ்க்கைக்கு இன்றியமையாத கருத்துகளையெல்லாம் பல கட்டுரைகள்வழி மக்களுக்கு உணர்த்திய சுகுணபோதினி, பொது வான சில கருத்துகளை - நாட்டு நடப்புகளை, 'பலசரக்கு', 'சமாச் சாரம்', 'விநோத விருத்தாந்தங்கள்', 'வர்த்தமானம்' போன்ற தலைப்பு களில் குறிப்பிட்டுள்ளது.

அவற்றுள் 'பலசரக்கு' என்ற தலைப்பு முதன்முதலாக மூன்றா வது இதழில் காணப்படுகின்றது. அது தவிர, பிற இதழ்களில் இப் பகுதி இடம்பெறவில்லை.

இப்பகுதியில் கைத்தொழிலின் சிறப்பு சொல்லப்பட்டுள்ளது.

'செய்யும் தொழிலே தெய்வம்' என்ற எண்ணம் நமக்கு வேண் டும். சீமையிலிருந்து பொருள் வரவழைக்காமல், நாமே உற் பத்தி செய்ய வேண்டும். நம் நாட்டு மூலிகைப் பொருள்கள் அங்குச் சென்று மாத்திரை - மருந்துகளாக வருகின்றனவே. நாமே அனைத்துப் பொருள்களையும் செய்தால் நமக்கு வரு மானமும் பெருகும் நம் தேசத்துக்கும் பெருமை.

சமாச்சாரம்

இப்பகுதி, ஏழாவது இதழிலிருந்துதான் ஆரம்பமாகின்றது. இதற்கு முந்தைய இதழ்களில் இடம்பெறவில்லை.

இதில் இருந்து சில துணுக்குச் செய்திகளைக் காண்போம்.

'பிரான்சில், ஜோலின் என்னும் தனவான் ஓர் அற்புதமான ஆவிக் கூட்டைச் செய்துள்ளார். 200 அடி உயரமுள்ள அக்கூடு, ஒரு மணி நேரத்தில் ககன மார்க்கமாய் 70 மைல் போகக்கூடியது. தன் நண்பர் களுடன் அதில்தான் அவர் யாத்திரை செய்கிறார்.'

'அமெரிக்காவில் டாக்டர் டர்னர், தண்ணீர் தவிர வேறு எதையும் புசியாது 80 நாட்கள் வரை இருக்கின்றார். அதே மாதிரி 40 சிறுவர் களை அவர் பழக்கி வருகின்றார். அவர்களையும் மாமிசம் முதலிய அசுத்த வஸ்துக்களைத் தொடாமல் ஒரே வேளை போஜனத்துடன் வளர்த்து வருகின்றார்.'

'ஆஸ்திரேலியாவில் ஒருவிதப் பாம்புகள் தமக்கு அபாயம் நேரிடும் வேளைகளில், வாயைத் திறந்து கொள்கின்றன. அவற்றின் குட்டிகள் யாவும் அதிவிரைவில் வாய்வழி நுழைந்து க்ஷேமமாய் இருக்கின்றன. ஆபத்து நீங்கியதும் முன் போலவே, உயிருடன் வெளிப் படுகின்றன. இவ்வண்ணமாய் ஏக காலத்தில் 18 குட்டிகள் ஓர் அபாயமான காலத்தில் காப்பாற்றப்பட்ட விசித்திரத்தை 'மக்ரூயி' என்பவர் தான் பிரத்யட்சமாகக் கண்டதாகக் குறிப்பிட்டுள்ளார்.'

'இங்கிலாந்தில் தம்பதிகள் விவாகமாகி 25 ஆண்டுகள் க்ஷேம மாய் ஜீவித்திருந்தால், வெள்ளி விவாக மகோற்சவமும் 50 வருடங்கள் அப்படியே ஜீவித்திருந்தால் தங்க விவாக மஹோற்சவமும் கொண் டாடுகின்றனர்.'

'பூனாவிலுள்ள பட்டு நூற்காரர்களெல்லாம் ஒன்றாகச் சேர்ந்து, தங்களினத்தார் எந்திரத்தால் நெய்யப்பட்ட பட்டு நூல்களை வாங்க லாகாது என்றும், சுதேச நூல்களையே உபயோகிக்க வேண்டுமென்றும், இக்கட்டுப்பாட்டை மீறினால் ரூ.50/- அபராதம் என்றும் தங்களுக்குள் கட்டுப்பாட்டை விதித்துக் கொண்டனர்.'

'இத்தேச ஸ்திரீகளுக்கு வைத்திய உதவிக்காக டப்ரின் பெரு மாட்டி பேரால் 10 இலட்சம் நிதி சேர்க்கப்பட்டது.'

'ஸ்திரீ மாணாக்கர் - மெட்ரிகுலேஷன் பரீட்சையில் திருநெல் வேலியில் 5 பெண்கள் (கிறிஸ்தவர்) தேறியுள்ளனர். இதுவரை திருநெல்வேலியில் பெண்கள் இப்பரீட்சையில் தேறியதே இல்லை.'

'இராஜமகேந்திரத்தில் 17 வயது பிராமண விதவை, 34 வயது பிராமணனுக்கு மறுவிவாகம் செய்து தரப்பட்டாள்.

'லக்னோவில் சென்ற வருஷம் 19 ஸ்திரீகள் வைத்திய சாஸ் திரக் கல்வி பயின்றனர்.'

'இந்து விதவைகளுக்குப் புகலிடம் கொடுத்து வித்தியா போதனை கற்றுத்தர வேண்டுமென்று பம்பாயில் பிரத்தியேகமான ஸ்தாபனமொன்று ஏற்படுத்துவதற்காக, இங்கிலாந்திலும் அமெரிக்கா விலும் நிதி சேர்த்தார் பண்டித ரமாபாய்.'

வர்த்தமானம்

'அமெரிக்காவில் கிழிந்த செருப்புகள் கூடப் பயன்படுத்தப்படு கின்றன. அவைகளையெல்லாம் இடித்து உருண்டையாக்கி ஓர் இயந்திரத்தில் வைத்து அழுத்திச் சிறிய பலகைகள் மாதிரி செய்கின் றனர். இதைப் புத்தகம் பைண்ட் செய்யப் பயன்படுத்துகின்றனர்.'

'அமெரிக்காவில் இப்போது காகிதப்புட்டிகள் செய்து வருகின் றனர். கண்ணாடிப்புட்டிகளை விட இவை நயமும் சுத்தமும் உடை யாத தன்மையும் கொண்டுள்ளன. இதுபோலவே நம்மவர்களும் யுக்தியைப் பிரயோகித்துப் பண்ணினால் நூதனமான காரியங்களை உண்டு பண்ணலாம்.'

*முடிவுரை*

ஏறத்தாழ நூறு ஆண்டுகளுக்கு முன்பு வீட்டில் பெண்ணைப் பூட்டிவைத்த வாழ்க்கைச் சூழலில் பெண்கல்விக்கான விழிப்புணர்ச்சி தோன்றியது. அதன் விளைவு பெண்ணைப் போற்ற வேண்டும் - அவளுக்கு இழைக்கப்பெற்ற பல்வேறு கொடுமைகள் களையப்பட வேண்டும் - அவளின் உரிமைகளை உணர்த்த வேண்டும் என்பன போன்ற விழைவுகள் ஏற்றம் பெற்றன.

சுகுணபோதினியில் அன்றைய சமுதாயத்தில் வேரூன்றியிருந்த குழந்தை மணம் கடியப்படுகின்றது. பெண்கல்வியின் இன்றியமை யாமை பேசப்பட்டுள்ளது. அடிக்கடி தாய்வீடு செல்லும் மனைவியால் ஏற்படும் தீமைகள் - அவற்றிற்கான தீர்வுகள் சொல்லப்பட்டுள்ளன. விதவைகள் மறுமணமும் பேசப்பட்டுள்ளது.

# ஸ்திரீ தர்மம்

## பி. எழிலரசி

பதிவு செய்யப்பட்டுள்ள, அறியப்பட்ட வரலாறுகள் முழுதும் ஆண்நோக்கில் ஆனவையாகவே உள்ளன. அவை பெண்களின் வரலாற்றுப் பங்களிப்பைப் புறக்கணித்துள்ளன; மறைத்துள்ளன. தவிர்க்க இயலாத சமயங்களில் பெண்களைப் பெயரளவுக்குக் குறிப்பிடுவதோடு நிறுத்திக்கொண்டுள்ளன அல்லது தமக்குச் சாதகமான முறையில் பதிவு செய்து வைத்துள்ளன. ஆணுக்காகவே படைக்கப்பட்டவள், ஆணுக்குத் துணைசெய்யக்கூடியவள், ஆணுக்கு அடங்கியவள் முதலிய மதிப்பீடுகளை உட்கொண்டிருக்கும் ஆண் நோக்கு, வரலாறுகளிலும் பெண்ணை அவ்விதமே கண்டுள்ளது; சித்திரித்துள்ளது. தமிழ் இலக்கிய வரலாற்றில் இடம் பெறும் பெண்களான ஔவை, ஆதிமந்தி, புனிதவதி, திலகவதி, ஆண்டாள் உள்ளிட்ட பெண்கள் அனைவரும் ஆண்நோக்கு மதிப்பீடுகள் ஏற்றப் பட்ட சித்திரங்களாகவே பதிவாகி உள்ளனர். நாடோடி வாழ்க்கை எனக் கருதத்தக்க அளவில் இடம் விட்டு இடம் பெயருதலும் பலரைச் சந்தித்தலுமாகத் தம் வாழ்க்கையை நடத்தியிருக்கும் ஔவையை மூதாட்டியாகச் சித்திரிப்பது, இளம் பெண் வீட்டை விட்டு வெளி யேறுதலும் பலரைச் சந்தித்தலும் தகாது என்னும் மதிப்பீடு கொண்ட ஆண்நோக்குத்தான். இதைப் போலவே மற்ற பெண்களின் வரலாற் றுப் பதிவையும் விளக்க முடியும்.

வரலாறு பெண்களுக்கு இழைத்திருக்கும் இக்கொடுமையின் காரணமாகப் பெண்களின் வரலாற்றை மீட்டுருவாக்கம் செய்ய வேண்டிய தேவை இன்றுள்ளது. ஆண்நோக்கிலான அனைத்துக்கும் பெண்நோக்கு சார்ந்த விளக்கங்களும் பதிவுகளும் அவசியமாக

உள்ளன. இது தமிழ் இதழ்களின் வரலாற்றுக்கும் பொருந்தும். இது வரை வெளியாகி உள்ள இதழ்களின் வரலாற்று நூல்கள் எதுவும் மகளிர் இதழ்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து எழுதப்படவில்லை. மகளிர் இதழ்கள் குறித்த முழுமையான தகவல் பதிவுகள் கூட இல்லை. அவ்விதழ்கள் மகளிர் முன்னேற்றத்தில் எத்தகைய பங்கு வகித்தன என்பதைப் பற்றிய குறிப்புகளும் இல்லை. அவற்றைத் தேடித் தொகுக்க வேண்டிய நிலையே உள்ளது.

மா.ரா. இளங்கோவன், மா.சு. சம்பந்தன், அ.மா. சாமி உள்ளிட்ட இதழியல் வரலாற்றாசிரியர்கள் எவரும் தமது நூலில் குறிப்பிடாத 'ஸ்திரீ தர்மம்' என்னும் பெண்களுக்கான இதழ் இவ்வகையில் மிகுந்த முக்கியத்துவம் பெறுகிறது.[1] மகளிருக்காக நடத்தப்பட்ட அல்லது மகளிரால் நடத்தப்பட்ட இதழ்களின் வரலாறு தனியே எழுதப்படு மானால் 'ஸ்திரீ தர்மம்' அதில் முதன்மை இடம் வகிக்கக் கூடிய இதழாக இருக்கும். மேலும், ஓர் இதழ் எத்தகைய நோக்கத்திற்காக நடத்தப்பட்டது, அந்நோக்கத்தை நிறைவேற்றும் முயற்சியை எவ்விதம் மேற்கொண்டுள்ளது என்பனவற்றைப் பொறுத்தே வரலாற்றில் அதன் இடம் தீர்மானிக்கப்படும். 'ஸ்திரீ தர்மம்' இதழுக்கு இத்தகைய தீர்மானமான இடம் வழங்குவதில் அவ்விதழின் செயல்பாடுகளை அறியும்போது சிக்கல் எதுவும் இருக்காது. இந்நூற்றாண்டுப் பெண் களின் வரலாற்றுக்கான அடிப்படை ஆதாரங்களைப் பதிவுசெய்து வைத்திருக்கும் ஆவணம் என்று போற்றத்தக்க வகையில் ஸ்திரீ தர்மத்தின் செயல்பாடுகள் உள்ளன. அவற்றை விரிவாகக் காணும் முன் அவ்விதழ் பற்றிய விவரங்களை அறிந்து கொள்வது அவசியமாகும்.

### 'ஸ்திரீ தர்மம்' அறிமுகம்

'ஸ்திரீ தர்மம்' இதழானது மாதர் இந்தியச் சங்கத்தின் (Women's Indian Association) பிரச்சார இதழாக வெளிவந்துள்ளது.

மாதர் இந்தியச் சங்கம் 1917ஆம் ஆண்டு மே மாதம் எட்டாம் தேதி திருமதி டாரதி ஜினராஜ தாஸர் என்பவரால் சென்னை அடையாறில் தொடங்கப்பட்டது.[2] ஐரிஸி மாதர்கள் திருமதி எம்.இ. கஸின்ஸ், டாக்டர் அன்னி பெசன்ட் போன்றோர் குறிப்பிடத்தக்க பங்கு வகித் தனர். 1924 ஜனவரி மாத இதழின்படி இச்சங்கத்தின் தலைவர் டாக்டர் அன்னிபெசன்ட், உபதலைவர் திருமதி டாரதி ஜினராஜ தாஸர்; பொதுச் செயலாளர் திருமதி எம்.இ.கஸின்ஸ்; பொருளாளர் திருமதி

எ. மஹாதேவ சாஸ்திரி. இம்மாதர் இந்தியச் சங்கத்தின் கிளைகள் இந்தியாவின் தென்கோடியில் இருந்து வடக்கே காஷ்மீர் வரை பரவி இருந்தன. இந்தச் சங்கம் அரசியல், சமயம் மற்றும் கல்வித்துறைகளில் பல பயனுள்ள வேலைகளை மேற்கொண்டது. இச்சங்கத்தின் சின்னம் ஓர் 'இலட்சியப் பெண்'. இந்திய வரைபடத்தில் சென்னை மாகாணத்தை அடியாகக் கொண்டு இரு கைகளையும் கிழக்கு, மேற்கு என்று இருபுறமும் நீட்டியபடி ஓர் இலட்சியப் பெண்ணின் உருவம் பொறிக்கப்பட்டுள்ளது. ஆங்கிலத்தில் எழுதப்பட்ட 'மாதர் இந்தியச் சங்கம்' என்ற வட்டத்தினுள் இந்தியாவுடன் கூடிய இலட்சியப் பெண்ணின் உருவம் பொறிக்கப்பட்டுள்ளது. அவள் வலது கையில் தாமரை மலரையும், இடது கையில் ஓர் ஒளி விளக்கையும் கொண்டு விளங்குகிறாள். இதன் உட்பொருள் குறித்த விளக்கம் வருமாறு:

> ………… அதில் (சங்க முத்திரையில்) நம் தாய் நிற்பது, பாரத மாதர் ஒவ்வொருவரும் இருக்க வேண்டிய நிலையைக் காட்டுகிறது. கம்பீரமாய் பராசாந்தியும், அன்பு ஒளிவீச, பூரண ஆக்குருதி பெற்று ஸ்வானுபவ நிலையில் நிற்க வேண்டும். கோணல், குறுகல், பயம், ஒளிவுமறைவு, அடிமைத்தனம், அழுக்கு இவை சிறிதும் கூடாது.
>
> இரு கைகளும் மேனாட்டாரையும் கீழ் நாட்டோரையும் ஸஹோதர அன்புடன், உலகெலாம் ஒரு குடும்பமாய், பரநிலையில் ஒத்து வாழும்படி அழைக்கின்றன. வலக்கையில் இருப்பது தாமரை மலர். அதில் ஆண் அம்சமும் பெண் அம்சமும் சம அழகுடன் சோபை பெறுகின்றன. ஆகவே அது லக்ஷ்மீ தேவிக்கு இருப்பிடமாய், அழகையும் செல்வத்தையும் சோபையையும் பெருக்குகின்றது. இம்முறையை யாவருக்கும் வலக்கையால் அளிக்கிறாள். இடக்கையில் என்ன? ஒரு தீபம். கமலத்தின் குணங்களால் லக்ஷ்மீதேவியின் இருப்பிடமானவுடன் தீபம் போலாகிறாள். ஒளி உதித்து ஈசனிடம் பேரன்பையும் எவ்வுயிர்க்கும் அன்புச் சேவையையும் பாரதமாதாவிடம் தீ போன்ற பேரன்பையும் உலகெலாம் பரஒளி கொடுத்து சீர் பெருகச் செய்யும் திறமையையும் எங்கும் பரப்புகிறாள்.[5]

மதம், அறிவு, அமைப்பு, சேவை, அழகு, செல்வம், உள்ளுணர்வு, ஒற்றுமை ஆகியவற்றை ஒருசேரக் கொண்டு விளங்கும் பெண் இந்த இலட்சியப் பெண் ஆவாள்.

இச்சங்கத்தின் நோக்கங்களே ஸ்திரீ தர்மம் இதழுக்குமான நோக்கங்களாகும். அவை:

1. மாதர்களுக்கு பாரததேசத்தின் மக்களாக என்ன பொறுப்பு உள்ளது என்பதை எடுத்துரைத்தல்.

2. இந்தியாவின் வருங்கரல மேன்மை மாதர்களைப் பொறுத்தது. ஏனெனில் பத்தினிமார்களாகவும் தாய்மார்களாகவும் இந்தியாவின் வருங்காலத்து அரசியலை வகிக்கத்தக்கபடி மக்களைப் பெற்று வளர்த்து, நல்ல சீலத்தில் பயிற்றுவித்தல் அவர்கள் கடமை என்பதை மாதர்களுக்கு உணர்த்துதல்.

3. தற்பயிற்சிக்கும் கல்விக்கும் பரோபகாரத்திற்கும் சாதகமாக மாதர்களை ஆங்காங்கு ஒரு கிளைச் சபையாகக் கட்டி வைத்தல்.

4. ஒவ்வோர் ஆண்பிள்ளைக்கும் - பெண்பிள்ளைக்கும் மதப் பயிற்சியுடன் கூடிய கட்டாய ஆரம்பப் படிப்புப் படிப்பித்தல்.

5. பால்ய விவாகத்தை ஒழித்து விவாகச் சம்மதி வயதைப் பதினாறாக உயர்த்துதல்.

6. புருஷர்களுக்குக் கொடுக்கப்படுவது போல அதே நிபந்தனையில் மாதர்களுக்கும் நகர பரிபாலன சபை, சட்டசபைகளுக்கு வோட்டுரிமை பெறுவித்தல்.

7. நகரபரிபாலன சபை, சட்டசபை எல்லாவற்றிற்கும் மாதர்களை அங்கத்தினர்களாகத் தேர்ந்தெடுக்கும் உரிமையைப் பெறுதல்.[4]

என்பவையாகும். இந்நோக்கங்கள் சங்கத்தின் மதச்சார்பு, அரசியல் சார்பு ஆகியவற்றை உணர்த்துகின்றன. அத்தோடு பெண்களின் பல உரிமைகளுக்காகப் போராடுதலையும் கொண்டிருப்பது கருத்தில் கொள்ளத்தக்கதாகும்.

மாதர் இந்தியச் சங்கத்தின் பொதுப்பணியை மேற்கொள்ளவும் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குமான கருவியாக ஸ்திரீ தர்மம் இதழ் வெளியிடப்பட்டது. பிறகு சில ஆண்டுகளில் மாத இதழாக மாறியது. இதன் ஆசிரியர்களாகத் திருமதி எம். இ. கஸின்ஸ், டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி, திருமதி தாதாபாய் ஆகியோர் இருந்துள்ளனர்.

ஸ்திரீ தர்மம் முதலில் காலாண்டு இதழாக வெளிவந்ததென அறியப்பட்டாலும் அவை கிடைக்கவில்லை. கிடைத்துள்ளவை

அனைத்தும் மாத இதழ்களே. பெயரிலிருந்தே பெண்களுக்கான இதழ் என்பதை அறியமுடிகிறது. ஸ்திரீ தர்மம் என்பதில் உள்ள இரு சொற்களும் வடமொழிச் சொற்களேயாகும். ஒவ்வோர் இதழும் ஐம்பது பக்கங்களைக் கொண்டு விளங்குகிறது.

இவ்விதழ் - தொகுதி, எண் (பகுதி) எனப் பகுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு தொகுதியும் தொடர்ச்சியான பக்க எண்களைக் கொண்டுள்ளது. பன்னிரண்டு இதழ்கள் ஒரு தொகுதியாகும். ஓரிதழுக்கு ஓர் எண் (பகுதி). ஓர் ஆண்டின் நவம்பர் மாதம் முதல் அடுத்த ஆண்டின் அக்டோபர் மாதம் வரை ஒரு தொகுதி எனக் கொண்டுள்ளது. இரண்டு இதழ்கள் சேர்ந்து ஒரு வெளியீடாக வருதலுமுண்டு. இந்தியாவில் இவ்விதழின் விலை ரூ4/- வெளிநாட்டில் 7 ஷில்லிங்; மாதர் இந்தியச் சங்கத்து உறுப்பினர்களுக்கு ரூ.2/-.

மாதர் இந்தியச் சங்கம் 1917ஆம் ஆண்டு மே மாதத்தில் தொடங்கப்படுகிறது. அதன் கொள்கைப் பரப்பு இதழான ஸ்திரீ தர்மமும் அதே ஆண்டில் தொடங்கப்பட்டுள்ளது. குறிப்பாகத் தொகுதி, எண் ஆகியவற்றை வைத்து நோக்கும்போது 'ஸ்திரீ தர்மம்' இதழ் 1917ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் தொடங்கப்பட்டுள்ளது என்பதை அறியமுடிகிறது. 1917லிருந்து 1936 வரையான தொகுதிகளை இதழில் குறிப்பிடப்பட்டிருக்கும் எண்களைக் கொண்டு வரிசைப் படுத்தவும் முடிகிறது. ஆகவே 19 ஆண்டுகள் இவ்விதழ் வெளியாகி உள்ளது. எப்போது இதழ் நிறுத்தப்பட்டது என்பதை அறிய முடிய வில்லை. 1936ஆம் ஆண்டிலேயே ஆர். ரங்கநாயகி என்பவரின் ஆசிரியர் பொறுப்பில் 'ஸ்திரீ தர்ம' என்னும் பெயர் கொண்ட இரு இதழ்கள் கிடைக்கின்றன. இவ்விதழில் 'மலர்:19, இதழ்:1' எனக் கொடுக்கப் பட்டுள்ளது. இது ஸ்திரீ தர்மம் இதழின் தொடர்ச்சி எனக் கொள்வதா, ஸ்திரீ தர்மத்திலிருந்து பிரிந்து வந்த ஒருவர் நடத்தியதா என அறியக் கூடவில்லை. ஆனால் இவ்விதழ் முழுவதும் தமிழிலேயே வந்துள்ளது. 1936ஆம் ஆண்டிலேயே 'ஸ்திரீ தர்மம்', 'ஸ்திரீ தர்ம' ஆகிய இரண்டும் ஒரு சேர வந்துள்ளன என ஊகிக்கவும் இடமுண்டு. ஸ்திரீ தர்ம இதழில் தெளிவான விவரங்கள் இன்மையால் சரியான முடிவுக்கு வர இயலவில்லை.

தற்போது, ஸ்திரீ தர்மம் இதழ்கள் தமிழ்நாடு ஆவணக் காப் பகத்திலும், சென்னை அடையாற்றிலுள்ள பிரம்மஞான சபை நூலகத்

திலும் உள்ளன. 1920ஆம் ஆண்டு முதல் 1936ஆம் ஆண்டு வரையான இதழ்கள் இடையிடை விடுபட்ட நிலையில் ஆவணக் காப்பகத்திலும், 1931 முதல் 1936 வரையிலான இதழ்கள் அதே நிலையில் பிரம்மஞான சபையிலும் (அடையாறு) கிடைக்கின்றன. 1936 ஆம் ஆண்டிற்குரிய 'ஸ்திரீ தர்ம' என்னும் பெயரில் இரு இதழ்கள் பிரம்மஞான சபையில் கிடைக்கின்றன. தொடக்ககால இதழ்களில் ஒரு பக்கம் இரண்டு பத்திகளாகப் பிரிக்கப்பட்டு, செய்திகள் கொடுக்கப்பட்டுள்ளன. குறைந்த பக்கங்களையே கொண்டிருந்தன. 'ஸ்திரீ தர்மம்' முழுவதும் தமிழ் மொழியில் வெளியிடப்பட்ட இதழ் அன்று. முதலில் ஆங்கிலம், தமிழ், தெலுங்கு என்ற மும்மொழிப் பகுதிகளும் இடம் பெற்றன. பிறகு இந்தி மொழியையும் இணைத்து நான்கு மொழிப் பகுதிகளையும் கொண்டு வந்துள்ளது.

ஸ்திரீ தர்மத்தின் அட்டைப்படம் பெரும்பாலும் சுடர் விளக்காகவே அமைந்துள்ளது. இணைக்கப்பட்ட சுடர் விளக்குகளின் மேல் பெரிய சுடர்விளக்கு ஒளிவிடுவது போலவும் ஒரு பெண் மண்டியிட்டவாறு அமர்ந்து கையில் சுடர் விளக்கினை ஏந்தியிருப்பது போலவும் உள்ளது. இதழின் பெயர் 'ஸ்திரீ தர்மம்' (STRI DARMAM) என்று ஆங்கிலத்தில் எழுதப்பட்டு அதன் அடியில் மாதர் இந்தியச் சங்கத்தின் அதிகாரப்பூர்வப் பத்திரிகை (Official organ of the Women's Indian Association) என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

குறிப்பிடத்தக்க செய்திகளின் பொருளடக்கம் அட்டையில் இடம் பெறுகிறது. மேலும் ஆசிரியர் பெயர், ஆண்டு, மாதம், தொகுதி, பகுதி, விலைக்குறிப்புகள் ஆகியவையும் அட்டையில் இடம் பெறுகின்றன. அட்டையின் உட்பக்கம் மாதர் இந்தியச் சங்கத்தின் முத்திரை, அலுவலக உறுப்பினர்கள், சங்கத்தின் குழுவினர்கள், ஆலோசனை மன்றம், அலுவலகப் பத்திரிகை இவற்றின் விவரங்கள் உள்ளன. ஒவ்வோர் இதழின் தலையங்கமாக மாதர் இந்தியச் சங்கத்தின் குறிக்கோள், அமைப்பு, தலைமை அலுவலகம், கிளைகள், உறுப்பினராதல் போன்ற செய்திகள் இடம் பெறுகின்றன. இவை யாவும் ஆங்கிலத்திலேயே அமைந்துள்ளன.

முகப்போவியங்கள் பெரும்பாலும் அந்தந்த மாதச் செய்திகளுக்கு ஏற்ப அமைகின்றன. பொருளடக்கம் பக்க எண்களுடன் கொடுக்கப்பட்டுள்ளது. ஆங்கிலச் செய்திகள் சிறப்பாகவும் கருத்துச் செறிவு

உடையனவாகவும் உள்ளன. ஓர் இதழின் முக்கால் பாகம் ஆங்கிலப் பகுதியாகவே இடம் பெறுகிறது. அடுத்து ஓரிரு பக்கங்கள் தமிழ் மொழிப் பகுதி, ஓரிரு பக்கங்கள் தெலுங்கு மொழிப் பகுதி என்னும் வகையில் இதழ் அமைந்துள்ளது.

தமிழ்ப்பகுதி அதிகபட்சமாக ஐந்து தலைப்புகள் அல்லது அதற்கும் குறைவானதாக இடம்பெறுகின்றது. பெரும்பாலும் ஆங்கிலப் பகுதியின் மொழிபெயர்ப்புகளாக உள்ளன. தமிழ்ப் பகுதி இதழில் குறைவான பக்கங்கள்தாம் அமைந்துள்ளன. எனினும் பக்க எண்ணிக்கை பொருட்டன்று. செய்தி, நோக்கு ஆகியவற்றின் அடிப் படையில் அவை முக்கியத்துவம் பெறுகின்றன. பத்தொன்பது ஆண்டுகள் வந்துள்ளதை உறுதிப்படுத்திக்கொள்ள முடிகிற அதே சமயத்தில் ஒவ்வோர் இதழிலும் குறைவான பக்கங்களே தமிழுக்கு ஒதுக்கப்பட்டிருப்பினும் அளவற்ற தகவல்களை இதழிலிருந்து பெற முடிகிறது. தற்போது கிடைக்கும் 116 இதழ்களிலிருந்து 217 தலைப்புகளிலான கட்டுரைகள், செய்தித் தொகுப்புகள் ஆகிய வற்றைச் சேகரிக்க முடிகிறது. அவற்றின் பெறுமதியைப் பெண்கள் தொடர்பான வரலாற்றில் ஆர்வம் உள்ளவர்கள் நன்கு உணர்வர்.

## பெண்கள் வரலாற்றில் ஸ்திரீ தர்மம்

ஸ்திரீ தர்மம் இதழின் நோக்கங்களும் வடிவமைப்பும் இவ்வாறு அமைய, அதனுள் வெளியிடப்பட்டுள்ள செய்திகளும் கட்டுரை களுமே இன்று மிகுந்த முக்கியத்துவம் பெறுபவையாக உள்ளன. இவை இந்த நூற்றாண்டில் பெண்கள் நிலை குறித்த வரலாற்றை எழுதுவோர்க்குச் சான்றாதாரங்களாகத் திகழத்தக்கனவாகும். பெண் களின் உழைப்பு, வியர்வை, கண்ணீர் அனைத்தும் வீட்டின் மூலையில் இருக்கும் சமையலறைக்குள் தேங்கிப் பிறர் கண்களுக்குப் படாமல் மறைக்கப்பட்டுவிட்டது போலவே, பெண்கள் குறித்த தகவல்கள் அடங்கிய ஸ்திரீ தர்மம் இதழின் பக்கங்களும் நூலக அடுக்குகளில் மறைந்து கிடக்கின்றன. பெண்கள் பற்றிய பலவிதச் செய்திகளின் களஞ்சியமாக 'ஸ்திரீ தர்மம்' விளங்குவதை அறிய முடிகிறது. பெண்கள் வரலாற்றுக்கு ஸ்திரீ தர்மம் கொடுக்கும் சான்றாதாரங் களை மிக மேலோட்டமாகக் கீழ்க்கண்டவாறு வகைப்படுத்திக் கொள்ளலாம்.

1. சாதனைகளின் பதிவு
2. மாதர் சங்கங்கள் குறித்த செய்திகள்
3. மகளிர் சட்டங்கள் பற்றிய தகவல்கள்
4. பெண்களின் சமகால நிலை

இவற்றை ஸ்திரீ தர்மம் தரும் செய்திகளின் அடிப்படையில் விரிவாகக் காணலாம்.

### சாதனைகளின் பதிவு

இந்நூற்றாண்டின் தொடக்க காலத்தோடு ஒப்பிடும்போது இன்று பெண்கள் நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டிருப்பது உண்மை தான். ஆனால் இந்த முன்னேற்றத்திற்காகப் பெண்கள் பட்டிருக்கும் துன்பங்கள் சாதாரணமானவை அல்ல. 'ஸ்திரீ தர்மம்' ஒவ்வொரு துறையிலும் முதன் முதலாக வெளிப்படும் பெண்களைக் குறித்த தகவல்களைத் தொடர்ச்சியாக வெளியிட்டுள்ளது. இன்று அவை வெறும் செய்தி மதிப்பை மட்டுமே பெறலாம். ஆனால் பல நூற்றாண்டு களாக வீட்டுச் சுவர்களுக்குள் முடங்கிக் கிடந்த பெண்கள் ஒளியைத் தரிசித்த சாதனைகள் அவை. 'சமாச்சாரக் குறிப்புகள்' என்னும் தலைப் பில் வெளியிடப்பட்டுள்ள அச்செய்திகள் பெண்கள் வரலாற்றுக்கு உதவும் சான்றுகளாகும்.

'நமது ஸ்திரீ வைஸ்சான்ஸெலர்' என்ற தலைப்பிலான குறிப்பு முதல் பெண் துணைவேந்தரைப் பற்றிய தகவலைத் தெரிவிக்கிறது:

> அலிகார் பட்டனத்து முஸ்லீம் யுனிவர்ஸிடிக்கு ஒரு பெண்மணி வைஸ்சான்ஸெலராக இருக்கப் பாக்கியம் கிடைக்கப்பெற்றது. மாட்சிமை தங்கிய போபால் பீகம் அவர்கள் அந்த ஸ்தானத்தை வகிக்கிறார். அந்த யுனிவர்ஸிடியின் மூன்றாவது கான்வோ கேஷனில் அவர் அக்ராஷனம் வகித்தனர். அவர் பர்டா என்னும் கோஷா சம்பிரதாயத்தை ஆதரித்துவந்தாலும் அவர் கல்வி கேள்விகளில் மிகச் சிறந்தவர்களுள் ஒருவர். கல்வியைப் பற்றிய பலபடிகளிலும் அபிவிருத்தி செய்வதில் அவர் விசேஷ ஊக்க முடையவர். டெல்லி சர்வகலாசாலை யம்.ஏ. பட்டப் பரீக்ஷையில் பாரசீக பாஷையில் முதலாவதாக நின்றவர். ஹாப்லு மாட்டென் என்ற வாரப்பத்திரிகையின் ஆசிரியரான அஜாமூவ யெதுல் இஸ்லாம் என்பவருடைய புத்திரியாவார். அவரும் கோஷா

> சம்பிரதாயத்தில் வந்தவரானாலும் உயர்ந்த பட்டப் பரீஷைவரை தேர்ந்திருக்கிறார். அவருக்கு அரேபிய, பாரசீக, உருது, பாஷை களிலும், பிரேஞ்சு, இங்கிலீஷ், பாஷைகளிலும் தேர்ச்சியுண்டு. அவருடைய மூத்த சகோதரியான பீகம்ஸுல்தான் சட்டப் பரிஷைக்கு முற்பிரயத்தினமான பரீஷையில் முதல்தரமாகத் தேர்ந்தார். அவருடைய தங்கையான காவேர் ஸுல்தான் பி.ஏ. பரீஷையில் முதல் தரமாகத் தேர்ந்துள்ளார்.[5]

முதல் பெண் துணைவேந்தர் முஸ்லீம் பெண் ஒருவர் என்னும் தகவலுடன் அவரையும் அவரது குடும்பத்தையும் பற்றிய விவரங் களை இக்குறிப்பு முழுமையாகத் தருகிறது. மேலும் எங்கெல்லாம் பெண்கள் நுழைந்து தங்களுக்கான இடத்தைப் பெறுகிறார்களோ அதையெல்லாம் விதந்தோதி 'ஸ்திரீ தர்மம்' வெளியிட்டுள்ளது.

> மதராஸ் முனிஸிபல் கார்ப்பரேஷன் அங்கத்தினராக முதன்முதல் ஹ்ரானென் ஆஞ்ஜெலோ என்னும் மாதுதாம் மதராஸில் நன்முயற் சியைக் கருதித் தேர்ந்தெடுக்கப் பெற்றனர். சர்க்காரால் நிய மனம் பெற்ற இன்னொரு ஸ்த்ரீ கவுன்சிலர் மிஸிஸ் தேவதாஸ் அவர்கள், ஸ்த்ரீகள் நினைத்தால் நடைபெற வேண்டிய சீர்திருத் தங்கள் அநேகம் உளவாகையால் நகர பரிபாலன சபையில் மாதர்கள் இன்னும் அநேகர் இருத்தல் வேண்டும்

என்றும்,

> மதராஸின் முதல் ஸ்த்ரீவக்கீல்:- சென்னை ஸர்வகலாசாலையில் முதன்முதல் வக்கீல் பரீஷையில் தேர்ச்சியடைந்த மிஸ். ஆனந்தாபாய் பி.ஏ.பி.எல். என்ற மாது சிரோன்மணி சென்னை ஸ்ரீமான் வீ.வீ. சீனிவாச ஐயங்கார் அவர்களிடம் ஒரு வருஷம் வேலை பழகி, பிறகு சென்னை ஹைகோர்ட்டில் வக்கீலாகத் தொழில் அப்பிய சிக்கப் போகின்றார். இது நாம் சந்தோஷிக்கத்தக்க விஷயமே.[7]

என்றும் வெளியிடப்பட்டிருக்கும் குறிப்புகள் மகளிர் வரலாற்றுக்கு அரிய சான்றுகளாகும். மேலும்,

> பார்லிமெண்டு மெம்பர்களில் முதல் மாதர் லேடி ஆஸ்டர், ஒரு முஸ்லீம் சகோதரியின் வெற்றி, மதராஸ் நகருக்கு அநேக ஸ்திரீ மாஜிஸ்டிரேட்டுகள், பட்டப் பரீஷையில் தேர்ந்த புது மாதர்கள், கௌரவம் பெற்ற இந்திய மாதர்கள், ஆஸ்பத்திரியில் நோயாளி களைத் தேற்றி உதவிசெய்யும் பெண்மணிகள், ஸங்கீதத்தில்

முதன்முதல் பட்டப் பரீஷைத் தேர்ச்சி பெற்ற இந்தியர் மிஸ்ஸஸ் மஞ்ஜிலா பாய், வங்காளத்து ஸ்த்ரீகளின் வோட்டுரிமை.

எனப் பெண்களின் சாதனைப் பதிவுகள் பலவும் ஸ்திரீ தர்மம் இதழின் பக்கங்களில் சிதறிக்கிடக்கின்றன.

## சங்கங்கள் பற்றிய செய்திகள்

'வண்ணச் சீறடி மண்மகள் அறிந்திலள்'[3] என்பதைப் பெருமையாகப் பேசும் சமூகம் நம்முடையது. பெண் வீட்டை விட்டு எதன் நிமித்த மாக வெளியேறினாலும் அதைக் கேவலமாகக் கருதும் ஆண்நோக்கு மதிப்பீடுகளால் கட்டப்பட்டிருக்கும் சமூகம் இது. இதில் பெண்களின் உரிமைகளுக்காகக் குரல் எழுப்புவதும் அதற்காகப் பெண்கள் பலர் ஒன்று கூடிச் சங்கம் அமைப்பதும் மாநாடுகள் நடத்துவதும் சாதா ரணச் செயல்கள் அல்ல. ஆனால் அச்செயல்கள் இந்நூற்றாண்டின் தொடக்கக் காலங்களில் எழுச்சியோடு நடைபெற்றிருக்கின்றன என்பதை 'ஸ்திரீ தர்மம்' பதிவு செய்து வைத்திருக்கிறது.

ஸ்திரீகளின் சர்வதேசிய கான்பரன்ஸ், சமஉரிமைச் சர்வதேச சங்கம், குடி நிறுத்தச் சங்கம் போன்ற பல சங்கங்களைப் பற்றிய செய்திகளை 'ஸ்திரீ தர்மம்' மூலமாக அறிய முடிகிறது. இவை ஓட்டுரிமை முதலிய பெண்களின் கோரிக்கைகளுக்காகப் போராடிய செய்திகளும் கிடைக்கின்றன. இவை நடத்திய பல மாநாடுகள் குறித்த விவரங்களும் வெளியிடப்பட்டுள்ளன. ஸ்திரீ தர்மத்தை நடத் திய 'மாதர் இந்திய சங்கம்' எங்கெங்கு கிளைகளைக் கொண்டிருந்தது என்பதையும் அக்கிளைகளில் மாதந்தோறும் நடைபெற்ற அலுவல் களையும் சுருக்கமான முறையில் பதிவு செய்துள்ளது.

'மாதர் இந்தியச் சங்கம்' குறிப்பிட்ட அரசியல் பார்வையைக் கொண்டிருந்தது என்பதால், எல்லாத் தரப்புச் செய்திகளையும் வெளி யிட்டுள்ளது எனக் குறிப்பிட இயலாது. வெளியிட்டவரையில் மகளிர் இயக்கங்கள் பற்றியதான வரலாற்றுத் தரவுகளின் தொகுப்பாக ஸ்திரீ தர்மம் விளங்குவதை மறுக்கஇயலாது.

இவ்விடத்தில் சமஉரிமைச் சர்வதேசச்சங்கம், ஸர்வதேசியக் கவுன்சில் ஆகியவை பற்றிய இரு பதிவுகளைத் தருதல் ஸ்திரீதர்மம் செய்துள்ள பணியை எடுத்துக்காட்டப் போதுமானதாய் இருக்கும்.

1. சமவுரிமைச் சருவதேசச் சங்கம் ஒன்று ஜெனீவா நகரில் சென்ற செப்டம்பர் மீ 6உ திறக்கப்பட்டிருக்கிறது. தீவிரமான பிரச்சார வேலை தொடங்கியாயிற்று. ஏழு ஐரோப்பிய மாகாணங்கள் அதில் சேருகின்றன. அம்மாகாணங்கள் தம் நாட்டில் ஸ்திரீகளை புருஷர்கள் ஸம சுதந்திரமுடையவர்களாய் நடத்த வேண்டும். இவ்வாறு வரவர உலக முழுமையுமே மேற்படி ஸம உரிமையுடன் வரும்படி செய்தால்தான் ஸர்வதேச ஐக்கியச் சங்கம் உலகில் ஏற்படுத்தப்போகும் நிலைமையில் பூர்ணமாகப் பயன் பெற வாழலாம். உலகின் எல்லாப் பாகங்களும் சங்கத்தை வாழ்த்து தல் போல் யாமும் வாழ்த்துகிறோம்.[9]

2. மாதர்களின் ஸர்வதேசீயக் கவுன்ஸில்: இஃது இந்தியாவில் இப்போதுதான் நிலைபெற்றிருக்கிறது. பம்பாய் மாகாணத்தில் ஒரு நாஷனல் (தேசீய) கவுன்சிலும் வங்காளத்தில் ஒன்றும் டில்லியில் மற்றொன்றும் ஆக மூன்று இடங்களில் ஏற்பாடாகி இருக்கின்றன. மதராஸில் ஒன்று ஏற்படுத்தப் பிரயத்தனம் நிகழ்ந்தது. ஆனால் சரியான முறைகளில் பிரவிர்த்திக்கவில்லை. வெவ்வேறு ஸ்த்ரீ ஸமாஜங்களின் கருத்தைத் தெரிந்துகொள்ள வும் முடியவில்லை. அநேகமாய் இன்னும் கொஞ்சகாலத்திற் குப் பிறகு மதராஸில் பயன் தரத்தக்க ஒரு கவுன்ஸில் ஏற்படுத் தலாமென்று உத்தேசிக்கிறோம். சில தேசங்களில் மேற்படி கவுன்ஸில் நல்ல உழைப்பைக் கைக்கொண்டு உள்ளது. ஆதலால் இந்தியாவிலும் அஃதொன்று ஏற்படுத்தி இந்திய மாதர்கள் அதில் சேருவது நலம். அந்தக் கவுன்ஸில் இந்தியா வில் நிலைபெறுமானால் ஹிந்து - முசல்மான் மாதர்களும் அடங்கப் பெற்றதாயிருக்குமென நம்புகிறோம். வங்காளத்தில் மேற்படி கவுன்ஸிலைச் சேர்ந்திருக்கும் ஸமாஜங்கள் அநேக மாய் ஸர்க்கார் உத்தியோகஸ்தர்களால் தூண்டப் பெற்றதாகவும், கிறிஸ்தவ மதஸ்தர்களே விசேஷமாய் நிறைந்திருப்பவர்களாக வும் உள்ளன. இவைகள் மிகச் சிறந்த ஸமாஜங்களேயென்று யாம் சொல்லுவோமாயினும் இந்திய மாதர் அனைவர்க்கும் அவைகளைப் பிரதிநிதி களாகக் கொள்ளல் கூடாது. ஏனெனில் அவைகளின் மூலமாக வெளிவருவது ஐரோப்பியர்களின் அபிப் பிராய மாகவும் ஸர்க்கார் உத்தியோகஸ்தர்களின் அபிப்பிராய மாகவும் உள்ளன. மதராஸில் மாதர்களின் நாஷனல் கவுன்ஸில் எடுபடுமானால் ஹிந்து - முஸ்லிம் மாதர்களடங்கிய சங்கங் களாலேயே அது எடுபடல் வேண்டும்.[10]

இவற்றின் வழி ஸ்திரீ தர்மத்தின் அரசியல், மத நோக்குகளையும் உணர்தல் கூடும்.

## சட்டங்கள் குறித்த தகவல்கள்

சமூகத்தில் எல்லா நிலைகளிலும் ஆண்களே பங்கு பெற்றிருக்கும் சூழலில், பெண்களின் நலன்களை முன்னிறுத்தும் செயல்களை நடைமுறைப்படுத்துவது மிகவும் கடினமாகும். நாடாளுமன்ற சட்ட மன்றங்களில் பெண்களுக்கு 33 விழுக்காடு இட ஒதுக்கீடு அளிக்க வகை செய்யும் சட்ட முன் வரைவுக்கு எழும் எதிர்ப்புகளையும் அவற்றின் காரணமாக அச்சட்ட முன்வரைவு நாடாளுமன்றத்தின் ஏற்புப் பெறாமல் மீண்டும் மீண்டும் தள்ளிப் போவதையும் இன்று காண்கிறோம். பெண்களின் நலன்களுக்கு இந்நூற்றாண்டு முடிவுபெறும் தருணத்தில் கூட இத்தகைய எதிர்ப்புகள் இருக்கும் நிலையில், 1920களில் ஒரு சட்டத்தை இயற்றச் செய்யும் செயல் எவ்வளவு சிரமமானதாக இருந்திருக்கும் என்பதை ஊகிக்கலாம். 'ஸ்திரீ தர்மம்', பெண்கள் நலனுக்கான சட்டங்கள் அன்றைய சட்ட மன்றங்களில் பட்டபாட்டை விரிவாகப் பதிந்து வைத்திருக்கிறது.

பால்ய விவாக முறையைச் சட்ட ரீதியாக ஒழிப்பதற்காகப் பாடுபடுவதை 'மாதர் இந்தியச் சங்கம்' தனது நோக்கங்களில் ஒன்றாகவே கொண்டிருந்தது. 'பால்ய விவாகத்தை ஒழித்து விவாகச் சம்மதி வயதைப் பதினாறாக உயர்த்துதல்' என்னும் நோக்கத்தை நிறைவேற்றச் சங்கமும் பெண்கள் பலரும் எடுத்த முயற்சிகளையும் அவை பெற்ற எதிர்ப்புகளையும், எதிர்ப்புகளை முறியடித்துச் சட்டம் நிறைவேற்றப்பட்டதையும் 'ஸ்திரீ தர்மம்' வாயிலாக அறிய முடிகிறது. விவரங்கள் வருமாறு:

> சம்மதி வயது மசோதா: சட்டசபையின் சென்ற கூட்டத்தில் தள்ளுபடியான இது மறுபடியும் ஸிம்லாவில் வேற்றுருவத்தில் பிரேரணை செய்யப்படும் எனக் கேட்டுக் கொள்கிறோம். மாதர் இந்திய சங்கத்தார் சட்டசபை மெம்பர்களுக்கு அனுப்பிய கடிதத்திற்குப் பலனும் கொஞ்சம் உள்ளது... சட்டம் நிறைவேறுவதற்கு விரோதமாய் நின்று அபிப்பிராயந்தந்த பொதுஜன ஸமூஹத்தார் யாரென்று அறிய எனக்கு ஆவலுள்ளது. பழைய வழக்கம் என்னும் முகாந்தரத்தைச் சொல்லும் ஸம்பிரதாயாபிமானிகளைத் தவிர பொதுஜன ஸமூஹத்தார் எவரும் மேற்படி மசோதாவை அனாதரவு செய்ததாகத் தோன்றவில்லை.[11]

என்ற செய்தியின் மூலம் சம்மதிவயது மசோதாவிற்கு மாதர் இந்தியச் சங்கம் மேற்கொண்ட முயற்சியும் தளரா நிலையும் விளங்குகிறது.

சட்டம் கொண்டு வருவதற்கு முன் மாதர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தியதும் குறிப்பிடத்தக்கது.

பால்ய விவாகத்தை ஒழிக்க இதுபோல் பலதிட்டங்கள், தீர்மானங்கள், மசோதாக்கள் கொண்டு வரப்பட்டன என்பதும் தெரியவருகிறது.

டாக்டர் ஹரிஸிங்கௌர் அவர்கள் சட்டசபையில் கொணர்ந்த பெண்களின் ஸம்மதி வயது மசோதா:

> விவாஹமாகாத பெண்களுக்குச் சம்மதி வயது பதினாறு என்றும், விவாஹமான பெண்களுக்குச் சம்மதி வயது பதினான்கு என்றும் அம்மசோதா நிர்ணயிக்கப்பட்டது. முதல் இரண்டு திருத்தங்கள் விவரிக்கப்பட அனுகூலிகள் முறையே 22, 43. மறுநாள் மசோதா முழுவதும் சட்டசபையில் தீர்மானத்திற்கு வந்த போது அனுகூலிகள் 26, பிரதிகூலிகள் 56. பலர் சேர்ந்த ஒரு சபையில் முதல் நாள் ஒரு தீர்மானம் வந்ததற்குள் அடுத்த நாளே யோசனை மாறியது இது தான் முதன் முதல். காரணம் சர்க்கார், இந்தியர்களுக்குள் விவாஹவிஷயமான ஒரு சட்டம் இங்கிலிஷ்காரனுக்குச் சம்மதமில்லை.[12]

இவ்வாறு முதல் முயற்சி தோல்வி கண்டுள்ளது என்றாலும் அவ்விவாகத்தால் ஏற்படும் கெடுதல்கள், அதன் அவசியமின்மை போன்றன நாட்டுமக்களிடையே கூறப்பட்டு வந்துள்ளன. இச்சட்டத்தை நிறைவேற்ற மேற்கொண்ட முன் முயற்சிகள் தொடர்ந்துள்ளன.

> .......... இந்தக் கொடுமையான பால்ய விவாஹத்தை அடியோடகற்ற ராய்ஸாஹிப் ஹரிவிலாஸ் சாரதா அவர்கள், குமார கங்கானந்த சின்ஹா, லாலா லஜபதிராய், ஸர்புருஷோத்தம் தாகூர் தாஸ் இப்படிப்பட்ட அநேகர் கூடி காருண்யம் பொருந்திய கவர்ண்மெண்டாருக்கு அவ்வப்போது அப்பீல் செய்து இருக்கிறார்கள். நம் தென்னிந்தியாவுக்கு நமக்குப் பிரகிருதியாய் நம் சகோதரி டாக்டர் முத்துலட்சுமியம்மாள் அவர்கள் கொஞ்ச நாட்களாகப் 'பெண்களுக்கு விவாஹம் பதினாறு வயதிற்குள்ளும்' 'பிள்ளைகளுக்கு இருபத்தொன்று வயதிற்குள்ளும்' செய்யக் கூடாது. அப்படிச் செய்பவருக்கு அபராதம் அல்லது தண்டனை விதிக்கப்படும்' என்று ஒரு சட்டம் தயார் செய்து கொண்டு சில மாதங்களாய்க் கவுன்ஸில் மீட்டிங்கில் பேசி வந்தார். [13]

மேலும் பெண்களுக்குப் பதினாறு வயதிற்குள் திருமணம் நடத்தக் கூடாதென்று சட்டம் வந்துவிட்டால் உண்டாகும் நன்மைகளையும் ஸ்திரீதர்மம் விரிவாகப் பட்டியலிட்டுத் தெரிவித்துள்ளது. பல முயற்சிகளுக்குப் பின் சட்டத்தை நிறைவேற்றுவதில் வெற்றி கண்ட செய்தியும் கிடைக்கிறது. இச்சட்டம் நிறைவேறுவதற்காக இடை விடாது உழைத்த கனம் ஹரிவிலாஸ் சாரதா, டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி ஆகியோருக்கு 'ஸ்திரீ தர்மம்' மிகுந்த பாராட்டைத் தெரிவிக் கிறது. இச்சட்டம் நிறைவேறியதால் பெண்களுக்கு உண்டான மகிழ்ச் சியை, 'இன்றே ஸ்த்ரீகளாகிய நாங்கள் மனிதவகுப்பில் சேர்க்கப் பட்டோம்'[14] என்று 'ஸ்திரீ தர்மம்' தெரிவிக்கிறது. பல நூற்றாண்டுக் காலக் கொடுமையைத் தீர்த்த இச்சட்டத்தின் முக்கியத்துவத்தை உணர்த்த இதைவிடப் பொருத்தமான மொழி ஏது? 'மனித வகுப்பில் சேர்க்கப்பட்டோம்' என்பதில் வெளிப்படும் நிம்மதிப் பெருமூச்சை முக்கால் நூற்றாண்டு கழிந்து இன்றும் உணரமுடிகிறது. இச்சட்டத் திற்கு எதிராக 'மத அகம்பாவமும் கர்வமும் வைதீக மமதையும் கொண்டிருந்த வைதீகர்களின் கடல் போன்ற பெருங் கூச்சலை,[15] முறியடித்த வெற்றிப் பெருமிதத்தை 'ஸ்திரீ தர்மம்' உணர்ச்சிப் பூர்வ மான நடையில் பொதிந்து வைத்து இன்று நமக்குத் தருகிறது.

இந்தப் பால்ய விவாக மசோதாவின் தீர்மானத்தின்போது 67 பேர் ஆதரவானவர்கள் என்பதும் 44 பேர் எதிரான வைதீகர்கள் என்பதும் தெரியவருகிறது. பதினான்கு வயதுக்கு மேல் பெண்களுக்கும், பதி னெட்டு வயதுக்குமேல் ஆண்களுக்கும் விவாகச் சம்மதிவயது விதிக் கப்பட்டது தெரியவருகிறது. சட்டத்திற்குப் புறம்பாக நடப்பின் அபராதம் ரூ.1000 உம் ஒரு மாத காலச் சிறைத் தண்டனையும் எனக் கூறப்பட்டு உள்ளது. இது 1930 ஏப்ரல் முதல் அமுலுக்குக் கொண்டு வரப்படும் என்ற செய்தியும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது போலவே பெண் தொழிலாளர்களுக்கான சட்டங்கள் குறித்தும், சதி என்னும் வழக்கம் குறித்த சட்டம் பற்றியும் 'ஸ்திரீ தர்மம்' பல தகவல்களைத் தருகிறது. பெண்கள் நலன்குறித்த சிறு சட்டம் என்றாலும் அதற்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுத்து ஸ்திரீ தர்மம் வெளியிட்டுள்ளது.

## பெண்களின் சமகால நிலை

இதழ்களின் அடிப்படைத் தன்மையே சமகால உணர்வாகும். அன்றன்று நடக்கும் நிகழ்வுகளை வெளியிடுவதும் அவற்றை விமர் சனப் பார்வையில் அலசுவதும் இதழ்களின் இயல்பு. இதழ்களின் விற்பனை நோக்கு இந்தச் சமகாலத் தன்மையைக் கட்டாயமாக்கு கிறது. இயக்கங்களின் சார்பாக நடத்தப்படும் இதழ்களுக்கும் இத் தன்மை மிகுதியும் உண்டு. இயக்கம் சார்ந்தவர்கள் எதிர்பார்க்கும் செய்திகளைத் தருவதும் அவர்களுக்கான வழி காட்டுதலை வழங்கு வதும் இதழின் நோக்கமாகிறது. 'ஸ்திரீ தர்மம்' இதழ்பதிவு செய் துள்ளதாக முற்கூறியவை அனைத்தும் இந்நோக்கிலும் பார்க்கப்பட வேண்டியவையே ஆகும். ஆனால் 'இயக்கம் சார்ந்தவர்களுக்கு மட்டும்' என்று பார்க்கும் குறுகிய நோக்கைவிட்டு வரலாற்று நோக்கில் காணும்போதே ஸ்திரீ தர்மம் விரிந்த பரப்புக்குள் வருகின்றது. குறிப் பிட்ட காலத்தில் செயல்படும் இயக்கம் அக்காலத்தில் குறுகிய நோக்கம் கொண்டதென விமர்சனத்திற்கு உட்படினும் அதன் கொள் கைகள், செயல்பாடுகளின் அடிப்படையில் பின்னர் வரலாற்றில் முக்கியத்துவம் பெறுவது இயல்பானதே ஆகும்.

ஸ்திரீ தர்மம் தனது கொள்கைகளுக்கேற்ற கட்டுரைகளை, செய்திகளை வெளியிட்டுள்ளது. அவற்றில், இதழ் வெளிவந்த காலத்தில் பெண்கள் குடும்பத்திலும் சமூகத்திலும் எந்நிலையைப் பெற்றிருந்தார்கள் என்பதைக் குறித்த தரவுகள் உள்ளடங்கி இருக் கின்றன. பால்மணம் மாறாத வயதில் திருமணம் என்ற பெயரில் நடந்த கூத்தைப் பற்றிய விரிவான பதிவு ஒன்று:

> பன்னிரண்டு வயதில் திருமணம், ஐந்து நாட்கள் வேடிக்கைகள் மூன்று நாட்களாகத் திருமணச் சடங்கு. ரூ.200/- க்கு மேற்பட்ட செலவு. இந்நிலையில் அப்பெண்ணின் நிலையோ பரிதாபம். பாவாடை அணிந்திருந்தவளைப் புடவை கட்டவைப்பர். உடல் ஆரோக்கியம் கெடும். அடுத்து புதுவருஷப் பண்டிகைகள். பெற் றோருக்கு மேலும் செலவு. பெரியவளாதல் ரூ.100/- செலவு. இவையெல்லாம் முடிந்து பெண்ணைப் புக்ககம் அழைத்து வருவர். வந்த ஒரு வாரத்திற்குள் குறை கூற ஆரம்பிப்பர். கர்ப்பமாவாள். அவள் உடல்நிலை ஒரு பொருட்டல்ல. மாமியாரோ தான் பதினைந்து வயதில் பெற்றுக் கொண்டதைப் பெருமையோடு கூறுவாள். கணவன் - மனைவி கருத்து வேறு பாடுகள், அடுத்து சீமந்த சீர் சடங்கு. ஐம்பது பேருக்கு மூன்று

> தரம் நமஸ்காரம் செய்தே அலுத்துவிடுவாள் பெண். எப்படியோ பிள்ளைப்பேறு நடக்கும். நன்மையெனில் ஒன்றும் கூறாவிட்டா லும் தீமையாக முடிந்தால் அவளின் துரதிர்ஷ்டம் என்பதைச் சொல்லத் தவறமாட்டார்கள். அடுத்து நாமகரணச் செலவு. அனைத்தும் முடிந்ததும் சீர்களுடன்தான் அவளையும் குழந்தை யையும் அழைத்துச் செல்வர். அங்கு அச்சிறுபெண் தன்னை யும் குழந்தையையும் கணவனையும் குடும்பத்தையும் கவனிக் கப்படும்பாடு....[16]

என்பதாகும். மேலும் பி.ஏ., எம்.ஏ., படித்தவர்கள் கூடப் பால்ய விவா கத்தைத் தடுக்கும் சாரதா சட்டம் அமலாகப் போவதைக் கண்டு, அதற்கு முன்பாகவே இரண்டு வயது கூட நிரம்பாத பெண் குழந்தை களுக்கும் திருமணம் செய்துவைத்த செய்தி அதிர்ச்சியளிப்பதோடு சிரிப்பூட்டுவதாகவும் உள்ளது.[17] இவற்றோடு குடும்ப உறவுகளில் பெண் எத்தன்மை பெற்றிருந்தாள் என்பதை அறிய உதவும் வகை யிலான விரிவான தகவல்கள் பலவும் ஸ்திரீ தர்மத்தில் உள்ளன.

*முடிவுரை*

வரலாறு என்பது நேற்றைப் பற்றியது. ஆனால் அது இன்றைய வாழ்க்கையைப் புரிந்துகொள்வதற்கும், நாளைய வாழ்க்கையைத் திட்டமிடுவதற்கும் உதவக்கூடியது. பெண்கள் இன்று சமஉரிமை பெறுவதற்கான போராட்டங்கள் பலவற்றில் ஈடுபட்டுள்ளனர். அவர் கள் தமது உரிமைகளை வென்றெடுக்க உத்வேகம் தருவதற்கும் இன்று எந்த இடத்தில் நிற்கிறோம் என்பதை உணர்ந்து கொள்வதற் கும் மேற்கொண்டு என்ன செய்ய வேண்டும் என்பதை அறிவதற்கும் பெண்களின் போராட்ட வரலாறுகள் பெரிதும் உதவும். மறைக்கப்பட்ட வரலாறுகளைத் தோண்டி எடுப்பதன் மூலம் பெண்கள் தங்களையே கண்டெடுத்தவர்கள் ஆவர். அதற்கு ஓர் ஆதார வாயிலாக 'ஸ்திரீ தர்மம்' விளங்குகிறது. இதழ்களின் வரலாற்று ஆய்வாளர்கள் ஸ்திரீ தர்மத்திற்கு இடம் கொடுக்காவிடினும் பெண்களின் வரலாற்றில் அதற்கு முக்கிய இடமுண்டு.

## குறிப்புகள்

1. ஸ்திரீ தர்மம் பற்றிய குறிப்புகள் சில ஆங்கில நூல்களில் இடம் பெற்றுள்ளன. அவை;

   அ. Janaki Prakasam, Nationalism, Social reform and Indian Women, - Patna - 1981

   ஆ. Thomas. P., 'Women through the Ages', New York, 1964

   இ. 'Recasting Women' - Essays in Colonial History

2. இத் தகவல்கள் ஸ்திரிதர்மம் இதழ்கள் அனைத்திலும் காணப்படுகின்றன.
3. ஸ்திரீ தர்மம் தொகுதி 15, எண் 9, ஜூலை 1932, ப.511
4. இந்நோக்கங்கள் ஸ்திரீ தர்மம் இதழ்கள் அனைத்திலும் காணப்படுகின்றன.
5. ஸ்திரீ தர்மம், தொகுதி 8, எண் 4, பிப்ரவரி 1925, பக்.59-60
6. ஸ்திரீ தர்மம், தொகுதி 8, எண் 9, ஜூலை 1925, ப.140
7. மேற்படி, தொகுதி 11, எண் 7, மே 1928, ப.81
8. உ. வே. சாமிநாதய்யர் (ப.ஆ.), சிலப்பதிகாரம், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1985, ப.394
9. ஸ்திரீ தர்மம், தொகுதி 14, எண் 2, டிசம்பர் 1930, பக்.76-77
10. மேற்படி, தொகுதி 8, எண் 7, மே 1925, பக்.108
11. மேற்படி, ப. 108
12. மேற்படி, தொகுதி 8, எண் 6, ஏப்ரல் 1925, பக்.91-92
13. மேற்படி, தொகுதி 11, எண் 6, ஜூன் 1928, பக்.125-126
14. மேற்படி, தொகுதி 13, எண் 1, டிசம்பர் 1929, ப.28
15. மேற்படி, ப.28
16. மேற்படி, தொகுதி 8, எண் 6, ஏப்ரல் 1925, பக்.39-41
17. மேற்படி, தொகுதி 13, எண் 3, ஜனவரி 1930, ப.115

# ஜகன்மோகினி

## இரா. பிரேமா

முன்னுரை

இருபதாம் நூற்றாண்டு 'தொடர்பு யுகம்' என்று சுட்டப்படுகின்றது. அறிவியல் முன்னேற்றத்தால் இன்று தொடர்பு சாதனங்கள் பல்கிப் பெருகியுள்ளன. இந்நூற்றாண்டின் தொடக்கம் முதல் எழுபதுகள் வரை பத்திரிகை பிற தொடர்பு சாதனங்களை விட மிக முக்கியப் பங்கு வகித்து வந்துள்ளது. பத்திரிகைத் தொழில் ஆண்களுக்கானது என்று நம்பப்பட்டது. ஆனால், அதைச் சுமார் எழுபது ஆண்டுகளுக்கு முன்னரே தகர்த்தெறிந்தவர் 'நாவல் ராணி' 'கதா மோகினி' 'ஏக அரசி' என்றெல்லாம் தம் சமகால எழுத்தாளர்களால் போற்றப்பட்ட வை.மு.கோ. அம்மையார் ஆவார். வைத்தமாநிதி முடும்பை கோதைநாயகி அம்மாள் என்ற பெயர் கொண்ட அவ்வம்மையார் தொடக்க காலத் தமிழ்ப் பத்திரிகை விடிவெள்ளி ஆவார். ஜகன்மோகினி என்ற பத்திரிகையின் ஆசிரியராக இருபதுகளில் பத்திரிகை உலகில் புகுந்த அவர், சுமார் முப்பத்தைந்து ஆண்டு காலம் பத்திரிகையே உலகம் என்று வாழ்ந்து மறைந்தவர்.

115 நாவல்களைப் படைத்து எழுத்துலகில் சாதனை படைத்த வை.மு.கோ. பத்திரிகை உலகிலும் குறிப்பிட்டுச் சொல்லும் படியான கால்தடத்தைப் பதித்துள்ளார். இன்றும், பத்திரிகைத் தொழிலில் பெண்கள் அதிகமாகப் பங்கு பெற முன்வராத நிலையில், இருபதுகளில் ஒரு பெண் தம்மை முழுமையாக இத்தொழிலில் ஈடுபடுத்தி வெற்றி கொண்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். வை.மு.கோவின் தளராத ஆர்வம், ஈடுபாடு, கவனம், தைரியம், உடனுக்குடன்

முடிவெடுக்கும் போக்கு, ஊக்கம் என்ற பண்புகள் அவரை இத்தொழிலில் நிரந்தரமாக ஈடுபட வைத்துள்ளன.

## வை.மு.கோ – ஓர் அறிமுகம்

வை.மு.கோ சென்னையிலுள்ள திருவல்லிக்கேணியில் 1.12.1901 ஆம் நாள் நீர்வளூர் வெங்கடாச்சாரியார், பட்டம்மாள் தம்பதிகளுக்கு இரண்டாவது பெண் மகவாகப் பிறந்தார். பிறந்த ஐந்தாவது மாதத்திலேயே தாயையிழந்த அவர், தன் சிறிய தகப்பனாரின் மனைவி கனகம்மாவால் வளர்க்கப்பட்டார். ஐந்தரை வயதில் வைத்த மாநிதி முடும்பை குடும்பத்தைச் சேர்ந்த வை.மு. பார்த்தசாரதி என்ற ஒன்பது வயது சிறுவனுக்கு மணம் முடித்துத் தரப்பட்டார்.

வைத்தமாநிதி முடும்பை குடும்பத்தாருக்கு[1] அக்காலத்தில் திருவல்லிக்கேணியிலும் ஸ்ரீவைஷ்ணவ சமூகத்திலும் ஒரு தனி மதிப்பு இருந்தது. அவர்கள் தீவிர வைணவ மரபின் வழி வந்தவர்கள் ஆவார்கள். ஆச்சார அனுஷ்டானங்களைக் கடுமையாகக் கடைப்பிடிப்பவர்கள் என்றாலும், அக்குடும்பத்தின் உறுப்பினர்கள் அனைவரும் நன்கு படித்து, பண்டிதர்களாக விளங்கினார்கள். வை.மு.கோவின் மாமனார் திரு.வை.மு.சீனிவாச அய்யங்கார் கதாகாலட்சேபம் செய்வதில் வல்லவர். அவர் மக்களுள் மூத்தவர் திரு.வை.மு. சடகோப ராமானுஜாசாரியார். இவர் நன்னூலுக்குக் காண்டிகையுரையெழுதியவர். தமக்கையர் திருமதி. வேதவல்லி அம்மையார் 108 வைணவத் திருப்பதிகங்கள் குறித்துப் பாடியவர். இவரும் கதாகாலட்சேபம் செய்வதில் வல்லவர். வை.மு.கோவின் கணவர் திரு. வை.மு. பார்த்தசாரதி ஆங்கிலக் கல்வி வாய்க்கப் பெற்றவர். அவரின் ஒன்றுவிட்ட சகோதரர் வை.மு.கோபாலகிருஷ்ணமாச்சாரியார் கம்பனுக்கு உரை எழுதிப் பதிப்பித்தவர். வைதீகக் கல்வியும் ஆங்கிலக் கல்வியும் கற்ற அக்குடும்பத்தில் புகுந்தபோதும் வை.மு.கோவிற்கு முறையான கல்வி கற்கும் வாய்ப்புக் கிட்டவில்லை.

கோதை, தன் மாமியார் மூலம் தெலுங்கு எழுதப்படிக்கக் கற்றுக் கொண்டார். தமிழ்நாட்டில் பிறந்து வளர்ந்தும் அவருக்கு இருபது வயது வரை தமிழ் எழுதப் படிக்கத் தெரியாது. வை. மு. கோ. அம்மையார் சிறுவயது முதற்கொண்டே பிறருக்குக் கதை கூறுவதில் ஆர்வங் கொண்டிருந்தார். தன் கற்பனை ஆற்றலால், வீட்டிலுள்ள சிறுவர் சிறுமியருக்கும், அருகிலுள்ள தன் வயதொத்த தோழியர்

களுக்கும் புதிய புதிய கதைகளைப் படைத்து மொழிந்தார். அதைச் செவியுற்ற அவரது கணவர், அவரது படைப்பாற்றலை ஊக்குவிக்கும் பொருட்டு, அவரை நாடகங்களுக்கு அழைத்துச் சென்றார். நாடகங்களைப் பார்வையுற்ற வை. மு. கோவிற்குத் தானே நாடகம் எழுத வேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட்டது. அம்மையாருக்குத் தமிழ் எழுதப் படிக்கத் தெரியாததால் அவர் சொல்ல, அவர் தோழி பட்டம்மாள் எழுத வை.மு. கோவின் முதற் படைப்பு 'இந்திரமோகனா' உருவாகியது. இந்நாடகத்தை உடனே நோபிள் பதிப்பகத்தார் மூலம் அச்சேற்றினார் கணவர் வை. மு. பார்த்தசாரதி. அத்துடன் அந்நாடகப் பிரதிகளைச் சிறந்த நாடகாசாரியரான பம்மல் சம்மந்த முதலியார், நாவலாசிரியர்களான வடுவூர் துரைசாமி ஐயங்கார், ஜே. ஆர். ரங்கராஜு மற்றும் வரகவி அ. சுப்பிரமணிய பாரதியார் முதலிய பிரமுகர்களுக்கு அனுப்பி வைத்தார். அவர்களும் நாடகத்தைப் பற்றித் தங்கள் கருத்துக்களை தெரிவித்ததுடன், வை.மு. கோவின் முதல் முயற்சிக்குப் பெரும் பாராட்டையும் அனுப்பித் தந்தனர்.

## ஜகன்மோகினியின் தோற்றம்

வை. மு. கோவின் அடுத்த முயற்சி நாவலாக மலர்ந்தது. 'வைதேகி' என்ற அம்முதல் நாவலின் கைப்பிரதியை வை.மு. தம்பதிகள் அக்காலப் பிரபல நாவலாசிரியரான வடுவூரார்க்கு அனுப்பி வைத்தனர். அதைப் படித்த அவர், அதில் நல்ல கதைப் போக்கு இருந்தது கண்டு, அவரை ஊக்குவிக்க முன்வந்தார். தொடர்ந்து கதையெழுதும்படிக் கூறிய அவர். கதைகளை வெளியிட ஓர் இதழ் இருந்தால் நன்றாக இருக்கும் என்ற யோசனையையும் கூறினார். அதன் பேரில் திரு. நாகசாமி ஐயர் நடத்தி வந்த 'ஜகன்மோகினி' என்ற இதழை விலைகொடுத்து வாங்கினார் வை. மு. கோ. சுமார் இரண்டு ஆண்டுகள் மாத இதழாக வெளிவந்த அவ்விதழை வாங்கிய அவர், பெயரை மாற்றாது அப்படியே வெளியிடலானார். தம் முதல் நூலை அச்சிட்ட நோபிள் அச்சகத்தாரிடமே ஜகன்மோகினியை அச்சிடக் கொடுத்தார்.

1923ஆம் ஆண்டிலிருந்து வெளிவந்து கொண்டு இருந்த அவ்விதழ் 1925ஆம் ஆண்டு ஆவணி மாதம் விநாயகர் சதுர்த்தி முதல், திருமதி. வை.மு. கோவின் பொறுப்பிலிருந்து வெளிவரத் தொடங்கியது. முதல் இதழில் வை. மு. கோவின் முதல் நாவலான 'வைதேகி'

தொடர்கதையாக அரங்கேறியது. முதற்பிரதி 48 பக்கங்கள் கொண்டது. விலை ஓரணா. 1000 பிரதிகளே முதலில் வெளியிட்டார் வை. மு.கோ. முதல் மூன்று இதழ்களில் வடுவூரார் எழுத்துப் பிழைகளைத் திருத்தித் தந்தார். வை.மு. கோ. அதற்கான ஊதியம் கொடுக்க முன்வந்த போதும் வடுவூரார் அதை ஏற்க மறுத்துவிட்டார். ஆனால், தொடங்கிய நான்காவது மாதத்திலேயே அவ்விதழுக்கு 1000 சந்தாதாரர்கள் சேர்ந்தது கண்டு பொறாமை கொண்ட அவர், தனக்குப் பிரதி திருத்த மாதச் சம்பளமாக ரூபாய் ஐம்பது தரும்படி வற்புறுத்தினார். ஓரணாவிற்கு விற்பனையாகும் பத்திரிகைக்கு ரூபாய் ஐம்பது சம்பளம் கொடுத்து ஆள் வைத்துக் கொள்ள இயலாத நிலையில் திருமதி. வை.மு.கோ அதை மறுத்துரைக்க, வடுவூரார் பத்திரிகைப் பணியிலிருந்து விலகிக் கொண்டதுடன், வெளியாகிக் கொண்டிருந்த 'வைதேகி' நாவலின் கைப்பிரதியையும் எடுத்து வைத்துக் கொண்டார். மேலும் அவர் 'வைதேகி' தான் எழுதிய நாவல் என்றும், வை. மு. கோ அவர் பெயரில் அதை வெளியிட்டு வருகிறார் என்றும் பொய்யான செய்தியைப் பரப்பினார். 'வைதேகி' அடித்தல் திருத்தலுடன் கூடிய முதல் பிரதி வை. மு. கோவிடம் இருந்ததால், அதை வைத்துக் கொண்டு கதையைத் தொடர்ந்து வெளியிட்டார். வடுவூராரின் எதிர்ப்பைக் கண்டு அவர் அஞ்சவில்லை. அதை எதிர்த்துக் குரல் கொடுக்கவும் இல்லை. அமைதியாகத் தான் சாதிக்க நினைத்ததைச் சாதித்தார். பத்திரிகைப் பணியில் தான் சந்தித்த முதல் பெரும் எதிர்ப்பைத் துணிவுடன் முறியடித்த அவர், இது போன்ற பல எதிர்ப்புகளைத் தன் மனவுறுதியால் முறியடித்துள்ளார்.

அத்துடன், தான் தமிழ் எழுதப் படிக்கக் கற்றுக் கொள்வது மிக இன்றியமையாதது என்பதை உணர்ந்துகொண்டு, தானே முயன்று எழுதப்படிக்கக் கற்றுக் கொண்டார். அது மட்டுமன்றி, தமிழ்ப் பண்டிதரான தன் சிறிய தந்தையிடம் திருக்குறள், நாலடியார், தேவாரம், திருவாசகம், திருவாய்மொழி, கம்பராமாயணம், வில்லிபாரதம், பெரிய புராணம் போன்ற பல இலக்கியங்களை ஈடுபாட்டுடன் கற்றுக் கொண்டார். இவையெல்லாம் அவருடைய நாவல்களுக்கு வளம் சேர்த்ததோடு அவருடைய வளமான எழுத்துக்கும் கற்பனைக்கும் பின்னணியாக அமைந்தன.

## ஜகன் மோகினியின் வளர்ச்சி

வைதேகி நாவலின் முதற்பாகம் ஒரு வருடம் முழுதும் வெளி வந்த பிறகு 600 பக்கங்கள் கொண்ட அக்கதையை நூலாகவும் வெளியிட்டார். பிரபல 'இந்து' நாளிதழ் அந்நாவலைப் பாராட்டி எழுதியிருந்தது அவரை மேலும் மேலும் எழுதத் தூண்டியது. ஜகன் மோகினி இதழ் வெளிவந்த ஆறு மாதங்களில் 2000 பிரதிகளை வெளியிடும் அளவிற்கு வளர்ந்தது. 2ஆம் ஆண்டு 'பத்ம சுந்தரம்' என்ற தொடர்நாவல் வெளிவரத் தொடங்கியது. அக்கால கட்டத்தி லேயே கேரளாவின் ஆலப்புழையைச் சேர்ந்த ஒரு பதிப்பாசிரியர் அந்நாவலை மலையாள மொழியில் மொழிபெயர்ப்பதற்கு அனுமதி பெற்று, அதை நூல்வடிவிலும் வெளியிட்டார். இது வை.மு. கோவின் எழுத்துக்குக் கிடைத்த பெரும் விருதாகவும் அவருக்கு உற்சாகமாக வும் அமைந்தது. ஜகன்மோகினியின் மூன்றாம் ஆண்டில் 'ராதாமணி' என்ற நாவல் வெளிவந்தது (அரங்க. சீனிவாசன், எழுத்துலக நாயகி, பக்கம் 94-95). வாசகர்களின் இடைவிடாத வேண்டுகோள் காரண மாக ஜகன்மோகினியில் வருவது தவிர ஆண்டு தோறும் ஒன்றிரண்டு தனி நாவல்களும் வெளிவரத் தொடங்கின. அவ்வாறு தனியாக வந்த முதல் நாவல் 'சண்முக விஜயம்' என்பதாகும். அதன் விலை நான்கு அணா எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

வை.மு.கோ. தொடர்ந்து பதினொரு ஆண்டுகள் ஜகன்மோகினி இதழில் தன் கதைகளை மட்டும் தொடர்கதைகளாக வெளியிட்டு வந்தார். அக்காலகட்டங்களில். 'மாதாந்திர நாவல் சஞ்சிகை' என்றே ஜகன்மோகினியை விளம்பரப்படுத்தியுள்ளார். அப்பதினொரு ஆண்டு களில் தனி நாவல்கள் உட்பட 33 நாவல்கள் வெளியாகி உள்ளன. ஒவ்வொரு மாதமும் 6 பாரங்கள், அதாவது 48 பக்கங்களைக் கொண் டதாக அவ்விதழ் வெளிவந்தது.

1937ஆம் ஆண்டு பிப்ரவரி இதழிலிலிருந்து அவ்விதழ் மாற்றி அமைக்கப்பட்டது. அதற்கான காரணத்தை வை.மு.கோ அவ்விதழில் குறிப்பிட்டு எழுதியுள்ளார். 'இப்பொழுது தபால் அதிகாரிகள் பொது விஷயங்கள் நிறையச் சேர்த்துப் போடவேண்டும் என்று வற்புறுத்துவ தால் 2 பாரங்களில் (16 பக்கங்கள்) அவற்றைப் போட்டு, கதை 5 பாரங்கள் (40 பக்கங்கள்) போட்டிருக்கிறோம்' என்று குறிப்பிடும் ஆசிரியர், அதை வாசகர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற வேண்டு

கோர்ளையும் விடுத்துள்ளார். அவ்விதழ் தொடங்கிப் பொது விவரங் களை வனிதாமண்டலம், டாக்கி விமர்சனம், கவிதா மண்டலம், மெரினா பேச்சு, உதிர்ந்த மணிகள் என்ற ஐந்து தலைப்புகளில் வெளியிடத் தொடங்கினார். இவை தவிர, எம். எல். சீனிவாச ஐயங்கார் என்பவரால் எழுதப்பட்ட அரசியல் கட்டுரைகள் முதலிரு பக்கங்களில் இடம் பெற்றன. 1937இல் இருந்து பத்திரிகைக்கான செய்திகள் சேர்க்கப் பட்டதும் ஜகன்மோகினியில் வளர்ச்சிக்கான அடையாளங்கள் காணப் பட்டன. நாற்பது வரையிலான காலகட்டங்களில் வை.மு. கோவின் நாவல்களைத் திரைப்படங்களாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஜகன்மோகினியில் வெளிவந்த 'ராஜமோகன்', 'அனாதைப்பெண்', 'சாமள நாதன்' போன்ற கதைகள் படமாக்கப்பட்டன. திரைப்பட உலகோடு தொடர்பு கொண்ட காரணத்தினால் இக்காலகட்டங்களில் அத்துறை சம்மந்தபட்ட செய்திகளுக்குப் பத்திரிகையில் முக்கியத்துவம் தந்துள்ளார் வை.மு.கோ. ஒவ்வோர் இதழிலும் 2 முழுப்பக்க அளவு சினிமா விளம்பரங்கள் வெளிவந்தன. 'சென்னை ஸ்டுடியோக்களின் செய்திகள்' என்ற தலைப்பில் இரண்டு பக்கச் செய்திக்கட்டுரை ஒன் றும் தொடராக வெளியானது. இவை தவிர, புத்தக விமர்சனமும் அந்தக் காலகட்டங்களில் வெளிவந்த பிற பத்திரிகைகள் பற்றிய அறிமுகங்களோடு கூடிய விமர்சனமும் இடம்பெற்றன. இக்கால கட்டங்களில் அரசியல் செய்திகளுக்கும் முக்கியத்துவம் தரப்பட்டது. மேல்சபைத் தேர்தல், மாகாண அசெம்பிளித் தேர்தல் பற்றிய செய்திகள் பேசப்பட்டுள்ளன. அக்காலத்திலிருந்த 'கல்வி முறை குறித்து' 'சென்னை மாகாணத்தில் கல்வி அபிவிருத்தி' என்ற தலைப்பில் கட்டுரை ஒன்றும் வெளியாகியுள்ளது. அக்கட்டுரையிலிருந்து, 1935 - 1936 ஆம் வருடத்தில் மொத்த ஜனத் தொகையில் 6.8% கல்வி பெற்றவர்கள் என்றும், இதில் ஆண்கள் 9.9%, பெண்கள் 3.8% கல்வி கற்றிருந்தனர் என்றும் அறியப்படுகிறது.

இக்கால கட்டங்களில் உள்நாட்டுச் செய்திகள், வெளிநாட்டுச் செய்திகள் என்று தலைப்பிடப்பட்டுச் சுவாரசியமான செய்திகள் சில இதழ்களில் வெளிவந்துள்ளன. 'சில அபூர்வப் பிரசவங்கள்' என்ற தலைப்பில் வந்த செய்தி ஒன்றை இதற்குச் சான்றாகக் காட்டலாம். ஒரே பிரசவத்தில் ஐந்து அல்லது ஆறு பிறந்திருக்கின்றன. எட்டு குழந்தைகள் பிறந்திருப்பது இதுவே முதல் தடவை.

ஓர் ஏழை சீன மெக்கானிக்கின் மனைவி ஒரே பிரசவத்தில் ஏழு ஆணும் ஒரு பெண்ணுமாக எட்டுக் குழந்தைகள் பெற்றிருக்கிறார். எட்டுக் குழந்தைகளும் சௌக்கியமாகவும், திடகாத்திரமாகவும் இருக்கின்றன.

ஸ்காட்லாந்தில் ஒரு ஸ்த்ரீ பதினான்கு முறை கருத்தரித்தார். பதினொரு இரட்டைகளை ஈன்றார். மற்றொரு ஸ்திரிக்குப் பதிமூணு தடவைகளில் ஜோடிகள் பிறந்தன. ஆறுதடவை மும்மூன்றாக வந்தன. ரஷ்யாவில் இருபத்தொரு முறை கர்ப்பமான ஒரு ஸ்த்ரிக்குப் பிறந்த குழந்தைகள் 27.

அமெரிக்காவில் ஒரு நீக்ரோவிற்கு இரண்டாவது பிரசவத்தில் இரட்டை, மூன்றாவது பிரசவத்தில் நான்கு, ஆறாவது பிரசவத்தில் ஆறு பிறந்தன.

புள்ளி விவரங்களின்படி 10 இலட்சம் பிரசவங்களில் 12,000 இரட்டைகள், 140 மும்மூன்று பிறந்திருக்கின்றன. 'தினமணி' இதழி லிருந்து இச்செய்தி எடுத்துப் போடப்பட்டுள்ளது. இது போன்றே 'இத்தாலியில் பிரஜோர்பத்தி' என்ற தலைப்பின்கீழ் உள்ள கட்டுரை யில் 'சர்க்கார் உத்யோகஸ்தரின் சம்பளத்தில் வருஷந்தோறும் சம்பள உயர்வு கொடுக்கும் முறை ரத்தாகும். அதற்குப் பதிலாக உத்யோகஸ் தருக்கு, ஒவ்வொரு குழந்தை பிறக்கும்போதும் சம்பளம் உயர்த்தப் படும்' என்ற வித்தியாசமான அறிவிப்பை அறிந்து கொள்ள முடிகிறது.

இக்காலகட்டத்தில், 'கவிதா மண்டலம்' என்ற பகுதியும் தொடர்ந்து வந்துள்ளது. இதில் வீரராககவி, திரு. இராகவாச்சாரி போன்றவர்களின் கவிதைகள் தொடர்ந்து வெளிவந்துள்ளன.

நாற்பதுகளில் ஜகன்மோகினியின் வளர்ச்சி வேகம் பெற்றுள்ள தைப் பலவகையில் இனம் காணமுடிகிறது. நாற்பதுகளின் தொடக் கத்திலேயே வை.மு.கோ. தம் பத்திரிகை எப்படி உருவாக வேண்டும் என்பதில் ஒரு தீர்மானத்தை வரையறுத்துக் கொண்டுள்ளதை அக் காலகட்ட இதழ்களில் இருந்து அடையாளம் காண முடிகிறது. ஜகன்மோகினியைப் பெண்களுக்கான இதழென முத்திரை குத்தி, அவர் அடையாளம் காட்டாவிட்டாலும், பெண்களைப் பெருமைப் படுத்தும் இதழாக, பெண்களைச் சமூக அடையாளம் காட்டும்

இதழாக, பெண்களுக்கு வாய்ப்பளிக்கும் இதழாக, பெண்களை முன்னேற்றும் இதழாக அடையாளப்படுத்திக் காட்டினார்.

1942ல் வை. மு. கோ., 'பாரத நாட்டுத் திலகங்கள்' என்ற தலைப்பில் இதழுக்கு ஒன்றாகப் பன்னிரண்டு பெண்மணிகளை அறிமுகப்படுத்தியுள்ளார் பண்டிதை கிருஷ்ணவேணி அம்மாள், திருமதிகள் ஜானாம்மாள், எஸ். அம்புஜம்மாள், கஸின்ஸ் அம்மையார் போன்றோர் அதில் அடங்குவர்; அப்பொழுது அட்டையில் சம்மந்தப் பட்டவர்களின் புகைப்படங்களை வெளியிட்டுப் பெருமைக்குப் பெருமைச் சேர்த்துள்ளார்; அதுபோல, 1943இல் 'எழுத்துலகம் - ஸ்ரீரத்னம்' என்ற பெயரில், அப்போதைய சிறந்த பெண் எழுத்தாளர்கள் பன்னிருவர் பற்றிய கட்டுரைகளை வெளியிட்டுள்ளார். அவர்களில் குகப்ரியை, குமுதினி, திருமதி. வசுமதி இராமசாமி போன்றோர் அடங்குவர். இக்காலகட்டத்தில் பல்துறை சார்ந்த கட்டுரைகளும் மோகினியில் வெளிவந்துள்ளன. 1945இல் 'நந்தவனம்' என்ற பெண்களுக்கான தனி இதழும், 1947இல் 'பாலர் மோகினி' என்ற சிறுவர்களுக்கான தனி இதழும் ஜகன்மோகினியின் அலுவலகத்திலிருந்து வெளிவரத் தொடங்கின. பாலர் மோகினி சிறிது காலத்தில் ஜகன்மோகினியின் அங்கமாக அதன் பகுதியாக வெளிவரத் தொடங்கியது. 1948இல் தொடங்கி, சுமார் ஐந்து வருடங்கள் 'சிஸ்டர் சுபலஷ்மி அம்மையாரின் வாழ்க்கை வரலாறு' அவர்களாலேயே தொடர் கதையாக எழுதப்பட்டுள்ளது. மிகச் சுவையாகவும் வாசகர்களுக்குப் பயன்படும் விதத்திலும் தன் வாழ்க்கை வரலாற்றைப் பகிர்ந்து கொண்டுள்ளார் சுபலஷ்மி அம்மையார். நாற்பதுகளின் மத்தியில் கட்டுரைப் போட்டியும், நாற்பதுகளின் இறுதியில் சிறுகதைப் போட்டியும், மோகினியின் மூலம் வை.மு.கோ. நடத்தியுள்ளார்.

ஐம்பதாம் ஆண்டில் ஒவ்வோர் இதழிலும் மற்ற பகுதிகள் குறைக்கப்பட்டு வை. மு. கோவின் முழுக் கதை வெளியிடப்பட்டுள்ளது. ஆனால், வாசகர்கள் இம்மாற்றத்தை வரவேற்காததால் 1951 ஆம் வருடம் தொடங்கி, இந்நிலை மாறிப் புதிய பொலிவுடன் ஜகன்மோகினி வெளிவரத் தொடங்கியது. அப்பொழுது ஜகன்மோகினியின் உள்ளடக்கம் மேலும் விரிந்து பரந்தது. 'சிற்ப விசித்திரங்கள்' என்ற பகுதி வை.மு. நரசிம்மனால் எழுதப்பட்டது. மேலும் யோகி சுத்தானந்த பாரதியின் சுயசரிதையும் வெளிவந்துள்ளது. பாரத மாதா, நமக்கொரு காளமேகம்

போன்று சிறந்த கவியோகி சுத்தானந்த பாரதியாரை அளித்திருக்கின்றாள். அத்தகைய அற்புதக் கர்மவீரரின் சுயசரிதையைப் பிற்காலத்தில் தோன்றியவாறு பிறர் சொல்லவும் எழுதவும் இடம் வைக்காமல் யோகியாரை ஜகன்மோகினி மூலம் எழுதி வரும் பாக்கியத்தை ஜகன்மோகினி அளித்திருக்கிறாள். ஏற்கனவே ஒரு சந்நியாசியின் (சுபலஷ்மி அம்மையார்) சுயசரிதை வருகிறதோடு ஒரு யோகியின் சரிதையும் வருவது வாசகர்களுக்கு நல்லதொரு விருந்தாகும் என்பது திண்ணம் என்று வை.மு.கோ. குறிப்பிட்டுள்ளார். அது 'ஆத்மசோதனை' என்ற பெயரில் வெளிவந்துள்ளது. அதே காலகட்டத்தில் 'உண்மைச் சித்திரம்' என்ற பெயரில் ஒரு புதிய பகுதி தொடங்கப்பட்டது. யோகி சுத்தானந்த பாரதி 'ரசமான கடிதங்கள்' என்ற பகுதியின் மூலம் சுவாரசியமான விஷயங்களைப் பகிர்ந்து கொண்டுள்ளார். 1953ஆம் வருடத்தில் 'இசைப் பகுதி' என்ற புதிய பகுதியும் தொடங்கப்பட்டுள்ளது. மேலும் பயணக் கட்டுரைகள், மொழிபெயர்ப்புக் கதைகள் என்பனவும் முக்கியத்துவம் பெற்றுள்ளன. 'மறக்க முடியாத பெண்மணிகள்' என்ற தலைப்பில் 1953இல் ஒரு தொடர் வெளிவந்தது. இதில் முதல் கட்டுரையாக 'சரோஜினிதேவி' பற்றி திருமதி. வசுமதி இராமசாமி அவர்கள் எழுதியுள்ளார்கள். தொடர்ந்து இத் தொடரில் யார் யாரெல்லாம் இடம் பெற்று உள்ளார்கள் என்பதை அறிய இயலவில்லை.

ஐம்பதுகளில் அரசியல் தலையங்கங்கள் தொடர்ந்து வெளிவந்துள்ளன. ஐம்பத்தாறில் இராஜாஜி அவர்கள் 'பகவத் கீதைக் குறிப்புகள்' என்ற தொடரை எழுதியுள்ளார். இவ்வாறு ஜகன்மோகினி இதழ் இறுதிவரை நாளும் புதுப்பொலிவுடன் வெளிவந்துள்ளதைக் காண இயலுகிறது.

### எதிர்ப்பும் சமாளிப்பும்

ஒரு பெண் பத்திரிகை ஆசிரியராகப் பொறுப்பேற்று நடத்துவதைக் கண்டும் கேட்டும் அவருக்கு எதிர்ப்புகள் பல பிறந்தன. மிரட்டல்கள், மொட்டைக் கடிதங்கள், குற்றச்சாட்டுகள் எனத் தொடர்ந்தன. தன் அஞ்சா நெஞ்சத்தால் அதைப் பொருட்படுத்தாத அம்மையாருக்கு அவரது கணவர் பக்கபலமாகத் துணை நின்றிருக்கிறார். முற்போக்கு எண்ணங்களும் எழுத்துத்தாகமும் அறிவுத்தாகமும் கொண்ட வை.மு. கோவின் முயற்சிக்கும், எழுச்சிக்கும் அவருடைய குடும்ப உறுப்பினர்கள் பெரும் ஆதரவு அளித்துள்ளனர். ஜகன்மோகினி

தொடங்கிய புதிதில் வை.மு. கோ தெருவில் நடந்து செல்லும் பொழுது தெருக்காரர்கள் பத்திரிகையைக் கொளுத்தி அவர் முன்னே வீசியிருக் கின்றனர்.[2] அப்பொழுது அவர், அறியாமையால் அவர்கள் செய்யும் பிழை இது என அச்செயல்களைப் பொறுத்துக் கொண்டு, தன் முயற் சியில் சிறிதும் பின்னடையாமல் செயல்பட்டிருக்கின்றார். 'எதற்கும் பயப்படாதே'. யார் மிரட்டல்களும் மொட்டைக் கடிதங்களும், குற்றச் சாட்டுகளும் உன்னை ஒன்றும் செய்து விட முடியாது, எனச் சிறிய தந்தை திரு. ராகவாச்சாரியார் தேற்றிய தேறுதல், தன்னைச் சளைக்காத உறுதியுடன் உழைக்கத் தூண்டியதாக வை.மு.கோ ஒரு கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார் (புனித மூர்த்தியின் பொன்மொழிகள், ஜகன்மோகினி யின் 30ஆவது ஆண்டு மலர், 1953, ப. 214.).

'எந்த ஒரு துறையில் யார் வெற்றிக்கு வரவேண்டுமாயினும் அதற்கு அவர்களுடைய சாமர்த்தியம் மட்டும் இருந்தால் போதாது. பிறருடைய உதவி, முயற்சி, ஒத்தாசை முதலிய தூண்டுகோல்கள் இருந்து தூண்டினால்தான் அறிவு விளக்கு சுடர்விட்டு அணைந்து போகாமல் பிரகாசிக்கும். சுடர்விடத் தூண்டுகோல் இருந்தால் போதுமா! பிரதானமான எண்ணெய் வார்த்து உதவி புரியும் முக்கிய மானவர்கள் தேவை. அம்முறையில் இந்த அடிமைக்கு ஜகன்மோகினிச் செல்வியை வளர்க்கவும், எழுத்துலகில் பிரவேசித்துத் தொண்டு புரியவும், பிரதானமாய் உண்மை அன்புடன் உதவியவர்கள் பல ருண்டு. அவர்களில் ப்ரதானமாய் எனது கணவர், பிறகு தகப்பனார், என் பந்துக்களில் சிலர், சிநேகிதர்களில் சிலர், மகா பண்டித அறிவாளி களில் சிலர். ஆயிரக்கணக்கான வாசக மகளிர் ஆக, இவ்வளவு பேர் களுடைய உதவி உற்ஸாகம் ஆசி அருள் ஆர்வம் இவைகள் தாம்' (உயிர்த்தோழி, மு.நூல், ப.204) தன் பத்திரிகைப் பணிக்கு வலு சேர்த்ததாகக் கூறியுள்ளார் வை.மு.கோ.

### ஜகன்மோகினியின் வளர்ச்சியில் குடும்பத்தாரின் பங்கு

ஜகன்மோகினிக்குக் கிடைத்த பேரும் புகழும் வை.மு. கோவின் குடும்பத்தினரைப் பத்திரிகைக்காக அர்ப்பணித்துக் கொள்ள வைத் தது. தொடக்கத்தில் ஜகன்மோகினி இதழ்களை நோபிள் அச்சகத்தில் அச்சிட்டு வந்த வை.மு. கோ 1937ஆம் ஆண்டிலிருந்து ஜகன்மோகினி கெனத் தனி அச்சகம் தொடங்கினார். அது முதல், ஜகன்மோகினியை அச்சிட்டு வெளியிடும் பொறுப்பை வை.மு. கோவின் கணவர்

திரு. வை.மு. பார்த்தசாரதி ஏற்றுக்கொண்டார். அவர்களது ஒரே மகன் திரு வை.மு. சீனிவாசன் ஜகன்மோகினியின் பொறுப்பாசிரியராகவும், அவரது மனைவி வை.மு. பத்மினி 'பாலர் மோகினி'யின் பொறுப்பையும் ஏற்றுக்கொண்டனர். ஐம்பதுகளில் வை.மு. கோவின் பேரன் வை.மு. நரசிம்மன் கட்டுரைகளும் பேத்தி விஜயலஷ்மி கதை, கட்டுரைகளும் எழுதத் தொடங்கினார்கள். இப்படி ஜகன்மோகினியின் வளர்ச்சிக்காக அக் குடும்பமும் உழைத்தது. ஒவ்வொரு ஆங்கில மாதமும் முதல் தேதியில், மிகச் சரியாகப் பத்திரிகையை வெளிக்கொணரச் செய்வதில் இவ்வங்கத்தினர்கள் கண்ணும் கருத்துமாக உழைத்திருக்கின்றனர்.

## ஜகன்மோகினியின் – உள்ளடக்கம்

முன்பே கூறியபடி நாற்பதுகள் தொடங்கி ஜகன் மோகினியில் பலதரப்பட்ட பகுதிகள் வெளிவந்துள்ளன. நவீனம், சிறுகதை, ஒரு பக்கக்கதை, உண்மைச் சித்திரங்கள் வாழ்க்கைத் தீபம், ஷேமலாபங்கள் (ஆசிரியர் வாசகர்களுடன் பேசும் பகுதி) பலசரக்கு, நாடகம், கடிதங்கள், வாழ்க்கைக் குறிப்பு, சுயசரிதை, கேலிச்சித்திரங்கள், நகைச்சுவைத் துணுக்கு, கதாகாலட்சேபம், புத்தக அறிமுகம், மதிப்புரைப் பகுதி, பேட்டிகள், குடும்ப வைத்தியம், மருத்துவப் பகுதி, வனிதா மண்டலம், இலக்கியப்பக்கம், கவிதைப்பகுதி, இசைப் பகுதி என்று பல பகுதிகளின் மூலம் மோகினி வாசகர்களுக்கு விருந்தளித்துள்ளாள்.

## நவீனங்கள்

வை.மு.கோ. தம் வாழ்நாளில் 115 நவீனங்கள் படைத்துள்ளார். அதில் 90க்கும் மேற்பட்ட நவீனங்கள் ஜகன்மோகினியில் தொடராக வெளிவந்தவைகளாகும். இவற்றில் பல, ஐந்தாறு பதிப்புகளைக் கண்டுள்ளன. தொடக்கத்தில் அம்மையார் துப்பறியும் நாவல்களையே படைத்துள்ளார். இதற்கு அவர்கால இலக்கியப் போக்கும், வடுவூராரிடம் கொண்டிருந்த நட்பும் ஒரு காரணமாக அமைந்தன எனலாம். ஆனால், அவர் எழுதியவற்றில் சுமார் 15 கதைகளே துப்பறியும் வகையின. வைதேகி, பத்மசுந்தரன், சண்பகவிஜயன், ராதாமணி, ருக்மிணி காந்தன், பரிமளகேசவன், காதலின் கனி, சோதனையின் கொடுமை, இராஜமோகன் போன்றவை துப்பறியும் நவீனங்களில் சில. ராஜாராம் நாயுடு என்ற பாத்திரம் இக்கதைகளில் எடுத்தாளப்பட்டு, அவரின்

துப்பறியும் திறன் மூலம் துப்புத் துலக்கப்படுவதாகக் கதைப் போக்கு அமைகிறது.

வை.மு.கோ, ஒரு நூறு சமூக நவீனங்களைப் படைத்துப் பெரும் சாதனை புரிந்துள்ளார். இந்நவீனங்களின் வழிப் பல சமூகப் பிரச்சினைகளையும் மகளிர் பிரச்சினைகளையும் எடுத்தாண்டுள்ளார். விதவா விவாகம் பற்றிச் சாமளநாதன் என்ற நவீனமும், வரதட்சணைக் கொடுமை பற்றி 'இன்பஜோதி' என்ற நவீனமும், தேவதாசி முறை ஒழிப்பு பற்றி 'ஜீவியசூழல்' அல்லது 'சீரிய ஒழுக்கம்' என்ற நவீனமும், வாழாவெட்டியான பெண்ணின் துயரம் பற்றி 'மலர்ந்த இதழ்' என்ற நவீனமும், கைம்பெண் துயரம் பற்றி 'உணர்ச்சி வெள்ளம்' என்ற நவீனமும், அழகற்ற பெண்மணியின் வாழ்வியல் போராட்டம் பற்றிக் 'கருணாலயம்' என்ற நவீனமும், வயதானவனுக்கு வாழ்க்கைப்பட்டு அல்லல்படும் இளம்பெண்ணைப் பற்றித் 'தயாநிதி' என்ற நவீனமும் பேசுகின்றன. இக்கதைகள் அக்காலப் பெண்களின் வாழ்வியல் துயரங்களைப் பேசுவதுடன் அவற்றிலிருந்து மீள்வதற்கான முயற்சிகளையும் கூறுகின்றன. குறிப்பாக, பல கதைகளில் பெண்களுக்கான மீட்சியாகக் 'கல்வி' சுட்டப்பட்டுள்ளது. ஆனால் அஃது குடும்ப வாழ்க்கையைச் சீர்திருத்த உதவ வேண்டுமேயன்றி, கற்ற பெண்கள் நாகரிகம், சுதந்திரம் என்ற பெயரில் அலைதல் கூடாது என்பதையும் இந் நவீனங்களின்வழிச் சுட்டிக்காட்டியுள்ளார், வை.மு.கோ. மது, வேசி, கள்ளக்காதல், குதிரைப்பந்தயம் இவற்றால் வரும் சீர்கேடுகளும், அவை மகாத்மா காந்தியின் போதனை மொழிகளால் சீர்படுவதும் 'நளினசேகரன்' என்ற நவீனத்தில் சொல்லப்படுகின்றன. சமூக ஊழல் பற்றி 'மூன்று வைரங்கள்' என்ற நவீனமும், சமூக சேவை பற்றித் 'தியாகக்கொடி' என்ற நவீனமும், 'வேலையில்லாத் திண்டாட்டம் பற்றிப் 'பட்டமோ பட்டம்' என்ற நவீனமும், தேர்தல் ஊழல் பற்றி 'சாந்த குமாரி' என்ற நவீனமும், இசையின் பெருமையைப் பற்றிக் 'கஸ்தூரி திலகம்' அல்லது 'கானா மிருதம்' என்ற நவீனமும், அனாதை நிலையம் அமைத்து ஆதரவற்றோருக்கு உதவும் பெண்ணைப் பற்றிக் 'க்ருபாமந்திர்' என்ற நவீனமும், திரைப்படங்களால் ஏற்படும் சமூகப் பாதிப்பை உணர்த்தும் 'ஆசை பிரவாகம்' 'கானல்நீர் அல்லது கபட நாடகம் என்ற நவீனங்களும் பேசுகின்றன. மனத்தாமரை என்ற நவீனத்தில் மருத்துவமனை தானே தன்னிடத்தில் நடக்கின்ற நிகழ்வுகளைக் கூறுவது போலவும், 'தபால் விநோதம்' என்ற நவீனத்தில்

கடிதங்களின் மூலம் கதை கூறப்படுவதும் புதிய உத்திகளாக அமைந்துள்ளன. தவிர, முப்பதுகளிலும், நாற்பதுகளிலும் படைக்கப்பட்ட நவீனங்களில் சுதந்திரப் போராட்டம் பற்றியும், கள்ளுக்கடை மறியல், அந்நியத் துணி பகிஷ்கரிப்பு, உப்புச் சத்தியாக்கிரகப் போராட்டம் போன்ற சுதந்திரப் போராட்டச் செய்திகளையும் வை.மு.கோ பேசியுள்ளார். காந்தீயக் கொள்கைகளான தீண்டாமை ஒழிப்பு, மதுவிலக்கு, சகோதரத்துவம், சமூக ஒற்றுமை, சுதேசிப் பிரச்சாரம் போன்ற கொள்கைகளையும் இவரது பல நவீனங்கள் பேசுகின்றன. அதனால் இவரது படைப்புகள் அக்காலச் சமூகச் சூழலை அறிவதற்கும் குறிப்பாகப் பெண்களின் வாழ்வியலைப் பன்னோக்கில் அறிந்து கொள்வதற்கும் பெருமளவில் துணையாக அமைந்துள்ளன. வை.மு. கோவின் இத்தகைய எழுத்துப் பணியைப் பாராட்டி வரகவி அ. சுப்ரமணிய பாரதி, 'தமிழ்நாட்டு மாதர்களுள் உலகச் சரித்திரத்தில் இடம்பெறத் தக்கவர் கோதை நாயகி அம்மாள்' என்றும், யோகி சுத்தனாந்த பாரதியார், 'இன்று தமிழ்நாட்டில் தொடர்கதை எழுதுவதில் முதன்மை வகிப்பவர் அம்மையாரே; இவரை 'நாவல்ராணி' என்று சொல்லலாம் என்றும், ஜே.ஆர். ரங்கராஜு, இவர் கதைகளெல்லாம் பொன்னெழுத்துகளில் பொறிக்கக் கூடியவை என்றும் போற்றியுள்ளனர்.

### பெண்கள் பகுதி

ஜகன்மோகினியின் குறிப்பிடத்தக்க பகுதிகளுள் ஒன்று இது. பத்திரிகையை இலாபநோக்கத்தோடும், அதே சமயத்தில் சமூக நோக்கத்தோடும் நடத்தவேண்டும் என்ற அக்கறையில் பெண்களுக்காகப் பல்வேறு காலகட்டங்களில் 'வனிதா மண்டலம்' 'நம் சகோதரிகளுக்கு மட்டும்', 'மஞ்சள் குங்குமம்' என்ற தலைப்புகளில் பக்கங்களை ஒதுக்கி, அவர்களுக்கான செய்திகளை, கட்டுரைகளை இடம்பெற வைத்துள்ளார். 1937ஆம் ஆண்டு ஜகன்மோகினியைப் பன்னோக்கு இதழாக விரிவுபடுத்தியது முதல் 'வனிதா மண்டலம்' என்ற பகுதியைத் தொடர்ந்து வெளியிட்டு வந்துள்ளார் வை.மு.கோ. தொடக்கத்தில் சூடாமணி என்பவர் இப்பகுதியில் பெண்களுக்கான விஷயங்களை எழுதியுள்ளார். பாட்டி - பேத்தி (பாக்யம்) உரையாடலாக முதலில் இப்பகுதி வந்துள்ளது.

நாற்பதுகளில் 'வனிதா மண்டலம்' பகுதியில் அக்காலப் பிரபல பெண்மணிகளான திருமதி. எஸ். அம்புஜம்மாள், ஜானாம்மாள், வசுமதி

இராமசாமி, எச். ஆர். ரெங்கநாயகி அம்மாள், ரங்கப்ரியை போன்றோர் பெண்களுக்கு அறிவூட்டும் விதமாகக் கட்டுரைகள் எழுதி வந்துள்ளனர்.

'(மகளிர்)சங்கம் அவசியமா?'

'பெண்களுக்குச் சொத்துரிமை அவசியம் தானா?'

'ஸ்த்ரீதனம்'

'ஸ்த்ரீகளும் சொத்துரிமையும்'

'விவாக சீர்திருத்தங்கள்'

பேரன்ற தலைப்புகளில், இப்பகுதியில் கட்டுரைகள் வெளிவந்துள்ளன.

'தகப்பனார் சொத்திலும் சரி, கணவன் செத்திலும் சரி, பெண்ணுக்குச் சமபங்கு, சமவுரிமை வேண்டும். ஆணைப் பெற்றவர்கள் தான் பெண்ணையும் பெற்றார்கள். கண்கள் இரண்டும் சமம். அது போலப் புத்திர வாத்ஸல்யம் என்பதும் பிள்ளையாயிருந்தாலும், பெண்ணாயிருந்தாலும் ஒன்று போல்தான் இருக்கும். அப்படியிருக்க, அன்பில் மாத்திரம் வேறுபாடு இல்லாதபோது, ஆஸ்தியில் மட்டும் பாரபட்சமேன்!' என்று திருமதி. மல்லிகை சுந்தரம் குட்டியா பிள்ளை எழுதியுள்ள கருத்து பெண்ணினத்தினரைச் சிந்திக்க வைப்பதாக, செயல்படத் தூண்டுவதாக அமைந்துள்ளது (சொத்துரிமை அவசியம் தானா, வனிதா மண்டலம்' ஜகன்மோகினி, பிப் 50).

'பெண்ணுரிமை' பற்றிப் பேசும் இவர், அவ்வுரிமை அவர்களைக் கெடுத்துவிடும், குடும்பப் பொறுப்பைத் தட்டிக்கழிக்க வைத்து விடும் என்ற எண்ணம் சமூகத்தில் நிலவுவதை, 'நம் பெண்கள் சுதந்திரப் போராட்டத்திலும், மத இயக்கத்திலும், ராஜ்யத்திலும் ஈடுபட்டிருக்கும்போதுகூட அவர்கள் தம் பொறுப்பை உணரத்தவறினார்களில்லை. குடும்பப் பொறுப்போடு, சமூகப் பொறுப்பையும், பதி சேவையோடு தேச சேவையையும் ஏற்றுத் திறம்பட நிர்வகித்து எந்நாட்டுப் பெண்களையும்விட, நம் இந்தியப் பெண்மணிகள், ஓர் உன்னத ஸ்தானத்தை வகித்து வந்துள்ளனர் - வருகின்றனர். குடும்பப் பொறுப்பை நிர்வகிக்கும் திறமைதானே, மற்ற சமூகச் சீர்திருத்த ராஜ்யப் பொறுப்புக்களையும் திறமையுடன் நிர்வகிக்க ஆஸ்திவார

மாக அமைகிறது (மேலது) என்ற தம் கருத்தின் மூலம் போக்க முயன்றுள்ளார்.

'சம்சார சக்கரம்' என்ற கட்டுரையில் ஜெயலக்ஷ்மி சீனிவாசன் என்ற அம்மையார் 'பெண்களுக்கான இலக்கியம்' என்பது பற்றி விரிவாகப் பேசியுள்ளார். அஃது, இன்றைய மேலைநாட்டுப் பெண்ணியவாதிகளின் கருத்துக்களோடு ஒத்துநோக்கத் தக்கதாகும். 'நம் நாட்டில் பெண்களுக்குப் பயன்படக்கூடிய பத்திரிகைகளும் புத்தகங்களும் வெகுசொற்பம். பெண் கல்வியில் அவ்வளவாக முன்னேற்றமடையாத நம் நாட்டில் கிருஷிணிகளுக்கு உபயோகப்படும்படியான இலக்கியத்திற்கு நல்ல ஊக்கம் காணோம். ஆனால் இத்தகைய இலக்கியம் நமக்கு மிக அவசியமாக இருக்கிறது. நாட்டின் பற்பல குடும்பப் பெண்கள் பள்ளிக்கூடம் - கலாசாலைகளின் வாசனையே தெரியாது குடித்தனத்தை நிர்வகித்த வண்ணமே சொந்தமாகக் கல்வி கற்கிறார்கள். இத்தகைய குடும்பப் பெண்களுக்கான எண்ணிறந்த நன்னூல்களும், பத்திரிகைகளும் மேல்நாடுகளில் உண்டு. நம்மில் இதுபோன்ற இலக்கியம் நிரம்பக் குறைவு; அப்படி எங்கேயாவது பெண்களால் பெண்களுக்கென்றே ஆரம்பிக்கப்பட்ட இரண்டொரு பத்திரிகைகள் இருந்தாலும் கூட, அவை தங்குதடங்கலின்றி நன்றாக நடைபெறுவதற்குப் போதுமான ஊக்கம் கிடைப்பது அரிது. ஆதலால் குடும்பப் பெண்களுக்குப் பயன்படக்கூடிய இலக்கிய வளர்ச்சிக்கு, கனம் அரசாங்கம் ஊக்கமளித்துப் பெண் உலகின் முன்னேற்றத்தைக் கடமையாகக் கொள்ளவேண்டும்' என்று எழுதியுள்ளார் (ஜகன்மோகினி 1.1.59, பக்.9-10).

பெண் கல்வியின் அவசியம் பற்றி மற்றொரு 'வனிதா மண்டலப்' பகுதி பேசுகிறது. பெண்களுக்குப் பட்டம், படிப்பு அனாவசியம் என்று சொல்லமாட்டேன். பெண்கள் முடமாக வாழ்ந்த காலம் போச்சு. இப்பொழுது மெய்வாழ்வு வாழ அஸ்திவாரம் படிப்பு. ஆனால், அந்தப் படிப்பினால் பண்படையணுமே அன்றிப் பெண்மையை இழக்கக் கூடாது. 'காதலொருவனைக் கைப்பிடித்து அவன் காரியம் யாவிலும் கைகொடுத்து' என்று பாரதியார் பாடினார். அவர் கண்ட கனவு அவ்வளவுமே நனவாகிவிட்டது. அவர் புதுமைப்பெண் எப்படியிருப்பாளென்று மனக்கண்ணால் கண்டாரோ அது மாதிரி பெண்களையே நம் பாரதத்தாய் வேண்டுகிறாள். பெண்கள் படிக்க வேண்டும். நிராதர

வான பெண்கள் அல்லது பணபலமற்ற பெண்கள் ஒரு தொழில் புரிய வேண்டிப் படிக்க வேண்டும். சமுதாய மாற்றத்திற்கேற்ப நாமும் புதிய முறைகளை வரவேற்க வேண்டும். அதற்குப் பெண்கள் படிப்பு இன்றிமையாதது. உலக விஷயம், விவகார ஞானம் எல்லாம் வேணும். புருஷன் கையை எதிர்பார்க்காமல் வீட்டு வேலைகளைத் திறன்பட நடத்த, படிப்பு அவசியம்' என்று திருமதி வசுமதி இராமசாமி எடுத்துரைத்துள்ளார் (ஜகன் மோகினி, ஆகஸ்டு 50). இவ்வதவிர, குடும்பச் சிக்கனம், குடும்ப நிர்வாகம் என்பன போன்ற பயனுள்ள பொருள்களில் கட்டுரைகள் இப்பகுதியில் வெளியாகியுள்ளன.

இப்படிப் பெண்களுக்கான சமூக முன்னேற்றப் பாதைக்கு வழி வகுத்துத் தருவதாக ஜகன்மோகினியின் 'வனிதாமண்டல'ப் பகுதி அமைந்துள்ளது. இன்றைய மகளிர் இதழ்களில் காணப்படும் சமை யல் பகுதி, கோலப்பகுதி, அழகுக்குறிப்புகள், ஜோதிடப்பகுதி போன்ற பெண்களை முன்னேற்றுவதாகக் கூறிக் கொண்டு, பின்னேற்றும் பகுதிகள் மோகினியில் அறவே காணஇயலவில்லை என்பது குறிப் பிடத்தக்கதாகும். இதன்மூலம், வை.மு.கோ.வின் சமூக நோக்கையும் பெண் முன்னேற்றச் சிந்தனைப் போக்கையும் இனம் காண இயலுகிறது.

மேலும், மோகினி இதழ்களின் மூலம் பெண் எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் முயற்சியிலும், புதிய பெண் எழுத்தாளர்களை உரு வாக்கும் முயற்சியிலும் மிகத் தீவிரமாக ஈடுபட்டுள்ளார், வை.மு. கோ. அவரின் இதழ்களில் எழுதிய பெண் எழுத்தாளர்கள் 150க்கும் மேலானவர்கள். தமிழ் வாசகர்களுக்கு நன்கு அறிமுகமான 'குகப் ரியை', 'குமுதினி', 'ரங்கநாயகி', 'வசுமதி இராமசாமி', 'சூடாமணி', 'கமலா சடகோபன்' போன்றோர் ஜகன்மோகினியின் மூலம் எழுதிப் புகழ் பெற்றவர்களாவர்கள். அவர் 'நந்தவனம்' என்ற வெளியீட்டின் மூலம் 100க்கும் மேற்பட்ட புதிய பெண் எழுத்தாளர்களை அறிமுகம் செய்துள்ளார். இவ்விதழின் மூலம் வை.மு.கோ. பெண்ணுலகிற்கு மிகப் பெரிய தொண்டு செய்துள்ளார். பெண்களைத் தங்களுடைய சமூகத்தை முன்னேற்றுவதற்காக எழுதத் தூண்டியுள்ளார். முடங்கிக் கிடந்த அவர்கள் சிந்தனைகளுக்குத் தம் பத்திரிகையின் மூலம் பெரும் எழுச்சியையும் உத்வேகத்தையும் தந்துள்ளார்.

நந்தவனம் இதழ்கள் வஸந்த ருது, கிரிஷ் ருது, வர்ஷ ருது, சரத் ருது, ஹேமந்த ருது, சசி ருது என்ற ஆறு மலர்களாக வெளிவந்தன. இம்மலர்கள், 'தமிழ்ப்பெண்களின் பேனாமுனை' என்றும், 'தமிழ்ப் பெண்மணிகளின் நந்தவனம்' என்றும் விளம்பரப்படுத்தப்பட்டன.

இவ்விதழ்களின் ஆண்டுமலர்கள் தாரண நந்தவனம், பார்த்திப நந்தவனம் என்று அந்தந்த வருடப் பெயர்களாலே சுட்டப்பட்டன. தாரண நந்தவனம் சுமார் 700 பக்கங்களும் 100 படங்களும் கொண்டது. அத்துடன் 100 பெண் எழுத்தாளர்கள் இவ்விதழ்களில் பங்கு கொண்டுள்ளனர். 'ருது மலர்கள்' என்று சொல்லப்படும் மாத மலர்களில் சிறந்த கதைகள், கட்டுரைகள் வெளியாகி உள்ளன. இப் பத்திரிகை ஜகன்மோகினியிலிருந்து உருவத்திலும் உள்ளடக்கத்திலும் வேறுபட்டுள்ளது. இதில் பொழுதுபோக்குச் செய்திகளை விடப் பெண்களைச் சமூக நிலையில் முன்னேற்றும் முயற்சிகளே அதிகம் இடம் பெற்றன எனலாம். நந்தவன இதழ்கள் இருவிதத் தாள்களில் அச்சிடப்பட்டன. வாங்குவோரின் தரத்தினை மனதில் கொண்டு இத்தகைய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. உயரிய கிளேஸ் பதிப்பு என்பது 'நல்ல வெள்ளைத் தாளால்' ஆனது. இது ஒரு ரூபாய் எட்டணா விலையுள்ளது. மற்றொன்று மலிவுப் பதிப்பு. இது 'அன்ப்ளிச்ட் தாள்'களால் ஆனது. இது தொடக்கத்தில் எட்டணா விலையிலிருந்து பின்பு ஒரு ரூபாய் இரண்டணாவிற்கு உயர்ந்துள்ளது.

வை.மு.கோ., சென்னை வானொலிக்கு அளித்த பேட்டியொன்றில், தான் எழுத்துலகிற்கு வந்த காலகட்டத்தில் பெண்களின் எழுத்துக்கள் சமூகத்தின் பார்வைக்குக் கேலிக்குரியதாக அமைந்துள்ளதை எடுத்துரைத்து வருந்தியுள்ளார். 'நான் முதலில் எழுத்துலகில் ப்ரவேசித்தபோது ஸ்த்ரீ எழுத்தாளர்கள் வெகு சொல்பம். அப்பொழுது பெண்கள் எழுதுவது என்றால் அடாடா! என்ன இளப்பம் தெரியுமா... எழுதுவதற்கு மட்டுமா... பெண்கள் படித்தால் இளப்பம்... பாடினால் இளப்பம்... கதை, காலக்ஷேபம் செய்தால் இளப்பம்... பெண்கள் எதைச் செய்தாலும் இளப்பம்' என்று குமுறும் இவர், தான் இப்படிப்பட்ட இளப்பம், எதிர்ப்பு, பகைமை, கோபம், பரிகாசம் முதலிய தாக்குதல்களை எல்லாம் தாண்டி, பெரும் முயற்சியுடன் முன்னேறி வந்துள்ளதாகக் கூறுகிறார். அதனால், தன்னால் முடிந்த அளவு பெண் எழுத்தாளர்களை ஊக்குவிக்க முன்வந்தார். 'மோகினியில்

நான் பெண்மணிகளுக்கு முடிந்த அளவு இடமளித்து வருவதோடு பெண்களுக்கென்றே ஒரு 'நந்தவனம்' ஸ்ருஷ்டித்திருக்கிறேன். ஆண்டவன் செயலால் அது தினே தினே (தினம் தினம்) செழித்து வளர்ந்து வருகிறது' என்று அம்முயற்சியை எடுத்துரைத்துள்ளார் (28.2.47இல் சென்னை வானொலிக்கு அளித்த பேட்டியின்போது கூறியது).

இன்றைய பெண்ணுலகமும் எழுத்துலகமும் வை.மு. கோவிற்கு அஞ்சலி செலுத்த மிகக் கடமைப்பட்டுள்ளது. இன்றைய நாளில், எழுத்துலகில் ஆண்களுக்கு நிகராகப் பெண்கள் முன்னணியில் நிற்க, வை.மு.கோ. அன்றிட்ட வித்து ஒரு பெரும் காரணமாக அமைந்துள்ளது எனலாம்.

## கட்டுரைப் பகுதி

ஜகன்மோகினியில் மற்றொரு குறிப்பிடத்தக்க அம்சம் இது. நல்ல தரமான கட்டுரைகளும் கட்டுரைத் தொடர்களும் இவ்விதழ் மூலம் வெளியாகி உள்ளன. இவ்விதழ் நவீனத்திற்குக் கொடுத்த சிறப்பைக் கட்டுரைக்கும் கொடுத்துள்ளது. இலக்கியக் கட்டுரைகள், சமூகக் கட்டுரைகள், அரசியல் கட்டுரைகள், சமயக் கட்டுரைகள், உபதேசக் கட்டுரைகள் என்று பலவிதக் கட்டுரைகள் ஜகன் மோகினியில் இடம் பெற்றுள்ளன. இவை தவிர, வாழ்க்கை வரலாற்றுத் தொடர்கள், பயணக் கட்டுரைகள், தன் வரலாற்றுக் கட்டுரைகள், நகைச்சுவைக் கட்டுரைகள், மொழிபெயர்ப்புக் கட்டுரைகள் என்பனவும் இடம் பெற்றுள்ளன. இந்த அளவிற்குக் கட்டுரைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்த தமிழ் இதழ்கள் இன்றுவரை இல்லையென்றே கூறலாம்.

ஜகன்மோகினியில் வந்த இலக்கிய கட்டுரைகளை வை.மு.கோ., திரு. ப்ர.ப. அண்ணங்காச்சாரியா, பி.ஸ்ரீ., குகப்ரியை, கே.எஸ். கிருஷ்ணன் போன்றோர் எழுதியுள்ளனர். பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளை அவர்களும் ஜகன்மோகினியில் ஒரு கட்டுரை எழுதியுள்ளார். குகப்ரியை எழுதிய 'காரக்கைப்பாடினியார்', வை.மு.கோ. எழுதிய 'ஔவையார்', பி.ஸ்ரீ. எழுதிய 'பாரதி போற்றும் உலக மகாகவி', கே.எஸ். ராமசாமி சாஸ்திரி எழுதிய இந்திய இலக்கியத்தில் 'தேச பக்தி' மற்றும் 'கம்பர் காட்டிய ஸ்ரீராமாவதாரம்', 'காளிதாசர் கனவு'

போன்ற தரமான கட்டுரைகள் மோகினி இதழில் வெளிவந்துள்ளன. 1953இல் 'இலக்கியப் பூஞ்சோலை' என்ற தலைப்பில் பி.ஸ்ரீ. எழுதிய கட்டுரைத் தொடரும், 1956இல், நவீனத்தின் நாயகன் பி.ஆர். ராஜ மய்யர் என்ற தொடரும் குறிப்பிடத்தக்க இலக்கியத் தொடர்களாகும்.

அரசியல் கட்டுரைகளை பி.ஸ்ரீ. வை.மு.ஸ்ரீ., கே. பாஷ்யம், வி.கே. பார்த்தசாரதி ஐயங்கார் போன்றோர் எழுதியுள்ளனர். முப்பது களின் இறுதிதொட்டு அரசியல் கட்டுரைகள் மோகினியில் இடம் பெற்றன. நாற்பதுகளின் தொடக்கத்திலும் மத்தியிலும் காணப்படாத அரசியல் கட்டுரைகள் திரும்ப 1947இல் இந்தியச் சுதந்திரத்திற்குப் பின்பு மீண்டும் மலர்ந்தது. அப்பொழுது வை.மு.ஸ்ரீ. தொடர்ந்து ஒவ்வோர் இதழிலும் அரசியல் கட்டுரை எழுதி வந்துள்ளார். மாகாணப் புணரமைப்பு, இந்தியக் குடியரசும் உலக ஜனாதிபதியும், சரித்திரம் உருவாகிறது, ஜின்னாவின் சூழ்ச்சி போன்றவை வை.மு. ஸ்ரீ. எழுதிய சிறந்த கட்டுரைகளுள் சிலவாகும். இக்கட்டுரைகளில் நல்ல அரசியல் முதிர்ச்சி காணப்படுகிறது. 'நான் கண்ட தேசிய வெள்ளம்' என்ற பெயரில் பி.ஸ்ரீ. அரசியல் தொடர் கட்டுரை எழுதியுள்ளது குறிப் பிடத்தக்க ஒன்றாகும்.

சமயக் கட்டுரைகளைப் ப்ர.ப. அண்ணங்காச்சாரியா, கார்ப்பங் காடு வெங்கடாச்சாரியா, பி.ஸ்ரீ., திருமதி. ராஜலட்சுமி மாதவையங் கார், திருமதி. லக்ஷ்மி, யோகி சுத்தானந்த பாரதியார் போன்றோர் எழுதியுள்ளனர். யோகி சுத்தானந்த பாரதி எழுதியுள்ள 'இந்து தர்மக் கட்டுரைகள்', பி.ஸ்ரீ. எழுதிய 'ஆழ்வார்கள் கண்ட அழகுத் தெய்வம்' என்ற கட்டுரை, ப்ர.ப. அண்ணங்காச்சாரியா எழுதிய 'பகவத் விஷய ரஸானுபவம்', ஸ்ரீகோதாப்பிராட்டி வாழ்க்கைச் சரித்திரம், பகவத் கீதைக் குறிப்புகள், கீதா தர்மம், அபூர்வ ராமாயணம் போன்ற கட்டுரைகள் மோகினிக்குப் பெருமை சேர்ப்பன. சமயக் கட்டுரைகள் பெரும்பாலும் தொடர் கட்டுரைகளாகவே வெளியாகி உள்ளன.

குடும்ப வாழ்க்கை, சுதந்திர இந்தியப் பெண்மணிகளுக்கு எனப் பல தலைப்புகளில் சமூகக் கட்டுரைகளும் எழுதப்பட்டுள்ளன. திரு. சா.மு. பிள்ளை என்பவர், 'குடும்ப வாழ்க்கை' என்ற கட்டுரை யில் வீடு ஒரு பெரிய சாம்ராஜ்யம், குடும்பம் ஒரு சின்ன உலகம், வீடு ஒரு பெரிய சர்வகலாசாலை, வீடு மனுஷ்யனைச் சிருஷ்டிக்

கிறது, குடும்பம் ஒரு கூட்டுறவுக் கழகம், வீடு ஒரு பண்டகசாலை, குடும்பம் ஒரு அன்புக் களஞ்சியம், வீடு ஒரு பாசறை எனப் பல்வேறு குறுந்தலைப்புகளில் குடும்ப வாழ்வின் பல்வேறு பரிமாணங்களை ஒரு சமூகவியல் பார்வையோடு அலசி ஆராய்ந்து எழுதியுள்ளார்.

'பாரதி வாழ்க்கையில் ஒரு குறிப்பு' என்ற தலைப்பின்கீழ் 'சின்னரங்கர்' என்பவரால் எழுதப்பட்ட வாழ்க்கை வரலாற்றுக் கட்டுரை ஒன்றும் குறிப்பிடத்தக்கதாகும்.

பாரதி வீட்டில் கட்டுரையாசிரியர் ரங்கா, அவர் தமக்கை ஆண்டாள் இருவரும் சகுந்தலா, செல்லம்மாள் இருவருடனும் பேசிக் கொண்டிருந்தபோது, பாரதி, சி.ஐ.டி. அப்பாசாமி பின்தொடர வீட்டில் நுழைந்தார். சிறிது நேரம் கழித்து செல்லம்மாள் கிணற்றில் நீர் இறைக்க, "நீ ஏன் செல்லம்மாள் கஷ்டப்படுகிறாய்? பர்வதம் வரவில்லையா? விடு... விடு... அப்பாசாமியை நமக்கு வேண்டு மான தண்ணியை நிறைக்கச் சொல்லுகிறேன்." 'டேய் அப்பாசாமி' என்று கூப்பிட்டார். "நீங்கள் சும்மா இருந்தால் நல்லது. அவன் என்ன ஜாதியோ, என்னவோ. அதை விசாரிக்காமல், நான் அவன் தண்ணீரை எடுத்துக்கொள்ள முடியாது" என்று செல்லம்மாள் சொல்ல, "இதோ பார் செல்லம்மா, அவன் எந்த ஜாதியானால் என்ன? பகவான் நம்மைப் போல அவனையும் சிருஷ்டித்திருக்கிறார். நாம்தாம் அவர்களைப் பேதப்படுத்துகிறோம். இதையெல்லாம் விட்டுவிட்டு நாம் சமநோக் குடன் இருக்க வேண்டும். நான் இப்போ அவனையும் உட்கார வைத்துக்கொண்டு சாப்பிடப்போகிறேன். அவன் வேலையெல்லாம் முடிந்ததும் இலையைப் போடு" என்று கூறிவிட்டு, அச்சமயத்தில் ஒரு பாட்டையும் பாடினார்.

பல்லவி

வந்தே மாதர மென்போம் – எங்கள்
மாநிலத் தாயை வணங்குதுமென்போம் (வந்தே)

சரணங்கள்

ஜாதி மதங்களைப் பாரோம் – உயர்
ஜன்ம மித்தேசத்தி லெய்தின ராயின்
வேதியராயினு மொன்றே – அன்றி
வேறு குலத்தின ராயினு மொன்றே (வந்தே)

ஒன்று பட்டாலுண்டு வாழ்வே – நம்மில்
ஒற்றுமை நீங்கிடி லனைவர்க்கும் தாழ்வே
நன்றிது தேர்ந்திடல் வேண்டும் – இந்த
ஞானம் வந்தாற்பின் நமக்கெது வேண்டும் (வந்தே).

இக்கட்டுரை பாரதி பற்றிய நாம் அறியாத செய்தியை எடுத்துரைப்பதாக அமைந்துள்ளது.

மொழிபெயர்ப்புக் கட்டுரைகளை பி.ஸ்ரீ. எழுதியுள்ளார். இவர் வடமொழி இலக்கியங்களைப் பெரும்பாலும் மொழிபெயர்த்துத் தந்துள்ளார். 'உள்ளங் கவர்ந்த ஊர்கள்', 'புண்ணிய க்ஷேத்திர யாத்திரைகள்' என்ற தலைப்புகளில் பயணக் கட்டுரைகளும் வெளிவந்துள்ளன. ஐம்பதுகளில், 'நட்சத்திர மண்டலம்' என்ற கட்டுரைத் தொடர் திரைப்பட நட்சத்திரங்கள் பற்றியதாக வெளிவந்துள்ளது.

காந்தியின்மீது மிகுந்த பற்றும் பாசமும் கொண்ட வை.மு.கோ. காந்தியச் சிந்தனைகளையும் சுதந்திரப் போராட்டச் சிந்தனைகளையும் கட்டுரை வடிவில் தம் பத்திரிகையில் வெளியிட்டுள்ளார். தீண்டாமை ஒழிப்பு, மது ஒழிப்பு, கதரின் மகத்துவம், உப்புச் சத்தியாக்கிரகம் போன்ற கருத்துக்களை இக்கட்டுரைகள் பேசியுள்ளன. காந்திஜி இறந்தபொழுது அவருக்கு அஞ்சலி செலுத்தும் விதமாக காந்திஜியின் நினைவு மலர் (1.3.48) வெளியிட்டுள்ளார் வை.மு.கோ. அவ்விதழில் யோகி சுத்தானந்த பாரதியின் 'காந்தி கீர்த்தனம்', பி.ஸ்ரீ. ஆச்சார்யாவின் 'உலக சரித்திரத்தில் காந்தியடிகள்', வை.மு.கோ.வின் 'புது உலகம் - காந்தி சகாப்தம்', திருமதி. லஷ்மி அம்மாளின் 'சுவர்க்கத்தில் மகாத்மா', சகோதரி ஆர்.எஸ். சுபலஷ்மி அம்மாளின் 'அவதார மூர்த்தி மகாத்மாஜி', திருமதி. ராஜலஷ்மி மாதவையாரின் 'புருஷோத்தம்மன் காந்தி', திருமதி. வசுமதி இராமசாமியின் 'அமரர் மகாத்மா', திருமதி. ஜானம்மாளின் 'பாபுஜி மறையவில்லை', திருமதி எஸ். அம்புஜம்மாளின் 'சன்மார்க்கப் பெருவழி', திருமதி. ரங்கப்ரியையின் 'காந்தியத்தைக் கைக்கொள் வோம்' என்ற கட்டுரைகள் இடம் பெற்றன. அவ்விதழ் என்றும் போற்றிப் பாதுகாக்கத்தக்க தொன்றதாக, சரித்திரப் புகழேடாக அமைந்திருந்தது.

வை.மு.கோ., காந்தியடிகள் தேச விடுதலைக்கு மட்டுமன்றிப் பெண்கள் முன்னேற்றத்திற்கும் அரும்பெரும்பாடுபட்டுள்ளார் என்பதைப்

பெண்ணுலகம் அறியவேண்டும் என்ற நோக்கில் ஒரு கட்டுரை எழுதி யுள்ளார். அதில், 'சுதந்திரச் சிற்பியான தியாகமூர்த்தி காந்தியடிகளின் அபூர்வசக்தியாகிய உளியினால் பெண்ணுலகம் என்கிற மலையில் அபூர்வ சிற்பங்களைச் செதுக்கி அழகிய சிலாசனமாக நமக்களித் திருக்கிற பெருமையை உலகம் மறக்க முடியாது. அத்தகைய சௌந் தர்ய சிற்பங்களாகத் தான் இன்று சரோஜினி நாயுடு கவர்னராகவும், விஜயலெட்சுமி பண்டிட் ஸ்தானிகராகவும், அமிர்த கௌரி மந்திரியாக வும், ருக்மணி இலட்சுமிபதி மந்திரியாகவும் இன்னும் பல பெண்மணி கள் உயர்ந்த இலட்சியப் பதவிகளிலும் அபூர்வமாக விளங்குகிறார் கள்... மகாத்மா காந்தியடிகள் பெண்சக்தியை, பெண் தர்மத்தை, பெண் கடமையை, பெண் உழைப்பை, பெண் பெருமையைத் தூண்டிவிட்ட தூண்டுகோல் என்று, காந்தியின் பெண் முன்னேற்ற செயல்பாட்டை எடுத்துக் காட்டியுள்ளார் (புது உலகம் - காந்தி சகாப்தம், ஜகன் மோகினி, மார்ச்சு - 48).

ஜகன்மோகினி இதழின் மூலம் நல்ல கட்டுரைகள் வெளிவர வேண்டுமென்ற அவாவின் காரணமாகவும், மகளிர் இடையே சிந்திக் கும் திறன் அதிகரிக்க வேண்டும் என்பதற்காகவும் வை.மு.கோ. 1944இல் கட்டுரைப் போட்டிகளை நடத்தியுள்ளார். ஒவ்வொரு மாத மும் ஒரு தலைப்பைக் கொடுத்து, அதனை ஒட்டிக் கட்டுரை எழுதச் செய்து, அதில் சிறந்த இரண்டு கட்டுரைகளைத் தெரிவு செய்து, பரிசுகளை நல்கியுள்ளார்.

'பணத்தினால் பெறமுடியாதவை என்ன?' இரசனை, கற்பனை, சங்கீதத்தின் வசீய சக்தி என்பவை போட்டிக்குக் கொடுக்கப்பட்ட சில தலைப்புகளாகும். திருமதி. எஸ். ஜெயலஷ்மி, திருமதி. மல்லிகை சுந்தரம் குட்டியாபிள்ளை போன்றோர் இப்போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றி வாகை சூடியவர்கள் ஆவார்கள். அவர்களுக்குத் தொடர்ந்து ஜகன்மோகினியில் எழுதும் வாய்ப்புக்களை அளித்துள் ளார் வை.மு.கோ.

1943இல் 'டாக்டரின் டைரியிலிருந்து' என்ற தலைப்பில் அலோ பதி மருத்துவக் கட்டுரைகளும் 1944இல் 'குடும்ப வைத்தியம்' என்ற பெயரில் எளிய மருத்துவக் குறிப்புகளுடன் கூடிய கட்டுரைகளும் ஜகன்மோகினியில் வெளிவந்துள்ளன. இவற்றையெல்லாம் பார்க்கும் பொழுது, பரந்து விரிந்த பன்முகப் பார்வையுடன் வாசகர்களுக்கு

அறிவு எழுச்சியை ஊட்டியுள்ளார் வை.மு.கோ. என்பதை அறிந்து கொள்ள முடிகிறது.

### சிறுகதைகள்

ஜகன்மோகினியில் நாற்பதுகள் தொடங்கிச் சிறுகதைகள் வெளிவரத் தொடங்கின. தொடக்கத்தில் சரித்திரக் கதைகள், 'கற்பனை' என்ற பெயரில் வெளியாகின. பின்பு சமூகக் கதைகள் 'சிறுகதை' என்று தலைப்பிடப்பட்டு வெளிவந்தன. ஒரு பக்கக் கதை களும் மோகினியில் அதிகம் வெளியாகி உள்ளன. வை.மு. கோதை நாயகி அம்மாள் நவீனங்கள் படைத்த அளவு சிறுகதை படைக்க வில்லை என்றாலும் அவர் அவ்விலக்கியத்தையும் விட்டுவைக்க வில்லை. அவரைத் தவிர, புகழ்பெற்ற எழுத்தாளர் க.நா.சு. முதற் கொண்டு நூற்றுக்கணக்கானவர்கள் சிறுகதைகள் படைத்துள்ளனர். என்.வி. துரைசாமி, க. ராமானுஜம், சி.வி. செல்லப்பா, டி.எ. வெங்கட சுப்பிரமண்யம், எம். பங்காரு ரெட்டி, குடந்தை என்.டி. வேதராமன் என்ற சில ஆண் எழுத்தாளர்களே எழுதியுள்ளனர். பெரும்பாலும் பெண் எழுத்தாளர்களுக்கே மோகினியில் எழுத இடம் கொடுத்துள்ளார் வை.மு.கோ. இதையறிந்த ஆண் எழுத்தாளர்கள் சிலர் பெண்களின் பெயரில் கதைகள் எழுதி அனுப்பியுள்ளனர். இதைத் தெரிந்து கொண்ட வை.மு.கோ. இதைப் பற்றி ஓர் இதழில் வருத்தம் தெரி வித்துள்ளார். பெண் எழுத்தாளர்களில் திருமதி. வசுமதி இராமசாமி, குமுதினி, குகப்ரியை, ஸ்ரீ ஜானம்மாள், திருமதி. மல்லிகை சுந்தரம் குட்டியா பிள்ளை, எம்.எஸ். ராஜேஸ்வரி, திருமதி. டி. மங்கா, என்.எஸ். செல்வம், எச்.ஆர். ரங்கநாயகி அம்மாள், பி.எஸ். அலமேலு, காந்த லஷ்மி, திருமதி. வசந்தா ரங்கராஜன், கி. ஜெயலஷ்மி, பத்மா சேஷாத்திரி, பத்மினி, கினஜா, திருமதி ராஜலஷ்மி சுவாமிநாதன், சி.என். சீதாலஷ்மி, ராஜம் நரசிம்மன், தாயாம்மாள் ராமைய்யா, ரெங்கம்மாள் சக்கரவர்த்தி, சசிதேவி, எம்.எஸ். கமலா, வை.மு. பத்மினி சீனிவாசன், ஆர். சரஸ்வதி, பட்டம்மாள், திருமதி அரவிந்தா, திருமதி ஆர். சாரதா, வி. ரெங்கநாயகி, கமலா சடகோபன், ரெங்கப்ரியை போன்றோர் குறிப்பிடத்தக்கவர்களாவார்கள். 'ப்லவ', 'மோகனகாந்தன்', 'புஜலா', 'விருட்சிகம்', 'ரேவதி', 'சாரக்ராகி' என்ற புனைபெயரிலும் சிறுகதை எழுத்தாளர்கள் அறிமுகப்படுத்தப்பட் டுள்ளனர். நாற்பதுகளில் ஒன்று அல்லது இரண்டு சிறுகதைகளே

மோகினியின் இதழ்களில் வெளியாகியுள்ளன. ஆனால் ஐம்பதுகளில் ஓர் இதழில் நான்கு கதைகள் வரை வெளியாகி உள்ளன. பொங்கல் மலர், நந்தவன மலர், ஆண்டு மலர்களில் இலக்கியத் தரமான சிறுகதைகள் பல வெளியாகியுள்ளன. 'ஹரணி' என்பவர் தொடர்ந்து இந்தி மொழிக் கதைகளைத் தமிழில் மொழிபெயர்த்துத் தந்துள்ளார். தவிர, நார்வே, ஜெர்மன் கதைகளெல்லாம் மொழிபெயர்க்கப்பட்டுள் ளன. ஐம்பதுகளில் 'சிறுகதைக் கடலில் சிற்றலைகள்' என்ற தலைப் பில் பி.ஸ்ரீ., வை.மு. ஸ்ரீநிவாசன் போன்றோர் மொழிபெயர்த்த பிற மொழிக் கதைகள் தொடர்ந்து வெளிவந்துள்ளன. இத்தொடரில் குறிப்பாக இரவீந்திரநாத் தாகூர் கதைகள் மொழிபெயர்க்கப்பட்டுள் ளன. இவை தவிர 'உண்மைச் சித்திரம்' என்ற பெயரில் வாழ்க்கை நிகழ்வுகள் கற்பனை சேர்க்காமல் கதைப்படுத்திக் கூறப்பட்டுள்ளது. இப்பகுதியில் வை.மு.கோ. அதிகமாகத் தம் அநுபவத்தை எழுதி யுள்ளதைக் காணமுடிகிறது.

ஜகன்மோகினியின் வெள்ளிவிழாக் கொண்டாட்டத்தின்போது சிறுகதைப் போட்டி ஒன்று நடத்தப்பட்டது. அப்போட்டிக்கு நூற்றுக் கணக்கான சிறுகதைகள் வந்து குவிந்துள்ளன. மேலும் வாசகர்களின் வேண்டுகோளுக்கிணங்கச் சிறுகதைகள் அனுப்பி வைக்கும் தேதி இருமுறை மாற்றம் பெற்றுள்ளது. சிறுகதைகளைத் தேர்ந்தெடுக் கின்ற நடுவர் குழுவில் பி.ஸ்ரீ., எஸ். அம்புஜம்மாள், 'காசினி', திருமதி. வசுமதி இராமசாமி, வை.மு. ஸ்ரீநிவாசன் போன்றோர் இடம் பெற்றுள்ளனர். பரிசு பெற்ற சிறுகதைகள் 1950இல் பொங்கல் மலரில் வெளியிடப்பட்டுள்ளன.

## இசைப்பகுதி

இயற்கையிலே இசை ஞானம் பெற்றுள்ள வை.மு.கோ. தன் குரல் வளத்தால் மகாகவி பாரதியாரின் பாராட்டைப் பெற்றவர். மியூசிக் அகாதெமி, மயிலை சாரதா ஐக்கிய சங்கம், அனைத்திந்திய பெண்கள் சங்கம், காங்கிரஸ் கூட்டங்கள், வானொலி நிகழ்ச்சிகள் என்று பல இசை நிகழ்ச்சிகளைத் தந்த அவர், டி.கே. பட்டம்மாளுடன் இணைந்து பல இசைத்தட்டுகளைத் தந்துள்ளார். இத்தகைய இசைப்பிரியையான வை.மு.கோ., மோகினியில் இசைக்கென்று ஒரு பகுதியை ஒதுக்கியுள்ளார். திருப்பள்ளி எழுச்சி, நாச்சியார் திரு

மொழி, தியாகராஜ கீர்த்தனை, பெரியாழ்வார் திருமொழி போன்றவற்றின் பாடல்கள், ஸ்வரப்படுத்தி ஒவ்வொரு இதழிலும் வெளியிடப்பட்டுள்ளன. இவை தவிர, சுத்தானந்த பாரதி, வை.மு.கோ. போன்றோர் இயற்றிய புதிய பாடல்களும் ஸ்வரப்படுத்தப்பட்டு வெளிவந்துள்ளன. இசைப்பிரியர்களை மகிழ்விக்கும், இப்பகுதி இசைத் தமிழை வளர்ப்பதாக அமைந்துள்ளது.

### நாடகப்பகுதி

வை.மு.கோ. நாடகங்கள் எழுதுவதிலும் அவற்றை இயக்குவதிலும் வல்லவர் என்பதால் ஜகன்மோகினியில் ஓரங்க நாடகங்களையும் தொடர் நாடகங்களையும் வெளியிட்டு வந்திருக்கிறார். மோகினியின் ஆண்டு மலர்களிலும் நாடகத்திற்கு என்று தனிப்பகுதி ஒதுக்கப்பட்டுள்ளது. பெரும்பாலும் நாடகங்கள் சமூகப் பிரச்சினைகளையே பேசுகின்றன. தடபுடல், கவியின் கனவு, வேந்தனின் விதி, புகைப்படம், விசித்திர விவாகம் போன்ற நாடகங்கள் இவற்றில் குறிப்பிடத்தக்கன. 'பாலர்மோகினி' பகுதியிலும் நாடகங்கள் வெளியாகியுள்ளன. வை.மு.கோ. நடத்தி வந்த 'திருவல்லிக்கேணி மகாத்மாஜி சேவா சங்க'த்தினைச் சேர்ந்த 'பாலிகா கழகத்தினர்' வருடந்தோறும் நடத்தும் குழந்தைகள் நாடகவிழாவில் அவற்றை நடத்திக் காட்டிப் பரிசுகள் பெற்றுள்ளனர். சில நாடகங்கள் தனிப் பிரதிகளாகவும் வெளிவந்துள்ளன. இவ்வாறு மோகினியின் மூலம் வை. மு. கோ. முத்தமிழையும் வளர்த்துப் போற்றியுள்ளார்.

### விமர்சனப் பகுதி

1937இல் தொடங்கி ஜகன்மோகினியில் பத்திரிகை விமர்சனம், புத்தக விமர்சனம், டாக்கி விமர்சனம் ஆகியவை இடம்பெற்றுள்ளன. டாக்கி விமர்சனப் பகுதியில் அக்காலத்தில் வெளிவந்த பக்த மீரா, சதி அநுசுயா, சிந்தாமணி, பாலயோகினி, சாமளநாதன், அனாதைப் பெண், நந்தனார் போன்ற படங்களைப் பற்றிய திரை விமர்சனங்கள் இடம்பெற்றுள்ளன. 1942இல் நந்தனார் படம் பற்றி வை.மு.கோ. இரண்டு பக்க அளவில் விமர்சனம் எழுதியுள்ளார். அதன் மூலம் அப்படம் அக்கால கட்டத்தில் ஒரு பெரும் விவாதத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதை அறியமுடிகிறது. ஆனால் அதற்குப்பின் திரைப்பட விமர்சனம் மோகினியில் இடம்பெறவில்லை.

1937 தொடங்கி இறுதிவரை புத்தக விமர்சனப்பகுதி வந்துள்ளது. ஒவ்வொரு இதழிலும் இப்பகுதி தொடர்ந்து வருவதில்லை என்றாலும் அவ்வப்போது வெளிவந்துள்ளது. விமர்சனம் செய்யப்பட்டுள்ள நூல்களில் வாசன் எழுதிய 'தமிழ் டாக்கி பிரமுகர்கள்' என்ற நூல் குறிப்பிடத்தக்கதாக அமைந்துள்ளது. திருமதி ஜெயலட்சுமி ஆர். சீனிவாசனின் 'பூமாவின் புன்னகை', திருமதி. எம்.எஸ். கமலாவின் 'காதற்கோயில்' என்ற சிறுகதைத் தொகுதிகளை விமர்சிக்கும் போது, தன்னால் உருவாக்கப்பட்ட இவ்விரு எழுத்தாளர்களும் வளர்ந்துள்ளதை வாழ்த்தியுள்ளார். வை.மு.கோ. அம்மையாரைத் தவிர வை.மு. ஸ்ரீநிவாசனும் பிற பிரமுகர்களும் புத்தக விமர்சனம் செய்துள்ளனர். திருவல்லிக்கேணி ஆசிரியப் பயிற்சிக் கல்லூரியைச் சேர்ந்த தமிழ்ப் பேராசிரியர் திருமதி ராஜரத்தினம் என்பவர் இலக்கிய நூல்களின் விமர்சனங்களை எழுதியுள்ளார். சிறந்த புத்தகங்களுக்கு ஒரு பக்க விமர்சனமும், பிற நூல்களுக்கு அரைப்பக்க, கால் பக்க விமர்சனங்களும் எழுதப்பட்டுள்ளன. இப்பகுதி அக்கால நூல்களை அறிந்து கொள்வதற்குப் பெரும் துணையாக உள்ளது.

### பாலர் பகுதி

மோகினியில் குழந்தைகளுக்காக 1944ஆம் ஆண்டிலிருந்து சில பக்கங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. தொடக்கத்தில் இப்பகுதி 'குழந்தைகளுக்கு மட்டும்' என்ற பெயரில் வெளிவந்தது. 'சூடாமணி' என்பவர் குழந்தைகளுக்காகத் தொடர்ந்து எழுதிவந்துள்ளார். பின்பு இப்பகுதி 'பாலர்பக்கம்' என்று மாற்றம் பெற்றது. அப்பொழுது பி.எல். வெங்கடராமன் என்பவர் எழுதி வந்துள்ளார். 'மோகினி மாமா' என்ற பெயரில் அவர் குழந்தைகளோடு பேசும்பகுதி வெளிவந்துள்ளது. பின்பு குழந்தைகளுக்கென்று 'பாலர் மோகினி' என்ற இதழ் தொடங்கப்பட்டது. ஆனால் இவ்விதழ் குறுகிய காலமே வெளிவந்துள்ளது. இதன் ஆசிரியராக வை.மு. பத்மினி ஸ்ரீநிவாசன் பொறுப்பேற்றிருந்தார். பின்பு இவ்விதழ் நிறுத்தப்பட்டுப் பாலர் மோகினி என்ற பெயரிலேயே ஜகன்மோகினியின் பகுதியாக இணைக்கப்பட்டுள்ளது. இதைப் பற்றி அதிக செய்திகளை அறிய இயலவில்லை. பாலர் மோகினி பகுதியில் தந்திரக் கதைகள், புராணக்கதைகள், விடுகதைகள் போன்றவை இடம்பெற்றுள்ளன. பத்மினி ஸ்ரீநிவாசன் இப்பகுதியில் எழுதிய கதைகள் 'பாலர் மோகினி கதைகள்' என்ற பெயரில் ஆறு

தொகுதிகளாக வெளிவந்துள்ளன. 1954 முதல் இப்பகுதியில் 'ஆத்திச்சூடிக் கதைகள்' என்ற பெயரில் ஔவையாரின் ஆத்திச்சூடி, கதை வடிவில் கூறப்பட்டுள்ளது. ஆத்திச்சூடிக் கதைகளை எழுதியவர் எம். கே. சுலோசனா என்பவர் ஆவார். 1956 வரை வை.மு. பத்மினியின் பொறுப்பில் வெளிவந்த இப்பகுதி அவரது கணவரின் இறப்புக்குப் பின் அவரது மகள் வை.மு. விஜயலஷ்மியின் பொறுப்பில் வெளி வந்துள்ளது.

### பிறபகுதிகள்

ஜகன்மோகினியில் மேலும் பல குறிப்பிடத்தக்க பகுதிகள் வெளிவந்துள்ளன. ஜகன்மோகினிக்கு மட்டுமே உரியதாக 'வாழ்க்கை தீபம்', 'உண்மைச் சித்திரம்' என்ற பகுதிகளைக் குறிப்பிடலாம். 'வாழ்க்கை தீபம்' என்ற பகுதி கடிதவடிவத்தில் அமைந்துள்ளது. இதில் பெண்களுக்கு உகந்த பொதுவான செய்திகள் பேசப்பட்டு உள்ளன. ஒரு மாமி தன் மருமகளுக்கு எழுதுவதாக வை.மு.கோ. தம் கருத்து களை வாசகர்களுக்கு எழுதியுள்ளார். இக்கடிதங்களில் தீபாவளி வெடிகளினால் ஏற்படும் தீமை, வீட்டைச் சுத்தமாக வைத்திருக்கும் விதம், சாரதாதேவியின் நூற்றாண்டு விழா, சிறுகதை எழுதுவது எப்படி? புகுந்த இடத்தின் பெருமை, மனையாளின் மாட்சி என்பன போன்ற பல செய்திகள் இடம் பெற்றன. 'உண்மைச் சித்திரம்' என்ற பகுதியில், வை.மு.கோ. தம்முடைய வாழ்க்கையில் கண்ட, கேட்ட, அநுபவித்த நிகழ்வுகளை வாசகர்களோடு பகிர்ந்து கொள்கிறார்.

ஐம்பதுகளில் 'சிற்பச் செல்வம்', 'பாசுரமும் ஓவியமும்' என்ற இரு பகுதிகள் வெளிவந்துள்ளன. இவற்றில் 'சிற்பச் செல்வம்' என்ற தொடர் வை.மு. நரசிம்மனால் எழுதப்பட்டது. இதில் நம் நாட்டுச் சிற்பப் பெருமைகள் அபூர்வப் புகைப்படங்களுடன் இடம்பெற்றுள் ளன. 'பாசுரமும் ஓவியமும்' என்ற பகுதியில் பாசுரத்திற்கு ஏற்ற ஓவிய வடிவங்கள் இடம்பெற்றுள்ளன. இவ்விரண்டு பகுதிகளும், தமிழகத் தின் இலக்கியமல்லாத பிற கலை வடிவங்களின் சிறப்புகளை எடுத்துரைப்பனவாக அமைந்துள்ளன.

1954இல் அ.ந. கிருஷ்ணராவ் என்பவர் 'சந்தியாராகம்' என்ற பெயரில் கன்னட மொழியில் எழுதியுள்ள நாவலை திருமதி. ஜயலஷ்மி சீனிவாசன் மொழிபெயர்த்துத் தந்துள்ளார். இஃது, தொடராக வெளி

வந்துள்ளது. 1956இல் 'அறிவுப் போட்டி' என்ற பகுதி தொடர்ந்து வெளிவந்துள்ளது. 'விகடவெடி' என்ற பெயரில் நகைச்சுவைத் துணுக்குகள் அவ்வப்போது வெளிவந்துள்ளன. ஐம்பதுகளில் 'சிதைந்த பழமொழி' என்ற பகுதியும் வெளிவந்துள்ளது. இதில், பழமொழிகளின் உண்மை வடிவமும் அவை எவ்வாறெல்லாம் சிதைந்து வழங்கி வருகின்றன என்பது பற்றியும் எழுதப்பட்டுள்ளது. இஃது, 'வீட்டுக்குள்ளே உலகம்' என்ற பெயரிலும், 'பழமொழியா பழிமொழியா' என்ற பெயரிலும் வெளிவந்துள்ளது. இவற்றைத் தவிர, 'பேனா தன் வரலாறு கூறுதல்', தானியங்களின் மாநாடு என்பன போன்ற கற்பனை நயமும் சுவையும் நிறைந்த பகுதிகளும் வெளிவந்துள்ளன. ஒரு கேள்வி கேட்டு அதற்கு வாசகர்களின் பல்வேறு பதில்களைப் பெற்று வெளியிட்டுள்ளார் வை.மு.கோ. இவை அனைத்தும் ஐம்பதுகளில் ஜகன்மோகினியில் இடம்பெற்றுள்ளவைகளாகும்.

இவற்றை நோக்கும்போது, முப்பதுகளின் இறுதியில் தொடங்கிய ஜகன்மோகினியின் வளர்ச்சிப் பாதை, நாற்பதுகளில் விரிந்து பரந்து, ஐம்பதுகளில் உச்சத்தை அடைந்ததை அறிய முடிகிறது. வை.மு.கோ. அம்மையாரின் இடைவிடாத முயற்சியால் மோகினி பத்திரிகை பன்னோக்குப் பார்வையுடன் தேசிய/சமூக நலனை உள்ளடக்கியதாக வளர்ச்சி பெற்றுள்ளதையும் அறிந்து கொள்ள இயலுகிறது.

### வை.மு.கோ.வின் இதழியல் உத்திகள்

### வெளியீட்டு நுணுக்கங்களும் கொள்கைகளும்

வை.மு.கோ. பத்திரிகை நுணுக்கமும் வியாபாரத் தந்திரமும் தெரிந்த சிறந்த பத்திரிகையாளர்.

> 'பத்திரிகையாசிரியர் பொறுப்பே ஒரு தினுசு. பல பேர்களுடைய விஷயங்களை ஒன்று திரட்டி உருவாக்கி அழகு படுத்தி வாசகர்களின் விருப்பத்திற்கும் அன்பிற்கும் பாத்திரமாகும் முறையில் வெளியிட்டு மகிழ்விக்கவேண்டும். உலகம் எந்தெந்த சமயம் எது எதை வேண்டுகிறதோ, எப்படியிருந்தால் பொது ஜனங்களுடைய ப்ரியத்திற்குப் பத்திரிகை பாத்திரமாகுமோ, அதையறிந்து காலத்திற்கு ஏற்றபடி பத்திரிகையின் சகல பகுதிகளையும் நடத்த வேண்டும்'.

என்ற கூற்று மேற்சுட்டிய கருத்தை உறுதி செய்கிறது.

வை.மு.கோ. பத்திரிகையைக் கையாளும் விதம் பற்றியும் தீர்க்கமாக அறிந்திருந்தார். பத்திரிகையைப் புத்தி சாதுர்யத்துடன் வெகு ஜாக்கிரதையாகக் கையாள வேண்டும் என்ற அவரது எண் ணத்தை, 'பிறரது புகழுக்குரிய விஷயங்களைப் பட்டவர்த்தனமாகவே பெயர், ஊர் குறித்து உதாரணம் காட்டி எழுதலாம். ஆனால், அதே போல் பிறருடைய ஊழலைப் பட்டவர்த்தனமாக காட்டக் கூடாது... அம்மாதிரி விஷயங்களின் முக்கிய ஸாரத்தை மட்டும் எடுத்துக் கொண்டு அதை ஒரு கதை மூலம் பாத்திரங்களை அமைத்து எழுதி 'ஊழலைக் களைவது உத்தமம்' என்ற வரிகள் அடையாளம் காட்டு கின்றன (28.2.47இல் சென்னை வானொலிக்கு வை.மு.கோ. அளித்த பேட்டியின்போது கூறியது). அனுபவம் அவரை ஒரு சிறந்த பத்திரி கையாளராகப் பக்குவப்படுத்தியுள்ளதையும் இதன்மூலம் அறிந்து கொள்ள முடிகிறது. பத்திரிகை தர்மம், நியதி, இவற்றைத் திட்ட வட்டமாகக் கடைப்பிடித்து, எந்த அதர்மத்திற்கும் செவிசாய்க்காமல் முப்பத்தைந்து ஆண்டுகள் திறம்பட பத்திரிகை நடத்திய பெருமை திருமதி வை.மு.கோ.வைச் சாரும். இதனைத் திருமதி வசுமதி ராமசாமி அம்மையாரின் கூற்றுமூலம் உணர்ந்து கொள்ள முடிகிறது.

> பாரதியார் அன்று கனவில், கற்பனை உலகில் கண்ட புதுமைப் பெண்மணிகளில் ஒருவர் நம் மோகினியின் ஆசிரியை; பழைய பண்பும், புதுமை மணமும், கலாச்சாரமும் அமையப் பெற்ற சிறந்த மாணிக்கம். பத்திரிகைத் தொழில் நடத்துவது என்றால் எவ்வளவு எதிர்ப்பு, எவ்வளவு உழைப்பு, அறிவாற்றல் வேண்டு மென்று எல்லோரும் அறிந்ததே. அதுவும் ஒரு சகோதரியால் நடத்தப்பட்ட அதன் உயர்வு அலாதி. 'வேதம் படைக்கவும், நீதிகள் செய்யவும்வேண்டி வந்தோமென்று கும்மியடி' என்றார் பாரதி. இவையெல்லாம் 'மோகினி' என்ற பெண், நாட்டிற்கு ஓரளவு செய்து இருக்கிறாள் என்பது நிச்சயம்

என்று வை.மு.கோ.வின் பத்திரிகை நடத்தும் திறனை மனமாரப் பாராட்டியுள்ளார்.

வை.மு.கோ. ஜகன்மோகினியை 'ஆண், பெண், சிறுவர்க்கான பத்திரிகை' என்றும், 'பண்டித பாமரரஞ்சகமான நிகரற்ற மாதப் பத்திரிகை' என்றும், அதன் அட்டையிலே விளம்பரப்படுத்தியுள்ளார். 'பயனுள்ள பொழுதுபோக்கு, சமூக சீர்திருத்தம் மற்றும் மறுமலர்ச்சி' (Useful Entertainment, Social Service & Reform) என்பது ஜகன்

மோகினியின் முகப்பு மேற்கோள் வாசகமாக (Motto) அமைந்திருந்தது. ஜகன்மோகினி காரியாலயம் தங்களை இதழாளர், வெளியீட்டாளர், புத்தக விற்பனையாளர், அச்சாளர் என்று விளம்பரப்படுத்திக் கொண் டுள்ளது. எண்.26, தேரடித்தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 5 என்ற முகவரியில் ஜகன்மோகினி அலுவலகம் செயல்பட்டுவந்துள்ளது. இப்பத்திரிகை நின்று சுமார் நாற்பது வருடத்திற்குப் பின், இன்றும் கூடத் திருவல்லிக்கேணியில் மோகினி காரியாலயத்தை அறியாதவர் கள் இல்லையென்ற அளவிற்கு இப் பத்திரிகை அலுவலகம் புகழ் நாட்டியுள்ளது.

## விற்பனை

பத்திரிகையின் விற்பனையைப் பெருக்குவதில் வை.மு.கோ. குறிப்பிட்டுச் சொல்லும்படியான முயற்சியை மேற்கொண்டுள்ளார். தொடக்க காலத்தில் தானே முன்னின்று நண்பர்கள், குடும்ப உறுப் பினர்கள் மூலம் சந்தாதாரரைப் பெற்றுள்ளார். அவர்களைப் பற்றித் தம் இதழ்களிலும் குறிப்பிட்டு நன்றி பாராட்டியுள்ளார்.

> கல்கத்தாவில் உத்தியோகமாயிருந்த ஸ்ரீ ஆர். வாஸுதேவன், ஸைகான் என்கிற ஊரில் உள்ள ஸ்ரீ சொ. ராமநாதன், தஞ்சாவூர் ஜில்லாவைச் சேர்ந்த ஸ்ரீ முருகப்பா, மலையாள ப்ரதேசத்தைச் சேர்ந்த ஸ்ரீ கோவிந்தராஜீ இவர்களுடைய உதவியை மறக்க முடியாது. தங்கள் சிநேகிதர்கள், உறவினர்கள் இவர்களுக் கெல்லாம் சொல்லி கமிஷனில்லாத வகையில் சந்தாதாரர்களைச் சேர்த்து உதவினார்கள். சொ. இராமநாதன் பிரஞ்சு, இந்தோ சீனாவில் அநேக சந்தாதாரர்களைச் சேர்த்து அனுப்பி உதவி னார்' ('அன்பர்களின் ஆதரவு', முப்பதாவது வருட ஆண்டுமலர், 1953, பக்.217-220)

என்று கைம்மாறு கருதாது, மோகினியின் வளர்ச்சிக்குப் பாடுபட்ட அன்பர்களை - மோகினியின் ஆண்டுமலரில் நினைவுகூர்ந்துள்ளார்.

விற்பனையைப் பெருக்கும் நோக்கில் ஒவ்வொரு இதழிலும் சந்தா பற்றிய குறிப்புகளை இடம்பெறச் செய்துள்ளார். ஆண்டு மலர், பொங்கல்மலர் என்பன வருடந்தோறும் வெளியிட்டு, அதற்கான விற்பனை விபரங்களையும், விளம்பரங்களையும் முன்கூட்டியே வெளி யிட்டு, அம்மலர்களுக்கான விற்பனையை முன்னதாகவே பதிவு செய் துள்ளார். அதற்காக, முன்பதிவுக் கூப்பன்களை வெளியிட்டுள்ளார்.

1941இல் ஜகன்மோகினியின் விற்பனை பலமடங்கு அதிகரித் திருந்தது. அந்தக் கால கட்டத்தில் அப்பத்திரிகையை அரசாங்கமே விலை கொடுத்து வாங்கி, எல்லையோரத் தமிழ் ராணுவ வீரர்களின் பொழுதுபோக்கிற்காக அனுப்பித் தந்துள்ளது. மேலும், சிறைக்கைதி களின் பொழுதுபோக்கிற்காகவும் மோகினி இதழ்களைத் தமிழகச் சிறைச்சாலைகள் தருவித்திருக்கின்றன. இவ்விதழ் தமிழ்நாட்டில் மட்டுமன்றி வெளிநாடுகளிலும் நல்ல விற்பனையில் இருந்தது. நாற் பதுகளில், கோலாலம்பூரில் 1500 பிரதிகளும், சிங்கப்பூரில் 200 பிரதிகளும், பினாங்கில் 100 பிரதிகளும், ரங்கூன் நகரில் 200 பிரதிகளும், சிலோனில் 1000 பிரதிகளும், ஆப்பிரிக்காவிலும் மொரி ஷீயஸ் தீவிலும் சில நூறு பிரதிகளும் ஏஜெண்டின் மூலமும் சந்தா தாரர்களுக்குத் தபால் மூலமும் அனுப்பப்பட்டுள்ளன. இஃது, அன்றைய பத்திரிகை உலகம் அறியாதது. இதற்காக வை.மு.கோ. எடுத்துக்கொண்ட விற்பனை முயற்சிகள் பாராட்டத்தக்கன.

ஜகன்மோகினியின் காலகட்டத்தில் தோன்றி மறைந்த பத்திரி கைகள் ஏராளம். பொருளாதார நெருக்கடியே இதற்குப் பெருங் காரணம் என்றாலும், விற்பனை உத்திகளைத் திறம்படக் கடைப்பிடிக் காமையும், வாசகர்களை முன்நோக்கியவைகளாக இல்லாமையும் வேறு சில முக்கிய காரணங்களாக அமைகின்றன. ஆனால் ஜகன் மோகினி இதழ் 35 வருடங்கள் தடையின்றித் தொடர்ந்து வெளி வந்துள்ளதைப் பெரும் சாதனையாகக் குறிப்பிட வேண்டும். அத்துடன் குறைந்த வாசகர்கள் இருந்த நாற்பதுகளில் மோகினி நாற்பதாயிரம் பிரதிகள் விற்பனையாகி இருக்கிறது. இதுவும் அக்காலத் தமிழ் இதழியல் வரலாற்றில் ஒரு குறிப்பிடத்தக்க சாதனையாகும்.

மோகினி காலம் தொடங்கி, இன்று வரை வெளிவந்து கொண் டிருக்கும் ஆனந்த விகடனுக்குத் திரு. வாசன் அவர்களின் பண பலமும், கல்கி, தேவன் போன்ற எழுத்துலக ஜாம்பவான்களின் துணையும் ஒருங்கே இருந்தன. ஆனால் அப்படிப்பட்ட பணபலமும் ஆட்பலமும் இன்றி, சாதாரண நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு பெண்மணி, தானே இதழாசிரியராகவும், படைப்பாளியாகவும், வெளியீட்டாள ராகவும், விற்பனையாளராகவும் இருந்து தன் குடும்பமே தனக்குத்

துணை என்று வாழ்ந்து ஒரு பத்திரிகையையும் நடத்தி விற்பனையிலும் சாதனை படைத்துள்ளார் என்றால் அது பாராட்டுக்குரியது அல்லவா?

நாற்பதுகளிலும், ஐம்பதுகளிலும் ஜகன்மோகினி பத்திரிகையையும், வை.மு. கோதைநாயகி அம்மாவையும் அறியாதவர்கள் தமிழ்நாட்டில் இருந்திருக்க முடியாது என்று கூறுமளவிற்கு அவரது புகழ் விரிந்து பரந்துள்ளது.

### பத்திரிகை நடை

ஜகன்மோகினியின் வெற்றிக்கு அதன் எளியநடை மிகத் துணை போனது. வை.மு.கோ.வின் காலகட்டத்தில், படித்தவர்கள் பண்டித நடையைப் பயன்படுத்தினர். ஆனால் அம்மையார் மிகச் சாதாரண நடையைப் பத்திரிகை நடையாகக் கையாண்டார். ஓரளவு எழுதப் படிக்கத் தெரிந்த பாமரர்களுக்கு அந்நடை படிக்கும் ஆர்வத்தை ஊட்டியது. பி.ஸ்ரீ. சோமசுந்தர பாரதியார், வரகவி சுப்பிரமண்ய பாரதியார் போன்றோர் கூட மோகினியில் எழுதும்போது சாதாரண நடையையே கையாண்டுள்ளனர். ஆனால் அண்ணங்காச்சாரியா, கார்ப்பங்காடு வெங்கடாச்சாரியா போன்றவர்கள் எழுதிய கட்டுரைகளில் வடமொழிச் சுலோகங்களோடு கூடிய சமய இலக்கிய நடையைக் காணமுடிகிறது.

### விளம்பரம்

விளம்பரங்களைப் பொறுத்தவரை வை.மு.கோ. தனக்கெனத் தனிக்கொள்கையை வைத்துக்கொண்டிருந்தார். முப்பதுகளில், அவர் திரைப்படத்துறையில் பங்குகொண்டபோது முழுப்பக்கத் திரைப்பட விளம்பரங்கள் மோகினியில் இடம் பெற்றுள்ளன. முன் அட்டையின் பின்புறம், முதற்பக்கம், பின் அட்டையின் இருபக்கங்களிலும் இவ் விளம்பரங்கள் இடம் பெற்றுள்ளன. இவை தவிர, அமிர்தாஞ்சன் விளம்பரம், நரசிம்ம லேகியம், சிட்டுக்குருவி லேகியம் பற்றிய விளம் பரங்களும் காணப்படுகின்றன. 1932ஆம் ஆண்டு வெளிவந்த இன்சூரன்ஸ் விளம்பரம் ஒன்று, இனி ஸ்த்ரீகளும் இன்சூர் செய்யலாம் என்று அறிவித்துள்ளதைக் காணமுடிகிறது. இவை தவிர, சங்கு நூல்கள், பாரதி நூல்கள், வை.மு.கோ.வின் நூல்கள் போன்ற இவைகள் நூற்பட்டியலோடும் விலைகளோடும் விளம்பரப்படுத்தப்

பட்டுள்ளன. மற்றும் அக்காலத்தில் வெளியாகியுள்ள பிற பத்திரிகை கள் குறித்த விளம்பரங்களும் வெளியாகியுள்ளன.

நாற்பதுகள் தொடங்கித் தேசிய சேமிப்புப் பத்திர விளம்பரங் களும், ஏ.என்.எஸ். அக்ஸிலியரி நர்சிங் சர்வீஸ் பற்றி இருபக்க விளம்பரங்களும் இடம் பெற்றுள்ளன. முப்பதுகளின் தொடக்கத்தில் விளம்பரக் கட்டணங்கள் பற்றி அறிவிப்புகள் வெளியாகியுள்ளன. அதன்மூலம், முழுப்பக்க விளம்பரத்திற்கு ரூ.10, அரைப்பக்க விளம் பரத்திற்கு ரூ.5, கால்பக்க விளம்பரத்திற்கு ரூ.3, உள்பக்க அட்டை விளம்பரத்திற்கு ரூ.12 வசூலிக்கப்பட்டுள்ளதை அறிய முடிகிறது. மேலும் 'விசேஷ விளம்பரங்கள்' என்ற தலைப்பின்கீழ் ஒரு விளம்பரமும் வெளியாகியுள்ளது. இதழின் ஒவ்வொரு கதைக்குக்கீழ் ஒரு வரி விளம்பரச் செய்தி போட எட்டணாவும், கதை முடியும் அத்தியாயங்கள் இறுதியில் ஒரு பக்கத்தில் விளம்பரம் போட ரூபாய் 15ம் வசூலிக்கப் பட்டதை அறிய முடிகிறது. நீண்ட கால விளம்பரங்களுக்கும் ஒப்பந்த விளம்பரங்களுக்கும் தனிச் சலுகைகள் காட்டப்பட்டுள்ளன. சினிமா, இன்ஷூரன்ஸ் போன்ற கம்பெனிகளுக்கு விசேஷ சலுகைகளும் முக்கியத்துவமும் கொடுக்கப்பட்டுள்ளன. இவ்விளம்பரக் கட்டண அறிவிப்புகள் 'விளம்பர மேனேஜர்' என்பவர் பெயரில் வெளியாகி யுள்ளது. அதிக விளம்பரங்கள் பத்திரிகையின் தரத்தைக் குறைத்து விடும் என்ற எண்ணமும் திருமதி வை.மு.கோ.விடம் இருந்திருக்கிறது.

'தற்காலத்தில் அநேக பத்திரிகையின் தலைவிதியை நான் பார்க்கிறேன்... கண்டதே காட்சி, கொண்டதே கோலம் என்றும், எந்த விதமான சாக்கடைக் குப்பை போன்ற விளம்பர விஷயங்களையும் மத துவேஷ ப்ரசாரங்களையும் நிரப்பிவரும் கண்றாவியைப் பார்க்க எனக்குப் பயமாயிருக்கிறது' என்று அவர் எழுதியுள்ளது பத்திராதி பதிக்கு கடிதம் 2, ஜகன்மோகினி 30ஆவது வருட ஆண்டுமலர், ப.230). அவர் காலத்தில் பிற பத்திரிகைகளின் விளம்பரப் போக்கை யும், அதிலிருந்து மாறுபட்டுத் தம் பத்திரிகையைத் தரமானதாகக் கொண்டு செல்ல நினைக்கும் எண்ணத்தையும் வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது.

### ஜகன்மோகினியில் எழுதிய பிரபலங்கள்

மோகினியில் பி.ஸ்ரீ. ஆச்சார்யா, சுத்தானந்த பாரதியார், மாஸ்தி வெங்கடேஸ்வர அய்யங்கார் (ஞானபீடப் பரிசு பெற்றவர்), இராஜாஜி,

சோமசுந்தர பாரதியார், டி.கே.சி., ப்ர. ப. அண்ணங்காச்சார்யா, வரகவி. சுப்ரமண்ய பாரதியார், ரா.ஸ்ரீ. தேசிகன் போன்ற இலக்கிய உலக ஜாம்பவான்கள் தொடர்ந்து எழுதி உள்ளனர். இவர்களைத் தவிர ஆர்.எஸ். சுபலஷ்மி அம்மாள், திருமதி. ஜானம்மாள், திருமதி. எஸ். அம்புஜம்மாள், திருமதி. மல்லிகை சுந்தரம் குட்டியா பிள்ளை, திருமதி. வசுமதி இராமசாமி, திருமதி. ரங்கப்ரியை, குகப்ரியை, குமுதினி போன்ற பெண் எழுத்தாளர்களும் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவார்கள். மோகினியின் ஆண்டு மலர்களில் திரு. கே.ஏ. நீலகண்ட சாஸ்திரியார், பண்டிதை கிருஷ்ணவேணி அம்மாள், திரு. வி.கே. சௌரிராஜன், திரு. வி.வி. ராமானுஜன் போன்ற கல்வியாளர்களும், நடாத்தூர் கிருஷ்ணமாச்சார்யார், நாமக்கல் ராமலிங்கம் பிள்ளை, டாக்டர் வி.என். நடராஜன், இனியன் போன்ற இலக்கிய கர்த்தாக் களும், கொனஷ்டை பா. சம்மந்தமுதலியார், வி.ஆர்.எம். செட்டியார், ஏ.கே. செட்டியார், ஜே.ஆர். ரெங்கராஜு போன்ற பிற புகழ்பெற்ற அக்கால எழுத்தாளர்களும் எழுதியுள்ளனர். இப்படி மிகுந்த முயற்சி யுடன் உருவாகும் மலரை அக்காலப் பெரியோர் பலவாறு வாழ்த்தி யுள்ளதை வை.மு.கோ. தம் பத்திரிகையில் வெளியிட்டுள்ளார். 'சபாஷ்'; 'பெருமைப்படத் தகுந்தவாறே இருக்கிறது'; 'இஃது வைத்தமாநிதியே'; 'அற்புதமாயிருக்கிறது'; 'அறிஞர்கள் போற்றத் தகுந்ததே'; 'an achievement'; 'par excellence'; 'Brilliant issue'; 'really in raptures over your performance'; 'Like parijataka Flower' என்றெல்லாம் பாராட்டி வந்த கடிதங்களை வெளியிட் டுள்ளார்.

## இலக்கியச் சேவையும் சமூக சேவையும்

ஜகன்மோகினி பத்திரிகை தமிழ்நாட்டின் கலாச்சார அரங்கில் குறிப்பிட்டுச் சொல்லும்படியான அரிய சேவை செய்துள்ளது. எழுத் தறிவு பெறாது 'வீடே உலகம்' 'சமையலே கதி' என்று முடங்கிக் கிடந்த பெண்மணிகளிடையே எழுத்து வாசனை ஊட்டி வெளிவுலக அறிவைக் கொடுத்தது. மோகினியில் வெளியான கதை, கட்டுரைகள் அவர்களுக்கு இலக்கிய அறிமுகத்தையும், உலக அறிவையும் ஊட்டின. கல்கிக்கு முன்னரே தமிழகத்தில் சாதாரண நடுத்தர மக்களிடையே பத்திரிகை படிக்கும் பழக்கத்தைத் தோற்றுவித்து வளர்த்தவர் வை.மு.கோ. அவர்களே ஆவார். ஆனால் இப்படிப்பட்ட ஒரு பெண்மணியின் இதழியல் பணியும் இலக்கியப் பணியும் சமூக வரலாற்றிலும் இலக்கிய வரலாற்றிலும் மறைக்கப்பட்டுள்ளது

வருத்தத்திற்குரியது. ஆணாதிக்கச் சமூகத்தில் தனி ஒரு பெண்ணாக நின்று, பல பெண் எழுத்தாளர்களை உருவாக்கியுள்ள அவரின் இதழியல் பணி இலக்கிய வரலாற்றில் கட்டாயம் இடம்பெற்றே ஆக வேண்டும்.

ஜகன்மோகினி சமூகத் தொண்டிலும் நிகரற்றதாகத் திகழ்ந் திருக்கிறது. தாழ்த்தப்பட்ட மக்களுக்காக நிதி வசூலித்து, அதைக் காந்திஜிக்கு அனுப்பி வைத்துள்ளது. மகாத்மாஜீ சேவா சங்கத்திற் காக நிதி வசூல் செய்து கொடுத்து, அச்சங்கத்தைப் பலவகையிலும் வளர்த்துள்ளது.

## ஜகன்மோகினியின் சமகாலப் பத்திரிகைகள்

மோகினியின் காலகட்டத்தில் வெளியான பத்திரிகைகள் குறித்து அவ்விதழ்களிலேயே விளம்பரங்களும், விமர்சனங்களும் காணப்படு கின்றன. சிந்தாமணி, புதுமைப் பெண், விவேகபோதினி, சுதந்திரச் சங்கு, தமிழ் மகள், சுதேசமித்திரன் வாரமலர், அறிவுக்கதிர், ஆர். சீனிவாசராகவனை ஆசிரியையாகக் கொண்ட 'சித்தன்', குகப்ரியையை ஆசிரியராகக் கொண்ட 'கிரகலட்சுமி', லட்சுமி, ஹனு மான், பக்தன், தேசியம், தியாகி, பாரததேவி, ஸ்ரீராமானுஜ சித்தாந்த வைஜெயந்தி, வர்த்தக ஊழியன், 'ஆடல்பாடல்' என்ற சினிமா வார இதழ் போன் றவைகள் வெளிவந்து நின்றுபோயின. தொடங்கப்பட்ட காலத்திலி ருந்து நின்றுபோகாமல் தொடர்ச்சியாக வெளிவந்த பத்திரிகைகள் ஜகன்மோகினியும், ஆனந்த விகடனும்தான். இதற்குக் காரணம் இப் பத்திரிகைகளை வெகுஜன வாசகர்கள் விரும்பும்படி அமைத்துக் கொண்டும், அதே சமயத்தில் தமிழ்ப் பண்பாடு வழுவாமல் காத்துக் கொண்டும் அமைத்திருந்ததும் ஆகும்.

## ஜகன்மோகினி வெளிவருவதில் ஏற்பட்ட சிக்கல்களும் தீர்வுகளும்

1932ஆம் ஆண்டில் ஆங்கில ஆட்சியாளர்கள் அனுப்பிய 'லோதியன் கமிஷன்' இந்தியாவிற்கு வந்தது. அதை எதிர்த்து நாடெங்கும் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. சென்னையில் சைனா பஜாரில் 'வந்தே மாதரம்' முழக்கத்துடன் கே. பாஷ்யம் அவர்களின் தலைமையில் எதிர்ப்பு ஊர்வலம் புறப்பட்டது. அவ்வூர்வலத்தில் வை.மு.கோ., அம்புஜம்மாள், ஜானம்மாள் போன்றோர் முன்னணியில்

சென்றனர். அக்கூட்டத்தினரை ஆங்கில அரசாங்கம் கைது செய்து வை.மு.கோ. உட்பட்ட பலரை வேலூர்ச் சிறையில் அடைத்தது. சிறையில் எதையும் எழுதலாம். ஆனால் எழுதியவற்றை வெளியே அனுப்ப முடியாது. இக்காலகட்டத்தில் மோகினி பத்திரிகையின் பொறுப்பை அம்மையாரின் கணவர் ஏற்றுக்கொண்டிருந்தார். அவர் முன்பே வை.மு.கோ.வால் எழுதி முடிக்கப்பட்டிருந்த 'சாந்த குமாரி' என்ற நவீனத்தைத் தொடர்ந்து வெளியிட்டார்; அது முடிந்தவுடன் மேலும் இரண்டு மாதங்கள், அவரின் சிறுகதைகளை மட்டும் வெளி யிட்டு வந்தார்; அதற்கு அடுத்த மாதத்தில் வெளியிட ஒன்றும் இல்லாத நிலையில் சிறையிலிருக்கும் மனைவியைப் பார்த்து, இதழுக்கான கதையை எப்படியும் வாங்கிவிடலாம் என்று பெரிதும் முயற்சித்தார்.

சிறையிலிருக்கும்போது அம்மையார் 'உத்தமசீலன்' என்ற நவீனத்தை எழுதியிருந்தார். அதைச் சிறையதிகாரிகள் அறியாது கணவர் கொண்டு வந்த பலகாரப் பையில் மறைத்துவைத்து அனுப் பினார். எனவே மோகினி இதழ் இடையில் சிறிது காலம்கூட நின்று விடாது தொடர்ந்து வெளிவந்தது. சிறையில் கேட்டறிந்த கைதிகளின், வாழ்க்கைப் போராட்டங்களை அடிப்படையாகக் கொண்டு 'சோத னையின் கொடுமை' என்ற நவீனத்தையும் அம்மையார் சிறைக்குள் எழுதி முடித்திருந்தார். இஃது பின்பு வெளியிடப்பட்டு இராஜாஜி போன்றோரின் பெரும் பாராட்டைப் பெற்றது.

1934இல் சுதந்திரப் போராட்டத்தை அடிப்படையாகக் கொண்டு அவர் எழுதிய 'தியாகக் கொடி' என்ற நவீனத்தை ஆங்கில அரசு தடைவிதிக்க முயற்சி செய்தது. ஆனால் அன்னிய ஆட்சியைப் பற்றிய நிந்தனை மொழி அந்நவீனத்தில் இல்லாததால் அரசு சட்டப்படி நடவடிக்கை எடுக்க இயலவில்லை.

இரண்டாவது உலகப்போரின்போது மோகினி இதழ் மீண்டும் இன்னலுக்கு ஆளாகியது. சென்னை நகரில் குண்டு வீசப் போகிறார்கள் என்ற வதந்தி பரவியதால் சென்னைக்கு அருகில் உள்ள சிங்கப் பெரு மாள் கோவில் என்ற கிராமத்திற்கு, மோகினியின் அலுவலகத்தை வை.மு.கோ. மாற்றிக் கொண்டார். சுமார் ஆறு வருடங்கள் அக் கிராமத்திலேயே மோகினி அச்சிடப்பட்டு வெளிவந்தது. போர்க் காலத் தில் காகித விலை உயர்வு மற்றும் பற்றாக்குறை காரணமாகவும்

போக்குவரத்து இடையூறு காரணமாகவும் மோகினியின் வெளிநாட்டு விற்பனை தடைபட்டது. 1947 ஆகஸ்டில் இந்தியா சுதந்திரம் பெற்ற பின்பு சுமார் ஆறு மாதங்கள் கழித்து, 1948 மார்ச்சில் வை.மு.கோ. மோகினி அலுவலகத்தைத் திரும்பவும் சென்னை, திருவல்லிக் கேணிக்கே மாற்றிக்கொண்டார்.

## ஜகன்மோகினியின் வெள்ளிவிழாக் கொண்டாட்டங்கள்

1948இல் விநாயகர் சதுர்த்தி அன்று, ஜகன்மோகினி தொடங்கப்பட்டு 25 ஆண்டுகள் நிறைவுற்றன என்றாலும் 1949ஆம் ஆண்டு, ஜனவரி 23ஆம் தேதி அன்றே மோகினியின் வெள்ளிவிழாக் கொண்டாட்டம் நடைபெற்றது. இக்கொண்டாட்டத்தை மோகினியோடு தொடர்புடைய எழுத்தாளர்களும் பிரமுகர்களும் தாங்களே முன்னின்று கொண்டாட விரும்பினர். இதற்கென ஒரு குழு அமைக்கப்பட்டது. இதில் வி. பாஷ்யம் அய்யங்கார், கே.எஸ். ராமசாமி சாஸ்திரி, இராமசடகோபன், அ. சீனிவாசராகவன், எஸ். அம்புஜம்மாள், ஆர்.எஸ். சுபலஷ்மி அம்மாள், எ. ராஜம்மாள், ரங்கப்ரியை, சோமஸ்கந்தன், எம். சாமுவேல், குகப்ரியை, டி. மங்கா, ஆர்.எஸ். கமலம்மாள், எ. கிருஷ்ணாபாய், எஸ். நாராயண ராவ், வி. ரெங்கநாயகி, விசாலாட்சி நாராயணன், டி.எ. கனகம்மாள், என்.எல். பட்டம்மாள், டி. ஸ்ரீநிவாசன் போன்ற இருபது அங்கத்தினர் இடம் பெற்றனர். இதன் தலைவர் திரு. ரெங்க ராஜு அவர்கள் ஆவார்.

வெள்ளிவிழாக் கொண்டாட்டம் சென்னை, இராஜாஜி அரங்கில் நடைபெற்றது. காலையில் திவான் பகதூர் கே.எஸ். ராமசாமி சாஸ்திரியார் தலைமை ஏற்று விழாவை நடத்தினார். மாலையில் சகோதரி சுபலஷ்மி அம்மாள் தலைமையேற்றார். அவ்விழாவில், வை.மு.கோ.விற்கு விழாக்குழு சார்பில் 'கலாரத்னம்' என்ற பட்டம் அளிக்கப்பட்டது.[3] சுவாமி சுத்தானந்த பாரதியார் 'கலையரசி' என்ற பட்டத்தையும், மகாத்மாஜி சேவா சங்கத்தினர் 'கலாசேவகி' என்ற பட்டத்தையும் கொடுத்துச் சிறப்பித்தனர்.

தமிழ்ப் பத்திரிகை வரலாற்றில் வெள்ளிவிழாக் கண்ட முதல் மாதப் பத்திரிகை ஜகன்மோகினியே ஆகும். வெள்ளிவிழாவின்போது பல எழுத்தாளர்களும், அறிஞர்களும் பங்கு கொண்ட வெள்ளிவிழா மலர் ஒன்றும் திவான்பகதூர் கே.எஸ். இராமசாமி சாஸ்திரியார் எழுதிய 'கோதைநாயகியின் கல்விச் செல்வமும் அருட்செல்வமும்'

(Kothainayaki - Her Mind and Art) என்ற நூலும் வெளியிடப்பட்டன. இந்நூல் வை.மு.கோ. அதுவரை எழுதிய 83 நவீனங்களை வகை தொகைப்படுத்திப் பாராட்டியுள்ளது. இந்நூலில் அந்நவீனங்களின் கதைச் சுருக்கங்களும் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. இது வெள்ளி விழா மலரின் இணைப்பு இதழாக வெளியிடப்பட்டது.

## ஜகன்மோகினியின் செல்வாக்கு

ஜகன்மோகினி இதழ் அக்காலத்தில் மக்களிடையே மிகப் பெரிய வரவேற்பைப் பெற்றிருந்தது. இதைச் சில நிகழ்ச்சிகளின் வழி அறிய இயலுகிறது. பர்மாவில் குடியிருந்த தமிழ்க் குடும்பம் ஒன்று மோகினியைத் தொடர்ந்து படித்து வந்தது; அதில் வரும் கதை, கட்டுரைகளையும் விமர்சித்து வந்தது. அவ்வீட்டுக்கு அருகில் உள்ள மலையாளி ஒருவர் அக்கதைகளின் கருத்தைக் கேட்டறிந்தார். அடுத்தடுத்து வரும் இதழ்களில் அக்கதை எப்படிச் சொல்லப்பட்டுள்ளது என்பதையும் ஆர்வமுடன் கேட்டறிந்தார். நாளடைவில் வை.மு.கோ.வின் எழுத்தினால் முற்றும் கவரப்பட்டு, தானே முயன்று தமிழ் படித்து ஜகன்மோகினியின் தீவிர வாசகரானார். பின்பு, அவர் சென்னை வந்து, அம்மையாரை நேரே சந்தித்து, பாராட்டி மகிழ்ந்து சென்றார். தமிழ் படிக்காதவர்களையும் தமிழ் படிக்கத் தூண்டியது வை.மு.கோ.வின் எழுத்தாகும்.

மற்றும் ஒரு நிகழ்ச்சி, மோகினி இதழ், சமூகத்தில் ஏற்படுத்திய தாக்கத்தை உணர்த்துவதாக அமைந்துள்ளது. செட்டிநாட்டைச் சேர்ந்த தேவகோட்டை சொ.இராமநாதன் செட்டியார், சைகோனில் குடியேறி, ஜகன்மோகினியின் முகவராகச் செயல்பட்டார். நாட்டுக் கோட்டை செட்டிமார்கள் விதவை மணத்தை ஆதரிப்பதில்லை; ஆனால் ஜகன் மோகினியில் வெளியாகும் வை.மு.கோ.வின் நவீனங்களைப் படித்து அவ்வம்மையாரின் புரட்சிக் கருத்துக்களை ஏற்க முன் வந்தனர். அச்சமூகத்தினர் ஒன்று கூடி ஒரு மனதாக முடிவு செய்து, தங்கள் சமூகத்தைச் சேர்ந்த இளம் விதவைகளுக்கு மறுமணம் செய்து வைத்தனர். இப்படி, சமூகத்தின் அடித்தளத்திலேயே மாற்றத்தை உண்டாக்கினவை வை.மு.கோ.வின் எழுத்தும் பத்திரிகையும் ஆகும். இதனால்தான், கவியோகி சுத்தானந்த பாரதியாரும் வை.மு. கோவின் எழுத்துத்திறனைப் பொதுநல வாழ்வை உருவாக்கிய பேனா எனப் புகழ்ந்துரைத்துள்ளார்.

## வரலாற்றுப் பதிவில் ஜகன்மோகினி

ஜகன்மோகினி பத்திரிகை மூலம் 1930 முதல் 1959 வரையிலான சுமார் 30 ஆண்டுகளின் வரலாற்றை அறிந்துகொள்ள இயலுகிறது. இக்காலகட்டம் இந்நூற்றாண்டு இந்திய வரலாற்றில் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். சுதந்திரப் போராட்டத்தைப் பற்றியும், சுதந்திர இந்தியாவின் முன்னேற்றச் செயல்பாடுகள் பற்றியும் இப் பத்திரிகையின் மூலம் அறிந்துகொள்ள முடிகிறது.

1937இல் 'இருமொழித் திட்டம்' பற்றிப் பெரும் சர்ச்சை ஏற்பட்டது. ஹிந்தியை இந்தியாவின் பொதுமொழியாக மைய அரசு அறிவித்தபொழுது நாடெங்கும் அதைப் பற்றிய விவாதங்களும் மறுப்புகளும் எழுந்தன. அப்பொழுது பிரதம மந்திரி இது பற்றித் தன் கருத்தைக் கீழ்க்கண்டவாறு தெரிவித்தார்:

> ஹிந்தி கற்றால், தாய்பாஷை அபிவிருத்திக்குத் தீங்காக இருக்குமென்று வாதிக்கப்படுகிறது. இதைப் போல அறியாத்தனமான வாதம் இந்த விஷயமாக நான் கேட்டதே இல்லை. நாம் எண்ணவும், அதனை வெளியிடவும் ஒரு பாஷை வேண்டுமென்பதும், பொதுக்காரியமாகவும் வர்த்தக விஷயமாகவும் ஒரு பாஷையைக் கற்கவேண்டுமென்பதும் தனித் தனியான விஷயங்கள். ஞானமும், விஷயங்கள் தெரிந்து கொள்வதும் தாய்பாஷையைத் தவிர வேறு எதன் மூலமும் நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டுமென்று நான் கூறவில்லை. ஆங்கிலம் படியுங்கள் என்றால் அது தாய்பாஷையைவிட நல்லதென்பதற்காகவல்ல. ஆனால் உலகத்தாருடன் வர்த்தகம் செய்ய அது சிறந்த பாஷையாக இருக்கிறது. அதேபோல ஹிந்தி படிக்க வேண்டுமென்றால் இந்தியா முழுதும் பேச அதுதான் சிறந்த பாஷை என்பதினால்தான். சுயநலமற்ற, புத்திசாலிகளான, த்வேஷம் இல்லாத, இத்தேசத்தின் நலனை ஹிருதயத்தில் கொண்டுள்ள பலர் உணர்ந்தது போல ஹிந்தி தான் அகில இந்திய விவகாரங்களுக்குச் சௌகர்யமான பாஷையென்று நானும் உணர்ந்தேன். ஹிந்தியினால் தமிழ் இரண்டாவது ஸ்தானமாக்கப்படும் திட்டத்தையும் நான் பலமாக எதிர்ப்பேன்

என்று கருத்துரைத்துள்ளார். இதன் மூலம் இந்திதான் இந்திய மொழி என்று முதன்முதலில் பிரகடனப்படுத்தப்பட்ட பொழுது அதற்குப் பெரும் எதிர்ப்புக் கிளம்பியதையும், அரசு அதற்குச் செய்த சமாதான முயற்சியையும் அறிந்து கொள்ள இயலுகிறது. 1947 ஆகஸ்டு 15இல்

ஜகன்மோகினி அலுவலகம் இருந்த சிங்கப் பெருமாள் கோவிலில் நடந்த சுதந்திர தினக் கொண்டாட்டத்தை,

> வியாழக்கிழமை இரவு உலகமே தூங்கவில்லை. சரியாக 12 மணிக்குக் கோயிலில் பெரிய மணியடித்ததும் ஊரில் ஒரே குதூகலம், பரபரப்பு. வீடுதோறும் மங்களகரமாக மேளம் வாசிக் கப்பட்டது. விடியற் காலையே பலவிடங்களில் கொடிகள் ஜம் ஜம்மென்று பறந்தன. கோவில் கோபுர வாசலில் கோயிலின் தர்மகர்த்தா ஸ்ரீமான். சின்னஸ்வாமி ஐயங்கார் கொடியேற்றினார். கஸ்தூரிபா சங்கத்தில் ஸ்ரீமதி வை.மு. கோ.வும் மலை உச்சி யில் கிராம முனிசீப்பு அப்துல்கரீம் சாயபுவும், சர்க்கார் சாவடி யில் ஸ்ரீமான் ராஜாராம் நாயுடுவும் ஜகன் மோகினி காரியாலயத் தில் அச்சாபீஸ் தொழிலாளர் தலைவர் ஸ்ரீமான். தக்ஷிணா மூர்த்தியும், ஸ்ரீஅகோபிலா மாதர் சங்கத்தில், அதன் காரிய தரிசி ஸ்ரீமதி. ப. ரங்கநாயகியம்மாள் அவர்களும், கிராமத்துப் பாடசாலையில் அதன் தலைமை உபாத்தியாயர் ஸ்ரீமான் சுப்ரமண்ய முதலியார் அவர்களும் முறையே கொடியேற்று விழாவை வெகு சிறப்பாக நடத்தினார்கள்

என்று அப்படியே தன் பத்திரிகையில் பதிவு செய்துள்ளது.

1948இல் காஷ்மீரத்தையும், ஹைதராபாத்தையும் இந்திய யூனியனில் இணைக்க அரசியல் தலைவர்கள் எடுத்துக்கொண்ட பெரும் முயற்சிகளை மோகினி இதழ்கள் பிரதிபலித்துள்ளன. அதே ஆண்டு காந்தியின் மறைவைப் பற்றி மிக உருக்கமாக மோகினி இதழ் வெளியிட்டுள்ளது. 'காந்தி மறைந்தார் - அவரது காந்தி மறையாது' என்ற தலைப்பின்கீழ் அச்செய்தி வெளிவந்துள்ளது.

நாற்பதுகளில் ஏற்பட்ட பஞ்சம் குறித்து மோகினியின் இதழ்கள் பலவாறாகச் செய்தி வெளியிட்டு உள்ளது. நகைச்சுவைத் துணுக்கு முதல் கட்டுரைகள் வரை அனைத்திலும் பஞ்சத்தின் கடுமை பதிவு செய்யப்பட்டுள்ளது. 1949இல் நேருஜியின் அமெரிக்க விஜயம் பற்றி யும் அப்பொழுது அங்கு அவருக்குக் கிடைத்த மரியாதை பற்றியும் 'எந்த ஒரு தனி நபருக்கோ அல்லது நாட்டின் பிரதிநிதிக்கோ இது வரை காட்டப்படாத மரியாதையும் கௌரவமும் நம் தலைவருக்குக் காட்டப்படுவதைக் கண்டு இந்தியர்களும் கீழ்க்கோடி மக்களும் தலை நிமிர்ந்து நிற்கின்றனர்' என்று செய்தி வெளியிட்டுள்ளது. இப்படி, இந்திய வரலாற்று நிகழ்வுகளை அந்தந்தக் கால மக்களின் உணர் வுடன் அறிந்து கொள்வதற்கு மோகினி பெரும் துணை புரிகிறது.

## ஜகன்மோகினி நின்றுபோனதற்கான காரணங்கள்

1956இல் வை.மு.கோ., தம் ஒரே மகனான ஸ்ரீநிவாசனைத் திடீரென்று இழக்க நேரிட்டது. அந்த அதிர்ச்சியில் அவர் ஜகன் மோகினியை மறந்தார். விடாது எழுதிக் குவித்த அவர் உள்ளம் இயங்க மறுத்தது. ஜகன்மோகினியை இனி நடத்த இயலாது என்ற மனநிலை அவருக்கு ஏற்பட்டது. அப்பொழுது இராஜாஜி 'ஜகன் மோகினி'யை நிறுத்தக்கூடாது என்று அறிவுறுத்தினார். அவரது வற்புறுத்தலினால் மேலும் இரு ஆண்டுகள் பத்திரிகையை நடத்திய திருமதி வை.மு.கோ. 1959 ஆண்டு அக்டோபர் இதழை வெளிக் கொண்டு வந்தபின் நோயுற்றுப் படுத்த படுக்கையானார். அதுமுதல் பத்திரிகை நின்றுபோனது.

எழுத்துலகிலும் பத்திரிகையுலகிலும் அரிய சாதனை புரிந்த வை.மு.கோ. 1960 பிப்ரவரி 20ஆம் தேதி இவ்வுலக வாழ்வை நீத்தார். அவரது மறைவு தமிழுலகுக்குப் பெரும் இழப்பாக இருந் தது. ஆனந்த விகடன், கல்கி, சுதேசமித்திரன், இந்து முதலிய இதழ் கள் அவரது மறைவுக்கு வருத்தம் தெரிவித்தும், அவர் எழுத்துப் பணியைப் போற்றியும் தலையங்கங்கள் எழுதின. அகில இந்திய வானொலியும் வருத்தம் தெரிவித்தது.

## முடிவுரை

பத்திரிகை பற்றிய நெளிவு சுளிவுகளை அறியாது, அத்தொழி லில் புகுந்த வை.மு.கோ., தம் கேள்வி ஞானத்தாலும், இடைவிடாத முயற்சியாலும், ஆர்வத்தாலும் குறுகிய காலத்தில் பத்திரிகை உலகம் பற்றி நன்கு அறிந்து கொண்டு, தம் பத்திரிகையின் இலக்கையும் சரியாகத் தீர்மானித்துக் கொண்டு, செம்மையாக 'ஜகன் மோகினி'யை நடத்திச் சென்றுள்ளார். 'காலத்திற்கேற்ற விஷயங்களுடன் இந்து தருமத்தின் உள்ளத்துடிப்பை உயிர்நாடியாகக் கொண்டது ஜகன்மோகினி' என்று யோகி சுத்தானந்த பாரதியார் அவ்விதழின் போக்கை எடுத் துரைத்துள்ளார். பத்திரிகையின் மூலம் தேசிய, பொதுநலச் சேவை யில் ஈடுபட்ட வை.மு.கோ. பின் வந்த பத்திரிகையாளர்க்கு ஒரு முன்னோடியாய் இருந்திருக்கிறார். நாற்பதுகளிலும் ஐம்பதுகளிலும் தமிழ்நாட்டில் பெண் உரிமையும், பெண் விடுதலைக் குரலும் எந்த அளவு ஒலித்துள்ளன என்பதை அறிய ஜகன்மோகினி இதழ்கள் மிகப் பெரிய பதிவாக நமக்குக் கிடைத்துள்ளன.

## குறிப்புகள்

1. வைத்தமாநிதி என்பது வைணவ மரபுகளுள் ஒன்றாகும். முடும்பை என்பது நெல்லை மாவட்டம் திருக்குருகூர்க்கு அருகிலுள்ள ஓர் ஊராகும். இவ்வூருக்குத் திருக்கோளூர் என்ற பெயரும் உண்டு. வைணவர்கள் சிறப்பாக வழிபடும் ஒன்பது திருப்பதிகளுள் ஒன்று என்ற பெருமைக்குரியது.

2. திருமதி வை. மு. பத்மினி சீனிவாசனை 15.5.94 அன்று பேட்டி கண்டபோது அவர்கள் கூறிய செய்தி.

3. மோகினியின் உருவத்தைத் தங்கத்தில் செதுக்கி அதன்மேல் கலா ரத்னம் என்ற வாசகத்தைப் பதித்து, அதைச் சிவப்பு ரத்தினங்கள் பதித்த தங்க ஆரத்தில் இணைத்துக் கொடுத்தனர்.

# சிந்தாமணி

அரங்க. மல்லிகா

## முன்னுரை

சமூகத்தின் இணைவை (Coherence) ஆய்வு செய்வதற்கும், சமூக ஒருமைப்பாட்டின் அடிப்படையை நிறுவுவதற்கும், பண்பாட்டு மாற்றத்தைப் புரிந்துகொள்வதற்கும் பத்திரிகைகள் ஓர் இணைப்புப் பாலமாகின்றன. தனிமனித நடத்தைகள், பண்பாடுகள் சமூக நிறுவனங்களால் கட்டுப்படுத்தப்படுகின்றன என்பதை அறிந்து கொள்ளவும் பத்திரிகைகள் துணை செய்கின்றன. இதன் பரிணாமத்தைச் 'சிந்தாமணி' இதழ்களில் காணலாம். இந்நிலையில் இக்கட்டுரையில்,

1. ஆசிரியர் பின்புலம்
2. இதழ்களின் அமைப்பு
3. நோக்கும் போக்கும்
4. பெண்கள் சமூகத்தில் பெறும் இடம்
5. இதழ்களின் கட்டமைப்பும் சில உட்கூறுகளும்
6. பெண்ணியம் ஆகியன கட்டுடைத்தல் (Deconstruction)

கோட்பாட்டின்வழி ஆய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

## ஆசிரியர் பின்புலம்

ஆசிரியர் வி. பாலம்மாள் அம்மையாரைத் தமிழுலகம் நன்கறியும். தேசியத் தொண்டு புரிவதையே தமது ஜீவித நோக்கமாகக் கொண்டொழுகும் அம்மையார் தமிழக மாதரின் முன்னேற்றத்தைக் குறிக்கோளாக்கி, சிந்தாமணியை வெளியிடத்தொடங்கியிருப்பது போற்றத்தக்கது. இச்சிந்தாமணி பெயருக்கேற்பக்

> குடும்பவாழ்க்கையில் ஈடுபட்டோருக்கெல்லாம் அவசியமான பல நல்விஷயங்களை உடைத்தாயிருக்கிறது. இதில் திருமதி சரோஜினி தேவியின் உருவப்படம் அமைந்திருப்பது சால் புடையதே[1]

என்றும்,

> இவர் பிரபல குடும்பத்தில் உதித்த பெண்பாலராயினும் நமது தேசத்திலும் இந்தியப் பெண்களின் முன்னேற்றத்திலும் அதிக அபிமானங்கொண்டு அடிக்கடி இராஜீய இயக்கங்களில் கலந்து தன்னால் இயன்ற தொண்டைப் புரிந்துகொண்டு வருகின்றார்கள். மில் தொழிலாளிக்காகப் பணம் வசூல் செய்தவர்.[2]

என்றும் இவரைப்பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளன.

## இதழின் அமைப்பு

சிந்தாமணியில்,

1. பெண்கல்வி, ஓட்டுரிமை, அரசியலில் பங்கேற்பு
2. பெண்கள் சுகாதாரம்
3. கற்பு - சனாதனச் சிந்தனைகள்
4. பெற்றோர் கடமை
5. திருக்குறளில் அறமும் அதன் மீதான புனைவும்
6. பெண் புனிதம் பேசும் கதைகள், புராணச் செய்திகள்
7. கவிதை
8. தமிழுக்குச் சிறப்பு செய்தல்
9. காலனித்துவச் சிந்தனைகள்
10. நாடுகளின் அறிமுகம்
11. போதகர்கள் சிந்தனை

முதலியன சிறப்புக் கவனம் பெறுகின்றன. இதுகுறித்து,

> சிந்தாமணியில் பெண்கல்வி, மாணவர் முன்னேற்றம், தொழிலாளர் நிலைமை, நீதிமொழிகள், சுகாதாரம், நவீனக் கதைகள், புராண ஆராய்ச்சி முதலிய பலவிஷயங்களும் வெளிவருமாகையால் தமிழ்நாட்டிலுள்ள சகோதர சகோதரிகள் அனைவரும் என் முயற் சியை ஆதரித்து என்னைக் கௌரவிக்க வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்[3]

என ஆசிரியர் கூறியுள்ளதை நினைவு கூரலாம்.

## நோக்கும் போக்கும்

சிந்தாமணி 1924ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் தொடங்கப் பட்டுள்ளது. இப்பத்திரிகையின் அட்டையில் உயர்தரப்பெண்கள் மாத இதழ் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. பெண்களை உயர்வு செய் வது தொடர்பான கருத்துக்கள் பெரிதும் வலியுறுத்தப்பட்டுள்ளன.

> தேச முன்னேற்றத்திற்கும், தேசமகா ஜனங்களின் கல்வி வளர்ச் சிக்கும் தேசபாஷையிலுள்ள பத்திரிகைகள் சிறந்த சாதனங்கள் என்பது ஆன்றோர்களின் அபிப்ராயம். ஜனசமூகத்தில் ஒவ்வொரு வகுப்பும் தனது முன்னேற்றத்தைக் குறித்துப்படுவது பலிக்க வேண்டுமாயின் பிற வகுப்புகளின் க்ஷேம லாபங்களையும் கவனித்து நடத்தல் அவசியமாகும். இங்ஙனமாக ஒருவருடைய அபிவிருத்தியை மற்றவர் கவனித்துக் கொள்வதால் நாம் நம்மைப் பற்றிக் கவலைப்படவேண்டியதில்லை என்று ஒருவரும் எண்ணிவிடக்கூடாது. இக்காரணம் பற்றி நம் தமிழ்நாட்டுச் சகோதரிகளின் அபிவிருத்தியை முக்கிய காரணமாகவும் மற்ற விஷயங்களைப் பொதுவாகவும் உத்தேசித்து இத்தமிழ் மாதப் பத்திரிகையை வெளியிட முன்வந்திருக்கிறேன். அவசியமான சகலவிஷயங்களும் இதிலடங்கியிருக்கும் என்ற காரணம் பற்றி இதற்குச் சிந்தாமணி என்று பெயரிடலாயிற்று[4]

என்ற ஆசிரியர் முன்னுரையை சிந்தாமணியின் நோக்கமாகக் கருதலாம்.

> கட்டாய இலவசக் கல்வி, பெண்களுக்கு ஓட்டு சுதந்திரம் இவைகள் ஏற்பட்டுவரும் இச்சமயத்தில் பத்திரிகைகள் எவ்வ ளவுக்கெவ்வளவு அதிகரிக்கின்றனவோ அவ்வளவுக்கவ்வளவு உபயோகம் அதிகம் என்பதை மறுப்பாரில்லை. சிந்தாமணி என்ற பெயருடன் மாதம் ஒருமுறை வெளிவரும் இப்பத்திரிகை யில் அரசியல், பெண்மக்களுக்குரிய படிப்பு, வீட்டுக் கைத் தொழில், பண்டைக்காலத்துப் பெண்கள் வாழ்க்கை, வீரத்தாய் மார்களின் சரித்திரம், ஜன சமூகத்தேவைகள், ஸ்தல சுய ஆட்சி யின் அமைப்பு, ஜனப்பிரதிநிதிகளின் பொறுப்பு, சங்கங்களின் அவசியம், தாழ்ந்த வகுப்பாரின் முன்னேற்றம், பெரியோர்களின் பிரசங்கங்கள், தேசாபிமானிகளின் தத்துவங்கள், பரோபகாரம், ஒற்றுமை, பெண் மக்களின் சிறப்பு, குழந்தை வளர்த்தல், சுகா தார வழிகள், சம்பாஷணைகள், சிக்கனம், இந்து குடும்ப வாழ்க்கையைச் சிறப்பிக்கும் வழியில் எழுதப்படும் நாவல் என்ற நவீனங்கள், உத்தம தேசாபிமானிகளின் சரித்திரங்கள், அந்நிய மொழியிலிலுள்ள உபயோக விஷயங்களின் மொழி

பெயர்ப்புகள், ஆசாரசீர்திருத்தம், சமாச்சாரக் கொத்து, புத்தகக் குறிப்பு, இந்தியத் தொழில்களின் சிறப்பு இவைபோன்ற பல விஷயங்கள் சமயோசிதமாக எழுதப்படும்.[5]

மேற்குறிப்பிட்ட செய்திகளை முதன்மையாகக் கொண்டு சிந்தாமணி இதழ்கள் அமைப்பியல் ஆய்வின் அடிப்படையிலும், பெண்ணிய ஆய்வின் அடிப்படையிலும் ஆய்வு செய்யப்படுகின்றன. அமைப்பியல் ஆய்வு என்பது, ஆய்வின் அடிப்படை அலகுகளாகத் தனிமனிதர்கள் அமைவர். 'அவர்களின் செயல்களும் நம்பிக்கைகளும் உருவாக்கப் பட வேண்டிய சமூக அமைப்பிற்கு அடிப்படையாக அமைகின்றன. "அமைப்பு என்ற பதத்தை நாம் பயன்படுத்தும்போது பகுதிகள் அல்லது உறுப்புக்களின் ஏதோ ஒரு வகையான ஒழுங்குபடுத்தும் முறையைக் குறிப்பிடுகிறோம்"[6] எனப் பொருள் கொள்ளப்படுகின்றது.

## ஆய்வு நோக்கங்கள்

இவ்வாய்வு கீழ்க்காணும் இரு பிரிவுகளில் உள்ளடக்கப்படுகின்றது. முதல் பிரிவில் பெண்களுக்கென வரையறுக்கப்பட்டுள்ள ஒழுகலாறுகள் இந்தப் பத்திரிகையில் எப்படிக் கையாளப்பட்டுள்ளன என்றும், பெண்களின் பணிகள், கடமைகள் எந்த அளவில் சுட்டிக்காட்டுப்பட்டுள்ளன என்றும் கண்டறிதல்.

வெளியாகியுள்ள செய்திகளின் அர்த்தப் பரிணாமங்களில் பெண்மைக் கருத்தாக்கப் புனைவும் (The Feminine Mystique)/ புனைவுகளிலிருந்து மீள்வது தொடர்பான சிந்தனைகளையும் அறிதல்.

## ஆய்வின் சிறப்பு

வரையறுக்கப்பட்ட ஒழுகலாறுகள், அறங்களிலிருந்து பெண் மீட்சி பெற ஆசிரியர் வி. பாலம்மாளின் சிந்தனை வெளிப்பாடு சமூகத்திற்கு அதிகம் தேவை என்பதை நிறுவுதல்.

## சிந்தாமணி இதழ்களில் பெண்மைப் புனைவு

**அச்சமும் நாணும் மடனும் முந்துறுத்தல்**
**நிச்சமும் பெண்பாற்குரிய என்ப**

என்பதும், செறிவும் நிறைவும் செம்மையும் செப்பும் அறிவும் அருமையும் பெண்பாலன என்பதும் தொல்காப்பியம் கூறும் பெண்மைக் குணங்கள் ஆகும்.

கற்பும் காமமும் நற்பால் ஒழுக்கமும்
மெல்லியற் பொறையும் நிறையும் வல்லிதின்
விருந்து புறந்தருதலும் சுற்றம் ஓம்பலும்
பிறவும் அன்ன கிழவோள் மாண்புகள்

என்னும் தொல்காப்பியக் கடமைகள்

நல்விருந்தோம்பலின் நட்டாளாம் வைகலும்
இல்புறஞ் செய்தலின் ஈன்றதாய் – தொல்குடியின்
மக்கள் பெறலின் மனைக்கிழத்தி – இம்மூன்றும்
கற்புடையாள் பூண்ட கடன்

என்று கூறப்பட்டுள்ள பொறுப்புகள் ஆகியன யாவும் தொல்காப்பியர் காலம் முதல் தொடர்கின்றன. இந்தக் கட்டமைப்பிற்குள் பெண் இயக்கம் ஒரு மரபாகவும் விருப்பமாகவும் ஏற்றுக் கொள்ளப்பட்டு வருகின்றது. இக்கருத்துக்களைச் சிந்தாமணி இதழ்கள் தெளிவாக வைக்கின்றன.

ஒரு தனிமனிதருடைய கலாச்சாரம் என்பது அவருடைய குணம், புத்திக்கூர்மை, படைப்பாற்றல் திறன் ஆகியவற்றை அடியொட்டி யது; இந்தவகையில் சமூகக் கலாச்சாரம் என்பது மரபு, குணம், பழக்கவழக்கம், நவீனச் சிந்தனைகளின் தாக்கம் ஆகிய இவற்றின் கலவையாக அமையும். இவற்றையெல்லாம் மனத்தில் கொண்டு தான் பெண் வாழவேண்டும்.

இந்தப் பின்னணியில்தான் சிந்தாமணியின் கட்டமைப்பும் எண் ணிப் பார்க்கப்படுகின்றது. உதாரணமாக, 'சாரதாவின் நிரூபம்' என்ற கதையில் சாரதா முற்போக்குச் சிந்தனை உள்ளவள். குறிப்பாக உடை அலங்காரங்களில் மேலை நாட்டைப் பின்பற்ற விழைபவள். ஆனால் இந்தியக் கலாச்சாரத் தாக்கத்திலிருந்து விடுபடாதவள்.

'புருசோத்தமன் அல்லது புன்சிரிப்பு' என்ற கதையில், புருசோத் தமன் தவறுணர்ந்த பிறகு,

உன்னைப் போன்ற சபல புத்தியுள்ள ஆடவர்களுக்காக என்னைப் போன்ற பெண்மக்கள் எங்கு ஓடி ஒளிவது? ஏறிட்டுப் பார்ப்பவனை எரித்து வீழ்த்தக்கூடிய சக்தி தற்காலப் பெண் மக்களிடத்தில் இல்லாமலிருக்கின்றதென்றால் அக்காலத்திலும் துரியோதனன்

> சபையில் மானபங்கம் செய்யப்பட்ட பாஞ்சாலிக்கு வந்து உதவிய கடவுள் இன்னும் இருந்துகொண்டு தானிருக்கிறார் [7]

என்று குறிப்பிடப்பட்டுள்ளது. பிறன்மனை நோக்காப் பேராண்மை வேண்டும் என்ற செய்தியை எடுத்துக் கூறுவது இக்கதை. பெண்களுக்குக் கல்வியும், சுதந்திரமும் இருந்தாலும், ஒரு பெண்ணை வீழ்த்த நினைக்கும் ஆண்மகனை நேரிடையாக எதிர்க்கத் துணிவை அவர்கள் வரவழைத்துக் கொள்வதில்லை. மாறாகக் கடவுள் வந்து காப்பாற்றுவார் என்ற கற்பிதம் பெண்கள் மனதில் ஆழமாகப் பதிவாகி யிருக்கிறது. அதன் வெளிப்பாடுதான் இக்கதை.

### தாய்மைப் பண்பு

"பெண்மை பற்றிய கருத்தாக்கப் புனைவு (The Feminine Mtystique) பெண்ணின் உயர்ந்த இலக்கும், ஒரே இலட்சியமும் பெண்மைக் குணத்தினால் பெறும் பரிபூரணத்துவமே"[8] என்று போதித்தன.

'பத்மநாபன் அல்லது பணச்செருக்கு' என்ற கதையில் பத்மநாபனின் பேராசையால் சோமசுந்தரம் என்ற மகனைப் பிரிந்து வாழ இயலாமல் உயிர்துறக்கிறாள் நிலா. மகன்மீது அளவுகடந்த அன்பைக் கொண்ட தாயாக நிலா படைக்கப்பட்டிருக்கிறாள்.

### பெற்றோர் கடமை

குழந்தைகளை அறவழியில் வளர்ப்பதில் பெரிதும் அக்கறை கொண்ட பெற்றோர்களைச் சிந்தாமணியின் பல இதழ்களில் காண முடிகின்றது. உதாரணமாகக் குருவை மதித்து நடக்கவேண்டும்; ஏழைகளுக்கு உதவி செய்ய வேண்டும்; ஜீவகாருண்யத்துடன் வாழ வேண்டும்; தீண்டாமை கூடாது; பிறருக்கு உதவிட வேண்டும் என்பன போன்ற செய்திகள் அதிகம் பெற்றோரால் வலியுறுத்தப்பட்டுள்ளன.

'தீண்டாமை அல்லது தீட்சிதர் கோபம்' என்ற புனைகதையில் அவருடைய புதல்வன் வழக்கறிஞர். தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த ஒருவன் வழக்குத் தொடர்பாகத் தீட்சிதர் மகனைக் காண வந்தபோது, பணத்தைப் பெற்றுக் கொண்டு தெருச் சாக்கடை மேல் உட்காரவைத்து விட்டதைத் தீட்சிதர் கண்டிக்கிறார்.

> ...... அவன் கொண்டுவந்த பணத்தை இருகையிலுமன்றி பெட்டியிலும் கொட்டிக்கொண்டு எல்லாம் கோர்ட்டில் பேசிக்

கொள்ளலாமென்று குமாஸ்தா மூலம் சொல்லி அவனைத் துரத்திவிட்டாயே - தன் கேஸைப்பற்றி அந்தரங்கமாகப் பேச வேண்டியவைகள் அவனுக்கிராதா?"

"தீக்ஷித் ஏது நீங்கள் வரவர இவ்விதம் ஆரம்பிக்கிறீர்கள், தீண்டாதவரை வீட்டிற்குள் அழைத்தால் என்னை ஜாதிப்பிரஷ்டம் செய்யமாட்டார்களா?[9] என்று கேட்கிறான். இதுகேட்ட தீட்சிதர், இவ்வார்த்தையைக் கேட்டதும் இதுவரை சற்று உள்ளடங்கி யிருந்த கோபமானது அதிகரித்துவிட்டது! "மூடப் பயலே, நீ உன் மனுஷ்டானத்தை முழுதும் கைவிட்டுப் படித்ததில் ஒருவரும் உன்னைப் பகிஷ்கரிக்கவில்லை. அயல்நாடு சென்றது பற்றி யும் விலக்கவில்லை................ நித்திய கர்மங்களாகிய சந்தியா வந்தனம் முதலியவைகளை விட்டு விட்டதற்கும் நகைக்கவில்லை. அப்படியிருக்க, தன்வீடு நாடிவந்த மனிதனை உள்ளே அழைத்து உள்ள விஷயங்களை அன்பாய் விசாரிப் பதில் மட்டுமா ஜாதிப் பிரஷ்டம் செய்துவிடப் போகிறார்கள்."[10]

தீண்டாமை கூடாது; எல்லா உயிர்களிடத்தும் அன்பாக நடந்து கொள்ள வேண்டும் என்பதை மிகக்கடுமையாக விமரிசித்திருக் கிறார் ஆசிரியர் வி. பாலம்மாள். சமூகப்பண்பாட்டு விழுமியங்களில் இவை போன்ற கருத்துக்களை மிகத் தீவிரமாக எடுத்து மக்களிடம் விதைத்தவர் பெரியார். பெரியாரின் புரட்சிகரச் சிந்தனைகளில் பெண்ணிற்குக் கல்வி, உரிமை, தீண்டாமை தவிர்த்தல் முதலியன வற்றை ஏற்றுக்கொண்டுள்ளார் பாலம்மாள். பார்ப்பன சனாதனப் பாரம்பரியத்தில் பிறந்து வளர்ந்திருந்தாலும் மேலை நாட்டின் தாக்கத் தாலும் காலனித்துவச் சிந்தனைகளாலும் பாலம்மாளிடம் பெண்கள் பற்றிய உயர்வான சிந்தனை மேலோங்கியிருந்தது. சமூக மாற்றம் என்பது பெண்களை உயர்வு செய்யும்போதுதான் உண்மையாக மலரும் என்பதை உணர்ந்து படைப்புகள் பல படைத்துள்ளார்.

## திருக்குறளில் அறமும் அதன் மீதான புனைவும்

வள்ளுவத்தின் கருத்துருவங்கள் (Ideology) காலங்காலமாகப் பின்பற்றப்பட்டு வருகின்றன. மானுடவர்க்கத்தின் அனைத்துப் பண்பு களையும் நெறிப்படுத்தும் கருத்தாக்கங்களைக் கொண்டது வள்ளு வம். வள்ளுவரின் கருத்தாக்கங்கள் பல்வேறு நிலைகளில் மனித வாழ்க்கையில் பிரதிபலிக்கக் கூடியன என்பது மொழிவழி வெளி

யாகும் சாட்சியங்கள். இந்தச் சாட்சியங்கள் சமூக அறத்தை நினைவு படுத்துகின்றன. இவ்வாறு மொழிக்கூறுகளின் மூலம் சமூக அறத்தை நினைவுபடுத்த விரும்பும் ஆசிரியர் தாய், மனைவி, மகள் என்ற பால் பாத்திர ஒத்தப்படிவம் மூலம் ஆணிய விழுமியங்களைத் தன் சிந்தனை யில் தேக்கியுள்ளார். ஆணிய விழுமியங்களில் பழகியிருப்பதால் அவை புனிதம் என்ற மாயைக்குள் உழலும் பெண்களை வள்ளுவக் கருத்தாக்கத்தினூடே எடுத்துக்காட்டுகின்ற குறிப்பாக 'மனைவி' என்ற பணிப் பகிர்வு (Role) நிலையில் அவள் எப்படி நடந்து கொள்ள வேண்டும்; அவளின் கடமைகள் எவை? என்பன போன்ற செய்திகளை,

> அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றின்
> போஒய்ப் பெறுவ தெவன்[11]

அறநெறியில் இல்வாழ்க்கையை அமைத்துக் கொண்டவர்கள் பெற்றிடும் பயனை, வேறு நெறியில் சென்று பெற்றிட இயலாது என்று கூறுகின்றார் வள்ளுவர். அறத்தால் அமையும் இல்வாழ்க்கையில் அன்பும், பண்பும் நிறையப் பெற்றவளாகப் பெண் விளங்க வேண்டும்; விருந்தோம்பல், சுற்றம் காத்தல் பெண்ணின் கடமைகளாகக் கொள்ள வேண்டும். பிறர் மனம் புரிந்து செயல்பட வேண்டும். உதாரணமாகக் "கொண்டான் குறிப்பறிவாள் பெண்டாட்டி" என்றும், "கொண்கண் பழிகாணார் கண்டவிடத்து" என்றும்,

> மனைத்தக்க மாண்புடைய ளாகித்தற் கொண்டான்
> வளத்தக்காள் வாழ்க்கைத் துணை [12]

என்பதில் இல்லறத்திற்குரிய பண்புகளுடன் பொருள் வளத்துக்குத் தக்கவாறு குடும்பம் நடத்துபவள், கணவனின் வாழ்வுக்குப் பெருந் துணையாவாள் என்றும் கூறப்பட்டுள்ள செய்திகள் சிந்தாமணி இதழ் களில் பெரிதும் பேசப்பட்டுள்ளன.

இதற்கு, [11]தற்கொண்டான் வளத்தக்காள் வாழ்க்கைத் துணை என்றபடி தனது கணவனைப் பிரியமுடன் ஆதரிப்பவளே மனைவியாம் என்பதையும் சகோதரிகள் மனதுட்கொண்டு இல்லறவாழ்க்கையை இனிது நடத்தி இம்மை மறுமை இரண்டிடத்தும் நன்மை அடைவார் களாக" [13]என்று மனைவி நடந்துகொள்ள வேண்டிய அறநெறி குறித்து க. சு. ஆறுமுகப்பிள்ளை அவர்கள் பேசியுள்ளார்.

அன்புடைமையோடு, கணவன் மனைவி ஆகியோரிடையே நல்லுறவு நீடிக்கவேண்டும் என்ற அறம் ஒரு மதிப்பாக (value) இல்லறத்திற்கு வேண்டப்படுகிறது. திருமணவாழ்க்கை குடும்ப வாழ்வின் மையமாக அறிவுறுத்தப்படுகின்றது. கணவன் தவறு செய் தால் அன்பாகத் திருத்தவேண்டும்.

அன்பும் மாதரும் என்ற கட்டுரையில் "அன்பின் நின்றன அறங் கள்" என்னும்,

> பெருந்தடங்கண்டாரை நுதலார்க்கெல்லாம்
> பொருந்து கல்வியும் செல்வமும் பூத்தலால்
> வருந்தி வந்தவர்க் கீதலும்

எனவும், வியந்தோதி மகளிரிடத்தே அன்பு பெருகுவது இயற்கை என்பதையும், அவ்வன்பின் காரியமாக அறங்கள் ஓம்பப்படும்" என்பதையும் வலியுறுத்தியுள்ளார். இவ்வாறு மகளிர் அன்புடன் நடந்துகொண்டு, விருந்தோம்பி இல்லம் காத்துவரும் பொழுதுதான் ஆடவர் வாழ்க்கைச் சிறக்கும் என்றும் கூறியுள்ளார். இதற்கு வலிமை சேர்க்க 'மனைக்கு விளக்கம் மடவார்' என்ற வள்ளுவ அறத்தை நினைவு படுத்துகின்றார். சிற்றினஞ்சேராமை, கள்ளுண்ணாமை, கூடா நட்பு முதலியன பற்றியும் பேசப்பட்டுள்ளன. இதற்கு,

> கருத்துணர்ந்து கற்றறிந்தார் கேண்மை யெஞ்ஞான்றும்
> குருத்தில் கரும்பு தின்றற்றே – குருத்தில்
> எதிர்செலத் தின்றன்ன தகைத்ததோ என்னும்
> மதுரமிலாளர் தொடர்பு

என்ற பழம் பாடல் ஒன்றை மேற்கோளாகத் தந்துள்ளார் ஆசிரியர். இப்படிப்பட்ட செய்திகளை எடுத்துக் கூறுவதோடு நின்றுவிடாமல் பிறன்மனை நோக்காப் பேராண்மை வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது. வள்ளுவச் சிந்தனைகள் வள்ளுவர் வாழ்ந்த காலத்திற்கு மட்டும் தான் பொருத்தமானது என்று கூறினால் அது இயற்கைக்கு முரணான தாகும். ஆனால், வள்ளுவத்தை மரபுக்குள் மட்டும் நின்று வாழ்க்கை மதிப்புகளை (values) மதிப்பீடு (Evaluvate) செய்தால் நவீன வாழ்வின் நடைமுறைகளை மறுதலிக்கக் கூடும். நவீனத்துவச் சிந்தனைகள் சமூகத்தைப் புரட்டிக் கொண்டிருக்கும் நேரத்தில் வள்ளுவரின் 'பெண்' படிமம் பெண்ணை ஒரு கூட்டிற்குள் அடைத்து விடுவதாய் எண்ணத்

தோன்றுகின்றது. இங்கே அ. மார்க்ஸ் சுட்டிக் காட்டுவதை இதற்குச் சான்றாகக் காட்டலாம்.

"தேசியப்பள்ளிகளின் மூலமாக மாணவர்களுக்குப் புனிதக் கலை இலக்கியமரபுகளும், நவீனவாழ்க்கைக்குத் தேவையான மொழி, அறிவியல், தொழில் நுட்பங்களும், வாழ்க்கை மதிப்பீடு களும் திணிக்கப்படுகின்றன. மொத்தத்தில் நவீனயுகத்திற்குரிய வனாகவும், இந்த அமைப்பையும் அரசையும் விசுவாசிப்பவனாகவும் உள்ள 'குடிமகன்' (Citizen) உருவாக்கப்படுகின்றான். தேசியமரபாகக் கையளிக்கப்படுபவற்றைப் போற்றி வணங்குபவனாகவும், மற்ற மரபுகளை இழிவாகக் கருதுபவனாகவும், வணங்கினால் போதும் - முழுமையாகப் பின்பற்றி நடக்க வேண்டியதில்லை. நவீன வாழ்க் கைக்கு அது சாத்தியமுமில்லை. சில குறிப்பிட்ட அம்சங்களில் மட்டும், எவ்வித விலக்குமின்றிப் பழைய மரபுகளைப் பின்பற்றினால் போதும். குறிப்பாகப் பெண்களுக்கு இந்தவகையில் தேசீயப் பெண்மை, தேசீய ஒழுக்கம் முதலியன கட்டமைக்கப்படுகின்றன. பெரும்பாலும் மத்தியதரவர்க்க அடையாளங்களுடன் இவை நிலை நிறுத்தப்படு கின்றன. இதற்குரிய வகையில் பெண்களைப் பயிற்றுவிப்பதில் குடும்பத்தின் பங்கு முக்கியமானது."[14]

குடும்ப நிறுவனம் பெண்ணை இரண்டாம்தர நிலையில் (Second Sex) நிறுத்தியிருப்பது சமூக யதார்த்தம். இதன் அடிக்கட்டு மானம்தான் கற்பு. கற்புக் கருத்தாக்கம் ஆணுக்குப்பேசப்படுவதைக் காட்டிலும் பெண்ணிற்குத் தேவை என வற்புறுத்தப்பட்டுள்ளது. ஆணின் ஒழுங்கீனச் செயல்களைச் சகித்துக்கொள்ளப் பெண்ணிற்குக் கற்பு அவசியம் எனத் தொடர்ந்து ஒழுக்கமதிப்பாகக் கற்பிக்கப்பட்டு வந்துள்ளது. இதற்குச் சான்றாகச் சிந்தாமணியில் பலகட்டுரைகள் காணப்படுகின்றன.

கண்ணகி குறித்த 'கற்புடை மகளிர்' என்ற கட்டுரையில் தமயந்தி, சாவித்திரி, கண்ணகி, வன்னிமரக் காவல்கன்னி, மணற் பாவை, ஆதிமந்தி, மாற்றாள் குழவிக்காகத் தன் கற்புத் தன்மையால் இழந்த மாற்றாள் குழவியைப் பெறுதல் போன்ற பல செய்திகள் எடுத்துக் கூறப்பட்டுள்ளதை எண்ணிப் பார்க்க வேண்டியதாகிறது. 'இந்திய ஸ்த்ரீ ரத்னங்கள்' இக்கட்டுரையில் நளன் - தமயந்தி வரலாறு

எடுத்துக் கூறப்பட்டுள்ளது. என்ற கட்டுரை, தொடர் கட்டுரையாக வந்துள்ளது. பெண்கள் கற்பு நெறியில் நின்று கணவனைத் தெய்வமாக வழிபடுபவர்கள் தெய்வத் திற்குச் சமமாகக் கருதப்படுவார்கள் எனப் போதிக்கப்பட்டுள்ளது. இதற்குச் சான்றாக,

> சந்திரமதி சக்கரவர்த்தியின் மனைவியாயிருந்தும் காளகண்டன் வீட்டில் சாணி தெளித்து நெல்லுக்குத்தி அடிமை வேலை செய் ததும்.... தமயந்தி தனது கஷ்டகாலத்தில் சிற்றன்னையிடமே வேலைக்காரியாக இருந்ததும் எதனால்? எவ்வளவோ பெண்மணி கள் தீயவழியிற் செல்லவிருந்த கணவனைச் சீர்திருத்தியதாக வும், நற்போதனை செய்ததாகவும் சாத்திரங்கள் கூறுகின்றனவே[15]

என்ற பகுதியைச் சான்றாக்கலாம்.

'கற்பு' பற்றிய தொன்மங்கள், ஆணிய விழுமியங்களில் முக்கிய இடம் பெறுகின்றன. கற்பெனப்படுவது சொல் திறம்பாமை என்பதி லிருந்து பெண் நேர்பார்வை பார்க்கப்படாதவரை பல கருத்தாக்கத் திற்குட்படுகின்றது. குழுக்களால், சமூகத்தால் உற்பத்தி செய்யப் பட்ட இந்தக் கற்புக் கருத்தாக்கத்தைப் புராணங்களும், கதைகளும், பலவாறாகக் காத்துவருகின்றன. 'அகலிகை'த் தொன்மங்கூட இந்த அடிப்படையில்தான் எண்ணிப் பார்க்கப்படுகின்றது. 'அகலிகை'க் கதையைத் தொடர் கட்டுரையாகச் சிந்தாமணி பிரசுரித்துள்ளது மேற் கூறிய கருத்திற்குச் சான்றாகின்றது.

## II

> இலக்கியத்திறனாய்வு, படைப்பிலுள்ள வாழ்க்கைத் தகவல் களை, கருத்தியலை ஆய்வு செய்வதல்ல. படைப்பின் உள் கட்டமைப்பைக் கண்டறிந்து தருவது. இலக்கியம் என்பது யதார்த்தமல்ல; அது செய்யப்பட்டது; அது புனைவு என்ற பொதுப்பார்வை இங்கு மிக அவசியம். குறிப்பிட்ட ஒரு புனைவு மற்றொரு புனைவிலிருந்து தகவல் தளத்தில் அல்ல - கட்டமைப்புத் தளத்தில் எவ்வாறு வேறுபடுகின்றது என்ற தேடல் அந்தப் படைப்பின் தனித்தன்மையைத் தரும்.[16]

இந்த வகையில் சிந்தாமணி இதழ்கள் கட்டமைப்பானது பெண் மீதான புனைவுகளாகக் கட்டமைக்கப்பட்டுள்ளன. இக்கட்டமைப் பிற்குள் முதற்பாகத்தில் குறிப்பிட்டுள்ளபடி பெண் புனிதங்கள், வாழ்க்கையின் அறமதிப்புகள் கூறப்பட்டுள்ளன. பெண்கல்வி,

பெண்ணுரிமை, சட்டத்தில் உரிமை, அரசியல் பங்கேற்பு போன்றவை களும் தேவை என முன்வைக்கின்றன. இவற்றையெல்லாம் விரிவாக ஆராயப் பெண்ணிய அணுகுமுறை மேற்கொள்ளப்படுகின்றது.

## பெண்ணிய விளக்கம்

சகலதளங்களிலும் ஆணுக்கு இணையாகப் பெண் பங்கெடுத்துக் கொள்வது பெண்ணியம் எனச் சுருக்கமாகக் கருதலாம். பெண் மனித உயிரி என்ற புரிதலை மையப்படுத்துவது பெண்ணியம். இது மேலை நாடுகளில் சைமொன் தி பவார் (Simone de Be), மேரி வுல்ஸ்டன் கிராஃப்ட் (Mary Woolstone craft), ஜான் ஸ்டூவர்ட் மில் (John Stuart Mill) போன்றவர்களை முன்னோடிகளாகக் கொண்டு வளர்ந்த ஒரு கோட்பாடு.

இந்தியாவில் பெண்ணியத்தின் பரிணாமம் பால்யவிவாக மறுப்பு, விதவாவிவாகம், பெண்கல்வி முதலியனவற்றைப் பேசுவதன் மூலம் தோற்றம் கொண்டது. இதுகூட மேலை நாடுகளின் கலாச்சாரத் தாக்கத்தால் ஏற்பட்டதுதான். "பிரிட்டானிய ஆட்சியின் கீழ் இந்தியா ஒரு குடியேற்ற நாடாக ஆக்கப்பட்டதன் பின்தான் மேற்கத்திய தாக்கங்களின் ஓர் எதிர்வினையாக இந்தியப் பெண்ணியம் தோன்றியது. ஆங்கிலக் கல்விகற்ற இந்திய உயர்குடி மக்களில் ஒரு சிறு வட்டத்தினர் புதிய மேற்கத்திய மதிப்பீடுகள் அறிந்து வரவேற்று அவற்றின் அடிப்படையில் இந்தியப்பண்பாட்டினைச் சீர்திருத்த முன் வந்தார்கள்."[17]

இதன் விளைவாகத்தான் பெண்விடுதலைச் சிந்தனை முகிழ்த்தது. பெண் விடுதலைச் சிந்தனை குறித்து, தாராளவாதப் பெண்ணியம் கீழ்வருமாறு விளக்கம் பெறுகின்றது.

> பெண் விடுதலை என்பது மேற்கத்திய தாக்கமுற்றதாகவும் ஆங்கிலங்கற்றுப் பணிபுரிந்த தாராளவாத எண்ணங்கள் கொண்ட ஆடவர்கள் பார்வையாலும் கூறப்பட்ட பெண்ணியமாகவே இருந்தது.[18]

தாராளவாதப் பெண்ணியக் கோட்பாட்டின்படி, 18ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில், இங்கிலாந்தில் மேரிவுல்ஸ்டன் கிராப்ட் வெளியிட்ட 'பெண்ணுரிமைக்கென' (A Vindication of the rights of woman - 1792) என்ற நூலில் ஆணுக்குள்ள எல்லா உரிமைகளும் பெண்ணுக்

கும் வேண்டும் என்று வலியுறுத்தினர். இவர் காலத்தில் வாழ்ந்த ஜான் ஸ்டூவர்ட் மில் என்பவர் 'பெண்ணடிமைத்தனம்' (A Subjugation of Woman) என்ற நூலில் சட்டத்தின் முன் ஆணும் பெண்ணும் சமம் என்று வாதிட்டுள்ளார். இந்த அடிப்படையில் பெண்ணிற்கு ஓட்டுரிமை, சொத்துரிமை, அரசியல் வாழ்வில் பணி ஏற்பு முதலியனவற்றைப் பெண்களுக்கு வழங்கிட வேண்டும் என்றும் வற்புறுத்துகின்றார்.

மேற்கில் உருவாகிய இந்த எண்ண ஓட்டம் இந்தியாவில் சுதந் திரப் போராட்டத்திலும் கால்கொள்ளலாயிற்று. இதனால் 1920 களில் பெண்டிற்கு சட்டப்படி ஓட்டுரிமை கிடைத்தது. இதன் தாக்கத் தைச் சிந்தாமணி இதழ்களில் காணமுடிகின்றது.

சிந்தாமணி இதழ்களில் வெளிவந்துள்ள செய்திகளின் அடிப் படையில் அவற்றின் கட்டுமானம்:

1. பெண்கல்வியின் தேவை.
2. பெண், கல்விபெற்றால் ஓட்டுரிமை பெறலாம்; அரசியலில் பங்கேற்கலாம்.
3. பெண் சுதந்திரமாக வாழவேண்டும்; அதற்காக ஆணை அவமதிக்கக் கூடாது; ஆண் நலமாக இருக்கப் பெண் கற்புநெறி பிறழாமல் வாழவேண்டும்
4. பெண்கள் சுகாதாரம் காத்தல் அவசியம்
5. குடும்பம் பெண்ணிற்குப் பாதுகாப்பானது

ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது.

மேற்குறிப்பிட்டவற்றை விரிவாக ஆய்வு செய்யுமுன் பெண்களின் மீதான மரபும் கலாச்சாரமும் பற்றிக் காண்பது அவசியமாகின்றது.

## மரபும் கலாச்சாரமும்

பெண் மீதான ஆண் மதிப்பீடுகள், கணவனை மதித்தொழுக வேண்டும்; கணவனுக்கு மனைவி அடங்கி வாழவேண்டும்; அவனுக் குரிய கடமைகளைச் செய்வதில் மனைவி ஒரு சிறிதும் பிறழக் கூடாது என்பனவாம். உதாரணமாக,

> பர்த்தாவுக்கு ஏற்ற பதிவிரதை யுண்டானால்
> எத்தாலும் கூடி வாழலாம் – சற்றே

ஏறுமாறாக விருப்பாளே யாமாகில்
கூறாமற் சன்யாசங்கொள்

என்ற ஔவையின் பாட்டைச் சான்றாகக் காட்டுகிறது சிந்தாமணி.

"பெண்கள் தங்கள் பர்த்தாவுக்கு எப்படியெல்லாம் நடந்து கொண்டால் திருப்தியாகவும் சந்தோஷமாகவும் சுகமாகவும் இருக்குமோ அப்படியே நடந்துகொள்ள முயற்சியுடன் இருக்கவேண்டும்" என்றும். இதற்கு மேலும்,

> சிச்ருசை செய்வதில் வேலைக்காரியைப் போலவும், சமயத்தில் யோசனை சொல்வதில் மந்திரி போலவும், ரூபத்தில் லக்ஷ்மி போலவும், பொறுமையில் பூமிதேவியைப் போலவும் நடந்து, தனக்கும், தன் குலத்திற்கும் தான் பிறந்த வீட்டிற்கும் கீர்த்தியைத் தேடித்தருவதில் கண்ணுங் கருத்துமாயிருந்து நடக்க வேண்டும்

(பதிவ்ருதா பதிப்ராணி) என்றபடி பதிவிரதைகளுக்குத் தன் பதியே ஜீவனாகும்.[19]

பெண்கள் ஆணிய நோக்கிலிருந்து புரிந்துகொண்ட கலாச்சார/பண்பாட்டு விழுமியங்கள் பெண், பெண்ணாகப் பார்க்கக் கூடிய தன்னிலை (Subject) இல்லாத/மறந்த/தேவையில்லாத காலகட்டத்தில் ஆசிரியர் வி. பாலம்மாள் சிந்தாமணி இதழை வெளிக்கொண்டு வந்துள்ளார். இதனால் பெண் உடலியல்/மனவியல்/சமூகவியல் ரீதியிலான ஆணுக்குரிய நேர்கோட்டு அனுபவங்கள் பெண்ணிற்குள்ளும் இருந்து இயக்குவிப்பதால் ஆணை, ஆணாதிக்கச் சிந்தனையை / ஆண்தலைமைக் குடும்பவாழ்வை / குடும்பத் தலைவியாக இருக்க வேண்டிய கற்பிதங்களைத் தொன்மமாகத் தந்திருக்கிறார். இத்தத்துவார்த்தப் பின்னணிதான் சிந்தாமணியில் பெண்கள் மீதான மரபும் கலாச்சாரமும் பற்றிய கட்டுமானமாகும். உதாரணமாக 'தாம்பத்ய முறை அல்லது மனைவி மக்களும் முக்திமார்க்கமும்' என்ற கட்டுரையில்,

> 'பத்தினியானவள் தன் பர்த்தாவைக் கடவுளாகப் பாவித்துத் தன் முழுமனதாலும், ஸங்கல்பத்தாலும் அவனை ஈசுவரனாகப் பாவிக்க வேண்டுமென்று அவள் பரமாத்திகமாகக் கோரும் போது அந்நியச் சிந்தையாய்ச் செலுத்தப்படும் அவளுடைய மனோ

சக்தியானதுதான் ஸங்கல்பித்த மார்க்கஞ்சென்று அவனைக் கடவுளாக்காது போகுமோ?'[1]

என ஸ்ரீமான் வெ.க. ராமனாதன் எழுதிய குறிப்புரையைத் தந்துள்ளார் ஆசிரியர்."[20]

இந்தியக் கலாச்சார மரபுப்படி பெண்கள் மனதை ஒருமுகப் படுத்தி இறைவனை வழிபட்டால் கணவன் கடவுளாகக் கூடும். கணவனை வழிபடுவோர் முக்தி மார்க்கம் அடைய முடியும் என்பதே இதன் அர்த்தமாகக் கொள்ளப்படுகிறது. அதே தலைப்பில் அமைந்த தொடர் கட்டுரையில் மனைவியை நேசிக்காத கணவனும் பாழ்படு வான் எனக் கண்டிக்கிறார்.

'தன் மனையாளிடம் அப்படியொலித்துக் கற்றுக் கொண்ட அன்பு நிலையை அகத்தே உள்ள பரம்பொருள்பால் செலுத்துதலில்லாத மனிதன் நாசமுறுவான். அவ்வாறு புறவஸ்துவினின்று தாவி அகப் பொருளைப் பற்றாத மனிதனின் வாழ்க்கை வியர்த்தம் பாழ் என்று திண்ணமாய் அறிந்துகொள்'.[21]

பெண் எழுத்தாளர்களும் ஆண் எழுத்தாளர்களும் பெண் மைய (Gyno - Centrie) சிந்தனைகளைத் தவிர்த்து, லிங்க மையக் (phallo centrie) கருத்தாடல்களைப் பதிவு செய்திருப்பதால் பெண்களுக்கான, பெண் முன்னேற்றத்திற்கான ஒரு மாதப் பத்திரிகையாகச் சிந்தாமணி வெளிவந்தும் அதன் இலக்கு ஆண்சார்பானதாகவே இருக்கின்றது. எனினும் பெண், கல்வி பெற வேண்டும் என்பதிலும் ஒரு வரை யறைக்குட்பட்ட அளவில் பெண் சுதந்திரம் பெறவேண்டும் என்பதி லும் இப்பத்திரிகை அதிகக் கவனம் செலுத்தியிருப்பது வரவேற்கத் தக்கதாகும்.

### பெண் கல்வி

சிந்தாமணி இதழ்களில் பெண்களுக்குக் கல்வி தேவை; கட்டாயக் கல்வி தேவை என்பதை வலியுறுத்திப் பல கட்டுரைகள் வெளிவந் துள்ளன. பெண்கல்வி, பெண்கல்வியின் அவசியம், தற்காலப் பெண் கல்வியில் சீர்திருத்தம், கட்டாயக் கல்வியும் பெண் மக்களும், பெண் மக்களுக்கு எத்தகைய கல்வி தேவை, பெண்கல்வி அத்தியாவசியம் என ஆகஸ்ட் 1924 முதல் ஆகஸ்ட் 1927 வரை தொடர்ந்து வலியுறுத்தப்பட்டுள்ளன.

பெண்களை ஆணியச் சட்டத்திற்குள்ளும், குடும்ப நிறுவனத் திற்குள்ளும் ஒடுக்கி வந்தமைக்கு அவர்களுக்குக் கல்வி மறுப்பு இருந்து வந்தமையை எண்ணிப் பெண்கல்வி வற்புறுத்தப்படுகின்றது. பெண்கள் கல்வி கற்றால் சமூகத்தில் நல்மதிப்பு பெறுவர்; நல் லொழுக்கம் எய்துவர்; சமூக விழிப்புணர்வு பெறுவர் என்ற சிந்தனை யைப் பரவலாகக் காணமுடிகின்றது.

> பெண்கல்வியால், பெண்கள் புத்திசாலித்தனமாயும், அமைதி யுடனும் எச்சமயத்திலும் கண்ணியத்தைக் கைவிட்டுவிடாத தைரியசாலிகளாகவும் விளங்கக்கூடிய கல்வியை அடைகின் றனர்.[22]

பெண்ணியச் சிந்தனாவாதியும் பிரெஞ்சு பெண்ணிய முன்னோடி யுமான மேரிவுல்ஸ்டன் கிராஃப்ட் (Mary woolstone Craft) 1792இல் பெண்ணுரிமைக்கென (A Vindication of the rights of Women) என்ற நூலில் பெண் கல்வி, வேலைவாய்ப்பு போன்றவற்றில் சமஉரிமை பெறுவதன் மூலம் அவர்களது நிலை உயரும்; சமூகத்தில் பெண் மீதான தாழ்வெண்ணம் மறையும் என்று கூறியுள்ளார்.

"பெண்கள் உலகமே வீடு; அரசியலில் அவர்கள் பங்கேற்ப தில்லை. இயற்கையாகவும் கடவுள் கற்பிதங்களாலும், சட்டங்களா லும் பெண் ஆணைச் சார்ந்தே வாழ்கிறாள். பெண் தன்னை வளர்த்துக் கொள்ள வேண்டும். பகுத்தறிவு ஆற்றலை, சுயமாகத் தீர்மானித் தலை, வளர்த்துக்கொள்ளப் பெண்ணிற்குக் கல்வி தேவை என்பதை அந்நூலில் விரிவாகத் தந்துள்ளார்."[23]

அவருக்குப்பின் தோன்றிய ஜான் ஸ்டுவர்ட் மில் (John Stuart Mill) என்பார் 'பெண்ணடிமைத்தனம்' (Subjugation of Women) என்ற அவரது நூலில் பெண்களுக்காக,

> பெண்ணின் செயல்பாட்டைத் தடுக்கும் தடைகளைச் சட்டப் பூர்வமாக விலக்க வேண்டும். ஆணாயினும் பெண்ணாயினும் பால்வேறுபாடு இன்றித் தத்தம் தனித்திறனுடன் செயலாற்ற வழிவகுக்க வேண்டும். எந்தப் பங்கு தமக்குரியதென்று அவர வரே கண்டறிய வழிவகை செய்ய வேண்டும்[24]

என வரையறுத்துள்ளார்.

மேற்கூறிய இவர்களின் கருத்தாக்கப் பின்னணியைச் சிந்தாமணி இதழ்களில் அதிகம் காணலாம். இதற்கு, 'பெண்களும் தேசபாஷையும்' என்ற கட்டுரையில்,

> பெண்கள் என்றால், வீட்டுவேலைகளைச் செய்து குடும்ப நிர்வாகத்தில் ஈடுபட வேண்டுமென்றே தீர்மானித்துவிட வேண்டுமா? உயர்தரக்கல்வி கற்றுப் பிறகு அவர்கள் இஷ்டம் போல் விவாகத்தை முடித்துக் கொள்வதே பெண்கல்வியைப் பரவச் செய்வதற்கான உபாயமாகும் என்பனவாம்[25]

என்று கூறியிருப்பது மேற்சொன்ன கருத்திற்கு அரணாகிறது.

'கட்டாயக் கல்வியும் பெண்மக்களும்' என்ற கட்டுரையில்,

> குறிப்பிட்ட வயதுவரை நாள்தோறும் கொஞ்சநேரத்தைப் பள்ளிக்கூடத்தில் செலவிடுவதாய், தாய்மொழியில் எழுதவும் படிக்கவும் நல்ல தேர்ச்சி பெறும்படிச் செய்தலே ஆண், பெண் இருவருக்கும் கட்டாயக் கல்வியாகும்

எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆணுக்குப் பெண் சமம் என்று கூறி, பாரதியின் பெண் விடுதலைச் சிந்தனையின் ஆணிவேராக,

> ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்று எண்ணியிருந்தவர் மாய்ந்துவிட்டார்; வீட்டிற்குள்ளே பெண்ணைப் பூட்டி வைப்போம் என்ற விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார்[27]

என்ற வரிகள் பெரிதும் சிந்தாமணிக்கு வலுவூட்டியிருக்கின்றன.

## பெண்களும் ஓட்டுரிமையும்

பெண்கள் எழுத்துரிமை, ஓட்டுரிமை, சொத்துரிமை பெறாது இரண்டாம்தரப் பிரஜைகளாக (Second Sex) வாழ்ந்து வந்தமையை எண்ணி எழுதப்பட்டதாக 'பெண்களும் ஓட்டுரிமையும்' என்ற கட்டுரையை எண்ணலாம். பெண்ணுக்குச் சமூகத்தில் ஆணுக்கு இணையான சுதந்திரம் தரப்படவில்லை என்பதற்குப் பிற்காலத்தில் வழங்கப்பட்ட ஓட்டுரிமை, கல்வி உரிமை முதலியன சான்றாகின்றன.

ஓட்டுரிமை மறுக்கப்பட்டமை உணர்ந்த ஆண்களே பெண்களுக்கு ஓட்டுரிமையை வழங்க வேண்டும் என்று வாதிட்டனர். ஓட்டுரிமை

பெறுவதன் வாயிலாகப் பெண்கள் சுதந்திரம் பெற இயலும்; நாட்டிற்கு நல்ல பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் விழிப்புணர்வு பெறுவர்; இதனால் பெண்களும் அரசியலில் பங்கேற்கக்கூடும் என எடுத்துக் கூறப்பட்டுள்ளன.

## பெண்களும் அரசியலும்

சுதந்திரம் பெற்று ஐம்பது ஆண்டுகள் கடந்த பின்னரும் முப்பத்து மூன்று விழுக்காடு இட ஒதுக்கீடு பெண்களுக்கு அரசியலில் அளிக்கப் படவேண்டும் என்ற குரல் சட்டசபையில் - நாடாளுமன்றத்தில் ஒலித்துக் கொண்டிருக்கின்றது. 1924ஆம் ஆண்டே இச்சிந்தனையை வி. பாலம்மாள், இதழ்கள் மூலம் முன்வைத்திருப்பது அவரின் தொலைநோக்குப் பார்வைக்குச் சான்றாகக் கருதலாம். உதாரணமாக,

> சட்டசபைகளில் ஆடவர்கள் பிரவேசித்த ஆரம்பகாலத்தில் யாரை நம்புவது - யாரைத் தேர்ந்தெடுப்பது - எவரால் நன்மை விளையும் என்று ஜனங்களிடையிலும் பல கட்சிகளிடையிலும் அபிப்ராய பேதமும் சட்டசபைக்குள்ளும் ஆக இவ்விதக் குழப்பங்கள் இருந்தபோதிலும் ஜனங்கள் தற்சமயம் சுயராச்சியம் அடைவதே நமது நோக்கமென்ற உறுதியுடனும், உலக க்ஷேமமே சிறந்தது என்ற ஊக்கத்துடனும் இருக்கும் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக் கப்பட்டிருக்க வில்லையா? அதுபோல ஆரம்பத்தில் எவ்விதம் இருந்தபோதிலும் அதிசீக்கிரத்தில் இந்தியாவின் பூர்வீகத் தத்துவங்களையும் உயர்வையும் நிலைநாட்டக் கூடிய பெண் மக்கள் சட்டசபைகளில் ஸ்தானம் பெற்று இந்தியப் பெண்களின் உயர்வையும் ஸ்தாபித்து அன்புள்ள தாய்மார்களென்றும், அருமை சகோதரிகள் என்னும் புகழ்பெற்று விளங்குவார்கள் என்பதில் சந்தேகமே இல்லை"[28]

எனக் கூறியிருப்பதை நினைவு கூறலாம்.

## பெண்கள் சுதந்திரம்

பெண்ணியத்தில் இந்தியப் பெண்களுக்கான முறைகள்/ ஒழுக லாறுகள் என்பன:

1. பெண் சமூகச் சார்புடையவள்
2. பெண்ணின் தகுதி என்பது ஆண் குழந்தையைப் பெற் றெடுத்துத் தருவது

3. பெண்ணிற்குச் சொத்துரிமை இல்லை; இது சட்டத்தில் சீர்திருத்தம் செய்யப்பட்டுள்ளது
4. பெண் அவளுடைய பெற்றோரைச் சார்ந்திருத்தல் கூடாது
5. ஆணின் அதிகாரத்திற்குப் பெண் பெரிதும் பொறுப்புடையவளாகிறாள்
6. பெண் குடும்பத்தால் கட்டுப்படுத்தப்படுகின்றாள்

மேற்கூறப்பட்டுள்ள கருத்துக்களெல்லாம் சிந்தாமணி இதழ்களில் தெளிவாக எடுத்து வைக்கப்பட்டுள்ளன. இது ஒரு நிலை; மற்றொரு நிலையாக, 'பெண்கள் சுதந்திரம் பெறும் வழி' என்ற கட்டுரையில்,

"இன்றளவும் இயன்றவரைப் பூர்வீக வாழ்க்கையைக் கை விடாதும் ஆடவர்களையும் மிதமீறி நாகரிகத்துறையில் செல்ல விடாதும் காப்பாற்றி வருபவர்களான இந்தியப்பெண்மணிகள், தாங்களே முன்வந்து தங்கள் நியாயமான சுதந்திரத்தையும் இந்திய நாகரிகத்தையும் மீண்டும் புத்துயிர் பெறச் செய்யக் கூடிய காலமிதுவேயாகும்.............. தாங்கள் இன்னார். தங்கள் கடமை இன்னது; தங்களுக்குத் தேவை எவை? தாங்கள் எத்துறையில் சுதந்திரம் பாராட்டல் வேண்டும் என்பதைப் பெண்மக்கள் நன்கறிவதற்குக் கல்வியே ஏற்ற சாதனமாகும்" என விவரிக்கப்பட்டுள்ளது.

இங்கு விவரிக்கப்பட்டுள்ள கருத்துக்களை முன்வைத்துதான் இந்தியப் பெண்ணியத்தையும் புரிந்து கொள்ளவேண்டும். அதாவது, "பெண் சுதந்திரமென்றால் இந்தியப் பெண்களின் நிலைமையை அடியோடு மாற்றிவிடல் என்று எண்ணிவிடுதலும் தற்சமயம் சிறிதும் ஒவ்வாத செய்கை என்பதில் ஆட்சேபம் இல்லை"[30] அதாவது மேலை நாட்டுப் பெண்ணியத்தின் அனைத்துக் கூறுகளையும் எடுத்துக் கொள்ளாமல், இந்தியப் பண்பாட்டிற்கேற்ற கொள்கைகளை மட்டும் ஏற்றுக் கொள்ளவேண்டும். இந்நிலையில், இங்கே எடுத்து வைக்கப்பட்டுள்ள கருத்துக்களை ஆராய்ந்தால் சிந்தாமணி இந்தியப் பெண்ணியச் சிந்தனைகளுக்கு அடித்தளம் அமைத்திருக்கின்றது என்று உணரமுடிகின்றது.

சான்றாக ஆண்கள் எவ்வளவோ அரிய காரியங்களைச் செய்திருக்கிறார்கள் என்பதை ஒப்புக்கொள்ள வேண்டியதே என்றாலும், அவ்வளவு அரிய காரியங்களை ஸ்திரீகளும் செய்திருக்கிறார்கள் என்பது நாம்

மறக்கக் கூடிய விஷயம் அன்று[31] என்ற கருத்து, சகல தளங்களிலும் பெண் ஈடுபட்டு, தன் உரிமையை நிலைநாட்ட முனைந்திருக்கிறாள் எனக் கருத இடமளிக்கிறது. எனவே பெண்கள் ஆண்களுக்கு இணையாக வளர வேண்டியவர்கள். பெண்கள் மனித உயிரி என்ற சிந்தனை இதழ்களின் தொடக்கம் முதல் பரவலாக நினைவுறுத்தப்பட்டு வருகின்றது.

## முடிவுகள்

1. சிந்தாமணி பெண்கள் மீதான சமுதாயப் பண்பாட்டு விழுமியங்களைப் பேசியுள்ளது.
2. பெண்களுக்கான கல்வி, அரசியல் பங்கேற்பு, சொத்துரிமை முதலியனவற்றில் சிறப்புக் கவனம் செலுத்தப் படுகின் றது.
3. பெண்களுக்குக் கற்பு தேவை எனப் பல புராணக் கதைகள் மூலம் எடுத்துக்காட்டப் படுகின்றது.
4. திருக்குறள் அறச் செய்திகள் அறமதிப்பாகப் பல கட்டுரைகள், கதைகள் வழி உணர்த்தப்பட்டுள்ளன.
5. பெற்றோர் கடமைகள் பல எடுத்துக் கூறப்பட்டுள்ளன. குறிப்பாக, ஆண் குழந்தைகளுக்குச் சிறப்பாக மதிப்புகள் (values) பற்றிக் கற்பிக்கப்பட்டுள்ளன.
6. பெண்கள் உரிமையுடன் வாழவேண்டும்; ஆனால், சுதந்திரம் என்ற பெயரில் கற்பு மீறக் கூடாது.
7. கற்புடனும் இருக்கவேண்டும்; ஆணையும் மதித்து வாழ வேண்டும் என்று வற்புறுத்தப்பட்டுள்ளன.
8. இந்தியப் பாரம்பரியப் பண்பாட்டில் பெண்ணிற்குப் பாதுகாப்பானது குடும்பம். குடும்பம் சிறக்க, பெண் கல்வி பெறவேண்டும். சுதந்திரமாகச் சிந்திக்க வேண்டும். செயல்பட வேண்டும் என்ற கருத்துக்களின் அடிப்படையைப் பெண்ணிய அணுகுமுறைகளின்படி ஆராய்ந்தபோது இந்தியப் பெண்ணியம் உருவாகச் சிந்தாமணி களம் அமைத்திருக்கிறது என்று உணர முடிகின்றது.

## குறிப்புகள்

1. நாடார் குலமித்திரன், 25-8-24
2. மேற்குறிப்பிட்ட நூல்
3. வி. பாலம்மாள், சிந்தாமணி, உயர்தரப் பெண்கள் மாத இதழ்; Vol. 1; No. 1, ஆகஸ்ட் 1924, ப.3
4. மேற்குறிப்பிட்ட நூல், ப.3
5. மேற்குறிப்பிட்ட நூல், ப. 4
6. தே. லூர்து, நாட்டார் வழக்காற்றியல், தொகுதி 2; : 3 & 4 லெவிஸ்ட் ராஸ் சிறப்பிதழ், நாட்டார் வழக்காற்றியல் துறை, தூய சவேரியார் கல்லூரி, பாளையங்கோட்டை, திருநெல்வேலி - 2, ப. 76
7. சிந்தாமணி, மே 1925, ப. 234
8. டாக்டர் தேவதத்தா & டாக்டர் தி. கமலி, பெண்மை போலிப் புனைவு, எதிர்விளைவு, தமிழ்த்துறை, அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகம், கொடைக்கானல், நவம்பர் 1995, ப. 28
9. சிந்தாமணி, இதழ் 2, செப்டெம்பர் 1924, ப. 47
10. மேற்குறிப்பிட்ட நூல், ப. 47
11. திருவள்ளுவர், திருக்குறள், எண் 46
12. திருவள்ளுவர், திருக்குறள், எண் 51
13. சிந்தாமணி, நவம்பர் 1924
14. அ. மார்க்ஸ், உடைபடும் புனிதங்கள், விடியல் பதிப்பகம், கோவை, ஜனவரி 1997, ப. 9
15. சிந்தாமணி, இதழ்: 5, டிசம்பர் 1925, ப. 480
16. முனைவர் ந. முத்துமோகன், அமைப்பியல் பின் அமைப்பியல், காவ்யா வெளியீடு, பெங்களூர், 1998, ப. 72
17. தி. பரிமளம், ஜானகிராமன் நாவல்களில் பெண்கள், தமிழ்த்துறை அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகம், ப. 45
18. மேற்குறிப்பிட்ட நூல், ப. 46
19. சிந்தாமணி, இதழ் 4, நவம்பர் 1924, பக். 141 - 142
20. சிந்தாமணி, இதழ் 10, மே 1925, ப. 475
21. மேற்குறிப்பிட்ட நூல், ப. 480

22. மேற்குறிப்பிட்ட நூல், இதழ்: 12, ஜூலை, 1925, ப. 604

23. Mary Woolstone Craft (1759 - 1797) Quoted in Marlene Dixon, Female Liberation. p. 25

24. John stuart Mill, Subjugation of women, p. 29

25. சிந்தாமணி, இதழ் 5, டிசம்பர் 1925

26. சிந்தாமணி, இதழ் 12, ஜூலை 1925, ப. 604

27. பாரதியார், பாரதியார் கவிதைகள், வானதி பதிப்பகம், சென்னை, பிப்ரவரி 1982, ப. 183

28. Neera Desai & Maithreyi Krishnaraj, Women in Indian Society, Ajantha Publication, 1987, p. 190

# மாதர் மறுமணம்

## அ. திரிபுரசுந்தரி

*முன்னுரை*

மலர்ந்து மணம் பரப்பவேண்டிய அழகு மலர்கள் 'பால்ய விவாகம்' என்ற பெயரிலே மொட்டிலேயே கருகி, சருகாகிக்கொண்டிருந்த சங்கட மான காலகட்டம் - பூப்பெய்தா இளங்குழந்தைகளும்கூட விதவைகள் என்ற பெயரிலே முக்காடிட்டு மூலையிலே தள்ளப்பட்ட கொடுமை யான காலகட்டம் - தன் கணவன் இன்னான் என்பதைக்கூட அறிந்து கொள்ளவும், புரிந்துகொள்ளவும் இயலாத இளங்குழந்தைகளைக் கூட விதவைகள் என்ற பெயரிலே கைம்மை விரதம் இருக்கக் கட்டாயப்படுத்தப்பட்ட கொடூரமான காலகட்டம் - பருவ மடைந்த விதவைப்பெண்கள் கயமை நிறைந்த தம் சுற்றத்தாரால் சீரழிக்கப் பட்டுக் களங்கம் சுமத்தப்பட்ட கறைபடிந்த காலகட்டம் - கண்ணே! மணியே! என்று கொஞ்சி மகிழவேண்டிய தம் குழந்தைகளைப் பெண்கள் வயல்வெளிகளிலும், வாய்க்கால்களிலும் எறிந்துகொண்டிருந்த கசப்பான காலகட்டம்.

ஆம். அது இளம் வயதுத் திருமணத்தைத் தடைசெய்யும் 'சாரதா சட்டம்' தோன்றி ஆறு ஆண்டுகள் ஆகிவிட்ட நிலையிலும் மேற் சொன்ன அவலங்கள் நிகழ்ந்துகொண்டிருந்த கொடுமையான கால கட்டம். இக்காலக் கட்டத்தில்தான் விதவைகளுக்கு ஏற்பட்டிருக்கும் இந்தத் துன்பமாகிய நோய்தீர்க்கும் நல்லதோர் மருந்து மறுமணம் தான் என்னும் கருத்தைச் சமுதாயத்தில் பரப்புவதற்காகத் தோன்றியது 'மாதர் மறுமணம்' என்னும் இந்த இதழ்.

## இதழின் வரலாறு

1937ஆம் ஆண்டு ஆகஸ்டு மாத (ஈஸ்வர ஆண்டு ஆவணி மீ) இதழில் கீழ்க்கண்ட குறிப்பு (பத்திராதிபர் குறிப்புகள், பக்.41) காணப்படுகிறது.

## மாதர் மறுமணம்

> நமது 'மாதர் மறுமணம்' பத்திரிகை தொடங்கி ஒரு வருஷம் பூர்த்தியாகிவிட்டது. அதை ஆரம்பிக்கும் முன் ஏற்பட்ட கவலை யானது நாளடைவில் மாறிவிட்டது. சந்தாதாரர் சேர்ப்பது பெரிய கஷ்டமாக இருந்தது. உற்ற நண்பர்களும் இயக்கத்தில் ஆர்வ முடையவர்களும்கூட சந்தாதாரராய்ச் சேரத் தயங்கினர். பலர் முடியாதென்றுங் கூறினர். 1000 சந்தாதாரராவது இல்லாவிடின் பத்திரிகையை நடத்தமுடியாதென்று கூற வேண்டியதில்லை. ஆயிரம்வரை சேர்த்துக்கொண்டுதான் பத்திரிகையைத் தொடங்கு வதென்று முடிவு செய்தோம். சந்தா சேர்க்கும் வேலையைப் பத்திரிகை தொடங்குவதற்குச் சுமார் ஆறு மாதங்கட்கு முன்பே ஆரம்பித்தோம். ஆனால் 620 சந்தாதாரரைத்தான் சேர்க்க முடிந் தது. இதற்குப் பல அன்பர்களும் சேர்ந்து தேரிழுக்க வேண்டிய தாயிற்று. என்றாலும் பத்திரிகையானது வெற்றிகரமாக நடை பெற்று ஒரு வருடப் பூர்த்தியையும் அடைந்திருக்கிறது. முதலில் சேர்ந்துள்ள சந்தா 620ம் ஆடி மாதத்துடன் பூர்த்தியடைந்து விட்டது. அதை ஈடு செய்யும்படி சந்தாதாரர் சேரவில்லை. என்றாலும் பத்திரிகை நடத்துவதில் அதிகமாகக் கவலை கொள்ள வேண்டிய நிலை மாறிவிட்ட தென்றே கூறலாம்.

இக்குறிப்பிலிருந்து 'மாதர் மறுமணம்' என்னும் இவ்விதழ் 1936ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் தொடங்கப்பட்டது என்னும் செய்தி புலப்படுகிறது. 620 சந்தாதாரர்களைக் கொண்டு தொடங்கப்பட்ட இவ்விதழை நடத்த எவ்வளவு இடர்ப்பாடுகளைச் சந்திக்க நேர்ந்தது என்ற செய்தியையும் அறிய முடிகிறது.

## இதழின் அமைப்பு

இதழின் முதல் பக்கத்தில் 'மாதர் மறுமணம்' என்று பெரிய எழுத்துக்களில் எழுதப்பட்டுள்ளது. அதன்கீழே பத்திராதிபர்:- மு. மரகதவல்லி என்று அச்சிடப்பட்டுள்ளது. அதன்கீழ் ஓர் ஓரத்தில் 'மலர்' என்று தொகுதி எண்ணும், மற்றோர் ஓரத்தில் 'இதழ்' என்று ஓராண்டின் இதழ் எண்ணிக்கையும் தரப்பட்டுள்ளன. நடுவில்

'காரைக்குடி' என்று இதழ் வெளிவந்த ஊரின் பெயரும், அதன்கீழே இதழ் வெளிவந்த ஆண்டின் பெயரும், மாதத்தின் பெயரும் குறிக்கப் பெற்றுள்ளன. இம்மூன்றும் கட்டமிடப்பட்டு அமைந்துள்ளன.

## ஆய்வுக்குக் கிடைத்த இதழ்கள்

1937ஆம் ஆண்டு ஆகஸ்டு (ஈசுவர ஆண்டு ஆவணி மாதம்) முதல் 1938ஆம் ஆண்டு சூலை (வெகுதானிய ஆண்டு ஆடிமாதம்) முடிய உள்ள இரண்டாவது தொகுதியின் 12 இதழ்களும் கட்டுரை யாளரின் பார்வைக்குக் கிடைத்துள்ள இதழ்களாகும்.

## இதழ் தோன்றியதன் நோக்கம்

இவ்விதழ் தோன்றி ஓராண்டு முழுமை பெற்ற நிலையில் வெளி வந்த இரண்டாவது தொகுதியின் முதல் இதழில் பத்திராதிபர் குறிப்புகள் (பக்.41- 42) என்னும் பகுதியில் இதழின் நோக்கம் கீழ்க்கண்டவாறு வெளியிடப்பட்டுள்ளது:

### இரண்டாவதாண்டு

> கணவனிழந்து வருந்தும் பெண்ணின் தொகை இந்திய நாட்டில் இரண்டரை கோடிப்பேர் என்று சொன்னால் யாரும் திடுக்கிடா திருக்க முடியாது.
>
> இவர்களின் கண்ணீர் துடைக்கப்பட வேண்டும். ஆனால் பொது ஜன வழக்கமானது இச்செயலை ஒரு விளையாட்டாக மதித்து வருகிறது. இப்படியே இப்பெண்களை வதைத்து வயிறெ ரிந்து கொண்டிருப்பது மத - சமூகக் கடமையென்று கருதுவார் தொகையும் குறைவடையவில்லை. இந்த நிலையில் இப் பெண்களின் கூட்டத்திற்கு விடுதலை நல்க வேண்டுமென்பதை அடிப்படையாகக் கொண்டுதான் நமது பத்திரிகை தோன்றி யிருக்கிறது. இதன் இரண்டாவதாண்டில் பல திருமணங்கள் காணப்படவேண்டுமென்று விரும்புகிறோம்.

விதவைகளின் கண்ணீர் துடைக்கப்படவேண்டும் என்னும் இதழின் நோக்கமும், இரண்டாவதாண்டில் விதவைத் திருமணங்கள் பல காணப்படவேண்டுமென்று இதழாசிரியரின் விருப்பமும் நிறை வேற இவ்விதழ் ஆற்றியுள்ள பங்கு என்ன என்பதை வெளிப்படுத்து வதே இக்கட்டுரையின் நோக்கம் ஆகும். முதல் பக்கத்திலிருந்து கடைசிப் பக்கம் வரையிலும் தன்னுடைய நோக்கம் சிதறாமல் 'மாதர்

மறுமணச் செய்திகளைக் கட்டுரைகளாகவும் கவிதைகளாகவும் துணுக்குகளாகவும் மற்றும் பல்வேறு இலக்கிய வடிவங்களாகவும் கொடுத்துள்ள தன்மை போற்றத்தக்கதாய் உள்ளது.

**உள்ளடக்கம்**

பார்வைக்குக் கிடைத்த இரண்டாம் தொகுதியில் எட்டு இதழ்கள் (இதழ்கள் 1, 2, 3, 5, 6, 7, 9, 10) 48 பக்கங்களையும், இரண்டு இதழ்கள் (8, 12) 49 பக்கங்களையும், நான்காவது இதழ் 40 பக்கங் களையும் பதினொன்றாவது இதழ் 52 பக்கங்களையும், கொண்டனவாக அமைந்துள்ளன.

முதல் இதழின் முதல் பக்கத்தில் தலையங்கக் கட்டுரை அமைந் துள்ளது. ஏனைய எல்லா இதழ்களிலும் முதல் பக்கத்தில் மாதர் மறு மணம் தொடர்பான ஏதேனும் ஒரு கவிதை, ஒன்று, இரண்டு அல்லது மூன்று பக்கங்கள்வரை அமைந்துள்ளது.

முதல் இதழின் கடைசிப் பக்கத்தில் 'மாதர் மறுமண' அலு வலகத்தால் வெளியிடப்பட்ட 'மாதர் மறுமண பென்சில்' விளம்பரம் அரைப்பக்கமும் 'மாதர் மறுமணப் பாடல் திரட்டு' விளம்பரம் அரைப் பக்கமும் அமைந்துள்ளன. இத்தொகுதியின் எட்டாவது இதழின் கடைசிப் பக்கத்தில் 'புதூரில் மகளிர் இல்லம் திறப்பு விழா 10.4.1938' என்னும் தலைப்பிட்ட புகைப்படம் அச்சிடப்பட்டுள்ளது. 12ஆவது இதழின் கடைசிப் பக்கத்தில் காரைக்குடியிலுள்ள மாதர் மறுமண சகாய சங்கத்தினரின் 'மணமகன் தேவை' விளம்பரம் முழுப் பக்க அளவில் அமைந்துள்ளது. ஏனைய எல்லா இதழ்களின் கடைசிப் பக்கங்களிலும் நிகழ்ச்சிகள் என்னும் தலைப்பில் அமைந்த துணுக்குச் செய்திகள் காணப்படுகின்றன.

இதழ் முழுவதும் மாதர் மறுமணம் பற்றிய பல்வேறு செய்திகள் கட்டுரைகளாகவும் கவிதைகளாகவும் கதைகளாகவும் பத்திராதிபர் குறிப்புகளாகவும் நிகழ்ச்சித் துணுக்குகளாகவும் அமைந்துள்ளன.

மேலும் மாதர் மறுமண சகாய சங்கம், மதுரை புனர் விவாக சமாஜம், மூல்தான் விதவா விவாக சகாய சபை, அமராவதி புதூரில் மகளிர் இல்லம், இந்து விதவா நிலையம் போன்ற மாதர் மறுமணத் திற்கு உதவும் சங்கங்கள் பற்றிய செய்திகளும், அவை ஆற்றிய

அரும்பணிகள் பற்றிய செய்திகளும் இடையிடையே வெளியிடப் பட்டுள்ளன.

மேலும் பஞ்சாப் விதவா விவாக மாநாடு, ஜலந்தர் விதவா விவாக மாநாடு, முஸ்லிம் மாதர் முற்போக்கு மாநாடு, லாகூர் விதவா விவாக மாநாடு, பர்மா வாழ் மாதவன் கோவில் யாதவ சமூக மாநாடு பற்றிய செய்திகளும் இத்தொகுதியில் இடம் பெற்றுள்ளன.

பலதார மணத்தடை மசோதா, மாதர் மறுமணத்திற்கு மடாதிபதிகள் ஆதரவு போன்ற செய்திகளும் மாதர் மறுமணம் பற்றிய வேத, புராண, இதிகாசக் கருத்துக்களும் இத்தொகுதியிலுள்ள இதழ்களில் இடம்பெற்றுள்ளன.

'ஜெய்சிங் அல்லது தேவபுரி ஜமீன்தார்' என்னும் கதை, 'பாரதிதாசன் கவிதைகள்' என்னும் நூல், 'கிருகலக்ஷிமி' என்னும் இதழ் ஆகியவற்றிற்கான மதிப்புரைகளும் காணப்படுகின்றன.

'மாதர் மறுமணப் பென்சில்', 'மாதர் மறுமணப் பாடல் திரட்டு' இவற்றிற்கான விளம்பரத்தோடு, 'மணமகன் தேவை' என்னும் விளம்பரத்தையும் காணமுடிகிறது.

மேலும் 'விதவைக்கு விடுதலை' என்னும் தலைப்பில் நான்கு புகைப்படங்களும், 'புதூரில் மகளிர் இல்லத் திறப்புவிழா' என்னும் தலைப்பிலமைந்த ஒரு புகைப்படமும் இத்தொகுதியில் இடம் பெற்றுள்ளன.

'பத்திராதிபர் குறிப்புகள்' என்னும் தலைப்பில் ஒவ்வோர் இதழிலும் மாதர் மறுமணம் பற்றிய செய்திகளின் தொகுப்பு அமைந்துள்ளது.

இறுதியாக, 'நிகழ்ச்சிகள்' என்னும் தலைப்பின்கீழ் அந்தந்த மாதத்தில் மாகாணவாரியாக, ஜாதிவாரியாக நிகழ்ந்த விதவா விவாகம் பற்றிய செய்திகளும், அந்தந்த மாதத்தில், பெண்களோடு தொடர்புடையனவாக நிகழ்ந்த நிகழ்வுகளும் தொகுத்துத் தரப் பட்டுள்ளன.

ஒரு கதையோ, கட்டுரையோ முடிந்தபிறகு இருக்கும் சிறிதளவு இடத்தில்கூட 'துணையிழந்தாரை மணப்பது புண்ணியம்', 'விதவை

யின் கண்ணீர் வீட்டை அழிக்கும்' என்பன போன்ற மாதர் மறுமணம் பற்றிய தொடர்கள் இடம்பெற்றிருக்கின்றன.

இவ்வாறு மாதர் மறுமணம் என்னும் ஒரே செய்தியானது பல் வேறு இலக்கிய வடிவங்களில் இத்தொகுதியில் உள்ள இதழ்களில் சிறப்புற அமைந்திருப்பது போற்றத்தக்கதாக உள்ளது.

## சொ. முருகப்பாவின் பங்களிப்பு

இங்ஙனம் எல்லா வகையிலும் இவ்விதழ் தரத்தில் மேம்பட்டு விளங்கக் காரணம் இவ்விதழின் ஆசிரியரான திருமதி மு. மரகத வல்லியின் கணவரும் மாதர் மறுமண சகாயசங்கத்தின் செயலாளரு மான சொ. முருகப்பா அவர்களே ஆவார். அவரைப்பற்றிய சரியான தொரு சொல்லோவியம் கீழே தரப்பட்டுள்ளது:

> சமூக சீர்திருத்த ஊழியத்தில் ஈடுபட்டு உழைத்து வருபவர் களில் ஸ்ரீமான் முருகப்பா அவர்கள் ஒருவர். இவர் மாதர் மறு மண சகாய சங்கத்தை ஏற்படுத்தி நான்கு வருஷமாக அதன் அபிவிருத்திக்காகப் பெரும் பாடுபட்டு வருகிறார். பிரசங்கம் மூலமாகவும் விதவா விவாகத்தைப் பரவச் செய்யப் பிரயத்தனப் படுவதில் அவருக்குச் சமானமாக யாரும் இல்லையென்று சொல்லலாம்........................... நம் நாட்டில் வங்காளத்தில் இராஜாராம் மோஹன்ராய் என்ற பெரியவர் 100 வருடங்களுக்கு முன்பு அவதரித்து, பெண்கள் உடன்கட்டை ஏறும் கொடிய பழக்கத்தைப் படாதபாடுபட்டு சட்டத்தின் மூலமாகவும், பிரசா ரத்தின் மூலமாகவும் நிவர்த்தி செய்தார். அவர் வழியிலேயே பண்டிட் வித்யாசாகர் விதவைகள் மறுமண மசோதாவைச் சட்ட மாக நிரூபித்தார். பிறகு ஆந்திரா தேசத்தில் வீரேசலிங்கம் பந்துலுகாரு என்ற பெரியார் விதவைகளுக்குக் கல்லூரி ஏற்படுத்தி, விதவா விவாகம் செய்ய வசதிகள் செய்து ஆந்திர ஸ்த்ரீகளின் அபிவிருத்திக்காகப் பாடுபட்டார். பஞ்சாபில் ஸர். லாலா கங்காராம் என்பவர் விதவா விவாக சங்கத்திற்கு விதவை விவாக அபிவிருத்திக்காக 50 இலட்சம் ரூபாய் நன்கொடை அளித்துள்ளார். பம்பாய் நாட்டில் புரொபஸர் சர்வே,, தேவதார் இவர்களிருவரும் விதவைகளுக்காக அரிய சேவைகள் செய் திருக்கிறார்கள் ...................... மேலும் காந்தி மகாத்மாவும் பெண் ஆண் என்ற வித்தியாசம் பாராட்டாமல் சட்ட திட்டங்களை நிரூபிக்க வேண்டுமென்று போராடி வருகிறார். இப்பேர்ப்பட்ட முன்சொன்ன பெரியோர்களின் வழியை அனுசரித்து, தென்னிந்

> தியாவில் தமிழ்நாட்டில் ஸ்ரீமான் முருகப்பாவைப்போல் புருஷர்கள் ஸ்திரிகளுடைய குறைகளை நிவர்த்தி செய்ய முன்வந்திருப்பது நாம் எல்லோரும் மெச்சத் தகுந்தது (இதழ் - 2, பக்.2-3)

என்று சொ. முருகப்பாவை இனங்காட்டுகிறார் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி.

தாது ஆண்டில், காரைக்குடியில் தொடங்கப்பெற்ற மாதர் மறு மண சகாய சங்கத்தின் நான்காவது ஆண்டு அறிக்கை மாதர் மறுமணம் இதழ் இரண்டில் வெளியிடப்பட்டுள்ளது. இவ்வறிக்கை காட்டும் விவரங்கள் முருகப்பா என்னும் தனிமனிதர், மாதர் மறுமண சகாய சங்கத்தின் செயலாளராக இருந்து, பெண் உரிமைக்காகவும், இளம் வயதுத் திருமணத்திற்கு எதிராகவும், விதவைகளின் துன்பம் தீர்க்கப்படவேண்டும் என்பதற்காகவும் எப்படியெல்லாம் உழைத்தார் என்பதைப் படிப்பவர்க்கு உணர்த்துகின்றன. முதலில் அவர் கொடுத்துள்ள புள்ளிவிவரங்களைப் பார்ப்போம்.

ஹிந்துக்களிடையில் இருக்கும் பால்ய விதவைகளைப் பற்றிய விவரம் வருமாறு:

| | |
|---|---|
| 1 வயதுக்குட்பட்ட விதவை | 1515 |
| 1 வயதுக்குமேல் 2 வயது வரை | 1785 |
| 2 வயதுக்குமேல் 3 வயது வரை | 3485 |
| 3 வயதுக்குமேல் 4 வயதுவரை | 9076 |
| 4 வயதுக்குமேல் 5 வயதுவரை | 15,019 |
| 5 வயதுக்குமேல் 10 வயதுவரை | 1,05,482 |
| 10 வயதுக்குமேல் 15 வயதுவரை | 1,85,339 |
| 15 வயதுக்குட்பட்ட மொத்தம் | 3,21,701 (பக். 27) |

நெஞ்சை உருக்கும் இந்நிலை மாற இச்சங்கம் ஆற்றிய அயராப் பணிகளின் விளைவாக உருவாகிறது வேறொரு பட்டியல். ஒவ்வொரு மாகாணத்திலும் நடைபெற்ற விதவைத்திருமணங்களின் எண்ணிக்கைப் பட்டியல்தான் அது. விதவைத் திருமணம் செய்யவும், அதுபற்றிப் பிரச்சாரம் செய்யவும் அவர் அடைந்த துன்பங்கள் - சந்தித்த இடர்ப்பாடுகள் சொல்லி மாளாது.

> எந்த ஊரிலும் கூட்டம் நடத்துவதென்பது பிரயாசையாகவே இருந்தது. இடம் கிடைப்பதில்லை. அபிமானமுள்ளவர்களும் வீடுவிட முற்படுவதில்லை. உபந்யாசம் புரிபவர்கூட இவ்வியக் கத்தில் கலந்து பேசுவதில் பின்னடைந்தனர் (பக்.29)

என்னும் முருகப்பா அவர்களின் கூற்று, அவர் சந்தித்த சங்கடங்களை - இடர்ப்பாடுகளை நமக்கு உணர்த்தும் வல்லமைத்தாய்த் திகழ் கின்றன.

மாஜிக்லாண்டர்ன், துண்டுப் பிரசுரங்கள், புத்தகங்கள், மாதப் பதிப்பு, உபந்யாசம் என்று பலவிதங்களில் பிரசாரம் நடைபெற்றது என்பதை இவ்வறிக்கை நமக்கு உணர்த்துகின்றது. பொருளுதவி செய்தவர்களின் பெயரை அறிக்கையில் வெளியிட்டு, உதவி செய்த வர்களுக்கு நன்றியைச் செலுத்தும் அவர், ஒரு வேண்டுகோளையும் மக்கள் முன் வைக்கிறார். எளிமையும் எழுச்சியும் மிக்க அவ்வேண்டு கோளின் மொழிநடை படிப்பவர் உள்ளத்தை உருக்குவதாய் - உருகி உதவ முன்வரத் துடிக்கத்தக்கதாய் அமைந்துள்ளதைக் காண்போம்:

> மாதர்க்கு உரிமை நல்குவதில் ஆர்வமுள்ள பெரியோர்களே! வாலிபர்களே! உதவி செய்யுங்கள்! துணிபு கொள்ளுங்கள்! லட்சக்கணக்கான துண்டுப் பிரசுரங்களை வெளிவரச் செய்யுங் கள்! எண்ணற்ற உபந்யாசங்கள் புரிய ஏற்பாடு செய்யுங்கள். புத்தகங்களும், படங்களும் வெளிவர உதவி புரியுங்கள்! விதவையாகக் கிடந்து வருந்தும் சகோதரிகளின் கண்ணீரைத் துடையுங்கள்! அவர்களுக்குக் கல்வியும் தொழிலும் நல்க முயலுங்கள். ஒன்றே செய்யவும் வேண்டும். ஒன்றும் இன்றே செய்யவும் வேண்டும். நாளை நாளை என்பதில் பயனில்லை யென்பதை உணருங்கள். ஆண்மையுடன் தொண்டாற்ற முய லுங்கள். வெற்றிமாலை சூடுங்கள். (பக்.33)

கைம்மை எனும் பகையை விரட்ட வரும் போர் முரசாய் இவ்வேண்டு கோள் ஒலிக்கிறதல்லவா? அச் சங்கநாதத்தின் ஊடே முருகப்பா என்னும் படைத்தலைவனின் சமூகப்பற்றும் தொண்டுணர்வும் கூட வெளிப்படுவதைக் காண முடிகிறது.

இரக்கத்தின் ஊற்றாய்த் திகழும் இவர், இலக்கிய நயம் மிக்க மொழிநடையில் தம்முடைய கருத்துக்களை அழகாகக் கூறியுள்ளார். இரண்டாவது தொகுதியில் காணப்படும் ஒரே ஒரு தலையங்கக்

கட்டுரை சொ. முருகப்பா அவர்களின் படைப்பாக அமைந்துள்ளது. இலக்கியத் தரம் வாய்ந்த அக்கட்டுரையின் சிறப்புத் தன்மைகள் தலையங்கக் கட்டுரை என்னும் பகுதியில் விளக்கப்பட உள்ளது.

கற்பனையின் ஊற்றாக, கவிதைக்கண் கொண்டு நிகழ்ச்சிகளை விவரிக்கும் பாங்கினை 'கலக்கமுற்ற பொய்வழக்கு' (இதழ் - 8, பக் - 1) என்னும் கவிதையில் காண முடிகிறது. சொ. முருகப்பாவின் இக்கவிதை அக்காலச் சமூகச் சூழலைப் படம் பிடித்துக் காட்ட வல்லதாய் அமைந்துள்ளது.

வீட்டிலொரு கன்னி விதவையெனச் சீரழிந்து
பாட்டிமார் போலப் பவிசிழந்து – தோட்டிசெயும்
வேலைசெயத் தாய்க்கிழவி மேனி மினுக்கிடுவாள்
சேலை தகதகப்பாள் தீது.

பாடுங்குயில் போன்ற பாவைதனை யாலையிலே
ஆடுங் கரும்பெனவே ஆக்கிவிட்டார் – நாடி
விலக்க வழியறியார் மேதினியோர் கொண்ட
கலக்கமுற்ற பொய் வழக்காற் காண்.

விதவைகளின் துன்பங்களுக்கெல்லாம் காரணம் நம்மவர் மேற்கொள்ளும் மூடப்பழக்கவழக்கங்களே என்பதைத் தெளிவுபடுத்துகிறது இவருடைய கவிதை. கணவன் இறந்துவிட்ட ஒரே காரணத்திற்காக விதவைகள் அனுபவிக்கும் துன்பங்களைத் துல்லியமாகக் காட்டும் அழகிய படப்பிடிப்பாய் இக்கவிதை அமைந்துள்ளது.

இங்ஙனம் பல்லாற்றானும் பணிபுரிந்து விதவைகளின் துயர் தீர்க்க அரும்பாடுபட்ட திரு. சொ. முருகப்பா அவர்களின் பங்களிப்பு 'மாதர் மறுமணம்' இதழைப் பொருத்தவரையில் போற்றுதலுக்குரியதாய் அமைந்துள்ளது. மரகதவல்லி (மாதர் மறுமணம் இதழாசிரியர்) என்னும் விதவையை மணந்து தானே ஒரு சான்றாக நின்று போராடியிருப்பது எண்ணிப்பார்க்கத்தக்கது. இனி மாதர் மறுமணம் இதழ் பற்றி - இவ்விதழ் விளக்கும் செய்திகள்பற்றி விளக்கமாகக் காண்போம்.

### கட்டுரைகள்

'மாதர் மறுமணம்' இதழின் இரண்டாம் தொகுதியில் அமைந்த 12 இதழ்களிலுமாக மொத்தம் 46 கட்டுரைகள் அமைந்துள்ளன.

அக்கட்டுரைகளைத் தலையங்கக் கட்டுரை, மொழிபெயர்ப்புக் கட்டுரை, சொற்பொழிவுக் கட்டுரை, இலக்கியச் சான்றுகளுடன் கூடிய கட்டுரை, வேறு இதழிலிருந்து எடுத்தாளப்பட்ட கட்டுரை என்று வகைப்படுத்தலாம்.

### தலையங்கக் கட்டுரை

'இளைஞர்களே!' என்னும் தலைப்பிலமைந்த சொ. முருகப்பா அவர்களின் தலையங்கக் கட்டுரை, இலக்கியத் தரம் வாய்ந்த அருமையான கட்டுரையாகும். இராமாயணத்தில் இராமன் சீதையைச் சந்திக்கும் நிகழ்ச்சியை,

..........................................
வரிசிலை அண்ணலும் வாட்கண் நங்கையும்
இருவரும் மாறிப்புக் கிதயம் எய்தினார்

என்று கம்பன் பாடுவதாகப் படித்து மகிழ்கிறோம். ஆனால் தமிழ கத்தை நோக்கும்போது காதல் கனவுலகில் பஞ்சப்பட்டு நிற்கிற தென்பது மிகையன்று என்று கூறும் ஆசிரியர் மேலும் விளக்குகிறார்.

பாரதியார் கூறுகிறார் கேளுங்கள்:

நாடகத்தில் காவியத்தில் காதலென்றால்
நாட்டினர்தாம் வியப்பெய்தி நன்றாமென்பர்
ஊடகத்தே வீட்டினுள்ளே கிணற்றோரத்தே
ஊரினிலே காதலென்றால் உறுமுகின்றார்
பாடைகட்டி அதைக்கொல்ல வழிசெய்கின்றார்
பாரினிலே காதலெனும் பயிரைமாய்க்க
மூடரெலாம் பொறாமையினால் விதிகள் செய்து
முறைதவறி இடரெய்திக் கெடுகின்றாரே.

இது பாரதியார் தற்காலத் தமிழகத்தில் அனுபவித்துக் கண்ட வாக்கு. இளைஞர்களே! இக்கொடுமையை மாற்ற என்ன செய்கிறீர்கள்? (இதழ் - 1, பக் 3).

இவ்வாறு இராமாயண காலத்துக் காதலையும், இன்றைய காலத்துக் காதலையும் வேறுபடுத்திக் காட்டும் ஆசிரியர் அதை விதவா விவாகத்தோடு தொடர்புபடுத்தியும் கூறியுள்ளார்.

கட்டாய விதவைக் கோலத்திற்காட்பட்டுத் தவித்துத் திண்டாடி நிற்கும் பெண்கள் தொகை கொஞ்சமா? இப்பெண்களின் உள்ளம் நிறைய காதல் தோன்றியது. வளர்ந்தது. ஆனால் அவை பலனடையாமல், தகுந்த இளைஞர்களின் உள்ளத்திற் கலக்க முடியாமல் தேய்ந்து அழிந்து போயிற்று. காதற்பயிர் செழிக்க வில்லை. பயனை நல்கவில்லை. இக்கொடுமைக்கு விமோசன முண்டோ? இளைஞர்களே! எழுகின்றீர்களா? தொண்டு செய் கின்றீர்களா? பாலைவனமாக இருக்கும் தமிழ்நாட்டு மக்கள் உள்ளத்தை இன்பத்தேனூற்றுக் கேணிகளாக்க முனையுங்கள். வெற்றி உங்கள் கையிலிருக்கின்றது. முரு.... (இதழ்-1, பக் 4).

மாதர் மறுமணம் இதழின் ஆசிரியராகிய மரகதவல்லி அவர் களின் கணவரும், குமரன் இதழின் ஆசிரியரும், மாதர் மறுமண சகாய சங்கத்தின் செயலாளருமான திரு.சொ. முருகப்பாவின் இத் தலை யங்கக் கட்டுரை, மாதர் மறுமணம் என்னும் கருத்தை மக்கள் மனத்தில் பதிய வைக்கத்தக்க தகுதியும் தரமும் வாய்ந்த அரிய கட்டுரையாய்த் திகழ்கின்றது.

## மொழிபெயர்ப்புக் கட்டுரை

'விதவா விவாகம் ஏன் நடக்க வேண்டும்' (இதழ்-6 பக் 9-12) என்னும் கட்டுரை இந்தியிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டதாகும். இக்கட்டுரையில் இந்து விதவைப் பெண்களின் பரிதாபநிலை விவரிக்கப்பட்டுள்ளது. இந்நிலை தொடர்வது நாட்டின் அழிவிற்கே வழிகோலும் என்னும் கருத்து வற்புறுத்தப்பட்டுள்ளது.

எந்த தேசத்தின் முனிவர்களும் ரிஷிகளும் வித்வான்களும், பாரத ஸ்த்ரீகள் தமது பதிவ்ரதா தர்மத்தினால் அழியாப் புகழுடன் விளங்குமாறு பற்பல நிபந்தனைகளையும் கட்டுப்பாடுகளை யும் நிறுவி வைத்தார்களோ; அந்த தேசத்து அபலைகளின் மனம் கொதிக்கின்றது; அவர்கள் தமது துன்பங்களைத் தாளாமல் மனமுடைந்து வெளிவிடும் கனல் ஸ்வாஸங்கள் ஒன்றுகூடிப் பாரத தேசத்தை வாட்டிவருகின்றது. எந்த தேசத்தில் ஸ்திரிகளின் கண்ணீர் ஒரு குடும்பத்திற்கு மிகுந்த கெடுதலென்று எண்ணு கிறார்களோ;............... அந்த தேசத்தில் இன்று விதவைகளின் சோகக் கண்ணீர் ஆறாய்ப் பெருகுகின்றது.

ஆண்களுக்கு விவாகம் விளையாட்டு மாதிரி. நல்ல மனைவி யையும் டஜன் கணக்கில் குழந்தைகளையும் அடைந்தபிறகும்

> ஓர் ஆடவன் தன்னிச்சைப்படி எத்தனை இளம்பெண்களை வேண்டுமானாலும் மணக்கலாம். ஆனால் அழகான இளநங்கை தன் கணவனைப் பறிகொடுத்த பிறகுகூட விவாகம் செய்து கொள்வது பெரும் பாவம். அப்படியானால் இவ்வபலைகள் இச்சென்மம் முழுதும் தர்மத்தின் பெயரால் வருந்திக் கொண் டிருக்கத்தான் வேண்டுமா? ஹே! ஈஸ்வரா. நல்ல புத்தியைக் கொடு. ஸ்வர்ண மயமான பாரததேசம் இன்று ஸ்மசான பூமியாக மாறிக்கொண்டு வருகின்றது (பக். 9-10).

இளம் விதவைகளின் துயரநிலையை அழகாகப் படம்பிடித்துக் காட்டுகிறது இக்கட்டுரை.

## இலக்கியச் சான்றுகளுடன் கூடிய கட்டுரை

இப்பகுதியில் ஆறு கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. அவற் றுள், 'பாரதியும் பெண் விடுதலையும்' என்னும் சொ. முருகப்பாவின் கட்டுரை அறியத்தக்கதாகும். இக் கட்டுரையில் பெண் விடுதலை பற்றிப் பாரதி பாடிய கவிதை வரிகள் மேற்கோளாகக் காட்டப்பட் டுள்ளன.

> மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம்
> தாதர் என்ற நிலை மாறி ஆண்களோடு பெண்களும்
> சரிநிகர் சமானமாக வாழ்வ மிந்த நாட்டிலே.
>
> சரி - நிகர் - சமானம் என்ற மூன்று வார்த்தைகளும் சமத்துவம் என்ற ஒரே அர்த்தத்தைக் குறிப்பிட்டாலும் பாரதி அதை மூன்று தடவை உபயோகித்திருப்பதிலிருந்து ஆண் பெண் சமத்துவத் தில் பாரதியாருக்கு எவ்வளவு ஆசையும் ஆர்வமும் இருக்கிறது பாருங்கள். ...................... பெண்களிடத்திலே இவ்வளவு அபார மதிப்பு வைத்து அதற்காகவே தமது மதிப்பிடமுடியாத கவிச் செல்வத்தைப் பொழிந்து தொண்டு செய்த பாரதி பிறந்த நாட்டிலே இன்னும் இந்த அநாகரிகமான விதவைக்கோலம் இருக்கிறது என்று சொன்னால் அது எவ்வளவு கண்டிக்கத் தக்கது. இந்த அநாகரிக நிலைமையை ஒழிக்கச் சேரவாரும் ஜெகத்தீரே! பாரதி வாழ்க! (இதழ் - 2, பக்.36).

பாரதியின் கவிதை வரிகளுக்குக் கட்டுரையாசிரியர் தரும் விளக்கமும் அக்கருத்தை விதவா விவாகத்தோடு தொடர்புபடுத்திக் காட்டும் நேர்த்தியும் படித்து மகிழ்ந்து பாராட்டத்தக்கதாய் அமைந் துள்ளது.

## வேறு இதழிலிருந்து எடுத்து எழுதப்பட்ட கட்டுரை

திரு. செ.கு. இராமசாமிப் பிள்ளை எழுதிய 'விதவைகளுக்கு விமோசனம் உண்டா' என்னும் கட்டுரை கிருகலக்ஷிமி என்னும் இதழிலிருந்து எடுத்து அச்சிடப்பட்டதாகும். சிந்திக்கவும், செயல்படவும் தூண்டும் கருத்துக்களமைந்த சிறந்த கட்டுரையாய் இது திகழ்கின்றது.

> இந்தியப் பெண் திலகங்களாகிய நம் சகோதரிகளுக்குக் கொடுக்கவேண்டிய முக்கியமான சுதந்தரங்களுள் தலைசிறந்தது 'விதவா விவாகம்'. பால் மணம் மாறா இளமைப் பருவமுடைய குழந்தைகளை மணைமீதேர்த்தி திருநாணேற்குமாறு செய்கின்றனர். அச்சமயத்தில் அப்பெண் குழந்தைகளுக்கு அஃதோர் விளையாட்டேபோல் தோன்றுகின்றது. விதிவசத்தால் தன் இளமையிலேயே கணவனிறக்க அச்சடங்கு வினையாகவே முடிந்துவிடுகிறது .............. ...... ............... தன் நினைவின்றி (ஒரு விதவை) குழந்தைப் பருவத்தில் நடந்த போலித் திருமணத்திற்காக வாழ்நாள் பூராவும் அவள் கஷ்டப்பட்டு உடல் குன்றி நாசமடைகிறாள்.
>
> இனியாகிலும் அவர்களது பரிதாப நிலையுணர்ந்து பெண்களுக்குச் சுதந்திரம் கொடுக்க விரும்பி யுழைக்கும் இந்திய ஆடவர்களாகிய நாம் முதன்மையாக (கலியாணம் வேண்டாம் என்ற விதவைகள் தவிர) விதவைகள் மறுவிவாகம் நடத்திக் கொள்ளும் உரிமையை மனக்குறைவின்றித் தருவோமாக. அவ்வித விவாஹங்களும் வெகு சகஜமானவைகளாக வேண்டும். சகலரும் தற்சமயம் இருக்கும் சட்டரீதியான உரிமையை அனுஷ்டானத்தில் அனுபவிக்கும் சமூகநிலையை உண்டு பண்ண வேண்டும்.
>
> இந்திய "விதவைகளுக்கு விமோசனம் உண்டா?" என்ற கேள்விக்கு இனி "விமோசனம்" உண்டு என்று பதில் கூறி முடிக்க முழுமுதற் கடவுளின் முழு அருள் நிரம்புவதாக (கிருகலட்சுமியிலிருந்து) (இதழ் - 6, பக்.39).

படிப்பவர்கள் மனதில் வலுவானதொரு தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில் இக்கட்டுரை அமைந்துள்ளது.

## சொற்பொழிவுக் கட்டுரை

மொத்தம் 13 சொற்பொழிவுக் கட்டுரைகள் இத் தொகுதியில் அமைந்துள்ளன. 1937இல் சென்னை, சட்டசபையின் உபதலைவரா

யிருந்த திருமதி முத்துலட்சுமி ரெட்டி, சிறை அமைச்சர் திரு. இராமன் மேனன், கல்வி அமைச்சர் திரு. சுப்பராயன், டாக்டர் சகுந்தலா தேவி, மாதர் மறுமண சகாய சங்கச் செயலாளர் திரு. சொ. முருகப்பா, திரு. செ. குருசாமி ஐயர், திரு. D.K. கார்வே ஆகியோர் பல்வேறு மாதர் மாநாடுகளிலும் மாதர் மறுமண சகாயசங்க ஆண்டுவிழாவிலும் ஆற்றிய சொற்பொழிவுகளே இத்தொகுதியில் கட்டுரைகளாக அமைந்துள்ளன. அனைத்துச் சொற்பொழிவுகளுமே, இளம் வயதுத் திருமண ஒழிப்பு மற்றும் மாதர் மறுமணம் பற்றிய செய்திகளை உள்ளடக்கியனவாய் - படிப்பவர்க்குப் பயன் தருவனவாய் அமைந் துள்ளன. அனைத்திலும் சிறப்பு வாய்ந்ததாக, பல்வேறு மேற் கோள் களும் சான்றுகளும் வேதபுராணக் கருத்துகளும் கொண்டதாக ஒரு கட்டுரை அமைந்துள்ளது. ஜலந்தர் நகரில் நடந்த 11 ஆவது பஞ்சாப் விதவா மாநாட்டில் ராவல்பிண்டியைச் சேர்ந்த திருமதி டாக்டர் சகுந்தலாதேவி M.B.B.S. அவர்கள் நிகழ்த்திய தலைமையுரையே அக்கட்டுரையாகும்.

> தந்தையை இழந்த ஒருவனிடம் எவ்வித மாறுதலும் ஏற்படுவ தில்லை. தாயை இழந்த ஒருவனை எவ்வித தோஷமும் பாதிப் பதில்லை; சகோதர சகோதரிகளை இழந்ததினால் யாரும் அப சகுனத்தின் அறிகுறியாகக் கருதப்படுவதில்லை. பத்தினியை இழந்த பதி ஆனந்தக்கடலில் மூழ்குகின்றான் - ஏன்? அவன் தான் எத்தனை கன்னிகைகளை வேண்டுமானாலும் மணந்து கொள்ளலாமே - எவ்வளவோ கனவான்கள் உடனே தம் புத்திரி களை விவாகம் செய்து கொடுக்கத் தயாராகிவிடுகின்றனர். ஆனால் - அந்தோ பரிதாபம்! பதியை இழந்த மாத்திரத்தில் ஒரு ஸ்திரீயை எல்லோரும் வெறுக்கின்றார்கள்; அவமதிக்கிறார்கள்; துன்புறுத்துகிறார்கள். இது ஒருதலைப்பட்ட அநியாய மல்லவா? எந்த ஸ்த்ரீ, வீட்டில் எல்லோரிலும் அதிக மரியாதை பெற்று வந்தாளோ அவளே மிகக் கேவலமாக மதிக்கப்படு கிறாள். தன் பந்து ஒருவருடைய மரணத்தின் காரணமாக அவ ளுடைய வாழ்க்கை முறைகள் முற்றிலும் மாறிவிடுகின்றன. அவள்பொருட்டு சிரிப்பது குற்றம்; நல்ல ஆடைகள் அணிவது பாபம்; சுபகாரியங்களில் கலந்து கொள்வது நியாய விரோதம். விவாகம், திருவிழா, விருந்து முதலியவற்றில் கலந்து கொள்வ தற்குச் சமூகம் பெரியதடை ஏற்படுத்துகின்றது. தனிமையாக ஓர் அறையில் உட்கார்ந்துகொண்டு சதாகாலமும் தன் வழியை

நினைந்து நினைந்து சோகக் கண்ணீரில் மூழ்கிக் கிடக்க வேண்டு மென்று அவள் தலையில் எழுதியிருக்கின்றது. அவளுடைய அழுகுரலைக் கடவுளைத் தவிர வேறு யாரும் கேட்கத் தயா ரில்லை. அவளுடைய துன்பத்தைக் கண்டு யாரேனும் சிறிதேனும் இரக்கங்காட்டுகிறார்களா? நேர் விரோதமாக கன்னெஞ்சமுடை யவர்கள் "அழுதழுது வீட்டை தோசித்தனமாய்ப் பாழ்படுத்து கின்றாள்" என்று கடிந்துகொள்கிறார்கள்.

இம்மட்டோ அவள் துயரம்! வீட்டிலுள்ள மாமனார், மைத்துனர் முதலியோர் காமாந்தகாரத்தில் மூழ்கி, பாவம் அவ்வபலையைத் தன் மிருக இச்சைக்காளாக்க முயல்கின்றார்கள். அப்பேதை யும் விதிவசத்தால் அவர்களுடைய வலையில் சிக்கி விட்டால், அவர்களுடைய துராகிருதம் வெளிப்படையாகத் தெரியக் கூடிய நிலையேற்பட்டுவிடில், அவளை நிராகரித்து வீட்டை விட்டுத் துரத்தி விடுகின்றார்கள் (இதழ் - 9, பக்.4-5).

இக்கட்டுரை மூலம் அக்காலச் சமூகத்தை - நாட்டு நடப்பை - அதன்வழி விதவைகள் பட்ட துன்பத்தைப் படம் பிடித்துக் காட்டு கிறார் டாக்டர் சகுந்தலாதேவி.

நம்முடைய நீதிநூல்களும், வேதங்களும் நமக்கு இத்தகைய அநீதிகளைப் புகட்டவில்லை. அன்பு, நியாயம், ஒழுங்கு, வாய்மை போன்ற நற்குணங்களையே புகட்டியுள்ளன. சில நயவஞ்சகர்களின் சுயநலம் காரணமாகவே பெண்களுக்கு இவ்விழிநிலை ஏற்பட்டது என்பதை அழகாக இக் கட்டுரையில் ஆசிரியர் விளக்கியுள்ளார்.

இந்து சமூகம் ஒன்றில்தான் ஆயிரக்கணக்கான விதவைகள் துறவுநிலை பூண்டு வாழவேண்டுமென்று கட்டாயப்படுத்தப்படுகி றார்கள். ஆனால் இந்து சாத்திரங்களோ ஒரு விதவை மறுமணம் செய்துகொள்ளலாம் என்றும் அதில் எந்தத் தவறுமில்லை என்றும் தெளிவாகக் கூறுகின்றன என்று கூறும் ஆசிரியர், அதற்கான சான்று களைக் கீழ்க்கண்டவாறு தெளிவாக விளக்குகிறார்.

**அதர்வண வேத மந்திரம்** (சமஸ்கிருதம்) சொல்கிறது:

காலஞ்சென்ற பதியின் பிரிவாற்றாமையிலிருந்து விடுபட்ட பின்பு யுவதிகளுக்கு விவாகம் செய்விப்பதைப் பார்த்திருக்கி றோம். முதலில் அந்தகாரத்தில் மூழ்கியிருந்தவள் இப்பொழுது சுகமாயிருக்கின்றாள்.

**மநுஸ்மிருதி**

ஒரு கன்னிகைக்கு விவாக நிச்சயதார்த்தம் செய்தபின்பு பதி இறந்துபோய்விட்டால் பதியின் சகோதரன் அக்கன்னிகையை மணந்து கொள்ளலாம்.

**ஜாவாலி ஸ்மிருதி**

பிராமணர்களும் க்ஷத்திரியர்களும் வைசியர்களும் சூத்திரர் களும் தத்தமது குலத்தைச் சேர்ந்த விதவைகளுக்குப் புனர் விவாகம் செய்து வைக்க வேண்டும்; இன்றேல் துர்நடத்தை அதிகரிக்க ஹேதுவாகும்.

**மகாபாரதம்** பீஷ்ம பர்வத்தில் 19வது அத்யாயத்திற் கூறப்பட் டிருப்பதாவது - நாகராஜ ஐராவதன் என்பவன் தன்னுடைய விதவா ஸ்த்ரீயை, அத்தேவியின் கணவன் யுத்தத்தில் சுபர்ண னால் கொல்லப்படவே, அர்ஜுனனுக்கு விவாகம் செய்து கொடுத்தான். அவளுக்கு அராவான் என்றொரு புத்திரனும் பிறந்தான்.

**இராமாயணத்தில்** கூறப்பட்டிருப்பதாவது:

அ. வாலியின் மனைவி தாரை தனக்கு அங்கதனென்று ஒரு பிள்ளையிருந்தும் தன் கொழுந்தனை (சுக்ரீவனை) மணந்து கொண்டாள்.

ஆ. இராவணன் இறந்ததும் அவனுடைய மனைவி மண்டோதரி (தனக்கு மேகநாதன் என்ற மகனிருக்கையிலும்) விபீஷண ரைப் புனர் விவாகம் செய்து கொண்டாள்.

மேற்கண்ட உதாரணங்களால் புனர்விவாகம் ஹிந்துமதத்தின் கொள்கைகளுக்கு விரோதமல்ல என்பதில் சிறிதும் சந்தேகமில்லை (இதழ் - 9, பக்.8-9).

நம்முடைய வேதங்களிலும், புராணங்களிலும் சொல்லப்படாத மூடப்பழக்கவழக்கங்களால் நம் பெண்கள் அடைந்த துன்பங்கள்தாம் எவ்வளவு அது மட்டுமா, அக்காலத்தில் எட்டு அல்லது ஒன்பது வயதிற்குள் தன் பெண்ணுக்குத் திருமணம் செய்யாவிட்டால் அப் பெண்ணின் பெற்றோர்கள் கொடிய நரகத்திற்குப் போய்ச் சேருவார்கள் என்ற மூடநம்பிக்கை சிற்சில இந்துமதப் பிரிவினரிடம் நிலவி வந்தது என்னும் செய்தியும், அவ்வாறு எட்டு அல்லது ஒன்பது வயதிற்குள்

தம் பெண்களுக்குச் சரியான வரன் கிடைத்து விவாகம் செய்ய முடியாமல் போனால் அப்பெண்களைக் கும்பத்திற்கு விவாகம் செய்வித்து அக்குடத்தை உடைத்து விடுவார்கள். குடத்தை உடைத்ததும் அப்பெண்களைப் பதியிழந்த விதவைகளாகக் கருதுவார்கள். அதன் பின்பு அவர்கள் தம் ஆயுள் முழுதும் விதவைகளாகவே காலங் கழிக்க வேண்டும் என்ற செய்தியும் நம்மை அதிர்ச்சியில் உறையச் செய்யும் வல்லமைத்தாய் அமைந்துள்ளன.

இக்கொடுமை நம் சமூகத்திலிருந்து நீங்க வேண்டுமானால் 'மனைவியை இழந்த எவரும் ஒரு குமரியை மணந்துகொள்ளக் கூடாதென்று' சட்டமியற்ற வேண்டும் என்று அவர் நம்முன் வைக்கும் கருத்தும் சிந்திக்கத்தக்கதாய் - சிந்தித்துச் செயல்பட வைக்கத் தக்கதாய் அமைந்துள்ளது.

டாக்டர் முத்துலட்சுமிரெட்டி பால்ய விவாகம் செய்து கொண்டவர்கள் பற்றி ஒரு பட்டியல் தருகிறார்.

1. 5 வயதிற்குள் கல்யாணம் செய்யப்பட்டிருக்கும் பெண் குழந்தைகளின் தொகை 2,18,463.
2. 10 வயதிற்குள் கல்யாணம் செய்யப்பட்டிருக்கும் பெண் குழந்தைகளின் தொகை 2,01,687.
3. 10 வயதிற்கும் 15 வயதிற்கும் இடையில் கல்யாணம் செய்யப்பட்டிருக்கும் குழந்தைகள் 6,330,207.
4. 15 வயதிற்குள் விதவைகளாயிருக்கும் பெண்களின் தொகை 3,96,556 (இதழ் - 2, பக்.4).

படிப்பவர் நெஞ்சத்தைப் பதறவைக்கும் பட்டியலைத் தந்த அவர் "இளம் விவாகம் சட்டத்தினால் மட்டும் ஒழிந்துபோகாது. நம்மில் கற்றறிந்த ஸ்த்ரீகள், புருஷர்கள் கங்கணம் கட்டிக்கொண்டு இக்கொடிய வழக்கத்தை அடியோடு ஒழிக்க வேண்டுமென்று பிரசாரம் செய்வது மட்டுமன்றிச் சட்டத்தை மீறி நடப்பவர்களைத் தண்டனைக்குள்ளாக்க வேண்டிய வழியையும் தேடவேண்டும்" (இதழ் - 2, பக்.5) என்னும் வேண்டுகோளையும் நம்முன் வைக்கிறார்.

## பிற கட்டுரைகள்

க. ராக்கப்பன் எழுதிய 'மாமப்பெண்' என்னும் கட்டுரை, படிப்பவர் நெஞ்சை நெகிழச் செய்வதாய் அமைந்துள்ளது. 'மாமப்பெண்' முறை பற்றிய செய்திகளை இக்கட்டுரையாளர் வழி அறிய நேரிடும் போது நம் நெஞ்சம் பற்றி எரிகிறது. 'பெண் வாழ்க்கை புண் வாழ்க்கை' என்னும் பழமொழி உண்மைதானோ என்று உள்ளம் குமுறுகிறது.

> மாமப்பெண் கொடுத்தல் என்னும் வழக்கம் பல சமூகத்தில் இருந்து வருகிறது. அங்கே ஒரு பேச்சும் கேள்வியும் கிடையாது. மாமனுக்குப் பெண்ணைக் கட்டிவிட வேண்டும். எப்படி இணங்குமென்று கேட்க வேண்டியதில்லை ............. ....... ......... மாமன் குடிகாரனாயிருப்பான், முரடனாக இருப்பான், நொண்டியாக இருப்பான், பொட்டையாகவுமிருப்பான். எப்படியெல்லாமோ இருப்பான். பல சந்தர்ப்பத்தில் பெண்ணுக்குப் பல ஆண்டு இளையவனாகவுமிருக்கக் கூடும். என்னவரானாலென்ன? மாமப்பெண் கொடுத்தே தீர வேண்டும்; இல்லையென்று சொல்ல முடியாது. சமூகக் கட்டுப்பாடு விடாது. மாப்பிள்ளையைப் பார்த்து, பெண் வாந்தி எடுத்தாலும் பெண்ணை உதைத்து இழுத்துக்கொண்டு போக மாப்பிள்ளைக்கு உரிமை உண்டு. அடித்துக் கொன்றாலும் கேள்வியில்லை. இப்படிப் பட்ட கட்டாயக் கல்யாணம் பல வகுப்பில் நடந்துகொண்டு இருக்கின்றன. இந்த அநியாயத் தொழுவில் கட்டாயமாக மாட்டப் பெற்ற பெண்களின் கண்ணீருக்கு ஓர் எல்லையில்லை. (இதழ் - 3, பக்.39).

பெண் விடுதலைக்கு உழைப்பவர்கள், மாமப்பெண் முறையை ஒழிக்கவும் பாடுபடவேண்டும் என்னும் கருத்தை இக்கட்டுரை நமக்கு எடுத்துரைக்கிறது.

'மூன்று வீரர்கள்' என்னும் தலைப்பிலமைந்த 'ஏயஸ்' அவர்களின் கட்டுரை மாதர் சுதந்திரத்திற்காகப் போராடி வெற்றிபெற்ற வடநாட்டுப் பெரியவர்கள் மூவரைப்பற்றிக் குறிப்பிடுகிறது.

மூடநம்பிக்கைகளின் கொடுங்கோன்மையினின்றும் இந்துக்களை விடுதலை செய்த வீரர்களில் முதன்மையானவராகக் கருதப் படும் இராஜாராம் மோகன்ராய் அவர்களின் பெருமுயற்சியால் 1829 ஆம் ஆண்டில் உடன்கட்டையேறுதலை ஒழிக்கும் சட்டம் நிறைவேறியது. பிரம சமாஜத்தில் ஒரு பிரதம காரியதரிசியாக உழைத்து வந்தவர்

கேசவ சந்திரஸென். இந்துக்களின் சமூகநிலையை மேம்பாடடையச் செய்யும் எண்ணத்துடன் இந்தியர் சமூகச் சீர்திருத்தச் சங்கத்தைத் தோற்றுவித்தவர் இவர். பல விதவா விவாகங்களைத் தமது சொந்த முயற்சியால் நடத்தி வைத்த ஈஸ்வரவித்யாசாகர் அவர்களின் சலியாத முயற்சியால் 1856இல் விதவா விவாகச் சட்டம் நிறைவேறியது போன்ற மகளிர் திருமணம் தொடர்பான பயனுள்ள செய்திகளை இக் கட்டுரை வழி அறிய முடிகிறது.

ப.நீ. அவர்களின் 'நமது மணமுறை' என்னும் கட்டுரை நமது மணமுறையின் அலங்கோலங்களை வெளிப்படுத்துகின்றது:

> பாட்டியோ பாட்டனோ இறந்துவிடுவதற்கு முன்னால் பார்க்க வேண்டுமென்பதற்காக எட்டு வயதுப் பயலுக்கும் ஆறு வயதுக் குட்டிக்கும் பொம்மைக் கலியாணம். இருவருக்கும் விஷயம் விளங்காது. கலியாணப் பந்தலில்கூட இருவரும் அடித்துக் கொள்வார்கள் ..... ..... .... ..... நான்கைந்து வருடங்களுக்குப் பிறகு பையன் குளத்தில் விழுந்தோ, பாம்பு கடித்தோ, எமலோகத் திற்கு டிக்கெட் வாங்கிக் கொண்டால் பெண்ணைப் பிடித்தது பெருஞ்சனியன்.
>
> தந்தைக்கு 5000 ரூ. கடன். கடனை அடைக்க வேறு வழி யில்லை. இருப்பது ஒரு பெண். விலை கூறுகிறார் பணக்காரக் கிழவன். வயது அறுபத்தைந்து இருக்கும்; பெண் பதினைந்து வயது; பச்சைக்கிளி. அழகு, யௌவனம், கட்டு மஸ்தான திரேகம். இளமையின் இன்பத்தை அனுபவிக்க எழிலுடன் பூரித்துப் புளகாங்கிதத்துடனிருக்கும் அவயங்கள். என்ன இருந் தென்ன? ........ ..... ...... ....... கிழவன் பாடு 'கயா'வாகி விட்டால் பச்சைக்கிளியான பெண்ணின்பாடு அதோ கதி! அதோ கதி! (இதழ் - 3, பக்.27-28)

போன்ற சுடுகின்ற உண்மைகள் அக்காலச் சூழலை நமக்கு உணர்த் துவதோடு திருமண முறையிலே சீர்திருத்தங்கள் செய்யப்பட வேண்டி யதன் தேவையையும் அறிவுறுத்துவனவாய் அமைந்துள்ளன.

**கதைகள்**

இத்தொகுதியில் அமைந்துள்ள கதைகளைத் தொடர்கதை, மொழிபெயர்ப்புக் கதை, கற்பனைக் கதை, உண்மைக் கதை என்று வகைப்படுத்தலாம்.

## தொடர்கதை

'பொருத்தம் பார்த்த பொற்கொடி' (இதழ்கள் 1, 2, 3, 4) என்னும் கதை வயதான கிழவன் இளம் பெண்ணைத் திருமணம் செய்து கொண்டால், அப்பெண் எத்தகைய தீய வழியிலெல்லாம் செல்ல முற்படுவாள் என்பதைத் தெளிவாக விளக்குகிறது. 'நான் படும் பாடுனக்குத் திருவுளச் சம்மதமோ' (இதழ்கள் 3, 4) என்னும் தொடர் கதையில் இராமநாதன் செட்டியார் தன் ஒரே மகளுக்கு இளம் வயதிலே திருமணம் செய்கிறார். ஆறே மாதத்தில் அவள் விதவையாகிறாள். ஆசையாக வளர்த்த தன் ஒரே பெண்ணிற்கு மறுமணம் செய்து பார்க்க அவருடைய பத்தாம்பசலித்தனம் இடங்கொடுக்கவில்லை. விளைவு, அந்த அழகுக்கிளி யாரோ ஒருவனுடன் பறந்துவிடுகிறது. படிப்பவர் நெஞ்சை உருக்கும் உரையாடல்கள் இதில் இடம்பெறுகின்றன.

விதவையான அச்சிறுபெண் (மீனாட்சி) தன் தாயிடம் கீழ்க் கண்டவாறு கேட்கிறாள்.

> தாயே! எனக்கும் உங்களைப்போல சேலை கட்டிக்கொள்ளவும், நகைபோட்டுக் கொள்ளவும், தேர் - திருவிழாக்களில் சென்று பார்க்கவும், தலைவாரிப் பூ முடிக்கவும் ஆசையாக இருக்கிறது. செய்து கொள்ளட்டுமா? (இதழ் - 4, ப.15).

இந்த வினாவிற்கு அருகிலிருந்த அவள் தந்தை கூறும் விடை என்ன தெரியுமா?

> அடி செருப்பாலே! நாயே. அவிசாரி ஆகிறதற்கா என்னிடம் உத்தரவு கேட்கிறாய். இதைப்பற்றி இனியேதாவது பேசினால் தெரியுமா? நீ தாலியறுத்து மொட்டையாய்ப் போனாய். கூட்டின பயல் குட்டிச்சுவராய்ப் போனான். மேற்கொண்டு கேவலத்தை உண்டுபண்ணப் பார்க்கிறாயா. போ. போ. தோசி. எதிரே நில்லாதே! விடியாமூஞ்சி! (இதழ் - 4, பக்.15-16).

இதைப் படிக்கும்போது, நெஞ்சு பொறுக்குதில்லையே இந்த நிலை கெட்ட மனிதரைக் கண்டுவிட்டால் என்றுதான் பாரதியைப் போலப் புலம்பத் தோன்றுகிறது.

## மொழிபெயர்ப்புக் கதை

'பால்ய விதவை' என்னும் இக்கதையில் ஏழே வயது நிரம்பிய ஒரு சிறுமி நாற்பது வயதுள்ள ஆண்மகனுக்கு நான்காவது மனைவி

யாகிறாள்; ஓராண்டிலேயே விதவையாகிறாள்; பல்வேறு துயரங்களை அனுபவிக்கிறாள். பருவம் வந்தபிறகு ஒரு முகமதியரின் வலையில் விழுந்து பிறகு இறையருளால் மீண்டும் விதவைகள் ஆசிரமத்தில் சென்று சேர்கிறாள். விதவைப்பெண்ணின் துயர நிலையை - தாங் கொணாத் துக்கத்தைக் கீழ்க்கண்ட வரிகள் பிரதிபலிக்கின்றன:

> மாதா பிதாக்களைப் பிரிந்த வருத்தம் ஒரு பக்கம், தந்தையாகப் பாவிக்கப் பெற்றுவந்த எனது பதியின் பிரிவாற்றாமையொரு புறம், இதற்கிடையில் வந்தவர் போனவர்களெல்லாம் என்னி டம் வந்து "தோசி, தரித்திரம், விடியாமூஞ்சி, பிணம், வந்ததும் வராததும் புருஷனை வாரி விழுங்கிவிட்டது" என்று என்னைப் பலவாறு நிந்திக்க ஆரம்பித்தார்கள். என்ன கொடுமை! என்ன பயங்கரம்! நானோ எட்டுவயதே நிரம்பப் பெற்ற ஏதுமறியாச் சிறுமி. இக்கொடூர வசனங்கள் என்னிதயத்தைப் பிளந்தன. பர்த்தா இறந்ததற்கு நானா காரணம்.
>
> பத்து நாட்கள் சென்றன. அழகுசெய்யும் ஆடை ஆபரணங்கள் என்னிடமிருந்து அபகரிக்கப்பெற்றன. கையிலிருந்த கண் ணாடி வளையல்களும் உடைத்தெறியப்பட்டன. அவர் இறந் தார்; அதற்காக என் வளையல்களை உடைத்தெறிய வேண்டு மாம்............ ............... சுபகாரியங்களில் நான் கலந்து கொண்டால் அக்காரியங்கள் கெட்டுவிடுமாம். அதிகாலையில் என் முகத்தில் விழித்தால் பாபமாம். அழகாக அலங்கரித்துக் கொள்ளுதலும் ஆனந்தமாயிருப்பதும் நிந்தைக்குரியன. என்னே இந்து தர்மத்தின் கொடுமை! (இதழ் - 6, பக்.6 - 7).

பால்ய விதவையின் துயரம் நம் நெஞ்சைத் தொடும்படியாகக் கதை அமைந்துள்ளது.

**உண்மைக்கதை**

இத்தொகுதியில் ஒரே ஒரு கதை உண்மைச் சரிதமாக அமைந் துள்ளது. இதில் வரும் ராமய்யருடைய மகள் விதவையாகிறாள். வீட் டின் சூழல் - நெருக்கடி காரணமாக வீட்டை விட்டு வெளியேறிவிடு கிறாள். ஒரு முகமதியனிடம் அகப்பட்டுப்பின் தற்கொலை செய்து கொள்கிறாள். இதற்கு என்ன காரணம்? ஆசிரியர் கானவனப்புலவர் கூறுகிறார்.

> மேற்சொன்ன சரிதையிலே கவனியுங்கள். ராமய்யருடைய இரண்டாவது மனைவிக்கு வயது 17. விதவைக் கோலமடைந்த மூத்த மகளுக்கு வயது 22. அந்த மகளோ புருஷனை யிழந்த பத்தாவது மாதத்தில் பக்குவம் அடைந்தவள். புருஷ ஸ்பரிசம் பெறாதவள். பருவ உணர்ச்சியினால் வாதைப்படுபவள். அவ்வாறாயின், மேற்கூறிய சம்பவம் நடந்ததில் அதிசயிக்க என்ன இருக்கிறது (இதழ் - 1, ப.21).

மாதர் ஒழுக்கமான வாழ்க்கை நடத்த வேண்டுமென்றால் விதவைகள் மறுமணம் தேவை என்னும் கருத்தை இக்கதை வலியுறுத்துகிறது.

### கற்பனைக் கதைகள்

இத்தொகுதியில் சிறிதும் பெரிதுமாக மொத்தம் 35 கற்பனைக் கதைகள் அமைந்துள்ளன. இக்கதைகளில் பெரும்பகுதி இளம் வயதுத் திருமணம் பற்றியும், அதன் விளைவாக உருவாக்கப்பட்ட இளம் விதவைகளுக்குச் சமூகம் இழைக்கும் அநீதி பற்றியும், மறுமணம் செய்துகொண்ட விதவைப் பெண்கள் நல்வாழ்வு வாழ்வதும், அவ்வாறு மணம் செய்துகொள்ள இயலாத விதவைப் பெண்களில் பலர் காமுகர்களால் வஞ்சிக்கப்படுதலும், தடம் மாறிச் சீரழிவதும் இறுதியில் தற்கொலை செய்துகொள்வதும் ஆகிய பல நிலைகள் விளக்கப்பட்டுள்ளன.

'ராஜத்தின் வாழ்க்கை', 'கோர முடிவு', 'விதவையின் முடிவு', 'சரளாவின் தலைவிதி', 'கனகத்தின் கடிதங்கள்', 'ஆஷாடபூதி சங்கரன்', 'கைலாசமய்யரின் துரதிருஷ்டம்' ஆகிய கதைகள், விதவைகள் அக்காலத்தில் அனுபவித்த துன்பங்களைப் படம்பிடித்துக் காட்டுவனவாய் அமைந்து துயரமான முடிவுகளைக்கொண்டு திகழ்கின்றன.

'வள்ளி முருகேசன்', 'விதவை விமலா', 'விமோசனம் பிறக்குமா', 'ஹிந்துப் பெண்' ஆகிய கதைகள் இளம் வயதில் விதவையான பெண்கள் மறுமணம் செய்துகொள்வதால் உண்டாகும் நன்மைகளை விளக்குவனவாய் அமைந்துள்ளன.

கு.மு. வீராசாமியின், 'ஹிந்துப்பெண்' என்னும் கதை இளம் பெண்ணை மணம் புரிந்துகொண்டு வெளிநாட்டில் வாழும் வயதானவரின் மன உணர்வுகளை அவர் காணும் ஒரு கனவின் மூலமாக மிக

அழகான முறையில் படம் பிடித்துக்காட்டுகிறது. சில கதைகள் மாதர் மறுமண சங்கத்தை வாழ்த்திப் பாடும் பாடல்களோடு முடிகின்றன.

பொதுவாகப் பார்க்கும்போது படிப்பவர்கள் மனதில் மாதர் மறுமணத்தை ஆதரிக்கும் எண்ணத்தை வலுப்பெறச் செய்யும் விதமாய், கிட்டத்தட்ட இத்தொகுதியிலுள்ள கதைகள் அனைத்துமே அமைந்துள்ளன என்பதில் சிறிதளவும் ஐயமில்லை.

**கவிதைகள்**

செட்டிமார் நாட்டு விகடன் (ஏழு பாடல்கள்), அ. சிதம்பரநாத பாகவதர் (மூன்று பாடல்கள்), திருச்செந்தூர் மு. கிருஷ்ண சர்மா (இரண்டு பாடல்கள்) போன்ற பல்வேறு கவிஞர்களால் பாடப்பட்ட இருபத்தொன்பது கவிதைகள் இத்தொகுதியை அலங்கரிக்கின்றன. ஆனந்தக் களிப்பு, நொண்டிச் சிந்து, கிளிக்கண்ணி மெட்டு, திருப்புகழ் மெட்டு, காவடிச் சிந்து மெட்டு எனப் பலவகை மெட்டுகளில் இப்பாடல்கள் பரிணமிக்கின்றன.

செட்டிமார் நாட்டு விகடனின், 'மறுமணங்கள் செய்வோம்' (இதழ் - 4, பக்.1) என்னும் தலைப்பிலமைந்த பாடல் சமூகத்தில் விதவைகளின் நிலையை அப்படியே படம் பிடித்துக் காட்டுகிறது.

பெண்டாட்டி யிழந்தவரைப் பேசி மணமுடிப்பீர்
வெகு – பேஷாகவே நடிப்பீர்
மிக – பெரிய வெற்றி பெற்றதாக பேச்சுமுர சடிப்பீர் !

காதலனை யிழந்த ஒரு காரிகையைச் சுற்றி
அவள் கழுத்துத்தாலி பற்றி !
ஆங் – காரமாக அறுத்துவிட்டு கதறுவதேன் தூற்றி

என்று சமுதாயத்தின் போலித்தனத்தை வெளிச்சம் போட்டுக் காட்டுகிறார் கவிஞர்.

பாலிய மணமே பாலிய மணமே
கேலியாய்ச் செய்தார் கிழவனுக்கென்னை
கிழவன் செத்தான் கிளைஞர்கூடி
எழவு யெட்டு எல்லா மாற்றி
என்னுடை சேலை எழிலார் நகைகள்

மின்னிய தாலி மிளிர்ந்த பொட்டு
பறித்தே யென்னைப் பாழா யாக்கி
குறித்தோ ரிடத்திலே குந்த வைத்தார் (இதழ் – 6, ப.12)

என்னும் பாடல் வரிகள் பாலிய மணத்தின் கொடுமைகளை விளக்கு கின்றன.

'வீரஞ்செறிந்த விடுதலைப் பெண்' என்னும் கவிதை படித்து இன்புறத்தக்கது.

இடும்பை தீர்க்கும் இனிய நூல்கள்
ஒண்டொடி யாரின் உய்விற்கான
துண்டு ப்ரசுரம் தொடர்ந்தன பல
கண்டேன் கண்டேன் கட்டுகள் களைய
கொண்டேன் கொண்டேன் கோதிலா வீரம்
பதினெண் ப்ராய பக்குவ நிலையில்
விதியை வெட்டி வீட்டை விட்டு
சங்கம் நாடி சரணம் என்றேன் (இதழ் – 6, ப.13)

என்னும் வரிகளின் மூலம் வீரம் கொண்டால் பெண்கள் விதியை வெல்லலாம். சங்கம் அதற்கு உதவும் என்னும் கருத்தை விளக்கி நிற்கிறது இக்கவிதை.

'விதவை புலம்பல்' கேட்டு பராசக்தி தோன்றி அருள் செய்வ தாய் அமைகின்றது கீழ்க்கண்ட பாடல்.

மாதர் மறுமணத்தில் – சகாயம்
மகிழ்வாய்ச் செய்திடவே
சாதகச் சங்கமொன்று – என்னம்மா
சரிபணி யாற்றுதடி.
.......................................
..........................
அச்சங்கம் நாடிடு நீ – என்னம்மா
ஆதரவுற்றிடு நீ
அச்சங்கள் விட்டி டுநீ – என்னம்மா
அருந்தமிழ் கற்றிடுநீ

இச்சைகள் பூர்த்தியுற – என்னம்மா
இன்மணஞ் செய்திடுவார்

............................

என்றுமே சொல்லிவிட்டு – பராசக்தி
ஏகமாய் நின்றனளே (இதழ் – 5, ப.3).

மாதர் மறுமணச் சங்கத்தின் சீரிய தொண்டும் அதனால் விதவைகள் பலன் பெறலாம் என்னும் கருத்தும் நயமுற எளிய நடையில் பாமரரும் உணரும் வண்ணம் இப்பாடலில் பாடப்பட்டுள்ளது.

'ஆபத்தில் அபயம் அளியுங்கள்' என்னும் கவிதையில்,

சீலமுற்ற நேசர்கள் பலார் பலார்கூடி
சீர்திருத்தஞ் செய்வதற்கு தயார் தயாரென
சீக்கிரத்திலோடி தேடி குபீர்குபீரென (இதழ் – 6, ப.17)

விதவை மறுமணம் பெருக வேண்டும் எனும் விழைவோடு அமைந்துள்ள அடிகள் கவிஞரின் உள்ளக்கிடக்கையைப் பிரதிபலிப் பனவாய் மின்னுகின்றன.

சுத்தமல்லி அ. சிதம்பரநாத பாவலரின் 'பெண்கள் களியாட்டம்' பெண்ணுரிமை கோரும் மிகச்சிறந்த கவிதையாகும்.

பால்மணம்மா றாதசிறு கன்னிப்பெண்ணை – முடி
பழுத்த கிழவனுக்கு வாழ்க்கைப் படுத்தி
பால்மணம் மறப்பதற்குள் பால்ய விதவை – என்று
பட்டங்கட்டித் துன்புறுத்துங் காலமும் போச்சே.

மொட்டையிட்டுப் பாழ்பாடுத்தும் காலமும் போச்சே
பலர் முன்னிலையில் நிற்கவொண்ணாத காலமும் போச்சே
பட்டினி கிடந்துருகும் காலமும் போச்சே – பெரும்
பாதகஞ்செ றிந்தகட்டுப் பாடுகள் போச்சே
(இதழ் – 5, ப. 31)

என்னும் பாடலில் ஆனந்த சுதந்திரம் அடைந்துவிட்டோம் என்று ஆடிப்பாடி மகிழ்ந்த பாரதியின் துள்ளலுடன் கூடிய தீர்க்கதரிசனம் தென்படுகிறது.

பூக்குமுன் கேள்வனைப்பறி கொடுத்தேன்
புண்பட வுருகினேன் விதவையானேன்
ஏக்கமென் வாழ்க்கையிற் புகக் கண்டேன்
இனியொரு புதுமணம் எனக்கேது

என ஏங்கும் பாவையர்க்கு மறுமணம் முடித்துப் பார்க்கிறார் ஒரு கவிஞர் தம் கவிதையிலே.

ஏழை விதவை கண்ணீர் துடைப்போம்
இன்புறும் வாழ்க்கையை இனிதமைப்போம்

என்னும் வரிகள் ஆசிரியருடைய ஆசையின் பிரதிபலிப்பாய்த் திகழ்கின்றன.

அ. குமரப்பன்சிங்கு அவர்களின் 'மறுமண மருந்து' என்னும் கவிதை சமுதாயத்தில் திகழும் பல்வேறு தீமைகளாகிய நோயைத் தீர்க்கும் மருந்து மறுமணம்தான் என்பதை அழகாக விளக்குகிறது.

நீதியை வளர்க்கு மருந்து – பெண்ணை
நேரிய வாழ்வில் நிறுத்து மருந்து
.............................................
.............................................
கைம்மை யகற்று மருந்து – இளங்
கருவைச் சிதையாமற் காக்கு மருந்து
.............................................
.............................................
உருவைக் குலையாத மருந்து – உலகில்
ஓங்கிய விபசாரம் ஒழிக்கு மருந்து
.............................................
.............................................
துயரெலா மேற்கு மருந்து – போலிச்
சுவீகாரம் வேண்டாத சுயமான மருந்து
(இதழ் – 3, பக். 30 –31).

பத்தி பத்தியாக எழுதியும் விளக்க முடியாத கருத்துக்களை - மாதர் மறுமணம் பற்றிய செய்திகளை ஒருசில கவிதை வரிகள்

மூலம் ஆணித்தரமாக விளக்குவதில் இத்தொகுதியில் அமைந்துள்ள கவிதைகள் அனைத்துமே வெற்றி பெற்றுள்ளன என்றே சொல்லலாம். சில கவிதைகள் படிப்பவர் நெஞ்சை நெகிழவைக்க வல்லனவாய்த் தனித் தன்மையுடன் திகழ்கின்றன.

### மாதர் மறுமண மாநாடுகள்

கதைகள், கட்டுரைகள், கவிதைகள் மூலம் மாதர் மறுமணம் பற்றிய கருத்துக்களை மக்கள் மனங்கொள எடுத்துரைப்பதோடு நின்றுவிடாமல், பாரதம் முழுதும் ஆங்காங்கே நடைபெற்ற மாதர் மறுமண மாநாடு பற்றிய செய்திகளையும், அம்மாநாடுகளில் ஆற்றப் பட்ட சொற்பொழிவுகளையும் வெளியிட்டுத் தன் பணியில் தொய் வின்றி வீறுநடை போட்டது 'மாதர் மறுமணம்' இதழ்.

பஞ்சாப் விவாக மாநாட்டில் பேசப்பட்ட கருத்துக்கள் (இதழ் - 8, பக். 33-35), ஜலந்தரில் நடைபெற்ற விதவா விவாக மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் (இதழ் - 9, பக். 2-12), முஸ்லீம் மாதர் முற்போக்கு மாநாட்டில் (இதழ் - 9, பக். 33-37) அலசி ஆரா யப்பட்ட கருத்துக்கள், லாகூர் விதவா விவாஹ மாநாட்டில் ஆற்றப் பட்ட சொற்பொழிவுகளின் சாரம் முதலியன அறியாமை நிறைந்த மூடர் களையும் சிந்திக்க வைக்கும் ஆற்றல் மிக்கவையாய்த் திகழ்கின்றன.

பர்மா வாழ் மாதவன்கோவில் யாதவ சமூக மாநாட்டில் நிறை வேற்றப்பட்ட தீர்மானங்கள் சாரம் மிகுந்தவையாய் - சத்தானவையாய்க் காணப்படுகின்றன.

> பக்கோ ஜில்லா, ஈகாங்கி கிராமத்தில் 8.6.38 நண்பகல் ஒரு மணிக்கு உணர்ச்சியும் உத்வேகமும் ததும்ப ஆரம்பமாயிற்று. வீர இளைஞர்களும், சமூக சீர்திருத்தப் பெரியார்களும் வெகு தூரங்களிலிருந்தும் சிரமங்கருதாது விஜயஞ் செய்திருந்தது குறிப்பிடத்தக்கது.
>
> ..............................................
>
> ..............................................
>
> மாநாட்டின் அவசியத்தையும், பழங்கொள்கையால் நேரும் தீமைகளையும், விதவைகள் படுந்துயரத்தையும் விளக்கி வீர உணர்ச்சி ததும்பப் பேருரை நிகழ்த்தினார்கள், பின்னர்க் கீழ்க் கண்ட தீர்மானங்கள் வெகு ஆரவாரத்தோடு ஏகமனதாய் நிறை வேறின என்று காரியதரிசி அறிவிக்கிறார்.

## விதவா விவாஹம்

நம் சமூகப் பெண்மணிகளில் பாதிப்பேர் வாழ்க்கை நலம் குன்றி, வாட்டமுறுவதைக் கண்டு, இம்மகாநாடு வருந்துவதோடு அப்பெண்மக்கள் மறுமணஞ் செய்துகொள்ள வேண்டியது அவசியம் என இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

## மாமப்பெண் முறை ஒழிப்பு

நம் சமூகத்தில் மாமப்பெண் என்ற வழக்கம் கட்டாயமாக இருப்பதால், அநேகப் பெண்கள் கருத்தொருமித்த வாழ்க்கையை, இழக்க நேரிடுவதால், அந்தக் கொடுமுறையை அறவே யொழித்து, கருத்தொருமித்த விவாகங்களையே இம்மகாநாடு ஆதரிக்கிறது.

## பெண்ணுக்குப் பணம் வாங்காமை

நம் சமூகத்தில் பெண்ணுக்குப் பணம் கொடுத்துக் கல்யாணம் செய்வது என்ற பழக்கம் நாளடைவில் பெருகி வருவதால், அநேக ஏழை இளைஞர்கள் மணஞ்செய்துகொள்ள வழியில்லாது திண்டாடுவதைக் கண்டு இம்மகாநாடு ஆழ்ந்து வருந்துவதுடன், இதுபோன்ற பணப்பிழைப்புக்கு நடைபெறும் திருமணங்களை முற்றும் ஒழிக்கவேண்டுமென்று இம்மாநாடு கருதுகிறது.

## மாதர் முன்னேற்றம்

இல்வாழ்க்கைக்கு இன்றியமையா நம் பெண்மணிகள், நம் சமூகத்தில் பெரிதும் முன்னேற வேண்டியிருப்பதால், பெண் கல்வி அவசியம் என்றும், தற்கால நாகரிகத்திற்கொப்ப ரவிக்கை போடுதல், தோடு அணிதல் போன்ற சீர்திருத்தங்களையாவது செய்ய வேண்டுமென இம்மாநாடு விரும்புகிறது

(இதழ் 12, பக். 33 - 34).

மேற்கண்ட செய்திகளைப் படிக்கும்போது அக்காலத்தில் பெண்களுக்கு உண்டான பிரச்சினைகள் அனைத்துமே மாநாடுகளில் விவாதிக்கப்பட்டன என்பதையும், அவற்றைத் தீர்ப்பதற்கான முயற்சிகளும் பெருமளவில் எடுக்கப்பட்டன என்பதையும் அறிய முடிகிறது.

### மகளிர் இல்லங்கள்

மாநாடுகள் பற்றிய செய்திகளோடு நில்லாமல் மகளிர் இல்லங்கள் பற்றிய செய்திகளையும் மாதர் மறுமணம் வெளியிட்டுள்ளது

குறிப்பிடத்தக்கது. மாதர் மறுமண சகாய சங்கத்தின் நான்காவது ஆண்டு அறிக்கை காட்டும் புள்ளிவிவரங்களை, அக்காலச் சமூகச் சூழலின் பின்னணியில் பார்க்கும்போது பிரமிப்பாக இருக்கிறது.

உபந்யாசங்கள் மூலமாகவும், மாஜிக்லாண்டர்ன் எனப்படும் படக்காட்சி மூலமாகவும், துண்டுப் பிரசுரங்கள் மூலமாகவும், புத்தகங்கள், மாதப்பதிப்பு இவற்றின் மூலமாகவும் தீவிரப் பிரசாரம் செய்யப்பட்டது என்பதை இவ்விதழின் வழி அறிய முடிகிறது. இவ் விதழில் காணப்படும் ஒரு விளம்பரம் புதுமையானதாக இருக்கிறது. அது ஒரு பென்சில் விளம்பரம்.

### பென்சில்

> 'விதவை மணமே விடுதலை அளிக்கும்' என்று அச்சிடப்பட்ட அழகான மஞ்சள் வர்ணப் பென்சில், சென்னை பென்சில் தொழிற்சாலையில் செய்யப்பட்டு டஜன் ஐந்தணா விலையில் விற்கப்பட்டு வருகிறது.

இப்படியாக இந்த அறிக்கை (இதழ். 2, ப.30) காட்டும் விளம்பர உத்தி படிப்பவர்களை மகிழ வைப்பதாய் அமைந்துள்ளது.

மேலும் மதுரை புனர்விவாக சமாஜம் (இதழ் - 3, பக். 2-7), மூல்தான் விதவா விவாஹ சகாய சபை (இதழ் - 8 பக். 37 - 38), அமராவதி புதூரின் மகளிர் இல்லம் (இதழ் - 9, பக். 22 - 33), ஹிந்து விதவா நிலையம் (இதழ் - 11, பக். 2-5) போன்ற பல்வேறு இல்லங்கள் பற்றிய செய்திகளும், அவை ஆற்றிய பணிகள் பற்றிய குறிப்புகளும் காணப்படுகின்றன. இவற்றுள் அமராவதி புதூரில் திரு. சொ. முருகப்பா அவர்களால் மாதர் மறுமண சகாய சங்கத்துக்கு உதவப்பட்ட மாளிகையில் ஏற்படுத்தப்பட்ட மகளிர் இல்லம் பற்றிய செய்திகள் இங்குக் குறிக்கத்தக்கன. இந்த இல்லம் தொடங்கப் பட்டதன் நோக்கமானது சொ. முருகப்பா அவர்களின் பேச்சின் மூலம் வெளிப்படுகிறது.

> விதவைகள் முன்னேற்றத்துக்கு இம்மாதிரி ஒரு மகளிர் இல்லம் அவசியமென்பதை உணர்ந்து அதற்காக முயற்சித்தோம். நாங்கள் சென்ற ஆண்டு நடத்திய கல்யாணத்துக்கு ஏற்பாடு செய்யுமுன், அந்த விதவைப் பெண்ணைத் தனியாக ஓர் இடத் தில் வைத்திருக்க வேண்டிய அவசியமேற்பட்டது. பல இடங்

> களிலும் முயற்சித்தோம். கிறிஸ்தவ மிஷனரிகள் வைத்திருக்கும் பெண்கள் விடுதியொன்றில் இடம் அகப்படுமா என்று பார்த்தோம். அங்கு மற்ற மதத்தினரை ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்று சொன்னார்கள். கடைசியாகச் சென்னை சென்று டாக்டர் முத்துலட்சுமிரெட்டி அவர்களிடம் ஒப்புவித்தோம்.
>
> ..............................................
>
> ..............................................
>
> இந்நாட்டு விதவைப் பெண்களுக்கு மூன்று வழிகள்தான் இருக்கின்றனவென்று காலஞ்சென்ற இராஜாராம் மோகன்ராய் கூறியிருக்கின்றார். ஒன்று கல்யாணம் செய்து வாழலாம்; அல்லது விபசாரஞ்செய்து வாழவேண்டும்; அதுவுமில்லாவிட்டால் தூக்குப் போட்டுக் கொண்டு சாக வேண்டும். அம்மாதிரி நிலைமை இன்னும் இருந்து வருகின்றது. ஆனால், பின்சொன்ன இரண்டுவழிகளும் அவசியப்படாமல் விதவைப் பெண்கள் மானத்துடன் வாழ்க்கை நடத்த வசதி செய்யவே இந்த இல்லம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது (இதழ் - 9, பக். 23-24).

ஆகவே சங்கத்தைச் சரணடைந்தால் பயம் இல்லை என்னும் அபயக் குறிப்பும், இதைப் படித்துப் பெண்கள் பயன்பெறவேண்டும் என்னும் ஆதங்கமும் ஆங்காங்கே வெளிப்படுவதை இவ்விதழ்வழி உணர முடிகிறது.

பலதார மணத்தை எதிர்த்த மாதர் மறுமணம் இதழ் வெளியிட்ட 'பலதார மணத்தடை மசோதா' பற்றிய செய்தியும் இங்குக் குறிப்பிடத்தக்கது.

> பலதார மணத்தடை மசோதா ஸ்ரீமதி ராதாபாய் சுப்பராயன், M.L.A (டில்லி).
>
> ஓர் இந்து தன் மனைவியின் அல்லது தன் கணவனுடைய வாழ்நாளில், வேறொரு பெண்ணை அல்லது புருஷனை மணஞ் செய்வது இந்துக் குடும்பங்களின் சமாதான, சந்தோஷகரமான வாழ்க்கைக்குக் கெடுதலாக இருப்பதால், இந்துக்களிடையே பலதார மணங்களை சட்டத்தின்மூலம் கட்டுப்படுத்தித் தடுக்கும் நோக்கத்துடன், இந்திய சட்டசபையில் முதன் முதலாக அங்கம் பெற்றிருக்கும் பெண்மணி ஸ்ரீமதி கே. ராதாபாய் சுப்பராயன் மத்திய அஸெம்பிளியில் ஒரு மசோதா கொண்டுவரப்போவ

தாக அறிவித்திருக்கிறார். இம்மசோதாவின் தேவைக்கு அவர்கள் கூறும் காரணங்களையும், மசோதாவின் முழு விவரத்தையும் அடியிற் காண்க (இதழ் - 12, ப. 35).

என்ற முன்னுரையோடு திருமதி ராதாபாய் சுப்பராயன் அறிவித்திருந்த மசோதா பற்றிய செய்திகள் விளக்கமாகத் தரப்பட்டுள்ளன.

மாதர் மறுமணம் ஐந்தாவது இதழின் பன்னிரண்டாம் பக்கத்தில் வெளிவந்துள்ள 'மாதர் மறுமணத்திற்கு மடாதிபதிகள் ஆதரவு' என்னும் செய்தியும் குறிப்பிடத்தக்கதாகும்.

## மாதர் மறுமணத்திற்கு மடாதிபதிகள் ஆதரவு

சீனந்தல் திருமூலாரண்யம் விஸ்வப்ராம் மடாதிபதி குருஸ்வாமிகள், செஞ்சி தாலுகா ஆலம்பூண்டிக்கு (21.7.27) பிரபவ - வரு ஆடி - மீ 6உ யில் விஜயம் செய்த சமயம் அடியிற் கண்டவாறு கையொப்பமளித்திருக்கிறார்கள்.

## விஷயம்

சீனந்தல் திருமூலாரண்யம் விஸ்வப்ராம்ஹண மடாதிபதி ஸ்ரீ ஜகத்குரு சிவலிங்காச்சார்ய குருஸ்வாமியார் ஆதீனம், சிவசங்கராச்சார்ய குருஸ்வாமியார் இந்த ரஜஸலாந்த்ர விதவா விவாஹ விஷயத்தில் எனக்கு மிக்க திருப்தியே. மேலும் இதற்கு விருத்த பாராஸர்யத்தில் ஆதாரமிருக்கின்றது. வேண்டும்போது அனுப்ப சித்தமாயிருக்கின்றோம்.

இங்ஙனம்
(கையொப்பம் நாகரபாஷையில்)
சிவசங்கராச்சாரிய
குருஸ்வாமிகள்
21.7.27

ஆலம்பூண்டி
விஜயம்
பிரபவ வரு. ஆடிமீ 62

இங்ஙனம் பல்வேறு குறிப்பிடத்தக்க செய்திகளையும் வெளியிட்டுள்ளது மாதர் மறுமணம் இதழ்.

### பத்திராதிபர் குறிப்புகள்

ஒவ்வோர் இதழிலும் 'பத்திராதிபர் குறிப்புகள்' என்னும் பகுதி காணப்படுகிறது. இப்பகுதியில் காணப்படும் குறிப்புகள் 'மாதர் மறுமணம்' இதழின் நோக்கத்தை வலுப்படுத்துவனவாய் அமைந்துள்ளன.

நான்காவது இதழின் 'பத்திராதிபர் குறிப்புகள்' பகுதியில் சொல்லப்பட்டிருக்கும் கருத்தும் குறிப்பிடத்தக்கது:

### ரிஜிஸ்டர் கல்யாணங்கள்

சென்னை மாகாணத்தில் 1936 - 37ஆம் வருஷத்தில் ரிஜிஸ்டர் மூலம் செய்யப்பட்ட கல்யாண விபரத்தைப் பற்றிய அரசாங்க அறிக்கை நமக்குக் கிடைத்திருக்கிறது. 36-37இல் சென்னை மாகாணத்திலும் அதற்குட்பட்ட தென்னாட்டு சமஸ்தானங்களி லும் நடைபெற்ற மொத்தக்கல்யாணம் 15,854. பெரும்பாலும் இந்த விவாகங்கள் இப்பகுதியிலுள்ள ஐரோப்பியர்களிடையும் இந்தியக் கிறிஸ்துவர்களிடையும் நடைபெற்றிருக்கின்றன. சொற்ப ஜனத்தொகையுள்ள இந்த சமூகத்தினரிடை நடைபெற் றுள்ள இவ்விவாகங்களில் ஒன்றுகூட பால்ய விவாகமன்று. வயது வந்தபிறகே விவாகமாயிருக்கிறது.

### கவனிக்கத்தக்க செய்திகள்

இந்த 15,854 விவாக மங்கையருள் 640 பேர் விதவைகள், தாராளமாகக் கிறிஸ்தவருள் விதாவ விவாகம் செய்து கொள்ளலா மென்றிருப்பதால் இத்தனை விதவைகள் விவாகம் செய்து கொண்டிருக்கின்றனர். விதவாவிவாக முறையில்லையென்றால் இப்பெண்களின் கதியென்னவென்பது பெரிய பிரச்சினையா கவேயிருக்கும். கன்னிப் பெண்களின் கல்யாண வயதைக் கவ னிக்கும்போது நிரவல் பதினேழே முக்கால். இதனால் கிறிஸ்தவ சமூக விவாகங்கள் நல்ல வயது வந்தபிறகே நடைபெறுகின்றன வென்பது விளங்கும். கல்யாணம் செய்துகொண்டிருக்கும் விதவைப் பெண்களின் வயது நிரவலில் 26½யாக இருக்கிறது. விதவா விவாகம் கூடாதென்பவர்களும் அப்படிச் செய்வதால் பெரிய கஷ்டம் வந்துவிடுமென்று கூறுபவர்களும் இச்செய்தி யைக் கவனித்தல் வேண்டும் (இதழ் - 4, ப.33).

இப்படிப் பல்வேறு தலைப்புகளில் மாதர் மறுமணச் சிந்தனை யைத் தூண்டக்கூடிய குறிப்புகள் தரப்பட்டுள்ளன.

### நிகழ்ச்சிகள்

'நிகழ்ச்சிகள்' என்னும் தலைப்பில் பல்வேறு நிகழ்ச்சிகள் பற்றிய செய்திகள் வெளியிடப்பட்டுள்ளன. ஜாதிவாரியாக, மாகாண வாரியாக விதவா விவாகக் கணக்கு, விதவைகளுக்கு விவாக உரிமை, விதவை களுக்கு உத்தியோகம், விதவா விவாகத்திற்குச் சமஸ்தான மன்னர்

உதவி, ஓமலூரில் விதவா விவாகம், பிராமணருள் கலப்பு விவாகம், வரதட்சணையை ஒழிக்க மசோதா என்று எங்கெங்கு காணினும் சக்தி யடா என்று பாரதி பாடியதுபோல, இத்தொகுதியின் 'நிகழ்ச்சிகள்' பகுதியில் எங்கெங்கு படித்தாலும் விதவா விவாகம் பற்றிய உண்மை நிகழ்ச்சிகளே செய்திகளாக அமைந்துள்ளன.

'அமராவதி புதூரில் ஆண்டு விழாவும் மறுமணமும்' என்னும் தலைப்பிலமைந்த செய்தி தனித்துவம் வாய்ந்தது:

### அமராவதி புதூரில் ஆண்டுவிழாவும் மறுமணமும்

செப்டம்பர் 15உ புதன்கிழமை மாலை 3 மணிக்கு காரைக்குடி மாதர் மறுமண சகாய சங்கத்தின் நான்காவது ஆண்டுவிழா சென்னை டாக்டர் ஸ்ரீமதி முத்துலட்சுமி ரெட்டியவர்கள் தலைமை யில் நடைபெற்றது.

...........................................

"கல்யாணத்தை விரும்பும் விதவைக் கன்னிப் பெண்ணாவாள்" "இவ்வளவு விதவைகளை வைத்திருப்பது வெடிச் சுரங்கத்தின் மேல் இருப்பதை ஒக்கும்".

இவ்வித வாக்கியங்கள் அச்சிடப்பட்ட அட்டைகள் தூண்களில் கட்டப்பட்டிருந்தன. "விதவா மணம் ஓங்குக" என்று ஜெண்டி வேலைப்பாடு செய்த போர்டு ஜ்வலித்துக் கொண்டிருந்தது.

...........................................

...........................................

இதன் பின்னர் நடைபெற்ற விதவா விவாகம் யாவரையும் மகிழ் வுறச் செய்தது.

...........................................

மணமகனான ஸ்ரீ பழனியப்ப செட்டியார் எழுந்து "இவ் விதவைப் பெண்மணியை இங்கு கூடியிருக்கும் சபையோர் சாட்சியாக நான் மணஞ்செய்து எனது இல்லற வாழ்க்கையின் துணை வியாக ஏற்றுக்கொள்கிறேன் ....... ..... ..... என்று சொல்லி மணமகள் ஸ்ரீமதி வள்ளியம்மைக்கு மாலை அணிவித்தார். .... ..... ..... பின்பு மணமக்களைப் பாராட்டி திரு. சொ. முருகப்பா, திரு. சா. கணேசன், ஊழியன் ஆசிரியர் திரு. ராய. சொக்க லிங்கன், ஹரிஜன் ரங்கண்ணா, ...................... ஸ்ரீமதி மு. மரகதவல்லியார் ...................................... ஆகியோர் பேசினர் (இதழ் - 2, பக்.43-44).

## விளம்பரங்கள்

மாதர் மறுமணம் பற்றிய செய்திகளைப் பரப்பத் தோன்றிய இவ் விதழில் பென்சிலுக்குக்கூட மாதர் மறுமணப் பென்சில் என்று பெய ரிடப்பட்டு விளம்பரம் செய்யப்பட்டுள்ளது.

மாதர் மறுமணப் பென்ஸில்
மங்களகரமான மஞ்சள்
நிறத்தில் கருப்பு மையிலே
ஆங்கிலத்திலும் தமிழிலும்
"விதவை மணமே விடுதலை அளிக்கும்"
என்று அச்சிடப்பட்ட அழகான லெட் பென்ஸில்
அழகுக்கு அழகு
நயத்துக்கு நயம்
விலையோ மலிவு
சுத்த சுதேசியம்

வாங்கி உபயோகித்து மகிழுங்கள். பள்ளிக்கூடங்களுக்குச் சிபார்சு செய்யுங்கள்.ர

விலை விபரம்

| | |
|---|---|
| 1 பென்ஸில் | 0-0-6 |
| 1 டஜன் | 0-5-0 |
| 1 குரோஸ் | 3-6-0 |

**மானேஜர்**
'மறுமணம்' ஆபீஸ்
சிவன்கோவில் மேலவீதி, காரைக்குடி
(இதழ் - 1, ப.48)

எல்லோருடைய உதடுகளும் மாதர் மறுமணம் என்று உச்சரிக்க வேண்டும் என்பதற்காக உருவாக்கப்பட்ட இந்த உத்தி பாராட்டுதற் குரியதாகும்.

மற்றொரு விளம்பரம் மிக மிக இன்றியமையாதது. மாதர் மறு மணம் என்பது வெறும் உதட்டளவில் இல்லை என்பதை உறுதிப்படுத் தும் விளம்பரம். அது 'மணமகன் தேவை' என்னும் விளம்பரம் ஆகும்.

### மணமகன் தேவை

1. பிராமண வகுப்பு. வயது சுமார் 25. போதிய தமிழ்ப் படிப்பு. இப்பெண்ணுக்குப் பிராமண வகுப்பில் மணமகன் தேவை. நல்ல வரும்படியுள்ளவராக இருக்க வேண்டும்.

2. விஸ்வ பிராமண வகுப்பு. வயது சுமார் 21. சொற்பமான தமிழ்ப் படிப்பு. விஸ்வகர்மா வகுப்பில் மாதம் 40 ரூபாய்க்குக் குறையாத வரும்படியுள்ள மணமகன் தேவை.

3. வேளாள வகுப்பு, வயது 18. தமிழ்ப் படிப்பு, சங்கீதப் பயிற்சி, தையல், பூவேலை, கைராட்டின நூல் நூற்றல் முதலிய கைத்தொழில் பயிற்சி உண்டு. உயர் ஜாதி ஹிந்து வகுப்பில் தகுந்த செல்வ நிலையுள்ள மணமகன் தேவை.

காரியதரிசி
மாதர் மறுமண சகாய சங்கம்
காரைக்குடி

25, 21, 18 என்று மணப்பெண்ணுக்குரிய வயதை நோக்கும் போது, பால்ய விவாகத்திற்கு எதிரான 'மாதர் மறுமண'த்தின் நோக்கம் நிறைவு செய்யப்பட்டுள்ளமை புலப்படுகிறது.

## ஒளிப்படங்கள்

வரிவரியாய் விளங்கித் தோன்றும் பல்வேறு வார்த்தைகளால் விளக்க முடியாத கருத்துக்களை ஒரு படம் தெளிவாய் வெளிப்படுத்தி விடும். மாதர் மறுமணம் இதழின் நோக்கத்தை நிறைவேற்றும் வகையில் அதன் போக்கும் அமைந்திருப்பதைக் காணமுடிகிறது. ஆம். விதவைக்கு மறுமணம் செய்யவேண்டும் என்று வாயளவில் மட்டும் சொல்லிக் கொண்டிராமல் செயலளவில் இறங்கியதற்குச் சாட்சியாய் அமைகின்றன இத்தொகுதியில் அமைந்துள்ள ஒளிப் படங்கள்.

புதுவயல் பழ. வீர. வீரப்ப செட்டியார் மகள் வள்ளியம்மை எனும் விதவைக்கு நிகழ்ந்த மறுமணம் தொடர்பான நான்கு ஒளிப் படங்கள் (இதழ் - 2, பக்.37, 38, 39, 40) இவ்விதழின் தொண்டு எத்தன்மையது என்பதை அனைவர்க்கும் உணர்த்தும் வண்ணம் அமைந்துள்ளன. விதவைப் பெண்ணுக்கு வாசனைத் தைலம் தடவி, பட்டுச்சேலை கட்டி, தோடு அணிவித்து மறுமணத்திற்குத் தயார் செய்த மாதர் மறுமண சகாய சங்கத்தினரால் தொடங்கப்பட்ட அமராவதி புதூர் மகளிர் இல்லத்தின் திறப்பு விழா தொடர்பான ஒளிப்படம் எட்டாவது இதழின் கடைசிப் பக்கத்தில் அமைந்து அணிசெய்கிறது.

## மதிப்புரைகள்

இந்தத் தொகுதியில் பல நூல்களுக்கான மதிப்புரைகள் இடம் பெற்றுள்ளன. அவற்றுள் குறிப்பிடத்தக்கவை இரண்டு. பாவேந்தரின் கவிதைத் தொகுப்புக்கான மதிப்புரை, அதன் தனித்தன்மை கருதி இங்கே முழுமையாக எடுத்தாளப்பட்டுள்ளது:

### மதிப்புரை
### பாரதிதாஸன் கவிதைகள்

(ஆசிரியர்: பாரதிதாஸன் (கனகசுப்புரத்னம்) வெளியிட்டவர். T.S. குஞ்சிதம் B.A.L.T., பக்கம் 208, விலை அணா 8, தபால் செலவு வேறு. கிடைக்குமிடம்: ஸ்ரீமதி T.S. குஞ்சிதம் B.A.L.T., வேணு கோபாலபுரம், கடலூர்.)

பாரதிதாஸன் கவிதைகள் தமிழ் மக்கட்குக் கிடைத்த தெள்ளமுத மாகுமென்று கூற விரும்புகிறோம். காதல் தேய்ந்து, கருணை குறைந்து, வாழ்வு பொய்யாகி, மதிப்பழிந்து உலகில் வாழ முன்னின்று தவிக்கும் இன்றைய தமிழகத்தில் இந்தத் தேனமுதக் கவிமழை புறப்படுகின்றது. பாரதியாரின் இன்பும், எழுச்சியும், உணர்ச்சியும் ஊக்கமும் நிறைந்த கவிதை வெள்ளத்தைத் தொடர்ந்து, பாரதிதாஸன் கவிதை புனைகின்றார். அங்கொரு பாட்டு இங்கொரு பாட்டாகத் தேடிப் படித்தின்புற்ற தமிழ் மக்கட்குத் தோழர் குஞ்சிதம் திரட்டிய தெள்ளமுதமாக இப்புத்தகம் வெளிவந்திருக்கிறது. முகப்பில் நூலாசிரியர் படம் மிளிர்கிறது. அடுத்து ஆசிரியரின் வாழ்க்கைக்குறிப்பு. அதனையடுத்து தோழர் ஈ.வெ.ரா., மந்திரி கனம் எஸ்.ரா., திரு.வ.ரா. ஆகியவர்களின் சிறப்புரைகள் விளங்குகின்றன. 1. காவியம், 2. இயற்கை, 3. காதல், 4. தமிழ், 5. பெண்ணுலகு, 6. புதிய உலகம், 7. பன்மணித்திரள் என இதன் பொருளடக்கம் பாகுபடுத்தப் பட்டிருக்கிறது. இதிலடங்கியுள்ள கவிதைத் தொடர் 72. உயர்ந்த காகிதம், அழகான பதிப்பு. விலையோ 8 அணாதான். தமிழக மக்கள் யாவரும் வாங்கிப் படித்துப் பாடி உணர்ந்து வாழ்க்கை யனுபவத்தில் கொண்டு இன்புறவேண்டிய நூல் இது என்பது நமது கருத்து. தமிழ் நாட்டிலுள்ள பள்ளிக்கூடங்கள் முழுமையும் கட்டாயப் பாடப் புத்தகமாக்கத்தக்கது. கல்வி இலாகா அதிகாரிகளும், பொதுஜனத் தலைவர்களும், முயன்று இப்புத்தகத்தின் பயனைத் தமிழக மாணவர்கள் அடையுமாறு முந்த வேண்டுமென்று விரும்புகிறோம். கவிச் செல்வர் பாரதி தாஸனும் அவர் கவியும் வாழ்க.

காலத்தை வென்று வாழும் ஆற்றல் மிக்க கவிதைகளின் தகுதிப் பாடுகளை முன்னுணர்ந்த நுட்பமான மதிப்பீடாக அமைந்துள்ளது இந்த மதிப்புரை.

இரண்டாவதாகக் குறிப்பிடத்தக்கது 'கிரகலக்ஷ்மி' என்னும் இதழ் பற்றிய மதிப்புரை.

### கிரகலக்ஷ்மி

(ஆசிரியர்:- எஸ். கிருஷ்ணன், B.A. பிரசுரிப்பவர் - டாக்டர் எஸ். சேஷகிரிராவ், ராயப்பேட்டை, சென்னை. தனிப்பிரதி அணா - 4)

உரிமையிழந்திருக்கும் பெண்ணுலகுக்குக் கிரகலக்ஷ்மி ஒரு பொக்கிஷமாக விளங்குகிறதென்று சொல்லலாம். ஏராளமான கட்டுரைகள், நல்ல தமிழ்நடை, உள்ளத்தைக் கவரும் ஓவியங்கள் நல்ல காகிதத்தில் அச்சிடப்பட்டு இடையிடையே சேர்க்கப்பட்டிருக்கின்றன. கிரகலக்ஷ்மி - கிரக நிர்வாகம் பற்றிய பல செய்திகளை வெளியிடுகிறாள். சமையல் பகுதி, வைத்தியப் பகுதி போன்ற சில பகுதிகளும், வாழ்க்கைச் சரித்திரங்களும் காணப்படுகின்றன. மொத்தத்தில் கிரகலக்ஷ்மி அனைவராலும் வாசிக்கக்கூடிய சிறந்த பத்திரிகையாகும். தமிழ்நாட்டு மக்கள் ஆதரிப்பார்களாக.

நல்ல நூல்களை, நல்ல இதழ்களை வாங்கிப் படிக்க வேண்டும் என்று அனைவரையும் தூண்டிவிடக்கூடிய பத்திரிகையாகவும் 'மாதர் மறுமணம்' திகழ்ந்தது என்பதை இம் மதிப்புரைகளின் மூலம் உணர முடிகிறது.

அதுமட்டுமல்லாமல், ஒரு கதையோ கட்டுரையோ முடிந்த பிறகு இருக்கும் சிறிதளவு இடத்தில் கூட,

மனைவி இறந்தால் விதவையைக் கொள் (இதழ் - 7, ப. 13)
விதவை கண்ணீர், வீட்டை அழிக்கும் (இதழ் - 7, ப - 28)
விதவையர்க்கு விடுதலை நல்குவீர் (இதழ் 10, ப - 8)
துணைமிழந்தாரை மணப்பது புண்ணியம் (இதழ் - 7, ப. 13)

போன்ற தொடர்களை அமைத்துள்ள நேர்த்தி இவ்விதழ் தன் நோக்கத்தை நிறைவேற்றுவதில் கொண்டுள்ள பற்றினை விளக்குவதாய் அமைந்துள்ளது.

முடிவுரை

'மாதர் மறுமணம்' என்னும் இவ்விதழ் ஒரு நல்ல இதழுக்குரிய அனைத்துக் குணங்களையும் பெற்றுத் திகழ்கிறது. மாதர் மறுமணம் பற்றிப் பேசவும் பலரும் தயங்கிய ஒரு காலகட்டத்தில், இவ்விதழ் தன்னுடைய ஒவ்வொரு பக்கத்திலும் மாதர் மறுமணம் பற்றிய செய்தி களையும் விதவைத் திருமணத்திற்கு உதவும் மகளிர் இல்லங்கள் போன்ற தொண்டு நிறுவனங்கள் குறித்தும் குறிப்பிட்டு, முழுக்க முழுக்க ஒரு மாதர் மறுமண ஆதரவு இதழாகத் திகழ்ந்தமை எண்ணுந் தோறும் வியக்கவைக்கிறது. இவ்விதழின் ஆசிரியரான திருமதி மரகதவல்லி (விதவை)யை மணந்த மாதர் மறுமண சகாய சங்கத்தின் செயலாளரான திரு. செ. முருகப்பா அவர்களின் பரந்த மனமும் விதவைகளின் கண்ணீர் துடைக்கப்படவேண்டும் என்னும் கருத்தில் அவர் காட்டிய உறுதியும் இவ்விதழின் வெற்றிக்குக் காரணம் எனலாம்.

முயற்சியுடையார் இகழ்ச்சியடையார் என்னும் பழமொழிக்குச் சான்றாய்த் திகழ்ந்து, தான் சொல்லக் கருதியதைச் செவ்வனே சொல்லி நல்ல் விளைவையும் அறுவடை செய்த இதழாக மாதர் மறுமணம் செயல்பட்டு வந்திருக்கிறது. பலரும் ஏற்றுக்கொள்ளத் தயங்குகின்ற - ஏற்றுக் கொள்ள மறுக்கின்ற ஒரு நோக்கத்தை - விதவைகளின் கண்ணீர் துடைக்கப்பட வேண்டும் என்னும் இலக்கைக் கொண்டு அதற்கேற்ற பாதையிலே தடைகளையெல்லாம் தகர்த் தெறிந்து வீறுநடை போட்ட இதழ் 'மாதர் மறுமணம்'.

இரண்டாவது ஆண்டு வெளிவந்த பன்னிரண்டு இதழ்களைக் கொண்டு தொகுத்த தகவல்களே நவில்தொறும் நூல்நயம் போல் சிறப்பானவையாக அமைந்துள்ளன. இன்னும் எல்லாத் தொகுதி களின் இதழ்களும் முழுமையாகக் கிடைக்கப் பெற்றிருந்தால் இவ் விதழின் முழுவீச்சும் போக்கும் புலப்பட்டிருக்கும். எப்படியெனினும் ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதமாய்க் கிடைக்கப்பெறாத பிற தொகுதிகளும் இத்தகு சிறப்பினவாய் அமைந்திருக்கும் என்பது கட்டுரையாளரின் நம்பிக்கை ஆகும். இவ்விதழின் பிற தொகுதிகள் எதிர்காலத்தில் கிடைக்கப் பெறும்போது இத்தொகுதியில் காண முடியாத வேறு பல பரிமாணங்களையும் காணும் வாய்ப்புக் கிடைக் கக் கூடும்.

# மங்கை

வ. உமா

## இதழின் வரலாறு

பெண்களுக்கென்று தொடங்கப் பெற்ற 'மங்கை' இதழ் டிசம்பர் 1945இல் முதன்முதலில் வெளியிடப்பட்டது. சென்னை இராயப்பேட்டையில் இயங்கிவந்த சக்தி காரியாலயம் வெளியிட்டுள்ள இவ்விதழின் பதிப்பாசிரியராக விளங்கியவர் குகப்ரியை அவர்கள். மங்கை காரியாலய சக்தி நிறுவனர் திரு. வை. கோவிந்தன் நடத்திய இதழாகும். 'சக்தி பிரஸ் லிமிடெட், சாந்தி பிரஸ், இராயப்பேட்டை, சென்னை' - என்ற முகவரியில் அச்சிடப்பட்டுள்ளது. இதன் விலை ரூ. ஒன்று என்றும் தபாலில் ரூ. ஒன்றேகால் என்றும் காணப்படுகிறது. 'ஒரு வருஷத்தில் வெளிவரும் 12 புத்தகங்களுக்கும் தபால் செலவுடன் ரூ.பன்னிரெண்டு' என்ற சந்தா விவரமும் வெளியிடப்பட்டுள்ளது.

## இதழின் அமைப்பு

மங்கையின் மேல் அட்டையில் முகப்பின் மேல் பகுதியில் கொட்டை எழுத்துக்களில் 'மங்கை' என்ற இதழின் பெயரும், கீழ்ப் பகுதியில் 'சக்தி காரியாலயம்' என்ற வெளியீட்டுப் பெயரும் அச்சிடப் பட்டுள்ளன. அதன் கீழ் இதழ் எண் குறிப்பிடப்பட்டுள்ளது.

நடுவே செந்தாமரை மலரில் வீணை வாசிக்கும் நிலையில் கலைத்தெய்வமான சரஸ்வதி தேவியின் தோற்றம் தீட்டப்பட்டுள்ளது. கலைவாணியின் வலது கால் மடித்த நிலையிலும், இடது கால் கீழே உள்ள அன்னப் பட்சியின்மீது வைத்த நிலையிலும் காணப்படுகின்றன. நான்கு கைகள் கொண்ட தேவியின் இரு கரங்கள் வீணை வாசிக்க,

ஒரு கை அருள்பாலிக்க, மற்றொரு கை கீழ் நோக்கி உள்ளது. தாமரை மலர்ந்துள்ள நீர்த்தடாகத்தில் மலரத் துடிக்கும் நிலையில் மேலும் இரு மொட்டுகள் உள்ளன. புத்தகத்தைத் திறந்தவுடன் முதல் பக்கத்தில் 'மங்கை - பெண்களின் புத்தகம்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. பதிப்பாசிரியர் 'குகப்ரியை' என்று நடுவில் அச்சிடப்பட்டுள்ளது.

கீழே சக்தி காரியாலயம், இராயப்பேட்டை, சென்னை என்ற முகவரிக்கு மேலாகக் கலங்கரை விளக்க முத்திரை காணப்படுகின்றது.

கலங்கரை விளக்கச் சின்னம் என்னவோ சக்தி காரியாலயத்தின் அடையாளச் சின்னமாக இருந்தாலும் இந்நிறுவனம் வெளியிட்டுள்ள இந்தப் பெண்கள் மாத இதழ் இது வெளிவந்த காலத்தில் நிச்சயமாக வாழ்க்கை என்ற தோணியில் அன்றாடப் பிரச்சினைகளில், போராட்டங்களில் தடுமாறியும், தத்தளித்தும் பயணித்துக் கொண்டிருந்த பெண்களுக்குச் சிந்தனைத் தெளிவு ஏற்படுத்துகின்ற - வழிகாட்டுகின்ற ஒளி வெள்ளம் பாய்ச்சும் கலங்கரை விளக்கமாக இருந்திருத்தல் வேண்டும் என்பது திண்ணம் என்று இதழ்களைப் படிக்கையில் விளங்குகின்றது.

இரண்டாம் பக்கத்தில் வெளியிடப்பட்ட ஆண்டு, விலை, அச்சிடப்படும் முகவரி ஆகியன குறிப்பிடப்பட்டுள்ளன. மூன்றாம் பக்கத்தில் பொருளடக்கம் காணப்படுகின்றது. நான்காம் பக்கத்தில் பெரும்பான்மை விளம்பரமும், சில இதழ்களில் வாழ்க்கை வரலாற்றுக் கட்டுரை நாயகிகளின் புகைப்படமும் இடம் பெற்றுள்ளன.

அதன் பின்னர் கட்டுரையோ, கதையோ தொடங்கித் தொடர்ந்து இடம் பெற்றுள்ளது.

ஏறத்தாழ 107 பக்கங்கள் கொண்ட மாத இதழாக இது வெளிவந்துள்ளது. கிரவுன் 1/8 அளவில் வந்துள்ள இவ்விதழ் உயர்ரகத் தாளில் அச்சிடப்பட்டுள்ளது. மிகத் தெளிவான அச்சில் ஆங்காங்கே தேவையான சித்திரங்களுடன் வெளிவந்துள்ளது. வாழ்க்கை வரலாற்றுக் கட்டுரைகளில் மட்டுமல்லாது, 'ஊசியும் நூலும்', 'அறுசுவை' போன்ற இல்லத்தரசிகளுக்குப் பயிற்றுவிக்கும் பொருட்டு வெளிவந்துள்ள கட்டுரைகளிலும்கூடப் புகைப்படங்கள் பிரசுரிக்கப்பட்டுள்ள பாங்கு இதழாசிரியரின் இதழ் ஈடுபாட்டை வெளிப்படுத்துவதாய் அமைந்துள்ளது.

இப்பத்திரிகையில் தலையங்கம் காணப்படவில்லை. விளம் பரங்கள் காணப்படுகின்றன. ஆனால் அவை பெரும்பாலும் சக்தி காரி யாலய வெளியீடுகளான சிறுகதைத் தொகுப்புகள், நாவல்கள், கட் டுரைத் தொகுப்பு முதலியவை குறித்த விளம்பரங்களே. ஓரிரு இதழ் களில் மட்டும் பாபாலால் வைர நகைக் கடை விளம்பரமும், கூந்தல் தைல விளம்பரமும், புதுக்கோட்டை பவானி பிரசுர விளம்பரமும் இடம் பெற்றுள்ளன. இந்த விளம்பரங்கள் கூடப் பத்திரிகையின் தொடக் கத்தில் பொருளடக்கத்திற்கு அடுத்து 4ஆம் பக்கத்திலும் இதழின் இறுதிப் பக்கத்திலுமே வெளிவந்துள்ளன. பத்திரிகையின் இடைப் பட்ட பகுதியில் விளம்பரங்கள் கிடையாது.

## இதழின் நோக்கம்

'மங்கை - பெண்களின் புத்தகம்' என்ற குறிப்புடன் வெளியாகி யுள்ள இப்பத்திரிகையின் முதல் இதழில் வெளியாகியுள்ள பதிப் புரையே இவ்விதழின் நோக்கம் என்று கொள்ளலாம்.

> பெண்களுக்கெனத் தனியே 'மங்கை' எனும் பெயருடன் ஒவ்வொரு மாதமும் ஒரு புத்தகம் வெளியிடத் தீர்மானித்திருக் கிறோம்.
>
> மங்கையில் குடும்பப் பாதுகாப்பு, வீட்டு வேலை, குழந்தை வளர்ப்பு, குழந்தை மனோதத்துவம், உடலோம்புதல், சமையல், தையல், கட்டுரை, கதை, கவிதை, பெரியார் வரலாறு, சயன்ஸ் இன்னும் பல விஷயங்களும் அடங்கியிருக்கும்.

என்று அப் பதிப்புரையில் காணப்படுகின்றது. இதழின் இந்த நோக்க மானது இக்கட்டுரையாளருக்குக் காணக்கிடைத்த 12 இதழ்களிலும் எவ்வளவு சீரிய முறையில் சிறப்பாக நிறைவேற்றப்பட்டுள்ளது என்பதுவே இவ்வாய்வின் இனிவரும் வெளிப்பாடாக இருக்கும் என்பது தெளிவு.

## ஆய்வுக்குக் கிடைத்த இதழ்கள்

டிசம்பர் 1945இல் தொடங்கப்பட்ட முதல் இதழிலிருந்து மார்ச்சு 1947இல் வெளியான 13ஆவது இதழ் வரைதான் ஆய்வுக்குக் கிடைத்தன. இடையில் மூன்றாவது இதழ் இத்தொகுப்பில் இடம் பெறவில்லை. எனவே ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டவை 12 மங்கை இதழ்கள்.

### இதழின் உள்ளடக்கம்

இந்தப் பன்னிரெண்டு இதழ்களில் கட்டுரைகள், கதைகள், ஓரிரு கவிதைகள், துணுக்குகள் ஆகியவை வெளியாகியுள்ளன.

### கட்டுரைகள் – வாழ்க்கை வரலாற்றுக் கட்டுரைகள்

கட்டுரைகளும், கதைகளுமே பெரும்பாலும் காணப்படுகின்றன. அவற்றிலும் சிறப்பிடம் பெறுவது கட்டுரைகளே! வாழ்க்கை வரலாற்றுக் கட்டுரைகள், பெண்கள், குழந்தைகள் தொடர்பான கட்டுரைகள், கடிதக் கட்டுரைகள், மருத்துவக் கட்டுரைகள், சமையல் குறிப்புக் கட்டுரைகள், உணவே மருந்தாக விளங்கும் உணவுப் பொருட்கள் குறித்த கட்டுரைகள், தையற்கலை பயிற்றுவிக்கும் கட்டுரைகள், அழகுக் குறிப்புக் கட்டுரைகள், இவை தவிர பொது வான சில கட்டுரைகள் என்று கட்டுரைகள் முதன்மையான இடம் வகிக்கின்றன.

பன்னிரெண்டு இதழ்களில் கடைசி இதழைத் தவிர மீதி 11 இதழ்களில் வாழ்க்கை வரலாற்றுக் கட்டுரைகள் காணப்படுகின்றன.

அன்னை கஸ்தூரிபா, கவியரசி சரோஜினி தேவி, மாண்டிசோரி அம்மையார், விஜயலட்சுமி பண்டிட், மாடம் க்யூரி, கல்பனா தத், அருணா ஆஸப் அலி, டாக்டர் அன்னி பெஸன்ட், மார்க்ரட் கஸின்ஸ், ஹெலன் கெல்லர், ஆர்.எஸ். சுப்புலட்சுமி அம்மாள் ஆகியோரே இந்தப் பதினொரு வாழ்க்கை வரலாற்றுக் கட்டுரைகளை அலங் கரிக்கும் உதாரணப் பெண்மணிகள் ஆவர்.

இந்த வாழ்க்கை வரலாற்றுக் கட்டுரைகள் ஒவ்வொன்றும் மணிமணியான கட்டுரைகள். இப்படியும் வாழ முடியுமா என்று வியந்து நோக்க வைக்கும் பெண்மணிகளின் வரலாறுகள், சில வாழ்க்கைச் சம்பவங்கள் - ஆனால் இவர்கள் ஒன்றும் கற்பனை மாந்தர்கள் அல்லரே! இம்மியளவும் கற்பனையோ கனவுகளோ இடம்பெறாத நிஜ வாழ்வின் சுவடுகளைத் தானே இக்கட்டுரைகளில் பதிய வைத்திருக் கிறார்கள் என்பதை உணரும்போது பெண்களுக்கு வழிகாட்டும் ஒளி விளக்காக, ஊக்கமும், ஆக்கமும் அளிக்கும் உந்து சக்தியாக, தன்னம்பிக்கையும், தளராத நெஞ்சுறுதியும் நல்கும் எழுத்துச் சித்தி ரங்களாக இவை விளங்குகின்றன என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

அப்படிப்பட்ட கட்டுரைகளில் சிலவற்றின் சாரங்களை மட்டும் நாம் இங்குக் காண்போம்.

முதலில், மகாத்மா என்ற, உலகின் - இந்த நூற்றாண்டின் மாமனிதரின் பின்புலமாக விளங்கிய அன்னை கஸ்தூரிபாவைப் பற்றிய கட்டுரையைக் காண்போம்:

'அன்னை கஸ்தூரிபா' என்று தலைப்பிட்டுக் கட்டுரை எழுதியுள்ள கட்டுரையாசிரியர் சைலபாலா, அன்னையைப் பற்றிக் குறிப்பிடுகையில்,

> அவர் செய்த காரியங்களிலோ, பெற்ற வெற்றிகளிலோ அதிகமாய் வர்ணிக்கக் கூடியதாக ஒன்றையும் காணவில்லை. ஆனால் அவரைப் பற்றின விசேஷ அம்சம், சொல்ல முடியாததும், அளக்க முடியாததும் எழுத்துகளுக்கு எட்டாததுமான ஓர் அபூர்வ வஸ்துவாக இருக்கிறது. அதுதான் அவர் குணத்தின் மகிமை. அன்பு, பக்தி, பலனை எதிர்பாராத தன்னலமற்ற காரிய சித்தி இவைகளின் மனித உருவமே கஸ்தூரிபா

என்று குறிப்பிடுகிறார்.

காந்திஜிக்குக் கஸ்தூரிபா தாயாகவும் தோழியாகவும் செவிலியாகவும் பணியாளாகவும் பலவகைகளில் பணியாற்றி வந்ததைப் பலரும் அறிவர். ஆனால் அநேகமாக நம்மில் பலர் அறியாத கஸ்தூரிபாவின் வாழ்க்கைச் சம்பவமொன்றை இக்கட்டுரை கூறுகிறது.

ஒருமுறை பார்ஸாத் நகரில் நடந்த பெண்கள் கூட்டத்தைப் போலீஸார் தாக்கியதாகச் செய்தி பத்திரிகைகளில் வந்தது. அதில் பாதிக்கப்பட்ட பெண்கள் அபாயகரமான நிலையில் இருப்பதாகச் செய்திகள் வந்தன. கஸ்தூரிபாவைப் புறப்பட்டு வருமாறு கூறி தந்திகள் வந்தன.

'மௌனமாகப் போலீஸாரை எதிர்த்து நின்ற அந்த வீரப் பெண் மணிகளை நான் பார்க்க வேண்டும். அங்கே போய் அவர்களுக்கு உற்சாகம் ஊட்ட வேண்டும். 'பாபு' இருந்தால் அவர்களுக்கு ரொம்பவும் ஆறுதலாயிருக்கும். ஆனால், என்ன செய்வது? அவர் சிறைச் சாலைக்குள்ளே அல்லவா இருக்கிறார்?' என்று சொல்லிய 'பா' சாப்பாட்டை அரைகுறையாக முடித்துக்கொண்டு உடனே புறப்பட்டார்.

எளிய மண்குடிசையில் யாருக்கும் தெரியாமல் பல மணிநேரம் ராட்டை நூற்றுக் கொண்டிருந்தவர், ஒரு பெரிய தளபதி போல அங்கு மிங்கும் விரைந்து சென்று நிலைமையைக் கவனித்துத் தொண்டர் களுக்கு ஆலோசனை கூறி வந்தார். இவர் பார்ஸாத்திற்கும் அதைச் சுற்றியுள்ள நூற்றுக்கணக்கான கிராமங்களுக்கும் போய், போராட்டத் திற்கு வேண்டியன செய்து வந்தார். இவரைப் பார்த்துத் தொண்டர்கள் அதிசயித்தார்கள். காந்திஜியே புதிய வடிவில் வந்து விட்டதுபோல் தோன்றியது அவர்களுக்கு. காந்திஜியின் பொறுப்பை ஏற்று அவ்வளவு வேலையையும் தாம் பார்ப்பது எளிதல்ல என்றாலும் கஸ்தூரிபா அதில் ஒரு குறையும் வைக்கவில்லை!

இச்சம்பவம் நாம் அறியாதது. அமைதியே உருவான கஸ்தூரிபா அவசர காலத்தில் அரும்பணி செய்துள்ளார் என்பது அவரின் அளவு கடந்த தேசப்பற்றை நமக்குத் தெளிவாக எடுத்து இயம்புகின்றது.

அடுத்ததாகக் கவியரசி சரோஜினி தேவியைப் பற்றிய கட்டுரை யில் சில துளிகளைக் காண்போம். வங்கதேசம் ஈன்றெடுத்த மகான்கள் பலர். ஜயதேவர், ஸ்ரீ கிருஷ்ண சைதன்யர், ஸ்ரீ இராமகிருஷ்ண பரம ஹம்சர், சுவாமி விவேகானந்தர் போன்ற ஞானிகளும், கவி இரவீந்திரநாத் தாகூர், விஞ்ஞானி ஜகதீஸ் சந்திரபோஸ் போன்ற அரிய மேதைகளும் அவதரித்த திருநாடு இது. இந்தியாவின் தாரக மந்திரமான 'வந்தே மாதரம்' என்ற கோஷத்தைத் தேசத்துக்கு அளித்த பங்கிம் சந்திரர் பிறந்ததும் இங்குதான்.

இத்தகைய பெருமை வாய்ந்த வங்க தேசத்தைச் சேர்ந்தவர் தான் கவியரசி சரோஜினியும். கட்டுரையாசிரியர், கோகலே போன்றும் சுரேந்திரநாத் பானர்ஜி போன்றும் மிக்க நாவன்மை படைத்தவராய் சரோஜினி விளங்கினார் என்று குறிப்பிடுகிறார்.

முதலில் ஹோம்ரூல் இயக்கத்திலும், பின்னர்க் காந்தியடிகளின் தலைமையின்கீழ் நின்றும் தேசப்பணியாற்றினார். கவியரசி, கவிக் குயில் என்றெல்லாம் போற்றப்பட்ட இவரை மகாத்மா 'என் இனிய சிறிய வானம்பாடி' என்று அழைப்பது வழக்கம்.

கவியரசியின் கவிதைகளின் வனப்பு, செழுமை, கற்பனை செறிந்த அவரின் வர்ணனைகள், அழகிய சொல்லோவியங்கள் இவற்றை

அவரின் சில கவிதைகளின் துணை கொண்டு விளக்கும் ஆசிரியை, அவரின் 'வளையல்காரி', 'பல்லக்குத் தூக்கிகள்', 'மருதோன்றி' போன்ற கவிதைகளிலிருந்து சிற்சில வரிகளின் பொருளையும், கருத்தையும் எடுத்துக்கூறி இவற்றை நிறுவுகிறார். ஆனால் ஒரு மொழியில் உள்ள படைப்பின் அழகை மற்றொரு மொழியில் அப்படியே எடுத்தியம் புவதென்பது அவ்வளவு நிறைவைத் தராத ஒரு முயற்சி என்று கூறிக் கவியரசியின் கவிதைகளின் அழகைத் தன்னால் அப்படியே விவரிக்க முடியவில்லை என்றும் கூறுகிறார்.

இதற்கு உதாரணமாக அவர் துளசிதாசரின் இராமாயணத்தை யும் மேற்கோள் காட்டுகிறார்.

> மிதிலையில் இராமன் வருவதைக் கண்ட தோழி அவனது பேரெழிலைச் சீதையிடம் சொல்லும் பொழுது 'நான் அவரைக் கண்டேன். ஆனால் உள்ளபடி உரைக்கக் கண்களுக்கு நாவில்லை, நாவிற்குக் கண்களில்லை', என்றாள்

என்ற இடத்தைத் தனக்குச் சாதகமாக எடுத்துக்காட்டுகிறார், ஆசிரியை சரஸா அவர்கள்.

கவியரசி சரோஜினி நாயுடு தன் கவித்திறத்தாலும் நாவன்மை யாலும், நாட்டுப் பற்றினாலும் இத்தேசத்திற்காற்றிய அரும்பணியை அழகாக எடுத்துயம்புகிறது இக்கட்டுரை.

கஸ்தூரிபா பற்றியும், கவிக்குயில் சரோஜினி தேவி பற்றியுமா வது நாம் ஓரளவேனும் அறிவோம். ஆனால் விஜயலட்சுமி பண்டிட் பற்றி நமக்கு அவ்வளவாகத் தெரியாது. புகழ் பெற்ற நேரு குடும்பத் தில் பிறந்த அவர் தன் பங்குக்கு நாட்டுக்கு ஆற்றிய தொண்டுகள் குறித்து நாம் அறியோம். இதைச் சிறிதேனும் பூர்த்தி செய்கிறது அவர் குறித்த இக்கட்டுரை.

அவரின் கீர்த்தியினை எடுத்தியம்புவதில் இக்கட்டுரையாசிரியர் ஸ்வர்ணம் வெற்றி பெற்றுள்ளார் என்றே சொல்ல வேண்டும்.

நாமகளும், பூமகளும் சேர்ந்து ஓரிடத்தில் தங்குவதில்லை என்ற பொதுவான வாசகம் நேரு குடும்பத்தாரைப் பொறுத்தவரையில் பொய்யாகிப் போனது. பண்டிதர் மோதிலால் நேரு பண்டிதர் என்ற

பட்டத்திற்குத் தகுந்தபடி ஒப்பற்ற கல்வியறிவும் சட்ட ஞானமும் வாய்ந்தவர். அபரிமிதமான செல்வ வளமும் படைத்தவர். அவர் தேசத்திற்குச் செய்த சேவையைப் பற்றிச் சொல்ல வேண்டுவதில்லை.

> செல்வத்திலும் போக வாழ்க்கையிலும் மிதந்து கொண்டிருந்த எங்கள் குடும்பத்தில் மகாத்மாவின் வருகை எங்கள் நிலைமையையே முற்றிலும் மாற்றிவிட்டது. அவருடைய வசீகரமான பிரபாவத்திற்கு நானும் அடிமையானேன். அவர் வகுத்துள்ள, புதிய முறையைப் பின்பற்றுவதில் நானும் மனமொத்து உழைக்க ஆரம்பித்தேன்

என்று விஜயலட்சுமி சொல்லியுள்ளதை ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

'ஆகவே நான் மந்திரியானேன்' என்ற தலைப்பில் விஜயலட்சுமி பண்டிட் எழுதியுள்ள புத்தகத்தில் கீழ்வருமாறு குறிப்பிடுவதாகக் கட்டுரையாசிரியர் மேற்கோள் காட்டியுள்ளார்.

> வாழ்க்கையில் ஏற்படும் தொல்லைகள், எதிர்ப்புகள், பிறர் சுட்டிக் காட்டும் குற்றங் குறைகள், வெறுப்பால் சுமத்தப்படும் போலிக் குற்றச்சாட்டுகள் இவைகள் எல்லாம் எதிர்த்துப் போராடத்தக்கவை. இவைகளைச் சமாளித்து வெற்றி பெறுவதில்தான் உண்மையான ஆனந்தமிருக்கிறது. இப்படி இராமல் வாழ்க்கை, கிளர்ச்சியற்றதாக இருந்திருக்குமானால் அதில் இன்பமே இராது.

என்று விஜயலட்சுமி குறிப்பிடுவதாக அந்நூலில் ஓரிடத்தில் சொல்கிறார்.

1937இல் பண்டித கோவிந்த வல்லப பந்த் இவரை மந்திரிப் பதவியை ஏற்றுக்கொள்ளுமாறு பணித்தபோது முதலில் சற்றுத் தயங்கிய விஜயலட்சுமி, பின்னர் 'ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே என்ற வாக்கை மெய்ப்பிக்கவே நான் பதவி ஏற்கிறேன். எந்தக் காரியத்தையும் பெண்களால் சாதிக்க முடியும். அது குடித்தனமாயிருந்தாலும் சரி, துரைத்தனமாயிருந்தாலும் சரி என்று செய்து காண்பிக்க வேணும். அதிலும் ஆடவர்களை விடத் திறம்படச் செய்து காண்பிக்க வேண்டும் என்ற ஆவல்தான் காரணம், அதனால்தான் ஒப்புக்கொண்டேன்' என்று கூறி ஏற்றார் என்பதைத் திருமதி ஸ்வர்ணம் குறிப்பிடுகிறார்.

திருமதி விஜயலட்சுமியின் வளர்ச்சிக்கு மூலகாரணமாகவும் ஆணிவேராகவும் விளங்கிய அவரின் கணவர் ஸ்ரீமான் ரஞ்சித் சீதாராம் பண்டிட் பற்றியும் ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

கட்டுரையின் பிற்பகுதியில் சுமார் மூன்றரை பக்கங்கள் 'ஹில்டா வீரம் பூல்டெர்' என்ற அமெரிக்கர் விஜயலட்சுமி பற்றிச் சிறப்பாகக் கொண்டாடி எழுதியுள்ளதை அப்படியே தந்திருப்பது கட்டுரையின் சிறப்பு.

ஏனெனில் வெளிநாட்டவர் ஒருவர் நம் தேசப் பெண்மணியைப் பற்றி எவ்வளவு உயரிய கருத்தைக் கொண்டுள்ளார் என்பதை அறிய முடிகிறபோது நம் உள்ளம் பன்மடங்கு பூரிப்படைகின்றது. அந்த அயல்நாட்டறிஞர் திருமதி விஜயலட்சுமி பண்டிட் பற்றி எழுதியுள்ள வற்றிலிருந்து சில வரிகளை மட்டுமாவது இங்குக் குறிப்பிடுதல் நலம்.

> இந்தியாவிலிருந்து பல பிரபலஸ்தர்கள் அமெரிக்காவுக்கு வந்திருக்கிறார்கள். ஆனால் இந்தியாவின் பிரச்சினைகளை அமெரிக்கர்கள் சரியாகப் புரிந்து கொள்ளும்படி செய்யக்கூடிய தகுதி வாய்ந்தவர் ஸ்ரீமதி விஜயலட்சுமி ஒருவர்தான். இதனால் மற்றவர்களுக்கு இழுக்கொன்றுமில்லை. ஸ்ரீமதி விஜயலட்சுமியின் இந்தப் பெருமைக்குப் பல காரணங்கள் உண்டு. அவற்றுள் முக்கியமானவை, இந்தியாவின் ஒப்புயர்வற்ற வீரர் ஜவஹரின் சகோதரி என்பதும் முதன் முதலாக மந்திரி பதவி வகித்த பெண்மணி என்பதும்தான்.

அமெரிக்காவில் விஜயலட்சுமி பண்டிட் நம் தாய்நாட்டுக்காக எத்தகைய அபூர்வ சேவை புரிந்தார் என்பதையெல்லாம் மேன்மேலும் அவர் சொல்லிச் சென்றுள்ளார்.

நாட்டு நலனுக்குத் தங்களை அர்ப்பணித்துக் கொண்ட நேரு குடும்பத்தின் வாரிசான இவருக்கு, சமூக அக்கறையும், நாட்டமும், சிறந்த நல்லறிவும் இருப்பதில் வியப்புக்கு இடமில்லை. குறிப்பாக, இவரின் நல்லுரைகள் நடுத்தரக் குடும்பத்துப் பெண்களுக்கு மிகச் சிறந்த, பொருத்தமான அறிவுரைகளாக இருப்பது பாராட்டத்தக்கது.

கட்டுரையின் இறுதியில் ஸ்வர்ணம், திருமதி விஜயலட்சுமி பண்டிட்டைப் பாரதி கண்ட புதுமைப் பெண்ணாகச் சித்திரித்துள்ள தானது கட்டுரையைப் படித்து முடிக்கையில் நமக்கு மிகவும் பொருத்த

மானதாகத் தோன்றுகிறது. இவ்வரிசையில் திருமதி அருணா ஆஸப் அலியின் கட்டுரையைத் திருமதி பத்மினி அவர்கள் எழுதியுள்ளார்கள்.

1942ஆம் ஆண்டு இந்தியாவில் ஆகஸ்டுப் புரட்சி நடந்தது. சர்க்காருடன் தீவிரமாகச் சண்டை போடுவது, சர்க்காருக்குத் துன் பத்தை உண்டாக்குவது, போலீசார் கண்களில் அகப்படாமல் தலை மறைவாய் இருப்பது என்ற ரீதியில் நடத்தப்பட்ட போராட்டம் அது. மிகுந்த கெட்டிக்கார ஆண்கள் கூட ஏதாவது ஒரு சமயத்தில் இந்த மறைமுக வாழ்க்கையின்போது போலீசிடம் சிக்கிவிடுவார்கள். ஆனால் அருணா ஆஸப் அலி என்ற இந்த வீரப் பெண்மணி மட்டும் கடைசி வரை போலீஸிடம் அகப்படவே இல்லை. எல்லா மாகாணங்களுக்கும் சென்று தேசபக்தர்களுக்கு ஊக்கம் தந்து, எவ்வளவோ வீரர்களை உருவாக்கிக் கட்சி நிர்வாகத்திலும் மகா கெட்டிக்காரர் என்று பெயர் பெற்றிருந்ததாகக் கட்டுரையாளர் குறிப்பிடுகின்றார்.

இவ்விதமாகத் தேசப் போராட்ட வாழ்வில் அவர் வெற்றி பெற் றமைக்குக் காரணம் என்ன என்று சொல்லுகையில்,

> எடுத்த காரியத்தில் கவனம் முழுவதையும் செலுத்துபவர்களின் எளிய வாழ்க்கையில், டாம்பீகமான புடவைகளோ, பவுடர்களோ, லிப்ஸ்டிக்குகளோ, ஹை ஹீல்ஸ் ஷூக்களோ கிடையாது; சாதாரண கதர்த் துணிதான். பொதுஜன சேவை ஒன்றே பிரதானம். எப்பேர்ப்பட்ட அபாயத்தையும் பொருட்படுத்தாது தாய்நாட்டுக்கு ஊழியம் செய்கிறார். தைரியமும், நெஞ்சுத் துணிவுமோ அபாரம். இதனால்தான் 1942 ஆம் வருஷ இயக்கத்தின் "ஜான்சி ராணி" என்று அருணாவை அழைக்கிறார்கள். அந்த இயக்கத்தில் ஜெயப்பிரகாஷ் நாராயண், அச்சுபட்ட வர்த்தன், லோஹியா ஆகியவர்களுக்கு உள்ள பங்கு அருணாவுக்கும் உண்டு

என்று ஆசிரியர் மிக அழகாக அருணாவின் எளிய வாழ்வு மற்றும் குணநலன்கள் எல்லாவற்றையும் இந்த ஒரு பத்தியிலேயே படம் பிடித்துக் காட்டிவிடுகிறார்.

பிறப்பால் வங்காளத்தைச் சேர்ந்த ஹிந்துப் பெண்மணியாகிய இவர் தமது 18ஆம் வயதில் ஆஸப் அலி என்கிற 40 வயது முஸ்லீம் கனவானைக் கண்டு காதல் கொண்டு மத வேறுபாடுகளுக்கு அப்பாற் பட்டுப் பிடிவாதமாக அவரையே மணந்து கொண்டார்.

வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின்போது மகாத்மா, நேரு, ஆஸப் அலி என்று கிடைத்த தலைவர்களை எல்லாம் ஆங்கிலேய அரசு ஜெயிலுக்கு அனுப்பியபோது, தாம் தலைமறைவாக இருந்து கொரில்லாப் போர் நடத்தி ஜனத்திரளை உற்சாகப்படுத்தி வந்தார் அருணா. அச்சமயம் தமது அருமைத் தாயை இழந்தார் அவர். அன்னையின் கடைசி மூச்சு பிரியும்போதுகூட மகள் அருகில் இல்லை. அன்னை நாட்டுக்காக ஏதோ ஒரு மூலையில் இருந்து உழைத்துக் கொண்டிருந்தார்.

> வீரத்திலும் தீரத்திலும் போர்த்திறமையிலும் ஜான்சிராணியின் பரம்பரையைச் சேர்ந்தவர் அருணா. இந்தியப் பெண்குலப் பெருமையை நிலைநாட்டுவதுடன் ஆண்களுக்கும் வழிகாட்டிகளில் ஒருவராகத் திகழும் அருணா நீடுழி வாழ வேண்டும்

என்று கட்டுரையின் இறுதியில் ஆசிரியர் திருமதி பத்மினி குறிப்பிட்டுள்ளார்.

> நாணும் அச்சமும் நாய்கட்கு வேண்டுமாம்
> ஞான நல்லறம் வீர சுதந்திரம்
> பேணு நற்குடிப் பெண்ணின் குணங்களாம்

என்ற பாரதியின் பாடல் வரிகளை மெய்ப்பித்த வீரப் பெண்மணியாக நமக்குள்ளே ஓங்கி நெடிதுயர்ந்து நிற்கும் திருமதி அருணா ஆஸப் அலி பெண்குலத்துக்கே ஒரு பெருமிதச் சின்னமாக விளங்குவதை உணர முடிகிறது.

அடுத்ததாக, டாக்டர் அன்னி பெசன்ட் அம்மையாரைப் பற்றிய கட்டுரையை எடுத்துக் கொள்வோம். திருமதி சாவித்திரி ராஜன் எழுதியுள்ள இக்கட்டுரையில்,

'வையத்து நாட்டில் எல்லாம் தாழ்வுற்று வறுமை மிஞ்சி, விடுதலை தவறிக் கெட்டுப் பாழ்பட்டு' நிற்கும் பாரத தேசத்தை நாடித் தொண்டாற்ற ஆயிரம் மைல்களுக்கு அப்பாலிருந்து தம் தாய் நாட்டையும், தம் தேச மக்களையும் விட்டுவிட்டு வந்த தன்னலம் கருதாத பெருந்தகை அன்னி பெஸன்ட் என்று குறிப்பிடுகிறார்.

'மாசற்ற வெள்ளை ஆடை, சொக்க வெள்ளியையொத்த கூந்தல், கண்களிலே வீரம், உள்ளத்தே கனிவு, குரலிலே இனிமை, வாழ்விலே

வளமை', என்று பெஸன்ட் அம்மையை வர்ணிக்கிறார் ஆசிரியர். 'அன்னி பெஸன்ட் அம்மையை நினைத்தாலே அவரின் பிரசங்கங்கள் நம் காதில் ஒலிக்கும். இந்தியாவின் சுதந்திரப் போருக்குப் போர் வீரர் களைத்' திரட்டும் முரசாக அமைந்தன அவர் பிரசங்கங்கள்.

> 'இந்தியாவே எழுந்திரு' என்றும், 'சீர்திருத்துங்கள்' என்றும், பண்டைய பண்பின் இலக்கியங்களைப் புது யுகத்தில் அமை யுங்கள் என்றும் கூவி அழைத்தார். நம் மக்களிடையே சுதந்திர உணர்வைப் பரவ வைத்து, தேச முன்னேற்றத்திற்குப் பல துறை களிலும் பாடுபட்டுத் தேசிய காங்கிரஸிலும் தலைமை வகித்துச் சரித்திரத்திலே இடம் பெற்று விட்டார் அம்மையார்

என்று கட்டுரையாளர் குறிப்பிடுகிறார்.

> பெசன்ட் அம்மையார் சுதந்திரப் போர் வீரர், மத ஆசிரியர், சமூகச் சீர்திருத்தவாதி, இலக்கிய நிபுணர். உலகச் சுகாதாரப் பாலத்தை அச்சாணியாகக் கொண்ட தியாசபி என்ற திவ்ய ஞானக்கொள்கை; அடையாறில் இருக்கும் சங்கம், அம்மையை மத ஆசிரியராக உலகத்திற்குப் பறைசாற்றி நிற்கிறது. அந்தப் பற்றுள்ளவர் தான் அதற்குத் தலைவணங்குவர். ஆனால் அம்மையார் செய் திருக்கும் இலக்கியம்தான் என்றென்றும் உலகத்தில் அழியாத இடம் பெற முடியும். உயர்ந்த இங்கிலிஷ் நடையில், உள்ளன்பு ததும்பும் அவருடைய சொற்பொழிவுகளும், கட்டுரைகளும், சுய சரித்திரமும் இலக்கிய உலகின் அரிய பொக்கிஷங்கள்

என்று அவரின் இலக்கியங்களை மிகவும் சிறப்பித்துக் கூறுகிறார் ஆசிரியர்.

பாரதியின் கவிதைகளைப் பல நூறு படிகள் அச்சிட்டுப் பாரதியின் கவித்திறனை முதன் முதலில் மக்களிடையே பரப்பிய வி. கிருஷ்ணசாமி அய்யர் அன்னி பெசன்ட்டின் 'இந்தியாவின் முன்னேற்றத்தில் தியாச பியின் தொண்டு' என்ற சொற்பொழிவையும் கேட்டுவிட்டு உடனே அதை ஆயிரம் படி அச்சிட்டு மாணாக்கர்களுக்கெல்லாம் வழங்கினா ராம். அம்மையாரின் 'உலக மதம்', 'Hindu Ideals', 'Story of the Great war', 'Rama the King' போன்ற புத்தகங்கள் கல்விச் சாலைகளில் பாடப் புத்தகங்களாக வைக்கப்பட வேண்டிய படைப்புகள் என்கிறார் கட்டுரையாசிரியர்.

கல்வியில் சீர்திருத்தம் தேவை என்றுணர்ந்து சர்க்கார் மூலம் படிக்கும் அடிமையாக்கும் கல்வி கூடாது என்றும் தேசியக் கல்வியே நம் இளைஞர்களுக்குத் தேவை என்றும் வலியுறுத்தினார்; சர்க்கார் தொடர்பே இல்லாமல் 'மத்திய இந்து கலாசாலை' என்று காசியில் அவர் நிறுவிய கலாசாலைதான் பின்னர் காசி சர்வ கலாசாலையாக வளர்ந்து பண்டித மாளவியா, சர்வபள்ளி இராதாகிருஷ்ணன் ஆகியோ ரைக் கொண்டதாக விளங்கியது. இந்திய மாதர் சங்கம் அவரால் தான் உருப்பெற்றது. "ஒரு சமூகத்தின் முன்னேற்றம் அவர்கள் பெண்களின் நிலைகளிலேயே காணப்படுகிறது" என்று பெசன்ட் கூறியுள்ளார்.

இவ்விதமாகப் பெசன்ட் அம்மையாரின் பன்முகங்களையும், பல்கிப் பெருகிய பணிகளையும் பல்வேறு திறன்களையும், அவரின் அனைத்து ஆற்றல்களையும், அவர் இந்நாட்டு முன்னேற்றத்திற்கு அர்ப்பணித்த அற்புதமான செய்திகளையும் திருமதி சாவித்திரி ராஜன் நிறைவாகச் சொல்லிச் சென்றுள்ளார்.

வாழ்க்கை வரலாற்றுக் கட்டுரை வரிசையில் இறுதியாகப் பத்மினி எழுதியுள்ள சகோதரி ஆர்.எஸ். சுப்புலட்சுமி அவர்களின் வரலாற்றுக் கட்டுரையைக் காண்போம்.

> தனக்கு வரும் கஷ்டங்களிலிருந்து நீந்திக் கரையேறுவது கஷ்டமானாலும் ஒவ்வொருவரும் எப்படியாவது தன்னைத் தானே காப்பாற்றிக்கொண்டு கரையேற முயலுவர், வெற்றியும் பெறுவர். ஆனால் தனக்கு வந்திருக்கும் சுகமோ துக்கமோ பிற ருக்கு வந்தால் அவர்கள் கதி என்ன என்று யோசிப்பது மனிதப் பண்பில் இல்லை. பிறர் கஷ்டத்தைக்கண்டு மனங்கலங்கி இவர் களுக்கு நாம் ஏதாவது செய்ய வேண்டும் என்ற உறுதியைக் கொண்டு, தனித்து நின்று செயலாற்றியவர் நமது சகோதரி சுப்புலக்ஷ்மி அம்மாள்

என்று கட்டுரையின் தொடக்கத்தில் கூறுகிறார் ஆசிரியர்.

அக்காலத்தில் பெண்களின் நிலையே மோசமாக இருந்தது. அதிலும் விதவைகளின் நிலை மிகவும் வருந்தத்தக்க நிலையில் இருந் தது. விதவைகளாகிவிட்ட பெண்கள் இருந்தும் இறந்தவருக்குச் சமமே.

இந்தக் காலகட்டத்தில்தான் சுப்புலட்சுமி அம்மாள் தம் பன்னி ரெண்டாம் வயதில் விதவையானார். ஆனால் அவரது தாய் தந்தையர்

அறிவாளிகளாகவும் முற்போக்குச் சிந்தனையுடையவர்களாகவும் விளங்கியதால் இவருக்குக் கல்வி புகட்டினர்.

கல்வி தந்த மனோ தைரியமும், இயற்கையாகவே அமைந்த சேவை மனப்பான்மையும், தம்மைப் போன்ற விதவைகளின் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்படுத்தவும் அவர்களின் நலிவுற்ற வாழ்வைச் சீர் திருத்தவும் இவருக்குப் பயன்பட்டன.

சமூகத்தில் விதவைகளின் பரிதாபமான நிலையை மாற்ற ஈஸ்வர சந்திர வித்யாசாகர், இராஜாராம் மோகன்ராய் போன்றோர் போராடி மறுவிவாகம் செய்து கொள்ளும் சுதந்திரத்தைச் சட்டப் பூர்வமாக அளித்தார்கள். ஆனால் விதவைகள் தாம் மீண்டும் மணம் செய்து கொள்ள விரும்பாவிட்டால் மறுபடியும் சம்சார சாகரத்தில் சுழலாமல் தங்கள் காலிலேயே நின்று பிறருக்கும் தொண்டாற்றி வாழலாம் என்ற எண்ணத்தை ஏற்படுத்தியவர் சகோதரி சுப்புலட்சுமி அம்மாள்.

இவரால் ஏற்படுத்தப்பட்ட விதவா ஆசிரமம், இந்தத் துறை யில் இந்தியா முழுவதிலுமே தலைசிறந்த நிறுவனமாகும். சென்னை கடற்கரைச் சாலையில் உள்ள ஐஸ்ஹவுஸில்தான் இந்த விதவா ஆசிரமம் நடைபெற்று வந்தது.

துயரங்களில் சிக்கித் துவண்டு, தன்னிடம் வரும் பெண்களுக்கு அன்பையும், கல்வியையும் அள்ளி வழங்கினார். துக்கத்தில் மூழ்கிய வர்கள் இவர் தயவை நாடி வர, இம்மாதிரிப் பெண்களின் எண்ணிக்கை அதிகரித்தது. அவரது பொறுப்பும் கூடியது. எனவே தன் ஒருத்தியால் இக்காரியத்தைச் செய்ய முடியாதென்று சர்க்காருக்கு எடுத்துக் காட்டி சர்க்காரால் நடத்தப்பெறும் அமைப்பாக இதை மாற்றிவிட்டார். கணவனால் கைவிடப்பட்டவர்களும், அவர்களால் இம்சிக்கப்பட்ட வர்களும் கண்ணீரும், கம்பலையுமாக இவரிடம் சரணாகதி அடைந் தார்கள். அவர்களுக்கு வழிதேட அவர் 'ஸ்ரீ சாரதா வித்யாலயம்' என்ற கல்வி நிறுவனத்தை உருவாக்கினார்.

பொருளுதவிக்காகத் தாமே வீடு வீடாகவும், ஊர் ஊராகவும் கப்பலேறி லண்டன் வரை சென்றும் பொருள் திரட்டி இதை ஒரு மிகப் பெரிய நிறுவனமாக ஆக்கினார். முதலில் திருவல்லிக்கேணியில் சிறியதாகத் தொடங்கப்பட்ட இந்த நிறுவனம் பின்னர் மயிலை வந்து இறுதியாக மாம்பலத்தில் நிலைபெற்றது. இதன் விடுதி மட்டும் நிர்க்கதியான பெண்களுக்கென்று வைத்துக் கொள்ளப்பட, பள்ளி

பொதுவாக வைக்கப்பட்டது. ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சரின் மனைவியாகிய சாரதா தேவியாரின் பெயரில் ஆரம்பிக்கப்பட்ட இந் நிறுவனம் பின்னர் இராமகிருஷ்ணா பாடசாலையுடன் சேர்க்கப்பட்டு, சுப்புலட்சுமி அவர்கள் மேற்பார்வையில் நடத்தப்பெற்றது.

'தமிழ்நாட்டில் பெண் கல்விக்கு வித்தூன்றியவர். இவரால் வளர்ந்து, பண்படுத்தப்பட்டு, தகுதி அடைந்த பெண்கள் இன்று குமரி யிலிருந்து இமயம் வரை பரவி வாழ்ந்து வருகிறார்கள்' என்று தன் கட்டுரையை முடிக்கிறார் ஆசிரியர்.

சகோதரி ஆர்.எஸ். சுப்புலட்சுமி அம்மாள் அவர்களின் முயற்சி களும் செயலாக்கமும் தீவிரத் தொண்டுகளும் படிக்கப்படிக்கப் பிரமிப் பூட்டுகின்றன. இப்படியெல்லாம் தன்னலமற்ற சேவை புரிந்தவர்கள் இந்த மண்ணில் வாழ்ந்தார்கள் என்பதை அறிகையில் ஆச்சரியமேற் படும் அதே வேளையில், இவர்களையெல்லாம் முன்னோடிகளாகக் கொண்டு நாமும் இம்மண்ணில் நல்லவண்ணம் வாழவேண்டும்; நமது வாழ்க்கை பிறருக்கும் பயன்படவேண்டும் என்ற உந்துதல் இவற்றைப் படிக்கும் அனைவருக்கும் உண்டாகும்.

## பெண்கள் தொடர்பான கட்டுரைகள்

அடுத்ததாகப் பெண்கள் குறித்த கட்டுரைகள் அநேகமாக எல்லா இதழ்களிலும் இடம் பெற்றுள்ளன. 'பெண்களும் பேனாவும்', 'பெண்களும் சொத்துரிமையும்', 'பெண்களும் நகையும்', 'நம் பெண்கள்', 'பெண்களும் பத்திரிகை உலகமும்', 'படித்த பெண்கள்', 'ஆடவரும் ஆண்டாளும்', 'ஆடவர் கண்கள்', 'பெண்ணும் தொண்டும்', 'பெண் உல கம்', 'அம்மா', 'பெண்கள்', 'சமூகத்தில் குடும்ப ஸ்திரீகளின் அந்தஸ்து' ஆகியவையே பெண்கள் தொடர்பான கட்டுரைகள்.

இவற்றில் 'பெண்களும் பத்திரிகைகளும்' என்ற சியாமளா பால கிருஷ்ணனின் கட்டுரையின் சாரத்தை முதலில் காண்போம்.

ஒரு தேசத்தின் உயர் வாழ்வின் ஜீவநாடி அதன் பத்திரிகைகள் தான். ஏனெனில் அத்தேச மக்களின் தினசரி வாழ்க்கை, கலை, சாஸ்திர வளர்ச்சி, இலட்சியங்கள் அனைத்தும் அவற்றில் பிரதிபலிக்கின்றன.

இதழுலகம் - அரசியல் உலகம், இலக்கியம் ஆகியவற்றுடன் நெருங்கிய தொடர்புடையதாய் உள்ளது. அரசியலில் பெண்களின்

பங்கு ஓரளவு முன்னேற்றம் கண்டுள்ளது. சரோஜினி தேவி, விஜய லட்சுமி பண்டிட் போன்ற இவர்களை இத்துறையில் குறிப்பிடலாம். அரசியல் வாழ்க்கையின் முரசொலியாய் ஒலிக்கும் இதழிலும் பெண்கள் பங்கு கொள்ள வேண்டும். அன்னி பெஸன்ட் இதைச் செய்து காண்பித்தார்.

பத்திரிகை உலகில் சில சீர்திருத்தங்களைக் கொண்டுவர நம்மால் முடியும். உதாரணமாக நம் தினசரி, வார, மாதப் பத்திரிகை களில் வெளிவரும் விளம்பரப் படங்கள் பல ஆபாசமாய் இருக்கின்றன; நம் கௌரவத்தைக் குறைவுபடுத்துகின்றன. பெண்கள் எதிர்த்து இறங்கினால் இந்த ஆபாசங்களைக் களைந்துவிடலாம்.

பத்திரிகை உலகுடன் அரசியல், பொருளாதார உலகம் சம்பந்தப் பட்டிருப்பது போல, இலக்கிய உலகமும் நெருங்கிய சம்பந்தப் பட்டிருக்கிறது. இலக்கியத்தில் செல்வாக்கு கம்பனைவிட ஔவைக்கே. கம்பனைவிட ஔவையின் பெயரும் பாடல்களும் நம் நாட்டில் அதிக மாய் வழங்குகின்றன. கம்பன் படித்தவருக்கு மட்டும் சொந்தம்; ஔவையோ பொது மக்களின் நாவிலும் சிறுவர் சிறுமிகளின் நாவிலும் வாசம் செய்கிறாள்.

தற்கால மறுமலர்ச்சி இலக்கியத்திலும் நாம் நமக்குரிய மரியா தையை நிலைநாட்டி இருக்கிறோம். ஆகவே பத்திரிகை உலகிலும் நம் செல்வாக்கை நிலைநாட்ட வேண்டும். இன்று நம் நாட்டின் நன் மைக்கும், உலகின் நன்மைக்கும் இது அவசியம்.

பத்திரிகைகளில் பெண்களின் பணி குறித்து நயமாய் விளக்கும் இக்கட்டுரை பத்திரிகைப் பணியைத் தேர்ந்தெடுக்கும் பெண்களுக்கு ஒரு பாடமாக விளங்கக் கூடிய தன்மையுள்ளது.

சேது அம்மாள் எழுதிய 'பெண் உலகம்' 8ஆவது இதழில் இடம் பெற்றுள்ளது.

"பெண்கள் பொறுமையைத் தங்கள் அணிகலனாகக் கொள்ள வேண்டும். இன்சொல்லையும், நல்லொழுக்கத்தையும் தம் உயிரா கக் கொள்ள வேண்டும். நல்ல நூல்களைக் கசடறக் கற்று, கற்ற வழி யில் நிற்கப் பழகுதல் வேண்டும். பெரியோர் வார்த்தைகளை அமு தாகக் கைக்கொள்ள வேண்டும்.

'மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்த' வேண்டும். மாதர்கள் ஆடவர்களின் கால்பந்து அல்ல என்பதைப் பெண்கள் தங்கள் குணநலன்களால், நற்காரியங்களால் வெளிப்படுத்த வேண்டும்.

பெண் உலகம் சீர்திருத்த முற்றாலும் உண்மைக்கும், பொறுமைக்கும், அடக்கத்திற்கும், தெய்வ பக்திக்கும், இல்லற நெறி மாறுபடாமல் நடத்தற்கும் ஒரு சிறிதும் மாறுபடாமல் இருக்கும் திட்டங்களை அப்பெண், உலகத்திலிருந்து தள்ளக் கூடாது.

பெண் உலகம் என்றால் அருள் உலகமாக, கருணை உலகமாக, சுதந்திர உலகமாக, தூய உலகமாக, தெய்வ உலகமாக, ஒற்றுமைக் காற்று வீசும் உலகமாகத் திகழ நம்மால் ஆன முயற்சிகள் யாவற்றையும் செய்ய முயல்வோம்." இவ்வாறு ஆசிரியை பெண்களின் உலகம் எப்படி இருக்க வேண்டும் என்ற தமது கருத்துக்களைத் தெளிவாகச் சொல்லிச் செல்கிறார்.

'அம்மா' என்ற கட்டுரையை மங்கை இதழ் ஆசிரியை குகப்ரியை எழுதியுள்ளார்.

"மழையைக் கண்டு ஒளிந்து குளிருக்குப் போர்வையைப் போர்த்திக் கொண்டு உலகம் ஓடி ஒளிகின்றது. ஆனால் சிப்பி கடலடியில் இருந்து மேலே வந்து அந்த மழைத்துளியைத் தாங்கிப் பன்னெடுங் காலம் தன்னகத்தே வைத்துக் காக்கின்றது. இதன் பயனாய் அழகிய நல்முத்தை உருவாக்குகின்றது.

ஓடி ஒளிந்த உலகம் முத்தை விலை பேச ஓடி வருகின்றது. அதிக விலை போடுகிறது. அரசன் மகுடத்தை அலங்கரிக்கவும், தெய்வத்தின் திருமுடியை அலங்கரிக்கவும், பெண்களின் மேனியை அணி செய்யவும் உகந்தது இந் நல்முத்து என்று கொண்டாடுகின்றது... ஆனால் அதை நல்கிய தாய்ச் சிப்பியை உலகம் கண்டு கொள்வதில்லை. அதனால் சிப்பி வருந்துவதுமில்லை. தன் குழந்தையைப் புகழ்வதைக் கேட்டுத் தாய்ச்சிப்பிப் பூரிக்கின்றது.

தாயின் அம்சமெல்லாம் இதுவே. தன் நலம், தன் புகழ், தன் பெருமை என்று எள்ளளவும் நோக்காது தன் குழந்தையின் பொருட்டே வாழும் தியாக வாழ்க்கைதான் தாயினுடையது."

அருமையான, எளிதில் புரியக்கூடிய உதாரணமாக ஒரு நிகழ்வைச் சொல்லி அதன் மூலம் சொல்ல வந்த கருத்தை அதாவது தாய்மையின் சிறப்பை இறுதியில் ஓரிரு வரிகளில் சொல்லியுள்ள பாங்கு மனத்தில் ஆழப்பதிகின்றது.

ஆர்.எஸ். சுப்புலக்ஷ்மி அம்மாள் எழுதியுள்ள 'பெண்கள்' என்ற கட்டுரையில், கூறப்பட்டுள்ள கருத்துக்களைக் காண்போம்:

"பெண்கள் தங்களுக்குள் அடங்கியிருப்பதற்கு வேண்டிய விதமாகவும் தங்களுக்குச் சார்பாகவும் ஆண்கள் ஏற்படுத்தியிருக்கும் சட்டங்களையெல்லாம் தகர்த்தெறிந்துவிட்டு ஆண், பெண் இருபாலருக்கும் சமமான உரிமைகளைக் கொடுக்கும் சட்டங்களை ஏற்படுத்த வேண்டும்.

வீட்டுக்குள்ளேயே அடைபட்டுப் புருஷனுக்கு அடங்கி அவனது கோபதாபங்களையெல்லாம் பொறுத்துக் கொண்டிருக்கும் நிலைமை மாறவேண்டும். பெண்கள் வெளிவந்து ஜனசமூக முன்னேற்றத்திற்கும், பெண்களது நன்மைக்கும் தங்கள் வாழ்க்கையை ஈடுபடுத்த வேண்டும். இவ்விதச் சீர்திருத்த முன்னேற்ற வேலைகளைச் செய்வதற்குப் பெண்கள் முன்வர வேண்டுமானால், அதற்கு அவர்களுக்கு உயர்ந்த கல்வியும் சுதந்திரமும் வேண்டும்.

தற்காலம் நமக்கு அவசியமாக வேண்டியது உத்தமமான கல்வி. சிறந்த நூலறிவும், கேள்வியறிவும் வேண்டும். வேத காலங்களிலும் சங்க காலங்களிலும் பெண்கள் நன்றாகப் படித்திருந்தனர். பிற்காலத்தில் புருஷர்களது சூழ்ச்சியினால் பெண்கள் கல்வியறிவு இல்லாமல் (அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு?) தங்கள் உயர்ந்த நிலையிலிருந்து நழுவி, புருஷர்களுக்கு அடிமைகளாய் வீட்டிலேயே அடைபட்டு, கணவனாலும் தம் சொந்த மக்களாலும் கூட ஒன்றும் தெரியாதவர்களாக அலட்சியம் செய்து ஒடுக்கப்படும் நிலைமைக்கு வந்து விட்டனர்.

'பெண்கள் சிறந்த வித்தை கற்றுப் பண்புடன் கூடியவர்களாய், தங்கள் வாழ்க்கையைப் புனிதமான ஆத்ம சேவை, மத சேவை, ஜன சேவை, பாஷா சேவை இவற்றில் ஈடுபடுத்திப் பிற நாட்டினருக்கும் கூட வழிகாட்டிகளாயிருக்கும்படி பகவான் அனுக்கிரகிப்பாராக' "

என்று தன் கட்டுரையைத் திருமதி சுப்புலட்சுமி அம்மாள் நிறைவு செய்துள்ளார்கள்.

'நம் பெண்கள்' என்ற தம் கட்டுரையில் வ.வே. சுப்ரமணிய ஐயர் எழுதியுள்ள கருத்துக்களைக் காண்போம்.

" 'பூர்வ காலத்தில் நம் நாட்டில் பெண்களின் நிலைமை மேம்பட்டிருந்தது. பெண்கள் கல்வி கற்றிருந்தார்கள், சபையில் பண்டிதர்களுடன் தர்க்கம் செய்துள்ளனர். அக்காலத்தில் சுயம்வரமும் கர்ந்தர்வ விவாகமும் நடைபெற்றுள்ளன.

ஆனால் இன்றோ பெண்களின் நிலை அவ்வளவு திருப்திகரமாக இல்லை', என்று வ.வே.சு. ஐயர் கூறியுள்ளார்.

குடும்ப நிர்வாகம் முழுமையும், பெண்களே கவனிக்க வேண்டும். ஆணின் தலையீடு இருக்கக் கூடாது. ஆலோசனை வேண்டுமானால் சொல்லலாம். அதே போன்று உத்தியோகம், கொடுக்கல் வாங்கல், வியாபாரம் போன்றவற்றில் பெண்களின் ஆலோசனைகளைக் கேட்டு ஆண்கள் முடிவெடுத்தல் நலம்."

மேலும் பெண்களுக்குக் கல்வி அவசியம் என்கிறார். அப்போது தான் ஆண்மகன் அன்பு ஓரிடம் என்றும், ரஸனை, தர்க்கம், அறிவு பூர்வமான விவாதம் இவற்றிற்காக வேறிடம் என்றும் தேடிப் போக மாட்டார்கள் என்றும் கூறுகிறார்.

பெண்கள் மேலைநாட்டு அலங்கார மோகத்தைக் கைவிட வேண்டும், பெண்கள் மனம் வைத்தால் வரதட்சனை வாங்கும் கேட்டினை ஒழித்து விடலாம், என்றும் கூறுகிறார்.

"சௌக்கிய வாழ்க்கை வாழும் பெண்கள் பொது வாழ்க்கையில் பங்கு கொண்டு, சமூகத்தில் நிலவும் பசிப்பிணி, துர் வழக்கம், கோணல் வாழ்க்கை, குழந்தைத் தொழிலாளர்களைப் பணிக்கு இருத்துதல் போன்ற சமூகக் கேடுகளைக் களையப் பாடுபட வேண்டும்" என்று மேலும் வலியுறுத்துகிறார்.

வ.வே.சு. ஐயர் அவர்களின் கட்டுரை பெண்களின் வாழ்க்கை உயர்வடைய, மேன்மையுற, நல்ல ஆலோசனைகளை எடுத்துரைப்பது உணர்ந்து போற்றத்தக்கது.

பெண்களும் சொத்துரிமையும் - என்று ஸுதா என்பவர் ஒரு கட்டுரை எழுதியுள்ளார். இக்கட்டுரை எழுதப்பட்ட காலகட்டத்தில் இது பற்றிய சர்ச்சை எழுந்துள்ளது. எனவே, பெண்களுக்குச் சொத்துரிமை எவ்வளவு அவசியம் என்று எடுத்துக் காட்டும் விதத்தில் கட்டுரை அமைந்துள்ளது.

"எவ்வளவு முன்னேற்றம் ஏற்பட்டாலும் பெண்களுக்குச் சொத்து ரிமை ஏற்படும் வரையில் அடிமைத்தனம் நீங்காது. தினந்தோறும் நாம் பால்ய விதவைகள் படும் கஷ்டங்களைப் பார்க்கிறோம். பணமிராத காரணத்தால் அநேகம் விதவைகள் உறவினர்கள் வீட்டில் எவ்வளவோ துன்பங்களுக்கும், இழி சொல்லுக்கும் ஆளாகி வருகிறார்கள். விதவை கள் என்றாலே இழிவாக எண்ணும் நிலைமைக்கு வந்துவிட்டது.

வரதட்சணைக் கொடுமை அதிகமாகப் பரவி வருகிறது. பிள் ளையைப் பெற்றவர்கள், சொத்தெல்லாம் பெண்ணின் சகோதரர் களுக்கே போய்ச் சேருவதால், கிடைத்த மட்டில் வரதட்சணையாவது வாங்குவோம் என்று எண்ணுகிறார்கள்.

மேலும் வரதட்சணையாக வாங்கும் பணம் அநேகமாகப் பிள் ளையின் பெற்றோர்களை அடைகிறதே ஒழிய அதனால் பெண்களுக்கு ஓர் உபயோகமும் இருப்பதில்லை.

பெண்களுக்குச் சொத்துரிமை ஏற்பட்டால்தான் வரதட்சணைக் கொடுமை நீங்க வழி செய்ய முடியும்.

ஒவ்வொரு புருஷனும் தன்னிடம் பணம் இருப்பதால்தான் மனைவி தனக்கு அடங்கி இருக்கிறாள் என்னும் எண்ணத்தை ஒழிக்க வேண்டும். அநேகக் குடும்பங்களில் கணவன் இருக்கும் பொழுதே ஸ்திரீகள் சாப்பாட்டுக்குக் கூடக் கஷ்டப்படுகிறார்கள். குடும்பத் தைக் கவனியாமல் எவ்வளவோ கஷ்டப்படுத்தும் புருஷர்களும் இருக்கிறார்கள்.

ஸ்த்ரீகள் கையில் தன்னுடையது என்று சொல்லிக் கொள்ளும் பணம் இருந்தால் இது மாதிரியான குடும்பங்களை எப்படியாவது நடத்த உதவுமல்லவா? - இவ்வாறு ஆசிரியர் ஸுதா சமூகத்தில்

பெண்களின் நிலையை எடுத்துக்காட்டி அது மேம்படச் சொத்துரிமை அவசியம் என்கிறார்.

இவ்வரிசையில் இறுதியாகச் சமூகத்தில் குடும்ப ஸ்த்ரீகளின் அந்தஸ்து என்ற ஸ்ரீமதி கிருஷ்ணா ஹத்தீஸிங் அவர்களின் கட்டுரையைக் காண்போம். இக்கட்டுரை, வெளியில் பணிக்குச் செல்லாமல், வீட்டு வேலைகளைக் கவனித்துக்கொண்டு, குடும்பத்தைப் பராமரிக்கும் பணியிலேயே முழுவதும் ஈடுபட்டு வரும் பெரும்பாலான பெண்களின் நிலை என்னவென்று ஆய்வு செய்யும் நோக்கில் அமைந்துள்ளது.

" 'House Wife' - என்று ஆங்கிலத்தில் சொல்வார்கள். இவர்கள் சமூகத்தில் உள்ள வேறு எவருக்கும் எள்ளளவும் தாழ்ந்தவர்கள் அல்லர். அவர்களுக்கும், வெளியே சென்று வேலை பார்க்கும் பெண்ணுக்கோ அல்லது ஒரு தொழிலாளிக்கோ கிடைக்கக் கூடிய முதுமைக் கால உபகாரச் சம்பளம், வைத்திய உதவிகள் மற்றும் இலவசக் கல்வி வசதிகள் ஆகியவற்றை அரசாங்கம் அளிக்கவேண்டும்" என்று ஆசிரியர் கூறுகின்றார்.

'வேறு வித வேலைகளைப் போலவே ஒரு குடும்பப் பெண்ணின் சேவைகளும் சமூகத்திற்கு அத்தியாவசியமானவை' என்று கூறும் அவர், 'ஆண், பெண் சமத்துவம் வீட்டிலிருந்தே துவங்க வேண்டும். வீட்டையொட்டிய கடமை, பொறுப்புகளைப் பையன்களும், பெண்களும் சரிசமமாகப் பங்கிட்டுக் கொள்ளக் கற்க வேண்டும்.'

'குழந்தையிலிருந்தே குடும்ப வாழ்வில் சமத்துவம் பேணும் பழக்கம், பின்னால் தேசியப் பொது வாழ்வில் ஆண், பெண் வேற்றுமைகளை ஒழிக்க வழிகோலும்' என்று மேலும் சொல்கின்றார்.

'ஒரு பெண் சம்பாதிக்கும்போது அந்தச் சாம்பாத்தியத்தில் அவளுக்கு முழுப் பாத்தியதையும் இருக்க வேண்டும். தன் உடமைகளை இஷ்டம்போல் காத்துக் கொள்ளும் உரிமையும் அவளுக்கு இருக்க வேண்டும். தன் குழந்தைகளிடம் தனக்குள்ள கடமைகளைச் செலுத்தவும், சமூகத்தில் ஒரு பொருளாதார அந்தஸ்து பெற்று விளங்கவும், அவளுக்கெனத் தனி வருவாய் இருத்தல் அவசியம்' என்று திருமதி கிருஷ்ணா ஹத்தீஸிங் வலியுறுத்திச் சொல்கிறார்.

முன்னர் குறிப்பிட்டது போன்று பெண்கள் தொடர்பான மேலும் பல கட்டுரைகள் இவ்விதழ்களில் உள்ளன. இவை அனைத்துமே பொதுவாகப் 'பெண் கல்வியைப்' பெரிதும் வலியுறுத்துகின்றன. சமூகத்தில் பெண்களின் நிலை ஆண்களின் நிலைக்குச் சற்றும் தாழ்ந்ததாக இன்றிச் சமத்துவம் பெற்றதாக அமையவேண்டும் என்ற கருத்தும் புலனாகின்றது. வரதட்சிணைக் கொடுமையும், பால்ய விதவைகளின் துன்பமும் ஓரளவுக்கு நீங்க வேண்டுமாயின், பெண்கள் சொத்துரிமை பெறுவது அவசியம் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

பெண்கள் சமூக வாழ்வில் பங்கு கொள்ள வேண்டும் என்று கூறும் இக்கட்டுரைகள், தன்னைச் சுற்றி நடக்கும் நிகழ்வுகளில், சமுதாயப் போக்குகளில், நாட்டு நடப்புகளில் நாட்டம் உள்ளவர்களாக இருந்து அவர்கள் தங்கள் அறிவை மேம்படுத்திக் கொள்ள வேண்டியதன் அவசியத்தை வற்புறுத்துகின்றன. இவையனைத்தும் சிறப்பாக, அழகாக, நளினமாக, நுண்மையாக வெளிப்படுத்தப் பட்டுள்ளமை தனித்துக் குறிப்பிட வேண்டிய ஒன்றாகும்.

சில குறிப்பிடத்தக்க பொதுக் கட்டுரைகள்:

பொதுவான கட்டுரைகள் என்று எடுத்துக் கொண்டால், 'நான் பிறந்த ஊர்', 'முகஸ்துதி', 'சிறந்த எழுத்தாளராக வேணுமா?', 'ஜப்பானிய மங்கையர்', 'நாங்கள்', 'எங்கள் கலாசாலை', 'ஒரு துளி எண்ணெய்', 'பாட்டி சொல்லுகிறாள்', 'இரவலும் இலக்கியமும்', 'எழுத்தாளர் உலகில் பிரவேசம்', 'வெளுக்கும் முறை', 'சின்ன விஷயம் தான்', 'நமது மதம் எது?', 'நமது சமூகம்', 'போர்த்துக்கீஸியர்', 'கவி இருதயம்', 'இல்வாழ்க்கை ஒரு பயிற்சி', 'சிநேகம் பிடிக்கும் கலை', 'பாட்டியும் பேத்தியும்', 'பகைவர் யார்?' என்பன போன்ற பல்வேறு விதமான தலைப்புகளில் கட்டுரைகள் உள்ளன.

இவற்றில் 'இரவலும் இலக்கியமும்' என்ற கி. சாவித்திரி அம்மாளின் கட்டுரை, 'நமது மதம் எது?' என்ற டாக்டர் முத்துலட்சுமியின் கட்டுரை, 'இல்வாழ்க்கை ஒரு பயிற்சி' என்ற ராஜாஜியின் கட்டுரை ஆகியவற்றை மட்டும் இங்குக் காண்போம்.

கி. சாவித்திரி அம்மாளின் 'இரவலும் இலக்கியமும்' சொல்வது என்ன?

நகை இரவல் வாங்குவது, புத்தகம் இரவல் வாங்குவது என்று பலர் இரவல் வாங்குவதற்கு அஞ்சுவதில்லை. நகை இரவல் வாங்கி, அது தொலைந்து போனால் விளையக் கூடிய ஆபத்தைப் பற்றி இரவல் வாங்குபவர்கள் கவலைப்படுவதில்லை.

இரவல் வாங்கிய நகை காணாமற்போய் அதனால் தன் வாழ்க்கையையே வீணாக்கிய ஒரு பெண்மணியின் உருக்கமான கதையை இங்கு ஆசிரியர் சான்று காட்டுகிறார். இது பிரபல பிரெஞ்சு சிறுகதை ஆசிரியரின் கதை.

அதே போன்று இரவல் வாங்கிய புத்தகத்தைத் திருப்பித்தரும் எண்ணமே பலருக்கு இருப்பதில்லை என்றும் குறிப்பிடுகின்றார்.

ஆங்கில ஆசிரியர் ஏ.ஜே. கார்டினரின் கட்டுரை வரிகளை இங்கு மேற்கோள் காட்டுகின்றார்.

இறுதியாக இந்த இரவல் வாங்கும் குணம் இலக்கிய உலகிலும் வெகு சகஜமாக இருப்பதையும் குறிப்பிடுகின்றார். கம்பன், காளிதாசன், ஷேக்ஸ்பியர் ஆகியோர் கூட இரவல் வாங்குவதைத் தம் பெருமைக்குப் பங்கமாக எண்ணவில்லை.

ஒப்புயர்வற்ற சாகுந்தல நாடகத்தின் கதை மகாபாரதத்திலிருந்து இரவல் வாங்கியது. கம்பனும் கதையைப் பற்றி யோசிக்காமல் இராமாயணக் கதையை எடுத்துக் கொண்டு அதில் தம் கவித்திறமை முழுவதையும் கொட்டிவிட்டான். ஷேக்ஸ்பியரின் கதைகளும் இரவல் பெற்றவையே.

கவிகளும், பேராசிரியர்களும் இரவல் வாங்கினாலும் தம் தனித்திறமையால் அவற்றை மேன்மையாக்கி விடுகின்றனர் என்று கூறி ஆசிரியர் கட்டுரையை முடிக்கின்றார்.

எந்த ஒரு விதியும் அல்லது கோட்பாடும் இறுதியானது அல்ல; எல்லாக் காலத்துக்கும், எல்லாச் சந்தர்ப்பங்களுக்கும், எல்லா விஷயங்களுக்கும் பொருந்துவன அல்ல என்பதை நகைச்சுவையுடனும் அதே நேரம் நம் சிந்தையில் ஆழப்பதியுமாறும் எடுத்துக் கூறியுள்ளார். இரவல் வாங்குவது குற்றம் என்ற நற்கருத்து இலக்கியத்தைப் பொறுத்தமட்டில் பொய்த்துப் போகின்றது என்று சுட்டுகின்றார்.

அடுத்ததாக 'நமது மதம் எது?' என்ற முத்துலட்சுமி ரெட்டி அவர்களின் கட்டுரையின் சாரம் இதோ - கடவுளுக்கும் ஜீவராசி களுக்கும் சேவை செய்வதே மதம் என்பதற்கு மிகவும் நேர்மையான விளக்கம்' என்று தம் கட்டுரையைத் தொடங்குகின்றார் ஆசிரியர். முற்காலத்தில் அரசர்கள் தங்கள் ஆட்சிக் காலங்களில் கோயில்கள், அறச்சாலைகள், கல்விச் சாலைகள், அன்னசத்திரங்கள் முதலியன கட்டினர். கோயில்களுக்கு மட்டுமின்றி அங்குப் பயிற்றுவிக்கப்பட்ட வேதபாராயணம், சங்கீதம் நடனம் முதலிய கலைகளுக்கும் சேர்த்து மானியங்கள் வழங்கினர். கோயில்களில் நித்திய நைவேத்திய பூஜை, ஆலயத் திருப்பணி இவைகளுக்கு மட்டுமல்லாது, அவை சார்ந்த கலை வளர்ச்சிக்கும் சேர்ந்தே அந்த மானியங்கள் பயன்பட்டன.

ஆனால், இன்று நமது இந்து மதத்தின் கொள்கைகள், அடிப் படைத் தத்துவம், நமது மதக் கலாசாரத்தின் வேர் இவைகளைப் பற்றி ஒன்றுமே அறியாதவர்களாக நமது மக்கள் இருக்கிறார்கள். எனவேதான் இசுலாமியர்களும், கிறித்தவர்களும் நம் மக்களில் பலரை அவர்கள் மதத்துள் சேர்த்துக்கொண்டனர்.

எனவே, ஹிந்து மதத்தைச் சேர்ந்த மடாதிபதிகளும், தலைவர் களும் தாங்கள் சார்ந்த மடங்களிலும், ஆலயங்களிலும் இந்து மதக் கொள்கைகளையும், தத்துவங்களையும் எளிமையாய் அனைவருக் கும் புரியும் வகையில் கற்பிக்க முன் வரவேண்டும்.

மிகுதியான மானியங்களையுடைய வசதியான கோயில்கள், அநாதை ஆஸ்ரமங்களையும், கல்விச் சாலைகளையும் நிறுவ வேண் டும். வைத்திய சாலைகளையும் மற்றும் அறச்சாலைகளையும் நிறுவி மக்கள் தொண்டில் ஈடுபட வேண்டும். பழம் பெரும் கோயில்களில் வெறுமனே புதை பொருள்களாகவே உள்ள ஆபரணங்களுடன் மேலும் மேலும் அவை போன்ற திருப்பணிகளையே செய்யாமல் அநாதைக் குழந்தைகளின் கல்வியறிவு, உடல் ஆரோக்கியம் ஆகியவற்றின் மேம்பாட்டிற்காகச் செலவிடப்பட்டால் நமது மதத்திலுள்ள ஹரிஜனங் களையும், தாழ்த்தப்பட்டோரையும் மதமாற்றத்திலிருந்து தடுக்கும் நல்முயற்சியாக இது அமைவதுடன் 'பொது ஜனசேவையே ஈஸ்வர சேவை' என்பதை மெய்ப்பிப்பதாகும்."

இந்து மதத்தின் கடமைகள் என்னென்ன என்று பட்டியலிட்டு, அறிவுப் பூர்வமானதும், உணர்வுப் பூர்வமானதுமான ஒரு தீர்வையும் கூறியுள்ளார். டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அவர்களின் விசாலமான அறிவும், எக்காலத்திற்கும் பொருந்தக் கூடியதுமான நற்சிந்தனை யும் இக்கட்டுரையின் மூலம் புலனாகின்றது. அவரின் அறிவுரையைச் செயற்படுத்த வேண்டிய மகத்தான பொறுப்பு இந்து மதத்தைச் சார்ந்தவர்களுக்கு இருக்கிறது என்பதனை மறுக்க முடியாது.

'இல்வாழ்க்கை, ஒரு பயிற்சி' என்ற சக்கரவர்த்தி இராஜகோபா லாச்சாரியார் அவர்களின் கட்டுரையை இனி காண்போம்.

இல்வாழ்க்கையில் ஒருவன் தன் மனைவியிடம் அன்பு செய்தல், குழந்தைகளின் நலம் பேணல், விருந்தினரை உபசரித்தல், குலத்தின் பெருமை காத்தல் போன்ற பணிகளைச் செய்வதன் மூலம் அவற்றி னூடே பரவிநிற்கும் மெய்ப்பொருளைக் கண்டு உணர, அவன் மேற் கொள்ளும் பயிற்சியாகவே அதைக் கருதவேண்டும். இல்லற வாழ் வுக்குரிய அன்புகள் அனைத்தும் பேரன்புக்கு ஒரு பயிற்சியேயாகும் என்று இராஜாஜி கூறுகிறார்.

'பரம் பொருளைத் தனியாரகக் காணவோ, அடையவோ மனித வாழ்வில் முடியாது. மற்ற பொருள்களில் அது ஊடுருவி நிற்பதை அறிந்து அப்பொருள்களின் வழியாகவே அதை அடைய முடியும். பேரிகையிலும் சங்கிலும் ஒலி உண்டாகிறது. ஒலியை மட்டும் எடுத் துப் பிடித்துக் கொள்ள முடியாது. சங்கையும் பேரிகையையும் அவற் றைக் கோஷிக்கச் செய்பவனையும் அடைந்து ஒலியைப் பெறலாம். வீணையின் நாதத்தை மட்டும் தனியாக எடுத்து வைத்துக் கொள்ள முடியாது. வீணையைப் பெற்று நாதத்தையும் கேட்கலாம் இவ்வாறே பரம்பொருளையும் காணலாம்' என்று யாக்ஞவல்கியார் தம் மனைவி மைத்திரேயியைப் பார்த்து உபதேசித்ததை இராஜாஜி அவர்கள் மேற்கோள் காட்டுகிறார்.

இரண்டு பக்கமேயான இக்கட்டுரையின் மூலம் சுருங்கச் சொல்லி எளிமையாய்ப் போதித்து, பேருண்மையை விளங்க வைக்கும் இராஜாஜியின் மதி நுட்பம் புலனாகின்றது. மூதறிஞர் என்று போற்றப் படுவதற்குரிய தாத்பர்யம் புரிகின்றது.

### குழந்தை வளர்ப்புக் கட்டுரைகள்

குழந்தைகள் தொடர்பான கட்டுரைகள் என்று பார்த்தோமானால் 'இந்தக் குழந்தைகள்' என்ற தலைப்பில் ஸ்வர்ணம் எழுதியுள்ள கட்டுரை மூன்று இதழ்களில் மூன்று கட்டுரைகளாக இடம் பெற்றுள்ளன. 'இன்பத் தொல்லை' என்று 'குகப்ரியை' எழுதியுள்ள கட்டுரையும், ஆர்.எஸ் ருக்மணி அவர்கள் எழுதியுள்ள 'குழந்தையின் முதற் காதல்' மற்றும், பார்வதி என்பவர் எழுதியுள்ள 'குழந்தைகள்' என்ற கட்டுரையும் இடம் பெற்றுள்ளன.

குழந்தை வளர்த்தல் என்பது ஒரு தனிக்கலை. குழந்தைகளை வளர்ப்பது அவ்வளவு சுலபமல்ல. மனோதத்துவ ரீதியில், அவர்களை நாம் புரிந்து கொண்டும், நம்மை, நம் அன்பை, நம் அக்கறையை அவர்கள் புரிந்து கொள்ளுமாறும் உணர்த்தி வளர்ப்பதற்கு நிறைய பொறுமை வேண்டும். நிதானமும் விவேகமும் வேண்டும். அவர்களுடைய திறமை என்ன?, விருப்பு வெறுப்பு என்ன?, ரசனை என்ன? என்று அறிந்து அதைச் சரியானபடி இனம் கண்டு வளர்த்து, செழிப்படைய வேண்டியதுதானென்றால் வளமாக்கியும், தகாததாக இருப்பின், முளையிலேயே கிள்ளியெறிந்தும் அன்போடும் பாசத்தோடும் அரவணைத்துக் காத்து நிற்க வேண்டும். நம் விருப்பத்தை அவர்களின் மீது திணிக்கக்கூடாது. அதனால் எதிர்மறையான விளைவுகளைத் தான் நாம் சந்திக்க நேரிடும்.

குழந்தை வளர்ப்பில் பாரபட்சம் காண்பிப்பது, ஆண், பெண் என்ற பேதம் பார்ப்பது, நம் கோபதாபங்களை, எரிச்சலை, மனஸ்தாபங்களை வெளிக்காட்டும் கருவிகளாகக் குழந்தைகளைக் கருதுவது - இவையெல்லாம் அவர்களின் எதிர்கால வாழ்வையே சிதைத்து விடும் என்று அறியாமல், பல பெற்றோர் குழந்தைகளை வளர்க்கும் முறையறியாமல் வளர்த்துப் பாழாக்குகின்றனர். ஆனால் பின்னர் குழந்தைகள் குணம் கெட்டு வளர்ந்தால் பிள்ளைகளைச் சாடுவர்.

குழந்தை வளர்ப்பு என்ற அடிப்படையைக் கருவாகக் கொண்டு எழுதப்பட்ட மேற்கூறிய கட்டுரைகள் அனைத்தும் மேலே சொன்ன கருத்துக்களைத்தான் விரித்து எழுதியுள்ளன.

எடுத்துக்காட்டாக, மங்கை இதழின் ஆசிரியை "குகப்ரியை" எழுதியுள்ள 'இன்பத் தொல்லை' என்ற கட்டுரையிலிருந்து ஒரு சில வரிகளை மட்டும் இங்குக் காணலாம்:

> குழந்தை ஓர் உயர்ந்த பொருள். ஆலம் விதை மிகப் பெரிய விருட்சத்தைத் தன்னுள் அடக்கி வைத்துக் கொண்டிருப்பது போல், வருங்கால உலகத்தின் செயல்களையெல்லாம் தன்னுள் அடக்கி வைத்திருக்கும் பொன் பேழை அது. அது உயிரும் உணர்ச்சியும் கொண்டது. அதன் சம்மதத்தைக் கேட்டு நாம் அதை உண்டாக்கவில்லை. தெய்வம் கொடுத்த பெருஞ் செல்வம் அது. அதன் பொருட்டுச் செய்ய வேண்டியவைகளை நாம் செய்யாமல் ஒரு பாவமும் அறியாத குழந்தையைப் பழிப்பதோ, கோபங் கொள்ளுவதோ ஏசுவதோ பெருங்குற்றம்,

என்று குகப்ரியை கூறுகின்றார். ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதமல்லவா? நாம் வகுத்துக் கொண்டபடி பொதுக் கட்டுரைகள் வரிசையில் வரும் வை. குஞ்சு என்பவரின் 'ஜப்பானிய மங்கையர்' கட்டுரையும், 'போர்த்துகீசியர்' என்ற துளசி என்பவரின் கட்டுரையும் அயல்நாட்டவர்களைப் பற்றி, அவர்களின் வாழ்க்கை முறை பற்றி எடுத்துக்கூறும் விதமாகச் சிறப்பாக எழுதப்பட்டுள்ளன.

## அழகுக் குறிப்பு

பன்னிரெண்டு இதழ்களில் எட்டு இதழ்களில் 'அழகுக் குறிப்பு'க் கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. மை, மருதோன்றி, மஞ்சளும் குங்குமமும், தலையலங்காரம், மலரும் மகளும், ஆடைகள், வளையல்கள், காலத்திற்கேற்ற காதணிகள், மூக்குத்தியும் முத்து மாலையும் என்ற தலைப்புகளில் பெண்களின் இரசனைக்கு விருந்தளிக்கும் விதத்தில் நமது கலாச்சாரத்திற்கும் பண்பாட்டிற்கும் உகந்த வகையில் இக்கட்டுரைகள் எழுதப்பெற்றுள்ளன.

தையற்கலையைப் பயிற்றுவிக்கும் விதத்தில் 5ஆம் இதழைத் தவிர மீதி பதினோரு இதழ்களில் இத்தகைய கட்டுரைகள் எழுதப் பெற்றுள்ளன. 'ஊசியும் நூலும்', 'குழந்தைகளின் சட்டை', 'பெண்கள் சட்டை' , 'தைக்கும் விதம்' போன்ற தலைப்புகளில் இக்கட்டுரைகள் வெளியாகியுள்ளன. இக்கட்டுரைகள் எழுதப்பட்டிருப்பதன் நோக்கம் தையல் கற்றுக் கொடுப்பது. அது நிறைவேறும் விதமாக எளிமையாய், அழகாய், திருத்தமாய் விளக்கப்படங்களுடன் தேவைப்படும் போது புகைப்படங்களுடன் வெளியாகியுள்ள இவற்றைப் பாராட்டாமல் இருக்க முடியவில்லை.

## உடல் நலம் பேணல்

'உடலோம்புதல்' என்ற தலைப்பில் உணவுப் பொருட்களே மருந்தாக விளங்கும் சிறப்பினை எடுத்துக் கூறி அவற்றை அனைவரும் பயன்படுத்தக்கூடிய முறையினை விளக்கும் அற்புதமான கட்டுரைகள் எட்டு இதழ்களில் இடம் பெற்றுள்ளன. பொன்னாங்கன்னிக் கீரை, மிளகு, சுக்கு, நெல்லிக்காய், சீரகம், பசலைக் கீரை, பூண்டு, கடுக்காய் ஆகியவற்றின் மருத்துவப் பயன்கள் தெளிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளன. ருசிக்காக மட்டுமல்ல, அவற்றின் மருத்துவக் குணங்களுக்காகவே அக்காலத்தில் அவற்றைச் சமையலில் சேர்த்துப் பழக்கியுள்ளனர் நம் முன்னோர்கள் என்று அறியும் பொழுது நம் மூதாதையரின் அறிவு நுட்பம் நம்மைத் திகைக்கச் செய்யும். 'அறுசுவை' என்ற தலைப்பில் சமையல் கட்டுரைகள் ஓர் இதழ் தவறாமல் பதின்மூன்று இதழ்களிலும் இடம் பெற்றுள்ளன. நாவில் நீர் ஊறும் வண்ணம் அவை எழுதப்பட்டுள்ளன என்பதுவே அவை எழுதப்பட்டுள்ள விதத்திற்குச் சிறப்பு சேர்க்கும்.

நேந்திரம் பழ அல்வா, பஞ்ச கல்யாணி வடை, கசௌரி பிரிண்டைவடாம், இலை அடை, உருளைக் கிழங்கு குலோப்ஜாமூன், வெஜிடபின் பப் போன்றவை அவற்றுள் சில. அநேகமாக எளிமையாகக் கிடைக்கும் பொருட்களைக் கொண்டு அனைவரும் தயாரிக்கக் கூடிய வகையில் சொல்லப்பட்டுள்ள சமையல் குறிப்புகள் இவை.

### மருத்துவக் கட்டுரைகள்

'வருமுன் காப்பு', 'தாய்ப்பால்', 'கர்ப்பிணிகள் பராமரிப்பு', 'தாய்மை', 'தாதிப்பால்', 'சயரோகம்' போன்ற தலைப்புகளில் மருத்துவக் கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன.

பிரசவகாலத்திலும் அதன் முன்னும், பின்னும் மேற்கொள்ள வேண்டிய சுகாதார முறைகள், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள், அறிய வேண்டிய விஷயங்கள் போன்ற பல செய்திகளைத் தெளிவாகச் சொல்லுகின்றன 'வருமுன் காப்பு' கட்டுரைகள்.

ஐந்தாம் இதழில் இடம் பெற்றுள்ள 'தாய்ப்பால்' என்ற கட்டுரை குழந்தைகளின் தேக வளர்ச்சிக்கு உகந்த தாய்ப்பாலை ஊட்டும் விஷயத்தில் ஏற்படக்கூடிய இடைஞ்சல்களையும் அவற்றைச் சமாளிக்கும் முறைகளையும் விளக்குகிறது.

பதின்மூன்றாம் இதழில் இதே தலைப்பில் எழுதப்பட்டுள்ள கட்டுரையில் தாய்ப்பால் கொடுப்பதை நிறுத்தும் காலம், அவ்வாறு உரிய காலத்தில் நிறுத்தாமல் போனால் ஏற்படக்கூடிய விளைவுகள் ஆகியன பற்றி விளக்கப்பட்டுள்ளது.

ஏழாம் இதழில் வெளியாகிவுள்ள 'தாதிப்பால்' என்ற கட்டுரை அக்காலத்தில் சில குடும்பங்களில் பெண்கள் தங்கள் குழந்தை களுக்குப் பால் கொடுத்து வளர்க்கத் தாதிகளை ஏற்பாடு செய்து வந்ததைக் குறிப்பிடுகிறது. அவ்விதம் ஏற்பாடு செய்யும் தாதியின் பாலை உட்கொள்வதால் சிசுக்களுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புகளைச் சிறப்பாக எடுத்துக் கூறுகிறது இக்கட்டுரை.

> பொதுவாக நல்ல குடும்பத்தில் பிறந்து நல்ல நிலையில் உள்ள பெண்கள் தாதி வேலைக்கு வரமாட்டார்கள். ஆகையால் மிகவும் ஏழ்மை நிலையில் சாப்பாட்டுக்குக் கூடக் கஷ்டப்படும் பரம ஏழைகளே இவ்வேலைக்கு வருவார்கள். சில சமயங்களில் இவர் கள் துராசாரம் உள்ளவர்களாகவும் பயங்கர மேக நோய் பிடித் தவர்களாகவும் இருக்கக்கூடும். ஆகையால் தாதிகள் அமர்த்தும் விஷயத்தில் நாம் மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்

என்று ஓரிடத்தில் சொல்லப்பட்டுள்ளது.

கர்ப்பிணிப் பெண்கள் எவ்விதம் தங்களைப் பராமரித்துக் கொள்ள வேண்டும்; வயிற்றில் இருக்கும் கருவின் வளர்ச்சிக்கு அவளின் தேக வளர்ச்சியும் மனோ வளர்ச்சியும் ஆரோக்கியமாக இருக்க வேண்டியது எத்துணை அவசியம் என்பன போன்ற முக்கிய விஷயங்களை விளக்க மாகவும் தெளிவாகவும் எடுத்துரைப்பது 'தாய்மை' என்ற கட்டுரை.

இவ்விதம் இத்தகைய கட்டுரைகள் அனைத்தும் படிப்போருக் குத் தக்க பயனளிக்கக் கூடிய விதத்தில் சிறந்த பயன்பாடுடைய கட்டுரைகளாக விளங்குகின்றன. வெறும் பொழுது போக்குக்காக மட்டுமின்றி 'Informative' என்று ஆங்கிலத்தில் சொல்வார்களே அது போன்று தேவையான செய்திகளைத் தெளிவாகவும் எளிமையாகவும் எடுத்துரைப்பனவாக அமைந்துள்ளமையே இவற்றின் சிறப்பிற்குச் சான்று பகரும்.

**கடிதங்கள்**

கடிதக் கட்டுரைகள் ஒரு சில இதழ்களைத் தவிர அநேகமாகப் பிற எல்லா இதழ்களிலும் இடம் பெற்றுள்ளன. அம்மா, மகளுக்கு எழுதுவது போல அமைந்துள்ள இக்கட்டுரைகள் ஒவ்வொன்றும் சீரிய அறிவுரைகளை மிகவும் யதார்த்த ரீதியில் சொல்லிச் செல்கின்றன. சொல்லப்பட்டுள்ள அறிவுரைகளில் உண்மையான அன்பும் அக்கறையும் வெளிப்படும் அதே நேரத்தில் ஒருவிதக் கண்டிப்பும் தொனிக்கிறது. நட்புணர்வுடன், பக்கத்தில் உட்கார்ந்து பேசுவது போன்று எழுதப்பட்டுள்ள இக்கட்டுரைகள் இளம் வயதினர் முதல் பெரியோர்கள் வரை விரும்பி ஏற்றுக் கொள்ளக்கூடிய இனிய நல்லுரைகளே.

'நீ இப்படித்தான் செய்ய வேண்டும் என்று, கண்டிப்புடன் உருட்டி மிரட்டுவதைவிட இப்படிச் செய்தால் உன் பணிச்சுமை குறையும். உன் எதிர்காலத்திற்கு மிகவும் நல்லது. உன் அன்றாட வாழ்க்கை இனிமை நிறைந்ததாய் இருக்கும்' என்ற வகையில் அறிவுரைகள் சொல்லப்படும்போது, அவை கேட்பவர் உள்ளத்தைச் சொல்பவர் வசம் பிணிக்கும் ஆற்றல் கொண்டதாய் விளங்குவதோடு, வியத்தகு மாற்றத்தையும் அவர்களிடம் உண்டு பண்ணும் என்பதும் உண்மை என்பதை இக்கட்டுரைகளைப் படிக்கும்போது உணர முடிகிறது.

சான்றாக ஓரிரு வரிகளை இங்குக் குறிப்பிடுவது பொருந்தும். "தபால் எழுதுவதோ, சாமான் வாங்குவதோ, பீரோ சாமான்களை அடுக்கி ஒழுங்காக வைப்பதோ, எதுவாக இருந்தாலும் சரி, மனதில் ஒரு பிடிவாதத்துடன் அந்த வேலையை உடனுக்குடன் செய்வது என்ற குணத்தை நீ பழக்கிக் கொண்டாயானால் பிறகு நாளடைவில் அவ்விதம் செய்வது என்பது உனக்கு மிக எளிதாக இருக்கும்; சிரமமில்லாமல் செய்வாய்" என்று நாம் செய்ய வேண்டிய வேலைகளை நாளை நாளை என்று ஒத்திப் போடாமல் உடனுக்குடன் செய்வதால் விளையும் நன்மையையும் அவசியத்தையும் அழகாய்ச் சொல்லுகிறார் இக்கட்டுரையாசிரியர்.

**கவிதைகள்**

கவிதைகள் என்று எடுத்துக் கொண்டால் முதல் இதழில் 'பெண்மை'யைப் போற்றும் யோகி சுத்தானந்த பாரதியின் கவிதையும், கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை மற்றும் வேங்கடன் தேவி

ஆகியோர் மங்கைக்கு எழுதியுள்ள வாழ்த்தும் இடம் பெற்றுள்ளன. இரண்டாம் இதழில் வேங்கடன் தேவி எழுதியுள்ள 'பெண்' என்ற கவிதை வெளியாகியுள்ளது. ஐந்தாம் இதழில் 'மலர் சொன்ன கதை' என்ற தலைப்பில் எச். விஜயகுமார் என்பவரின் கவிதை பிரசுரமாகி யுள்ளது. பிற இதழ்களில் கவிதை இல்லை.

'பெண்மை', 'பெண்', 'மலர் சொன்ன கதை' இந்த மூன்று கவிதை களுமே பெண் எப்படி இருக்க வேண்டும் என்று சொல்லும் விதமாக உள்ளன.

இரண்டாம் இதழில் மட்டும் 'நவீன மோகம்' என்ற ஆர். பத்மா எழுதிய ஓரங்க நாடகம் இடம் பெற்றுள்ளது.

### சிறுகதைகள்

மொத்தம் பன்னிரெண்டு இதழ்களிலும் 52 சிறுகதைகள் வெளி யாகியுள்ளன. தொடர்கதைகள் இடம் பெறவில்லை. ஒவ்வோர் இதழிலும் அநேகமாக நான்கு கதைகளுக்குக் குறையாமல் இடம் பெற்றுள்ளன.

கதைகள் வெவ்வேறு கருவை உள்ளடக்கியுள்ளன. ஆனால் எல் லாமே அருமை. வரதட்சணைக் கொடுமை காரணமாக மருமகளை விலக்கி வைக்கும் மாமியார்! மனைவியைப் பிரிந்து பல வருடம் உள் ளுக்குள் வருந்தினாலும் தாயிடம் நியாயத்தை எடுத்துரைக்காமல் அம்மா பிள்ளையாய் வாளாவிருக்கும் மகன் - பக்கத்து வீட்டுச் சுட்டிக் குழந்தையால் பின்னர் மனம் மாறி மருமகளை அழைத்துவரச் செய்யும் மாமியார் - இப்படி ஒரு கதை.

துளசியைப் பூஜிப்பதால் நல்வாழ்வு கிடைப்பதாக ஒரு கதை. ஏழ்மை நிலையினால் வரதட்சணை தர வழியின்றிப் பெண்களை மிகுந்த வயது வித்தியாசத்தில் வயதானவர்களுக்கு இரண்டாம் தாரமாகக் கல்யாணம் செய்து தரும் வழக்கம் அன்று மிகுதியாக இருந்திருப்பது தெரியவருகிறது.

கணவன் வேறு ஒரு பெண்ணுடன் தொடர்பு வைத்திருப்பதால் அவனிடமிருந்து விலகித் தாய் வீட்டிற்கு வரும் ஓர் இளம் பெண் ணிற்கு, இதே காரணத்தால் பல வருடங்கள் முன்பு கணவனைப் பிரிந்து தாய் வீட்டிற்கு வந்த அவயம் என்கிற பெண்மணி, பெண்கள் கணவன் தவறு செய்கின்றபோது அருகில் இருந்து இடித்துரைத்து

அல்லது எவ்விதமாவது அவனைத் திருத்தப் பார்க்கவேண்டுமே ஒழிய, அவனை விட்டுவிட்டு வந்தால் அவனுக்கு வெகு சௌகர்ய மாய்ப் போய் அவளையே திருமணம் செய்துகொண்டு குடித்தனம் பண்ண ஏதுவாகிவிடுகின்றது என்றும் அதனால் அவர்கள் வாழ்வு பாழாகின்றது என்றும் எடுத்துக்கூறி அவளின் நல்வாழ்விற்கு வழி காட்டுவதாக எழுதியுள்ளார், 'லட்சுமி' என்னும் புனைபெயரில் எழுதிப் புகழ்பெற்ற டாக்டர் திரிபுரசுந்தரி.

ஒரு குடும்பத்தில் கடைசியாய்ப் பிறக்கும் பெண், அக்குடும்ப உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் எடுபிடி வேலை பார்த்துப்பார்த்தே தான் பரீட்சைக்குக் கூடப் படிக்க முடியாமல் கஷ்டப்படுகின்ற வேதனையைத் திருமதி ஜெயலட்சுமி ஸ்ரீநிவாசனின் 'கடைசிப் பெண்' என்கிற கதை விளக்குகிறது. இது ஒன்றும் கற்பனை அல்ல. நம் வீட் டிலோ அடுத்த வீட்டிலோ நிகழும் யதார்த்தமான தினசரி வாழ்க்கைதான்.

மொழிபெயர்ப்புக் கதைகள் நான்கு இவ்விதழ்களில் இடம் பெற்றுள்ளன. மாஸ்தி வெங்கடேச அய்யங்கார் எழுதிய கன்னட மூலத்திலிருந்து குகப்ரியை மொழி பெயர்த்துள்ள இரு கதைகளும் அவற்றில் அடங்கும்.

கிருஷ்ணமூர்த்தியின் 'மனைவி' என்கிற கதை அந்த இரண்டில் ஒன்று. மணமானவுடனேயே வெளியூரில் வேலைக்காகச் சென்ற தன் மகளின் கணவன் இறந்து விட்டான் என்பதை அவளிடம் தெரிவிக்கா மல் இருக்கிறாள் தாயார். எது தன் மகளுக்குத் தெரிந்துவிட்டால் அசம்பாவிதம் ஏதும் நேர்ந்துவிடுமோ என்று அஞ்சி அது தெரியாமல் இருக்க அவள் பிரயத்தனப்படுகிறாளோ, அம்முயற்சியின்போதே அவளுக்கு அது தெரிந்துவிட, எந்த விபரீதம் நடக்கக் கூடாதென்று பயந்தாளோ, அதுவே நடந்து விடுகின்றது. அந்தப் பேதைத்தாயின் துயரம் எழுத்தளவில் விளக்கப்படவில்லை. எனினும் அத்துயரத்தின் ஆழத்தை நாம் உணரும்படிக் கதையை நகர்த்திச் சென்றுள்ளார் ஆசிரியர்.

இந்த ஒரு கதை என்று அல்ல இந்த இதழ்களில் வெளியாகி யுள்ள பல்வேறு அம்சங்கள், கதைகள், கட்டுரைகள் என்று எதில் நோக்கினாலும் அக்காலத்துப் பால்யவிவாகத்தின் கோர தாண்டவம் நம் கண்முன் விரிகின்றது. மிகவும் இளமைத் திருமணம் அல்லது

படித்துக் கொண்டிருக்கும்போதே திருமணம், ஓர் உத்தியோகம் கூடச் செய்யாமல் இருக்கும்போதே திருமணம் - எனவே உத்தியோகம் அல்லது படிப்பு நிமித்தமாக மனைவியை அவன் தாயாரிடத்திலேயே விட்டுவிட்டு வெளியூர் சென்றுவிடும் ஆண்கள் - அந்தப் பிரிவு சில நேரங்களில் நிரந்தரப் பிரிவாகவும் மாறிவிடுகிறது. வரதட்சணை காரணமாக இரண்டாம் கல்யாணத்திற்கு அடிகோலும் பிள்ளையின் பெற்றோர் மற்றொருவகை - இவ்விதம் இளம் விதவைகள் மற்றும் கணவனால் கைவிடப்பட்ட பேதைகள் என்று இந்தக் கசப்பான உண்மைகளின் நிழல்களை நாம் உணர நேரிடுகையில் அடிவயிற்றைச் சங்கடம் செய்கிறது; மனம், மிகுந்த துயரத்தில் ஆழ்கின்றது.

இவ்விஷயத்தை இன்றைய நிலையுடன் ஒப்பு நோக்குகையில் இவ்வகைத் திருமணங்கள் இக்காலத்தில் அடியோடு நின்று போயிருப்பது ஆரோக்கியமான ஒரு மாற்றமாய்ப்படுகின்றது; ஒரு நிறைவைத் தருகின்றது.

**வாசகர் கருத்து**

அடுத்ததாக, வாசகர்களைப் பங்கேற்கச் செய்யும் 'உங்கள் அபிப்பிராயம் என்ன' என்ற கேள்வி பதில் பகுதியும் இடம் பெற்றுள்ளது.

'இந்தத் தலைப்பின்கீழ் சமூக வழக்கம் பற்றின ஒரு பிரச்சினை பிரதி மாதமும் ஆராயப்படும். இரண்டு தரப்பும் விவாதிக்கப்படும். வாசகர்கள் இருவர் கூறுவதையும் படித்துவிட்டு தமது தீர்மானத்தைச் சுருக்கமாகவும், தெளிவாகவும் எழுதி அனுப்பினால் நலம் - மங்கை' என்று குறிப்பிடப்பட்டு வெளியாகியுள்ளது இப்பகுதி. ஒன்பதாம் இதழில் தொடங்கப்பெற்றுள்ள இப்பகுதிக்கான வாசகர் பங்கேற்பு - அதாவது வாசகர்களின் அபிப்பிராயத்தை வெளிப்படுத்தும் கடிதங்கள் 12ஆம் இதழில் வெளியாகியுள்ளன.

முதலில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ள விஷயம் 9 கெஜப் புடவையின் நீளத்தை ஆறு கெஜமாகக் குறைப்போமா என்பதாகும்.

12ஆம் இதழில் வெளியாகியுள்ள பதில் கடிதங்களில் ஆதரித்தும் மறுத்தும் இரண்டு விதமாகவும் கடிதங்கள் வந்துள்ளன.

அந்த 12ஆம் இதழிலேயே அடுத்த பிரச்சினை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. 'ஒவ்வொரு ஊரிலும் ஒரு லேடீஸ்

கிளப் வேண்டுமா?' என்பதே அந்தக் கேள்வி. வேண்டும் என்றும் வேண்டாம் என்றும் கருத்துக்கள் வெளியாகியுள்ளன. ஆனால் 13ஆம் இதழில் இதற்குப் பதில் கடிதங்களைக் காணவில்லை. பின்னர் வெளிவந்த இதழ்களில் பிரசுரமாகியிருக்கலாம்.

'அறிமுகமான பெண்மணி ஒருவர் கேட்டுள்ள கேள்விகள்' என்றும், 'பெண்களும் நகையும்' என்னும் மகாத்மா காந்தியின் இரு கட்டுரைகள் முதலிரண்டு இதழ்களில் வெளியாகியுள்ளன.

'தேசியத் தொண்டில் கலந்து கொள்ளாது, ராமநாமத்தை மட்டும் ஜெபித்துக் கொண்டிருந்தால் ஆணுக்கோ, பெண்ணுக்கோ ஜன்ம சாபல்யம் கிட்டிவிடுமா?' 'கணவன் எதிர்த்தாலும் மனைவி தேசத் தொண்டில் ஈடுபடலாமா?' 'கணவன் மாமிசம் சாப்பிடுபவனாயும் மனைவி சாப்பிடாதவளாயும் இருந்தால் மனைவி எப்படி நடந்து கொள்ள வேண்டும்?' என்பன போன்ற கேள்விகளுக்குச் காந்திஜி தமக்கே உரித்தான பாணியில் 'ராம நாமத்தை ஜபிப்பதால் பற்றற்ற நிலைமையும் சங்கடமான நேரங்களில் சித்தங் கலங்காத தன்மையும் உண்டாகும். ஏழை, எளியவர்களுக்குத் தொண்டு செய்து அவர்களோடு நம்மை ஐக்கியப்படுத்திக் கொள்ளாவிட்டால், நமக்கு ஜன்ம சாபல்யம் கிடைப்பது துர்லபம்,' என்று முதல் கேள்விக்கும்,

'தான் செய்வதே சரியென்றும், தன்னுடைய முயற்சிகள் யாவும் உயர்ந்த இலட்சியத்தை நாடி நிற்பவையென்றும் மனைவி கருதினால் அதன்படியே அவள் நடந்து கொள்ளலாம். அப்படி நடந்து கொள்ள அவளுக்குப் பூரண உரிமை உண்டு' என்று இரண்டாம் கேள்விக்கும்,

'வாழ்க்கை என்பது ஒரு கடமை; உயர்ந்த இலட்சியத்திற்காக அமைந்ததொரு சாதனம். இகத்திலும், பரத்திலும் கணவன் மனைவி இருவருக்கும் நன்மை பயப்பதற்காகவே மணவாழ்க்கை ஏற்பட்டிருக்கிறது. அதுமட்டுமின்றி மனித சமுதாயத்திற்குத் தொண்டு செய்யும் பொருட்டும் மணவாழ்க்கை ஏற்பட்ட தெனலாம்' என்று மூன்றாம் கேள்விக்கும் விடை பகர்கிறார் மகாத்மா.

### துணுக்குகள்

இறுதியாக ஆனால் மிக உறுதியாகக் குறிப்பிடப்பட வேண்டியவை இந்தப் பன்னிரெண்டு இதழ்களிலும் பரவலாக இடம் பெற்

றுள்ள துணுக்குகள். அதாவது ஒரு கதை அல்லது கட்டுரை முடியும் தருவாயில் அந்தப் பக்கத்தின் கடைசியில் விடப்பட்டுள்ள இடைவெளியை நிரப்பும் விதமாக எழுதப்பட்டுள்ளன இவை.

ஒவ்வொரு துணுக்கும் அறிவார்ந்த சிந்தனையாக இருக்கின்றது. உயர்ந்தோர் கருத்துக்களை எடுத்துச் சொல்கின்றன சில. நுட்பமான செய்திகளை இயம்புகின்றன சில. சமையல் அறை அஞ்சறைப் பெட்டியில் உள்ள பொருட்களின் மருத்துவ குணங்களை எடுத்துக் காட்டுகின்றன சில துணுக்குகள்.

இராமகிருஷ்ண பரமஹம்சர், விவேகானந்தர், பாரதியார், ஆர்.எல். ஸ்டிவென்ஸன், மாஜினி, புரொபஸர் ஹக்ஸ்லி, மக்ஸிம் கார்க்கி, ஷெல்லி போன்ற அறிஞர்கள், மேதைகளின் கருத்துக்கள், மற்றும் இன்னாரால் சொல்லப்பட்டது என்று குறிப்பிடப்படாமல் எழுதப்பட்டுள்ள சொல்லோவியங்களான இந்தத் துணுக்குகள் அபாரமான சிந்தனைகளையுடையதாய், நம்மை யோசிக்கத் தூண்டுபவைகளாய் இருப்பது மிகவும் போற்றுதலுக்குரியதாகும்.

## சில சான்றுகள்

> உள்ளே நுழைந்தவர்கள் வெளியே வர வேண்டுமென்றும், வெளியே இருப்பவர்கள் உள்ளே புகுந்துவிட வேண்டுமென்றும் ஆவல் கொள்ளும் ஸ்வர்க்க வாசல் தான் விவாகம்.
>
> பாராட்டுவதற்கு நாவின் ஈரம் மட்டும் போதாது. இதயத்தின் ஈரமும் வேண்டும்.
>
> படிக்கப் படிக்கத்தான் நம் அறியாமையைத் தெரிந்து கொள்கிறோம்.
>
> 'வாழ்விலே கற்பு எவ்வளவு அவசியமோ அவ்வளவு 'கற்பு' வேலையிலும் வேண்டும். எவ்விதத்திலேனும் மனத்தைச் சிதற விடுவது கெடுதலேயாகும்'.
>
> 'மதமானது நண்பர்களுக்குப் பதிலாகச் சத்ருக்களைத்தான் சிருஷ்டிக்கிறது. அறியாமைதான் துயரத்தின் தாய்'

என்பன போன்ற துணுக்குகள் சிற்சில வரிகளே இருப்பினும் அருமையான கருத்துக்களை உள்ளடக்கியுள்ளதால் நம் உள்ளங்களில் சட்டென்று புகுந்து ஆழப்பதிந்துவிடுகின்றன.

**குகப்பிரியை – சில வார்த்தைகள்**

மங்கை இதழ்களின் பதிப்பாசிரியர் திருமதி குகப்பிரியை அவர்களின் இயற்பெயர் இராஜலட்சுமி அம்மாள். குகப்பிரியை என்பது புனைபெயர். அவர்களின் படைப்புகள் என்று பார்த்தால் கதை, கட்டுரை, மொழிபெயர்ப்புக் கதைகள் என்று பலவிதமாயும் தம் அறிவுத் திறனையும், ஆற்றலையும் வெளிப்படுத்தியுள்ளார். எல்லாவற்றிற்கும் மேலாக இந்த மங்கை இதழ்களின் தரமானது இதழாசிரியர் குகப்ரியை மீது அபரிமிதமான ஒரு மரியாதையை நமக்கு ஏற்படுத்துகின்றது.

இவ்விதழ்களில் இடம் பெற்றுள்ள கதைகள், கட்டுரைகள், துணுக்குகள், கவிதை ஆகியன உயர்ந்த இரசனைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகின்றன. பெண்களின் பத்திரிகை என்று மாத்திரமல்ல, எந்தப் பத்திரிகையாயினும் சரி, அது எப்படி வெளியிடப்பட வேண்டும் என்பதற்கு இலக்கணமாய் இந்த மங்கை இதழ்கள் விளங்குகின்றன. இலக்கியத்தின், உயர் இரசனையின் மேன்மையைச் சொல்லாமல் சொல்லுகின்றன.

தற்காலம் போல் விளம்பரங்களுக்காக இதழ் என்றில்லாமல் நல்ல இலக்கியத்திற்காக, நல்ல படைப்புகளுக்காக, நற்சிந்தனைகளுக்காக ஓர் இதழ் நடத்தப்பட்டுள்ளது என்பதை அறியும் போது வியப்பாகவும் மகிழ்ச்சியாகவும் உள்ளது.

குகப்ரியை அவர்களின் மதிநுட்பம் நம்மை அசர வைக்கிறது. அவர்களின் எழுத்துக்களில் மெல்லியதாக ஒரு நகைச்சுவை இழையோடுவதை உணர்ந்து இரசிக்கலாம். கதை, கட்டுரையின் தலைப்புகள் எழுதப்பட்டுள்ள விதம் அஃதாவது எழுத்துக்களின் வடிவம் மிகவும் அழகாக அமைக்கப்பட்டுள்ளது.

சான்றாக 'அறுசுவை' என்ற தலைப்பிலேயே சிறிய அளவில் ஒரு பெண்ணும் அடுப்பும் சித்திரிக்கப்பட்டுள்ளன. அதே போன்று 'இந்தக் குழந்தைகள்' என்ற தலைப்பு எழுதப்பட்டுள்ள அந்த எழுத்துக்களின் மேலேயே இரண்டு மூன்று குழந்தைகள் தவழ்வது போன்று படம் போடப்பட்டுள்ளது. இப்படிப் பலப்பல.

இவை போன்று ஒரு கதையோ, கட்டுரையோ முடியும்போது கூட அழகிய சித்திரங்கள் இடம்பெற்றுள்ளன.

கதைகளுக்காக வரையப்பட்டுள்ள சித்திரங்கள் சில இதழ்களில் முழுப்பக்கத்தையும் நிரப்பும் வகையில் வரையப்பட்டுள்ளன. பல இதழ்களில் அக்காலச் சம்பவங்கள் புகைப்படங்களாகப் பிரசுரிக்கப் பட்டுள்ளன. மீரத் காங்கிரசில் பெண் தொண்டர் படையினர் கொடி வணக்கம் செய்வது, பண்டிதநேரு லண்டன் புறப்பட்டுச் சென்றபோது சரோஜினி நாயுடு, இந்திரா உட்படப் பலர் வழியனுப்பியது என்பன போன்ற புகைப்படங்கள் இடம் பெற்றுள்ளன.

இவை ஒவ்வொன்றிலும் இதழாசிரியரின் சிரத்தை தெரிகிறது.

நல்ல இலக்கியம் என்பது காலத்தின் கண்ணாடி என்பார்கள். அது போன்று இவ்விதழ் நடத்தப் பெற்ற காலகட்டத்தில் சமூகத்தில் பெண்களின் நிலை எப்படி இருந்தது, பெண் கல்வி எந்த அளவில் ஊக்குவிக்கப்பட்டது, பால்ய விவாகத்தின் கொடிய நிலை என்ன, வரதட்சணைக் கொடுமை, ஆணாதிக்கம் மிகவும் மேலோங்கியிருந்த காலகட்டத்தில் பெண் எந்தெந்த விதங்களிலெல்லாம் துன்புற்றாள் என்பன போன்ற பல்வேறு செய்திகளையும் தெளிவாக உணர்ந்து கொள்ள முடிகிறது. அதே நேரம் இக்கொடுமைகளைக் களைய சமூக சேவை செய்ய முன்வந்த பெண்கள் எவ்வளவு அக்கறையுடனும், சேவையிலே உண்மையான ஆர்வத்துடனும் பணியாற்றினர் என்பதை அறிந்து பெருமிதம் அடையமுடிகிறது. அவர்களில் சிலரையாவது இந்த இதழ்கள் மூலம் நாம் இனம் கண்டு கொள்ள முடிந்தது அரிய வாய்ப்பு என்றே கூறலாம். ஆபாசமும் வன்முறையும் எழுத்துக்களில், சுவரொட்டிகளில், பேச்சுகளில், பட்டி மன்றங்களில், தொலைக்காட்சிப் பெட்டிகளில், திரையரங்குகளில் என்று எங்கும் நீக்கமற நிறைந்துள்ள இந்த நாளில் இத்தகைய இதழ்கள் வெளிவந்த அந்த நாளும் வந்திடாதோ என்ற ஏக்கமே மிஞ்சுகின்றது.

இந்த மங்கை இதழ் வெளிவந்து ஏறத்தாழ 52 ஆண்டுகள் கழித்து இவ்வாய்வு மேற்கொள்ளப்படும் இந்நாளில் பெண்களின் நிலை என்ன என்று யோசிக்கையில் நிச்சயமாக அந்தக் காலகட்டத்தை விட இன்று மேம்பாடு அடைந்துள்ளது என்று உறுதியாகச் சொல்ல லாம். இன்றும் பெண்களின் நிலைமையில் சமத்துவம் என்ற முழுமையை எட்ட முடியவில்லை. எனினும் பெண் கல்வி ஓரளவு நல்ல நிலையை எட்டியுள்ளது என்றே கூறலாம். பெண்களுக்கு எல்லாவற்

றிலும் சம உரிமை, சொத்துரிமை, இளம் வயது முதலே பாகுபாடின்றி வளர்த்தல் போன்றவை இன்றும், இத்தனை ஆண்டுகளுக்குப் பின்னரும் கூட அவ்வளவாக நிறைவேற்றப்படவில்லை.

பெண்களுக்கு உரிய மதிப்பையும் அவர்களின் பணிகள் மற்றும் ஒத்துழைப்பின் அவசியம் இவைகளையும் ஆண்மக்கள் உணர்ந்து செயல்பட, எல்லோருக்கும் கல்வி என்ற நிலையை நாடு எட்ட வேண்டும். மேலும் கல்வி முறையில் சீர்திருத்தம் தேவை. மகாத்மா மற்றும் சுவாமி விவேகானந்தர் கூறியது போல எந்திரங்களுக்கு இணையாக வேலை செய்யவும், எந்திரங்களை இயக்கவும் தயார்படுத்தும் கல்வியாக மட்டுமின்றி மனிதனை மனிதனாகப் பண்படுத்தக்கூடிய கல்வி முறையே சமுதாயத்தின் எந்தச் சீர்திருத்தத்தையும் நூறு சதவிகிதம் அடைய உதவும் என்பது மிகவும் உறுதி.

இம்மங்கை இதழ்களைப் படித்து முடிக்கையில், பெண்கள்

இவர்களின் அன்றைய நிலை என்ன?

இன்றைய முன்னேற்றம் என்ன?

வரும் நூற்றாண்டில் எப்படி அவர்களின் நிலை விளங்க வேண்டும்?

என்ற மூன்று கேள்விகள் நம்முன் எழுகின்றன.

'ஸ்திரீகளுக்கு ஜீவன் உண்டு; மனம் உண்டு; புத்தியுண்டு; ஐந்து புலன்கள் உண்டு. அவர்கள் செத்த யந்திரங்களல்லர். உயிருள்ள செடி கொடிகளைப் போலவுமல்லர். சாதாரணமாக ஆண் மாதிரியாகவேதான். புறவுறுப்புகளில் மாறுதல்; ஆத்மா ஒரே மாதிரி, விவாகம் செய்து கொண்ட புருஷனுக்கு ஸ்திரீ அடிமையில்லை; உயிர்த்துணை; வாழ்க்கைக்கு ஊன்றுகோல்; ஜீவனிலேஒரு பகுதி; சிவனும் பார்வதியும் போலே', என்று பாரதி தன் கட்டுரைகளில் குறிப்பிடுகிறார். பெண் விடுதலைக்குக் குரல் கொடுத்த உன்னதமான ஆண்மகன் இவர். இவரின் கருத்தை நெஞ்சில் நிறுத்தி மேற்கொண்டு நம் 'மங்கை இதழ்' ஆய்வின் நிறைவுப் பகுதிக்குச் செல்வோம்.

ஏறத்தாழ ஐம்பது அறுபது ஆண்டுகளுக்கு முன்னரே இளம் வயதில் விதவையாகிவிட்ட ஆர்.எஸ். சுப்புலஷ்மி அம்மாள் தன் முன் இருந்த தடைக்கற்களை உடைத்துக் கொண்டு, தான் வெளியே வந்ததுடன் தம்மைப் போன்ற எண்ணற்ற விதவைகள் மற்றும் அபலைப்

பெண்களின் வாழ்வில் மறுமலர்ச்சி உண்டாக்கினார் என்பதை அறியும் போது நாமும் ஏன் நம்மைச் சுற்றியுள்ளவர்களுக்குப் பயன்படும்படி நம் வாழ்வை அமைத்துக் கொள்ளக் கூடாது என்ற கேள்வியும் உந்து தலும் நம்முள் ஏற்படுவது இயல்பு.

அதேபோன்று ஹெலன் கெல்லர் தான் குருடராக இருந்தும் மனந்தளராமல் தன்னைப் போன்று குருடர்களாய் இருக்கும் உலகம் தழுவிய மக்களுக்குச் சேவை செய்வதையே இலட்சியமாகக் கொண்டு வாழ்ந்த நம்ப முடியாத ஆனால் சாதித்துக் காட்டிய அற்புதமான வாழ்வை அறிகையில், ஐம்புலன்களும் நன்றாக இருந்தும், ஏனைய பிற வசதிகளும் இருந்தும் நாம் இதுவரையில் செய்தது என்ன? இனி செய்யப் போவது என்ன? என்ற கேள்வி நம் மூளையைச் சம்மட்டி கொண்டு தாக்குவது போன்ற உணர்வை ஏற்படுத்துகிறது.

இது போன்ற சாதனைப் பெண்மணிகளின் கட்டுரைகளை வெளி யிட வேண்டும் என்று ஆர்வம் காட்டிய குகப்ரியை உன்னதமானவராகக் காட்சி அளிக்கிறார். வணிக நோக்குடன் இதழ்களை நடத்தாமல் பெண்களிடையே ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த வேண்டும் என்ற உயரிய சிந்தனையின் அடிப்படையில் இதழைக் கொண்டு சென்றுள்ள பாங்கு அவரை உயர்த்துகிறது.

பெண்களைத் தெய்வமாகக் கொண்டாடும் நாடு இது. பாரத பூமியையே பாரதத் தாய் என்று 'தாய்' வடிவமாகத்தான் காண்கின் றோம். இங்கு ஓடும் நதிகளும் பெண்களின் பெயரைத் தாங்கியே பீடு நடை போடுகின்றன. ஆனால் இந்த மண்ணில் பெண்ணின் நிலை அவ்வளவு உயர்வாய் மதிக்கப்படுகிறதா என்று எண்ணும்போதுதாம் இல்லை என்ற கசப்பான உண்மை நெஞ்சை நெருடுகிறது. இந்த ஆணாதிக்கச் சமுதாயத்தில் பெண்ணின் நிலை பின்னுக்குத் தள்ளப் பட்டுள்ளது. எங்கும் பெண்கள், எதிலும் பெண்கள் என்று முட்டி மோதிப் பெண்கள் முன்னேறத் துடித்து எல்லாத் துறைகளிலும் நுழைந்துள்ளனர். ஆனால் அதற்கான முட்டுக்கட்டைகளும் ஏராளம்.

பணிக்குச் செல்லும் பெண் பேருந்தில் படும்பாடு அவளைப் போன்ற மற்றொரு பெண் மட்டுமே அறியக்கூடியது. பணியிடத்தில், ரெயில் முன்பதிவுக் கூடத்தில், அஞ்சலகக் 'கியூ'வில், ரேஷன் கடை யில் என்று இவைபோன்ற பொதுவிடங்களில் பெண்மை எவ்வளவு

இழிவுபடுத்தப்படுகிறது என்பது கண்கூடு. சமஉரிமை கேட்பதனால் அவர்கள் கூடுதலாகத் துன்பப்பட வேண்டுமாம். பெண்மையை அநா கரிகமாகக் கொச்சைப்படுத்திப் பேசப்படும் பேச்சுகளுக்குச் சிலசமயம் கல்வியறிவற்ற பெண்களே துணைபோவது வேதனையான விஷயம்.

வக்கிரபுத்தி கொண்ட ஆண்களின் மனத்தைக் கொஞ்சம் கொஞ்ச மாக மாற்ற வேண்டும். இம்முயற்சியை முதலில் தாயும் பின்னர் தார மும்தான் மேற்கொள்ள வேண்டும். 'எப்படி ஒரு சக ஆணுக்கு மரியாதை தருகிறோமோ அதே மரியாதையை ஒரு பெண்ணுக்கும் தந்தாக வேண்டும்', என்று இளம் வயது முதலே எடுத்துச் சொல்லி மனதில் பதிய வைத்து வளர்க்க வேண்டும். ஒரு தாய். மகனுக்கு ஒரு நீதி; மகளுக்கு வேறொன்று, மகனுக்குச் சுடுசாதம், மகளுக்குப் பழைய சாதம்; மகனுக்குப் பள்ளிக் கல்வி, மகளுக்குத் தன் வாரிசுகளை இடுப்பில் சுமக்கும் வாழ்க்கைக் கல்வி என்று பிஞ்சுப் பிராயம் முதலே பாகுபாடு காண்பித்து வளர்க்கும் இந்தச் சமூக வழக்கத்தால்தான் பெண்களின் நிலை இன்றளவிலும் சிறப்பாக, பெருமைப்பட்டுக் கொள்ளும் விதத்தில் முன்னேறவில்லை.

அடுத்த நிலையில் சமூகத்தில் அவளைப் பாதிக்கும் மக்கள் தொடர்புச் சாதனங்களான பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி போன்றவை; பெண்மையை உயர்வாகச் சித்திரிக்காவிடினும் சமமாக வேனும் சித்திரிக்க வேண்டும். அல்லாமல் இழிவுபடுத்தும் நோக் கில் தன் வக்கிரபுத்திச் சிந்தனையை வியாபாரமாக்கி இச்சமூகத்தின் வேர்களையே நச்சாக்கும் முயற்சியைப் பெண்கள் எப்பாடுபட்டாகி லும் தடுக்க வேண்டும்; இச்சமுதாயத்தின் இளம் குருத்துக்களை இவ்விஷப் பரவலிலிருந்து காக்க வேண்டும்.

பெண்களை - பெண்மையை இழிவு செய்யும் படைப்புகளை யார் உருவாக்கினாலும், அவர் சமூகத்தில் எத்தனை உயர்வான அந்தஸ் தில் இருந்தாலும் அந்தப் படைப்பை உதாசீனம் செய்யும், ஒதுக்கி வைக்கும், தவிர்த்துவிடும் மனப்பக்குவமும் விவேகமும் குறைந்த பட்சம் பெண்களுக்கு மட்டும் இருந்தால்கூட ஓரளவிற்கேனும் இதுபோன்ற முயற்சிகளில் வருங்காலத்தில் ஈடுபடும் மாந்தருக்கு இவ்வெதிர்ப்பு அலை ஓர் அறைகூவலாகவும், எச்சரிக்கை மணியாக வும் இருக்கும் என்பதில் ஐயமில்லை.

தத்தம் செயல்களால் பெண்களுக்கு வாழ்வில் மறுமலர்ச்சி உண்டாக்கிய ஆர்.எஸ். சுப்புலட்சுமி அம்மாள், அன்னி பெசன்ட் அம்மையார் ஆகியோருக்குச் சமமாய் 'குகப்ரியை' அவர்களும் நமக்கு முன்னே உயர்ந்து காட்சி தருகிறார். பெண்கள் மத்தியில் விழிப்புணர்வு, பெண்கள் தவிர்க்கக்கூடாத கடமைகள், பெண்கள் விட்டுக் கொடுக்க வேண்டிய சந்தர்ப்பங்கள், விட்டுக் கொடுக்க முடியாத உரிமைகள், பெண்கள் காட்ட வேண்டிய பண்பு நலன்கள், அவர்கள் முன்னேறிச் செல்லவேண்டிய இராஜபாட்டை என்று பலப்பல செய்திகளைப் பட்டியலிட்டு அவற்றைச் சிந்தைக்கு இரசமான விருந்தாக்கிக் கத்தி முனையினும் அதிக வலிமை மிக்க பேனா முனையின் துணை கொண்டு கடனாற்றியுள்ள அவரும் ஏனைய சாதனைப் பெண்மணிகளுக்குச் சற்றும் குறைந்தவரல்லர் என்று உணர்த்துகின்றன இம்மங்கை இதழ்கள்.

இறுதியாகப் பாராட்டப்பட வேண்டியவர் இத்தகைய அரிய இதழை வியாபாரச் சிந்தை இன்றி நடத்திய திரு. வை. கோவிந்தன் அவர்கள். இன்று இருக்கும் எத்தனையோ செல்வ வளம் படைத்த கனவான்கள் வை. கோவிந்தன் அவர்களை முன்னுதாரணமாகக் கொண்டு நல்ல பத்திரிகை நடத்த முன்வந்தால் ஒளிந்திருக்கும் 'குகப்ரியைகள்' வெளிச்சத்துக்கு வருவார்கள். இவ்விருவரின் கூட்டு முயற்சியால் பெண்கள் சமுதாயம் விழிப்படைய, ஊக்கம் பெற, மேன்மையடைய ஏதுவாகும். வரும் நூற்றாண்டு, பெண்கள் சமுதாயத்தை உன்னத நிலைக்கு உயர்த்தும் விடியலாக அமைய மேற்கொள்ளும் சிறந்த முயற்சியாக இது நிலைக்கும்.

# மங்கையர் மலர்

## தி. மகாலட்சுமி

செய்திப் பரிமாற்றத்திற்கு மொழி அடிப்படையாக அமைகிறது. அம்மொழியானது வாய்மொழியாகவும், எழுத்து மொழியாகவும் எண்ணங்களை எடுத்துச் செல்லும் ஊடகமாகிறது. எழுத்து மொழியாக வரும்போது இலக்கியங்களாக முகிழ்த்து அம்மொழி சார்ந்த சமுதாயத்தின் வரலாறு, பண்பாடு, நாகரிகம் போன்றவற்றை விளக்குகிறது. அதுவே படைப்பாளன் வழியாக அவனது கற்பனைச் சிறகு கொண்டு முகிழ்க்கும் இதழ்களாக விரிகிறது. இவ்விதழ்கள் சமயம், தத்துவம், அரசியல், அறிவியல், கலை, இலக்கியம் எனும் பொருண்மைகளில் பயணித்தபோதிலும் மகளிரின் மாண்பு மண்பதையில் மங்கிக் கிடப்பதைக் கண்டு பெண்ணின் சுதந்திரத்திற்கு, முன்னேற்றத்திற்குக் குரல் கொடுக்கத் தொடங்கியுள்ளன. பாரதி, பாரதிதாசன், திரு.வி.க. பெரியார் போன்றோர் பெண் சுதந்திரத்திற்குக் குரல் கொடுத்ததன் காரணமாகவும் பெண்களுக்கான இதழ்கள் தொடங்கப் பெற்றுள்ளன.

மங்கையர்க் கெனத் தமிழில் வந்த முதல் இதழ் அமிர்தவசனி (1865), என்பர். இவ்வகையில் ஜனவிநோதனி (1870), வித்யாபானு (1873), ஞானபானு (1876), சுகுணபோதினி (1883) மஹாராணி (1887), கலா தரங்கினி (1887), விவேக சிந்தாமணி (1892), சக்கர வர்த்தினி (1905), தமிழ் மாது (1906), தமிழ்ப் பெருமாட்டி (1934), கிரக லச்சுமி (1937), பெண் கல்வி, மாதர் மறுமணம், புதுமைப் பெண், தமிழ் மாது, மண்மகள், காதம்பரி, இலட்சியப் பெண், மகளிர் குரல் முதலிய இதழ்கள் வெளிவந்தன. தற்போது வெளிவந்து கொண்டிருக்கும் குங்குமம், இதயம், கலைமகன், ராணி, தேவி,

மூக்குத்தி, அமுதசுரபி போன்ற இதழ்கள் பெண்ணுக்குச் சிறப்பளித்துப் பொதுமையும் புதுமையும் நிறைந்த செய்திகளைக் கொண்ட இதழ் களாக வெளிவருகின்றன. மங்கை, மங்கையர் மலர், சுமங்கலி, ராஜம், பெண்மணி முதலியன பெண்களுக்கென்றே வெளிவரும் இதழ்கள். மங்கையர் மலர் 1957 ஜூலை மாதத்தில் வெளிவரத் தொடங்கி 1980 இல் சிறிது கால இடைவெளி விட்டுப் பரதன் பப்ளிகேஷன்ஸ் என்ற கல்கி நிறுவனத்தாரால் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கிறது.

ஆசிரியர் திரு. முரளியும், இணையாசிரியர் திருமதி மஞ்சுளா ரமேஷும் இவ்விதழை நடத்தி வந்தனர். தற்போது இதன் ஆசிரியர் மஞ்சுளா ரமேஷ்.

மங்கையர் மலர் மகளிர் நிலையில் எந்த அளவிற்குப் பங்கு பெற்று அவர்களுக்குப் போர்வாள் ஆகவோ, அல்லது கருத்துக் களஞ்சியமாகவோ விளங்குகிறது என்பதைப் பன்முக நோக்கோடு ஆய்வதே இக்கட்டுரையின் நோக்காகிறது.

பெண்களுக்கு வழிகாட்டுதல், அவர்கள் மேன்மைக்குத் துணை நிற்றல், அவர்தம் வாழ்விற்கு வளங்கூட்டுதல், அவர்தம் முன்னேற்றம், விழிப்புணர்வு எனப் பல நோக்குகள் இவ்விதழுக்கு உண்டு.

### மங்கையர் மலர் அமைப்பு விளக்கம்

இம்மலர் திங்கள் இதழாக வெளிவந்து கொண்டிருக்கிறது. 1994 இல் 7 ரூபாய், அதே ஆண்டு அக்டோபரில் 8 ரூபாய், 96இல் 9 ரூபாய், 97இல் 10 ரூபாய் ஆக இதன் விலை நிர்ணயிக்கப்பட்டுள் ளது. இம்மலர் 140 முதல் 200 வரை பக்க அளவைப் பெறுகிறது. அட்டைப் படத்தில் பெண்களின் படங்கள் வண்ண ஓவியத்தில் (pin-up) வரையப்பட்டுள்ளன. பொதுவாக இப்படங்கள் புகைப்படங்க ளாகவே உள்ளன. அட்டைப் படத்தின் மேலே மங்கையர் மலர் என்ற பெயர் தமிழிலும், இதழின் அடிப்பகுதியில் ஆங்கிலத்திலும் இடம் பெற அதைத் தொடர்ந்து அந்தமாத ஆண்டுக் குறிப்பும், அதனை அடுத்து விலைக்குறிப்பும் இடம்பெற்றுள்ளன. எல்லாத் திங்கள் இதழ் போலவே இதன் பின்னட்டையிலும் முழுப்பக்க விளம்பரம் பெரிய நிறுவனத்தாரால் தரப்பெற்று வெளியிடப்பட்டுள்ளது.

பொருளடக்கம்

தொடக்கத்தில் இம்மலரில் பொருளடக்கப் பகுதி அமைய வில்லை. 1996 பிப்ரவரி மாத ஆண்டு மலர் தொடங்கிப் பொருளடக் கம் இடம் பெறுகிறது. இப்பகுதியில் மலர் 16 என்பது ஆண்டையும், இதழ் ஒன்று என்பது குறித்த ஆண்டின் திங்களையும் குறிக்கிறது. இப்பகுதியில் தலைப்புகளுக்குப் பக்கங்கள் இடப்பட்டு, தலைப்பு களை ஒட்டிய செய்திகளுகேற்பச் சிறுபடங்களும் வரையப்பட்டுள்ளன. அட்டை வண்ணப்படம் பற்றிய குறிப்பும் இதில் இடம் பெறுகிறது. இப்பொருளடக்கம் பெரும்பாலும் 3 அல்லது 4 ஆம் பக்கத்தில் மங்கையர் மலர் என்ற தலைப்பில் தொகுத்துக் கூறப்படுகிறது.

இதில் காணும் சிறு தலைப்புகளை முறைமைப்படுத்துவதில் இதழுக்கு இதழ் வேறுபாடு காணப்படுகிறது. சில இதழ்களில் இத்தலைப்புகள் வண்ணங்களால் தீட்டப்பட்டும், தக்க இடைவெளி கொடுக்கப் பெற்றும் (மார்ச் 96) அச்சிடப் பெற்றுள்ளன. 96 பிப்ர வரி இதழில் நெடுங்கதை, சிறுகதை, சிறப்புக் கட்டுரைகள் சில, சிறப்பிதழுக்கான பேட்டிகளில் சில எனப் பொதுமையாகத் தலைப்பு கள் தரப்பெற்று, அதன் கீழே உங்களைக் கவர்ந்த வழக்கமான பகுதி கள் என இது தாம்மா புதுசு, புக்செல்ப், ராசிபலன் எனப் பக்கம் ஒன்று முதல் 212க்கு விபரம் தரப் பெற்றுள்ளது. கதை, குழந்தைகளைப் பற்றி, மருத்துவம் என்ற பொருண்மைகளில் தலைப்புகள் தரப்பட்டு அத்தலைப்புகளின் கீழ் செய்திகள் வகைப்படுத்தப்படுதலும் உண்டு (சூன் 96).

பிப்ரவரி 98 ஆம் ஆண்டு மலர் "இளைஞர்களுக்காக" என்று ஒரு தலைப்பிட்டு அதன் கீழே கல்லூரி மாணவிகள் விழா, வீர நடை போடும் வீராங்கனைகள் முதலான சிறப்புச் செய்திகள் தனியே வரிசைப்படுத்தப்பட்டு பிற தலைப்புகள் தனியே வரிசைப்படுத்தப் படுகின்றன. பக்க எண்கள் தொடர்ச்சியாக அமையாமல் செய்தியின் தன்மைக்கேற்ப முறைமாறி அமைகின்றன. 18 ஆம் ஆண்டு மலர் எனச் சிறப்பித்துக் காட்ட 18 என்ற வடிவத்திற்குள் பொருளடக்கம் இடம் பெறுகிறது. இதில் நீண்ட சதுரம் ஒன்றையும், இரு வட்ட இணைவுகள் எட்டையும் குறிக்கின்றன. எட்டின் மேற்பகுதியில் மங்கையர் மலரின் 18 ஆம் பிறந்த நாள் வாழ்த்துக்கள் என்ற பொருள் கொண்ட ஆங்கில வாசகத்தை வண்ணக் கோலத்தில் ஆர். பத்மாவதி

வரைந்துள்ளார். கீழ்வட்டப் பகுதியிலும் நீண்ட சதுரத்திலும் அடங்காத பிற பொருளடக்கச் செய்திகள் வெளியே இடம் பெறுகின்றன.

## இலவச இணைப்பு

நவராத்திரி, பொங்கல், தீபாவளி, புத்தாண்டு என்று விழாக் காலங்களிலும், திருமண ஸ்பெஷல், சுற்றுலா ஸ்பெஷல் என அவ்வப் போது மங்கையர் மலருடன் ஓர் இலவச இணைப்பு வழங்கப் பெறு கிறது. கட்டுரை, துணுக்கு, சமையல் குறிப்பு, அழகுக் குறிப்பு, பெண் கல்வி, சிறுகதை போன்ற பல்வேறு அம்சங்களைக் கொண்டு மூல நூல் அமைப்பிலேயே இவ்விணைப்பு வந்து கொண்டுள்ளது. திருமண ஸ்பெஷல் (சூன் 97) என்ற இணைப்பு 64 பக்கங்களில் திருமணம் பற்றிய பல்வேறு செய்திகளைப் பயன்பாட்டு நோக்கில் கொடுத்துள்ளது. இணைப்பின் அட்டைப் படங்கள் இணைப்பின் பொருண்மையை ஒட்டி அமைகின்றன. 'திருமண ஸ்பெஷல்' என்ற இணைப்பிற்கு மீனாட்சி திருக்கல்யாணக் கோலத்தை அட்டைப் படமாகத் தந்திருப்பது தமிழகத்தின் பண்பாட்டை மட்டுமன்றித் திருமணம் என்பது எத்தனைப் புனிதமானது என்பதையும் காட்டுவதாக அமைகிறது. பிப்ரவரி 90 இன் இணைப்பில் 'ஆ முதல் ன வரை' என்ற தலைப்பில் ஒரு கட்டுரை உள்ளது. அட்டையில் இடம்பெற்ற ஒரு குழந்தைப் படத்தின் அருகிலும் இத்தலைப்பு தரப்பட்டுள்ளது. எனவே இத்தலைப்பின் கீழ்க் குழந்தை பற்றிய செய்தி தொகுக்கப்பட்டுள்ளது என வாசகர்களை ஆர்வம் கொள்ளச் செய்யும். ஆயினும் இத் தலைப்பு பல்வேறு துணுக்குகளை உள்ளடக்கியது என்பது பின்பே தெரிகிறது. அக்டோபர் 89 இன் இணைப்பில் 'கொலுவுக்கு நாமே செய்யலாமே - பொம்மைகள்' என்ற கட்டுரை செய்முறைப் பயிற்சியோடு பொம்மை செய்தலை விளக்குகிறது.

## மங்கையர் மலரும் கோட்பாடும்

பொதுவாகச் சொன்னால் கலைமகள் நல்ல கதைக்கும், கல்கி தொடர் கதைக்கும், குமுதம் பொழுது போக்கிற்கும், ஆனந்த விகடன், குங்குமம், சாவி போன்றன பல்துறை தகவல்களுக்கும், கல்கண்டு துணுக்கிற்கும் முக்கியத்துவம் தருகின்றன. அது போல் மங்கையர் மாண்பு காப்பதற்கென எழுந்த இவ்விதழுக்குத் தன்னம்பிக்கை ஊட்டல் என்பது அடிப்படைக் கோட்பாடாகிறது.

பண்பாட்டின் அடித்தளத்தில் இருந்து பெண்ணைப் பிரித்து விடாமலும், பண்பாட்டு மரபுகளில் இருந்து திசைமாற்றி விடாமலும், அறக் கோட்பாடுகளிலிருந்து வழுவிவிடாமலும் பெண்ணின் பல்வேறு பிரச்சினைகளை அணுகுவதில் கவனம் செலுத்தும் இம்மலர் திரைச் செய்தியைப் புறம் தள்ளியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## மங்கையர் மலர் இதழியல் கூறுகள்

இம்மலர்க் கட்டுரைகள், துணுக்கு, விளம்பரம், டாக்டர் கேள்வி பதில், கடிதம், கலந்துரையாடல், சமையல் பகுதி, சோதிடம் எனப் பல கூறுகளைத் தன்னுள்ளே கொண்டுள்ளது. இவற்றுள் கட்டுரை, துணுக்கு, கலந்துரையாடல், சோதிடம் என்ற பொதுவான பகுதிகளும், பெண்களுக்குரித்தான சமையல் பகுதியும் மாதந்தோறும் இடம் பெற்று வருகின்றன. இவை தவிர சிறுகதை, தொடர்கதை, குறு நாவல் போன்ற பகுதிகளும் வருகின்றன.

## முன் அட்டை

'எப்போது இந்தப் பெண்கள் மாறுவார்கள்' 'உண்மையிலேயே பெண்ணுரிமை கிடைத்து விட்டதா?' என்பன போன்ற மக்களைக் கவரும் படியான தொடர்களுள் ஒரு தொடரை அட்டைப் படத்தில் அமைப்பது இவ்விதழின் உத்தியாகிறது.

மகளிர் தனித்துள்ள அட்டைப் படங்களே மிகுதி. இப்படங்கள் நாகரிகமான உடையில், கவர்ச்சியை வெளிக்காட்டாதவாறு உள்ளன. இதழ்களின் உட்பகுதியில் சிறப்பாகச் சில மகளிர் பற்றி விளக்கப் படுவது இயல்பு. இத்தகைய பகுதியோடு தொடர்புடைய பெண் பிரமுகர்களின் படங்களை அட்டையில் வெளியிட்டுள்ளனர். இதுவே தொடர்ந்து பின்பற்றப் படுதல் வேண்டும்.

அன்றைய சமூக நலத்துறை அமைச்சர் பி.டி.சரசுவதியைப் பற்றிக் கல்வியில் நிறைவு, சிந்தனையில் நேர்மை, கருத்துகளில் தெளிவு, தன்னடக்கம் முதலான பண்புகளைக் கொண்ட இவர் பெண்ணினத் திற்குப் பெருமை தருபவர் என்று இதழின் உட்பகுதி விளக்கத்தில் புகழாரம் சூட்டி, அட்டையில் அவர் படத்தையும் போட்டு, அவரை வாசகர்களுக்கு மங்கையர் மலர் (சூன். 79) அறிமுகம் செய்து வைக்கின்றது.

அட்டையில் இடம்பெற்ற மகளிர் பற்றிச் சிறப்பாகச் செய்திகள் கூறப்படாது இருப்பதைக் காட்டிலும் மேற்கூறியவாறு உள்ளே செய்தியை வெளியிட்டு, செய்திக்குரியவரை அட்டைப்படத்தின் வழி அறிமுகப்படுத்துவது சிறந்த முறையாகும்.

## கட்டுரைகள் – துணுக்குகள்

வணிகம் செய்யும் பெண்கள், குடியர்களைச் சிறைப்பிடிக்கும் காரிகையர், பெண் காவலர்கள், ஆண்களுக்கு மட்டுமே உரிய கதகளியைத் தொழில் ரீதியில் நிகழ்த்தும் பெண்கள், திரைக்கதை அமைத்து இயக்கும் பெண்மணி, திரைப்பட வசனகர்த்தா, ஆட்டோ ரிக்ஷா ஓட்டி, பயிற்சி சிகிச்சையாளர், வழிகாட்டிகள், தொலைபேசி இயக்குபவர், கிரிக்கெட் வீராங்கனைகள் என்று பல்வேறு துறைகளில் ஈடுபட்டுள்ள பெண்களைக் கட்டுரைகள், துணுக்குள்வழி இவ்விதழ் அறிமுகப் படுத்துகின்றது.

தொடர்ந்தாற்போல் மூன்று ஆண்டுகளாகத் தமிழ்ப்பேச்சுப் போட்டியில் வென்று சுழற் கேடயத்தைத் தன் கல்லூரிக்குத் தக்க வைத்துக் கொண்டவர், உயர்ந்த மதிப்பெண்கள் வாங்கிச் சாதனை புரிந்தவர், தொடர்ந்து ஐந்து ஆண்டுகளாகத் தமிழ்நாட்டின் முதன்மை வீராங்கனை, தமிழகத்தில் முதல் பெண் விளையாட்டு நடுவர், பெண்கள் கிரிக்கெட் மற்றும் தேசிய மாணவர் படையில் உயர்ந்த நிலை பெற்றவர் என்று பல்வேறு துறைகளிலும் சாதனை புரிந்துள்ள பெண்கள் சிறப்பிக்கப்பட்டுள்ளனர்.

## கட்டுரைகள்

ஆசிரியரின் உளப்பாங்கையும், கருத்தையும், நடையையும் இலக்கியச் சுவையோடு கட்டுரைகள் வெளிப்படுத்துகின்றன. நாட்டின் பொருளாதாரம், அரசியல் குறித்து எழுதப்படுபவை பொதுக் கட்டுரைகளாகவும், தொழில், மருத்துவம், கலை குறித்து எழுதப் படுபவை சிறப்புக் கட்டுரைகளாகவும் அமைகின்றன. மங்கையர் மலரில் சமூகநலம், பொருளாதாரம், சமயம், மருத்துவம், கலை, விளையாட்டு, சமையல், மகளிர் வாழ்வியல், மகளிர் சிறப்பு, மாதர் தம் அடிப்படைப் பிரச்சினைகள், மகளிர்க்கான பொழுது போக்கு, மகளிர்க்கான ஆலோசனை, அழகுக் குறிப்பு, புடவை, நகை, இசை, நாடகம், நாட்டியம், கைத் தொழில் போன்ற பொருள்களின் அடிப்படை

யில் கட்டுரைகள் வெளிவருகின்றன. இவை தவிர, சில அனுபவக் கட்டுரைகளும் இடம் பெற்றுள்ளன.

### சமூக நலக் கட்டுரைகள்

அன்றாட வாழ்வில் பயன்படுத்தும் பொருட்களில் கலப்படம், எடைகளில் ஏமாற்றும் தன்மை, பொருளை வாங்கும்போது மனத்தில் கொள்ள வேண்டிய முக்கியமான கருத்து போன்ற செய்திகளை உள்ளடக்கி இவை அமைகின்றன.

### பொருளாதாரக் கட்டுரைகள்

பெண்கள் சிறுதொழில் மேற்கொண்டு பொருளீட்டும் முறை, வீட்டிலிருந்தே பொருளீட்டுவதற்குரிய வழிமுறை குறித்தவை இவற்றில் இடம் பெறுகின்றன.

### சமயக் கட்டுரைகள்

'நம்பினார் கெடுவதில்லை' எனும் பொருண்மையை அடிப்படையாகக் கொண்டு இவை எழுதப்படுகின்றன. 1995 இல் 'கண் கண்ட தெய்வம், என்ற தலைப்பில் சமயக் கட்டுரைகள் வெளிவந்துள்ளன.

### மருத்துவக் கட்டுரைகள்

மக்கள் நலம் கருதி நோய்களும் அவற்றுறகான மருத்துவ முறைகளும் எளிமையான முறையில் கூறப் பெறுகின்றன. மருத்துவம் பற்றிய அறிவு அனைவருக்கும் தேவை என்பதை வலியுறுத்தும் நோக்கில் ஓரிதழில் ஒன்றிற்கு மேற்பட்ட கட்டுரைகள் இடம்பெற்று வருகின்றன. அவ்வகையில் 1990 இல் 21 கட்டுரைகள் வெளியாகி யுள்ளன.

இம்மலர் 1995 இல் அதிக அளவில் ஆலோசனைக் கட்டுரைகளை வெளியிட்டுள்ளது. இவற்றில் கருவுற்ற பெண்களுக்கான ஆலோசனைகள் மிகுதி. மேலும் தாய்மைக்குரிய ஆலோசனைகள், தாய்மை அடைந்த பெண்களுக்குரிய உணவு, பாதுகாப்பு, குழந்தை வளர்ப்பு போன்றவற்றையும் இவை தந்திருக்கின்றன. 'பெற்றால் மட்டும் தாயாகி விடுவதில்லை' (மார்ச்சு. 90), என்ற கட்டுரை குழந்தைகளை வளர்க்கும்போது தாய்மார்கள் கடைப்பிடிக்க வேண்டிய வழி முறைகளைக் கூறுகிறது.

**கலைக் கட்டுரைகள்**

நாடகத் தயாரிப்பாளர் பேட்டி, பெண்கள் எப்படி மேக் -அப் போட்டுக் கொள்ளலாம், முகம், கண், உதடு, கூந்தல் முதலியவற்றை அழகுபடுத்தும் முறை இவற்றில் கூறப்பெறுகின்றன. கலாக்ஷேத்திரா வில் நடந்த பாஞ்சாலி சபதம் (பக்.4-6 சன 90) என்ற நாடகத்தைக் கிருஷ்ணவேணி தயாரித்த முறையை விளக்குகிறார்.

**விளையாட்டுக் கட்டுரைகள்**

விளையாட்டு பற்றி, விளையாட்டில் தலைசிறந்தவர் பற்றி இவற்றில் எழுதப் பெற்றுள்ளன. 'ஆண்கள் பெண்களிடம் தோற்றுப் போக விரும்புவதில்லை' (ப.51, சன 90) என்ற கட்டுரையில் கேரம் வீராங்கனை அனுராஜுவின் விளையாட்டு அனுபவங்கள் இடம் பெற் றுள்ளன. தான் வேலை பார்க்கும் அலுவலக ஆண்களோடு போட்டி யிட்டுக் கேரம் விளையாட்டில் வெற்றி பெற்ற இவர் 'ஏனோ இந்த ஆண்கள் பெண்களிடம் தோற்றுப் போக விரும்புவதே இல்லை' என்று குறிப்பிடுகிறார்.

இங்ஙனம் பலதரப்பட்ட கட்டுரைகள் இடம்பெறினும் சமூக சேவையில் மிகுந்த நாட்டம் கொண்ட தொண்டுள்ளம் உடைய மகளி ரைச் சித்தரிப்பதில் இம்மலர் முதலிடம் பெறுகின்றது. 1979 இல் வெளிவந்த இதழ்களில் ஐந்து கட்டுரைகள் மகளிரின் பொதுநலத் தொண்டினை விளக்குகின்றன. மேலும் சமூக சேவையில் நாட்டம் கொண்டு பல சேவை நிறுவனங்களைப் பொறுப்பேற்று நடத்தும் மங்கையர் தம் திறனை 4 கட்டுரைகள் காட்டுகின்றன (தமிழ் இதழ்கள் காட்டும் மகளிர் நிலை, ப.99).

பெண்கள் பல்வேறு பணிகளை மேற்கொள்ளும் சிறப்பான நிலை யினை விளக்கமான கட்டுரைகளில் சித்தரிக்கின்றது. வேலை தேடும் பெண்களுக்கு உதவும் வகையில் தொலைபேசி இயக்குபவர் (ஹல்லோ - தொலைபேசி பேசுகிறேன், பிப் 79), வழிகாட்டி (வழி காட்டிகளின் வழிப்பாதை, பிப்79), தாதி (மருத்தவத் துறையின் நாடி, மார்ச்சு 79), பயிற்சிச் சிகிச்சையாளர்கள் (உதவும் கரங்கள், மார்ச்சு 79), விமானப் பணிப்பெண் (விண்ணிலே பறக்கும் வீராங்கனை, மே 79), தொழிலதிபர் (பெண்களைத் தொழிலதிபர்களாக்கிய ஒரு பயிற்சி நிலையம் (ஆகஸ்79) போன்றவர்களாவதற்கான வாய்ப்பும்

வசதியும் பற்றி விளக்கும் கட்டுரைகள் பல உள்ளன. பல துறைகளில் பெண்கள் முன்னேற வேண்டும் - சுயமாகச் சம்பாதித்துத் தம் சொந்தக் கால்களில் நிற்கும் பெருமை உடையவர்களாக வேண்டும் எனும் நோக்கில் இக்கட்டுரைகள் வெளியிடப்பட்டுள்ளன.

சமூக சேவையில் ஈடுபட்டுப் புகழீட்டிய மகளிர் போன்றே அரசியலில் ஈடுபட்டுப் புகழ்பெற்ற மகளிரும் குறிப்பிடத் தகுந்தவராவர். இவ்வகையில் இங்கிலாந்தின் முதல் பெண் பிரதமர் திருமதி மார்க்கரட் தாட்சரைப் பற்றி மங்கை (ஜூலை 79), ஆனந்த விகடன் (27.5.79), குங்குமம் (13.5.79), கல்கி (20.5.79), மங்கையர் மலர் எனும் ஐந்து இதழ்கள் கட்டுரைகளை வெளியிட்டுள்ளன. மங்கையர் மலர் இவருடைய வாழ்க்கைக் குறிப்புகளை அறியச் செய்துள்ளது. கல்கியில் இக்கட்டுரையை ஒரு பெண்ணே எழுதியிருப்பது சிறப்பிற்குரியது. மங்கையும் ஆனந்த விகடனும் அட்டைப் பட விளக்கக் கட்டுரைகளை வெளியிட்டு அவருக்கு மிகுந்த முக்கியத்துவம் அளித்துள்ளன.

தமிழகத்தில் அன்று அமைச்சர் பதவி வகித்த திருமதி சுப்புலட்சுமி செகதீசனைப் பற்றி மங்கையர் மலர் வாசகர்களுக்கு அறிமுகப்படுத்தும் நோக்கில் விளக்கக் கட்டுரை தந்துள்ளது.

### துணுக்கு

சிறிய அளவில் உலக நடப்புச் செய்திகளை அறிவுறுத்தலோடு தெரிவிப்பனவே துணுக்கு இலக்கியம். இவை ஒரே செய்தியில் கருத்தைக் குறிப்பால் உணரச் செய்வன. இத்துணுக்கு இதழியல் துறையில் சிறப்பான இடத்தை வகிக்கிறது. மங்கையர் மலரில் வெளியாகியுள்ள துணுக்குகளை,

1. பெண்களுக்குப் பயன் தருபவை (அரிசியில் உப்புப் போட்டுக் களைந்தால் களிமண் கட்டிகள் கரையும்)

2. பொதுமக்களுக்குப் பயன் தருபவை (பிளாஸ்டிக் செருப்புகள் வாங்கியதும் தண்ணீரில் ஊறவிடுங்கள். உழைப்பு அதிகம். காலையும் கடிக்காது.)

என்ற அடிப்படையில் பகுக்கலாம். இத்துணுக்குகள் செய்திகளைத் தெரிவிப்பனவாக மட்டுமல்லாமல் நகையுணர்வூட்டி மகிழ்விப்பனவாக

வும் உள்ளன. வாசகர்களை ஆர்வமுடன் படிக்க வைக்க வேண்டி இத் துணுக்குகள் அனைத்தும் கட்டம் கட்டப்பட்டே கூறப்படுகின்றன. ஒவ்வொரு துணுக்குக்கும் ஒரு சித்திர வரைபடம் (கார்ட்டூன்) வரையப் படுவதால் நகைச்சுவைத் துணுக்கு போன்ற தோற்றத்தை ஏற்படுத்தி, பார்த்தவுடன் மனத்தைச் செய்தியின்பால் ஈர்க்கச் செய்கின்றன.

துணுக்குகளாக, இடநிரப்பிகளாக அமைவன பெரும்பாலும் இல்லப் பயன்பாட்டுக் குறிப்புகள். மருத்துவம், அழகுக் குறிப்பு, சமையல், ஆன்மீகம் போல்வன துணுக்குகளாக அமைவது படிப் போரை அச்செய்தியின்பால் ஈர்க்க வைக்கும் முகமாக அமைகிறது.

திருமதி மார்கரெட் தாட்சர், தமிழக அமைச்சராயிருந்த பி.டி.சரசுவதி, தமிழ்மொழியில் தேர்ச்சி பெற்ற சோவியத் நாட்டு மங்கை திருமதி ப்ரோலவ், இங்கிலாந்து அரசரைத் தீவிரமாக எதிர்த்து நின்ற ஜோன் ஆஃப் ஆர்க் ஆகியோரையும், விளையாட்டரங்கில் சாதனைகள் புரிந்த சிலரையும் செய்தித் துணுக்குள் வழி இம்மலர் அறிமுகப்படுத்துகின்றது. "முதன் முதலில் தட்டெழுத்துப் பயிற்சி பெற்ற பெருமைக்குரியவர்கள் பெண்களே" (மார்ச்சு 79) என்பது பெண்களின் சாதனை பற்றிய துணுக்காக அமைகிறது.

இன்றைய சமுதாயத்தில் சட்டப்படி பெண்களுக்குப் பற்பல உரிமைகள் தரம்பெற்றுள்ளன. இதன்வழி பெண்கள் முன்னேற வாய்ப்புக் கிட்டுகின்றது. எனவே இவர்கள் எழுப்பும் உரிமைக் குரலைச் சில செய்தித் துணுக்கள் காட்டுகின்றன.

பெண்கள் ஆண்களுக்கு நிகரானவர்கள் என்று ஏற்றுக்கொள் ளாத சீனாவில் 1959 இல் " ஆண்களுக்கு நாங்கள் சளைத்தவர்கள் அல்லர்" என்று சீனத்துப் பெண்கள் உலகுக்கு எடுத்துக் காட்டினர். அவர்கள் தங்களது கடின உழைப்பால் விளைச்சலைப் பெருக்கி நாட் டின் பஞ்சத்தைப் போக்கினர் என்பதை ஒரு செய்தித் துணுக்கு (ஏப்.79) கூறுகிறது.

சோதிடக் கலையிலும் பெண்கள் தேர்ச்சி பெற்றுள்ளனர் என்பதை திருமதி. கே.என். சரசுவதி அமெரிக்காவிலுள்ள உலகப் பல்கலைக் கழகத்தில் சோதிட அறிவியலில் அறிஞர் பட்டம் பெற்றார் என்ற செய்தியினால் அறிய முடிகின்றது.

## விளம்பரம்

இம்மலரில் வரும் விளம்பரங்களில் பெண்கள் கவர்ச்சியாகக் காட்டப் பெறவில்லை. ஆயினும் ஒரு விளம்பரத்தில் (அக் 79) பெண் கவர்ச்சியாகக் காட்டப்பட்டுள்ளதையும் காணமுடிகிறது. இம்மலரில் வெளியாகியுள்ள விளம்பரங்களை,

1. குழந்தைகளுக்குரிய உணவு, மருந்துப் பொருட்கள் பற்றிய விளம்பரங்கள்
2. வீட்டுப் பயன்பாட்டுக்குரிய தொலைக்காட்சி, குக்கர் பற்றிய விளம்பரங்கள்
3. சேமிப்பு பற்றிய விளம்பரங்கள் -எல்.ஐ.சி
4. பெண்களுக்குரிய பொருட்கள் பற்றிய விளம்பரங்கள் - நகை, கூந்தல் தைலம்
5. திருமண விளம்பரங்கள்
6. புத்தக விளம்பரங்கள் (Book Shelf)

என்ற அடிப்படையில் வகைப்படுத்தலாம்.

'திருமண மலர்' குறித்த விளம்பரம் இதழின் தொடக்க காலத் திலிருந்து இடம்பெறுகிறது. இப்பகுதி பெற்றோர்களுக்கு மிகவும் பயனுடைய பகுதி. மகளிர் இதழாதலின் இப்பகுதியில் மங்கை யர்க்கே முக்கியத்துவம் தரப்பட்டுள்ளது. சாதி, மத, வேறுபாடு இன்றி, 'மணமகன் தேவை'; 'மணமகள் தேவை' என்ற தலைப்புகளில் விளம் பரங்கள் இடம் பெறுகின்றன.

கன்னியர்களுக்கு மட்டுமல்லாமல் விதவையர், விவாகரத்தான பெண்கள், வழுக்கி விழுந்த பெண்கள், ஊனமுற்ற பெண்கள் போன் றோர்க்கும் புது வாழ்வு கிடைக்க வழி வகுக்கும்படி இது அமைந் திருப்பது குறிப்பிடத்தக்கது.

## கேள்வி பதில்கள்

வாசகர் கேள்விகளுக்கு இதழாசிரியரோ அல்லது ஒரு குழு வினரோ பதிலளிப்பர். அனைத்துப் பொருண்மை பற்றிய கேள்விகளும் இப்பகுதியில் இடம்பெறும். 'டாக்டர் கேள்வி பதில்' என்ற தலைப்பில் உடல் நலக்குறைவு குறித்த கேள்விகளுக்கு மருத்துவரின் பதில்கள் வழங்கப் பெறுகின்றன.

**கலந்துரையாடல்**

பல்வேறு வகையான கலந்துரையாடல்கள் இப்பகுதியில் இடம் பெறுகின்றன. "டி.வி.யில் பிடித்தது இராமாயணமா? மகாபாரதமா" என்ற தலைப்பிலான கலந்துரையாடலில் ஆறு பெண்களின் கருத்துக் கள் இடம்பெறுகின்றன.

**கடிதங்கள்**

இடம்பெறும் கதைகள், கட்டுரைகள் குறித்த வாசகர்களின் பாராட்டுதல்களும், விமரிசனங்களும் 'சொல்ல விரும்புகிறோம்' என்ற தலைப்பில் வாசகர் கடிதங்களாக வெளிவருகின்றன. வாசகர் எண்ணங் களை, இதழ் குறித்த கருத்துக்களை வெளியிடுதற்கு வழிவகுக்கும் இக்கடிதங்கள் தேவையான ஒன்றாகும். மேலும் இதழில் குறை இருப்பின் சுட்டிக் காட்டுவதன்வழி அக்குறை நீக்கப் பெற்று இதழ் சிறப்பாக வெளிவர இக்கடிதங்கள் துணைபுரிகின்றன. சான்று:- இம்மாத நியூஸ் சாலட், மதர் தெரஸா, இளவரசி டயானா பற்றிய செய்திகளை முழுமையாகத் தாங்கி வந்திருந்தாலும் மற்ற விசயங் களையும் கொஞ்சம் சேர்த்திருக்கலாம் (பக். 64, நவ. 97).

இம்மலரின் சில இதழ்களில் (பிப். 98) வாசகர் கடிதங்கள் இடம் பெறவில்லை. இக்கடிதங்கள் இவ்விதழின் தரத்தை உயர்த்து வதற்கு மட்டுமின்றி படிப்பவர்களின் அறிவுச் சிந்தனையைக் கிளறு வதற்கும் வழி வகுப்பதால் சிறந்த ஆழமான செய்திகளைத் தாங்கிய கடிதங்களை எழுத வாசகர்கள் முன்வர வேண்டும். சிறப்புமிகு இப் பகுதிக்குப் பொருளடக்கத்திலும் இடம் ஒதுக்கலாம்.

பெண்ணியச் சிந்தனையாளர் எதிர்நோக்கும் விழிப்புணர்ச்சி இன்னும் சரிவரப் பரவவில்லை என்பதைப் பின்வரும் வாசகர் கடிதங்கள் சில காட்டுகின்றன.

அரசியல் பொய்யும் புரட்டும் வஞ்சமும் நிறைந்த சாக்கடை, அதைப் பற்றி அதிகம் பெண்களுக்குத் தெரிய வேண்டிய அவசிய மில்லை ( ப.60, சன. 95).

ஆண்கள் விழித்தால்தான் பெண்களுக்குப் பல முன்னேற்றங்கள் எல்லாம் (ப.148, பிப். 95).

பெண்கள் பத்திரிகை என்பதால்தான் சில வீடுகளில் பெண்களுக்கு இந்தப் புத்தகம் வாங்கும் அனுமதியும், படிக்கும் அனுமதியும் கிடைக்கிறது (ப.147, பிப். 95).

**சமையல் பகுதி**

சமையல் பற்றிய செய்முறை வகையிலான கட்டுரைகள் இவற்றில் இடம்பெறுகின்றன. ஒவ்வொரு மாதமும் நடத்தப் பெறும் சமையல் போட்டியும், சிறந்த இனிப்பு மற்றும் காரவகைகளின் செய்முறைகளும் பெண்கள் புதுமையான சமையல் வகைகளை அறிந்து கொள்ளத் துணைபுரிகின்றன.

பெண்கள் பத்திரிகை என்றாலே சமையலும் கோலமும் தானா (டிசம் 94) என்ற வினாவை எழுப்பி, மகளிர் இதழ் என்றாலே அதில் தவறாது சமையலும் கோலமும் பின்பற்றப்படுவது போற்றத்தக்கதல்ல என உணர்த்தியிருப்பது போற்றத்தக்கது.

கோலம் போடும், சமையல் சொல்லும் பத்திரிகை மிக அவசியம் (ப. 148, பிப். 95) என்பது போன்று மேற்குறித்த வினாவிற்குக் கிடைத்துள்ள 'தேவைதான்' என்ற விடை, மரபு எனும் மயக்கத்திலிருந்து அல்லது தளையிலிருந்து பெண்கள் விடுபடவே இல்லை என்பதைக் காட்டுகிறது.

கோலம், சமையல், புடவை, நகை, அழகுக் குறிப்புகள் போன்றவையும் வாழ்விற்குத் தேவையெனினும் அதுவே முதல் தேவையல்ல. உலக அறிவு, நம் நாட்டு நிலைமை, அறிவியல், அரசியல், என்று தெரியவந்தால் பிற செய்திகளையும் பெண்கள் புரிந்து கொள்ளக் கூடிய நிலை ஏற்படும். மேலும் இவை போல்வனவற்றிற்கு முக்கியத்துவம் தரின் வாழ்வில் வெற்றி பெறுவதில், கருதும் உயர்வினை எட்டுவதில் தடை ஏற்பட வாய்ப்புண்டாகிறது. எனவே இம்மலர் சமையல், இராசயனப் பூச்சுகளால் ஆன முக அலங்காரம், கூந்தல் அலங்காரம் கோலம் போன்றவற்றிற்கு இடம் ஒதுக்கும்போது கூடுதல் கவனம் செலுத்துதல் என்பது மிகவும் வேண்டாற்பாலது.

வாசகர் இரகுநாதனின் (வயது -43, நேரடிப் பேட்டி நாள் 1-7-99) மங்கையர் மலர் குறித்த கருத்து பின்வருமாறு அமைகிறது.

சமையல் குறிப்புகள், வாஸ்து எனும் புதையல், பெண்களுக்கான பாலியல் பிரச்சினைகள், சோதிடம், மருத்துவம் தொடர்பான பேட்டிகள், வாசகர் கடிதங்கள், புக்ஷெல்ப், மஞ்சுளா ரமேஷ் வரைகின்ற சிக்கலான விசயங்கள் போன்றன போற்றத்தக்கதாக உள்ளன. மாதம் இரு முறை மலருகின்ற இதழாக வருவது மிகுந்த மகிழ்ச்சியைத் தரும். அடிக்கடியும் அவ்வப்போதும் இலவச இணைப்புகளை வழங்குவது மிகவும் சிறந்த விசயம். சுற்றுலாவுக்காகத் தனிப்பட்ட முறையில் அவ்வப்போது விசயங்கள் தந்தாலும், மாதந்தோறும், ஏதேனும் ஒரு சுற்றுலா விசயத்தைத் தொடர்ந்து சொல்லி வருதல் நன்மை தரும் விசயமாக இருக்கும். தொடர்ந்து வந்துகொண்டிருக்கிற 'வாழும் மகான்கள்' பற்றிய விசயங்கள் மிகவும் பயன் தருவதாக உள்ளன.

இதில் இடம்பெறுகின்ற துணுக்குகள் கொஞ்சம் அதிகம் தான். சினிமா செய்திகள் இடம் பெறுவதில்லை என்பது ஒரு குறையாகப் பேசப்படுகின்றது. ஆசிரியரின் கேள்வி பதில் பகுதி இடம்பெறலாம். கோயில்கள் குறித்து நிறையச் சொல்லப்பட்டாலும் தெரிந்த கோயில், தெரியாத விசயம் இடம்பெற வேண்டும். மற்றொரு குறை சிறுகதைகள் மற்றும் நாவல்கள் அதிகம் இடம்பெறுவதில்லை. தீபாவளி, பொங்கல், புத்தாண்டு போன்றவற்றைச் சிறப்பிக்க இலவச இணைப்பு மட்டுமன்றி, தனியாகச் சிறப்பு மலர் வெளிவருதல் வேண்டும். மற்றபடி அனைவரும் படிக்கும் இதழாக உள்ளது. சிறுமியர் முதல் பெரியவர் வரை அதில் இரசித்துப் படிப்பது சமையல் விருந்து, கோலம் போடுதல் முதலியனவாகும். எடுத்தால் படிக்காமல் வைக்க முடியாத அளவிற்குச் சிறந்த இதழாக இது உள்ளது.

நல்ல கருத்துக்கள் சிலவற்றை இவர் கூறியிருப்பினும் இரசித்துப் படிப்பது கோலமும் சமையலும்; சினிமாச் செய்தி இல்லையென்பது குறை, சிறுகதை, நாவல் அதிகம் இடம் பெறுவதில்லை என்பன போன்ற கருத்துக்களை இவர் மட்டுமன்றி இன்னும் பலர் கூறும் நிலை நிலவுவது சிந்தித்தற்குரியது.

### சோதிடம்

இம் மலரில் 'இந்த மாதம் எப்படி' என்ற தலைப்பில் மாதந் தோறும் இராசி பலன் வெளியிடப் பெறுகிறது.

### குறுநாவல்

ஓராண்டில் 2 அல்லது 3 குறுநாவல்களே வெளியிடப்படுகின்றன. இவை பெண்கள் பிரச்சினையை எடுத்துரைப்பனவாகவே உள்ளன. இவ்வகையில் 1990 ஆம் ஆண்டு இதழ்களில் இடம்பெற்ற இரு குறு நாவல்களும் பெண்களின் பிரச்சினையையே மையமாகக் கொண்டு எழுதப் பெற்றுள்ளன.

ஒரு பெண்ணின் துன்பத்தைத் தீர்க்க முயன்ற மற்றொரு பெண் ணிற்கும் துன்பம் ஏற்படுவதையும், வாய்ப்புக் கிடைத்து தவறும் போது அது வெளியே தெரியாது என்ற நம்பிக்கை ஏற்படின் ஆண்களில் பலர் தங்களது சபல உணர்வைப் பயன்படுத்திக் கொள்வர் என்பதை யும், ஆண்கள் சந்தர்ப்பவாதிகள் என்பதையும் பாடாத ராகம் (90) என்ற குறுநாவல் சித்திரிக்கின்றது.

இன்று புதிதாய்ப் பிறந்தேன் (90) என்ற குறு நாவலில் தன்னம் பிக்கையற்றுச் செயல்படும் ஒரு பெண்ணின் பிரச்சினை கூறப்பட்டிருப் பினும், அவளுக்கு மனவுறுதியை உண்டாக்கிய மற்றொரு பெண்ணின் உயரிய பண்பு நலனும் எடுத்துரைக்கப்படுகிறது.

ஆர். சூடாமணியின் நீயும் நானும் (அக்.79) என்ற குறு நாவல் மிகுந்த வயது வித்தியாசமுள்ள ஆண் பெண் இருவரிடையே உருவாகும் பொருந்தாக் காதலை ஏற்புடையதாக்கி இக்காதல் வெற்றி கொள்வ தாகச் சித்திரித்திருப்பது குறிப்பிடத்தக்கது. இதற்கு வரவேற்பு இல்லையென்பது மரபை மீறி வர மக்களும் தயங்குகின்றார்கள் என்பதையே உணர்த்துகின்றது.

### சிறுகதை

காதலும் திருமணமும், நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்த பெண் களின் திருமணப் பிரச்சினை, திருமணத்திற்கு குறுக்கேவரும் தடை கள் (குறிப்பாக வரதட்சிணை வாங்குவதும் கொடுப்பதும் கண்டிக்கத் தக்கன எனும் போக்கு) பெண் குழந்தைகளை வெறுத்து அழிப்பது, தாய்மைப் பண்பின் சிறப்பு, பெண்ணின் உயர்ந்த குணநலன், பெண்ணிற் கும் பொறுமையின் அவசியம், பெண்ணின் விட்டுக் கொடுக்கும் பண்பு, ஏழை, அனாதை போன்ற ஆதரவற்ற பெண்களின் பிரச்சினைகள், மகளிர் துன்பநிலை, பொருளாதார வசதியின்மை, விதவையரின் ஆதர வற்ற நிலை, மறுமணத்தை வெறுக்கும் பெண்ணின் பிரச்சினை, தலை

முறை வேறுபாடுகள், இரு தலைமுறைகளுக்கிடையே காணப்பெறும் ஒற்றுமைகள், ஆணுக்கு நிகராகப் பெண் அனைத்துத் துறைகளிலும் முன்னேறும்போது ஏற்படும் பிரச்சினை, பக்தி, அலுவல் மகளிர் பிரச்சினை, ஆணின் மேலாதிக்கப் பிரதிபலிப்பு முதலியன சிறுகதைகளின் கதைக் கருவாக அமைந்துள்ளன. இவை நடைமுறை உலகில் மகளிர் வாழ்கின்ற நிலைகளையும் எதிர்கொள்கின்ற பிரச்சினைகளையும் சித்திரிக்கின்றன.

காதலுக்குத் தடை ஏற்படுவதால், வீட்டை விட்டு ஓடிக் காதலனுடன் ஒன்று சேர்தலைக் 'கேப்டன் கோதை' (அனுஷா, செப்.79) என்ற கதையும், திருமணமான பின்னரும் முன்னைய காதலருடன் உறவை வளர்த்துக் கொள்வதால் ஒரு பெண் தன் நல்வாழ்வை இழப்பதாக 'முன்னைய காதல் நினைவு' என்ற கதையும் அமைகின்றன.

நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்த பெண்களுக்குத் திருமணம் நடப்பதிலுள்ள பிரச்சினைகளை - பெற்றோர் படும் துன்பங்களைக் 'கல்யாணக் கனவுகள்" (உமாகுமார், ப.38, மே 90) 'பெருந்தன்மை' (வித்யா சுப்ரமணியன் ப.128, அக்.90) என்ற கதைகள் சுட்டிக் காட்டுகின்றன.

பெண் குழந்தைகளை வெறுப்பதையும் கருவிலே அழிக்க முற்படுவதையும் கருவாகக் கொண்டு, 'பெண்ணாகவே இரு' (எஸ். அன்னபூரணி ப.33, ஏப்.90) சங்கடங்களும் சந்தோசங்களும் (ப.38, சூலை. 90) என்ற கதைகள் வெளிவந்துள்ளன. 'ஒரு சிரிப்பின் முடிவில்' (லஷ்மி நடராசன், ப.29, அக்.90) என்ற சிறுகதை தொடர்ச்சியாகப் பெண் குழந்தைகளைக் கருவில் அழித்த ஒரு பெண்ணிற்கு நேர்ந்த துன்பத்தை எடுத்துரைக்கிறது.

'சுமை தாங்கியாகி' (பக் -28,29, பிப்.90) எனும் கதை பல்வேறு பிரச்சினைகளைத் தாங்கிக் கொண்டு குடும்பத்தை நன்முறையில் நடத்திச் சென்ற ஒரு பெண்மணியின் செயல் திறனைப் பாராட்டுகிறது.

கோமகளின், 'மூன்றாம் நபர் வந்த பிறகு' (அக் 79) என்ற கதையில் மீராவின் தாய்மைப் பொறுப்பின் காரணமாகக் கணவனது பணிகளைச் சரிவரச் செய்து கொடுக்க இயலாமல் மோதல் ஏற்பட்டு முடிவில் இருவரும் பொறுப்புகளைச் சமமாகப் பகிர்ந்து கொள்வதால்

தீர்வு ஏற்படுகின்றது. இங்ஙனம் சிக்கலுக்குத் தீர்வு காணும் வகையில் பல கதைகள் மங்கையர் மலரில் வெளிவந்துள்ளன.

நம்பினார் கெடுவதில்லை என்ற உண்மையை உணர்த்தும் வகையில் இறைபக்தியால் இறையருளைப் பெற்றதாகச் 'சொர்ணாம்பிகே' (ப.102, சன. 90) என்ற கதை அமைகிறது.

## அலுவல் மகளிர்

மணமாகும்வரை வீட்டிலேயே முடங்கிக் கிடைப்பதைத் தவிர்ப்பதற்காக, பத்மா என்பவள் வேலையில் ஈடுபடுவதை, தேவை யாருக்கு (ஜெயலஷ்மி, ஜன. 79) என்ற கதையும், தாதிப் பணியின் மீதுள்ள ஈடுபாட்டின் காரணமாகத் தன் பெற்றோர் எதிர்ப்பையும் மீறி வேலைக்குச் செல்லும் பெண்ணைக் 'கேப்டன் கோதை' என்ற கதையும் காட்டுகின்றன.

மனைவி தன்னைக் காட்டிலும் பதவி உயர்வு அடைவதை விரும்பாத கணவனால் பெண்ணின் முன்னேற்றம் பாதிக்கப்படுவதை 'எழுச்சி' (ஈஸ்வர், ப.90, ஏப். 90) என்ற கதையும், தன்னைவிடப் பதவி உயர்வு பெறுவதைக் கணவன் விரும்பாததால் ஒரு பெண் தன் பதவி உயர்வைத் தியாகம் செய்வது குடும்பம் என்ற போர்வையில் ஒளிந்து கொண்டதை 'உயரம் தாண்டுதல்' (சத்யப் பிரியன், ப.33, டிச. 90) என்ற கதையும் காட்டுகின்றன.

ஒரு சிறு இழப்பையும் பொறுத்துக் கொள்ள முடியாத சிறு பெண்ணொருத்தியின் உள்ளத்தைக் காட்டும் 'மீசை' (ரேஷ்மி தன்யா, ஆக. 90) என்ற கதையும், பெற்றோருக்குக் கட்டுப்படாது பிடிவாதமாகக் கலாட்டா புரியும் ஒரு பையனை அவனுடைய நண்பன் சீராகச் செயல்பட வைப்பதை உணர்த்தும் 'குழந்தை வைத்தியம்' (சியாமளா சேகர், ப.28, டிச. 90) என்ற கதையும் உளவியல் கதைகளாக அமைகின்றன.

தையல்காரன் சரியாக ரவிக்கை தைக்காததால் ஒரு குடும்பத்தில் ஏற்பட்ட குழப்பத்தைக் காட்டும் ரவிக்கை மகாத்மியம், (அனுராதா ரமணன், ப.51,மே. 90) என்ற கதையும், புதிதாகக் கார் ஓட்டக் கற்றுக்கொண்ட பெண்மணியால் ஏற்பட்ட பிரச்சினைகளைக் கூறும் ஜானு கார் ஓட்டினாள் (கேயெஸ், ப.59, அக்.90) என்ற கதையும் நகைச்சுவைக் கதைகளாக வருகின்றன.

கதை, கட்டுரைகளில் மேலை நாகரிகத் தாக்கம் காணப்பட்டா லும் அவை கட்டுக்குள் அடங்கி நம் போக்குடன் ஒத்திசைப்பதைக் காணமுடிகின்றது. எழுத்துப் படைப்பு எவ்வகையில் வளர்கிறது என் பதை உணரமுடிகின்றது. புதுமையில் நாட்டமும் மரபில் வழாமையும் பொருந்தி அமைகிற பெண்ணுலகை விரும்புவதாக இவ்விதழ் அமை கிறது. இவ்வாறு புதுமை நாட்டம், பழைமைப் பிடிப்பு எனும் இரண் டிற்கும் இடையே நம் நாட்டு மகளிர் வாழ்கின்ற நிலையை இவ்விதழ் சித்திரிக்கின்றது.

மகளிர் சிறப்பு பற்றிய கட்டுரைகள் விரிவாகவும் அதிகமான அளவிலும் இடம்பெற்றுள்ளன. சிறப்பு மிக்க மகளிரை வாசகர்கள் முன் மாதிரியாகக் கொள்ள வேண்டும் என்ற நோக்கத்திலேயே இக் கட்டுரைகள் அமைந்துள்ளன. பெரும்பாலும் நடுத்தர, உயர்வர்க்கத் தினருக்கு ஏற்றாற்போல தரும் பயன் குறிப்புகளை அதிகம் தந்துள்ளன.

பொருளாதார உரிமை, கல்வி, நற்சிந்தனை, தன்மான உணர்வு, தன்னம்பிக்கை முதலியன பெற்றுப் பெண் விடுதலையை அதாவது ஆணுக்கு நிகரான உரிமையை, தகுதியை, எச்சூழலிலும், எல்லாச் செயற்பாடுகளிலும், எப்பருவத்திலும், அனைத்துப் பெண்களும் பெற வேண்டுமென்ற பெண்ணியச் சிந்தனைகளைப் பெண்களிடையே நிலை நிறுத்த இவ்விதழ் முயல்கிறது எனலாம்.

பெண்களுக்கான குறிப்புகளைப் பயன்பாட்டு நோக்கில் வெளி யிடுதல், பெண்களுக்கு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி தன்னம்பிக் கையை வளர்த்தல், மகளிரை வெளியுலகிற்கு அறிமுகப்படுத்தல், பொதுநலப் பணியில் ஈடுபட வைக்கத் துணை நிற்றல், பலரைப் படைப்பாளராக்கிப் பெருமைப்படுத்தல், பெண்களுக்கு ஏற்படும் பல்வகைச் சிக்கல்களை வெளிக்காட்டுதல், கதை, கட்டுரைப் போட்டி களில் மகளிரைப் பங்கு கொள்ளச் செய்தல், ஆலோசனைக் கட்டுரை களைப் படிக்க வைப்பதோடு மட்டுமின்றி அவற்றில் பயிற்சி பெறவும் செய்தல், பிரச்சினைகளை எதிர்த்து எழுச்சியூட்டச் செய்தல், இசை, நடனம் போன்ற கவின் கலைகள், சமையல், அலங்காரம் போன்ற பயன் கலைகள் பற்றிய விளக்கங்களின் வழி வாசகர்களைக் கவர்தல் எனப் பல நோக்குகளைச் செயற்படுத்தும் வகையில் இவ்விதழ் இயங்குகிறது.

மேலும் பெண்களால் பெண்களுக்காக நடத்தப் பெறுவது மங்கையர் மலர் எனும் நிலை உருவாக வேண்டும். பெண்களின் படைப்புகளுக்கு முன்னுரிமை கொடுத்துக் கதை, கட்டுரை, கவிதை எழுதத் தூண்ட வேண்டும். பெண்களால் எதுவும் முடியும் என்பதை வலியுறுத்த வேண்டி இருப்பதால் ஆண்களின் படைப்புகளுக்குக் குறிப்பிட்ட கால கட்டம் வரையாவது வாய்ப்பு அளிக்காதிருத்தல் தேவையாகிறது. அதே நேரத்தில் பெண்ணியத்தை வளர்க்கும், சிறப்புச் செய்யும் ஆண்களைப் பற்றியும் அவர்களது படைப்புகளையும் தருவதில் தவறில்லை.

இம் மலருக்கு மஞ்சுளா ரமேஷ் என்னும் பெண், ஆசிரியராக இருப்பது வரவேற்கத்தக்கது. மேலும் கூடுதலாக இணை ஆசிரியர், பொறுப்பாசிரியர் என வேறு பெண் ஆசிரியர்களுக்கும் இடம் தரலாம். ஆசிரியர் பொறுப்பிலும் நிர்வாகப் பொறுப்பிலும் முழுக்க முழுக்கப் பெண்களே ஈடுபடின் இவ்விதழ் தன் பொருள் உணர்த்தும் நோக்கில் வெற்றி பெறும்.

எளிய நிலையிலும் இயல்புக்கு மாறான நிலையிலும் சாதனை படைக்கும் பெண்கள் பற்றித் தவறாது எல்லா இதழ்களிலும் இடம் பெறச் செய்தல் வேண்டும்.

மகளிர்தம் அடிப்படைப் பிரச்சினைகள் பற்றிய கட்டுரைகள் அதிக அளவில் இடம்பெற்று ஆழ்ந்து நோக்கப்படுதல் வேண்டும். மரபினைச் சிதைத்தல் கூடாது என்பதற்காக இன்றைய நடை முறைக்கு ஒவ்வாத முடிவுகளைத் தருதல் கூடாது.

சமையல், கோலம், அலங்காரம், முதலியவற்றுக்கு ஒதுக்கும் அளவினைக் குறைத்துச் சுய பொருளாதார முன்னேற்றம், தொழில், கல்வி, அரசியல், சமூக விழிப்புணர்ச்சி போன்றவற்றிற்கு அதிகமான இடம் தருதல் வேண்டும். இதன்வழி சமூக ஆக்கப் பணிகளில் இன்னும் அதிகமான அளவில் பெண்கள் இடம்பெறக் கூடும்.

மேல்மட்டத்து அல்லது நகர்ப்புற வாசகரை மட்டுமல்லாது கிராமப்புறப் பெண்களையும் சென்றடையும் வகையில் இவ்விதழ் அமைதல் வேண்டும்.

சமுதாயச் சமத்துவம் உருவாவதற்குரிய படிப்பினையை ஊட்டும் வகையில் இவ்விதழ் அமையும்போது ஆண் பெண் சமத்துவம் என்பதும் உருவாகும்.

துணை நூல்கள்

1. காலச் சூழலில் பெண், முனைவர் ச. சிவகாமி, மாதவி பதிப்பகம், சென்னை, 1996.

2. தமிழ் இதழ் காட்டும் மகளிர்நிலை, டாக்டர் சிவ. சசிரேகா, பார்த்திபன் பதிப்பகம், மதுரை, 1998.

3. தமிழ் இதழியல் வரலாறு, மா.சு. சம்பந்தன், தமிழர் பதிப்பகம், சென்னை, 1987.

4. மங்கையர் மலர் புனைகதைகள் ஓர் ஆய்வு (1990), எம்.ஃபில் பட்ட ஆய்வேடு, ச. கீதா, சென்னை, 1991.

# சுமங்கலி

## ஜே. ஆர். இலட்சுமி

ஒரு நாட்டின், ஓர் இனத்தின், ஒரு சமூகத்தின் உண்மையான வரலாற்றை இதழ்கள்தான் தாங்கி வந்துள்ளன என்பதில் எவருக்கும் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் சென்னையிலிருந்து பல்வேறு இதழ்கள், குறிப்பாகப் பெண்களுக்கு என்று தனிப்பட்ட இதழ்கள் வெளியாயின. 1860ஆம் ஆண்டு வெளியான 'அமிர்தவர்சனி' என்னும் இதழ்தான் பெண்களுக்கெனத் தோன்றிய முதல் இதழ் என்பர்.

தமிழில் தோன்றிய தொடக்ககால இதழ்களில், பெண்களுக்கென வெளியிடப்பட்ட 'சுகுணபோதினி', 'மகாராணி', 'பெண்மதி போதினி' போன்ற இதழ்கள் குறிப்பிடத்தக்கன. பெண்களுக்குப் பல வகையிலும் நல்லறிவைப் புகட்டும் நோக்கத்துடன் இவ்விதழ்கள் வெளிவந்துள்ளன என்பதை அறிய முடிகிறது. இவ்வரிசையில் இந்த நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து பெண்களுக்கென வெளியான இதழ்களில் குறிப்பிடத்தக்கது 'சுமங்கலி' என்னும் இதழாகும்.

### சுமங்கலியின் நோக்கம்

சுமங்கலி பெண்கள் முன்னேற்றத்தையே தன் நோக்கமாகக் கொண்டது. பெண்கள் விழிப்புணர்ச்சி பெறவேண்டும் என்பதோடு, பெண்களின் மேம்பாட்டுக்கு உதவ வேண்டும்; இனிமையான இல்லற வாழ்விற்குத் தக்கக் கருத்துக்களைச் சொல்ல வேண்டும் என்ற உயர்ந்த எண்ணத்தைக் கொண்டது.

வாழ்க்கை இனிமையானது என்று கனவு காண்போருக்கு வாழ்க்கையின் சிக்கல்களைத் தெரிவித்து அவற்றைத் தீர்த்துக் கொள்ளும்

வழிமுறைகளை எடுத்துச் சொல்லும் அடிப்படைக் குறிக்கோளைத் தன்னுள் கொண்டது. சொல்லால் மட்டுமன்றிச் செயலாலும் பெண்கள் முன்னேற்றத்தைக் காட்ட விழைந்தது சுமங்கலி இதழ். குறிப்பாகப் பெண்களுக்கு இலவசச் சட்ட அறிவுரை, மருத்துவ அறிவுரை ஆகியவற்றை வழங்கி நல்வழிப்படுத்துவதே சுமங்கலியின் முக்கிய நோக்கமாக இருந்தது எனலாம்.

### சுமங்கலியின் அமைப்பு

இதழியல் கலை ஐரோப்பியர் வரவால் கிடைத்த நன்மைகளுள் ஒன்றாகும். 'தொடக்கக் காலத்தில் ஆட்சியாளர்கள் இதழ்களை ஆரம்பிக்கவில்லை. இதழ் நடத்தியவர்களுக்கு உரிமையளித்து ஊக்குவிக்கவுமில்லை. இந்தத் துறையில் ஆர்வமும் பற்றும் உடைய தனிப்பட்ட சிலராலேயே இக்கலை வளர்ந்தது. புதியது செய்ய வேண்டும் என்னும் ஆர்வமே இக்கலையின் பிறப்பிற்குக் காரணமாய் அமைந்தது எனலாம்.'[1] எனவே, தனிமனித விருப்பமும் சமுதாயத் தேவைகளும்தான் இதழ்களின் பிறப்புக்குக் காரணமாக அமைந்தன.

இவ்வகையில் 'சுமங்கலி' என்னும் மங்கையர் இதழ் 1984ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் தொடங்கப்பட்டு மாதம் இருமுறை வெளி வந்தது. இவ்விதழின் நீளம் 26 செ.மீ.; அகலம் 20 செ.மீ. இதழ்கள் ஒவ்வொன்றும் ஐம்பத்தாறு பக்கங்களைக் கொண்டது. இதன் விலை ரூபாய் இரண்டு.

சுமங்கலியின் ஆசிரியர் பராசக்தி; இணை ஆசிரியர் சாரதி; வெளியீட்டாளர் முரசொலி மாறன்.

'பத்தாயிரம் சொற்கள் விளக்கக் கூடிய ஒரு கருத்தினை ஒரே ஒரு படம் விளக்கும்'[2] என்னும் சீனர்களின் வாய்மொழியைக் கருத்தில் கொள்ளும்போது, அட்டைப் படங்களே இதழ்களின் - இதழ்க் கருத்துக்களின் நுழைவு வாயில்கள் எனலாம். இவ்வகையில் கண்டவுடன் கண்களைக் கவரும் வண்ணம் சிறந்த முறையில் அமைந்து திகழ்ந்தன சுமங்கலியின் அட்டைப் படங்கள்.

சுமங்கலியில் படங்கள் இல்லாத புனைகதைகளே இல்லை எனலாம். கதைப் பக்கங்களைப் படிக்கத் தூண்டுவதற்குப் படங்கள் தேவை என்று ஓவியர் திரு. ஜெயராஜ் கருத்துத் தெரிவித்துள்ளார். இஃது ஏற்புடைய கருத்தே ஆகும்.

சுமங்கலி புனைகதைகளில் வெளிவந்த படங்களைத் திருவாளர்கள் ஜெயராஜ், மாயா, மாருதி, ராமு... போன்றோர் வரைந்துள்ளனர். இப்படங்கள் அனைத்தும் வண்ணத்தில்ும் கருப்பு - வெள்ளையிலும் அமைந்துள்ளன. இப்படங்களின் தரம் யாவும் ஓவியர்களின் சுவைத்தற் திறனைப் பொறுத்தும், கதைக்கருவைப் பொறுத்தும் சிறப்பாக அமைந்துள்ளன. குறிப்பிட்ட நிகழ்ச்சியைச் சுட்டிக் காட்டுவதற்கு ஓவியங்கள் பெரிதும் உதவியாய் அமைகின்றன என்றாலும், பெண்களின் பத்திரிகை என்னும் வகையில் பெண்களைக் கவர்ச்சிப் பொருளாகப் படைத்துக் காட்டும் நிலை மாறிப் பாத்திரப் படைப்புகளை ஒட்டி ஓவியங்கள் அமைந்திருந்தால் இன்னும் சிறப்பாக இருந்திருக்கும்.

சுமங்கலியின் ஒவ்வோர் இதழிலும் கட்டுரைகள், சிறுகதைகள், தொடர்கதைகள், செய்திகள், துணுக்குகள், பிறர் கருத்துகள், சட்ட அறிவுரைகள், மருத்துவர் பதில்கள், மருத்துவ அறிவுரைகள், சமையற்கலை, சந்தா விவரம், விளம்பரங்கள்... முதலியன இடம் பெற்றுள்ளன.

சில இதழ்களில் விமர்சனங்கள், பரிசுத்திட்டங்கள், மாதர் சங்கப் பகுதிகள் முதலியனவும் இடம் பெற்றுள்ளன. அத்துடன் கலந்துரையாடல், உண்மைக் கதைகள், உலக நடப்புகள், சுமங்கலி கிளப், சுமங்கலி உறுப்பினர்கள், அழகுக்கலை, பேட்டி, கோலப்பகுதி, புகழ் பெற்ற பெண்கள் தொடர்பான கட்டுரைகள், கவிதைக் கொத்து, பரபரப்பூட்டிய திருமணங்கள் போன்ற பகுதிகளும் இடம்பெற்றுள்ளன.

ஓரிதழில் காணப்படும் செய்தியோ, கட்டுரையோ, கதையோ அடுத்துவரும் இதழ்களில் அதற்குரிய இட ஒதுக்கீடு இன்றி வெவ்வேறு இடங்களில் மாறுபட்டு அமைந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

சுமங்கலி இதழில் காணப்படும் கட்டுரைகள், கருத்துகள், செய்திகள் போன்றவை இரண்டு முதல் நான்கு பக்கங்கள் வரை இடம் பெற்றுள்ளன. சந்தா விவரம், சுமங்கலி கிளப், கோலப்பகுதி முதலியன ஒரு பக்க அளவிலோ சற்றுக் குறைந்தோ அமைந்துள்ளன. அறிவுரைகள் மூன்று முதல் பதினேழு தலைப்புகளில் இடம்பெற்றுள்ளன. இதனை நோக்கும்போது ஒவ்வொரு செய்தியின் முதன்மை அறிந்து பக்கங்கள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன என்பதை அறிய முடிகிறது.

பெண்களுக்கு ஆதரவான பிறமொழி இதழ்கள், பிற இதழ்கள், இவற்றிலிருந்து வெளியான செய்திகள், உலக நடப்புகள், பேட்டிகள் ஆகியனவும் சுமங்கலியில் இடம் பெற்றுள்ளன. இதனால் பெண்கள் முன்னேற்றத்திற்கு ஆதரவு தரும் மற்ற இதழ்கள் குறித்தும் அறிய முடிகிறது.

சுமங்கலியில் இடம்பெறும் கட்டுரைகள் கருத்தறிவிக்கும் அறிவுக் கட்டுரைகளாகவும், இன்பம் தரும் சுவைக் கட்டுரைகளாக வும் திகழ்கின்றன. பொதுவாகக் கட்டுரை என்பதற்குக் கலைக்களஞ் சியம், 'ஒரு கட்டுரைத் தொடரானது, பெண்ணின் பெருமை, அயல் நாட்டுக் கொள்கை அல்லது பங்கு மார்க்கெட் என எதன் தொடர்பான தாயினும் கட்டுரையாளரின் தனிப்பட்ட சுவையையும், நோக்கு முனையையும் பிரதிதிபலிப்பதாக இருக்கும்' என்று விளக்குகிறது. இவ்வகையில் சுமங்கலியில் இடம்பெறும் கட்டுரைகள் அனைத்தி லும் பல துறைகளில் பணியாற்றும் பெண்களின் முன்னேற்றம் குறித்துத் தெளிவாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. பெண்களின் நிறைகுறைகளை எடுத்துக்காட்டும் விமரிசனப் போக்கில் இவை அமைந்துள்ளன.

கட்டுரைகளுக்கு அடுத்த நிலையில் கருத்துப் பகிர்வு, செய் திப் பகிர்வு என்னும் இரு பகுதிகள் இடம் பெற்றுள்ளன. இவற்றைப் போலவே பேட்டி, கலந்துரையாடல் பகுதிகளும் அமைந்துள்ளன. இதன்வழி சமுதாயத்தின் உண்மைநிலை என்னவென்பதை அறிய முடிகிறது.

கட்டுரைகளைப் போல உலக நடப்புகளைத் தெரிவிப்பதாய் ஆனால் அளவிற் சிறியதாய் இருப்பதைத் துணுக்குகள் என்கிறோம். சுமங்கலி இதழ் ஒவ்வொன்றிலும் இரண்டு முதல் இருபது வரையி லான துணுக்குகள் இடம் பெற்றுள்ளன. ஆணும் - பெண்ணும் சரிநிகர் என்ற நிலை ஏட்டளவில் அன்றி, நடைமுறையில் எந்த அளவு உள் ளது என்பதை இத்துணுக்குகள் உணர்த்துகின்றன.

சிறுகதைகளில் மகளிர் நிலை பல்வேறு கோணங்களில் கற் பனை ஓவியங்களாக உருப்பெற்றுள்ளன. குடும்ப உறவு நிலையை மையமாகக் கொண்டு அதிக அளவிலும் கல்லூரி, அலுவலகம் போன்ற இடங்களில் ஏற்படும் சிக்கல்களை மையமாகக் கொண்டு குறைந்த அளவிலும் சிறுகதைகள் புனையப்பட்டுள்ளன.

உண்மைக் கதைகள் என்னும் தலைப்பில் வெளியான கதைகள் யாவும் உண்மை நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்டு அப்படியே எழுதப்பட்டவையாகும். கவிதைகள் அனைத்தும் புதுக்கவிதை வடிவத்திலேயே அமைந்துள்ளன. கவிதை என்பது 'மனிதனது சிந்தனை ஆற்றலைத் தூண்டி விடவும் தன்னைப் பற்றிய உள் முகச் சிந்தனையில் அவனை ஈடுபடுத்தவும் உதவும் ஆற்றல் மிக்க கலைவடிவம்'[3] என்னும் கூற்றுக்கேற்பச் சுமங்கலியில் வெளியான கவிதைகள் ஒவ்வொன்றும் திருமண உறவு, காதல், வரதட்சணை போன்றவற்றைப் பாடுபொருளாகக் கொண்டுள்ளன.

ஒவ்வோர் இதழிலும் 'டாக்டர் பதில்கள்' என்னும் பகுதியில் வாசகர்களுக்குப் பதில் அளித்தவர் அப்பல்லோ (Apollo) மருத்துவமனைப் பெண்கள் நலப்பிரிவின் மருத்துவராகப் பணியாற்றிய திருமதி. வசந்தி அவர்கள். இவர் ஒவ்வோர் இதழிலும் குறைந்தது பத்துக் கேள்விகளுக்குப் பதில் அளித்துள்ளார். இவை அனைத்தும் பெண்களுக்குப் பயன்தரும் வகையில் அமைந்து திகழ்ந்தவை என்பது குறிப்பிடத்தக்கது.

மருத்துவ அறிவுரைகளைப் போன்று சட்ட அறிவுரைகளும் இடம் பெற்றுள்ளன. இதில் கணவனின் சந்தேகம், கணவனின் தாழ்வு மனப்பான்மை, காதல் தோல்வி, விரும்பாது நடந்த உறவு... போன்ற நிகழ்வுகளுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. எனவே, சிக்கல்களுக்குச் சட்டம் நல்வழித்துணையாக அமைகிறது என்பது இதன் வழிப் புலப்படுகிறது.

இதழ்களுக்கு நல்ல வருவாயைத் தரக்கூடியவை விளம்பரங்களாகும். சுமங்கலியின் அட்டைகளில் உள்ளும் புறமும் மற்றும் இதழின் உட்பகுதிகளிலும் வெளியான விளம்பரங்கள் பெரும்பாலும் வண்ணத்திலும், கருப்பு - வெள்ளையிலும் இடம் பெற்றுள்ளன. மகளிர் படங்களைக் கொண்டு அமைக்கப்படும் விளம்பரங்களுக்கு இதழாசிரியர் பொறுப்பல்ல என்றாலும் விளம்பரங்களைத் தேர்ந்தெடுத்து அவை தமது இதழ்களின் நோக்கத்திற்கு உகந்தவையா இல்லையா என்று தீர்மானிப்பது அவர்தம் கடமையன்றோ? சுமங்கலியில் வெளியான விளம்பரங்கள் உடைகள், நகைகள், பெண்களின் அழகு சாதனப் பொருட்கள், வீட்டுக்குறிப்புகள், பெண்கல்வி, மருத்

துவம், இதழ்கள் தொடர்பானவை, திரைப்படங்கள், சேமிப்பு... முதலிய பிரிவுகளில் அடக்கலாம்.

விளம்பரங்களில் பெண்கள் பயன்படுத்தும் நகைகள் பற்றிய விளம்பரமே அதிக அளவில் அமைந்துள்ளது.

பெண்களுக்குப் பயனுள்ள சமையற்கலை, அழகுக் குறிப்புகள், மாதர் சங்கம், மண மண்டபம் முதலியன ஒவ்வோர் இதழிலும் தவறாது இடம்பெற்றுள்ளன.

இவ்வாறு சுமங்கலி, வாசகர்களுக்குத் தேவையான, பயனுள்ள கருத்துக்களைக் கொண்டு சேர்ப்பதில் கவனமாகத் தன் இதழ் அமைப்பைக் கருத்தில் கொண்டு செயல்பட்டுள்ளது.

### சுமங்கலியின் நோக்கும் போக்கும்

இன்றைய சூழலில் சமுதாயத்தில் சில குறிப்பிட்ட நிலைகளில் வாய்ப்புகள் அதிகரித்துள்ள போதிலும் சிக்கல்கள் என்பது தவிர்க்க இயலாத ஒன்று. ஆனாலும் அதற்கான தீர்வுகாண வேண்டியது மிகவும் இன்றியமையாததாகும். சுமங்கலி இதனைக் கருத்தில் கொண்டு செயல்பட்டுள்ளது என்பதைப் பின்வரும் தலைப்புகளின் வழி அறியலாம். அவை:

கட்டுரைகள்
பேட்டி - கலந்துரையாடல்
அறிவுரைகள்
துணுக்குகள்
சிறுகதைகள்
கவிதைகள்

### கட்டுரைகள்

சுமங்கலியில் வெளியான கட்டுரைகள் அனைத்தும் பெண்களுக்காகவும், அவர்களின் நிறைகுறைகளைக் கூறும் போக்கிலும் விவரிக்கப்பட்டுள்ளன. கட்டுரையைப் பொறுத்தமட்டில் எண்ணிக்கையில் அதிக அளவு காணப்படுபவை உலக நடப்புகளைப் பற்றிய கட்டுரைகள்; குறைந்த அளவில் காணப்படுபவை சமையற் குறிப்புக் கட்டுரைகள்.

பல கலைகளில் தேர்ந்து, பல்வேறு துறைகளில் முன்னேறியுள்ள மகளிர்தம் சிறப்பு குறித்துக் கட்டுரைகள் வெளியாகியுள்ளன. முன்னேற்றம் அடைந்த பெண்களைப் போன்று எல்லாப் பெண்களும் முன்னேற வேண்டும் என்பதை அடிப்படையாகக் கொண்டே கட்டுரை கள் எழுதப்பட்டுள்ளன.

தொலைக்காட்சியின் மூலமும் பெண்கள் முன்னேற வாய்ப்புண்டு என்பதைக் கட்டுரை ஒன்று விளக்கியுள்ளது. கல்லூரி மாணவிகளினால் கல்லூரிக்குப் பெருமை சேர்க்கும் செயல் குறித்த கட்டுரைகள் சிலவும் வெளியாகியுள்ளன. பெண்கள் உழைப்பினால் உயரலாம் என்னும் தன்மையிலமைந்த கட்டுரைகளும் காணப்படுகின்றன. இக்கட்டுரை களில் இடம் பெறும் பெண்கள் உயர்தர அல்லது நடுத்தர வகுப்புப் பெண்களாகவே அமைந்துள்ளனர் என்பதும் இங்கே கருத்தில் கொள்ள வேண்டிய செய்தியாகும்.

பெண்மையின் பெருமையைப் பற்றி வெளியான கட்டுரைகளில் தாய்மைச் சிறப்பினையும், குழந்தை வளர்ப்பில் தாயின் சிறப்பிடத் தையும் சுமங்கலி விளக்கியுள்ளது. மகளிர் சிறப்பு பற்றிக் கூறும் கட்டுரைகள், பெண்ணின் மன உணர்வுகளையும், அவர்களின் செயல் திறன்களையும் எடுத்துக் கூறுவனவாக அமைந்துள்ளன.

மகளிரின் அடிப்படைச் சிக்கல்களான குடும்ப உறவு, கணவன் - மனைவி சண்டை, திருமணம், பெண்ணுரிமை, பெண்மைக்குப் பாதுகாப்பின்மை முதலியவற்றை மையமாகக் கொண்டு கட்டுரைகள் பல வெளிவந்துள்ளன. குடும்பம் என்ற அமைப்பில் பெண்ணுக்குக் கணவன், மாமியார், சகோதரர் உறவு, பெற்றோர் ஆகியோரால் சிக்கல்கள் இயல்பாக எழுகின்றன. இத்தகைய சிக்கல்களைச் சுமங் கலி 'மாமியாரா? மருமகளா?' என்பன போன்ற கட்டுரைகள் வாயிலாக எடுத்துக்காட்டி அதற்கான தீர்வையும் வழங்கியுள்ளது. இதே போலத் 'திருமணம் அவசியந்தானா?' 'பெண்களுக்குச் சுதந்திரம் போதுமா? போதாதா?' 'கணவன் மனைவியைக் கொடுமைப்படுத்துவது ஏன்? - ஓர் அலசல்' ஆகிய கட்டுரைகள் எதிர்வரும் சிக்கல்களையும் அவற் றைத் தீர்வு செய்யும் வழிமுறைகளையும் எடுத்துரைத்துள்ளன.

பெண்களுக்குரிய பொழுதுபோக்குகளில் மிக முக்கியமானதாகக் கருதப்படுவது ஒப்பனை செய்தல். சங்ககாலத்திலிருந்தே இதன்

முக்கியத்துவத்தை நாம் அறியலாம். அவ்வகையில் சுமங்கலியும் ஒப்பனைக்கு முதலிடம் கொடுத்துள்ளதைக் கூந்தல் அலங்காரம், வீட்டு அலங்காரம், கைவினைப் பொருட்கள் செய்தல் முதலிய வற்றை மையமாகக் கொண்டு எழுதப்பட்ட 'தையல்' என்ற கட்டுரை தெளிவுபடுத்தியுள்ளது.

இதேபோலக் 'குளிர்காலம் வரும்போது' என்னும் கட்டுரை, உல்லன் நூல்களைத் தேர்ந்தெடுப்பது எப்படி என்பதை விளக்கியுள்ளது. 'பழங்காலத்து அழகுக்கலை' என்னும் கட்டுரை பழமைக்குச் சிறப்பிடம் கொடுத்து உடலை ஆரோக்கியமான நிலையில் அலங்கரித்துக் கொள்ள வழிகாட்டியுள்ளது.

ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டு நட்புணர்வோடு வாழ்வதே வாழ்க்கை என்னும் அடிப்படைக் கோட்பாட்டை வலியுறுத்தும் வகை யில் 'கணவன் - மனைவி உறவு சிறந்து விளங்க', 'உங்கள் கணவரின் சிறந்த நண்பனாக நீங்கள் இருக்க' என்னும் கட்டுரைகள் அறிவுரை வழங்கியுள்ளன. அத்துடன் குழந்தைகள் கவனிப்பில் பெண்களின் கடமை என்னவென்பது குறித்து 'உங்கள் குழந்தை பரீட்சையில் பாஸ் செய்ய' என்ற கட்டுரை விவரித்துள்ளது.

சுமங்கலியில் வெளியான சமையற் குறிப்புகள் யாவும் வாசகர் மனதில் இடம் பிடித்தவை எனலாம். எப்படியும் சமைக்கலாம் என்ற எண்ணத்தை அகற்றி, ஏறும் விலைவாசியில் சமையலில் சிக்கனத்தை மேற்கொள்வது எப்படி? சத்துள்ள உணவுகளைத் தயாரிப்பது எப்படி? என்பதை மனதில் கொண்டு ஏறக்குறைய இருநூற்று முப்பத்திரெண்டு குறிப்புகளை இது வழங்கியுள்ளது. தமிழகச் சமையற் பாணி மட்டு மன்றி குஜராத்தி பாணி (பிளம்புட்டிங்), மராட்டிய பாணி (பாகர்வடி), கேரள பாணி (கீரைத்துவரம்) முதலிய அன்னிய மாநில உணவு வகைகளைப் பற்றிய குறிப்புகளையும் சுமங்கலி வழங்கியுள்ளது.

உலகில் நடைபெறும் நிகழ்ச்சிகள் அனைத்தையும் உலக நடப் புகள் எனலாம். இது குறித்த கட்டுரைகள் சிலவும் சுமங்கலியில் இடம் பெற்றுள்ளன. உலக நடப்புகள் குறித்த கட்டுரைகளை இரு வகையாகப் பிரிக்கலாம். ஒன்று, குளோப் நிறுவனத்தில் (Globe Agency) துப்பறிந்து எழுதும் கட்டுரைகள், மற்றொன்று பொதுவான நிகழ்வுகள் பற்றியன.

குளோப் நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு சுமங்கலி வெளியிட்ட சில கட்டுரைகள் வருமாறு:

* என் மனைவி மீது எனக்குச் சந்தேகமாக உள்ளது.
* எண்ணங்களை எழுதுகிறோம்.
* வேலைக்காரப் பெண்ணுக்குக் கொடுமை.
* காணாமல் போன பெண்ணுடன் காணாமல் போன காதலன்.
* தற்கொலையின் பின்னணிகள்.
* நான் கெட்டவளா? - நிரூபியுங்கள்.

உலக நடப்புகளைக் குறிக்கும் சில பொதுவான கட்டுரைகள் 'வீட்டுவரி உயர்வினால் வாடகை உயருமா?' 'கலப்படத்தைக் கண்டு பிடிப்பது எப்படி?' 'நுகர்வோர் நலம் - சில வினாக்களும் விடைகளும்' போன்ற தலைப்புகளின்கீழ், செய்திகளை விளக்கியுள்ளது.

இக்கட்டுரைகள் வாசகரிடையே விழிப்புணர்வையும், பொருட்களைத் தெரிவு செய்யும் முறைமையையும் - பயனையும் அறிந்து கொள்ளப் பெரிதும் உதவியுள்ளன.

புகழ்பெற்ற பெண்கள் குறித்த கட்டுரைகளும் சுமங்கலியில் இடம்பெற்றுள்ளன. பெண்களின் சாதனைகளை விளக்கும் வகையில் குறிப்பிட்ட சில கட்டுரைகளை எடுத்துக் காட்டலாம். அவை:

* பி.டி. உஷா
* கவிச்சக்கரவர்த்தினி மதிமகாதேவிவர்மா
* சாரண இயக்கப் பெண்மணிக்குப் பாராட்டு
* விமானப் படையின் முதல் பெண் மருத்துவர்.

சமுதாயத்தில் உயர்வாக மதிக்கப்பட்டவர்களின் திருமணங்கள் நடைமுறையிலிருந்து சற்று மாறி அமையும்போது அவை மக்களிடையே பெரிதும் பரபரப்பை ஏற்படுத்துகின்றன. இவ்வகையில் அமைந்த கட்டுரைகள்:

* சுதேசா - கிருபளாணி
* சாசிக்ஷுலி - சாந்தி

* ஜீவா - பத்மாவதி
* பரோடா மன்னர் - பித்தாபுரம் இளவரசி
* சுதர்சன் - நசீத்லகா பேகம்
* அவ்வை சண்முகம் - சீதாலட்சுமி...

முதலியன.

சாதி, மதம், உயர்வு தாழ்வு என்னும் நிலைகளைக் கடந்து மனஉணர்வுக்கு மட்டுமே சிறப்பிடம் கொடுத்து மணந்து கொண்ட மனிதர்களை, மேலுள்ள கட்டுரைகள் தெளிவுபடுத்தியுள்ளன.

மகளிர்தம் முன்னேற்றம், அவர்களின் அடிப்படைச் சிக்கல்கள், சிறப்பு நிலை, பெண்கள் முன்னேற்றம், சமையற் குறிப்புகள், மகளிருக் கான அறிவுரைகள், பரபரப்பூட்டிய திருமணங்கள் என்னும் பகுதிகளில் அமைந்த கட்டுரைகளைத் தவிர்த்துப் பிறவகைக் கட்டுரைகளையும் சுமங்கலியில் காணமுடிகின்றது. உதாரணமாக,

'ஜோதிர்லதா கிரிஜா' என்பவர் எழுதிய 'திருமணம் அவசியந் தானா?' என்னும் கட்டுரையில், "சிறந்த பொழுதுபோக்குகள் - தான் எதையும் இழந்துவிடவில்லை என்ற திருப்தியான மனநிலை - உள்ளத் தில் உறுதி ஆகியவற்றைத் தங்கள் வாழ்வில் துணையாகக் கொண் டால், தனித்து வாழும் பெண்கள் மணமான பெண்களை விட மிகச் சிறந்த வாழ்க்கை வாழ்ந்து வரலாம்" என்று குறிப்பிடுகிறார்.

இதேபோல 'கலாமூர்த்தி' எழுதிய 'கன்னியாய் காலம் முழுதும்' என்னும் கட்டுரையில் 'திருமணம் செய்து கொள்ளாமல் ஒரு பெண் ணால் சமூகத்தில் கௌரவமாக வாழமுடியும்' என்பதை ராதா - சரஸ் வதி - லீலா என்ற மூன்று பெண்களின் வாழ்க்கைச் சிக்கல்கள்வழி எடுத்துக் காட்டியுள்ளார்.

ஓர் ஏழைப் பெண்ணுக்கு அழகு எவ்வளவு ஆபத்தானது என் பதை மலையரசி எழுதிய 'ஒரு விசித்திர வழக்கு' என்னும் கட்டுரை விளக்குகிறது. இக்கட்டுரையில் குற்றவாளியின் குடும்பத்திற்குப் பாதுகாப்பு கொடுக்க விழையும் சட்டம் - அந்தக் குற்றவாளியால் பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு எத்தகைய பாதுகாப்பையும் அளிக்க வில்லை, அதற்குச் சட்டத்திலும் இடம் இல்லை என்பதைச் சுட்டிக் காட்டிக் கற்பை இழந்து, அதனால் வாழ்நாள் முழுதும் வருந்தியே வாழவேண்டிய நிலையைச் சித்தரித்துள்ளது.

'வேலைக்காரப் பெண்ணுக்குக் கொடுமை' என்னும் கட்டுரை ஆறுவயது வேலைக்காரச் சிறுமிக்கு நேர்ந்த அவலத்தைப் படம் பிடித்துள்ளது. நிர்வாணமாய்க் கட்டப்பட்டு, உணவு சரியாகக் கொடுக்கப்படாமல் அச்சிறுமி கொடுமைப்படுத்தப்பட்டதைக் கண்ணகி என்பவர் எழுதியுள்ளார். பெண்ணாய்ப் பிறந்த குழந்தைக்குக் கூட இந்தச் சமூகத்தில் பாதுகாப்பில்லை என்பதை என்னவென்பது?

பெண்களுக்கு வாழ்வில் கடைசிவரை ஒரு துணை வேண்டும் என்பதற்காகவே திருமணம் செய்யப்படுகிறது. ஆனாலும் இது அவர்களுக்குச் சரியான பாதுகாப்பை அளிக்கிறதோ என்றால் இல்லை என்று கூறலாம். இரவில் திரைப்படம் பார்த்துவிட்டுத் திரும்பும் வேளையில் முரடர்கள் சூழ்ந்து நின்று பெண்ணை மானபங்கம் செய்ய முயன்றபோது உடன் வந்த ஆண் துணையால் பயனேதும் இல்லை என்பதை 'நடுநிசியில்... நடுவீதியில்' என்ற கட்டுரை விளக்கியுள்ளது.

இந்தவகையில் சுமங்கலியில் வெளியான கட்டுரைகள் அனைத்தும் பெண்களைப் பிரதானப்படுத்தி ஒரு முழுமையான வாழ்க்கை வாழ்வதற்குரிய வாய்ப்புகளை உருவாக்கியிருப்பதை அறியலாம்.

## பேட்டி – கலந்துரையாடல்

சுமங்கலி இதழில் காணப்படும் பேட்டி, கலந்துரையாடல் மூலம் சமூகத்தின் உண்மை நிலை என்னவென்பதை அறிந்து கொள்ள முடிகிறது. இதழில், 'ஏறும் விலைவாசி என்று இறங்கும்?' என்னும் தலைப்பு குறித்துச் சென்னைப் பல்கலைக்கழகத்தின் பொருளியல் துறைப் பேராசிரியர் திரு. எம். நாகநாதன் பேட்டி அளித்துள்ளார். இப்பேட்டியில் வீட்டின் நிதிஅமைச்சராகத் திகழும் பெண்மணிகளுக்கு நிதி அமைப்பு சரியாகத் தெரிய வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதேபோல, 'வன்முறையைத் தூண்டும் சுவரொட்டிகள்', 'பெண்கள் தனியாகப் பயமின்றி வெளியே செல்ல' என்ற தலைப்புகளில் பெண்கள் பாதிக்கப்படும் நிலை குறித்துப் பெண்களே அன்றி ஆண்களும் பேட்டி அளித்துள்ளனர்.

வர்மக்கலை குறித்து, 'கலாதர்' தமது பேட்டியில் ஒவ்வொரு பெண்ணும் தமது பாதுகாப்பிற்கு அவசியம் அறிய வேண்டிய கலை வர்மக்கலை என்று கூறியுள்ளார்.

பேட்டிகள் பல்வேறு தலைப்புகளில் வெளியாகியுள்ளன - சான்றுக்குச் சில:

* அலுமினியத் தகட்டில் அழகு வடிவங்கள்
* தமிழகத்தின் முதல் பெண் பேரூராட்சித் தலைவி
* பெண்கள் முன்னேற என்ன வழி?
* ஒரு மருத்துவரின் சமுதாயப் பார்வை
* எத்திராஜ் கல்லூரி முதல்வர்

இப்பேட்டிகள் மூலம் சமூகத்தில் இயங்கும் பெண்களின் நிலையை ஆழமாகவும், மற்ற நிகழ்வுகளைப் பரவலாகவும் அறிந்து கொள்ள முடிகிறது.

பேட்டிகளைப் போன்று சற்று மாறுதலுடன் அமைந்திருப்பவை கலந்துரையாடல்கள். சுமங்கலியில் கலந்துரையாடல்கள் அதிக அளவில் இடம் பெறவில்லை. குறிப்பிட்ட கலந்துரையாடல்களைச் குறிக்க வேண்டுமானால்,

* யார் காரணம்?
* ஒவ்வொரு தினமும் அன்னையின் தினம்தான்
* பெண் சுதந்திரம்
* பாக்கெட்மணி தரலாமா?

ஆகிய கலந்துரையாடல்களைக் குறிப்பிடலாம். இத்தகைய கலந் துரையாடல்கள் மூலம் பெண்களின் தனிப்பட்ட சிந்தனைகள் பிறருடன் பகிர்வு பெற்றுத் தெளிவு பெறுகின்றன.

### அறிவுரைகள்

அன்றாட வாழ்வில் நாம் எதிர்கொள்ளுகின்ற பிரச்சினைகள் பல. சிலவற்றை நாமே தீர்த்துக் கொள்கிறோம். சிலவற்றிற்குப் பிறரின் உதவியை நாடுகிறோம். அவ்வகையில் சுமங்கலி வாசகர்களுக்கு அறிவுரைகளை வழங்கிச் சிறப்பித்துள்ளது. இந்த அறிவுரைகளைப் பின்வருமாறு பகுக்கலாம். அவை:

* மகளிருக்கான அறிவுரைகள்
* சமையல் குறிப்புகள்

* வீட்டுக்குறிப்புகள்
* மருத்துவ அறிவுரைகள்
* சட்ட அறிவுரைகள்

மகளிருக்கான அறிவுரைகள்

பெண்களுக்கு ஆலோசனைகள் வழங்கும் வகையில் கட்டுரை களையும், பெட்டிச் செய்திகளையும் வெளியிட்டுள்ளன. சமுதாயச் சீர்கேடுகளை எதிர்த்து ஆண்களுக்குச் சரிசமமாகப் பெண்களும் போராட வேண்டும் என்ற செய்தி, '1988இல் பெண்கள் எதிர்பார்ப்பு கள்' என்ற தலைப்பில் விளக்கப்பட்டுள்ளது.

'கலப்படத்தைக் கண்டுபிடிப்பது எப்படி?' என்பதில், காப்பி பவுடர், தேயிலை, மஞ்சள், மிளகாய்த்தூள், இலவங்கப் பட்டை, ரவை, பெருங்காயம், கம்பு, வாசனைப் பாக்கு, கிராம்பு, ஏலக்காய், கருஞ் சீரகம், நாட்டுச் சர்க்கரை, குங்குமப்பூ, மிளகு, அஸ்கா சர்க்கரை, வெல்லம், நெய், வெண்ணெய் ஆகியவற்றில் செய்யப்படும் கலட் படத்தை எவ்வாறு கண்டறிவது என்பதை விளக்கியுள்ளது.

'பட்ஜெட் பாதிப்பு' என்பதில் குடும்பத் தலைவிகளில் சிலரைப் பேட்டி கண்டு அவர்களின் பாதிப்பு என்னவென்பதை வெளியிட்டு இருக்கிறது.

பட்ஜெட் பாதிப்பு நடுத்தரக் குடும்பத்தினருக்குத்தான் ஏற்படு கிறது. இதனால் இவர்களுக்கு எந்த ஓர் இலாபமும் இல்லை என் பதை அறிய முடிகிறது.

'வீட்டிலேயே தோட்டம் வளர்க்கலாம்!' என்பதில், மாடியில் குடி யிருந்தாலும், வீட்டுக்குத் தேவையான காய்கறிச் செடிகளை வளர்க்க லாம் என்பதற்கான வழிமுறைகள் காட்டப்பட்டுள்ளன.

தோட்டம் வளர்ப்பதனால் காய்கறிக்கு ஆகும் செலவைக் குறைத் துக் கொள்ள முடியும்.

'திருடு போகாமலிருக்க 8 வழிகள்' என்பதில், 'மனிதர்களின் ஆசையைத் தூண்டித் திருட வைப்பது விழிப்புணர்ச்சியற்ற அஜாக் கிரதைதான்; இதுபோன்ற திருட்டுப்பணி செய்பவர்களுக்குத் தூண்டு கோலாக இருப்பது தவறு என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்'

என்று விளக்கி, திருடர்களிடமிருந்து பொருள்களைக் காத்துக் கொள்ளுவது எப்படி என்பதும் விளக்கப்பட்டுள்ளது.

பெண்களின் சாதனை எல்லாத் துறைகளிலும் தொடர வேண்டும். அதற்குப் பொறுமையோடு எதையும் சந்தித்துச் சாதிக்கின்ற துணிச்சல், மனத்திலும் உடலிலும் பெண்களுக்கு வரவேண்டும்.

குடும்ப ஆட்சியை ஓர் அரசியல் அமைப்பைப் போன்றது என்று கூறுவது பொருந்துவதாகும். சாதாரணமாகக் குடியாட்சியில் - நிதியமைச்சர், உணவமைச்சர், உள்நாட்டமைச்சர், வெளிநாட்டமைச்சர், சட்ட அமைச்சர், படைத்துறை அமைச்சர் என அமைச்சர்கள் பலரும், அவர்கட்குத் துணையாகப் பணிபுரியும் பணியாளர்களும் தேவைப்படுகின்றனர். குடும்ப ஆட்சியில் குடும்பத்தில் வெளிநாட்டமைச்சுத்துறை ஒன்று நீங்கலாக, ஏனைய துறைகள் அனைத்துக்கும் ஒரே அமைச்சராக நின்று மனைவியே செயல்பட்டு வருகின்றாள் என்கிறார் வள்ளி நாயகி. இதனையே சுமங்கலியும் எடுத்துக்காட்டி நல்ல அமைச்சராக மனைவி செயல்பட வழிமுறைகளைக் காட்டுகின்றது.

விலைவாசி ஏற்றத்தையும், கலப்படத்தையும் தெரிந்து கொண்டு குடும்பச் செலவைச் சுருக்கிச் செய்யும் வகையில் இக்கட்டுரைகள் அமைந்திருக்கின்றன. இவற்றின் மூலம் நடுத்தர வர்க்கத்தினர் பயன் பெற முடியும்.

**சமையல் குறிப்புகள்**

பத்திரிகைச் செய்தி பொருளாதார நிலையில் உயர் மட்டத்தில், நடுத்தர மட்டத்தில், கீழ்மட்டத்தில் வாழ்பவர்கள் ஆகிய அனைத்து நிலையினருக்கும் போய்ச் சேர வேண்டும். அதுவே பத்திரிகையின் வெற்றிக்குக் காரணமாகவும் அமையும் எனலாம்.

சமையற்கலைக் குறிப்புகள் உயர்மட்டத்தினர் மட்டுமே பயன் பெறும் வகையில் அமைந்துள்ளன. ஆனால் சமையல் பற்றிய செய்முறை வகையிலான கட்டுரைகள் அதிகம் இடம் பெறவில்லை.

தேங்காய், எலும்மிச்சம்பழம், கொத்துமல்லி, கறிவேப்பிலை, புளி, மீதமானபொருள்கள் ஆகியன கெடாமல் பாதுகாக்கும் வழிகள் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. கீரை, கிழங்கு வகைகள் போன்றவற்றின் சத்துக்கெடாமல் சமைக்கும் விதத்தையும் எடுத்துக்காட்டியுள்ளன.

விலைவாசி ஏறியுள்ள இக்காலத்திற்கேற்பச் சிக்கனமாகச் செலவு செய்ய வேண்டுவதன் வழிமுறைகளையும் குறிப்பாகச் சர்க்கரை அளவு குறைத்துச் சமையல் செய்யவும் வழிவகை சொல்லப்பட்டிருக்கிறது. குளிர்சாதனப் பெட்டி இருப்பவர்களும், இல்லாதவர்களும் காய்கறி களைப் பதப்படுத்தி வைக்கும் எளிய முறைகள் எடுத்துக்காட்டப் பட்டுள்ளன.

அலுவலகம் செல்லும் பெண்களுக்கு அதிகாலையில் சமை யலை விரைந்து முடித்துச் செல்லும் வழிமுறைகளைக் காட்டியிருக் கிறது. தக்காளிப்பழம் அழுகாமல் இருக்கவும், கீரையில் சத்துக் கெடாமல் இருக்கவும் கூறப்பட்ட யோசனைகள் இருமுறை வெளி யிடப்பட்டிருக்கின்றன.

சமையல் ஆலோசனைகள் பயன்தரக் கூடியனவாகவும், அவற்றில் அவர்கள் பயிற்சி பெறத் தக்கனவாகவும் உள்ளன எனலாம்.

## வீட்டுக் குறிப்புகள்

சமையலில் மட்டும் பெண்களுக்கு ஆலோசனை என்று இல்லா மல், வீட்டுச் சாமான்களைப் பத்திரப்படுத்தி வைத்துக் கொள்ளவும், உடைந்த பொருள்களைக் குறைந்த செலவில் சரி செய்து கொள்ளவும் ஆலோசனைகள் கூறப்பட்டுள்ளன.

வெள்ளிப் பாத்திரத்தைச் சுத்தப்படுத்தவும், வாணலியைச் சுத்தப்படுத்தவும், பிளாஸ்டிக் பக்கெட்டு, அலுமினியப் பாத்திரம் ஆகியவற்றைச் சுத்தம் செய்யவும், உடைந்த கண்ணாடி பீங்கானை ஒட்டவும் உரிய வழிமுறைகளைப் பெட்டிச் செய்திகளாக விளக்கி உள்ளன.

பூச்சி, புழு, எறும்பு வீட்டினுள் வராமல் தடுக்கும் வழிமுறை களையும் எடுத்துக் காட்டியுள்ளன. உடைந்த நாற்காலிகளைச் சரி செய்யவும், வண்ணத்துணி சாயம் போகாமல் இருக்கவும் வழிவகை கள் கூறப்பட்டுள்ளன.

நெருப்புக்கு நேராக முகத்தை நீட்டக் கூடாது என்பது எல்லா ருக்கும் தெரிந்திருந்தாலும் இப்படி அடிக்கடி நினைவுக்குக் கொண்டு வருவதால் ஆபத்தைத் தடுக்க முடிகிறது.

குளிர்சாதனப் பெட்டி வாங்கும்போதே அதனைப் பயன்படுத்தும் முறைகளை விளக்கும் சிறிய புத்தகம் தருகிறார்கள். ஆனாலும் இன்னும் சில பயனுள்ள குறிப்புகள் 'ஃபிரிஜ்' என்ற பகுதியில் தரப்பட்டுள்ளன. எவ்வாறு பொருள்களைப் பக்குவப்படுத்தி வைக்க வேண்டும் என்று ஆலோசனையும் கூறப்பட்டுள்ளது.

இக்கால வாழ்க்கை அமைப்பிற்கு இன்றியமையாததாகிவிட்ட இந்தக் குளிர்சாதனப் பெட்டி நன்கு பராமரிக்கப்பட்டால் அது இல்லத்தரசிகளுக்கு உற்ற துணையாக இருக்கும் என அறிய முடிகின்றது.

'எரிவாயுவைப் பயன்படுத்துவோருக்கு யோசனைகள்' என்பதில் சிலிண்டரை எவ்வாறு உபயோகப்படுத்த வேண்டும் என்பதை விளக்கி உள்ளது.

பெண்கள் அடிப்படையாகத் தெரிந்து வைத்திருக்க வேண்டிய வீட்டுக் குறிப்புகள் பற்றிய செய்திகளைச் சுமங்கலி இதழ் விளக்கியுள்ளது.

### மருத்துவ அறிவுரைகள்

பெண்களுக்கு மருத்துவ ஆலோசனைகள் என்பது மிகத் தேவையான ஒன்று என்பதால் அதனைப் பற்றிய தெளிவான கருத்துக்களை எடுத்துக் காட்டியுள்ளது சுமங்கலி.

மழலைச் செல்வம் இல்லாத தம்பதிகள், சோதனைக் குழாய் வாயிலாகக் கருத்தரிக்கலாம் என்னும் செய்தி கூறப்பட்டுள்ளது. 'சோதனைக் குழாய் முறை மூலம் குழந்தை அடையத் தகுதி பெற்ற தம்பதியர் யாவர் என்பதையும், சோதனைக் குழாய்வழி மூலம் கிடைக்கும் குழந்தைகள் எப்படி உருவாக்கப்படுகின்றன என்பதையும் அறிய ஆலோசனைகள் கூறப்பட்டுள்ளன.'

'அஜீரண நிவாரண அட்டவணை!' என்பதில், உணவுப் பொருள்களை அதிகம் உண்டு விட்டால் 'எதிர்மறை வீட்டு மருந்து'களைச் சாப்பிட்டுக் குணம் அடையலாம் என்பதற்கு அட்டவணை தரப்பட்டுள்ளது.

'எளிய வீட்டு வைத்திய முறைகள்' என்பதில் வயிற்று வலி, கண்ணெரிச்சல், சிறுநீர் தொடர்பான நோய், தலைவலி, சிரங்குகள், வாய்ப்புண்கள், சோகை நோய் இவற்றைக் குணப்படுத்த வீட்டு வைத்திய முறைகள் தரப்பட்டுள்ளன.

'அதிசய இந்தியர்!' என்பதில், 24 வாரக் குறைப் பிரசவக் குழந்தை, 29 வாரத்தில் குறைப் பிரசவக் குழந்தை, 35 வாரக் குறைப் பிரசவக் குழந்தை, 40 வாரக் குழந்தை பற்றிய செய்திகளையும், விளக்கத்தையும் கொடுத்து இன்குபேட்டரில் வைக்கப்பட்ட குறைப் பிரசவக் குழந்தை காப்பாற்றப்படும் நிலையும் படத்துடன் விளக்கப் பட்டுள்ளன.

'நெருங்கிய உறவில் மணம் முடிக்கலாமா?' என்பதில், மருத்துவ ஆய்வின்படி நெருங்கிய உறவினர்களிடையே திருமணம் நடப்பதால் பிறக்கும் குழந்தைகளுக்கு இரத்தம் காரணமாக உடற்குறை மற்றும் கோளாறுகள் ஏற்படச் சிறிதும் காரணமே இல்லை; ஆகவே நெருங் கிய உறவினர்களிடையே திருமணம் செய்து கொள்ளலாம் என்பதாக அறிவுரை கூறியுள்ளது.

'தாய்மை' என்பதில், கருவுற்றிருக்கும் பெண்கள் மருத்துவரிடம் எந்தெந்த மாதத்தில் ஆலோசனை கேட்க வேண்டும் என்பதையும், ஆரோக்கியமாக வைத்துக் கொள்ளுவது பற்றியும் குறிப்பிட்டுக் காட்டப்பட்டுள்ளன.

'பிரசவம்' என்பதில், எலும்பினாலும் தசைகளினாலும் ஏற்படக் கூடிய பிரசவ உபாதைகள் பற்றியும், இடுப்பு எலும்புக் கூடு பாதிக் கப்படும் நிலையும், கருவாய் (The Cervix) கர்ப்பப்பை (The Uterus), கருப்பையில் கட்டி (Myomata), கருவகத்தின் கட்டி (Ovarian Tumors) பற்றிய செய்திகள் படங்களுடன் விளக்கப்பட்டுள்ளன.

'அவசர நேரத்தில் அவசியம் தேவை' என்பதில், ஆபத்திற்கு வீட்டில் வைத்திருக்க வேண்டிய மருந்துகளான, அபாயமற்ற எளிய வலி நிவாரணிகள், வெட்டுக்காயங்களுக்கு டிங்க்சர் அயோடின் அல்லது மெர்குரோ-குரோம் (Mercuro-Chrome) அதிகமான வயிற்றுப் போக்கைக் கட்டுப்படுத்த காவ்லின் (Kaolin) போன்ற மாத்திரைகள், தீக்காயங்களுக்காக - பர்னால், இருமலுக்கு கிளைகோடின் அல்லது பாக்டமோல் (Pactomal) ஆகியவற்றை வீட்டில் அவசியம் வைத் திருக்க வேண்டும் என்று அறிவுரை கூறியுள்ளது.

மருத்தவ ஆலோசனைகள் அதிகளவில் தாய்மைப்பேற்று நிலையை எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளன.

வரதட்சிணைக் கொடுமைகள், மாமியார் மருமகள் சிக்கல்கள் மலிந்துவரும் இந்நாட்களில், நெருங்கிய உறவினர்களிடையே நடை பெறும் திருமணங்கள் குடும்பத்தில் எந்தச் சிக்கல்களும் தோன்றாமல் தடுக்கின்றன எனலாம்.

குழந்தை ஒரு வளரும் பயிர். ஆகவே குழந்தை பெற வேண்டு வோர் கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகள் பற்றிய செய்திகள் விளக்கப்பட்டுள்ளன. இவை படங்களுடன் விளக்கப்பட்டிருப்பதால் சோதனை முறைகள் என்ன வென்பதை அறிந்து கொள்ள முடிகின்றது.

### சட்ட அறிவுரைகள்

சட்டம் எல்லாருக்கும் பொதுவானது. சட்டத்தின் முன் ஆண், பெண் பாகுபாடு இல்லை. இருப்பினும் இந்தியச் சட்டத்தில் பொது வாகப் பெண்களுக்குச் சில விதிவிலக்குகள் காணப்படுகின்றன.

இந்தியா முழுமைக்கும் ஆங்கில நாட்டுச் சட்டங்களையே பின் பற்றி வரினும் அச்சட்டங்களிலும் இல்லாத சில சலுகைகள் பெண் களுக்கு நம்நாட்டில் அளிக்கப்படுகின்றன. மதம், பண்பாடு போன்ற வற்றின் அடிப்படையில் அமையும் சட்டங்களில்தான் இச்சலுகைகள் வழங்கப்படுகின்றன.

சுமங்கலி இதழ்களின் மூலம் இலவச சட்ட உதவி மற்றும் ஆலோசனைகள் தரப்படுகின்றன. இதன் தலைவர் முன்னாள் நீதிபதி கிருஷ்ணசாமி, செயலாளர் திரு.எம். ராஜா, வழக்கறிஞர்கள் திருமதி விமலா, திருமதி தேன்கொடி நெல்சன், குமாரி சுந்தர காஞ்சனா, திருமதி வசந்தா காளிதாஸ் ஆவார்கள். வழக்கறிஞர்களுக்கும் வாசகர்களுக்கும் இடையே இணைப்பாளராக இருந்து சுமங்கலியில் கருத்தினை வெளியிடுபவர் சமூக சேவகி சாவித்திரி வைத்தி ஆவார்.

கலா என்ற பெண்ணுக்கு வறுமையினால் வாழ வழி தெரிய வில்லை. தகப்பனாரும், சகோதரனும் குடிப்பழக்கத்துக்கு அடிமை ஆனவர்கள்; தாய் இல்லை. உறவினர்கள் வயதானவரிடமிருந்து பணம் பெற்றுக் கொண்டு அவருக்கு இரண்டாம் தாரமாய் மணம் முடிக்க முடிவெடுத்தனர். இதை அறிந்த கலா 'சுமங்கலி' சட்ட உதவியை நாடினாள். அவளுக்குத் தொழிற் பயிற்சி பெற வாய்ப்பு ஏற்படுத்தி,

வேலை வாய்ப்பும் ஏற்படுத்தித் தரும் 'ஆஷர்யா'வில் சேர்த்து விட்டார்கள் என்பதைப் 'பிரச்சினை' என்ற பகுதி சுட்டிக்காட்டுகின்றது.

'குடியிருக்கும் வீட்டில் பிரச்சினை' என்னும் பகுதியில் அதற்கான ஆலோசனை கேட்டு எழுதியிருப்பவருக்கு, கணவன் வருவாய்க்குத் தகுந்தபடி வேறு இடம் பார்த்துக் குடிபோகவும், கொடுக்கல், வாங்கல் போன்ற செயல்களில் ஈடுபடாமல் - அடுத்த வீட்டில் என்ன நடக்கிறது என்று பார்ப்பது போன்ற குறுகிய எண்ணங்கள் இல்லாமல் - அளவுடன் பழக வேண்டும் என்றும் ஆலோசனை கூறியுள்ளார்கள்.

மணமுறிவு பற்றிய சிக்கல்களைச் சுமங்கலி அதிக அளவு தீர்த்து வைத்திருக்கிறது. விதவையின் பிரச்சினையையும், மாமியார் - மருமகள் சிக்கல்களையும் தீர்த்து வைத்து ஆண்-பெண் மனச்சிக்கல் களுக்கு ஆலோசனை கூறியும் நல்வழிப்படுத்துகிறது. வாழ்க்கையில் சிக்கல்களால் அல்லற்படும் பெண்களுக்கு இலவசச் சட்ட ஆலோ சனை ஒரு வரப்பிரசாதமாக அமைந்துள்ளது.

### துணுக்குகள்

அளவில் சிறியனவாய் அமைந்து (கட்டுரைகள் போலன்றி) உலக நடப்புகளைத் தெரிவிப்பன துணுக்குகள் எனப்படும்.

ஒவ்வோர் இதழிலும் இரண்டு முதல் இருபது வரையிலான துணுக்குகள் அமைந்துள்ளன. சுமங்கலியில் வெளியான துணுக்கு களை ஏழு பிரிவுகளில் அடக்கலாம். அவை:

* பெண்கள் சிறப்பு நிலை
* கலைகளில் தேர்ச்சி
* உறவு நிலை
* வேலை வாய்ப்பு
* விதவைகள் நிலை
* கல்வியும் மருத்துவமும்
* பிற துணுக்குகள்

ஆண் - பெண் சமத்துவம் நடைமுறை வாழ்வில் எந்த அளவில் உள்ளது என்பதைப் பிரதானப்படுத்தியே இத்துணுக்குகளும் அமைந்துள்ளன.

பெண்கள் அடுப்பு ஊதத்தான் ஏற்றவர்கள் என்னும் நிலை மாறி, அவர்கள் வீட்டை விட்டு வெளியே வந்து ஆடவர்க்கென ஒதுக்கப் பட்ட பணிகளையும் தாங்களே செய்வதும் - தனித்து இயங்குவது மான நிலையை எய்தியுள்ளனர். இதன் அடிப்படையில் அமைந்துள்ள துணுக்குகள் வாயிலாகப் பெண்களும் ஆண்களுக்கு இணையாகப் பணியாற்றுவதை அறியலாம். தொழிற்சாலைகள், நாடாளுமன்றம், நீதிமன்றம், பல்கலைக் கழகங்கள் ஆகியவற்றில் பெண்களின் சிறப்பு நிலை குறித்தும் துணுக்குகள் வெளியாகியுள்ளன.

இசை, ஓவியம், அலங்காரம், விளையாட்டு ஆகியவற்றில் சிறந்து விளங்கிய பெண்கள் குறித்து வெளியான துணுக்குகளில் விளையாட்டில் தேர்ச்சி பெற்ற மகளிரைப் பற்றிய துணுக்குகளே அதிக அளவில் காணப்படுகின்றன.

உறவுநிலையைப் பற்றிக் குறிப்பிடும் துணுக்குகளில் பெற் றோர் - குழந்தை உறவு நிலை குறித்தும், பெண் சிசுக்கொலை குறித் தும் துணுக்குகள் இடம்பெற்றுள்ளன.

இன்றைய அலுவல் மகளிருக்குக் கல்வியறிவே மூலதனமாகத் திகழ்கிறது. 'பெண்களுக்கு எதிர்காலத்தில் ஏற்படும் சிக்கல்களை சுயமாகச் சமாளித்துக் கொள்ளும் வகையில் நடைமுறைக்கு ஏற்ற கல்வி அளிக்கப்பட வேண்டும்' என்பதான துணுக்குகள் அதிகம் காணப் படுகின்றன.

### சிறுகதைகள்

அன்றாட வாழ்க்கையில் கண்டு, கேட்டு உணர்ந்தவற்றைக் கொண்டு கற்பனையாகச் சிறிய அளவில் படைக்கப்படுவதைச் சிறு கதைகள் என்கிறோம். சுமங்கலியில் வெளியான சிறுகதைகள் மகளி ரின் வாழ்வியல் நிலைகளை ஓவியங்களாகத் தீட்டியுள்ளன. குடும்ப உறவு நிலையே அதிக அளவில் சிறுகதைகளாகப் பின்னப்பட்டுள் ளன. இதனை அடுத்து அலுவல் மகளிரின் நிலை, திருமணம், காதல், கல்லூரி மாணவியர் நிலை, தாய்மை, மன உணர்வு, காதல் தோல்வி, பெண் முன்னேற்றம், விதவை உரிமை, மாமியார் - மருமகள் உறவு நிலை, வரதட்சிணை, மணவிலக்கு ஆகியவற்றைக் கதையின் கரு வாகக் கொண்டு சிறுகதைகள் புனையப்பட்டுள்ளன.

காதலில் தோல்வியடைந்த பெண்கள் தமது வாழ்வே நிலை குலைந்து போய்விட்டதாக அதிருப்தி அடைந்து வெவ்வேறு திசையில் பயணம் செய்வர். ஆனால் சுமங்கலியில் வெளியான சிறுகதைகளில் இதற்கு மாறான முடிவுகளைக் காணலாம். எடுத்துக்காட்டாகக் கீதாவின் 'இலையுதிர் மரங்கள்' என்னும் சிறுகதையில் சுதிர் - இந்து இருவரும் காதலர்கள். சிறிது காலத்திற்குப் பிறகு சுதிர் இந்துவின் இலக்கிய நாட்டத்தை விரும்பாது அவளைப் புறக்கணித்து விட்டு தனது அத்தை மகள் மேகலாவைத் திருமணம் செய்து கொள்கிறான்; இதனால் இந்து முதலில் மனக் கலவரம் அடைகிறாள். இறுதியில் அப்பிரிவை மனவலிமையுடன் ஏற்றுக் கொள்கிறாள் இந்து. காதலுக்காகத் தனது இலட்சியத்தை அவள் இழந்து விடவில்லை என்பதாக இச்சிறுகதை படைக்கப்பட்டுள்ளது.

இதேபோல, சுமங்கலியில் வெளியான மற்றொரு சிறுகதையில் ஆண்களின் கீழ்த்தரமான நடத்தையினால் பெண்கள் பாதிக்கப்படுவது சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. இதனை மைதிலி சேஷாத்திரி எழுதிய 'கண்ணீரில் வளரும் பூ' என்னும் சிறுகதை விவரித்துள்ளது.

சோகங்களை மட்டுமே கருவாகக் கொண்டு சுமங்கலியில் சிறுகதைகள் படைக்கப்படவில்லை. சுகமான நிகழ்ச்சிகளும் காட்டப்பட்டுள்ளன. 'ஒரு வரன்' என்னும் சிறுகதை இந்த அடிப்படையில் எழுதப்பட்டுள்ளது. வரதட்சிணை இன்றி மணந்து கொண்டு மகிழ்வுடன் வாழ்ந்தவர்களை இந்த 'ஒரு வரன்' சித்திரித்துள்ளது. அத்துடன், மாமியார் - மருமகள் - மாமனார் உறவு நிலை குறித்து 'நடமாடும் தெய்வம்', 'கற்பூரம்' ஆகிய சிறுகதைகளில் சிறப்பாகப் பேசப்பட்டுள்ளது.

## கவிதைகள்

'உள்ளத்து உணர்ச்சிப் பிரவாகத்தின் திடீர் வெளிப்பாடே கவிதை' என்பர். நெஞ்சத்தை நெகிழ்த்தி உருக்கவல்லதாகவும் - விழுமிய கருத்துக்களைச் சுட்டிக் காட்டிப் புத்துயிர் ஊட்டுவதாகவும் அமைவது கவிதை.

நயமான கருத்தினை நயம்பட உரைக்கும் திறன் கவிதைக்கு உண்டு. அதனால்தான் இன்று எல்லா இதழ்களிலும் கவிதையின் ஆளுமையைக் காணமுடிகின்றது. சுமங்கலியும் இதற்கு விதிவிலக்கல்ல. காதல், ஏக்கம், வரதட்சிணை, தவிப்பு, பெருமிதம், மகிழ்ச்சி

இவற்றைப் பாடுபொருளாகக் கொண்டு புதுக்கவிதை வடிவத்தில் கவிதைகள் வெளியாகியுள்ளன. நான்கு வரிகளிலிருந்து இருபத்தைந்து வரிகள் வரை இதன் அளவு அமைந்துள்ளது.

இன்றைய சமூக அவலத்தில் அதிகமான இடத்தை வகிப்பது வரதட்சிணை என்பதால் அதனை மையப்படுத்தியே அதிகக் கவிதைகள் சுமங்கலியில் வெளியாகியுள்ளன.

வரதட்சிணை வாங்குகிறோம்
என்போரும்
தன்மானம் போவதை
அறியாததேன்?

என்பன போன்ற கவிதைகள் ஆண் சமூகத்திற்குச் சரியான சாட்டையடிகள்.

கணவனை இழந்த பெண்ணின்மீது சமுதாயத்தின் சட்ட திட்டங்களைச் செலுத்தாமல் அவளும் மற்றப் பெண்களைப் போலவே நடத்தப்பட வேண்டும் என்பதைக் கீழுள்ள கவிதை காட்டுகிறது.

மூச்சடங்கிப் போனவன்
அவன் தானே
பின் –
வெள்ளை உடுப்பும்
வெறும் நெற்றியுமாய்
நீயேன்
பிணமாய்த் திரிகிறாய்?

இப்படியாகச் சமூதாயத்தின் பல்வேறு நிகழ்வுகளைக் கவிதைகளாகத் தாங்கிவந்து வாசகரைக் கொள்ளை கொண்டது சுமங்கலி.

### சுமங்கலி இதழின் சிறப்பியல்புகள்

இன்றைய சமுதாய - பொருளாதார நிலைகளில் பெண்கள் எத்தகைய மதிப்புப் பெற்றுள்ளார்கள் என்பதைச் சுமங்கலி மூன்று அடிப்படைக் கருத்துக்கள் வழி விளக்கியுள்ளது. அவை:

1. நடப்பியல் நோக்கில் மகளிரின் அடிப்படைச் சிக்கல்கள்
2. பெண் விடுதலைக் கோட்பாடு
3. பெண்கள் முன்னேற்றத்திற்குச் சுமங்கலி வழங்கும் உதவிகள்.

பொதுவாகப் பெண்களை மையப்படுத்தி எழும் சிக்கல்கள் பல. இச் சிக்கல்களையும் இவற்றிற்குரிய தீர்வுகளையும், கட்டுரைகள், பெட்டிச் செய்திகள், கருத்துப் பகிர்வுகள் வழியாகத் தெளிவுபடுத்தியுள்ளது. சுமங்கலி சிறுகதைகள், துணுக்குகள் ஆகியவை நகைச்சுவை யோடும், கற்பனைத் திறத்தோடும் அமைந்துள்ளன.

ஒரு பெண்ணின் வாழ்க்கையில் திருமணத்திற்குப் பின்பு வரும் சிக்கல்களைவிடத் திருமணத்திற்கு முன்பு வரும் சிக்கல்களே அதிகம் எனலாம். இக்காலத்தில் ஆண்-பெண் பழகும் முறையில் மிகுந்த நெருக்கம் ஏற்பட்டுவருகிறது. மேலைநாட்டு நாகரிகத்தின் பாதிப்பு இதற்குரிய முதன்மைக்காரணம் எனினும் தொழில் மயமாகும் ஒவ்வொரு நாட்டிலும் இது தவிர்க்க இயலாத ஒன்றாகும். இதனைக் கருத்தில் கொண்டு சுமங்கலி இதழ்கள் திருமணத்திற்கு முன்பு பெண் களின் நிலை குறித்து மிகுந்த கவனம் செலுத்தியதை அறிய முடிகிறது.

இந்தியச் சமூக அமைப்பைப் பொறுத்த வரையில் 'குடும்பம்' என்பது சமூகத்தின் வளர்ப்புப் பண்ணையாக விளங்குகிறது எனலாம். இன்னும் ஆழ்ந்து குறிப்பிடுவதாயின் 'சமூகத்தின் நாற்றங்கால்' குடும்பமே என்பது இந்தியச் சமூக வரலாறு காட்டும் செய்தியாகும். திருமணம் என்ற ஒழுங்கமைதியின் மூலமாகக் குடும்பக் கட்டமைப்பு இந்தியாவில் காலங்காலமாக வலுப்பெற்று வந்திருக்கிறது. இவ் வகையில் குடும்பத்தினர் அனைவரும் சமுதாயத்தில் நல்லவை செய் வதற்குத் தங்களை ஒப்படைக்க வேண்டும் என்று சுமங்கலி எடுத்துக் காட்டி உள்ளது. பெண்கள் தனித்து வாழ்வது கடினம் இல்லை. ஆனால் பெண்கள் தங்களைத் தாங்களே காத்துக்கொண்டு வாழ வேண்டும் என்பதை இவ்விதழ்கள் உணர்த்துகின்றன.

காதல் என்பது மிகவும் நுண்மையான ஓர் உணர்வினைக் குறிப் பது எனலாம். மனித சமுதாயத்தில் அன்றிலிருந்து இன்று வரை, காதல் என்பது ஓர் இன்றியமையாத வாழ்க்கை அனுபவமாக - வாழ்க்கைக் கூறாக அமைகின்றது.

காதலுறவுகளைத் திருமணத்திற்கு முந்தைய உறவு என்றும், திருமணத்திற்குப் பிந்தைய உறவு என்றும் பகுக்கலாம். இவற்றில் திருமணத்திற்கு முன்னர் உருவாகும் காதல், திருமணத்திற்கு இட்டுச் செல்வதுமுண்டு; நிறைவேறாமல் தோல்வி அடைவதுமுண்டு. இவ் வகையில் இவ்விதழ்களில் பெரும்பாலும் கதைகளில் காதலர்கள்

ஒன்றாக இணைந்து கடைசி வரை வாழ்ந்ததாகக் காட்டப்படவில்லை. காதலில் தோல்வியுற்ற பெண்கள் அதற்காகத் துவண்டுவிடாமல் மனத்தைத் திடப்படுத்திக்கொண்டு வாழ்ந்ததை அறிய முடிகிறது. திருமணத்துக்குப் பின்பு ஏற்படும் காதலில் உண்மையானதும் போலி யானதுமான இரண்டு நிலைகளும் சித்தரிக்கப்பட்டுள்ளன.

வரதட்சணையினால் திருமணம் தடையாவது ஒன்று. திருமணம் ஆனபின்பு வரதட்சணை மேலும் கொடுக்க இயலாத பெண்கள் கொடுமைகளுக்கு உள்ளாவது மற்றொன்று. இந்த இரண்டாம் நிலை சுமங்கலியில் அதிக அளவில் விளக்கப்பெற்றுள்ளது.

கூட்டுக் குடும்ப அமைப்பு பற்றிய கருத்துக்களும் வழங்கப் பட்டுள்ளன. பொருளாதார அடிப்படையில் பெண்கள் ஆண்களையே சார்ந்து இருப்பதால்தான், இன்னல்கள் ஏற்படும்போது பெண்கள் வறுமைக்குத் தள்ளப்படுகிறார்கள் என்ற கருத்தைப் பல படைப்புக ளால் சுமங்கலி வெளிப்படுத்தியுள்ளது. பெண்ணுரிமை, சொத்துரிமை பற்றி விளக்கம் கூறும்பொழுது, பெரியார் அவர்கள் 'நாம் வேண்டும் 'பெண்மை' என்பது என்னவெனில் ஆணைப் போலவே பெண்ணுக்கும் வீரம், வன்மை, கோபம், ஆளுந்திறம் உண்டென்பதை ஆண்மக்கள் ஒப்புக்கொள்ள வேண்டும் என்பதேயாகும்,'[4] என்று கூறியுள்ளார். இக் கருத்தைச் சுமங்கலி வலியுறுத்திச் சென்றுள்ளதைப் பல படைப்புகள் வழி காணமுடிகிறது.

இந்தியாவில் பெண்கள் நிலை முழுவதுமாக உயர்ந்திருக்கிறது என்று சொல்ல முடியாது. பெண்களில் சிலர் உயர் அதிகாரிகளாகவும், அமைச்சர்களாகவும் பணிபுரிந்தாலும் பல பெண்களின் நிலை அடி மட்டத்தில்தான் உள்ளது.

இன்றைய நிலையில் இந்தியாவில் மட்டுமின்றி எல்லா நாடு களிலும் பெண்களிடையே ஒரு விழிப்புணர்வு தோன்றியுள்ளது. இதற்குக் கல்வியறிவு காரணம் எனக் கொள்ளலாம். என்றாலும் கல்வி யறிவு இருந்தால் மட்டுமே சிக்கல்கள் குறைந்து விடாது. ஒவ்வொரு மனிதனின் அடிப்படை மன நிலையும் மாற வேண்டும்.

நாட்டில் எத்துறையை எடுத்துக் கொண்டாலும், பெண்களுக்கு ஆண்களைப் போல் போதுமான அளவு விடுதலை கொடுக்கப்பட

வில்லை. அதனால்தான் இந்தியா இன்னும் பின்தங்கிய நிலையி லேயே உள்ளது. இதனைக் காந்தியடிகள், 'பெண் இனம் அணு அளவு அடக்குமுறைக்கு ஆளானாலும், அதாவது ஆண்களுக்கு முற்றிலும் சமமான ஒரு நிலையைப் பெண்கள் அடையாவிட்டால் இந்தியா உண்மையான முன்னேற்றத்தை அடைய முடியாது'[5] என்கிறார். இதனையே ஹெர்பர்ட் ஸ்பென்ஸர், 'பிறருக்குத் தீங்கில்லாமல் அவனவன் தான் விரும்பியதெல்லாம் செய்யலாம் என்பதே விடுதலை'[6] என்று குறிப்பிடுகிறார். இவர்களின் மேற்கோள் வழியாகப் பெண்கள் விழிப்புணர்வு பெறவேண்டும் என்ற தேவையை அறிய முடிகிறது.

ஆண் பெண் ஏற்றத்தாழ்வு பண்டைய காலந்தொட்டே இருந்து வருகிறது. நாட்டில் நிலவும் சாதி ஏற்றத்தாழ்வைக் காட்டிலும் கொடு மையானது ஆண் பெண் ஏற்றத் தாழ்வு. இதற்குக் காரணம் ஆணுல கின் தன்னலமே எனலாம். ஆடவர் பெண்டிரைத் தமக்குரிய போகப் பொருளாகவும், பணியாளரராகவும் கருதத் தொடங்கிய நாளிலிருந்து பெண்கள் சுதந்திரம் இழக்கலாயினர். ஆகவே பெண்ணும் ஆணைப் போலவே பொருளாதார சமூக அடிப்படையில், முற்றிலும் சமமான நிலையைப் பெறுவதையே பெண் விடுதலை எனலாம்.

பொதுவாகப் பெண்களுக்கு அதிக சுதந்திரம் வந்துவிட்டது என்று சிலர் பேசுகிறார்கள். ஆனால் இன்றும் பல அடிப்படைச் சுதந் திரங்கள் கூடக் கிடைக்கவில்லை என்பதுதான் உண்மை.

'ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமை என்றெண்ணியிருந்தவர் மாய்ந்து விட்டார்'[7] என்ற போதிலும் இத்தகைய செயல்களைச் செய்து முடிக்க முதல் தேவை கல்வியே என்பதைச் சுமங்கலி இதழ்கள் விளக்கியுள்ளன.

காதலில் விடுதலையை இக்காலப் பெண்கள் அடைந்திருக் கிறார்களா? என்று நோக்கும் பொழுது, ஓரளவுதான் என்று குறிப்பிட லாம். நமது சமுதாய அமைப்பில் காதலுக்குத் தடை ஏற்படுவது இயல்பு. மனித சமுதாயத்தில் அன்றிலிருந்து இன்றுவரை, காதல் என்பது ஓர் இன்றியமையாத அடிப்படை வாழ்க்கையனுபவமாக அமைந்துள்ளது. ஆகவே காதலில் விடுதலையைப் பெண்கள் தாங்க ளாகவே எடுத்துக் கொள்ளுகிறார்கள். சில பெற்றோர்கள் முன்பு போல் இல்லாமல், பெண்கள் விரும்பும் ஆண் மகனை மணம் செய்வித்துக்

கொடுக்கிறார்கள். ஆனால், இதில் ஓரளவு சுதந்திரம் பெற்ற பெண்கள் காதலனைத் தேர்வு செய்வதிலும் கவனமாக இருத்தல் வேண்டும் என்பதை விளக்கும் வகையிலேயே கட்டுரைகளும் கலந்துரையாடல் களும் அமைந்துள்ளன.

சுமங்கலி, விதவைகள் நிலையை எடுத்துக்காட்டி அவர்களுக்கு விடுதலை தர வேண்டும் என்பதையும் வலியுறுத்தியுள்ளது. கணவன், மனைவிக்குக் கருத்துச் சுதந்திரம் தர வேண்டும் என்பதையும் வலியுறுத்தி உள்ளது.

அக்காலத்து மகளிர் நிலை அவலத்துக்குரியது. இளமை மணம், விதவைக் கொடுமை, பெண்ணுக்கு மட்டும் மறுமண மறுப்பு, பல பெண்கள் ஒருவனை மணத்தல், பெண் விபச்சாரத்திற்கு மட்டும் தண்டனை போன்ற கட்டுப்பாடுகளுக்குள் பெண்களுடைய வாழ்க்கை நிலை அமைந்திருந்தது.

இன்றைய நிலை அதுபோல் இல்லாமல் பெண்கள் கல்வி வாய்ப்புப் பெற்றுள்ளனர். அதனால் வேலை வாய்ப்பைப் பெற்றுப் பல்வேறு நிலைகளில் பணிபுரிந்து வருகின்றனர். விழிப்புணர்ச்சியும் பெற்றுள்ளனர். ஆனால், அடிப்படையான சில செயல்களில் பெண் களுக்கு விடுதலை கொடுக்கப்படவில்லை என்பதைச் சுமங்கலி எடுத்துக் காட்டியுள்ளது குறிப்பிடத்தக்கது.

பெண்களின் வேதனைமிகுந்த நிலையினைச் சுட்டிக் காட்டு வதைவிடச் சமுதாயத்தில் அவர்கள் முன்னேற்றம் அடைந்துள்ள நிலை யினையே பெரும்பாலும் சுமங்கலி சுட்டிக் காட்டுகிறது. அன்றாட வாழ்வில் பயன்படும்படியான குறிப்புகள் தரப்பட்டுள்ளன. இது பெண்களுக்குரிய இதழாதலின் இத்தகைய பயன்மிகு குறிப்புகளை வெளியிடுவதைத் தனது இன்றியமையாத பண்பாகக் கொண்டுள்ளது எனலாம்.

கல்வியில் முன்னேற்றம் அடைந்த பெண்களைப் பற்றித் துணுக் குகள் விரிவாகவே உணர்த்தி உள்ளன. இதே போல் வேலை வாய்ப் புக் கிடைத்து முன்னேறிய பெண்களைப் பற்றியும் அறிந்து கொள்ள முடிகிறது. தங்களது மதிப்பை நன்கு உணர்ந்து பொருளாதார நிலை யில் மேம்பாடு அடையும் கிராமத்துப் பெண்களைப் பற்றியும் அறிய

முடிகிறது. இது மட்டுமல்லாது ஆண்களின் ஆதிக்கத்திலிருந்து பெண்கள் தங்களை விடுவித்துக் கொள்ளக் குடிசைத் தொழில் உதவியாய் இருக்கிறது என்பதைத் துணுக்குகள், கட்டுரைகள் தெளிவாக விளக்கியுள்ளன.

மகளிருக்கான அறிவுரைகள் மிகவும் பயனுள்ள வகையில் அமைந்துள்ளன. சான்றாகச் சமையல் குறிப்புகள், வீட்டுக் குறிப்புகள், மருத்துவக் குறிப்புகள், மகளிருக்கான சட்ட உதவிகள் ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

சமையல் குறிப்புகள் குறைந்த செலவில் நிறைவைத் தரக் கூடிய வகையில் அமைக்கப்பட்டுள்ளன. பெண்கள் அவற்றில் பயிற்சி பெறத் தக்கனவாகவும் உள்ளன எனலாம். பெண்கள் அடிப்படையாகத் தெரிந்து கொள்ள வேண்டிய வீட்டுக் குறிப்புகள் பற்றிய செய்திகளில் அதிக கவனம் செலுத்தி விளக்கியுள்ளன. பொதுவாகப் பெண்களுக்கு மருத்துவ அறிவுரைகள் கூறியும் நல்வழிப்படுத்தியும் திகழ்ந்துள்ளன. வாழ்க்கையில் சிக்கல்களால் அல்லற்படும் பெண்களுக்கு இலவசச் சட்ட அறிவுரை ஒரு வரப்பிரசாதமாக அமைந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

பெண்கள் ஆண்களின் சுகதுக்கங்களுக்காகப் பிறந்தவர்கள் என்ற எண்ணம் பலகாலமாக இருந்து வருகிறது. அறியாமையாலும், அடிமைத்தனத்தாலும் பெண்கள் அடுப்பங்கரைக்குள்ளேயே அடைக்கலம் புகும் நிலையும் ஏற்பட்டது. ஆனால் இன்று, பெண்கள் அனைத்துத் துறைகளிலும் முன்னேறி வருகின்றனர். சுமங்கலி இதழ்கள் பெண்கள் முன்னேற்றத்திற்குப் பல உதவிகள் செய்துள்ளன. கல்வியில், வேலைவாய்ப்பில், விளையாட்டில் ஏற்பட்ட முன்னேற்றம் குறித்துப் பல படைப்புகள் வழியாக இதனை விளக்கி உள்ளன. பெண்கள் தெரிந்து கொள்ள வேண்டிய அடிப்படைச் செய்திகளையும் அறிவுரைகளையும் தந்துள்ளன. விலைவாசி ஏறியுள்ள இக்காலத்தில் சிக்கனமாக வாழ வழிகாட்டியுள்ளன. அதே போல் சமையல் பொருள்களை வீணாக்காமல் சுவையாகச் சமைத்திட, சமையல் அறிவுரைகள் தரப்பட்டுள்ளன. பெண்கள் கட்டாயம் தெரிந்து வைத்துக் கொள்ள வேண்டிய வீட்டுக் குறிப்புகளும் கொடுக்கப்பட்டுள்ளன. இதனால் சுமங்கலி பெண்களுக்குப் பெரிதும் பயனுள்ள வகையிலே அமைந்துள்ளது எனலாம்.

## நிறைவுரை

சுமங்கலி இதழ் பல்வேறு கூறுகளிலும் நடைமுறை உலகில் மகளிர் வாழ்கின்ற நிலைகளைத் தெள்ளத் தெளிவாக விளக்கியுள் ளது. மகளிர் எதிர்கொள்கின்ற சிக்கல்களையும், சிக்கல்களுக்கான தீர்வுகளையும் ஒவ்வொரு படைப்பிலும் வெளிப்படுத்தியுள்ளது. பெண்கள் முன்னேற்றம் பற்றிய கருத்துக்களையும் வழங்கியுள்ளது. ஆனாலும் 1995ஆம் ஆண்டிற்குப் பின்பு சுமங்கலி வெளிவரவில்லை. இதற்கு முக்கிய காரணமாகக் குறிப்பிட்டுக்காட்டுவதென்றால், ஒன்று வியாபார நோக்கில் பிற இதழ்களோடு நிற்க முடியாமல் பின்னோக்கித் தள்ளப்பட்டமை; மற்றொன்று ஆன்மிகக் கருத்துக்கள் இடம் பெறாமை முதலியனவாக இருக்கலாம். பெண்கள் முன்னேற்றத் தில் பெரும்பங்கு வகித்த 'சுமங்கலி' இன்று வெளிவராமல் இருப்பது வருந்தத்தக்க செய்தியாகும்.

## குறிப்புகள்

1. மா.ரா. இளங்கோவன், இந்திய இதழ்கள், பக். 67-69
2. Roland, E. Wolseley, The Magazine world. P. 179
3. சி.இ. மறைமலை, புதுக்கவிதையின் தேக்க நிலை, ப. 1
4. பெரியார், ஈ.வெ.ரா. சிந்தனைகள், ப. 121
5. ப. மகாலிங்கம், திரு.வி.க.வும் காந்தியக் கோட்பாடும், ப. 49
6. ஹெபர்ட் ஸ்பென்ஸர், மகாகவி பாரதியார் கட்டுரைகள், ப. 252
7. பாரதியார் கவிதைகள், பெண்கள் விடுதலைக் கும்மி, வரி 9-10, ப. 27

# ராஜம்

## இரா. கஸ்தூரி

இந்திய நாட்டில் ஐரோப்பியரின் வருகைக்குப் பின்னரே, அச்சுக் கலை வளர்ந்தது. அச்சுக்கலை வளர்ந்த பின் இதழியல் துறையும் சிறந்த முறையில் வளர்ச்சி பெற்றது. உலகில் முதன் முதலில் தோன்றிய நாளிதழ் 'ரிலேசன்' என்பது. அது ஜெர்மனியில் 1609இல் தோன்றியது என்பர்.[1] தென்னிந்தியாவில் சென்னைக் கிறித்தவச் சமயத்தினர் 1831இல் தமிழ் மாகஸின் எனும் திங்கள் இதழை நடத்தினர். முதன்முதலில் தமிழ் இதழானது மாத இதழாகவே தோன்றியது. சமயத்தைப் பரப்புவதை நோக்கமாகக் கொண்ட நிலை மாறித் தம்மைச் சார்ந்தவர்களைப் பற்றி அறிந்துகொள்ளும் ஆவலின் காரணமாகவும், பெண்களின் நிலையை உயர்த்தவும் தமிழில் மகளிர் இதழ்கள் தோன்றின.

தொடக்க காலத்தில் மகளிர் இதழ்கள் கிறித்தவச் சமயம், பெண்கள் முன்னேற்றம், பெண் கல்வி, பெண்ணின் தியாகம் இவைகளை வெளிப்படுத்துவனவாக அமைந்தன.[2]

இதழ்களைப் படிப்பவர்களில் பெரும்பாலோர் பெண்களாவர். அதனால் மகளிர் இதழ்கள் பெருகலாயின. அந்த இதழ்களும் 'பெண்களுக்காக நடத்தப்படுவன, பெண்களால் நடத்தப்படுபவை, பெண்கள் பத்திரிகை என்று கூறிக் கொள்ளாவிடினும் முக்கால்வாசிப் பகுதி பெண்களைச் சென்றடையும் போக்குடன் அமைந்தவை என்ற முறையில் அமைந்துள்ளன.'[3]

19ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் நகரங்களில் பெண்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்திருப்பினும் கிராமங்களில் பெண்களின்

நிலை மிகவும் தாழ்ந்தே உள்ளது. இதனை 'இன்றைய பெண்கள் பத்திரிகைகள் என்று கூறப்படுபவை மங்கையர்மலர், மங்கை, சுமங்கலி போன்றனவாகும். இவை பெண்களை அழகுப் பொருள் களாக, குடும்பப் பொறுப்புகளுக்கு மட்டும் உரியவளாக, ஆண் களுக்கு இன்பமூட்டும் பொருளாக மட்டும் பார்க்கின்றன'[4] என்ற கூற்றால் அறியலாம்.

## இதழ் தோன்றக் காரணம்

மகளிர் வாழ்க்கையோடு தொடர்புடைய அவர்களைத் துன்பத் திற்கு உள்ளாக்கும் அனைத்துத் துறைகளையும் எதிர்த்துப் படைப் புக்கள்வழி மென்மையாகப் போராட விரும்பியதே இவ்விதழ் தோன்றக் காரணமாக இருக்கலாம்.

## ராஜம் – ஓர் அறிமுகம்

1986ஆம் ஆண்டு நவம்பர் மாதம் பேசும்பட வெளியீட்டு நிறு வனம், திருமதி. சந்திரா ராஜசேகர் அவர்களை ஆசிரியராகக் கொண்டு 'ராஜம்' என்ற மாத இதழைத் தொடங்கியது. 1998ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் வரை தொடர்ந்து வெளிவந்தது. 1998ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் 1999ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் வரை (5 மாதங் கள்) நிறுவனத்திலுள்ள தவிர்க்க முடியாத சில பிரச்சினைகளால் வெளியிட இயலவில்லை.

"அமெரிக்காவில் நீண்ட நாளைய இதழாகிய 'லைஃப்' இடையில் நின்று மீண்டும் பிறந்தது. இதே போன்று இந்தியாவில் 'இல்லஸ்ட் ரேடட் வீக்லி ஆப் இந்தியா'வைச் சொல்லலாம். இலண்டனிலிருந்து நீண்ட காலமாக வெளிவந்து கொண்டிருந்த 'டிட்பிட்ஸ்' இப்போது நின்றுவிட்டது. ஒரு வேளை மீண்டும் வரலாம்"[5] என்ற டாக்டர். அ. சிவக்கண்ணன் கூற்றுப்படி 'ராஜம்' இதழும் மீண்டும் 1999 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் வெளி வரவிருப்பதாக, இவ்விதழின் ஆசிரியர் கட்டுரையாளரிடம் கூறியது இங்கு எண்ணத்தக்கது.

## கட்டுரை நோக்கம்

'ராஜம்' இதழின் இதழியல் கூறுகளின் (படைப்புகள்) வழி மகளிர் நிலையை அறிவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## ஆய்வு எல்லை

1986ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் 1998ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் வரை வெளிவந்த இதழ்களும் அவ்வப்போது மாத இதழோடு இலவசமாக வெளியிடப்பட்ட இலவச இணைப்புகள் பத்தும் ஆய்வுக்கான இதழ்களாக எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

## ராஜம் இதழ்

'ராஜம்' இதழ் முழுக்க முழுக்கப் பெண்களுக்கே உரிய செய்தி களை வெளியிடும் மாதர் இதழ் என்று கூற இயலாது. பெண்களின் பிரச்சினை, இரு பாலாரின் சாதனை, சிறுவர்களின் சிறப்பு, அறிவியல், திரைப்படம், விளையாட்டுச் செய்திகள், பொழுதுபோக்கு என்று பலரும் சுவைப்பதற்குரியனவாக மாதரின் பெருமையைச் சமுதாயத்தில் பலரும் அறிந்து கொள்வதற்குரியனவாக அனைத்துப் பிரிவினரையும் உயர்த்தும் சிந்தனையுடன் ராஜம் இதழ் விளங்குகிறது.

## இதழின் நோக்கம்

ராஜம் இதழ் அட்டைப் படத்தில் 'பெண் குலத்திற்குப் பெருமை சேர்த்திடும் மாதர் இதழ்' 'Women's Monthly' என்று தமிழ் மற்றும் ஆங்கில வாசகங்களுடன் பெண்ணை இதழின் சின்னமாக 'ர' என்ற எழுத்திற்குள் 'பெண்' உருவத்தை (முகம் மட்டும்) வைத்து வெளியிடு கிறது. இதன் மூலம் இவ்விதழ் பெண்ணினத்திற்குப் பெருமை சேர்ப் பதையே நோக்கமாகக் கொண்டுள்ளது என்பதனைப் படைப்புகள் வழி அறியலாம்.

தமிழ் மகளிர் இதழ்களைப் பற்றி டாக்டர். அ. சிவக்கண்ணன் அவர்கள், 'பெண்கள் என்றாலே ஊறுகாய் போடவும், புதிது புதிதாய் இனிப்புப் பண்டங்கள் செய்யவும், வகை வகையாய்க் கோலங்கள் போடவும் மட்டுமே பிறந்தவர்கள் என்று நம்பிக் கொண்டு பல மகளிர் இதழ்கள் ஊறுகாய் போடக் கற்பிக்கும் பழம் பாட்டிகளாகவே நடந்து கொள்ளுகின்றன'[6] என்ற கருத்துக்கு மாறாகப் பெண்களின் சாதனை, பொறுப்பு, அவர்தம் கடமை, கல்வி, பல்துறையறிவு போன்றவை பற்றிய கட்டுரைகள், பேட்டி, படைப்புகளின் மூலம் இதழின் தனித் தனிமையைத் தெளிவாக்கிக் காட்டுகிறது.

## இதழின் கட்டமைப்பு

முற்றம், வாயில் என்று அமைத்து உள்ளே நுழைந்ததும் பெரிய அளவில் புதிதாக வந்தவர் தங்கும் வரவேற்பறை, படுக்கையறை, சமையலறை என்றும், காற்று வரும் சாளரங்கள் வைத் தும் அமைக் கப்படுவதே இல்லமாகும். கட்டமைப்புடன் கட்டப்பட்ட கட்டிடமே சிறந்த வீடெனப்படும். அது போல இதழும் சிறந்த கட்டமைப்புடன் அமையும்போது வாசகர்கள் விரும்பிப் படிப்பர். கட்டமைப்பினை இரு பிரிவுகளாகப் (வடிவங்களாக) பிரிக்கலாம். அவை 1. புற வடிவம், 2. அக வடிவம் என்பனவாம்.

## புறவடிவம்

முன் அட்டைப்படம் (அ) முன்புறம் உட்புறம்

பின் அட்டைப்படம் (அ) உட்புறம் பின்புறம்

ராஜம் இதழின் (புத்தகத்தின்) அளவு கிரவுன் 1/8 சைஸ். ஓவியக் கலைஞர்கள் எழுதித் தருவதை அப்படியே நகல் (Block) எடுத்துப்போடும் முறை இவ்விதழில் பயன்படுத்தப்படுகிறது. புகைப் படத்தை (கருப்பு, வெள்ளை வண்ணம்) அப்படியே நகல் (Block) எடுத்துப்போடும் முறையும் உண்டு.

அட்டையில் இதழின் பெயர் 'ராஜம்' என்பதும், படைப்புகளின், தொடர்பான படங்களும் இம்முறையிலேயே எடுக்கப்பட்டிருக்க வேண்டும். அச்சு, இதழில் எழுத்துக்கள் பத்துப் பாயிண்டி லிருந்து இருபத்து நான்கு பாயிண்ட் வரை அமைந்துள்ளன. உள்ளே யுள்ள செய்திகள், படைப்புகள் அனைத்தும் பத்து பாயிண்ட் சாதாரண எழுத்துக்களிலும், முக்கியமான பகுதிகள் பத்து பாயிண்ட் தடித்த எழுத்துக்களிலும் அமைந்துள்ளன.

## அக வடிவம்

இதழின் பொருளடக்கத்தில் உள்ள அனைத்துப் பிரிவுகளும் இதிலடங்கும். இந்த அக வடிவத்தையும் இரண்டாகப் பிரிக்கலாம்.

1. கற்பனை
2. கற்பனையல்லாதன

கற்பனையைப் பற்றி தா.ஏ. ஞானமூர்த்தி அவர்கள,

> கவிஞன் தன்னுடைய செறிவான உணர்ச்சியினைக் கலை வடிவத்தோடு வெளிப்படுத்துவதற்கு உரிய உத்திகளில் கற்பனை ஒன்று[7]

என்று கூறி உணர்ச்சி, கலை வடிவமாகக் கற்பனையுடன் இருக்க வேண்டும் என்பதனை உணர்த்துகிறார்.

### கற்பனை (புனைவு)

உலகில் நடைபெறும் அன்றாட நிகழ்ச்சிகளைத் தம் மனதில் உணர்ந்து, சிறிது கற்பனை குழைத்து, வெளிவரும் படைப்புகளான, சிறுகதை, நெடுங்கதை, தொடர்கதை, குறுநாவல், கவிதை, கோலம், ஓவியம் போன்ற பல்வேறு படைப்புகளைக் குறிப்பிடலாம். 'ராஜம்' இதழில் கற்பனை கலந்து எழுதப்படும் படைப்புகளை இனிக் காண்போம்.

### சிறுகதை

எட்கர் ஆலன்போ, சிறுகதையின் இலக்கணத்தைக் குறிக்கும் போது,

> சிறுகதையாவது அரை மணியிலிருந்து ஒன்று அல்லது ஒன்றரை மணி நேரத்திற்குள் படித்துணர்தற்குரிய உரை நடையில் கூறப்படும் கதையாகும்[8]

என்று விளக்கம் கூறுவார்.

வாழ்க்கையில் பெண்களுக்கு ஏற்படும் பிரச்சினைகள், இன்ப துன்பம், சமுதாய மாற்றங்கள் இவைகளைப் படம் பிடித்துக் காட்டு வனவாக, 'ராஜம்' இதழில் சிறுகதைகள் அமைந்துள்ளன. மகளிர் வாழ்வில் ஏற்படும் குடும்ப உறவு, காதல், திருமணம், பெண்களின் மனநிலை, தனியாக வாழும் பெண்களின் நிலை இவையே அவ்விதழில் முதன்மையான இடம் பெறுகின்றன.

'ஊனமில்லாத உள்ளங்கள்' (12/93) என்ற சிறுகதை வரதட்சணையின் கொடுமையைக் காட்டுகிறது.

சிறுகதை என்பது பொழுது போக்கிற்காகவும், சிந்தனைப் பெருக்கத்திற்குப் பயன்படக் கூடியதாகவும் அமைய வேண்டும். வாழ்வில் நகைச்சுவையும் மிகவும் இன்றியமையாததொன்றாகும்.

நகைச்சுவையின் மூலம் நரம்புகள் முறுக்கேறி, இரத்த ஓட்டம் சீராகி நோய் நீங்கும் என்று அறிவியலறிஞர்கள் கூறுவர்.

'அய்யோ லேடிஸ் கிளப்' 6/95 என்ற சிறுகதை சில மாதர் சங்கத்தில் நடக்கும் சீரழிவுகளைச் சுட்டுகிறது. வயிறு குலுங்கச் சிரிக்க வைக்கும் காட்சிகளை அமைத்துக் கதையை விறுவிறுப் புடன் செயல்படுத்துகிறது.

நம் நாட்டுக் கலாச்சாரம், பண்பாடு காக்க வேண்டிய ஒன்று என்பதை வலியுறுத்தும் வகையில் 'சிதைவுகள் சிற்பங்கள்' (4/95) என்ற சிறுகதை அமைந்துள்ளது.

> பெண்மையின் உயர்வு ஒருவனுக்கு ஒருத்தி என்னும் உன்னதம்
> இங்கு சிலருக்கு ஏட்டளவில்... சொல்லளவில் தான் (ப.69)

என்ற வாசகங்கள் நம் நாடு செல்லும் திசையை உணர்த்துகின்றன.

## நெடுங்கதை

சிறுகதையென்பது ஒன்றரை முதல் இரண்டு பக்கங்கள் அளவில் வெளி வருகிறது. நெடுங்கதை நான்கு அல்லது ஐந்து பக்கங்களில் வெளிவருகிறது. 'விதி மரத்துக் கிளிகள்' (3/97) என்ற கதையின் மூலம் திருமணம் ஒரு பெண்ணின் வாழ்வில் ஏற்படுத்தும் மாற்றங்களை, ஏமாற்றங்களைத் தெளிவுபடுத்துகிறது. சகோதரிகள் வாழ்வில் அமைந்த இரு வேறு மனநிலையுடைய கணவன்மார்களின் நடத்தையைக் காட்டி வாழ்வியலைப் புரிய வைக்கிறது.

> தாம்பத்தியம் கம்பி மேல் நடப்பதைப் போன்று சிரமமாய்
> அமைந்துபோனது அக்காவிற்கு (ப.45)
>
> சின்ன கிளிக்கும் கிளை உல்லாச ஊஞ்சலாய் அமைஞ்சிடுச்சு
> மூத்தவ பதமாய்க் கூடு அமைக்கணும் (ப.48)

என்ற ஆதங்கத்தின் மூலம் தாயின் மனக்கவலை வெளிப்படுகிறது.

## தொடர்கதை

ஒவ்வொரு மாதமும் வெளியிடப்பட்டு, வாசகர்கள் உள்ளத்தைத் தூண்டக் கூடிய வகையில் முடிவை அமைத்து விறுவிறுப்பை ஊட்டக் கூடிய வகையில் அந்த மாதத்தொடர்கதையினை முடிக்க வேண்டும்.

அடுத்த மாதம் என்ன நடக்கும் என்ற மன அழுத்தம் வாசகர் உள்ளத்தில் ஏற்படும் வகையில் எழுதும் தொடர்கதையே வாசகர் இடையில் வெற்றி ஏற்படுத்தும் தொடர்கதையாகும். எழுத்தாளர் தேவிபாலாவின் 'நாளைக்கும் நிலவுவரும்' என்ற தொடர்கதையில் மணப்பெண், மண மகனின் வருகைக்குக் காத்திருக்க, மணமகன் அறைக்குள் நுழைந்தான்.

> கண்களில் கணிசமான அளவு காமம். காதம்பரிக்கு என்னவோ போலிருந்தது. கணவனாக அவன் தெரியவில்லை. கற்பழிப்புக் காட்சியில் கதாநாயகியின் எதிரே வந்து நிற்கும் வில்லன் போலிருந்தான் கோபால் (3/94 - ப.47).

இவ்வாசகங்கள் மணப்பெண்ணின் மனநிலையின் மூலம் அடுத்து என்ன ஆகுமோ என்ற உணர்வை ஏற்படுத்தும் வகையில் அமைந் துள்ளன.

பல ஆண்டுகள் கணவனின் கொடுமையில் வருந்திய தாய் தன் மகனுடன் உரையாடும் உரையாடல் மூலம் அவன் வாழ்வில் பட்ட துன்பங்கள் வெளிப்படுகின்றன.

> சங்கர்! நான் தினமும் என்ன வேண்டிக்கிறேன், தெரியுமா கடவுளை?
>
> சொல்லும்மா!
>
> சீக்கிரம் நான் விதவையாகணும்னு!
>
> மனைவி ஸ்தானத்தை விடத் தாய் ஸ்தானம் உசத்திடா! சங்கர், பூமில பிறந்த ஒவ்வொரு பெண் ஜென்மமும் உயிர் வாழறதே, தான் பெற்ற குழந்தைகளுக்காக....... ..... ......... யாருக்கும் உபயோகமில்லாத இவர் இருந்துதான் என்ன லாபம்.........." (3/94 - பக்.41-42).

ஆண்களின் பொறுப்பற்ற தன்மையால் பெண்கள் படும் துன்பம் புலப்படுகிறது. அடுத்த தலைமுறையினரின் பாசமற்ற நிலையை 3/93 - (ப.16) இதழ் படம் பிடித்துக் காட்டுகிறது. காதம்பரியின் பிள்ளைகள் வெளிநாடு சென்று பணம் சேர்க்க எண்ணினார்களே தவிர தான் தாயைப் பற்றிக் கவலைப்படவில்லை.

காதம்பரியின் தாய், காதம்பரி, பொறுப்பில்லாத காதம்பரியின் மகள் என்று மூன்று தலைமுறைகளைச் சுட்டிக் காட்டிப் பெண்களின்

வேறுபட்ட மனநிலையையும் உணர்த்துகிறது. பொறுப்பற்ற மக்களால் முதியோர் இல்லம் உருவாகும் நிலையையும் விளக்குகிறது.

### குறுநாவல்

நாவலைப் போன்று பல பாகங்களைக் கொண்டு அதிகப் பக்கங்கள் அமையாது ஏழு அல்லது எட்டுப் பக்கங்களில் வெளிவரும் புனைகதையே குறு நாவல் எனலாம். 7/93 இதழில் (46 - 52) ஏழு பக்க அளவில் சிறுகதை, நெடுங்கதை போன்று அல்லாது இவற்றி னின்றும் சிறிது மாறுபட்டு விரிவாக 'மாறியது நெஞ்சம்' என்ற குறு நாவல் வெளிவந்துள்ளது.

இக் குறுநாவல் பெண் மனதின் ஏக்கம், ஆணிண் வக்ரக்குணம், தன் முனைப்பின் தீவிரம் இவைகளை நிகழ்ச்சிகள் மூலம் சுட்டுகிறது. படித்த மனைவியாக இருந்தாலும், பெண்கள் எப்படி இருக்க வேண்டு மென்பதைச் சில ஆண்களின் எண்ணத்தைக் கீழ்வரும் வாசகங்கள் தெளிய வைக்கும்.

> புருஷன்ங்கற பாட்டில்ல அடைபட்டப்புறம், அந்தப் பாட்டில் எந்த வடிவமோ, எந்த நிறமோ அதுவா மாறிடணும். அவளுக் குண்ணு சுய உருவோ, நிறமோ இருக்கக் கூடாது. இருக்கிறதை "நா விரும்பலே"

என்ற வகையில் பாத்திரத்தின் உரையாடல் அமைந்துள்ளது (ப.49).

'அவள் மனசு' 4/98 என்ற குறுநாவலில் பெண்ணின் கனவு கன வாகவே முடிவதை விமலா என்ற பெண்ணுள்ளம் பேசுமாறு அமைந் துள்ளது.

> மலை முகடுகள், காடுகள், அருவிகள் என்று பல ரசனைகள், பெரிய ஓவியராக வேண்டுமென்ற கனவு, எளிமையுடன் அழ காக மனதுக்குப் பிடித்த மாதிரியானதொரு வீட்டில் வாழ ஆசை. இப்படி எத்தனையோ கனவுகள் கொண்ட சராசரி இந்தியப் பெண்தான் நான். ஆனால் வாழ்க்கை எனக்கு எதையுமே நிறை வேற்றவில்லை (ப.55).

விமலா போன்றே நம் நாட்டில் பல பெண்கள் இன்றும் வாழ் கிறார்கள்.

## புதுக்கவிதை

'சொற்சிக்கனம், பேச்சுப் பாங்கு, பேச்சமைதி, புதுமைப்படிமப் பயன்பாடு, தற்காலச் சொல்லாட்சி, உணர்ச்சிப் பாங்கு, தத்துவ நோக்கு, ஒலி நய அழுத்தம், உடனிகழ் கால உணர்வு, இன்றைய இக்கட்டான நிலை இவற்றைத் தன் உள்ளடக்கத்துக்கும் உருவத் திற்கும், பொருளாகவும், சாதனங்களாகவும் கொண்டு புதுக் குரலில் ஒலிப்பது தான் இன்றைய புதுக்கவிதை'[9] என்பர்.

புதுக்கவிதையின் இலக்கணம் சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல் என்பதாகும். கவிதை, கவிஞர்களின் உள்ளத்தின் வெளிப் பாடாகும். அக்கவிதைகளில் பெண்களின் வாழ்வு நிலை புலப்படும். இதழின் கூறுகளில் புதுக்கவிதையும் ஒன்றாகும். இப்புதுக்கவிதை சிறப்பானதொரு இடத்தை இக்கால இதழ்களில் பெற்றுள்ளது.

காதலைப் பற்றிப் பேசாத கவிஞர்களே இல்லையெனலாம். பெண்ணற்ற வாழ்வு வெறுமையெனும் வகையில் 8/93 இதழில் வெளிவந்த 'காத்திருப்பு' என்ற கவிதை விளம்புகிறது.

உனக்காகக் காத்திருந்தேன் !<br>
............<br>
அது சுகநரகம்.<br>
உனக்காகக் கொண்டு வந்தேன்.<br>
ஓர்<br>
ஒற்றை ரோஜா !<br>
ஐந்து நிமிடத்திற்கு ஓரிதழாக<br>
அதைக்<br>
கிள்ளிக்<br>
கிள்ளி<br>
கீழே<br>
எறிந்தேன்.<br>
..........<br>
நல்ல வேளை<br>
கடைசி இதழைப் பிய்க்கக்<br>
கை நடுங்குகையில்<br>
தூரத்தில்.......

வர்ணப் புள்ளியாய்
நீ வருவது தெரிந்தது
இல்லையேல்........
என் இருதய ரோஜாவிலும்
காம்பு தான் மீந்திருக்கும் (ப.39)

என்று கூறுவதால் பெண்ணே வாழ்வின் அனைத்தும் என்று இக் கவிதை வரிகள் விளம்புகின்றன.

வாழ்விற்கு ஒளி தரும் தத்துவக் கவிதைகளும் 'ராஜம்' இதழில் அவ்வப்போது வெளி வந்துள்ளன 7/93 (ப.69), 8/96 (ப.79). மொழிபெயர்ப்புக் கவிதைகளும் ஓரிரு முறை வெளி வந்துள்ளன.

## கோலம்

வாழ்க்கையே ஒரு கோலந்தான். இதனை உணர்த்தவே மக்கள் வீட்டின் முற்றத்தில் புள்ளிகளை வைத்தும் வர்ணம் தீட்டியும் கோலங் களை வரைந்தனர். இக்கோலம் இரு வகைப்படும். புள்ளிகளை வைத்துக் கற்பனையுடன் கோடுகளை இழுத்தும் வர்ணப் பொடி களைத் தூவியும் போடுவது ஒருவகைக் கோலமாகும். மற்றொன்று எழுத்துக்களை அடுத்தடுத்து எழுதி இணைத்து வார்த்தைகளாக உருவாக்கி அறிவு வெளிப்பாட்டால் விளங்கும் வார்த்தைக் கோலமா கும். சிந்தனையைத் தூண்டிச் சொற்பெருக்கம் உண்டாகும் வார்த்தைக் கோலங்களே 'ராஜம்' இதழில் மிகுதியாக உள்ளன.

## சித்திரம்

'சித்திரமும் கைப் பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்' என்ற பழமொழியின்படி சிறுவர்களை ஊக்குவிக்கும் வகையில் 'கோடு' தந்து முழு உருவத்தைக் கொணரும் ஓவியப் போட்டிகள் நடத்தி இவ் விதழ் சிறுவர்களுக்குப் பரிசுகளை வழங்கும் முறையையும் வைத் துள்ளது. மேலும் படக்கதை, ஆங்கில மொழியில் கதை, நிகழ்ச்சிகள், சொற்பெருக்கத்தை வளர்க்கும் அகராதிச் சொற்கள் என்று பல்வேறு நுணுக்கமான பகுதிகள் சிறுவர் பகுதியில் 12/93 (ப.74) வெளி வந்து இருபாலாருக்கும் பயன்படுகிறது.

## கற்பனைப் படைப்புகள் காட்டும் மகளிர் நிலை

பெண்களின் கலையார்வம், அறிவுத்திறன், சாதிக்கும் எண்ணம், ஆண்களை விடப் பெண்கள் மேலான வலிமை பெற்றவர்கள் என்று

இளைய தலைமுறையினரைச் சுட்டிக்காட்டி அவர்களின் ஆற்றலை உணர்த்துகிறது. பெண் அடிமைத்தனத்தில் விருப்புண்டு, அதனை அரவணைப்பாக எண்ணிக் 'கணவனே கண் கண்ட தெய்வம்" என்ற எண்ணத்தோடு வாழும் பெண்களையும் சித்திரித்து, அவர்கள் சீர்பெறாது, அழிந்த நிலையையும் வெளிப்படுத்தி இக்காலத்தில் வாழும் ஒரு சில மகளிர் நிலையினை விவரிக்கிறது.

சிற்றின்பம், தவறான முறையில் கிட்டும் அழிவின்பம், வரதட்சிணை, பெண்களை ஏமாற்றும் ஆண்களின் போக்கு, விளம்பரத்தால் மகளிர் ஏமாறும் நிலை, காதலில் தோல்வியுற்ற பெண்களின் நிலை, பெண்கள் தவறான பொழுதுபோக்குகளால் அடையும் துன்ப நிலை, இவையே கதைகளில் பெண் பாத்திரங்களாகப் படைத்துப் பறை சாற்றுகின்றன.

'ஒருவனுக்கு ஒருத்தி' என்ற தமிழ்ப் பண்பாடு தடுமாறுவதைப் பெண்களின் மூலம் எடுத்துக் காட்டி மனந்தடுமா றும் நிலையை உணர்த்துகிறது.

ஆண்களைவிட ஆணித்தரமானவர்கள் பெண்கள் என்று சிலரையும், அல்லிமலர் போன்றவர்கள் பெண்கள் என்று சிலரையும், இரு வேறு கோணத்தில் காட்டி, நடப்பியல் உண்மையை உணர்த்தி, இன்றைய மகளிர் சமுதாயத்தில் பெற்றுள்ள அந்தஸ்தை அங்கீகரிக்கிறது.

மன முதிர்ச்சி பெறாத பெண்களாலேயே இன்று நம் மண்ணில் முதியோர் இல்லங்கள் தோன்றுகின்றன என்பதைப் பாத்திரப் படைப்பின் வாயிலாக வாழ்வின் இறுதி நிலையிலுள்ள பெண்களின் நிலையையும் காட்டித் தீர்வுகளையும் வழங்குகிறது. பணிக்குச் செல்லும் பெண்கள் பனியாய் உருகாதிருக்கப் பக்கபலமாய் ஆண்கள் நிலவ வேண்டுமென்பதை வலியுறுத்தி, வேலைக்குச் செல்லும் வேதனை நிறைந்த பெண்களின் நிலையையும் புனைகதை சுட்டுகிறது.

உலகிலுள்ள பெண்கள் பெறும் அனைத்து நன்மைகளையும், அப்பெண்கள் படும் துன்பங்களையும் கதைக் கருவாகவோ, பாத்திரப் படைப்பின் வாயிலாகவோ, அதைப் பின்னிச் செல்லும் நிலையிலோ ஏதேனும் ஒரு வகையில் மகளிர் நிலையை மனங்கொள்ளும் வகையில் படைக்கிறது.

### கற்பனையல்லாதன – புனைவிலி

அட்டைப்படம், படைப்புக்களில் படைப்புக்குத் துணை சேர்க்கும் படங்கள், தலையங்கம், விளம்பரம், மணமலர், கட்டுரை, துணுக்குகள், பெட்டிச் செய்தி, திறனாய்வு, மதிப்பீடு, செய்திகள் சில, அன்புள்ள ஆசிரியர், பேட்டி, சமையல், ராசிபலன், ஆன்மிகம், கேள்வி - பதில் போன்றவை கற்பனையில்லாத வகையைச் சார்ந்தவை எனலாம்.

### அட்டைப் படம்

இது புறவடிவத்தைச் சார்ந்த பகுதியாகும். அகவடிவத்தைச் சார்ந்த படைப்புக்களின் படங்களையும் அட்டையில் வெளியிடுவதால் அதனை இங்குப் பார்ப்போம்.

வாசகர்களை எடுத்துப் படிக்கத் தூண்டக் கூடியது முதலில் அட்டைப் படமாகும். இந்த அட்டைப்படம் இதழின் தரத்தை நிர்ணயிக்கும் இதழியல் கூறுகளில் ஒன்றாகும்.

'ராஜம்' இதழின் அட்டை தனிவகைத் தாள் அதாவது மழமழப் புத் தாளினைக் கொண்டுள்ளது. இது கண்ணுக்குக் கவர்ச்சியாக வும், மனதுக்கு இதமாகவும் இருப்பதால் வாங்குபவரின் மனதைக் கவரச் செய்கிறது. அட்டையில் வண்ணப் புகைப்படத்தை வண்ணப் படமாக்கி வெளியிடுகிறது.

முதன்மையாக முகப் பொலிவுடன் ஒரு பெண்ணின் மார்பளவு உள்ள வண்ணப் புகைப்படம் வெளியிடப்படுகிறது. அதே இதழின் அட்டையில் வலப்பக்க மூலையில் பெரும்பாலும் பெண்ணின் வண்ணப் புகைப்படம் அஞ்சல் தலை அளவில் வெளியிடப்படுகிறது. 4/95 இதழில் லலிதா நகைமாளிகைக்கு மாடல் (மாதிரி மங்கை) தருபவரை வெளியிட்டு வலப்பக்க மூலையில் "ஆண்களுக்கு அழகுக் குறிப்புகள்' என்ற தலைப்பிட்டு ஓர் ஆணின் புகைப்படம் அஞ்சல் தலை அளவில் வெளியிடப்பட்டுள்ளது. சில இதழ்களில் ஒன்றுக்கு மேற்பட்ட பெண்கள் (8/98 இதழ்) வெவ்வேறு நிலைகளில் வெளி யிடப்படுகின்றனர்.

நவநாகரிக உடையணிந்த பெண்களின் புகைப்படங்களிலும் ஆபாசம் வெளிப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அட்டைப் படங்களில் வரும் பெண்கள், நடிகை, மாதிரி மங்கை, பல்துறை சார்ந்த அழகிகள் என்ற நிலையில் இடம் பெறுகின்றனர்.

அட்டைப்படத்தில் 'ராஜம்' என்ற இதழின் பெயரிலுள்ள 'ர' என்ற எழுத்துக்குள் ஒரு பெண்ணின் வடிவம் (வெள்ளை நிறம்) பொறிக் கப்பட்டுள்ளது. ஆர்வமூட்டும் சிறு சிறு தலைப்புகள் வெளியிடப் படும். குறைந்த பட்சம் நான்கு தலைப்புகள் உண்டு. ஆங்கிலத்தில் **Women Monthly** என்று அட்டையின் மேல் பக்கத்திலோ, இடது பக்க இடையிலோ குறிக்கப்பட்டிருக்கும். சில இதழ்களின் அட்டை யில் ஆண்டு, மாதம், இதழ் பெயர் அட்டையின் மேல் பகுதியிலும், சில இதழ்களின் இடப்பக்க மூலையில் விலையும், வலப்பக்க மூலையில் ஆண்டும், மாதமும் குறிக்கப்பட்டிருக்கும்.

1996-1997ஆம் ஆண்டுகளின் அட்டையில் 'பெண் குலத்திற் குப் பெருமை சேர்த்திடும் மாதப் பத்திரிகை' என்ற தொடர் 'ராஜம்' என்ற இதழின் பெயருக்கு மேல் வெள்ளை எழுத்துக்களில் அச்சடிக்கப் பட்டிருந்தது. 1998ஆம் ஆண்டு இதழில் அந்த வாசகம் வருவதைத் தவிர்த்தனர். 8/1998 இதழின் அட்டையில் தமிழிலும், ஆங்கி லத்திலும் எழுதும் வாசகங்கள் தவிர்க்கப்பட்டு, பொருளடக்கத்தில் வெளிவரத் தொடங்கியது. இதற்கான காரணத்தை இணையாசிரிய ரிடம் வினவியபோது அதற்குக் குறிப்பிட்ட காரணம் ஒன்றுமில்லை யெனவும், மாறுதலுக்காக வெளியிடப்படுகிறது என்றும் கட்டுரை யாளரிடம் தெரிவித்தார்.

சில இதழ்களில் 2/94 அட்டையில் வெளியிடப்படும் உருவப் படத்துக்கு ஏற்ற படைப்பு இதழினுள் வெளிவருகிறது. சிறுபான்மை வலப்பக்க மூலையில் வரும் சின்னப்படங்கள் வெளிவராமல் இருத்த லுமுண்டு. பிற இதழ்களில் வெளியிடுவது போல வரை குறிப்புப் படங்கள், (SKETCHES) வெள்ளைக் கருப்புப் படங்கள், வண்ண ஓவி யங்கள், வண்ணமிலா ஓவியங்கள் என்று எந்தப் படங்களும் வெளி யிடப்படுவதில்லை.

பெண்ணின் மார்பளவு அல்லது முழு உருவம் முன் அட்டையிலும், பின் அட்டையில் விளம்பரமும் வெளியிடப்படுகின்றன.

### படைப்புகளில் படங்கள்

கற்பனை, கற்பனையல்லாதன இவற்றின் தொடர்பாக வெளி யிடப்படும் படங்கள் பொருத்தமாகக் கருப்பு வெள்ளை அல்லது

வண்ணப்படம் என்ற நிலையில் பெண்களை மதிக்கும் வகையிலேயே வெளியிடப்படுகின்றன.

## தலையங்கம்

இதழின் இதயமென்றும் உயிரென்றும் போற்றப்படுவது இதழில் வெளிவரும் தலையங்கமாகும். தலையங்கம் இல்லாது இதழ் வெளிவருவது பொதுவான ஒன்றாகிவிட்டது. தலையங்கம் எழுதும் ஆசிரியர் தனிப்பட்ட ஆற்றல், உலகியல் அறிவு, பிறர் மனத்தைப் புண்படுத்தாத ஒரு நிலை இவையனைத்தும் ஒருங்கு பெற்றவராக இருத்தல் வேண்டும். முதலில் ஒரு சிக்கலை எடுத்துக் கொண்டு பின்பு அதனை ஆய்ந்து அந்தச் சிக்கலைத் தீர்க்கும் வழிமுறைகளையும் கூற வேண்டும். இந்த முறையில் 'ராஜம்' இதழ்களில் தலையங்கங்கள் அமைந்துள்ளன. அரசுச் செய்திகளை விட மனித நேயம் மிகுந்த செய்திகள் இவ்விதழில் பெருமளவு வெளிவருகின்றன. சாதாரணமாக இதழ்களில் 'ஆசிரியர் உரை' 'உறலோ' 'நலந்தானா' 'ஆசிரியர் குறிப்பு' சில வார்த்தைகள்' என்ற தலைப்புகளில் தலையங்கம் இடம் பெறும். ராஜம் இதழில் 'தலையங்கம்' என்று குறிப்பிட்டே தலையங்கத்தை இதழாசிரியர் எழுதி வருகிறார்.

தலையங்கம் பற்றி மா. ரா. இளங்கோவன் அவர்கள், "சுவை பயக்கும் தலைப்புகள் தந்து தலையங்கம் எழுதும் பெரும்பாலான பருவ இதழ்கள் வாசகர்களிடையே மிக்க செல்வாக்குப் பெறுவதைக் காண முடிகிறது"[10] என்கிறார். இக்கருத்து ராஜம் இதழுக்குப் பொருந்துவதாகும். இதனை 1/94 இதழில் வெளிவந்த 'அன்புள்ள ஆசிரியர்' பகுதியிலிருந்து அறியலாம். 'உவமைக் கதைகளும், அதை உணர்த்தும் பாங்கும் வியக்க வைக்கிறது. எதைக் கல்லில் செதுக்குகிறோமோ இல்லையோ சந்திரா ராஜசேகரன் தலையங்கத்திலுள்ள ஒவ்வொரு வார்த்தையையும் எங்கள் மனதில் செதுக்கி விடுகிறோம்' (ப. 33) என்று ஆஷாபிரியா தூத்துக்குடியிலிருந்து எழுதியது இங்கு எண்ணத்தக்கது. 8/98ஆம் ஆண்டு இதழில் உள்ள தலையங்கத்தினைப் பார்ப்போம். இதழியல் உத்தியில் 'தலைப்பு' மிகவும் முக்கியமானதொன்றாகக் கருதப்படும். ஆசிரியர், "மகிழ்ச்சிக்கும் ஒரு விலையுண்டு" என்று தலைப்பினை அமைத்து மகிழ்ச்சிக்கு விலை தர முடியுமா என்ற வினாவை எழுப்பிப் பின்பு விளக்கத்துடன் முடிவும் சிறப்பாக அமைத்துள்ள விதம் பாராட்டுதற்குரியது.

வீட்டில் மகிழ்ச்சியை உருவாக்கும் சூழ்நிலையை விளக்கி, துன்ப நிலையிலும் மகிழ்வாக இருப்பதற்கு 'பெர்ட்ரண்டரஸ்ஸில்' என்பவரின் வாழ்வில் நடந்த நிகழ்ச்சியை எடுத்துக் காட்டி மகிழ்ச்சியின் விலையைக் கூறி முடிக்கிறார். அறிஞர் அண்ணா, பேசுவது போல எழுதுவதில் வல்லவர். இந்த உத்திமுறையை ராஜம் இதழாசிரியரும் கையாண்டுள்ளார்.

> நேச வாசகர்களே! மகிழ்ச்சிக்கும் ஒரு விலையுண்டு, பலருக்கு அது தெரிவதில்லை.....! கொடுத்தால் கிடைக்கும்! அது தான் அன்பு. என் வாசகர்கள் மகிழ்ச்சியை விலை கொடுத்து வாங்கத் தெரிந்தவர்கள்!

என்று முடிக்கிறார்.

"தலையங்கம் எழுதுபவரின் தனித்தன்மை, அறிவாற்றல், நடை, பொருளைக் கூறும் முறை ஆகியவை சிலரின் தலையங்கங்களுக்குத் தனிப் புகழைத் தேடித் தந்திருக்கின்றன" என்ற கருத்து இவ்விதழாசிரியருக்கும் பொருந்தும். சமூகம், அரசியல், பொருளாதாரம், பண்பாடு, கலாச்சாரம் என்று பல்வேறுப்பட்ட தலையங்கங்கள் அமைந்து எச்சரிக்கும் வகையிலும், மனித நேயத்தை உணர்த்தும் வகையிலும், அறிவுறுத்தும் நிலையிலும், 'ராஜம்' இதழில் தலையங்கங்கள் அமைந்துள்ளன. இதன் மூலம் ஆசிரியரின் மொழியறிவும், தேவைக்குப் பொருத்தமான கதைகள் இணைப்பதால் அவரது நுண்மாண் நுழைபுலமும் விளங்குகிறது.

## விளம்பரம்

"விளம்பரம் என்பது குறைந்த செலவில் நிறைய பேருக்கு அவர்களை வாங்கத் தூண்டும் வகையில் கருத்துக்களை, பொருள்களை, பணிகளைப் பற்றிக் கவர்ச்சியாகச் சொல்கின்ற ஒரு முறையீடு"[12] என்பர். இந்த வகையில் ராஜம் இதழில் விளம்பரங்கள் அமைந்துள்ளன.

பொருளையோ, நிறுவனத்தையோ அறிவிப்பையோ வியாபாரத்தையோ விளம்பரப்படுத்தும் வகையில் விளம்பரங்கள் அமைந்துள்ளன. மேலும் 'மணமலர்' என்ற பகுதியில் பெண், ஆண் இவர்களின் தகுதிகளை வெளிப்படுத்தி வகைப்படுத்தப்பட்ட விளம்பரமும்,

காலத்துக்கேற்ற விளம்பரங்களும் (பொங்கல், தீபாவளி) வெளி வருகின்றன. இவை இதழின் வருமானத்திற்குப் பெருந்துணையாகும் எனலாம்.

### விளம்பரத்தின் வகைகள்

இவ்விதழில் வெளிவரும் விளம்பரங்கள் - செல்வந்தர், நடுத்தரவர்க்கத்தினர், இவர்கள் பயன்படுத்தும் பொருட்கள், செய்திகள் இவைகளை வெளியிடுவதோடு குடும்பத்திற்குப் பயன்படும் வீட்டுப் பொருட்களையும் மிகுதியான அளவில் விளம்பரப்படுத்துகின்றனர்.

சமூகத்தொண்டு நோக்கோடு வெளிவரும் விளம்பரங்களுமுண்டு. 'நான் தேடும் ஒருவர் நீங்களாக இருக்கலாம்' என்று வாசகர்கள் படிக்கத் தூண்டும் வகையில் 'தலைப்பு' வேறு நிறத்தில் அமைந்துள்ளது. வாசகங்களும் மனதைக் கவரக் கூடிய வகையில் அமைந்துள்ளன. "உங்கள் கரங்களும் உதவும் கரங்களாகட்டும்" 8/98 (ப. 89).

### மணமலர்

விவாகரத்து புரிந்து கொண்ட ஆண், பெண் இருபாலாரின் தகுதிகளைக் காட்டும் விளம்பரங்களும் ஓய்வு பெற்றவர் தமக்குத் துணை தேடி, தரும் விளம்பரங்களும் இப்பகுதியில் வெளிவருகின்றன.

### கட்டுரை

சமுதாயத்தின் விழிப்புணர்வு, சாதனையாளர்களின் சாதனை, அறிவியல் தொழில் நுட்பம், சமூகத் தொண்டு, பெண்களின் பிரச்சினை, அவர்களுடைய பொழுது போக்கு, உணவு, தனி நிறுவனங்கள் இயங்கும் விதம் போன்ற கட்டுரைகள் வெளி வருகின்றன. இக் கட்டுரைகளை இரண்டு முறைகளில் பிரிக்கலாம்.

1. ராஜம் இதழில் முதன் முதலாக வெளி வருவது
2. மற்ற பத்திரிகைகளில் வெளிவந்தனவற்றைத் தம் இதழில் அப்பத்திரிகையின் பெயரைக் கூறித் தம் கருத்தையும் இணைத்துக் காட்டுவது

இந்தக் கட்டுரைகள் உள்ளதை உள்ளவாறே கூறுவதாலும், சமுதாயத்தைச் சார்ந்திருப்பதாலும், உள்ளூர், வெளியூர் என்று ஆங்காங்கு நடைபெறும் நிகழ்ச்சிகளை உணரவும் கட்டுரைகளைப்

பெரும்பாலான வாசகர்கள் விரும்பிப் படிக்கிறார்கள். 'தம்முடன் நெருங்கிய தொடர்பில்லாத உலகின் பல பகுதிகள் அல்லது அலு வல்கள் பற்றிய தகவல்களுக்காகவும், பருவ இதழ்களின் குறிப் பிட்ட பக்கங்களைப் புரட்டுகின்ற - புனைவுகளில் அக்கறையில்லாத ஆண், பெண் வாசகர்களைக் கவர்வதாகவும் இதழ்கள் கட்டுரை களைச் சார்ந்திருக்கின்றன'[13] என்று இதழியல் அறிஞர் ரோலண்ட்இ. உல்ஸ்லி கூறுகிறார். ராஜம் இதழில் வெளி வரும் கட்டுரைகள் மிகச் சிறப்பான முறையில் அமைந்துள்ளன. அறிமுகப்படுத்துதல் 10/93 (ப. 35), அறிவுறுத்தல் 5/96 (ப. 12) மகிழவைத்தல், விழிப் புணர்வு ஏற்படுத்துதல், பாராட்டுதல், எச்சரித்தல், உள்ளதை உள்ள வாறே கூறுதல் என்ற முறையில் கட்டுரைகள் அமைந்துள்ளன.

அறிவுறுத்தல்

'இவர்கள் புத்திசாலிகள்' என்ற தலைப்பில் மாதந்தோறும் பெண்களில் சிறந்த ஒரு பெண்ணின் சாதனை, அவர் எத்துறையில் சிறந்து விளங்குகிறார் என்பதைப் பற்றி விளக்குகிறது. தொழில் தொடங்குபவருக்கு யோசனை சொல்கிறார் திருமதி. பிரதிபா ஐயர் 9/93 (பக். 22-23).

"இப்படியுமா?" என்ற தலைப்பில் "நடு இரவு நேரம் நடனம் ஆடுவேன்" என்ற கட்டுரை தேவதாசி முறை இன்றும் இருக்கும் அவல நிலையை வெளிப்படுத்துகிறது 8/93 (ப. 19).

பாராட்டுதல்

பெண்கள் பொறுமையுடையவர்கள். அதனால்தான் மருத்துவ மனைகளிலும் தொடக்கப்பள்ளிகளிலும், பணிபுரிய அவர்களைச் சான்றோர் முன் மொழிகின்றனர். 'தென்னகத்து தெரசா அன்னை வீரம்மாள்" 10/93 (ப. 53) அவர்களின் சாதனையை, சமூகத் தொண் டினைச் சுட்டிக்காட்ட 'ராஜம்' இதழ் தவறவில்லை.

மொழிபெயர்ப்புக் கட்டுரைகள்

மராத்திய நடிகை ரஞ்சனா அவர்கள் விபத்தில் உறுப்புகளை இழந்தும் தன்னம்பிக்கையோடு வாழும் நிலையை 8/93இல் (பக். 22-25) வெளி வந்த கட்டுரை விளக்குகிறது.

அரசியல், திரையுலகம், சிறுவர்களின் சாதனை, பிரச்சினைகள், நடப்பியல், பெண்ணுரிமை மருத்துவம் வாழும் முறை, ஆண்களின் சாதனை, பெண்களின் சாதனை எனப் பல்வேறு துறைசார்ந்த கட்டுரைகள் எளிய நடையில் வெளிவருகின்றன.

## துணுக்குகள்

இதழினை மேலோட்டமாகப் படிக்கின்ற வாசகர்கள் துணுக்குகளை மட்டும் படிப்பதனை வழக்கமாகக் கொண்டிருப்பர். குறைந்த நேரத்தில் பல்துறை செய்திகளைப் படித்துப் பயனுறுவர் - இத்துணுக்குகளைப் பற்றி,

> வாசகர்களுக்கு ஓய்விடம் அளிப்பது, நீண்ட பகுதிகளின் தொடர்ச்சியிலிருந்து ஒரு சிறு மாறுதலைத் தருவது. ஒரு வெளி மீட்டினை உருவாக்கும்போது, ஒரு பக்கம் அல்லது ஒரு பகுதியை நிரப்புவதற்காக வேறுபட்ட அளவுகளில் சிறிய தகவலை வாசகருக்குக் கொடுப்பது என்பதே நிரப்பிகளின் நோக்கமாகும்

என்கிறார்.

'பெட்டிச் செய்திகள்' என்பது நான்கு பக்கமும் கோடுகள் அமைத்துச் செய்திகளை வெளியிடுவதாகும் 4/94 (பக். 38) 3/96 (பக். 61) 1/97 (பக் 83-85) ஆனால் இவ்விதழில் சில துணுக்குகளையும் அவ்வாறே அமைத்து வெளியிடுவது (2/95 பக். 50) குறிப்பிடத் தக்கது.

வீட்டுக் குறிப்புக்கள், அழகுக்கலை, படைப்புகளில் மனதைத் தொடும் பகுதிகள், திரைத்துறை பற்றிய செய்திகள், வார்த்தைக் கோலம், கவிதை, மருத்துவம் போன்ற செய்தித் துணுக்குகள் மிக எளிய நடையில் வெளிவந்துள்ளன.

இந்தத் துணுக்குகளை இரண்டு வகையாகப் பிரிக்கலாம்.

1. செய்திகளைச் சொல்லும் துணுக்கு.
2. நகைச் சுவைத் துணுக்கு

## வீட்டுக் குறிப்பு

"சமையல் அறையில் பாத்திரங்களைக் கழுவும் தொட்டியில் நீர் போகாமல் அடைத்துக் கொண்டிருந்தால் சிறிது கல் உப்பை

இரவில் போட்டு வையுங்கள். காலையில் நீர் அடைத்துக் கொள்ளாமல் போகும்" 6/96 (பக். 16).

சிறு சிறு விஷயங்களைத் தெளிவாக உணரத் துணுக்குகள் பயன்படுகின்றன. உள்ளம் தூய்மை அடைந்து மனம் மகிழ்வு பெறவும், உற்சாகம் பொங்கவும் நகைச்சுவைத் துணுக்குகள் உதவுகின்றன 11/93 (பக். 20).

கிராமத்துப் பல் வைத்தியரை மையமாக வச்சி பாரதிராஜா படம் எடுத்தா என்ன பெயர் வைப்பாரு?

பல்லுக்குள் ஈரம் 8/98 (பக். 45).

## படத்துடன் துணுக்கு

*நகைகளின் பேரில் கடன்?*

நகைமுகன்:

ஓர் ஒட்டியாணம், ஒரு ஜோடி வளையல், ஒரு செயின், ஒரு மூக்குத்தி மொத்தம் 150 கிராம் இருக்கும். ஒரு அம்ப தாயிரம் லோன், கொடுங்க.

பாங்க் மானேஜர்:

நகையெல்லாம் எங்க?

நகைமுகன்:

என்னங்க இது, நகைகளின் பேரில் கடன் வழங்கப்படும்னு போர்டு போட்டுட்டு இப்ப நகையையும் கொண்டு வரணும்னு சொல்றீங்களே 4/96 (ப. 82).

புடவை, நகை என்றாலே பெண்கள் மனம் துள்ளுமென்பதை விளக்கும் துணுக்குகளும் உண்டு.

பெண்:

ஹார்ட் அட்டாக் வந்தா என்ன முதல் உதவி செய்யணும் டாக்டர்?

டாக்டர்:

எதுக்குக் கேட்கிறீங்க?

பெண்:

3,500 ரூபாய்க்கு எடுத்த பட்டுப் புடவை பில்லை என் கணவரிடம் காட்ட வேண்டி இருக்கு 11/93 (ப. 51).

இத்தகைய துணுக்குகள் நாட்டில் நிலவும் உண்மைகளையும், பெண்களுக்கு வேண்டிய செய்திகளையும், மகிழ்வூட்டும் நிகழ்ச்சிகளையும் வெளிப்படுத்துகின்றன.

## திறனாய்வு

படைப்பவர்களின் திறனை வாசகர்களுக்கு வெளிப்படுத்தி வாசகர்கள் படைப்புகளை வாங்கி, படைப்பாளர்களை ஊக்குவிக்கப் பயன்படும் மிகச் சிறந்த பகுதி திறனாய்வு எனப்படும். இவர்களை வாழ வைக்கும் பிரம்மாக்கள் எனலாம்.

## மதிப்பீட்டில் திறன்

படைப்பவர்களுக்கும், வாசகர்களுக்கும் இடையே பாலம்போல நின்று நடுநிலைமையோடு படைப்பின் தரத்தை எடுத்துக் கூறுவது மதிப்பீட்டின் திறனாகும்.

புத்தகம், திரைப்படம், நாட்டியம், இசை நிகழ்ச்சி, கேசட் போன்றவை இதழ்களில் திறனாய்வு செய்யப்படுகின்றன. இது இதழியல் கூறுகளில் ஒன்றாகும். "படிக்கப் பாதுகாக்க" என்ற தலைப்பில் இவ்விதழ் திறனாய்வு செய்கிறது 11/93 (ப. 47). "வாரியார் சுவாமிகளின் வாழ்க்கை" என்ற நூலை, படிப்பவர் வாங்கும் வகையில் திறனாய்வு செய்துள்ளது. நூலைப் பற்றிய அனைத்து விபரங்களும் அடங்கியுள்ளன.

## திரைப்பட விமர்சனம்

திரைப்படத்தைப் பற்றிய விளக்கங்கள் அடங்கிய சினிமா இதழ்கள் பல உள்ளன. இவ்விதழ் பேசும்படம் நிறுவன வெளியீடாக இருந்தாலும், இத்துறை பற்றிய செய்திகள் குறைவாகவே வெளிவருகின்றன. 7/93 (ப. 35) இதழில் வெளியான 'புதிய முகம்' என்ற திரைப்படத்தில் தலைவன், தலைவியாக நடித்த ரேவதி, சுரேஷ்மேனன் நடிப்புத் திறத்தை விளக்கி, கதையையும் வாசகர்கள் விரும்பும் வண்ணம் எழுதி, திரைப்படத்தில் உள்ள சிறப்பான காட்சிகளையும் அத்துறையில் சிறப்பாகப் பணியாற்றியவர்களையும் பாராட்டியுள்ளது.

### காஸெட் விமர்சனம்

இக்காலத்தில் மெல்லிசைப் பாடல்கள், கர்நாடக சங்கீதம் போன்றவை ஒலிச்சுருள் அடங்கிய பெட்டகத்தில் வெளியிடப்படுகிறது. பெரும்பாலும் இறைப்பாடல்களே (கிறித்தவ, இசுலாம், இந்து) எனலாம் 8/93 (ப. 14). வெளியான இதழில், பாடல் எழுதியவர், இசையமைப்பாளர், பாடியவர் போன்ற அவ்வொலிச் சுருள் பற்றிய அனைத்துக் குறிப்புகளும் வெளியிடப்பட்டன.

8/93 (ப. 51) இதழில் குமாரி லக்ஷ்மியின் நடன அரங்கேற்றம் பற்றிய விமர்சனம் வெளியிடப்பட்டது. இதனால் கலைஞர்களைப் பற்றிய வரலாறு, சாதனை இவை வாசகர்களைச் சென்றடைகிறது எனலாம்.

### செய்திகள் சில

உள்ளூர், வெளியூர், வெளிநாடு ஆகிய இடங்களில் நடைபெறும் நிகழ்ச்சிகளைப் பற்றிய செய்திகள் வெளிவருகின்றன. பெரும்பாலும் பெண்களின் கருத்தரங்கு, பட்டிமன்றம் பற்றிய நிகழ்ச்சிகளும் சிறுபான்மை, நம்மைச் சுற்றியுள்ள இடங்களில் நடக்கும் வியக்கத் தக்க செய்திகளும் வெளியிடப்படுகின்றன.

"மக்களுக்குத் தேவையான பயன்பாடுடையவற்றைத் தெரிந் தெடுத்து வெளியிடும் பொறுப்பு இதழ்களுக்கு இருக்கின்றது"[15] என்பதற்கேற்ப 'செய்திகள் சில' பகுதிகள் 'சிற்றுலா' போன்று அமைந் துள்ளன. பெண்கள் கலந்து கொண்ட - குறிப்பாக, இவ்விதழின் இணை யாசிரியர் கலந்து கொண்ட நிகழ்ச்சிகளே பெரும்பாலும் இடம் பெற் றுள்ளன.

### அன்புள்ள ஆசிரியர்

இதழில் வெளிவரும் படைப்புகளையும், அப்படைப்புகளை எழுதிய படைப்பாளர்களையும், அப்படைப்புகள் வாசகர்களைப் பாதித்த நிலையையும் நமக்கு வெளிப்படுத்தும் கருவியாக அமைந்து இதழின் தரத்தையும் வாசகர்களின் எண்ணிக்கையையும் வெளிப் படுத்துவது அன்புள்ள ஆசிரியர் பகுதியாகும். இதனை 1/97 (ப. 79) இதழில்,

பல கட்டுரைகள், சுவாரஸ்யமான துணுக்குகள், அருமையான தலையங்கம், தேர்ந்தெடுத்த கதைகள், கிறிஸ்துமஸ் மலர், அழகுமலர், என் உள்ளம் - கவர்ந்த மலர்

என்ற மயிலை கோபியின் கடிதம் உறுதிப்படுத்தும்.

## பேட்டி

'நேர் காணல்' என்ற பகுதியின் மூலம் பேட்டி தருபவரின் திறமை, வாழ்ந்த சூழ்நிலை, கல்வித் தகுதி அவர்கள் நிகழ்த்திய சாதனை போன்றவை வெளிப்படும் வகையில் அவரைப் பற்றிய முழு விபரங் களும் வெளிவருகின்றன. இதனால் பல்துறை பற்றிய செய்திகளை அறிய வாய்ப்புண்டு. பேட்டி, சிறப்புப்பேட்டி 4/98 (பக். 24-27) என்று இரு வகையாகப் பேட்டிகளைப் பிரித்து இவ்விதழில் வெளி யிடுகின்றனர்.

1. நிருபர் ஒருவரைக் கண்டு பேட்டி காண்பது.
2. நிருபர் பலரைக் காண்பது. கண்ட செய்திகளைத் தொகுத் துப் போடுவது 10/93 (பக் 40-41).
3. நிருபர் வினாக்களை அமைத்துக் கொண்டு, அதே வினாக் களைத் தொடர்புடைய இருவரிடம் வினவி அவர்களுக் கிடையே உள்ள பரஸ்பரத்தை அவர்களே உணருமாறு கூறுவது 7/93 (பக். 10-11).

பெரும்பான்மையும் ஒருவரோடு ஒருவர் பேட்டி காண்பதே முதன்மை யிடம் பெறுகிறதெனலாம்.

## சமையல்

உணவு வகைகளைப் பெரும் அளவில் செய்வது ஆண்களாக இருந்தாலும் குடும்பத்தைப் பொறுத்த அளவில் பெண்களே சமை யலில் முதலிடம் பெறுகின்றனர். அவரவர் தம் தகுதிக்கேற்ப உணவு வகைகளைத் தயார் செய்து மற்றவர்களுக்குப் பரிமாறுகிறார்கள். சமையல் குறிப்புகள் சிறுபான்மையே வெளிவந்துள்ளன.

### ராசிபலன்

ராஜம் இதழில் 'நேரம் நல்ல நேரம்' என்று தலைப்பிட்டு அம் மாதத்திற்குரிய பலன்கள் வெளிவருகின்றன. 7/93 (ப. 61) இதழில் "9, 10; 11 தேதிகளில் சிறு விபத்துகள் ஏமாற்றங்கள் ஏற்படலாம். கவனமாக இருக்கவும்" என்ற முறையில் ராசிபலன்கள் வெளியிடப்பட்டுள்ளன. இதனை சி.பா. ஆதித்தனார் "கெட்ட பலன்களை எச்சரிக்கை கொடுப்பது போல மாற்றி எழுத வேண்டும்"[16] என்ற கருத்திற்கியைந்த வகையில் ராஜம் இதழில் பலன்கள் எழுதுவது குறிப்பிடத்தக்கது.

### ஆன்மிகம்

இறையும், இயற்கையும் ஒன்றேயாம். 'ராஜம்' இதழ் 'மாதம் ஒரு திருத்தலம்' என்ற பகுதியில் திருத்தலத்தைப் பற்றிய அனைத்துக் குறிப்புகளையும், படங்களுடன் வெளியிடுகிறது. மேலும் அங்கு இறைவனுக்குத் தொண்டு செய்யும் அடியார்களையும் பாராட்டு கிறது. அனைத்துத் தெய்வங்களைப் பற்றிய கட்டுரைகள் மனதுக்கு இதமாக அமைந்துள்ளன.

### கேள்வி – பதில்

வாசகர்கள் கேள்வி கேட்க ஆசிரியர் பதில் சொல்ல, அந்தப் பதில் படிக்கும் வாசகர்களுக்குப் பயன்படும் வகையில் அமைவது கேள்வி - பதில் பகுதியாகும். இங்குத் தனி மனிதர், சமுதாயம், குடும்பம் - பல் வேறு வகைப்பட்ட பிரச்சினைகளைப் பெயரிடாது வெளியிடுகின்றது.

"சொல்லத்தான் நினைக்கிறேன்" 3/94 (ப. 32) என்ற தலைப் பிலும், அடுத்த சில ஆண்டுகளுக்குப்பின் 'மனசுவிட்டு' 3/97 (ப. 78) என்ற தலைப்பிலும், கேள்வி - பதில் பகுதி அமைந்துள்ளது.

> பிரச்சினைகளை எங்களிடம் சொல்லி விடுங்கள் சமாதானத்தை
> நீங்கள் பெற்றுக் கொள்ளுங்கள்... So Over to

என்ற வாசகங்களோடு இப்பகுதி தொடர்ந்து வெளியாகிறது.

பெண்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் நிலையில் அமைந்துள்ளது.

### *கற்பனை கலவாத படைப்புகள் காட்டும் மகளிர் நிலை (புனைவிலி)*

'பெண் குலத்திற்குப் பெருமை சேர்த்திடும் மாதப் பத்திரிகை' என்ற வாசகத்திற்கு உயிர் சேர்ப்பதாக அமைந்து தமிழ்ப் பண்பாட்டைக் காக்கிறது. வாழ்க்கையில் அடிமட்டத்திலுள்ள மகளிர் நிலையைச் சிந்தித்துப் பார்க்காத நிலைமையை 'அட்டைப்படம்' நமக்கு நன்கு உணர்த்துகிறது. சமுதாய முன்னேற்றத்தில் பெண்கள் வகிக்கும் இடத்தை நமக்குப் புலப்படுத்துகிறது.

படைப்புகளில், செய்திகளில் என்று ஒட்டுமொத்தமாக வரும் படங்களைப் பார்க்கும் போது பெண்களை மதிக்கும் நிலையே புலப்படுகிறது. வியாபார நோக்கத்தோடு விளம்பரங்களில் வரும் புகைப் படங்களில்கூடப் பெண்கள் நிலையைத் தாழ்த்தும் எந்தவிதப் பாவனைகளும் வெளியிடப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

பெண்கல்வி, கடமை, இவைகளைப் பற்றிய கருத்துகளிலும் பெண்ணை அரவணைத்துச் செல்லுமாறே கூறுவதிலிருந்து, பெண் அந்தஸ்து நிலையில் இரண்டாமவளாகவே கருதப்படுவது 'தலையங்கத்திலிருந்து' புலப்படுகிறது.

நவநாகரிக உடைகள் அணிந்த நிலையில் பெண்கள் வரும் விளம்பரங்கள், பண்பாடு, கலாச்சாரத்திற்கு ஊறு விளைவிக்காத வகையில் அமைந்துள்ளது. 'மணமலர்' பகுதியிலிருந்து முதிர்கன்னிகளாக விளங்கும் மணமாகாத பெண்கள் சமுதாயத்தில் பெருகி வருவதை எண்ணும்போது எதிர்காலத்தில் பெண்களைப் பற்றிய அச்சமேற்படுகிறது. வரதட்சிணையால் வரும் சீர்குலைவு வெளிப்படுகிறது.

பெண்களின் வாழ்க்கையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம், சாதனை இவைகளை எண்ணும்போது பாரதியின் கனவு பலித்தது என்று எண்ணக் கூடிய வகையில் கட்டுரைகள் அமைந்துள்ளன. 21ஆம் நூற்றாண்டில் காலடி வைக்கப்போகும் நாம் அழகுக் குறிப்புகள், சமையல், கோலம் போன்றவைகளைப் பற்றிய கட்டுரைகளைக் காணும்போது பெண்களின் சிலரது தெளிவற்ற போக்கு வெளிப்படுகின்றது. இன்றைய சமுதாயத்தில் பெண்களின் வாழ்க்கையில் ஒளியேற்றக் கூடிய விழிப்புணர்வுக் கட்டுரைகள் மேலும் பெருகி மகளிர் நிலையை உயர்த்த வேண்டும் என்பது கட்டுரையாளரின் விழைவாம்.

துணுக்குகள் 'பெட்டிச் செய்திகள்' போன்ற பகுதிகளில் பெண்களை விளையாட்டுப் பொருளாக, காட்சிப் பொருளாக, நகைச்சுவைக்குப் பயன்படுத்தும் பொருளாகக் காட்டப்படுவதைத் தவிர்த்தல் நன்று. பெண்கள் அனைத்துத்துறைகளிலும் முன்னேறிச் சமுதாயத்தில் சரிநிகர் சமானமாக விளங்குவதை விமர்சனப் பகுதியினால் அறிய முடிகிறது. 'வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டி வைப்போமென்ற விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார்'[17] என்ற பாரதியின் வாக்குப் பலித்து விட்டதை, 'செய்திகள் சில' 'அன்புள்ள ஆசிரியர்' 'பேட்டி' 'சமையல்' ராசிபலன்' 'கேள்வி - பதில்' 'ஆன்மிகம்' இன்னும் பல்துறைப் பகுதி களில பெண்கள் எழுதும் கட்டுரைகள் புலப்படுத்துகின்றன. படைப்புக் களில், பெரும்பான்மை பெண்கள் எழுதுகிறார்கள். தங்கள் எண்ணங் களை வெளிப்படுத்துகிறார்கள். படித்துவிட்டுப் புதுமைகளைச் செய்ய விரும்புகிறார்கள் என்று எண்ணும்போது 21ஆம் நூற்றாண்டில் ஆண்களுக்குப் பெண்கள் சரிநிகர் சமம் என்ற நிலையை அடைதல் உறுதியாகும்.

## இலவச இணைப்புகள் காட்டும் மகளிர் நிலை

நிறுவனம் நினைக்கும் போதெல்லாம் வெளியிடப்படும் இலவச இணைப்புகளில் காலத்தேவை புலப்படுகிறது. நம்நாட்டு 'டீன்ஏஜ் பருவத்தில் உள்ளவர்களுக்கு' என்ற இலவச இணைப்பில் ஆண், பெண் பருவச் சிக்கல், காரணம், தெளிவு என்ற முறையில் பாலியல் அறிவு ஊட்டப்படும் வகையில் 32 பக்கங்கள் 2/94 இதழுடன் வழங்கியுள்ளது. நம் நாட்டுக் கன்னிப் பெண்கள் பாலியல் பற்றிய ஒரு கண்ணோட்டம் அறியாதவர்களாய் வாழ்கிறார்கள் என்பதை உணர்த்துகிறது. பெண்கள் தவறிழைக்காதிருக்க எச்சரிக்கும் வகை யில் இப்பகுதி உதவும் எனலாம்.

## ராஜம் இதழ்

> இதழின் முதற் பக்கம் தொடங்கி இறுதிப்பக்கம் வரை ஏதேனும் ஒருவகையில் ஏதேனும் ஒரு தரப்பு வாசகர்களையோ, மக்க ளையோ நிறைவு செய்கின்ற முறையில் இதழ்கள் அமைப்பது, இதழியல் உத்திகளுள் ஒன்று[18]

என்று ச. உஷா அவர்கள் கூறுகிறார். இதழியல் உத்திகள் அனைத் தும் ராஜம் இதழில் சீரான முறையில் பின்பற்றப்பட்டுள்ளன.

மேல் அட்டை உட்படப் பின் அட்டை வரை ஒவ்வொரு தாளில் அச்சிடப்பட்ட எழுத்துக்களையும் படைப்புகளும் ஆசிரியர் கவனத் துடன் அமைத்துள்ள விதம் பாராட்டிற்குரியது. 'பொருளடக்கம்' (contents) என்று தமிழிலும் ஆங்கிலத்திலும் மாற்றி வெளியிடுவதும் வாசகங்கள், தலையங்கம் இவை இடமாறுதலும் இவ்விதழில் மாறிமாறி அமைந்துள்ளன.

தலைப்பு, மனிதனின் தலையைப் போன்று மிக முக்கியமான தொன்றாகும். இவ்விதழில் தலைப்பு, முன்னுரை, பக்க அமைப்பு, ஆகியவற்றை நிழற்படங்கள், கையாளும் உத்திகள் பெரிதும் பாராட் டிற்குரியன. ஆசிரியர் எழுதும் பகுதிகளில் மொழி ஆளுமை சிறந் துள்ளது.

இதழியல் உத்திகளில் நடை, மொழி சீராக அமைவதால் வெளியீட்டுத் திறன் சீராகவுள்ளது. இதழை நடத்துபவருக்கு வேண் டிய தகுதிகளாக மா.சு சம்பந்தன் அவர்கள் கூறியுள்ள அனைத்துத் தகுதிகளும்[13] இவ்வாசிரியருக்குப் பொருந்தியுள்ளன என்பது மறுத்தற்கியலாது.

**மற்ற மாதர் இதழ்களிலிருந்து மாறுபட்ட நிலை**

'ராஜம்' மற்ற மகளிர் இதழ்களைப் போல விளங்கினாலும், இல்லறத்தைவிடச் ('சமையல், 'கோலம்') சாதனைகளுக்கும், பொருளா தார மேம்பாட்டிற்கும் ஆக்கந்தரும் கட்டுரைகள் மிகுந்துள்ளன.

ஆங்கில வழிக்கல்வி படிக்கும் சிறுவர்கள் நிறைந்த நம் நாட் டில் சொற்பெருக்கம் 'கட்டுரை' என்று 4 பக்கங்களுக்குச் குறையா மல் சிறுவர்களுக்கு என ஒதுக்கி ஆங்கில மொழியில் வெளியிடுவது மாறுபட்ட நிலையாகும்.

ஆண்களின் சாதனைகளைக் கூட விளக்கமாகவும், அனைத்துத் துறையினரையும் ஈர்க்கும் வண்ணம் மனித நேயம் வளர்க்கும் படைப்பு களை வெளியிடுவதைத் தம் கொள்கையாகக் கொண்டுள்ளது சிறப்பானதொன்றாகும்.

**தவிர்க்க முடிந்தவை**

தமிழ் மொழியில் 'ர, ல' மொழிக்கு முதலில் வராது, என்பது அனைவரும் அறிந்ததொன்றாகும். 'ராஜம்' என்பதை 'இராஜம்' என்று

எழுதத் தமிழறிந்த புலமைமிக்க இவ்விதழின் இணையாசிரியர் சற்றுச் சிந்திப்பாராக.

ஐ. ஏ. எஸ் போன்ற பெரும் படிப்பு படித்தவர்களின் அறிவு, ஆற்றல் வீட்டிற்கும் நாட்டிற்கும் பயன்பட வேண்டும் 7/93 (ப. 28). இதழில் வெளிவந்த சிறுகதையில் 'கல்யாணம் ஆனதுமே வேலையை ரிஸைன்பண்ணிட்டா' என்று (இளங்கலை படிப்பு படித்தவர்களைப் போல) எழுதும் நிலையிலிருந்து அரசாங்கத்திற்கும், சமூகத்திற்கும் பயனுள்ளவைகளைச் செய்துகொண்டே வீட்டை நிர்வகித்தாள் என்ற முறையில் படைப்புகள் அமைய வேண்டும். இதழில் பக்க எண்கள் சில இடங்களில் விடுபட்டுள்ளன, 3/94 இதழில் தலையங்கம் விடுபட்டு வந்துள்ளது. "தெரிந்து கொள்ள" என்ற பகுதியில் "என் மகளின் திருமணம் போல" 8/98 (ப. 84) என்ற தலைப்பினைப் பயன்படுத்தாது, என் மகனின் திருமணம் போல என்று தலைப்பிட இனிமேலேனும், திருமணச் சடங்கினை மணமகன் வீட்டார் செய்ய முயலும் வகையில் அமைதல் நன்றாம்.

### புதுமை

துணுக்குகளைக் கூடப் பெட்டிச் செய்திகளைப் போல வெளியிடுதலும், மக்கள் தொகைப் பெருக்கம் மிகுந்த நம் நாட்டில் மணமாகாத பெண்கள் செய்ய வேண்டிய முக்கியக் கடமையை (தத்தெடுத்துச் கொள்ளுதல்) 8/98 (பக்9-12) வலியுறுத்தலும், வினாப்பட்டியலை 1/95 (பக். 4-6) வெளியிட்டுச் 'சுய அலசல்' செய்துகொள்ளும் முறையிலும் 'மாறுபட்ட மனிதர்களை' 8/98 (பக். 16-18) இனங்காட்டுதலும் போன்ற சில புதுமைகளும் 'ராஜம்' இதழில் மலிந்துள்ளன.

### முடிவுரை

குங்குமம், மங்கை, மங்கையர் மலர், பெண்மணி, அவள் விகடன் போன்ற தமிழ் மகளிர் இதழ்களும், 'WOMEN'S ERA' 'FEMINA' போன்ற ஆங்கில மகளிர் இதழ்களும் பெண்களைப் பற்றிச் சிந்திக்கின்ற சிறப்பான இதழ்களாகும். இவ்விதழ்களைப் போலவே 'ராஜம்' இதழும் குறிப்பிடத்தக்க மகளிர் இதழ்களில் ஒன்று என்பதனை

மறுப்பதற்கில்லை. 'ராஜம்' மாத இதழில், இதழின் கட்டமைப்பு, சீரான நிலையில் அமைந்துள்ளது. இதழியல் உத்திகள் படைப்பு களில் செம்மையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. இதழியல் கூறுகள் இதழானர் கூறுகின்ற வகையில் அமைந்துள்ளன. அதாவது படைப்பு கள், தொடர் சுவைப் பகுதிகள், விளம்பரங்கள், மதிப்பீடு ஆகியவை இதழில் சரியான அளவில் அமைக்கப்பட்டுள்ளன.

அட்டைப்படம் முதல் அனைத்து நிலையிலும் பெண்ணினத்தின் மேன்மையே பேசப்படுகிறது. ராஜம் இதழ் நம் நாட்டில், மேனாட்டில் வாழும் பெண்களைக் குறித்துச் சிந்திக்கின்ற சீரிய இதழாகும். ஆண் களுக்கு இணையானவர்கள் பெண்கள் என்பதனைக் குடும்ப நிலை, நாட்டு நிலை, பல்துறை நிலை என்ற பல்வேறு நிலைகளில் அவர்களது சாதனைகளைக் காட்டிப் பெண்களின் நிலையைச் சுட்டிச் செல்கிறது.

தத்தெடுத்துக் கொள்ளும் உரிமை, மணமுறிவுக்குப் பின் மணம் என்ற முறைகள் ஆண்களுக்கே என்ற தனியுரிமையை உடைத்து இரு பாலாருக்கும் பொதுவென்று பறைசாற்றுகின்ற சாதனைகளை வெளி யிடும் இதழ் ராஜம் எனலாம். ஒருவனுக்கு ஒருத்தி என்ற தமிழ்ப் பண்பாடு, புதுமைகள் நேரிய முறையில் சமுதாயத்திற்கு ஆரோக்கியச் சூழல் உருவாகும் வகையில் வற்புறுத்தப்படுகின்றன. இதனால் ஆண், பெண் சமம் என்ற கருத்தாக்கம் சமுதாயத்தில் உருவாக இதழ் முயற்சி செய்கிறதெனலாம்.

பெண்களின் தனி மனித உறவு, குடும்ப உறவு, சமுதாய உறவு, பன்பாட்டு உறவு இவைகளைச் சீராக அமைக்கப் படைப்புகள்வழி பாடுபடுகிறது. இளம் எழுத்தாளர், கவிஞர் இவர்களை ஊக்குவித்து எதிர்காலச் சமுதாயம் ஒளியுடன் விளங்க எண்ணுகிறது. கல்வித்துறை சார்ந்த செய்திகள் பெருகின் நன்றாம். அரசியல், சமுதாயம், விளை யாட்டு என்ற படைப்புகள் எப்பொருள் குறித்தனவாக இருப்பினும் ஏதேனும் ஒரு வகையில் மகளிர் நிலையைச் சார்ந்தே இவ்விதழ் இயங்குகிறது. நாடு, மொழி, இனம் இவைகளின்மீது இதழாசிரியர் கொண்ட பற்று அவரது படைப்புகளில் வெளிப்படுகிறது.

தமிழறிவு, புலமை, பொது அறிவு, மனித மதிப்புகளை மதிக்கும் மாண்பு - இவை இவ்விதழின் தனிச் சிறப்பெனலாம்.

அரசியல் சார்பற்ற தன்மை, திரைத்துறைச் செய்திகள் பெருக்க மின்மை இவற்றின் காரணமாக ராஜம் இதழ் தனித்து நிற்பதைக் காண முடிகிறது. பெண்களின் முன்னேற்றம், சமுதாய நலன் இவற்றையே 'ராஜம்' இதழ் தம்மிரு விழிகளாகக் கொண்டுள்ளதைப் படைப்புகள் நவில்கின்றன. எனவே 'ராஜம்' இதழ் சமுதாயப் பிணிகளை நீக்கும் மாமருந்தாம் என்பது வெள்ளிடைமலை.

## குறிப்புகள்


1. டாக்டர் கு. முத்துராசன், இதழியல் ஓர் அறிமுகம், ப. 29
2. மா. சு. சம்பந்தன், தமிழ் இதழியல் வரலாறு, ப. 161
3. பி. எழிலரசி, மகளிர் இதழ்கள் - ஸ்திரீ தர்மம், எம்.ஃபில். ஆய்வேடு 1991 ப. 6
4. மேலது, ப. 9
5. டாக்டர் அ. சிவக்கண்ணன், தமிழ் இதழ்களில் சமுதாய உணர்வு, ப. 10
6. மேலது, ப. 15
7. டாக்டர் நா. ஏ. ஞானமூர்த்தி, இலக்கியத் திறனாய்வியல், ப. 171
8. மேலது, ப. 420.
9. டாக்டர் சி. பாலசுப்பிரமணியன், தமிழ் இலக்கிய வரலாறு, ப. 301
10. மா. ரா. இளங்கோவன், இதழியல் நோக்கு, ப. 53
11. மா. பா. குருசாமி, இதழியல் கலை, ப. 283
12. மேலது, ப. 307
13. டாக்டர் சிவ. சசிரேகா, தமிழ் இதழ்கள் காட்டும் மகளிர் நிலை, ப. 92
14. மேலது, பக். 117 - 118
15. டாக்டர் மா. பா. குருசாமி, இதழியல் கலை, ப. 11
16. சி. பா. ஆதித்தனார், இதழாளர் கையேடு, ப. 163
17. பாரதியார், பாரதியார் கவிதைகள், 'பெண்கள் விடுதலைக் கும்மி' (தலைப்பு), ப. 187
18. ச. உஷா, தினசரி நாளிதழும் இதழியல் உத்திகளும் எம்.ஃபில் ஆய்வேடு, ப. 132
19. மா. சு. சம்பந்தன், தமிழ் இதழியல் வரலாறு, ப. 303

# பெண்மணி

## ச. சிவகாமி

மாற்றம்... உலக நியதிகளில் நிரந்தரமான ஒன்று. ஆரம்ப மனித இனத்தின் வரலாற்றை ஆராய்ந்து பார்த்தோமானால் பெண் தலைவியாய் இருந்தாள்... ஆண் அவளது தலைமையை ஏற்றுக் கொள்பவனாய் இருந்தான்... அப்போதெல்லாம் முறை யான குடும்ப அமைப்பு இல்லை... மனிதர்கள் குழுக்களாகப் பிரிந்து வாழ்ந்தனர்... பின் காலம் மாறிற்று... குடும்ப அமைப்பு தோன்றிற்று... இந்தப் புதிய நாகரிக அமைப்புக்குப் பின்னால் ஆண்களின் பின்னணி இருப்பது புரியாமல் பெண் சுதந்திர மிழந்து சிதைந்துபோனாள். அதுவரை தன்னைச் சுற்றியுள்ள மனிதர்களுக்கு உணவு தேடி, காடு சென்று வேட்டையாடி வந்தவள்... நான்கு சுவர்களுக்குள்ளே, சிறையென்று புரியாம லேயே சிறைவைக்கப் பட்டாள்......

அன்று செலுத்தப்பட்ட ஆணாதிக்கம் இன்று சற்றே பின்ன டைவு அடைந்திருப்பதை எல்லோருமே கவனித்திருக்கலாம்... இந்த மாற்றமும் நிகழ்வுகளும் நாளைய அத்தியாயத்துக்கு அத்தியாவசியமானவை... இரை தேட அன்று சென்றவளுடன் இன்று வேலைக்குப் போகும் பெண்களை ஒப்பிடலாம்... பெண் சக்தி... பெண் தணல்...! தணலைப் பொத்தி வைக்க முடியுமா? ... வைத்துவிட்டதாக ஆண்வர்க்கம் நினைத்தது... அதற்காக அவர்கள் பிரயோகித்த ஆயுதங்கள் எத்தனை... எத்தனை...?

மதம், சடங்கு, சம்பிரதாயம் என்று எல்லா ரூபங்களிலும் பெண்ணைக் கட்டிப்போடத் துணிந்தது... ஆனால் காற்றைக் கைகளாலா சிறைப்படுத்த முடியும்.. பெண்ணினம் விழித்தது நிமிர்ந்தது... வீறுகொண்டது...

> இன்று பெண்கள் பாதி கிணறு தாண்டிய நிலையில்... 'சுயம்' என்ற நம்பிக்கைச் சூழலில் துணிவுடன் உலா வருகிறார்கள்... ஆயினும் தாண்டியது பாதிதான்... இன்னமும் முழுமையான சுதந்திரத்தை அடையவில்லை என்ற எச்சரிக்கையை உள் வைத்து, பாரதி கனாக் கண்ட யுகம் படைக்கத் தோள் கொடுப்போம்... தடுமண்டுவிடாமல் துணிந்து நிற்போம்... எதன் மீதும் துவேஷம் கொள்ளாமல் சுதந்திரத்தின் எல்லையைத் தொடுவோம்...

என்று பெண்ணின வரலாற்றைச் சுருக்கமாகச் சுட்டிச் செல்லும் 'பெண் மணி' (பிப்.98, ப.3) மிதவாதப் பெண்ணியத் திங்களிதழாகும். பெண்களுக்கென வெளிவரும் இதழ்களிடையே தனித்த சிறப்புடையதாக இலங்குகிறது. பெண்ணியப் பார்வையில் இதன் இயல்பு இக்கட்டுரையுள் நோக்கப்படுகிறது.

## பெண்மணி – பொதுநிலை

1996 சனவரி முதல் வெளிவரும் - அண்மைக்காலத்தே தோன்றிய பெண்ணியத் திங்களிதழாகும் இது. பெண்மணி & Home என்ற தலைப்பில்,

> 'பெண்கள் இதழ்கள் என்னும் மலர்த் தோட்டத்தில் ஓரமாக இந்தப் புதிய மலரும் மணம் பரப்பட்டுமே என்று நீங்கள் வரவேற்பீர்கள் என்று எதிர்பார்க்கிறோம்'

என்ற முன்னுரையுடன் ஆசிரியர் பெயரின்றி வெளிவந்துள்ளது. ஆசிரியர் குழுவின் 13 பெண்மணிகளும் , நாடு தழுவிய நிருபர்களாக 30 பெண் மணிகளும் இதழ் உருவாக்கத்திற்குத் துணை நின்றுள்ளனர். அடுத்து, இதழ்களின் ஆசிரியராக எம்.ஜி. வல்லபன் அமைந்துள்ளார். ஆயின் இதன் மூன்றரையாண்டுக் காலக் குறுகிய வரலாற்றில் டிச.96 முதல் அனுராதா ரமணன், ஆக.97 முதல் ரமணி சந்திரன் மீண்டும் டிச.97 முதல் நா. மனோகரன் என நால்வரை ஆசிரியராகக் காணமுடிகிறது. தொடக்க முதல் இதன் நிர்வாக ஆசிரியர் பொறுப்பில் நா. மனோகரன் இருந்துள்ளார். பொறுப்பாசிரியர், துணையாசிரியர் என அவ்வப் போது சிலர் பணியாற்றியுள்ளனர்.

கற்பனை கடந்த விற்பனைச் சாதனையைப் படைத்து இரண்டாவது இதழை இரண்டாவது முறையாக அச்சிட்டு வெளியிடும்

தேவை ஏற்பட்டதாக மூன்றாவது இதழின் தலையங்கத்தில் (மார்ச்சு 96) ஆசிரியர் குறித்திருப்பது இதழ் பெற்ற வரவேற்பைச் சுட்டுகிறது. அவ்வப்பொழுது தீபாவளிச் சிறப்பிதழ் (நவ.96, 97, 98), இசைச் சிறப்பிதழ் (டிச. 96), சிறுகதைச் சிறப்பிதழ் (சன.97). சித்திரைச் சிறப்பிதழ் (ஏப்.98), பொங்கல் சிறப்பிதழ் (சன.99) என அவ்வவ் மாத இதழ்கள் சிறப்பிதழ்களாக மலர்ந்துள்ளன.

ஏதேனும் ஒரு துறையில் சாதனை படைத்தவர், சிறப்பு விருந்தினர் என அட்டைப்படப் பெண்மணி அமைகிறார். தற்பொழுது அட்டைப்படத்தை அலங்கரிக்க விரும்பும் எப்பெண்ணும் இடம் பெறல் பொருட்டு ஒரு திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. பெண்ணியம் தொடர்பான மற்றும் பொதுவான சில கேள்விகளுக்குத் திறமை யாகப் பதிலளிக்கும் ஒருவர் இதற்குத் தேர்வு செய்யப்படுகிறார். பெண் குழுவினரால் தேர்ந்தெடுக்கப்படும் இத்திட்டத்தில் வயது, கல்வி போன்ற வரையறைகள் எதுவுமில்லை என்பது குறிப்பிடத் தகுந்தது. பொழுதுபோக்கு இதழ்களில் அமைவது போன்ற கவர்ச்சி கரமான பரிசுப் போட்டிகளும் உண்டு. அவை 'யார் அந்தப் பிரபல பெண்மணி?' - ஜி.எஸ்.எஸ். புதிர் பக்கம், என்பது போன்று பெண்கள் தொடர்பாகவும் அமைவதுண்டு.

முன்னட்டையில் அவ்விதழின் முதன்மைச் சிறப்புப் பகுதிகள் சுட்டப்படுகின்றன. இடம்பெறும் ஒவ்வொரு பகுதிபற்றியும் முன் னோட்டமாக, அதன் இயல்பை, நோக்கைத் தெளிவுறுத்தும் முற் குறிப்பு அமைகிறது.

கட்டுரை, தொடர், நேர்காணல், செய்தித் தொகுப்பு, வினா - விடை, விளக்கம், துணுக்குகள், பொழுதுபோக்குக் கூறுகள், தலையங்கப் பகுதி எனப் பொதுவாக அமைந்துள்ளது. பெண்ணியம் தொடர்பான ஏதேனும் ஒரு கூறினை முன்னிறுத்திக் கலந்துரை யாடல் அல்லது கருத்துத்தொகுப்பு தரல் குறிப்பாகச் சுட்டப்பட வேண்டியதாகும். பொதுவாகப் பெண் முன்னேற்றம், வழிகாட்டல் என்பன அடிப்படைப் பண்புகளாகின்றன. சாமான்யர்க்கும் சிறப்பிடம் தரல் சுட்டத்தக்கது.

## பெண்மணி – நோக்கம்

> ஆங்கிலப் பெண்ணிதழ்கள் படித்துத்தான் பெறவேண்டும் என்று நினைக்கிற முற்போக்குக் கருத்துக்கள், நம் எளிய தமிழ் மக்களுக்கும் போய்ச் சேரவேண்டும் என்ற எண்ணத்தில் எழுந்த இந்தப் 'பெண்மணி' இதழின் வெற்றி, தமிழ்ப் பெண்மணிகளின் தேவையையும் தெளிவையும் வெளிப்படுத்துகின்றன...
>
> பெண்மணிகளின் ஒவ்வொரு தேவையையும் உணர்ந்து, அவற்றைச் செயல்படுத்தவே நாங்கள் விரும்புகிறோம். தொடர்ந்து 'பெண்மணி' மாதர் இதழ் படித்து வந்தாலே, பயனுள்ள பல தகவல்களைத் தெரிந்து கொண்டவர்களாக, வாழ்க்கையில் துணிவும் உற்சாகமும் பெற்றவர்களாக நீங்கள் மாறிவிட முடியும் என்ற நம்பிக்கையோடு நல்லெண்ணத்தோடு இதழின் பகுதிகளை அமைத்து வருகிறோம் (மார்ச்சு 96)

என்று தன் இலக்கை, நோக்கைத் தெளிவாகச் சுட்டியுள்ளனர்.

> புதுமைப் பெண்ணின் போர்வாளும், கவசமும்தான் பெண்மணி! இது பொழுதுபோக்க உதவும் சாதனமல்ல! தெரிந்ததைப் பகிர்ந்து கொள்ள, தெரியாததைத் தெரிந்து கொள்ள, உரிமைகளை உரக்கக் கேட்க, அநீதிகளைத் தட்டிக் கேட்க உங்களின் தோழியாய், நல்லாசிரியராய், சேவகியாகச் செயல்படும் உற்ற துணைவி 'பெண்மணி'.
>
> எதற்கும் மறுப்பு சொல்லாத - எதிர்த்துப் பேசாத - செலவு செய்யாமல் சிக்கனமாக - அடக்க ஒடுக்கமாக - அதிர்ந்து பேசாத - அறிவு ஜீவியாக வெளிக்காட்டிக் கொள்ளாத பெண்ணாக (Receptive, Hoarding என்று) இருப்பதே பெண்ணுக்கு அழகு என்பதை மறந்து, இன்றைய போட்டி மிகுந்த உலகில் புதுமையாய்ச் சிந்தித்து - சமுதாயப் பொறுப்புகளை உணர்ந்து - தனித்துவம் காட்டி - (Marketing, Exploitative ஆக) தன்னையும் மாற்றிக்கொண்டு, பிறரையும் மாற்றி வாழக் கற்றுக் கொடுப்பதும் கற்றுக் கொள்வதுமே நமது நோக்கம்.

எனும் சிறப்புத் தலையங்கமும் (ஜி.ரா., ஜூலை 98) இதனை வலியுறுத்துகிறது.

## சிறப்புக் கூறுகள்

பெண்மணி இதழுக்குப் பெருமை சேர்ப்பனவாக அமைவன இங்கு எடுத்துரைக்கப்படுகின்றன.

1. இவ்விதழின் தலையங்கம் பெரும்பாலும் பெண்களின் சிந்தனையைத் தூண்டுவதாக, எழுச்சியூட்டுவதாக, வழிகாட்டுதலாக நிற்றல் பாராட்டத்தக்கது. சான்றாக, 'அரசியல் அழுக்கானது. அரசியல்வாதிகள் அசிங்கமானவர்கள்' என்ற எண்ணம் பெண்மணி களிடையே பெருகி நிற்கிறது - அதிலும் படித்த பெண்மணிகளிடம். இந்த எண்ணத்தை மாற்ற வேண்டும் என்று பெண்மணிகளை அரசி யலுக்கு இழுக்கப் பல சட்டத் திருத்தங்கள் செய்யப்படுகின்றன. மூன்றில் ஒரு பங்கு பெண் வேட்பாளர்களே இடம்பெற வேண்டுமென்ற அளவுக்குப் பெண்களை நோக்கி அரசியல் இறங்கி வந்திருக்கிறது.

பெண்கள் அதிகமாக இருந்தால் பொய்மை குறைவாக இருக் கும் என்பதே இந்தக் கருத்து மாற்றத்திற்கு அடிப்படையாக இருக் கலாம். அல்லது பெண்மணிகளை முன்னிறுத்திப் பெண்மணிகளின் வாக்குகளை எளிதில் பெற்றுவிடலாம் என்ற எதிர்பார்ப்பாகக்கூட இருக்கலாம். கிராமப் பஞ்சாயத்து, நகரசபை என்று கடை மட்டத் திலிருந்தே பெண்மணிகள் ஆட்சிப் பொறுப்பை ஏற்கத் துணிந்தால், ஓர் அரசியல் சுத்திகரிப்புக்கு வழி உண்டாகும் என்பது உறுதி. அடிப்படை மாற்றங்கள் என்ன செய்யலாம்? அவசியமான எதிர்பார்ப் புகள் என்ன? என்பதெல்லாம் ஆண்களைவிடப் பெண்களுக்கு அத்துப்படி. எனவே ஆட்சியின் அடித்தளத்தில் பெண் அரசியல்வாதிகள் இருப்பது அவசியம். அப்படி ஆட்சி நுணுக்கங்களில் தெளிவுபடத் தேறும் பெண்மணிகள், பின்னால் தலைமைப் பீடங்களைத் தாங்கும் தகுதி பெறுவது எளிது மட்டுமல்ல - எதிர்பார்க்கப்படுவதும் கூட.

ஆனால், அரசியலை அழுக்கானது என்று படித்த பெண்கள் ஒதுக்கி விடுவதாலோ, ஒதுங்கி விடுவதாலோ அரசியலை அவர்கள் தூய்மைப்படுத்திவிட முடியாது. அது மேலும் ஒழுங்கற்றுதான் போகும். பெண்மணிகளுக்கென அரசு ஒதுக்கியுள்ள இடங்கள் பூர்த்தியாகாமல் போய்விடாது. மாறாகத் தகுதி சிறிதுமற்ற சில பொய்மணிகள் மகுடம் சூட்டிக் கொள்ளத்தான் அது வழி வகுக்கும்.

அரசியலைத் தூய்மைப்படுத்த வேண்டும் என்ற பெருநோக்கு உங்களுக்கு அவசியமில்லாததாகக் கருதினாலும், அக்கம்பக்கம் இருப்பவர்களுக்கு ஆவன செய்ய ஓர் அங்கீகாரமாகக் கருதி அதில்

முழுமனதோடு ஈடுபடுவது தவறல்லவே. கட்சி, அரசியல் என்ற பெயரில் விலைபோய் விடாமல், நாட்டுக்கு, நம்மைச் சுற்றியுள்ள நான்குபேர்களுக்கு நாம் பயன்படும் வண்ணம் அரசியல் பிரவேசம் செய்வது பொதுநலத்தொண்டின் மற்றொரு முகமாகும் என்பதை நமது பெண்மணிகள் உணரவேண்டும். உணர்ந்து உயரிய சேவைகள் செய்ய உளமார முன்வர வேண்டும் - தவறில்லை (அக்.96) என்பதைக் காட்டலாம்.

நடப்புச் செய்திகளுக்குச் சிறப்பளித்து (ஆக.98), காரண காரியங்களுடன் ஆணித்தரமாகத் தம் கருத்தை வலியுறுத்துவதாக இவை அமைகின்றன.

2. பெண் முன்னேற்றத்திற்கு, தற்சிந்தனையுடன் சுதந்திரமாய்ச் செயல்படற்கு அடிப்படைத் தேவையான கல்வி, தொழில் ஆகியவற்றிற்குத் தனித்த சிறப்பிடம் அளித்துள்ளது. என்ன என்ன படிப்புகள், மேற்படிப்புகள், எங்கே எங்கே படிக்கலாம், அவற்றால் கிடைக்கக் கூடிய வேலை வாய்ப்புகள், உதவித்தொகை, பயிற்சிகள் எனத் தேவையான விளக்கங்கள் மாணவ மையம் பகுதியில் வழங்கப்பட்டுள்ளது. வாசகரின் இவை தொடர்பான வினாக்களுக்கு விடையளிப்பதாக இப்பகுதியமைந்துள்ளது. `E for English', 'கம்ப்யூட்டர் கற்போமா' எனும் பகுதிகளும் இதனுடன் இணைத்து எண்ணத்தக்கன. இக் கணினிப் பயிற்சியினால் உறுதியாகப் பலர் பயன் அடைந்திருப்பர். மிகத் தெளிவாக, எளிமையானதாக அப்பகுதி அமைந்துள்ளது பாராட்டத்தக்கது. கல்வியில் சாதனை படைத்தோரை அறிமுகப்படுத்திச் (ஏப்.98) சிறப்புச் செய்கிறது.

பொருளாதாரச் சுதந்திரம் பெண் விடுதலையை விரைவு படுத்துவது என்ற நோக்கில் 'பெண்மணி' தன் வாசகரைச் சுய தொழில் செய்து உயர வழிகாட்டுகிறது. பெண்கள் தொழில் புரிந்திட அரசு வழங்கும் சலுகைகள், தான் எண்ணியிருக்கும் தொழிலைச் செய்து வெற்றி பெறுதற்கான அடிப்படை வழிமுறைகள், அவற்றிற்கு எங்கெங்கே எப்படிக் கடனுதவி பெறலாம்; வளர்ச்சிக்கான ஆலோசனைகளைப் பெறலாம் என்பன குறித்தும் தொடர்ந்து தகவல்கள் கட்டுரை வடிவில் தரப்பட்டுள்ளன (ஏப்.96, சன.98). இவற்றுடன் அவ்வப்போது சுயதொழில் செய்து வெற்றி கண்ட பெண்களின் நேர்காணலும்

(சூன். 96, ஆக.96) இடம்பெற்று விரும்புவோருக்கு நல்லூக்கம் நல்குகிறது.

3. பெண்களுக்கு மேலும் தன்னம்பிக்கையைத் தூண்டும் விதத்திலும், தற்சிந்தனையுடன் வாழ்க்கையில் முன்னேறவேண்டும் என்ற உணர்வினை ஆழ வேரூன்றும் பாங்கிலும் சாதனைப் பெண் மணிகள் பற்றிய கட்டுரைகளும், நேர்காணலும் அமைகின்றன. பொருளாதாரத்தில் உயர்மட்டத்தில் உள்ள பெண்கள் மட்டுமன்றி, மிகச் சாதாரண நிலையில் உள்ள பெண்களுக்கும் மிகுந்த முக்கியத் துவம் அளித்திருப்பது நோக்கத்தக்கது. சான்றாகத் தமிழகத்தில் முதல் ஆட்டோ ஓட்டிய பெண்மணி வசந்தி இராமமூர்த்தி (நவ.97), கண் தெரியாத கணவனானாலும் காலமெல்லாம் கண் கலங்காமல் அவரைக் காப்பாற்றுவேன் என்று குடும்பத்தின் முழுப் பொறுப்புச் சுமையுடன் பாரவண்டி ஓட்டும் சந்திரா (ஆக.97), வாதநோயால் ஊனமுற்ற நிலையிலும் மன உறுதியோடு மருத்துவப் படிப்பையும், பயிற்சியையும் முடித்த பின்னும் மருத்துவராக அங்கீகாரம் கிடைக் காத நிலையில் போராடிப்பெற்று இன்று வெற்றிகரமான மருத்துவராக விளங்கும் செல்வி கணேசன் (அக்.96), உடல் ஊனமுற்றோருக்கான தனிஇதழ் **Ability** நடத்தும் - கேட்கும் திறன் இழந்த ஜெயஸ்ரீ இரவீந்திரன் (செப்.96) எனப் பலர் அமைகின்றனர்.

இங்கு, அனுராதா ரமணனின் 'அதனால் என்ன பெண்ணே' என்ற கட்டுரைத் தொடரும் சுட்டப்பட வேண்டியதாகும். வாழ்க்கையில் தன்னிரக்கம் கொண்டு வெறுப்புடன் கசப்பான வாழ்க்கை நடத்தும் பெண்களுக்கு வழிகாட்டியாய், ஒளிவிளக்காய்த் திகழும் பெண்களைப் பற்றிய அறிமுகமாக அது அமைகிறது. வாழ்க்கையின் கொடூரமான கோரதாண்டவத்தில் மூச்சுத்திணறி அழிந்திடாது வீறு கொண்டெழுந்து எதிர் நீச்சலிட்டு இன்று தலைநிமிர்ந்து வெற்றி வலம் வரும் பெண் மணிகளை இது காட்டுகிறது. மனந்தளர்ந்து நிற்கும் நங்கையர்க்கு நம்பிக்கையளிக்கும் நன்மருந்தாக இப்பகுதி அமைந்துள்ளது.

4. பெண்களை மையமிட்ட நிகழ்ச்சிகள், செய்திகள், சிக்கல்கள் முதலானவற்றைப் பற்றிய கலந்துரையாடலும், கருத்துத் தொகுப் பும், கட்டுரையும் குறிப்பிடத்தக்க அளவு இடம்பெற்றுள்ளன. சுதந்

திரமாகப் பழகலாமா? (ஏப்.98), வேலைக்குப் போகும் பெண்களின் இடர்ப்பாடுகள் (சன.96), அழகிப் போட்டி (டிச.96), குடிசையில் குடியிருக்கும் பிரச்சினைகள் (சன.97), ஈவ்டீஸீங் டேக்இட் ஈஸியா குமார்? (டிச.96) பச்சைப்புடவையும் பைத்தியக்காரத்தனமும் (டிச.97) எனப் பலவற்றைச் சான்றாக்கலாம். இன்றைய இளம் தலைமுறைப் பெண்கள் தற்சிந்தனையுடனும் தற்சார்புடனும் வாழத் தொடங்கி யுள்ளனர் என்ற உண்மையை இவை உணர்த்துகின்றன. சான்றாக ஒரு பகுதியைச் சுட்டலாம். குறைந்த சம்பளம் - நிரந்தரமான வேலை; நிறைந்த சம்பளம் - நிரந்தரமில்லாத வேலை; உழைப்புக்கேற்ற ஊதியம் (கமிஷன் போல). இந்த மூன்றில் எந்த மாதிரி வேலை யைத் தேர்வு செய்வீர்கள்? ஏன்? என்ற வினாவிற்குக் கல்லூரி மாணவி குணவதி அளித்துள்ள பதில், 'இந்த மூன்றுமே ஏதாவது ஒரு வகை யில் நன்மை தராத ஒன்றாகவே இருக்கிறது. குறைந்த சம்பளம், நிரந்தர வேலையில் நாம் மற்றவர்களை விடத் தாழ்ந்தவர்கள் என்ற தாழ்வு மனப்பான்மை இருக்கும். நிறைந்த சம்பளம் நிரந்தரம் இல் லாத வேலையில் எப்போது வேலை போகுமோ என்ற பயம் மனதில் இருந்து கொண்டே இருக்கும். திறமைக்கு ஏற்ற ஊதியம் என்பது இங்கே நிர்ணயம் செய்ய முடியாத விஷயம். இது இடத்திற்கு இடம் மாறுபடும். எனவே இப்படி வேலை தேடி வேதனைப்படாமல் சுயமாக பிசினஸ் செய்து வாழவே நான் விரும்புகிறேன். கௌரவமான நல்ல பிசினஸைத் தேர்வு செய்து அதில் கடுமையாக உழைத்து முன்னேறிக் காட்டுவேன். எனக்கு மட்டும் வாழாமல் பிறருக்கும் உதவி செய்து வாழ நிறையச் சம்பாதித்தால்தான் முடியும். வேலை பார்த்து நிறையச் சம்பாதிப்பது ஒரு குறிப்பிட்ட அளவோடு நின்றுவிடும். பிசினஸில் தான் நிறையச் சம்பாதிக்க முடியும்' என்பது இதனைப் புலப்படுத்தும்.

5. பிரபலங்களைப் பேட்டி காணும் பொழுதும் அவர்களது துறை சார்ந்த நிலையிலும், பொதுவாகவும் பெண்ணியம் தொடர்பான வினாக்களைத் தொடுத்து இதழின் மைய நோக்கை விட்டகலாது இருப்பதும் குறிப்பிடத்தக்கது. ஆண், பெண் இருபாலாரிடமுமே இதனைக் காணமுடிகிறது. முதல் ரோட்டரி பெண் கவர்னர் ரேகா ஷெட்டி, 'பெண் விடுதலை தேவையில்லை என்று ஒரு பேட்டியில் கூறியிருக்கிறீர்களே' என்ற வினாவிற்கு, 'உண்மைதான். பெண் விடுதலை என்றால் என்னைப் பொறுத்தவரை, ஒட்டு மொத்த மனித விடுதலை. எனவே மனித விடுதலைக்காகப் பாடுபடுவோம். மனித

விடுதலை கிடைத்துவிட்டால் மனிதம் முழுமையாகக் காப்பாற்றப் பட்டு விட்டால் இங்குப் பெண் விடுதலை கேட்காமலேயே கிடைத்து விடும்' என்று கூறியுள்ளார். இவரின் இக் குழப்பமான பதில் மேல்மட்டத்துப் பெண்களிடம் கூட இன்னும் பெண்ணியம் சரிவரப் புரிந்து கொள்ளப்படவில்லை என்பதை உணர்த்துகிறது. பெண்களுக்கு வேலை தேவையில்லை என்னும் நடிகை ஹேமமாலினியின் பெட்டிச் செய்தியையும் இங்கு இணைத்துக் கூறலாம்.

ஆண்பாலர் கொண்டுள்ள பெண்ணியம் பற்றிய சிந்தனைக்குப் பிரபஞ்சனின் 'பெண் புதிர் அல்ல' எனும் நேர்காணலைச் (மார்ச்சு. 96) சான்றாக்கலாம்.

> கணவனை விடவும் அதிகம் படித்தவளாகவும், அதிகம் சம்பாதிப்பவளாகவும் இருப்பதே கூட அதிகப் பிரச்சினை ஆகிவிடுகிறது. அடிப்படையில் நம்மிடம் சமூக சமத்துவம் இல்லை. மனநிலை சமத்துவம் இல்லை. இந்த இரண்டும் இல்லாமல் ஆண் பெண் சமத்துவம் சாத்தியமில்லை. பெண்கள் இப்போது உதிரிகளாக இருக்கிறார்கள். தான் உண்டு தன் வேலை உண்டு என்று ஒரு சின்ன வட்டத்தில் அவர்கள் புழங்கு கிறார்கள். பெண்கள் ஒரு சங்கமாகவும், இயக்கமாகவும் அணி திரள வேண்டும். அவர்களுக்கு அரசியல் உணர்வும் சமூக விழிப்புணர்வும் ஏற்பட இது ஒன்றே வழியாகும். அப்படி அணி திரளும் போதே பெண்கள் தங்கள் சக்தியை உணர்வார்கள்...... எதிர்த்துப் போராடும் போர்க் குணத்தைப் பெண்களிடம் சமூகம் வளர்ப்பதில்லை. அடங்கிப் போகும் அடிமைச் சுபாவத்தைச் சமூகம் புகழும் காரணத்தால் அந்த முகமூடியையே பெண்கள் அணிய ஆசைப்படுகிறார்கள்.

என்பது அவரது கருத்து.

6. வாழ்க்கையில் தோன்றும் பலவிதமான சிக்கல்களுக்குச் சட்டத்தின் வழி தீர்வு பெறவும் பெண்மணி வழிகாட்டுகிறது. சிக்கல் களில் சிக்குண்டுள்ள பெண்களின் விடியலுக்கு அவர்களின் வினா வழி, தேவையான அறிவுரையைப் பெண்பால் வழக்கறிஞர்கள் வழங்குவது குறிக்கத்தக்கது. இவ்வழிகாட்டல் அச்சத்தின் பிடியி லிருந்து மனத்துணிவு பெறவும் இடமளிக்கிறது.

7. வெற்றிகரமான வாழ்க்கைக்கு மனநலமும் உடல்நலமும் தேவையாதலின் அவற்றிற்கும் 'பெண்மணி' குறிப்பிடத்தக்க இடம் ஒதுக்கியுள்ளது. உடல் நலத்திற்கு மகளிர் மருத்துவரின் கருத்துரை களும், மனநலத்திற்கு உளவியல் வல்லுநரின் அறிவுரைகளும் இடம் பெற்றுள்ளன.

8. பெண்கள் நிறையப் படிக்க வேண்டும், எழுத வேண்டும் என்று தலையங்கம் வழித் தூண்டும் 'பெண்மணி' பெண்களின் எழுத்தாற்ற லுக்கு மேடையும் அளித்துள்ளது. பொன்மணி வைரமுத்து தேர்ந்து தரும் கவிதைகள் பல இதழ்களில் இடம் பெற்றுள்ளன. தனிக் கவிதைகளும் உண்டு. கதைகளும் வெளியிடப்பட்டு அவர்தம் படைப் பாக்கம் தூண்டப்படுகிறது. அவ்வப்போது சிறுகதைப் போட்டியும் நடைபெறுகிறது. 'போகிற போக்கில்' எனும் கருத்துத் தொகுப்புப் பகுதி, பொதுநலம் தொடர்பாகப் பெண்கள் வேண்டும், அறிவுறுத்தும் எண்ணங்களின் வெளிப்பாடாக அமைவது குறிக்கத்தக்கது. பெண் களிடையே தோன்றியுள்ள சமூக விழிப்புணர்வின் அளவுகோலாகவும் இது அமைகிறது. சுற்றுப்புறச் சூழல் தூய்மை, சிக்கனம், தவிர்க்கப் பட வேண்டிய முறைகேடுகள், பொது இடங்களில் தேவைப்படும் வசதிகள் எனப் பலவாக இவை விரிந்துள்ளன.

9. பெண்கள் பிறரோடு தொடர்பு கொண்டு பழகுவதற்கு வாய்ப்பாக 'Pen மணிகள்' எனும் பகுதி, தொடர்புகொள்ள விரும்பும் பெண்களின் முகவரியை அளிக்கிறது. இது, ஆண்களின் அத்து மீறல் காரணமாக இடையே நிறுத்தப்பட்டுப் பின் ஆண்களுக்கான எச்சரிக் கையுடன் மீண்டும் தொடங்கப்பட்டுள்ளது.

10. தகவல் சுரங்கம், நாட்டு நடப்பு எனப் பெண்கள் பற்றிய செய்திகள் தொகுத்தளிக்கப்படுகின்றன. பெண்களின் பொதுஅறிவு பெருகுவதற்கு இவை துணை நிற்கின்றன. துணுக்குகளாக அமை யும் பெட்டிச் செய்திகள் பலவும் இல்லப் பராமரிப்பு, உடல்நலம் பேணல், அழகுக் குறிப்பு போல்வனவாக அமைகின்றன.

11. சமூகத் தொண்டில் ஈடுபட்டுள்ள மங்கையரின் சமூகப் பணிகள் குறித்தும், மகளிரால் நடத்தப்படும் சமூகத் தொண்டு நிறுவனங்கள் குறித்தும், மாதர்சங்கங்கள் குறித்தும் உரிய அளவில் அறிமுகம் செய்து பாராட்டிவருவதும் குறிக்கத்தக்கது. பெண்களி

டையே தோன்றியுள்ள சமூக எழுச்சிக்கு இத்தகையன நற்சான்றா கின்றன; மற்றும் பெண்கள் சாதனைகளின் ஓர் அங்கமாகவும் மிளிர் கின்றன. இவற்றிற்குச் சிறப்பிடம் அளித்துள்ளமை அதனை ஏற்று நடத்துபவர்களுக்கும் பேருக்கம் தருவது என்பதில் ஐயமில்லை. அஞ்சலிகளின் அடைக்கலமாக விளங்கும் வித்யா விகாசினி (சூன்97), தென்னகத்துத் தெரசா அன்னை வீரம்மாள் (சன.96) போல்வன சான்றுகள். ஊனமுற்றோர் மீது 'பெண்மணி' தனி அக்கறை காட்டுகிறது. அவரில் சாதனை படைத்தோர்க்குச் சிறப்பிடம் தந்திருப்பதும் போற்றத்தக்கதாம்.

12. ஆணையராகப் பணிபுரியும் திருமதி குத்சியா காந்தி, தான் தன் வாழ்விலும், பணியிலும் சந்தித்த பலதரப்பட்ட பெண்களின் சிக்கல்களையும், இயல்புகளையும், சூழல்களையும் எடுத்துரைக் கும் 'கேளடி பெண்மணி', பெண்விடுதலை தொடர்பான செய்திகள், நிகழ்ச்சிகள், சிந்தனையாளர், இடையூறுகள் போன்றனவற்றைத் தன் நோக்கில் விமர்சிக்கும் 'பாமரனின் பகிரங்கக் கடிதம்' அவ்வப் போது இன்றைய பெண்களின் நிலையை அலசும் கட்டுரைகள் (நேற்றைய பெண்களும்... இன்றைய பெண்களும், ஏப்.98, அது அந்தக் காலம், ஆக.96) எனப் பிறவும் இங்கு எடுத்துக்காட்டத் தக்கனவாம். விளையாட்டுகளின் விதிமுறைகளை விளக்கிப் பொழுது போக்கினை யும் பயனுடையதாக்கியுள்ளது.

13. மொத்தத்தில் பெண்கள் வாழ்வின் அனைத்துப் பருவங் களும், சூழல்களும், பொறுப்புகளும், சிக்கல்களும் பல்வேறு கோணங் களில் பலதரத்தவரால் நன்கு அலசப்பட்டுள்ளன. உரிமைகள் மட்டு மின்றிக் கடமையும் பொறுப்பும்கூட வலியுறுத்தப்பட்டுள்ளன. மகளி ருக்கு இரு கண்களாகத் திகழும் கல்வியும், தொழிலும் 'பெண்மணி' யில் கொண்டுள்ள இடம், அதன் நோக்கமாகிய பெண் முன்னேற்றம் என்பதனை உறுதிப்படுத்துகிறது.

பெண் விடுதலை, பெண் முன்னேற்றம் எனும் போர்வையில் இதன் எப்பகுதியும் ஆண்களை அவமானப்படுத்தவோ, குடும்பக் கட்டுப்போக்கினைச் சீர்குலைக்கச் செய்யும் கருத்துத் திணிப்போ இல்லை என்பது பாராட்டப்பட வேண்டிய பண்பாகும். கணவன் மனைவி யரிடையே கருத்து ஒற்றுமையை வளர்த்து, கசப்பாகிய இல்லறமும்

இனிப்பாகி நல்லறமாவதற்கான வழிமுறைகளைத் தருவதிலும் முன் நிற்கிறது என்பதும் குறிக்கத்தக்கதாகும். சிறந்த ஆடவர் Men மணி களாகப் பாராட்டப்படுகின்றனர்.

நோய்களின் அணுகுமுறையில் காணும் குறைபாட்டை, அவர் களை உணரச் செய்யும் வகையில் டாக்டரின் கேள்விகளுக்கு வாசகர் பதில்கள், வேலைக்குப் போகும் அம்மா பற்றிக் குழந்தைகளின் கருத்துக்கள் என்பன (செப்.96) போன்ற வித்தியாசமான அணுகு முறைகள் 'பெண்மணி'க்கு அணிசெய்கின்றன.

## பெண்மணி இன்று

மேற்கூறிய சிறப்புக் கூறுகள் இன்றைய பெண்மணி இதழ் களிலும் அமையினும், வேறு பிற பகுதிகளால் அதன் அடர்த்தி இன்று குறைவுபட்டிருப்பது உண்மையாகும். ஆய்வாளர் பார்வை யில் தேவையற்றதாகக் கருதப்படுவன சூன் 99 இதழ்வழி இங்குச் சுட்டப்படுகின்றன.

1. முதல் இதழ் தயாரிப்பில் பெண்களுக்கு இருந்த சிறப்பிடம் இப்பொழுது இல்லை. இடையே இரு பெண் ஆசிரியர்கள் சிறிது காலம் இருந்திருந்தாலும் தொடர்வது ஆண் ஆசிரியரே. சாதனைப் பெண்மணிகளடங்கிய ஆசிரியர் குழுவையோ, நாடு தழுவிய பெண் நிருபர்களையோ காணவில்லை.

2. மூட நம்பிக்கையை வலுப்படுத்தும் சோதிடம் பல்வேறு வடிவங்களில் (சுலப வாஸ்து சாஸ்திரம், நியூமராலஜி, ஸ்டார் வாய்ஸ்) இடம் பெற்றிருத்தல்; சினிமாவுக்குக் கிரேப்சில்க், பொட்ஸ் சில டிப்ஸ், பாம்பே லட்டு, கிச்சன் கார்னர்ஸ், சம்மர் கொண்டைஸ் எனும் மகளிர் குறிப்புகள்; ஆடிப்பாரு மங்காத்தா போன்ற தேவையற்ற பகுதிகள் இதழின் பெரும் பகுதியை அடைத்துக்கொண்டுள்ளன.

இங்கு எங்கள் எதிர்பார்ப்பு என்ற வினாப்பட்டியலை சூன் 96 இதழில் வெளியிட்டு அதிலிருந்து பெற்ற கருத்துக்கணிப்பினைச் சுட்டுதல் தேவையாகிறது.

> அடிப்படையாக ஒன்று மட்டும் தெளிவாகத் தெரிகிறது. சமையல், அழகுக் குறிப்புகள், ஆன்மிகச் செய்திகள், கோலங் கள், ஜாதகம் - சோதிடம் போன்ற பகுதிகளை ஆரம்பத்தி

விருந்தே தவிர்த்துவரும் பெண்மணியின் கொள்கையோடு பெரும்பாலான - ஏன் 97 சதவீதம் பேர் (மொத்தம் 67346) ஒத்துப்போகிறார்கள் என்பதில் எங்களுக்குப் பெருமகிழ்ச்சி.

'பெண்மணி'களைப் பற்றிய, பெண்மணிகளுக்குப் பயன்படும் விஷயங்களைப் பற்றிய எதிர்பார்ப்புகள் அதிகமாக இருப்ப தோடு, வெறும் கதைகள், நகைச்சுவைத் துணுக்குகள் எனப் பொழுதுபோக்கு அம்சங்கள் அதிகம் தேவையில்லை என்றும் அடித்துக் கூறுகிறார்கள். பெண்மணிகளின் உய்விற்கும் உணர்ச்சிகளுக்கும் முதல்நிலை கொடுக்க வேண்டுமென்றும் கேட்டிருக்கிறார்கள்.

அனைத்தையும் செயல்படுத்துவதில் சிரமம் எதுவும் இருப்ப தாக நாங்கள் கருதவில்லை; அதைக் கடமையெனக் கொண்டு ஏற்கிறோம்

(ஆக.96) என்பதாக அவ்விதழின் தலையங்கப்பகுதி நவின்றுள்ளது.

இங்கு அனுராதா ரமணன் ஆசிரியரானதிலிருந்து சிறுகதைகள் முக்கியத்துவம் பெற்றதும் தொடர்ந்து, திரைப்படச் செய்திகள் இடம் பெற்றதும் சுட்டப்பட வேண்டியதாகும்.

3. பெண்மணி இதழில் பெண்களைவிட, ஆண்களே முதன்மைப் படுத்தப்படுகின்றனர் என்று கருதுமளவிற்கு அவர்களின் ஆளுமை படர்ந்துள்ளது. சூன் 99 இதழில்,

ஆசிரியர் - நா. மனோகரன்

சிறப்புத் தலையங்கம் - ஜி.ரா.

'பெண்மணி' ஒருவருட இலவசச் சந்தா பெறும் விமர்சனக் கடிதம் - எம். சோமசுந்தரம்

அசார் உஷார் - யுவராஜ்

மதிப்புரை பெற்றுள்ள ஆறு நூல்களில் ஐந்து - ஆண்கள் படைப்புகள்

சுலப வாஸ்து சாஸ்திரம் - புலிப்பாணி சுந்தரவரதாச்சாரி

ஆண்கள் பக்கம் - 3

கோபம் ஒரு விளக்கம் - தென்கச்சி சுவாமிநாதன்

நியூமராலஜி - ஆர். துரைமுருகர்
கவுன்சலிங் கிளினிக் - ஜி. இராஜமோகன்
ராமக்கா (சிறுகதை) - இராமிசெல்லக்குமார்

என்பன பெயரறிந்த அளவில் ஆண்பாலாக உள்ளது அறியத்தக்கது. முன்னிதழ்களில் ஆண் சாதனையாளர்களைச் சிறப்பித்திருப்பதும் சுட்டற்பாலது.

இதனால் ஆண்களை முற்றிலுமாகப் பெண்கள் இதழிலிருந்து ஒதுக்க வேண்டும் என்பதில்லை. பெண்கள் முன்னேற்றத்தை முழு முதல் நோக்காகக் கொண்டு வெளிவரும் 'பெண்மணி'யில் இவ்வளவு இடம் ஆடவர்க்குத் தேவையில்லை என்பதே கருத்து. இவ்விதழின் பிற பகுதிகளாகிய ஆன்மிகம், சிறுகதை, குட்டீஸ் பக்கம் போன்ற வற்றையும் இணைத்துப் பார்த்தோமானால் பெண்மணி ஒரு சாதாரண பொழுதுபோக்கிதழாகத் தடம் மாறியுள்ளது வெளிப்படை.

4. தொடக்க காலங்களில் பெண் விடுதலை குறித்த அழுத்த மான, செறிவான தலையங்கப் பகுதியும் தொய்வடைந்துள்ளதை உணரமுடிகிறது.

5. தனித்தமிழ், தூயதமிழ் போற்றப்பட வேண்டும் என்ற உணர்வோ, முயற்சியோ இல்லாததுடன், அது கேலிக்குரியதாவதை யும் டுர்... டுர்... டூவீலர், ரிவியு, பொட்ஸ் சில டிப்ஸ், நியூமராலஜி, குட்டீஸ் பக்கம், ஹலோ மேடம் (கேள்வி - பதில்), எம்போஸிங் பெயிண்டிங், கிச்சன் கார்னர், கவுன்சலிங் கிளினிக், ஸ்டார் வாய்ஸ், சம்மர் ஹேர்ஸ்டைல், சம்மர் கொண்டைஸ் எனும் தலைப்புகள் தெரி விக்கின்றன.

உன்னதமான உயரிய நோக்கோடு தொடங்கப்பட்ட 'பெண் மணி'யின் போக்கில் ஏற்பட்டுள்ள மாற்றத்தை வாசகரும் உணர்ந்துள் ளதை வாசகர் கடிதம் உணர்த்துகிறது. ஓரிதழைத் தொடர்ந்து வெற்றிகரமாகப் பலத்த போட்டிகளுக்கு நடுவே நடத்திச் செல்லுதல் சிரமம்; எனவே அதன் உயிர்ப்பிற்கு இது போன்ற வணிக நடை முறைகள் தேவை எனும் அமைதி முன் சுட்டியுள்ள கருத்துக்கணிப்பு நோக்கப் பொருந்தாததாகக் காணலாம்.

மற்றும் 'பத்திரிகை நடத்துவது நஷ்டம் தரக்கூடிய தொழிலா' என்ற வினாவிற்குப் 'பெண்மணி', 'முதல்ல ஒரு தொழிலா, ஜஸ்ட் பிஸினஸா மட்டும் நினைக்காம நல்ல விஷயங்களை மக்களுக்குத் தெரிவிக்கணும்ங்கற குறிக்கோளோட அங்கங்க சில பொழுது போக்கு விஷயங்களைக் கொடுத்து, வாசகர்களுக்கும் பத்திரிகைகளுக்கும் ஓர் உறவை வளர்த்து விட்டுட்டா நாம எதிர்பார்க்காமலேயே நினைத்ததை விட அதிகமா இலாபம் கிடைக்கும். பணத்தை எதிர்பார்க்காதீங்க. தன்னம்பிக்கையோட உழைங்க. நிறைய விஷயங்களைத் தெரிஞ்சுக்கங்க, நிச்சயம் வெற்றி உங்களுக்குத்தான் (சூன் 99, பக். 63-64) என்றளித்துள்ள பதிலும் எண்ணத்தக்கது.

எனவே பெண்மணி மனது வைத்தால் அதன் பழம்பெருமைக்கு (எம்.ஜி. வல்லபன் ஆசிரியராக இருந்த கால நிலைக்கு), அதை விட மேம்பட்ட நிலைக்குச் செல்லமுடியும் என்பது உறுதி.

இனி

ஆய்வாளரின் கருத்தோட்டத்தில் 'பெண்மணி' மகளிர் இதழ்களுள் ஒரு மாமணியாக விளங்க எதிர்பார்க்கப்படுவது: முன்காட்டியுள்ள சிறப்புக்கூறுகளுடன்,

1. பெண்களால் எல்லாம் முடியும் என்று வலியுறுத்தும் பெண்மணி அதனைச் செயலிலும் காட்ட வேண்டும். அதாவது தகுதியான பெண்மணியே ஆசிரியர் பொறுப்பிலும் இருக்க வேண்டும். மகளிர் மருத்துவம், சட்டம் போன்ற பகுதிகளில் அத்துறையில் சிறப்புற்றுள்ள மகளிரே கருத்து வழங்குவதுபோல மனோதத்துவம் முதலான ஏனையவற்றிற்கும், அத்துறை மகளிர் வல்லுநரையே ஈடுபடுத்தலாம்.

2. சமூக அக்கறையை மொழி நலனிலும் இயன்றவரை பிறமொழிக் கலப்பினைத் தவிர்த்துக் காட்டலாம். இங்கு மருத்துவர் ஞானசௌந்தரி எளிய முறையில் தமிழ்க் கலைச் சொற்களைத் தம் பதிலில் அழகாகக் கையாண்டிருப்பது பாராட்டத்தக்கது.

3. நூல் மதிப்புரைகளில் பெண் படைப்பாளர்களின் படைப்புகளும், பெண்ணியம் தொடர்பான பிற நூல்களும் மட்டுமே இடம் பெறுவதைக் கொள்கையாகக் கொள்ளலாம்.

4. பெண்ணியத்தை முன்னிறுத்தும் படைப்பிலக்கியங்கள் மட்டுமே பெண்மணியை அலங்கரிக்க வேண்டும். இடம் பெற்றுள்ள கவிதைகள் ஓரளவு இதன்பாற்படுகின்றன. வெறும் பொழுதுபோக் காக மட்டுமே அமையும் கதையிலக்கியங்களைத் தவிர்த்தல் நலமாகும்.

5. அவ்வப்போது மட்டும் தலைகாட்டும் இதழின் உள்ளுறைப் பகுதி தவறாது அனைத்து இதழ்களிலும் இடம்பெற வேண்டும்.

6. கட்டுரைகள் கண்டிப்பாக ஆசிரியரின் பெயருடன் வெளி வரலும் இன்றியமையாதது.

7. குறித்த காலத்தில் பெண்மணி வெளிவருவதில்லை என்ற குற்றச்சாட்டும் ஒழிக்கப்பட வேண்டும்.

## முடிபு

அண்மை இதழ்களிடையே சிறிது வீழ்ச்சியைக் காட்டினும், 'பெண்மணி' இன்று வெளிவரும் மகளிர் இதழ்களிடையே சிறப் பானதாகவே அமைந்துள்ளது. எனினும் இவ்வீழ்ச்சியை ஒரு சிறு தடுமாற்றமாகக் கொண்டு மாற்றி மீண்டும் அதன் உன்னத இலக்கை நோக்கி எழுச்சியுறும் துணிவும் வலிவும் பெண்மணிக்கு உண்டு. அது மிக விரைவாகவும் நிகழும் என்ற எதிர்பார்ப்புடன் பெண்மணி வாழ்த்தி வரவேற்கப்படுகிறது.

## துணை நூல்கள்

1. காலச் சூழலில் பெண், முனைவர் ச. சிவகாமி, மாதவி பதிப்பகம், சென்னை, 1996.

2. தமிழ் இதழ் காட்டும் மகளிர் நிலை, டாக்டர் சிவ. சசி ரேகா, பார்த்திபன் பதிப்பகம், மதுரை, 1988.

3. தமிழ் இதழியல் வரலாறு, மா.சு.சம்பந்தன், தமிழர் பதிப்பகம், சென்னை, 1987.

4. மங்கையர் மலர் புனைகதைகள் ஓர் ஆய்வு (1990), எம்.ஃபில். பட்ட ஆய்வேடு, ச. கீதா, சென்னை, 1991.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
திருமதி கமலம் ஜான் சாமுவேல்
கல்வி அறக்கட்டளை
டாக்டர் மா. இராசமாணிக்கனார்
இதழியல் ஆய்வு மையம்
இணைந்து நடத்தும்

# மகளிர் இதழ்கள் கருத்தரங்க அழைப்பிதழ்

(இதழியல் கருத்தரங்கம் 9)

அன்புடைமீர்,

வணக்கம்.

மகளிர் இதழ்கள் என்னும் பொருள் பற்றிய கருத்தரங்கு உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் (சி.ஐ.டி. வளாகம், தரமணி, சென்னை - 113) 24.7.1999 அன்று நடைபெற உள்ளது.

அனைவரும் வருகைதந்து சிறப்பிக்குமாறு வேண்டுகிறோம்.

தலைவர்
திருமதி கமலம் ஜான் சாமுவேல்
கல்வி அறக்கட்டளை
அம்பத்தூர்

இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
தரமணி
சென்னை

இயக்குநர்
டாக்டர் மா. இராசமாணிக்கனார்
இதழியல் ஆய்வு மையம்
அண்ணாநகர்

திருமதி **கலா ரவி** அவர்கள்
(துணை இயக்குநர்,
சென்னை வானொலி நிலையம், சென்னை)
தலைமையில்

24.7.1999 அன்று முற்பகல் 10.00 மணியளவில்

பேராசிரியர் முனைவர் **வி.பொ. தேவதத்தா** அவர்கள்
(தமிழ்த்துறைத் தலைவர் (ஓய்வு), அன்னை தெரசா
மகளிர் பல்கலைக்கழகம், கொடைக்கானல்)
கருத்தரங்கைத் தொடங்கிவைத்து

**மகளிர் இதழ்கள்**

**(இதழியல் கருத்தரங்கம் – தொகுதி 9)**

என்னும் நூலினை வெளியிடுவார்கள்

திருமதி **இராஜம் கிருஷ்ணன்** அவர்கள்
சிறப்புரை நிகழ்த்துவார்கள்

பேராசிரியர் முனைவர் **கா. சிவத்தம்பி** அவர்கள்
(வருகைதரு பேராசிரியர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்)
தலைமையில்

24.7.1999 அன்று மாலை 5 மணியளவில்

பேராசிரியர் முனைவர் **பொற்கோ** அவர்கள்
(துணை வேந்தர், சென்னைப் பல்கலைக்கழகம்)

கருத்தரங்க நிறைவுரை நிகழ்த்துவார்கள்

## முதல் அமர்வு

24.7.1999 முற்பகல் 11.00 - 12.00

தலைமை: திருமதி புனிதவதி இளங்கோவன்

| கட்டுரையாளர் | தலைப்பு |
|---|---|
| *முனைவர் மா.ரா. சிவஅரசி* | *சுகுணபோதினி* |
| *திருமதி பி. எழிலரசி* | *ஸ்திரீதர்மம்* |

கருத்துரை: முனைவர் இராம. தட்சிணாமூர்த்தி

*

## இரண்டாம் அமர்வு

24.7.1999 முற்பகல் 12.00 - 1.30

தலைமை: திருமதி மலர்க்கொடி சுகுமாரன்

| கட்டுரையாளர் | தலைப்பு |
|---|---|
| *முனைவர் ச. சிவகாமி* | *பெண்மணி* |
| *முனைவர் தி. மகாலட்சுமி* | *மங்கையர் மலர்* |
| *முனைவர் இரா. கஸ்தூரி* | *ராஜம்* |

கருத்துரை: முனைவர் இரா. இளவரசு

## மூன்றாம் அமர்வு

24.7.1999 பிற்பகல் 2.30 - 3.30

தலைமை: **முனைவர் இரா. ஞானபுஷ்பம்**

| கட்டுரையாளர் | தலைப்பு |
|---|---|
| *திருமதி அ. திரிபுரசுந்தரி* | *மாதர் மறுமணம்* |
| *முனைவர் ஜே. ஆர். இலட்சுமி* | *சுமங்கலி* |
| *செல்வி வ. உமா* | *மங்கை* |

கருத்துரை: முனைவர் இ. சுந்தரமூர்த்தி

*

## நான்காம் அமர்வு

24.7.1999 பிற்பகல் 3.30 - 5.00

தலைமை: **முனைவர் இரா. மல்லிகா**

| கட்டுரையாளர் | தலைப்பு |
|---|---|
| *முனைவர் இரா. பிரேமா* | *ஜகன் மோகினி* |
| *முனைவர் அரங்க. மல்லிகா* | *சிந்தாமணி* |

கருத்துரை: திரு பெ.சு. மணி

## உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

சென்னை – 600 113

### அண்மை வெளியீடுகள்

| | |
|---|---|
| உ.வே.சா. பதிப்புப் பணியும் பன்முக மாட்சியும் | 35.00 |
| தமிழக வரலாறு மக்களும் பண்பாடும் | 125.00 |
| தெசிணி–யின் தமிழாக்கப் பாடல் திரட்டு | 50.00 |
| மிருச்சகடிகம் | 50.00 |
| தனிநாயகம் அடிகளாரின் சொற்பொழிவுகள் | 40.00 |
| தமிழ்ச் சமூகவியல் ஒரு கருத்தாடல் | 25.00 |
| பெரியாரின் பண்பாட்டுப் புரட்சி | 25.00 |
| வ.உ.சி வளர்த்த தமிழ் | 20.00 |
| ஜப்பானியக் காதல் பாடல்கள் | 75.00 |
| குறுந்தொகை – ஒரு நுண்ணாய்வு | 80.00 |
| தமிழ் நாட்டுப்புறவியல் ஆய்வின் வரலாறு | 50.00 |
| தமிழ் நாடகம் – நேற்றும் இன்றும் | 30.00 |
| நாடகமும் நாடகக் கம்பெனி அனுபவங்களும் | 60.00 |
| திருக்குறள் பூரணலிங்கம்பிள்ளை ஆங்கில மொழிபெயர்ப்பு | 100.00 |
| தொல்காப்பியப் பாவியல் கோட்பாடுகள் | 40.00 |
| ஐங்குறுநூறு மூலமும் உரையும் | 85.00 |
| இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் நாடகங்கள் | 75.00 |
| தமிழர் கட்டிடக்கலை | 30.00 |
| சர்வக்ஞர் உரைப்பா | 40.00 |
| தமிழில் ஆவணங்கள் | 75.00 |
| தமிழ் மேடை நாடக வரலாறு | 55.00 |
| பரதநாட்டிய சாஸ்திரம் | 150.00 |
| இந்திய விடுதலைக்குப் பின் தமிழிலக்கியச் செல்நெறிகள் | 55.00 |
| சதகத்திரட்டு தொகுதி – 1 | 80.00 |
| தொல்காப்பிய இலக்கண மொழியியல் கோட்பாடுகள் | 70.00 |
| எழுத்திலக்கணக் கோட்பாடு | 70.00 |
| தமிழ்ப் பண்பாடு | 25.00 |
| பாவாணர் கண்ட இன்றைய தமிழின் இலக்கணங்கள் | 30.00 |
| தமிழ் மொழியின் வரலாறு | 30.00 |
| தமிழிலக்கியத்தில் ஊனமுற்றோர் | 45.00 |
| தமிழக மகளிரியல் | 80.00 |
| பாரதி இந்தியா | 40.00 |
| தமிழ்ச் சுருக்கெழுத்து நூல் | 50.00 |
| தமிழில் மருத்துவ இதழ்கள் | 35.00 |

---

**459 மகளிர் இதழ்கள் 70.00**